

மக்களின் பலம்

PEOPLE'S BANK

Pride of the Nation

மக்கள் வங்கி | ஆண்டறிக்கை 2023

பலமானது பன்முகமான விதங்களில் அளவிடப்படலாம். இங்கு மக்கள் வங்கியில், எமக்கு சேவையாற்றும் மக்கள் மற்றும் நிறுவனம் அன்புடன் சேவையாற்றும் மக்களே எமது முதன்மையான பலமாக உள்ளார்கள்.

62 வருடங்களுக்கும் மேலாக, எமது ஊழியர்களின் வேட்கையும் அர்ப்பணிப்பும் மற்றும் எமது வாடிக்கையாளர்களின் விசுவாசமும் எம்மை பன்முகமான சவால்கள் மற்றும் மாற்றங்களினூடாக கொண்டு சென்றுள்ளதுடன், இவை இணையற்ற ஸ்திரத்தன்மை மற்றும் நம்பிக்கையில் அடித்தளமிட்டுள்ள ஒரு எதிர்காலத்தினை நிர்மாணிப்பதற்கு எமக்கு துணையளித்துள்ளது. இந்த நாட்டின் பெருமைக்குரிய ஒரு நிறுவனமாக நாம் தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்கள் போன்றவற்றிற்கு வேட்கையுடன் வலுவளித்துள்ளோம்.


முன்னேற்றகரமான வருடங்கள் நோக்கி எமது நிறுவனத்தினை நாம் உருவமைக்கும்போது, ஏனையவற்றுக்கிடையில், எமது அதிகரிக்கும் டிஜிட்டல் சுவடானது, எதிர்காலத்தில் உங்களது அபிலாஷைகளுக்கு சேவையாற்றுவதற்காக, புத்தாக்கத்துடன் தடையின்றி ஒருங்கிணைப்பதற்கு துணைபுரியும். நேற்று, இன்று மற்றும் நாளை எமது நோக்கமானது தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு எமது கொள்திறனில் நாம் திடமாக நங்கூரமிட்டுள்ளதாகும். உங்களது எதிர்காலத்தினை நாங்கள் செதுக்கும்போது செயற்பாட்டில் எமது மக்களின் பலத்தை கவனியுங்கள்...

PEOPLE'S BANK

Pride of the Nation

உள்ளடக்கம்

வங்கியைப் பற்றி



4 எமது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை பற்றியது
8 எமது வங்கி
9 எமது குழுமம்
12 மைல்கற்கள்
14 விருதுகள்
15 நிதியியல் சிறப்பம்சங்கள்
17 நிதியியல் அல்லாத சிறப்பம்சங்கள்

பக்கம் 12 மைல்கற்கள்

பக்கம் 15 நிதியியல் சிறப்பம்சங்கள்

நிறைவேற்றுநர் மீளாய்வுகள்



20 தலைவரின் கடிதம்
24 பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு
28 பணிப்பாளர்கள் சபை
32 பெறுநிறுவன முகாமைத்துவம்
40 பிரதம முகாமையாளர்கள்

பக்கம் 20 தலைவரின் கடிதம்

பக்கம் 28 **பணிப்பாளர்கள் சபை**

மூலோபாயமும் பெறுமதி உருவாக்கமும்



48 செயற்பாட்டுச் சூழல்
53 பங்காளிகள் ஈடுபாடு
56 பொருண்மை
60 எமது மூலோபாயம்
64 எமது பெறுமதி உருவாக்கல் மாதிரி மற்றும் மூலதன மீதிகள்
66 கடப்பாடும் நிலைபேறுடமையும்

பக்கம் 53 பங்காளர் ஈடுபாடு

பக்கம் 64 எமது பெறுமதி உருவாக்க மாதிரியும் மூலதன மீதிகளும்

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு



68 நிதித் தலைவரின் மீளாய்வு
74 வணிகப் பிரிவு மீளாய்வுகள்
74 சில்லறை வங்கியியல்
76 நிறுவன வங்கியியல்
78 பெறுநிறுவன வங்கியியல்
80 திறைசேரி
82 வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்
84 சர்வதேச வங்கியியல்
86 தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வங்கியியல்
88 சந்தைப்படுத்தல்
90 கடன் அட்டைகள்
92 உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்
96 அறிவுசார் மூலதனம்
104 மனித மூலதனம்
114 சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்
114 வாடிக்கையாளர் மூலதனம்
120 வணிகப் பங்காளர் மூலதனம்
125 முதலீட்டாளர் மூலதனம்
129 சமூக மூலதனம்
134 இயற்கை மூலதனம்

பக்கம் 68 நிதித் தலைவரின் மீளாய்வு

பக்கம் 125 முதலீட்டாளர் மூலதனம்

ஆளுகை



144 இடர் முகாமைத்துவ அறிக்கை

174 பெறுநிறுவன ஆளுகை

196 சபை உபகுழு அறிக்கைகள்

196 சபை கணக்காய்வுக் குழு (BAC)

197 சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு அறிக்கை (BHRRC)

198 சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை (BIRMC)

199 சபை நிறைவேற்றுநர் கடன் குழு அறிக்கை (BECC)

200 சபை பெயரிடல் குழு அறிக்கை (BNC)

201 சபை முதலீட்டு வங்கியியல் குழு அறிக்கை (BIBC)

202 சபை தகவல் தொழில்நுட்பக் குழு அறிக்கை (BITC)

203 சபை மூலோபாய திட்டமிடல் மீளாய்வுக் குழு அறிக்கை (BSPRC)


204 நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று

206 உள்ளகக் கட்டுப்பாடுகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிமொழி அறிக்கை

பக்கம் 174 பெறுநிறுவன ஆளுகை

பக்கம் 196 சபை உப குழு அறிக்கைகள்

நிதிக் கூற்றுக்கள்



208 நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்புகள்

209 நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

211 வருமானக் கூற்று

212 இலாபம் அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று

213 நிதி நிலைமைக் கூற்று

214 உரிமை மாற்றங்களின் கூற்று - வங்கி

216 உரிமை மாற்றங்களின் கூற்று - குழுமம்

218 காசுப் பாய்ச்சல் கூற்று

219 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பக்கம் 211 வருமானக் கூற்று

பக்கம் 219 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

துணைத் தகவல்கள்



320 வருமானக் கூற்று USD

321 நிதி நிலைமைக் கூற்று USD

322 பத்து வருட பொழிப்பு - வங்கி

323 பத்து வருட பொழிப்பு - குழுமம்

324 பாசல் III – தூண் III இன் கீழான சந்தை ஒழுக்காற்று வெளிப்படுத்தல் தேவைப்பாடு

340 நிலைபேறுடமை அறிக்கையிலான வெளிவாரி உறுதிமொழி

342 GRI உள்ளடக்கச் சுட்டி

348 சிரேஷ்ட முகாமையாளர்கள்

352 கிளை முகாமையாளர்கள்

360 நிதியியல் / வங்கியியல் சொற்களின் சொற்களஞ்சியம்

365 பெறுநிறுவன தகவல்கள்

366 குறிப்புகள்

பக்கம் 322 பத்து வருட பொழிப்பு - வங்கி

பக்கம் 365 பெறுநிறுவன தகவல்கள்

இந்த ஆண்டறிக்கையானது 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மக்கள் வங்கியின் செயற்திறனை முன்னிலைப்படுத்துவது மாத்திரமன்றி வங்கியின் எதிர்கால கண்ணோட்டத்தையும் முன்னிலைப்படுத்துகின்றது. அத்துடன் வங்கியின் ஆறு மூலதனங்களின் ஒரு பகுப்பாய்வினூடாக வங்கியின் மூலோபாய பெறுமதி உருவாக்கத்தினையும் மீளாய்வு செய்கின்றது. அத்துடன், 2021 இன் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரம்புறுகை மற்றும் 2021 இன் GRI நியமங்களைக் குறிப்பிட்டு, மனமுவந்த கடைப்பிடிப்பினூடாக வங்கியின் சமூக, சூழல் மற்றும் பொருளாதார தாக்கங்களையும் மீளாய்வு செய்கின்றது.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூறுகள்

GRI 2-2

- இவ்வறிக்கையிலுள்ள அனைத்து கூறுகளும் இவ்வறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த வருடத்திற்கான வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களான, பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பி.எல்.சி மற்றும் பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கூட்டாக "குழுமம்" என குறிப்பிடப்படுகின்றது) ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. குழுமத்தின் இறுதியான தாய் நிறுவனமாக மக்கள் வங்கி உள்ளது.

அறிக்கையிடப்படும் காலம் மற்றும் நிகழ்வெண்

GRI 2-3

இவ்வறிக்கையானது 01 ஜனவரி 2023 முதல் 31 டிசம்பர் 2023 வரையான 12 மாதக் காலப்பகுதியினை உள்ளடக்குவதுடன் இது வருடாந்த அறிக்கையிடல் நடவடிக்கையாக தொடரப்படும்.

இவ்வறிக்கையின் அணுகல் மற்றும் பின்னூட்டம்

GRI 2-3

- இவ்வறிக்கையானது எமது இணையத்தளமான https://www.peoplesbank.lk/last-financial-result/ இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
- இந்த அறிக்கை தொடர்பான உங்களது பின்னூட்டத்தினை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

அசாம் ஏ அஹமட்
நிதிப் பிரிவின் தலைவர்
நிதியியல் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களம்
மக்கள் வங்கி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2.

+94 11 248 1481 (ex. 498)
azzam@peoplesbank.lk
info@peoplesbank.lk
www.peoplesbank.lk

முன்னோக்கு - பார்வை கூற்றுக்கள்

இவ்வறிக்கையானது தற்போது கிடைக்கக்கூடிய அனுமானங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையிலான முன்னோக்கிய பார்வை கூற்றுக்களை உள்ளடக்குவதுடன், வங்கியின் வருங்கால வணிக வாய்ப்புக்கள், எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள், போக்குகள் மற்றும் சந்தை நிலைமைகள், செயற்பாடுகள் மற்றும் நாணயமாற்று விகிதங்கள் என்பவற்றிலான எதிர்வுகூறல்களை உள்ளடக்கலாம்.

அவற்றின் தன்மையின் காரணமாக, அவை குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் நிச்சயமற்றதன்மைகளை கொண்டிருப்பதுடன் மெய்யான விளைவுகள் எதிர்வுகூறல்களிலிருந்து வேறுபடலாம்.



தகவல்களின் மீள்கூறல்

GRI 2-4

எமது முன்னைய ஆண்டறிக்கையிலிருந்து எவ்விதமான தகவல்களையும் மீள்கூறுவதற்கான எவ்விதமான தேவைப்பாடும் காணப்படவில்லை.

வெளிவாரி உறுதிமொழி

GRI 2-5

- இவ்வறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் உறுதிமொழியினைப் பெற்றுள்ளது.
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையானது இவ்வறிக்கையின் பக்கங்கள் 209 முதல் 210 வரை வழங்கப்பட்டுள்ளன.
- இந்த அறிக்கையின் நிலைபேறுடமை அறிக்கையிடல் கூறானது ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் இடமிருந்து வெளிவாரி உறுதிமொழியினைப் பெற்றுள்ளது.
- இந்த அறிக்கையின் நிலைபேறுடமை அறிக்கையிடல் கூறுகளுக்கான வெளிவாரி உறுதிமொழியானது இந்த அறிக்கையின் பக்கங்கள் 340 முதல் 341 வரை வழங்கப்பட்டுள்ளது.
- நிதியியல் செயற்திறனிலான தகவல்களில் நியாயமான உறுதிமொழியானது வழங்கப்பட்டுள்ளது.
- GRI நியமங்கள் 2021 இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்களில் வரையறுக்கப்பட்ட உறுதிமொழியானது வழங்கப்பட்டுள்ளது.
- கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களமானது பொது நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்கு சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கியின் நிதிக் கூற்றுக்கள் ஆண்டுதோறும் கணக்காய்வாளர் நாயகத்தினால் அல்லது கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு கணக்காய்வு நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்படுகின்றது.
- உறுதிமொழி ஈடுபாடுகளில் இலங்கை நியமத்தினால் வரையறை செய்யப்பட்டுள்ள "ஒரு சுயாதீன உறுதிமொழி ஈடுபாடாக" நிலைபேறுடமை அறிக்கையிடலில் உறுதிமொழி வழங்குனருடனான உறவுமுறை காணப்படுகின்றது.

பெறுமதி உருவாக்கம்

2023 இல் இலங்கையின் பொருளாதாரமானது ஒரு மீட்சிப்பாதைக்கு அதனை சீரமைத்துள்ள வேளை, 2022 இல் காணப்பட்ட பெரும்பாலும் மொத்த பொருளாதார முறிவிலிருந்து, நாட்டின் பரவலாக எட்டக்கூடிய முறைசார் நிதிச் சேவைகள் வழங்குனரான மக்கள் வங்கியானது, நாடு பூராகவும் பரந்துகாணப்படும் இலங்கையின் பொதுமக்களுக்கு முழு அளவிலான நிதிச் சேவைகளை வழங்கும் அதன் மையமான வணிகத்தினூடாக இந்த மீட்பு சுமையின் ஒரு பாரிய பங்கினை சுமப்பதற்கு உள்நுழைந்துள்ளது.

இவ்வாண்டின்போது, வங்கியானது அதன் சொந்த ஐந்தொகையினை பலப்படுத்தியது மாத்திரமன்றி, சகல சமூக மற்றும் பொருளாதார தராதரங்களிலுள்ள, எண்ணிக்கையினைப் பொறுத்தளவில் மில்லியன் கணக்கானவை, இலங்கையர்களின் பொருளாதார மீட்பு மற்றும் முன்னேற்றத்திற்கும் துணைபுரிந்தது. எனவே, இவ்வறிக்கையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ள 12 மாதங்களில் அதன சகல உள்ளக மற்றும் வெளிவாரி பங்காளிகளுக்கான மெச்சத்தக்க பெறுமதி உருவாக்கல் ஆண்டாக வங்கி பதிவுசெய்தது.

வங்கியின் பெறுமதி உருவாக்கல் மூலதன மீதிகள் மாதிரியானது பக்கங்கள் 64 முதல் 65 வரையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மூலோபாய முன்னெடுப்புகள் பக்கங்கள் 60 முதல் 63 வரையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் மூலதனச் செயற்திறனானது பக்கங்கள் 68 முதல் 142 வரை விபரிக்கப்பட்டுள்ளன.

மூலதனங்களை முகாமைப்படுத்துதல்

இந்த அறிக்கையானது வங்கியின் பின்வரும் மூலதனங்களின் நிலைமையிலான உரிய தகவல்களையும், 1 ஜனவரி முதல் 31 டிசம்பர் 2023 வரையான 12 மாதங்களில் தேசம் மற்றும் அதன் பங்காளிகளுக்கான பெறுமதி உருவாக்கத்திற்கு வங்கி எவ்வாறு அதன் மூலதனத்தை பயன்படுத்தியுள்ளது என்பதையும் முன்னிலைப்படுத்துகின்றது.



ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரம்பு

நிதியியல் அறிக்கையிடல் வரம்பு

நிதியல்லாத அறிக்கையிடல் வரம்பு

- நிதியியல் மூலதனம்
- உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்
- அறிவுசார் மூலதனம்
- மனித மூலதனம்
- சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்
- இயற்கை மூலதனம்

PEOPLE'S LEASING PLC — THE TRUSTED LEADER — பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பைனான்ஸ் பி.எல்.சி.

பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

PEOPLE'S BANK — Pride of the Nation — மக்கள் வங்கி

- நிதியியல் மூலதனம்
- உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்
- அறிவுசார் மூலதனம்
- மனித மூலதனம்
- சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்
  - வாடிக்கையாளர் மூலதனம்
  - சமூக மூலதனம்
  - வணிகப் பங்காளர் மூலதனம்
  - முதலீட்டாளர் மூலதனம்
- இயற்கை மூலதனம்

அறிக்கையிடல் வரம்புறுகைகள்

இந்த அறிக்கையில் வங்கியானது பின்வரும் முறைமைப்படுத்தல் மற்றும் மனமுவந்த தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது :

முறைமைப்படுத்தல்கள்

- 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் (திருத்தியமைக்கப்பட்டவாறு)
- 1988 இன் வங்கியியல் சட்டம் (திருத்தியமைக்கப்பட்டது)
- இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகள்
- 1953 இன் 24ஆம் இலக்க அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம்
- 2006 இன் 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம்
- 2006 இன் 5 ஆம் இலக்க பணம் தூய்மையாக்கல் தடுப்புச் சட்டம்
- உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான பெறுநிறுவன ஆளுகையில் 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்புரை

மனமுவந்த நியமங்கள்

- டிசம்பர் 2017 இல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் கூட்டாண்மை ஆளுகையில் வழங்கப்பட்ட சிறந்த நடைமுறைக் கோவை
- 2021 இன் ஒருங்கிணைத்த அறிக்கையிடல் வரம்புறுகை
- 2021 இன் GRI நியமங்கள்
- ஐ.நா. நிலைபேறுடமை அபிவிருத்தி இலக்குகள் (நி.அ.இ.)

பொருண்மை

2021 இன் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரம்புறுகை மற்றும் 2021 இன் GRI நியமங்களின் கீழ், 01 ஜனவரி 2023 முதல் 31 டிசம்பர் 2023 வரையான காலப்பகுதிக்குரிய பொருண்மையான தலைப்புகளை வங்கியானது இனங்கண்டது. பொருண்மையான தலைப்புகளை தெரிவுசெய்யும் இந்த செயன்முறை மற்றும் பொருண்மையான தலைப்புகள் பக்கங்கள் 57 முதல் 59 வரை வழங்கப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை கொள்கை

எமது சமூக மற்றும் சூழல் நிலைபேறுடமை தொடர்பாக நாம் முன்னெச்சரிக்கை கொள்கையினை பிரயோகிக்கின்றோம். சமூகம் மற்றும் சூழலில் எமது செயற்பாடுகள் ஒரு சாத்தியமான தாக்கத்தினை கொண்டுள்ளது குறித்து நாம் அறிந்திருப்பதுடன், ஒரு எதிர்மறையான தாக்கத்திற்கான ஏதேனும் இடரினைத் தணிப்பதனை உறுதிசெய்வதற்காக நாம் அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இவை பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

எமது அறிக்கையின் வகைப்படுத்தல்

வெளிப்படைத்தன்மை

மனமுவந்த வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலான வெளிப்படுத்தலுக்காக பொருண்மையானவை என இனங்காணப்பட்ட சகல தகவல்களும் வங்கியால் உள்ளடக்கப்பட்டுள்ளன. வங்கியானது பொருத்தமான அனைத்து முறைமைப்படுத்தல் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு கண்டுள்ளது.

பொறுப்புக்கூறல்

பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையினை தொகுப்பதில், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக முழுமையான இணக்கப்பாடு அவதானிக்கப்பட்டது. உள்வாரி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வெளிவாரி தொழில் வல்லுநர்களிடமிருந்து உறுதிமொழிகள் ஊடாக இந்த அறிக்கையினுள் தரவுகளின் துல்லியத்தன்மை

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆளுகை

ஒரு அரச வங்கியாக, இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையினை தொகுப்பதில் முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் பொறுப்புக்கூறல் ஊடாக சிறந்த ஆளுகைக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டன.

நிலைபேறுடமை

நடவடிக்கைகளின் முழுத் தோற்றம் பூராவும் சூழல் தோழமையான செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக வங்கியின் செயற்பாடுகள் ஒரு பெறுநிறுவன நிலைபேறுடமை கொள்கையினால் வழிநடத்தப்படுகின்றது.



சர்வதேச ஆண்டறிக்கை போட்டி விருதுகள் 2023



அச்சிடுதல் மற்றும் தயாரிப்பிற்கு தங்கம்: வங்கிகள்: தேசிய



உள்ளக வடிவமைப்பிற்கு வெள்ளி: வங்கிகள்: தேசிய



நிதியியல் தரவுகளுக்கு வெள்ளி: வங்கிகள்: தேசிய



அட்டை படம்/ வடிவமைப்பிற்கு வெண்கலம்: வங்கிகள்: தேசிய



விளக்கப்படம் - கௌரவப் பட்டம்: வங்கிகள்: தேசிய

மக்கள் வங்கி ஆண்டறிக்கை 2023

2023 ஆண்டறிக்கையினை நேரலையாக அணுகலாம்
https://www.peoplesbank.lk/last-financial-result/



மக்களின் தெரிவு

மக்கள் வங்கி எப்போதும் வலிமையின் அடித்தளமாகவும் அசைக்கவியலாத அக்கறையாகவும், ஆறு தசாப்தங்கள் நீண்ட மரபுடன் உருவமைத்து எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வாக்குறுதியினை வழங்குகின்றது.

வங்கியினைப் பற்றி

8 எமது வங்கி | **9** எமது குழுமம் | **12** மைற்கல் | **14** விருதுகள் | **15** நிதியியல் சிறப்பம்சங்கள் | **17** நிதியல்லாத சிறப்பம்சங்கள்

1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் உள்ளூரில் அமைப்புரீதியாக முக்கியமான வங்கியாக (D-SIB) ஆக பெயரிடப்பட்டுள்ள மக்கள் வங்கியானது, கிளைகளின் எண்ணிக்கை மற்றும் நாடு முழுவதுமான பூகோளவியல் அணுகலின் அடிப்படையில் இலங்கையில் மிகப்பெரிய நிதியியல் சேவை வழங்குனராக உள்ளது.

மக்கள் வங்கியானது துறையில் மிகப்பெரிய கிளை வலையமைப்பினை, நாடு முழுவதும் 15 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுடன் செயலாற்றுகின்றது. 747 கிளைகளது வலையமைப்பு முழுவதும் பரந்து காணப்படும் ஊழியர்களின் பலமானது 7,656 உடன் துறையின் முன்னணி கருவிகள் மற்றும் சேவைகளை வழங்குகின்றது. வங்கியானது இலங்கையில் மாத்திரமே செயற்படுகின்றது. GRI 2-1

நாட்டின் ஒன்பது மாகாணங்கள் பூராகவும் அதன் விரிவான அணுகலின் காரணமாக, உட்புற கிராமிய இடங்களுக்கான ஊடுருவல் மற்றும் பல சமூக நலன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை விநியோகிப்பதில் அரசாங்கத்துடன் தொடர்ச்சியான ஒத்துழைப்புடன் மக்கள் வங்கியானது நாட்டில் எந்தவொரு இணைநிலையினரிலும் பார்க்க இலங்கையின் பொருளாதாரத்திலும் மக்களிலும் பரந்த மற்றும் ஆழமான செயல்விளைவினைக் கொண்டுள்ளது. இலங்கையின் சமூகங்களினுள் வங்கியின் மொத்த செயல்விளைவினை இந்த அறிக்கையினுள் அடக்குவது சிரமம் என்பதனால் நாம் அதனை எமது மூலதன அறிக்கைகளினூடாக வழங்குவதற்கு முயற்சித்துள்ளோம்.

தொலைநோக்கு

உருமாற்ற வளர்ச்சியை நோக்கி நாட்டை ஊக்குவித்தல்

பணிநோக்கு

- நாம் கட்டுப்படியான, அடையக்கூடிய மற்றும் செயற்திறனாக வழங்கப்பட்ட தீர்வுகள் ஊடாக தரமான வாழ்க்கை மற்றும் தொழில் முயற்சிகளின் மேம்பாட்டுக்கு பங்களிப்பதற்கான நிதியியல் சேவைகளை வழங்குகின்ற சேவையிலுள்ளோம்.
- எமது வாடிக்கையாளர்களை கவனித்துக்கொள்வதற்கும், பாதுகாப்பதற்குமாக எமது மனித வளத்தினை வலுவூட்டி மேம்படுத்துகின்றோம்.
- போட்டி ரீதியாக இலாபத்தினை ஈட்டுகின்ற அதேவேளை தேசிய பொருளாதார அபிவிருத்திக்கும் நாம் பங்களிக்கின்றோம்.
- எமது வணிக செயல்முறைகளில் நிலைபேறாக இருக்கின்ற அதேவளை நாம் செயல்புரிகின்ற சமூகத்தினை பழைய நிலைமையில் வைத்திருப்போமென நம்புகின்றோம்.

விழுமியங்கள்

- தேசத்தின் பெருமையாக திகழுதல்
- வாடிக்கையாளர் முன்னிறுத்தும் விரைவூக்கமும்
- நேர்மையும் பொறுப்புகூறலும்
- தொடர்ச்சியாக கற்கும் கலாச்சாரமும் கூட்டு முயற்சியும்
- வலவளித்தலும் பன்முகத்தன்மையும்

நீண்ட கால தீவிரமான இலட்சியமான இலக்கு (BHAG)

தொழில்துறையின் சிறந்த பணியாளர் திருப்தி நிலையுடன் கூடிய அதிக வாடிக்கையாளரை கவரும் வங்கியாக திகழுதல்

நேரடியான மற்றும் மறைமுகமான பொருளாதார தாக்கம், வாடிக்கையாளர் தளம், பூகோளவியல் அடிச்சுவடு மற்றும் சமூக தாக்கங்களுக்கு தயவுசெய்து கீழே பார்க்கவும் :

பக்கம் 114	பக்கம் 120	பக்கம் 125	பக்கம் 129
வாடிக்கையாளர் மூலதனம்	வணிகப் பங்காளர் மூலதனம்	முதலீட்டாளர் மூலதனம்	சமூக மூலதனம்

நடவடிக்கைகள், மதிப்புச் சங்கிலி மற்றும் ஏனைய வணிக உறவுமுறைகள்

GRI 2-6

இலங்கையின் நிதியியல் துறையில் வங்கியானது செயல்நிலையில் உள்ளதுடன் அதன் வணிக நோக்கெல்லையானது, வைப்புகளை ஏற்றுக்கொள்ளல், கடன் வசதிகளை வழங்குதல், தனிப்பட்ட வங்கியியல், அடகு பிடித்தல், சர்வதேச வர்த்தகம், அரசாங்கப் பிணையங்களில் கொடுக்கல் வாங்கல், கடன் அட்டைச் செயற்பாடுகள், முதலீட்டு வங்கியியல் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கியியலுக்கான கரைகடந்த வங்கியியல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

மக்கள் வங்கியின் உற்பத்தி கருவிப் பரப்பெல்லை

2023 இன் வங்கியின் உற்பத்தி கருவிப் பரப்பெல்லையானது, தொழில்புரியும் நபர்கள், பெண்கள், இளைஞர்கள், பிள்ளைகள், 5 வயதிற்கும் குறைவான பிள்ளைகள், புலம்பெயர் தொழிலாளர்கள், ஓய்வூதியம் பெறுவோர் / இளைப்பாறுதலடைந்தவர்கள், இறக்குமதி செய்யும் கம்பனிகள் மற்றும் ஏனைய வணிகங்களை உள்ளடக்குகின்றது.

சிற்றளவு வங்கியியல்		
வைப்பு உற்பத்திக் கருவிகள்	முற்பணங்கள்	ஏனையவை
i. நடைமுறை கணக்குகள்	i. தனிப்பட்ட கடன்கள்	i. கடன்/செலவு அட்டைகள்
ii. சேமிப்புகள்	ii. தவணைக் கடன்கள்	ii. பரிசுச் சீட்டுகள்
• இசுரு உதான	iii. வீடமைப்பு கடன்கள்	iii. மொபைல் வங்கியியல்/SMS வங்கியியல்
• சிசு உதான	iv. அடகு பிடித்தல்	iv. இணைய வங்கியியல்
• யெஸ்		v. ஆயுள் ஒப்பாய்வு சான்றிதழ்கள்
• வனிதா வாசனா		
• ஜன ஜய		
• அஸ்வென்ன		
• பரிநத்த		
• பீபள்ஸ் ரிலக்ஸ்		
• வழமையான சேமிப்பு		
• எதெர வாசனா		
iii. நிலையான வைப்புகள்		
iv. அழைப்பு வைப்புகள்		
v. வெளிநாட்டு நாணய வைப்புகள்		



உற்பத்திக் கருவிகளது சின்னங்கள்

PEOPLE'S BANK Pride of the Nation

Savings Account

ETHERA ISURA

Jana Jaya

Parinatha

YES DIGITAL SAVINGS ACCOUNT

PEOPLE'S BANK ETHERA WASANA RUPEE SAVINGS ACCOUNT

අස්වැන්න

Isuru Udana

Vanitha Vasana

People's relax Savings Planner

Sisu Udana

PEOPLE'S Web

PEOPLE'S Wiz

PEOPLE'S Wave

PEOPLE'S Wyn

PEOPLE'S PAY

எமது குழுமம்




எலிகன்ஸ் வீசா இன்வைனைட் கடன் அட்டை



பீபள்ஸ் மாஸ்டர் கார்ட் கிளசிக்



பீபள்ஸ் வீசா சிக்நேச்சர் கார்ட்



பீபள்ஸ் மாஸ்டர் கார்ட் பிளட்டினம்



பீபள்ஸ் வீசா கோல்ட் கார்ட்









வணிக உற்பத்திக் கருவிகள்

நிறுவன வங்கியியல்

i. நடைமுறை கணக்குகள்
ii. சேமிப்புக் கணக்குகள்
iii. நிலையான வைப்புகள்
iv. மேலதிகப் பற்றுக்கள்
v. தவணைக் கடன்கள்
vi. SME கடன்கள்
vii. அபிவிருத்தி மற்றும் நுண்நிதியளித்தல் கடன்கள்
viii. வர்த்தக நிதியளித்தல்

கூட்டாண்மை வங்கியியல்

i. நடைமுறை கணக்குகள்
ii. சேமிப்புக் கணக்குகள்
iii. நிலையான வைப்புகள்
iv. மேலதிகப் பற்றுக்கள்
v. தவணைக் கடன்கள்
vi. வர்த்தக நிதியளித்தல்
- இறக்குமதி/ஏற்றுமதி நிதியளித்தல்
- கப்பல் மற்றும் வங்கி உத்தரவாதங்கள்
- சர்வதேச வர்த்தக கொடுப்பனவுகளுக்கான வசதிகள் (நாணயக் கடிதங்கள், ஏற்புக் கடிதங்கள்)

திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கியியல்

i. பணச் சந்தை நடவடிக்கைகள்
ii. அரசாங்கப் பிணையங்களில் வர்த்தகம்
iii. அரசாங்கப் பிணையங்களில் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்
iv. அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள்
v. பெறுதி கொடுக்கல் வாங்கல்கள் (முன்னோக்கிய அந்நிய செலாவணி
- ஒப்பந்தங்கள், FX பரிமாற்றங்கள்)

vi. முதலீட்டு வங்கியியல்
- கடன் மீள்கட்டமைப்பு
- ஆலோசனைச் சேவைகள்
- நம்பிக்கைப் பொறுப்பாளர் சேவைகள்

சர்வதேச செயற்பாடுகள்

i. வர்த்தகச் சேவைகள்
ii. வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்
iii. வெளிநாட்டு நாணய பண அனுப்பல்கள்
iv. வெளிநாட்டு நாணய வைப்புகள்
v. சர்வதேச கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சேவைகள்

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பி.எல்.சி.

1995 இல் ஒருங்கிணைக்கப்பட்ட துணை நிறுவனமானது தனிநபர்கள், நுண் நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான வணிகங்களுக்கு தற்போது சேவையாற்றுகின்றது. இதன் ஊழியர் பலம் 2,052 மற்றும் 107 கிளைகளுடைய வலையமைப்பாகும். பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பி.எல்.சி. நிதியியல் துறையில் செயல்நிலையிலுள்ளது. கம்பனியானது பிரதானமாக, நிதியியல் குத்தகைகள், வாடகைக் கொள்வனவுகள், நுண்நிதியளித்தல், சொத்து நிதியளித்தல், தவணைக் கடன்கள், இஸ்லாமிய நிதியளித்தல், எல்லைக்கடன் வர்த்தகம், பங்கு வர்த்தகம், கடன் பிணையங்களின் வழங்கல், காரணியாக்கம், தங்கக் கடன்கள், பொது வைப்புகளை திரட்டுதல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றது. பீ.எல்.சி. 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 3.5 பில்லியனையும் மொத்த சொத்துக்களாக ரூபா 187 பில்லியனையும் பதிவு செய்தது.

பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

துணைநிறுவனமான, பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் பயண வணிகத்தில் உள்ளதுடன், அது பிரதானமாக சுற்றுலாக்கள் மற்றும் விமான டிக்கட் வழங்கல்களை (பயண முகவர்) ஒழுங்கு செய்வதில் ஈடுபடுகின்றது. 1993 இல் ஒருங்கிணைக்கப்பட்ட பீப்பள்ஸ் டிரவல்ஸ் பிரைவேட் லிமிட்டட் தனிநபர்கள், நுண் நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான வணிகங்களுக்கு சேவையாற்றுகின்றது. பீப்பள்ஸ் டிரவல்ஸ் 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 37 மில்லியனையும் மொத்த சொத்துக்களாக ரூபா 37 மில்லியனையும் பதிவு செய்தது.

வங்கியியல் உலகினுள் நிலைபேறுடைய வளர்ச்சிக்கும் வினைத்திறனான சேவை வழங்கலுக்கும், பொருத்தமான வணிக உறவுகளை வளர்த்தலும் பராமரித்தலும் மிகவும் முக்கியமானதாகும். இந்த தொடர்புகள், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, அரச உடைமை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொடர்பு வங்கிகள் மற்றும் பரிமாற்றக இல்லங்கள் போன்ற மதிப்பு மிக்க நிறுவனங்களுக்கு நீடிக்கப்படுகின்றது. இந்த பங்குடைமைகளை வளர்த்தலானது, கூட்டு விளைவு, நம்பிக்கை மற்றும் கூட்டு முயற்சிகளை வளர்ப்பதுடன் வங்கியியல் துறையினை பகிரப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் பரஸ்பரமான செழிப்பிற்கு தூண்டுகின்றது.

2022 உடன் ஒப்பிடும்போது 2023 இல் வங்கியின் அல்லது அதன் துணை நிறுவனங்களின் வணிக நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.

மைல்கல்

1961 முதல் 1969 வரை

- 1 ஜூலை 1961 இல் ஒருங்கிணைக்கப்பட்டது.
- முதலாவது கிளை டியூக்வீதி கொழும்பில் திறக்கப்பட்டது.
- அடகுச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- கூட்டுறவு கிராமிய வங்கியியல் திட்டம் மற்றும் ஒரு புதிய விவசாய கடன் திட்டம் தொடங்கப்பட்டு சிறிய பண்ணைத் துறைக்கான முன்னோடி கடன் வழங்குனரானது.

1970 முதல் 1979 வரை

- முறைசாரா துறையின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக "அத்தமாறு" கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மரந்தகஹமுளையில் 100 ஆவது கிளை திறக்கப்பட்டது.
- ஊழியர் எண்ணிக்கை 5,000 இனை எட்டியது.
- கொரல வெல்லவில் முதலாவது மீன்பிடித்துறை வங்கி திறக்கப்பட்டது.

1980 முதல் 1989 வரை

- நீடிக்கப்பட்ட சிறுவர் சேமிப்புத் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது.
- இங்கிரியவில் 300 ஆவது கிளை திறக்கப்பட்டது.
- ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 10,000 இனை எட்டியது.
- எமது தலைமைக் காரியாலயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட நகரக் கிளைகளில் கணினி மயமாக்கல் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதுடன் ஒரு கருவொளி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், வாடிக்கையாளர் திருப்ப நேரம் கணிசமாக குறைக்கப்பட்டது.

1990 முதல் 1999 வரை

- தலைமைக் காரியாலயக் கிளையில் முதலாவது ATM நிறுவப்பட்டது.
- அரசாங்கத்தின் 200 ஆடைத் தொழிற்சாலை திட்டத்திற்கு வங்கி துணைபுரிந்தது.
- 160 கிளைகள் கணினிமயமாக்கப்பட்டன.
- "வனிதா வாசனா", மற்றும் "இசுரு உதான" சேமிப்புத் திட்டங்களும் "சுரதுர" கடன் திட்டமும் "விதேசிகா" வைப்புத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டன.

2023

- மேம்படுத்தப்பட்ட வங்கியியல் சேவைகளை வழங்குவதற்கு இந்தியாவின் HDFC வங்கியுடன் மக்கள் வங்கி கைகோர்த்தது
- உள்ளூர் வங்கியியல் அலகுகளில் வர்த்தக நிதியளித்தல் வணிக தேக்கத்தினை பலப்படுத்தும் நோக்கத்திற்காக ஜூலை 2023 இலிருந்து ஏழு பிராந்தியங்களில் ஏற்றுமதி துறை குறிப்பிட்ட SME. மையங்கள் (ஏற்றுமதி மையங்கள்) நிறுவப்பட்டன.
- பீபள்ஸ் FX வியூச்சர் ப்ளஸ் வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்கு ஜூன் 2023 இல் அறிமுகப்படுத்தப்பட்டது
- "பீப்பள்ஸ் பவர்" கடன் திட்டமானது இலங்கையில் நுண்-நிதியளித்தல் துறையினை முன்னேற்றுவதற்கும் துணைபுரிவதற்கும் ஜூலை 2023 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- செப்டெம்பர் 2023 இல் வங்கியானது 500 புதிய ஊழியர் தொகுதியினை பணியில் அமர்த்தியது.





2000 முதல் 2009 வரை

- "ஜன ஜய" சேமிப்புடன் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- மத்திய ATM இணைப்பி அறிமுகப்படுத்தப்பட்டது.
- பீப்பள்ஸ் தன்னியக்கமாக்கப்பட்ட வங்கியியல் முறையுடனான (PABS) கிளைகளின் எண்ணிக்கை 218 ஆக அதிகரிக்கப்பட்டதுடன், மத்திய ATM இணைப்பியுடன் 119 கிளைகள் இணைக்கப்பட்டன
- ஒரு திறைசேரி தன்னியக்கமாக்கல் தொகுப்பு அமுலாக்கப்பட்டது.
- வங்கியானது பிட்ச் ரேட்டிங்ஸ் லங்காவிடமிருந்து முதலாவது பொது தரப்படுத்தலான BBB+ தரத்தினை பெற்றது
- அரசாங்கம், ADB மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுக்கிடையே கைச்சாத்திட்ட ஒப்பந்தத்திற்கு ஏற்ப இலங்கை அரசாங்கத்திடமிருந்து வங்கியில் உரித்துவ மூலதன முதலீட்டின் முதலாவது தவணையாக வங்கி ரூபா 2 பில்லியன், இரண்டாவது தவணையாக ரூபா 1 பில்லியன் மற்றும் மூன்றாவது தவணையாக ரூபா 1.5 பில்லியனையும் பெற்றது.
- 2008 ஆண்டறிக்கைக்காக முதற்தடவையாக, SAFA (தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம்) இடமிருந்து விருது பெறப்பட்டது.



2010 முதல் 2019 வரை

- வங்கியின் 2011 ஆண்டறிக்கைக்கு 2012 இன் சர்வதேச ARC. விருதுகளில் தேசியப் பிரிவில் ஒரு மாபெரும் விருதினையும் மூன்று தங்க விருதுகளையும் வென்றது.
- நாடு பூராகவும் 23 SME. மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டன.
- தேசிய பொது ATM இணைப்பியுடன் இணைக்கப்பட்ட முதலாவது வங்கியாக மக்கள் வங்கி மாறியது.
- வங்கியின் சொத்துத் தளமானது ஒரு டிரில்லியன் ரூபாயினை தாண்டியதுடன், துறையில் இரண்டாவது பாரிய வங்கியாகக் காணப்பட்டது.
- வங்கியானது பின்வரும் மூன்று விருதுகளை திரட்டிக்கொண்டது: ஐரோப்பிய உலகளாவிய வங்கியியல் மற்றும் நிதியியல் விருது- இலங்கை 2014 இல் "2014 ஆம் ஆண்டிற்கான வங்கி" மற்றும் "இலங்கையில் சிறந்த வங்கிக் குழுமம்" மற்றும் உலக நிதியளித்தல் வங்கியியல் விருதுகள் 2014 இல் "இலங்கையில் மிகவும் நிலைபேறுடைய வங்கி" .
- வங்கி அதன் நிலைபேறுடமை கடப்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக ஒரு பசுமை வங்கியியல் எண்ணக்கருவினை ஆரம்பித்தது.
- இலங்கையில் முற்றாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கிளையொன்றை கொழும்பில் திறந்ததுடன், தகவல் பாதுகாப்பு முகாமைப்படுத்தலுக்கான மதிப்புமிக்க ISO/IEC 27001:2013 தரச் சான்றளிப்பினை, நாட்டில் ஏதேனும் அரச வங்கிகளில் முதல் தடவை, பெற்றது.
- இலங்கையில் மிகவும் பதிவிறக்கம் செய்யப்பட்ட நிதியியல் செயலியாக பீப்பள்ஸ் வேவ் வந்தது.
- பாராளுமன்றத்தில் மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வங்கி தொகுதிக்கடன் வழங்கலூடாக ரூபா 10.0 பில்லியனை திரட்டியது.
- இலங்கையில் இதுவரைக்கும் எந்தவொரு வர்த்தக வங்கியினாலும் பெறப்பட்ட பாரிய மற்றும் நீண்டகால இருதரப்பு நிதியளித்தல் வசதியினை வங்கி கைச்சாத்திட்டு பெற்றுக்கொண்டது.



2020

- கோவிட்-19 காலத்தின்போது தேசத்திற்கும், வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் வங்கி இணையற்ற உறுதுணையினை வழங்கியது.
- ரூபா 20 பில்லியன் அடுக்கு II தொகுதிக்கடன்களை மக்கள் வங்கி திரட்டியது. இது துறையினால் இதுவரைக்கும் திரட்டப்பட்ட அதிகூடிய தொகையாகும்.
- வணிகச்சின்ன மதிப்பில் ஒரு சாத்தியமான சாய்வினைக் கொண்ட ஒரே அரச வங்கி மற்றும் முதல் 3 வங்கிகளுள் ஒன்றாகும்.



2021

- "தேசத்தின் பெருமை" என்ற கருப்பொருளுடன் வங்கி அதன் 60ஆவது ஆண்டு விழாவினை கொண்டாடியது.
- ஒரு மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்களுடன் நாட்டில் மிகவும் அதிகமாக பதிவிறக்கம் செய்யப்பட்ட மொபைல் செயலியாக பீப்பள்ஸ் வேவ் வந்ததுடன் பீப்பள்ஸ் பே வொலட் செயலி ஆரம்பிக்கப்பட்டது.



2022

- உயர் மதிப்புடைய சந்தை பிரிவிற்கு சேவையாற்றுவதற்காக எக்செல்சியர் மற்றும் எலிகன்ஸ் எனப்படும் இரண்டு புதிய வணிக நாமங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- எமது CSR வணிக நாமமான "மஹஜன மெஹெவர" அறிமுகப்படுத்தப்பட்டது.
- மூலோபாய திட்டமிடல் 2022-2024 வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது.
- பின்வரும் விருதுகள் பெறப்பட்டன:
  - பேங்கர் சஞ்சிகையினால் உலகத்தின் முதல் 1000 வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கி பெயரிடப்பட்டது.
  - ஏசியன் பேங்கர்ஸ் முதல் 500 வங்கிகளிடையே வங்கியினை ஏசியர் பேங்கர் சஞ்சிகை உள்ளடக்கியது.
  - இரண்டு தங்க விருதுகள் உள்ளடங்கலாக நான்கு விருதுகளை சர்வதேச ARC விருதுகள் 2022 இல் பெறப்பட்டது.
  - ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் விருதுகள் 2022 இல் CMA தனிச்சிறப்பில் முதல் 10 சிறந்த ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கைகளில் 2021 ஆண்டறிக்கை ஒன்றாகும்.
  - தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம் (SAFA) விருதுகளில் அரச துறை வங்கியியல் துறையில் வங்கியானது கூட்டு வெண்கல வெற்றியாளர் ஆகும்.
  - TAGS விருதுகள் 2022 இல் அரசாங்கத் துறைக்கான வெண்கல விருதினை வென்றது.
  - WFWP விருதுகள் 2022 இல் பெண்களுக்கான இலங்கையில் மிகவும் சிறந்த பணியிடமாக அங்கீகரிக்கப்பட்டது.

விருதுகள்



சர்வதேச ARC விருதுகள் 2023

அச்சு மற்றும் தயாரிப்பிற்கு தங்கம்: வங்கிகள் : தேசிய

உள்ளக வடிவமைப்பிற்கு வெள்ளி : வங்கிகள் : தேசிய

நிதியியல் தரவுகளுக்கு வெள்ளி : வங்கிகள் : தேசிய

அட்டைப் படம் / வடிவமைப்பிற்கு வெண்கலம் : வங்கிகள் : தேசிய

விளக்கப்படம் - கௌரவம் : வங்கிகள் : தேசிய

இலங்கையில் மிகவும் பாராட்டப்பட்ட முதல் 15 கம்பனிகள்

ICCSL, CIMA மற்றும் டெய்லி FT இனால் இலங்கையில் மிகவும் பாராட்டப்பட்ட முதல் 15 கம்பனிகள

கொடுப்பனவு பங்காளி செயற்திறன் விருதுகள் 2023 - டாராஸ்

மதிப்புமிக்க டிஜிட்டல் கொடுப்பனவு வினையூக்கி விருது

பிஸ் கலப்பு விருதுகள்

வணிகத் தனிச்சிறப்பு விருது

உலகளாவிய வங்கியியல் மற்றும் நிதியியல் விருது

'அடுத்த 100 உலகளாவிய கம்பனிகளுள்' ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது

லங்காபே டெக்னோவேசன் விருதுகள்

மிகவும் பிரபல்யமான டிஜிட்டல் கொடுப்பனவு கருவிக்கு தங்க விருது (வங்கிகள் மற்றும வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் - இணைய வங்கியியல்)

ஆண்டிற்கான சிறந்த பொது ATM செயல்படுத்துபவர் - தங்க விருது - பிரிவு 'A'

ஒட்டுமொத்த விருது, வங்கிகளுக்கிடையேயான டிஜிட்டல் கொடுப்பனவில் தனிச்சிறப்பு – தகுதி விருது (வங்கியியல் நிறுவனங்கள்)

ஆசிய பண விருதுகள்

சிறந்த உள்ளூர் வங்கி

பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்திற்கு சிறந்த வங்கி

தேசிய வணிகத் தனிச்சிறப்பு விருது

வரன்முறை விருதுகள் - கொள்திறன் கட்டியெழுப்பலில் தனிச்சிறப்பு

வணிகத் தனிச்சிறப்பு விருது - வங்கியியல் துறை - இரண்டாம் நிலை

உலகளாவிய வணிக மீளாய்வு சஞ்சிகை விருதுகள் 2023

இலங்கையில் 2023 ஆம் ஆண்டிற்கான வங்கியியல் சேவை வழங்குநர்

சிறந்த நுகர்வோர் டிஜிட்டல் வங்கி இலங்கை 2023

சிறந்த டிஜிட்டல் வொலட் செயலி இலங்கை 2023 - பீப்பள்ஸ் பே

மிகவும் விருத்தியடைந்த வங்கி இலங்கை 2023

மிகவும் நிலைபேறுடைய வங்கி இலங்கை 2023

சிறந்த இணைய விருதுகள் 2023

மிகவும் பிரபல்யமான வங்கியியல் மற்றும் நிதியியல் இணையத்தளம் சிறந்த வங்கியியல் மற்றும் நிதியியல் இணையத்தளம் - வெண்கல வெற்றியாளர்

சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் கம்பனி விருதுகள் 2023

அரசாங்க, பகுதியளவு அரசாங்க மற்றும் அதிகாரசபைகள் பிரிவு


AICPA & CIMA- SATYN பெண்கள் தோழமையான பணியிட விருதுகள் 2023

இலங்கையின் மிகவும் தலைசிறந்த பெண்கள் தோழமையான பணியிடங்களில் ஒன்று

	வங்கி			குழுமம்		
	2023	2022	மாற்றம் %	2023	2022	மாற்றம் %
செயற்பாட்டு செயற்திறன் (ரூபா பில்.)						
வட்டி வருமானம்	394.8	321.9	22.6	424.5	351.4	20.8
தேறிய வட்டி வருமானம்	54.3	75.8	-28.3	67.8	91.0	-25.5
மொத்த வருமானம்	422.2	357.2	18.2	454.5	391.2	16.2
பெ.சே.வ. மற்றும் வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்	22.7	29.5	-23.3	28.5	36.7	-22.3
வரிக்கு முந்திய இலாபம்	15.3	21.3	-28.1	19.3	26.7	-27.8
வருமான வரி	5.3	4.1	26.9	7.9	6.2	27.9
வரிக்கு பிந்திய இலாபம்	10.1	17.2	-41.4	11.4	20.5	-44.5
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	0.0	0.7	-97.2	0.5	0.9	-47.6
நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்	10.1	16.5	-39.1	10.9	19.7	-44.4
நிதியியல் நிலைமை (ரூபா பில்.)						
மொத்த சொத்துக்கள்	3,038.2	2,972.0	2.2	3,208.2	3,133.1	2.4
மொத்த கடன்களும் வருமதிகளும்	1,846.4	1,915.8	-3.6	1,971.8	2,061.1	-4.3
மொத்த வைப்புக்கள்	2,653.1	2,371.5	11.9	2,745.2	2,450.1	12.0
பங்குதாரர் நிதியங்கள்	160.1	145.3	10.2	205.0	189.3	8.3
செயற்திறன் விகிதங்கள் (%)						
சராசரி சொத்துக்களிலான விளைவு (வரிக்கு முன்)	0.5	0.8		0.6	0.9	
உரித்துவத்திலான விளைவு (வரிக்கு பின்)	6.6	12.2		5.8	11.2	
வட்டி விடுமிகை	1.8	2.7		2.1	3.1	
வைப்புக்களுக்கு கடன் விகிதம்	69.6	80.8		71.8	84.1	
சொத்துத் தர விகிதங்கள் (%)						
வலுக்குன்றிய கடன்கள் (கட்டம் 3) விகிதம்	8.8	12.8		8.8	12.6	
வலுக்குன்றியதிலிருந்து (கட்டம் 3) கட்டம் 3 கடன்கள் விகிதம்	41.0	29.9		41.5	30.5	
நியதிச்சட்ட திரவச் சொத்து விகிதம் (%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 20%)						
மொத்த வங்கி	37.4	21.3				
உள்ளூர் வங்கியியல் அலகு	37.4	21.4				
கரைகடந்த வங்கியியல் அலகு	38.4	20.1				
திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் (%)						
(ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%)						
திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் - ரூபா	256.7	213.1				
திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் - சகல நாணயம்	207.9	119.5				
முறைமைப்படுத்தல் மூலதன விகிதங்கள் (%)						
பொது உரித்துவ அடுக்கு 1 மூலதனம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 8.0%)	11.9	11.4		13.3	12.8	
அடுக்கு 1 மூலதனம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 9.5%)	12.4	11.9		13.7	13.3	
மொத்த மூலதனம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 13.5%)	17.4	16.3		18.2	17.2	
பங்குதாரர் விகிதங்கள் (ரூபா)						
பங்கொன்றிற்கான உழைப்பு	10,083	17,192	-41.4	10,513	19,572	-46.3
பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி	160,059	145,294	10.2	204,984	189,332	8.3


நிதியியல் சிறப்பம்சங்கள்

மொத்த சொத்துக்கள் (ரூ.பில்.)




மொத்த சொத்து
(ரூ.பில். - 2023)
3,038

மொத்த வைப்புக்கள் (ரூ.பில்.)




மொத்த வைப்புக்கள்
(ரூ.மில். - 2023)
2,653

மொத்த உரித்துவம் (ரூ.பில்.)




மொத்த உரித்துவம்
(ரூ.பில். - 2023)
160

வட்டி வருமானம் (ரூ.பில்.)




வட்டி வருமானம்
(ரூ.பில். - 2023)
395

மொத்த மூலதன விகிதம் (ரூ.பில்.)



மொத்த மூலதன விகிதம்
(ரூ.பில். - 2023)
17.4

வரிக்கு முந்திய இலாபம் (ரூ.பில்.)



வரிக்கு முந்திய இலாபம்
(ரூ.பில். - 2023)
15



சந்தையும் வாடிக்கையாளரும்

3.4மில்.
டிஜிட்டல் வாடிக்கையாளர்கள்

811,687
சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய வாடிக்கையாளர்கள்

சேவையாற்றிய வாடிக்கையாளர்களில்
51%
இற்கும் மேலானோர் பெண்கள்

முறையீடுகளில்
87%
இற்கும் மேலானது தீர்க்கப்பட்டது.



ஊழியர்கள்

ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை
7,656

பெண் ஊழியர்கள்
4,662

நிறுத்திவைத்தல் விகிதம்
96.4%

நிரந்தர ஊழியருக்கான சராசரி பயிற்சி நேரம்
25hrs



சூ.சு.ஆ.(ESG)

தேசிய பங்களிப்பு

செலுத்தப்பட்ட மொத்த வரிகள், விசேட கட்டணம் மற்றும் பங்கிலாபங்கள்
ரூ. 13.9பில்.

வணிகப் பங்காளிகள்

e-GP
ஊடான வழங்குநர் பதிவீடு

சமூகம்

ரூ. 40.7மில்.
சமூகங்களுக்கான பங்களிப்பு

சூழல்

3.8மில்.
டிஜிட்டல் ரீதியாக திறக்கப்பட்ட கணக்குகள்

நிதியல்லாத சிறப்பம்சங்கள்



சிறப்பம்சங்கள்

ரூ. **19.4** பில்.
உள்ளூர் வழங்குநர்களுக்காக உருவாக்கப்பட்ட பெறுமதி

'யுத் டெக்' திறன் அபிவிருத்தித் திட்டமானது
100
கணினி விஞ்ஞானத்தில் பாடசாலை மாணவர்களுக்கு உதவித்தொகையினை வழங்கும்

29,468hrs
மொத்த டிஜிட்டல் பயிற்சி மணித்தியாலங்கள்

20
சூரிய சக்தியினால் வலுவூட்டப்பட்ட பசுமைக் கிளைகள்

44
தொடர்பாளர் வங்கிகள் மற்றும்
80 வாஸ்ட்ரோ முகவர்கள்

மொத்த பயிற்சிச் செலவு
ரூ. **96.6** மில்.



மக்களின் நம்பிக்கை

ஒரு நம்பகமான மரபினால் துணையளிக்கப்பட்டு, மக்கள் வங்கியானது இலங்கையின் பொருளாதாரத்திற்கு, சகலருக்கும் செழிப்பான வளர்ச்சிக்கு ஒரு ஆழமான கடப்பாட்டுடன் பங்களிப்பு செய்கின்றது

நிறைவேற்றுனர் மீளாய்வுகள்

20 தலைவரின் கடிதம் | **24** பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு | **28** பணிப்பாளர்கள் சபை | **32** பெறுநிறுவன முகாமைத்துவம் | **40** பிரதம முகாமையாளர்கள்

தலைவரின் கடிதம்



நாட்டிலுள்ள முதன்மையான அரச வங்கியாக, மக்கள் வங்கியானது நாட்டின் பொருளாதார மீட்டல் செயன்முறையில் ஒரு செயல்நிலையான மற்றும் மதிப்பிடவியலாத பங்களிப்பினை தொடர்ந்து ஆற்றியதுடன், இது நிதியியல் ஸ்திரத்தன்மை நோக்கியும் அதன் 15 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளரது நல்வாழ்விற்கும் தொடர்ச்சியாக பங்களிப்பு செய்தது.

இலங்கையின் வரலாற்றில் மிகவும் கொந்தளிப்பான வருடங்களுள் ஒன்றான 2022 இனைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டானது வங்கியியல் துறைக்கும் இலங்கையின் பொருளாதாரத்திற்கும் முழுவதுமாக ஒரு கடுமையான சவால்மிக்க 12 மாதங்களாகக் காணப்பட்டது.

எனினும், பொருளாதாரம் 3.8% ஆல் சுருங்கியதற்கு மத்தியில் 2023 நாட்டின் மீட்டலுக்கு ஒரு திருப்பு முனையாக விபரிக்கப்படுவதுடன், பொருளாதாரமானது அதன் கீழ்நோக்கிய போக்கிலிருந்து மெல்ல திரும்பியது. இது ச.நா.நி. (IMF) இன் திட்டத்தின் கீழான தொடரும் சீர்திருத்தத்தின் கீழ் வருடத்தின் இறுதி காலாண்டில் வளர்ச்சிப் பாதைக்கு திரும்பி ஊக்கமளிக்கும் 1.6% வளர்ச்சியினை அடைந்தது. மார்ச் 2023 இல்,ச.நா.நி. (IMF) இன் 48 மாத நீடிக்கப்பட்ட நிதியளித்தல் வசதியின் கீழ் முதலாவது தொகுதியான USD 330 மில்லியனை நாடு பெற்றதுடன் ஜூலையில் உலக வங்கியானது இலங்கைக்கான பாதீட்டு மற்றும் நலன்புரி நிதியளித்தலாக USD 700 மில்லியனை அங்கீகரித்தது. இந்த தலையீடுகள் பொருளாதாரத்தின் மீள்திரும்பலுக்கு தூண்டுவிசையினை வழங்கியது. 2022 இல் நாட்டில் நிலவிய முன்னெப்போதும் நிகழ்ந்திராத அந்நிய செலாவணி நெருக்கடியானது அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு அந்நிய செலாவணி கிடைக்கக்கூடியதன் மூலம் தணிக்கப்பட்டது. உள்வாரி பண அனுப்பல்கள் மற்றும் ஏற்றுமதிகளின் படிப்படியான மீள் ஆரம்பமானது நாணயமாற்று வீதத்தினை ஸ்திரப்படுத்துவதற்கு பங்களித்தது. சந்தை வட்டி வீதங்கள் 2023 இன் இறுதிவரை ஒப்பீட்டளவில் உயர்வாக காணப்பட்டபோதிலும், கொள்கை வட்டிவீதங்கள் கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டபோது பணவீக்க வீதமானது படிப்படியாக கட்டுப்படுத்தப்பட்டு மேம்பட்ட பாரியபொருளாதார நிலைமைகளை பிரதிபலித்தது. இந்த பரவலான பாரிய பொருளாதார முன்னேற்றங்களை இயலுமையாக்குவதில் உள்ளூர் கடன் மீள்கட்டமைப்பின் நிறைவேற்றலானது ஒரு முக்கிய மைல்கல்லாகும். ஜூன் மாதத்தில் அரசாங்கம் உள்ளூர் கடன் மீள்கட்டமைப்பிற்காக அங்கிகாரத்தினைப் பெற்றதுடன் நாட்டில் வங்கியியல் துறையானது முன்னெப்போதும் நிகழ்ந்திராத ஐந்து நாட்கள் விடுமுறையுடன் மூடப்பட்டது. ஜூலை மாதத்தில் உள்ளூர் கடன் உகப்பாக்கத்தில் (உ.க.உ.) தீர்மானமானது பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. உ.க.உ. செயன்முறையிலிருந்து வங்கியியல் முறையானது விலக்கப்பட்டதுடன், இது வங்கியியல் துறை மற்றும் இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளிலுள்ள 20 மில்லியன் வைப்பாளர்களது 57 மில்லியனுக்குக் கிட்டிய வைப்புகளை பாதுகாப்பதற்கு ஆகும். செப்டெம்பர் மாதத்தில், மிட்ச் ரேட்டிங்ஸ் இலங்கையின் நீண்ட கால உள்ளூர் நாணய வழங்குநர் தவறுதல் தரப்படுத்தலை RD (மட்டுப்படுத்தப்பட்ட தவறுதல்) இலிருந்து CCC ஆக தரமுயர்த்தியது. இது இலங்கையின் உ.க.உ. திட்டத்தின் உள்ளூர் நாணயப் பகுதியின் நிறைவுறலுக்கு சாத்தியமான பதிலளிப்பாகும்.

நாட்டிலுள்ள முதன்மையான அரச வங்கியாக, மக்கள் வங்கியானது நாட்டின் பொருளாதார மீட்டல் செயன்முறையில் ஒரு செயல்நிலையான மற்றும் மதிப்பிடவியலாத பங்களிப்பினை தொடர்ந்து ஆற்றியதுடன், இது நிதியியல் ஸ்திரத்தன்மை நோக்கியும் அதன் 15 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளரது நல்வாழ்விற்கும் தொடர்ச்சியாக பங்களிப்பு செய்தது. எவ்வாறாயினும், வங்கியானது 2023 இனை ரூபா மற்றும் டொலரிலான திரவத்தன்மை பற்றாக்குறையுடன் ஆரம்பித்ததுடன், இது பொருளாதார தொடர்ச்சியினை உறுதிசெய்வதற்காக தொடர்ச்சியான நிதி வழங்கலுடாக 2022 இன் போது தேசிய பொருளாதாரத்திற்கு துணையளிப்பதற்கான வங்கியின் செயல்நிலையிலான தலையீட்டிலிருந்து ஒரு பின்னடைவாகும். 2020, 2021 மற்றும் 2022 இல் பெரும்பாலும் இடம்பெற்ற இறையாண்மை தரமிறக்கத்தினால் திரவத்தன்மை நிலையானது மோசமடைந்தது. இது எமது வெளிநாட்டு பங்காளிகள் கடன் வழங்கலை இடைநிறுத்தியதனால் வங்கியின் டொலர் திரவத்தன்மை நிலைமையினை மேலும் கட்டுப்படுத்தியது. எவ்வாறாயினும், வங்கியானது திரவத்தன்மை அழுத்தங்களை வெற்றிகரமாக மீட்டு 2023 இனை மேலதிக ரூபா மற்றும் டொலர் திரவத்தன்மையுடன் நிறைவு செய்தது.

மூலோபாய முன்னுரிமைகள்

2022 இல் நாம் ஒரு புதிய மூலோபாயத் திட்டத்தினை, நிலவிய முன்னெப்போதும் நிகழ்ந்திராத நிலைமைக்கு பதிலளிக்கும் விதமாக, கிளைகளிலுள்ள முன்வரிசை ஊழியர்கள் உள்ளடங்கலாக சகல முக்கிய பங்காளிகளதும் உள்ளீடுகளுடன் வரைந்தோம். இந்த திட்டமானது, மேம்படுத்தப்பட்ட வினைத்திறன்கள் மற்றும் ஆக்கத்திறன் இலாபங்களினூடாக விளைவினை உச்சப்படுத்துவதற்கு ஒரு நடைமுறையான மற்றும் வினைத்திறனான செயன்முறை நோக்கினால் துணையளிக்கப்பட்டது.

2023 இல் வங்கியின் தலையாய முன்னுரிமையாகக் காணப்பட்டது அதன் திரவத்தன்மை தாங்கியாகும். திரவத்தன்மை மட்டங்களை மீள்நிரப்புவதற்காக, ரூபா வைப்புகளை திரட்டுவதற்காகவும் வெளிநாட்டு நாணய தாங்கியினை கட்டியெழுப்புவதற்கும நாடுபூராவும் பிரச்சாரங்களை ஆரம்பித்தோம். எமது முயற்சிகள் மிகவும் பயனுறுதியாய் இருந்ததுடன், ஜூலை அளவில் நாம் எமது ரூபா வைப்புகளுக்கான இலக்கினை தாண்டியதுடன், இது 2023 இன் இறுதியில் ரூபா திரவத்தன்மை மிகையினை விளைவித்தது. நாம் அத்துடன் வெளிநாட்டு நாணய இருப்பினையும் மீள் கட்டியெழுப்பினோம். இது பிரதானமாக வங்கிக்கான உள்வாரி பணமனுப்பல்களிலான அதிவேக வளர்ச்சியினாலாகும்.

வருடத்திற்கான ஏனைய மூலோபாய முன்னுரிமைகளாக, இலாபகரத்தன்மையில் வளர்ச்சி, செயல்திறனற்ற கடன்களின் வீதத்தினை குறைத்தல், செலவினக் குறைப்பு, டிஜிட்டல் வங்கியியல் பிரயோகங்களை ஊக்குவித்தல் மற்றும் உன்னதமான வாடிக்கையாளர் சேவை என்பவற்றை உள்ளடக்குகின்றது. நாம் 2023 ஆம் நிதியாண்டினை, பெரும்பாலான முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளை அடைந்தோம் அத்துடன் ஒக்டோபர் 2023 அளவில் ஒட்டுமொத்த மூலோபாயத்தில் 76% நிறைவேறற்றப்பட்டும் காணப்பட்டது. இது திரவத்தன்மை மீட்டல் வீதத்தில் ஒரு விதிவிலக்கான வெற்றி, கடன் வழங்கல் தேக்கத்தின் தரத்திலான முன்னேற்றம், செயல்முறைகளின் டிஜிட்டல் மயமாக்கல், சேவைத் தரங்களிலான மேம்பாடுகள் மற்றும் பல்வேறு ஏனைய முக்கிய குறிகாட்டிகள் என்பவற்றினூடாக வெளிப்படுத்தப்பட்டது.

புயலினூடான சமாளித்தல்

ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் பாரிய பொருளாதார சூழலானது சாதகமற்றுக் காணப்பட்டாலும், வங்கியானது இவ்வாண்டின்போது திருப்திகரமான நிதியியல் செயற்திறனை அடைந்தது. குழுமமானது 2022 இல் அடைந்த ரூபா 20.5 பில்லியன் வரிக்கு பிந்திய இலாபத்துடன் ஒப்பிடும்போது ரூபா 11.4 பில்லியனை அடைந்ததுடன் மூலதனப் போதுமை விகிதமானது 2022 இல் காணப்பட்ட 17.2% இலிருந்து 18.2% ஆக முன்னேற்றமடைந்தது.

2023 இன் ஆரம்பத்தில் காணப்பட்ட திரவத்தன்மை கட்டுப்பாடுகளின்போது, நாம் ஆரம்பத்தில் கடன் வளர்ச்சி வீதத்தினை குறைத்து பருமனிலும் பார்க்க தரத்தில் முன்னிறுத்தத்தினை மேற்கொண்டோம். இது கடன் நியமங்களை இறுக்கமாக்குதல், இடர் வெளிப்பாட்டினை குறைத்தல் மற்றும் உயர் எல்லை வணிக பிரிவுகளில் முன்னிறுத்தம் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. தொடர்ச்சியான உயர் பணவீக்கம் மற்றும் உயர் வட்டி வீதங்களுக்கு பதிலளிக்கும் விதமாக, நாம் நிதியளித்தல் மூலங்களை பன்முகப்படுத்துவதன் மூலம் நிதியளித்தல் கலவையினை உகப்பாக்கியதுடன் வட்டி வீத இடர் வெளிப்பாட்டினையும் முகாமைப்படுத்தினோம்.

வலுக்குன்றல் வகைப்படுத்தல் அச்சுறுத்தலுக்கு பதிலளிக்கும் முகமாக, நாம் மிகவும் கடுமையான கடன் வழங்கல் வரன்முறைகளை அமுல்படுத்தினோம், கடன் பெறுநர்களில் ஒரு விரிவான மதிப்பாராய்வினை நடாத்தினோம், மற்றும் அவர்களது கடன் தகுதியினை மிகவும் நெருக்கமாக கண்காணித்தோம். சொத்தின் தரமானது மேலும் மோசமடைவதை தடுப்பதற்காக, நாம் சாத்தியமான பிரச்சனைக்குரிய கடன்களை இனங்கண்டு முகாமைப்படுத்துவதற்கு கடுமையான இடர் முகாமைத்துவ நடைமுறைகளை அமுல்படுத்தினோம்.

சி.ந.நி. (SME) மற்றும் கிராமியத் துறைக்கு துணையளித்தல்

ஆரம்பத்தில் திரவத்தன்மை கட்டுப்பாடுகள் காணப்பட்டபோதிலும், நாம் எமது அடித்தளமிடப்பட்ட கொள்கைகளுக்கு மெய்யாயிருந்து குறைவாக சேவையாற்றப்பட்ட சமூகங்களுக்கு துணையளித்தோம். இந்த நீடிக்கப்பட்ட பொருளாதார கஷ்டமான காலத்தின்போது அணுகக்கூடிய மற்றும் மலிவான நிதியியல் சேவைகளை வழங்குவதன் மூலமாகும். நடைமுறை வட்டி வீதங்கள் வருடத்தின் பெரும்பாலான காலத்தில் உயர்வாகக் காணப்பட்டபோதிலும், நாம் சலுகையான கடன் வசதிகளூடாக நுண் மற்றும் சி.ந.நி. நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக நிதியளிப்பினை மேற்கொண்டோம். அதேசமயம், சிரமத்துக்குள்ளான வணிகங்கள் சாத்தியமான காசுப் பாய்ச்சல்களுக்கு திரும்புவதற்கும் வசதியளித்தோம். நாம் விவசாயத் துறைக்கான நிதியளித்தல், வழங்கல் சங்கிலி நிதியளிப்பிற்கும் சிறிய உடைமையாளர்களுக்கும் நிதியளிப்பதனை பராமரித்தோம். பொருளாதார மீட்டுயிர்ப்பானது இந்த துறைகளிலிருந்தான கடனுக்கான கேள்வியினை மேம்படுத்துவதுடன், இந்த சமூகங்களுக்கு வலுவளிப்பதற்கு எமது முழுமையான உறுதுணையினை நீட்டுவதற்கு வங்கி தயாராயுள்ளது.

டிஜிட்டல் தலைமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் மையத்தன்மை

மக்கள் வங்கியின் எதிர்கால வெற்றிக்கான எமது முக்கிய மூலோபாய குறிக்கோள்களுள் ஒன்றாக காணப்படுவது இலங்கையில் முதன்மையான டிஜிட்டல் வங்கியாக ஆகுவதாகும். எனவே, நாம் எமது டிஜிட்டல் வழிநடத்தப்பம் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய அணுகுமுறையில் அசைக்கவியலாது முன்னிறுத்தத்தினை பராமரித்ததுடன், நாம் எதிர்காலத்தில் ஒரு முழுவதுமான இணைய வங்கியியல் அனுபவத்தினை வழங்கும் சாத்தியத்தினை தொடர்ந்து ஆராய்ந்தோம். இது தொடர்பில் 2023 இல் சிறந்த முன்னேற்றத்தினை அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்

தலைவரின் கடிதம்

வங்கியின் சகல செயற்பாடுகள் தொடர்பாக ஒரு வாடிக்கையாளர் மையப்படுத்திய நிலைப்பாட்டினை அமுல்படுத்துதல் வங்கியினுள் சேவை தரங்களை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் நோக்கிய ஒரு முக்கியமான மாற்றமாகும். வாடிக்கையாளர் திருப்திக்கு முன்னுரிமையளித்தல், ஊழியர் வலுவளிப்பதில் முதலீடு செய்தல், டிஜிட்டல் உருமாற்றத்தினை தழுவுதல், மற்றும் ஒரு சேவை நோக்கான மனப்பான்மையினை புகுத்துதல் என்பவற்றின் மூலம் வங்கியானது சந்தையில் தன்னை வித்தியாசப்படுத்திக்கொள்வது மாத்திரமன்றி நிலைபேறுடைய வெற்றி மற்றும் வளர்ச்சிக்கான அடித்தளத்தையும் இடுகின்றது.

2023 இன் போது, மக்கள் வங்கியானது அதன் மொபைல் செயலிகளான பீப்பள்ஸ் வேவ் மற்றும் பீப்பள்ஸ் பே உடன் இரண்டு மில்லியன் டிஜிட்டல் சிற்றளவு வாடிக்கையாளர் தளமான மைல்கல்லை எட்டியது. இந்த வாடிக்கையாளர் தளத்தின் ஏறத்தாழ 85% ஆனோர் மேல் மாகாணத்திற்கு வெளியே காணப்படுவதுடன் இது வங்கியின் டிஜிட்டல் அணுக்க விரிவாக்கத்திறை குறிப்பிடுகின்றது. 2023 இன் இறுதியில், 75% இற்கும் அதிகமான பாரம்பரிய வங்கியியல் கொடுக்கல் வாங்கல்கள் எமது டிஜிட்டல் வழிகளூடாக நடாத்தப்பட்டன. அதாவது, இயங்கலை வங்கியியல், மொபைல் செயலிகள், CDMs மற்றும் ATMs போன்றவையாகும். மாதத்திற்கான இயங்கலை வங்கியியல் / மொபைல் வங்கியியல் மற்றும் வொலட் செயலியூடாக கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை 8 மில்லியனை எட்டியுள்ளதுடன், பெறுமதியினைப் பொறுத்தளவில் ரூபா 87 பில்லியனுக்கும் அதிகமாகும். டிஜிட்டல் மயமாக்கல் இயக்கத்தின் பகுதியாக, திரட்டல் மற்றும் கொடுப்பனவுகளுக்கான டிஜிட்டல் தீர்வுகள், பல்கலைக்கழகங்கள், கல்வி நிருவகங்கள் மற்றும் அரசாங்க அங்கங்கள் போன்ற பல்வேறு நிருவகங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. செயற்கை நுண்ணறிவினால் வலுவளிக்கப்பட்ட செட்பொட் (Chatbot) மக்கள் வங்கியின் இணையத்தளத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பல்வேறு இடங்களில் எந்நேரமும் உறுதுணையினை வழங்குவதற்காகவும் வாடிக்கையாளர் விசாரணைகளுக்கு உடனடி மற்றும் தடையற்ற பதில்களை வழங்குவதற்கு செயற்கை நுண்ணறிவின் ஆற்றல்களையும் பயன்படுத்தும். நாட்டினுள் காசற்ற வர்த்தகத்தினை விரிவாக்குவதில், நாம் எமது QR வர்த்தகர்களுக்கு "வீசா நியமங்களை" அறிமுகப்படுத்தினோம். இந்த மேம்படுத்தலானது பீப்பள்ஸ் பே நிர்வாக தொகுதியினூடாக எமது வர்த்தகர் QR குறியீடுகளுக்கு லங்கா QR மற்றும் வீசா QR கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கான ஆற்றலை வழங்குவதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்டதாகும். இந்த அம்சமத்தின் அமுலாக்கமானது, வீசாவுக்கு வசதியளிக்கும் ஒரு மொபைல் செயலியினை பயன்படுத்துவதன் மூலம் மக்கள் வங்கியின் வர்த்தகர் QR இனை ஸ்கேன் செய்வதன் மூலம் வெளிநாட்டு தனிநபர்கள் இலகுவாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வலுவளிக்கின்றது.

வங்கியின் சகல செயற்பாடுகள் தொடர்பாக ஒரு வாடிக்கையாளர் மையப்படுத்திய நிலைப்பாட்டினை அமுல்படுத்துதல் வங்கியினுள் சேவை தரங்களை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் நோக்கிய ஒரு முக்கியமான மாற்றமாகும். வாடிக்கையாளர் திருப்திக்கு முன்னுரிமையளித்தல், ஊழியர் வலுவளிப்பதில் முதலீடு செய்தல், டிஜிட்டல் உருமாற்றத்தினை தழுவுதல், மற்றும் ஒரு சேவை நோக்கான மனப்பான்மையினை புகுத்துதல் என்பவற்றின் மூலம் வங்கியானது சந்தையில் தன்னை வித்தியாசப்படுத்திக்கொள்வது மாத்திரமன்றி நிலைபேறுடைய வெற்றி மற்றும் வளர்ச்சிக்கான அடித்தளத்தையும் இடுகின்றது.

புதிய உற்பத்திக் கருவிகள்

எக்செல்சியர் மற்றும் எலிகன்ஸ் சேவைகளினூடாக புதிய மற்றும் வசதி படைத்த வாடிக்கையாளர் பிரிவுகளை இலக்குவைக்கும் வேளை, நாம் உள்ளூர் வணிகங்களுக்கு துணையளிப்பதற்காக புத்தாக்கமான புதிய திட்டங்களையும் விருத்திசெய்தோம். பீப்பள்ஸ் ஸ்பார்க் தொழில்முனைவு அபிவிருத்தித் திட்டமானது நாட்டினுள் தொழில்முனைவு அபிவிருத்திக்காக அரசாங்கத்தின் தேசிய கொள்கை வரம்புறுகைகளுடன் ஒத்திருக்கின்றது. இது படித்த இளம் மற்றும் தொழில்ரீதியாக பயிற்றுவிக்கப்பட்ட நபர்களிடையே தொழில்முனைவினை விருத்திசெய்வதற்கு இளம் பட்டதாரிகள் மற்றும் இளம் தொழில்முனைவோர்களுக்காக ஒரு தனிப்பயனுடைய கடன் திட்டத்தின் மூலம் துணையளிக்கப்படுகின்றது. மக்கள் வங்கியின் நுண்-தொழில்முனைவோர் கிராமங்கள் கிராமிய தொழில்முனைவோரை இலக்குவைத்த மற்றுமோர் எண்ணக்கருவாகும். கடனை வழங்கும் வேளை, வங்கியானது கிராமவாசிகளுடன் அவர்களது சேமிப்புகள், நிதியியல் அறிவு மற்றும் சந்தை இணைப்புகளை மேம்படுத்துவதற்காக நேரடியாக செயலாற்றுகின்றது. அதேசமயம், மக்கள் வங்கியின் ஏற்றுமதி மையங்கள் ஒரு தனித்துவமான கூட்டு வணிக வலையமைப்பு எண்ணக்கருவாகும் என்பதுடன் இது உலகச் சந்தையில் சி.ந.நி. ஏற்றுமதியாளர்கள் வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கு நிதியியல் மற்றும் ஏனைய உறுதுணைகளை வழங்குகின்றது. 2023 இல், நாடுபூராகவுமுள்ள இறக்குமதி / ஏற்றுமதி வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதற்காக மக்கள் வங்கிக் கிளைகளான, நுகேகொட, கம்பஹா, பாணதுறை, குருணாகலை மற்றும் கண்டி ஆகியவற்றில ஐந்து ஏற்றுமதி மையங்கள் நிறுவப்பட்டன. வங்கியின் மற்றுமோர் திட்டமான பீப்பள்ஸ் பவர் கடன் திட்ட நிதிகள், இவை நு.சி.ந.நி. அவற்றின் உற்பத்திகள், சேவைகள் மற்றும் தொடர்புடைய செயன்முறைகளுக்கான, விசேடமாக பெண் தொழில்முனைவோரை விருத்திசெய்வதிலான முன்னிறுத்தத்துடன், முதலீட்டு மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை சந்திப்பதற்காகும்.

மீள் வணிகநாமமிடல் மற்றும் கூ.ச.பொ. (CSR)

எமது மஹராஜன மெஹெவர வணிக நாமத்தின் கீழ் எமது கூ.ச.பொ. நடவடிக்கைகளை நாம் கொண்டுவந்தபோது நாம் எமது வணிக நாமமிடலில் ஒரு பாரிய நகர்வினை மேற்கொண்டோம். இது மக்கள் வங்கியின் பண்பாண்மையின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாகும். இந்த திட்டத்தின் கீழ், 2023 இல் வங்கியானது, பாடசாலை பிள்ளைகளுக்கு குடி நீரை வழங்குவதற்காக சூரிய சக்தியில் இயங்கும் ஓடும் நீர் அமைப்பினை உருவாக்குவதற்காக சூரியப் பலாகங்கள் மற்றும் மின்தொகுப்பிற்கு அப்பாலான மின்கல அமைப்புகளை வழங்குவதன் மூலம் ஏழு பின்தங்கிய பாடசாலைகளுக்கு துணையளிப்பதற்காக வங்கியானது தொழில்நுட்பத்தினை பயன்படுத்தியது.

வங்கியானது அதன் கூ.ச.பொ. (CSR) முன்னெடுப்புக்களுக்காக அதி நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் மூலோபாய திசையினை மேலும் விரிவாக்குவதற்காக, மக்கள் வங்கி நாளைய புதுமைப் புனைவாளர்கள்: இளையோர் தொழில்நுட்பத் திறன் அபிவிருத்தித் திட்டத்தினை ஆரம்பித்தது. இது 15 முதல் 19 வரையான வயதுடைய பாடசாலை மாணவர்களுக்கு 100 கல்வி உதவித்தொகைகளை, கணினி விஞ்ஞானத்தில் டிப்ளோமா திட்டத்திற்காக வழங்கியது. இது கணினி விஞ்ஞானத்தின் பல்வேறு அம்சங்களை, நிரலாக்கம், இணைய அபிவிருத்தி, வலையமைத்தல், வரைவியலகள் மற்றும் கணினி கணிதவியல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

மக்கள் வங்கி நாட்டில் சுகாதார சேவைகளை தரமுயர்த்துவதற்காக பல்வேறு கூ.ச.பொ. (CSR) முன்னெடுப்புகளை அமுல்படுத்தியது. அத்தகைய திட்டத்தில் ஒன்றாக, மஹாஜன மெஹெவர வின் கீழ் 1990 சுவசெரிய நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட 'ஒரு மருத்துவ ஊர்தியினை தத்தெடுங்கள்' இன் கீழ் ஒரு 1990 சுவசெரிய மருத்துவ ஊர்திக்கு அனுசரணை வழங்குவதாகும்.

மேலாக, மக்கள் வங்கி பொரள்ளையிலுள்ள டீ சொய்சா மகப்பேற்று வைத்தியசாலையில் பல்வேறு அவசியமான புதுப்பித்தல்களது நிறைவேற்றலுக்கு வசதியளித்தது. இதற்கு ரூபா 3 மில்லியன் செலவு செய்யப்பட்டதுடன், வைத்தியசாலைக்கு அவசியமான உபகரணங்களும் கையளிக்கப்பட்டன.

எதிர்காலத்திற்கு மென் திறன்களை விருத்திசெய்தல்

விதிவிலக்கான சேவைத் தரத்திற்கு ஊழியர் திருப்தி முக்கியமாதலால், எமது மூலோபாய இலக்குகளில் ஒன்றாக காணப்பட்டது துறையின் சிறந்த ஊழியர் திருப்தி மட்டங்களை அடைவதாகும். எனவே, நாம் ஒரு கருத்துக்கணிப்பினூடாக ஊழியர் திருப்தியினை அளவிடுவதனை ஆரம்பித்துள்ளதுடன், நாம் எமது புள்ளிகளை மேம்படுவதற்கு பாடுபடும்வேளை எமது பயிற்சியினை மென் திறன்களை விருத்திசெய்தல் நோக்கி மறுசீரமைத்தோம். எமது பயிற்றுவித்தல் முயற்சிகள் நடுத்தர மற்றும் சிரேஷ்ட மட்டத்திலான முகாமைத்துவத்தின் பகுப்பாய்வு மற்றும் கருத்தியல் திறன்களை மேம்படுத்தியுள்ளன. இவை வாடிக்கையாளர் சேவை தனிச்சிறப்பு, வாடிக்கையாளர் மையப்படுத்திய மனப்பான்மை மற்றும் ஆளுமை விருத்தி போன்ற பிரிவுகளை விருத்திசெய்யும்.

2023 இலும், வங்கியானது உயர்ந்த மட்டத்திலான மூளைசாலிகளின் வெளியேற்றத்தினை அனுபவித்தது. இந்த ஆற்றல் வெளியேற்றத்தினை கட்டுப்படுத்துவதற்கு நாம் பின்வருமாறு முயற்சிக்கின்றோம்: போட்டித்தன்மையான சம்பளங்கள், தொழில் மேம்பாட்டிற்கான வாய்ப்புக்கள் மற்றும் தொழில்சார் அபிவிருத்தி மற்றும் சாத்தியமான பணிச் சூழல் போன்ற ஊக்குவிப்புத் திட்டங்களை அமுலாக்குவதன் மூலம் ஊழியர்கள் ஈடுபாட்டினையும் விசுவாசத்தினையும் வளர்க்கக்கூடியதாயுள்ளது.

எமது மனிதவள அமைப்பு முறையானது மனித இயக்க தலையீடுகளை மாற்றியமைத்து தன்னியக்கமாக்கல் செயன்முறையில் உள்ளதுடன், இது சிறப்பான நெகிழ்வுத்தன்மை மற்றும் ஏனையவற்றுக்கிடையில், ஒப்பந்த ஊழியர்களுக்கான சம்பள விகிதங்களையும் நிறுவும். இது தகவல் தொழில்நுட்பம் போன்ற பிரிவுகளில் பாரிய நன்மையாகும் ஏனெனில் தனியார் துறையில் காணப்படும் உயர்ந்த சம்பள விகிதங்களின் காரணமாக உயர்ந்த பணியாளர் விலகல்கள் உள்ளதனாலாகும். .

எதிர்வரும் ஆண்டிற்கு மற்றும் எதிர்கால சவால்களை முகங்கொடுப்பதற்கான மூலோபாயம்

எதிர்காலத்திற்கு வங்கியினை தயார்செய்வதில் வங்கியின் நிலைபேறுடமை மிகவும் முக்கியமானதாகும். எனவே, நாம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு நெகிழ்வான மூலோபாய அணுகுமுறையினை கடைப்பிடித்துள்ளதுடன், முன்கணிக்கவியலாத பாரிய சூழல் இயக்கவியல்களுக்கு சிறப்பான பதிலளிக்கும்தன்மைக்கு வசதியளிப்பதற்கு தேக்கத்தினை பன்முகப்படுத்துவதிலும் ஈடுபட்டோம். தேக்கத்திலான அழுத்த சோதனை, தற்செயல் நிகழ்வுத் திட்டங்களின் அமுலாக்கம் மற்றும் சாத்தியமான திரவத்தன்மை மூலங்களை இனங்காணுதல் உள்ளடங்கலான மீட்டல் திட்டங்கள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதுடன், இவை சந்தை மாற்றங்கள் மற்றும் வங்கியிலான அதிர்வுகளின் தாக்கங்களை குறைப்பதற்காகும். சாத்தியமான இடர்கள் முக்கியமானவையாக வருவதற்கு முன்னர் இனங்காண்பதற்காக ஒரு ஆரம்ப எச்சரிக்கை கண்காணிப்பு அமைப்பினை வெற்றிகரமாக கடைப்பிடித்துள்ளோம். இது சந்தை போக்குள், வாடிக்கையாளர் நடத்தையினை கண்காணித்தல் மற்றும் முறைமைப்படுத்தல் அபிவிருத்திகளை கண்காணித்தல் என்பவற்றின் மூலம் ஆகும்.

வங்கியின் டிஜிட்டல் மயமாக்கல் மூலோபாயமானது வங்கி அடுத்த சந்ததி வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதற்கு ஏற்கனவே தயார்படுத்தியுள்ளதுடன், எமது வாடிக்கையாளர் தளத்தில் அதிகரிக்கும் விகிதாசாரமானோர் இளம் மற்றும் 80 களுக்கும் 90 களுக்கும் இடையில் பிறந்தோரைக் கொண்டுள்ளது. தேசிய மீட்சிக்கு ஏற்றுமதி வளர்ச்சி முக்கியமாதலால், மக்கள் வங்கி ஏற்றுமதி நோக்கான வணிகங்களுக்கு நிதியினை வழங்குதல் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்புகளை வழங்குதல் மற்றும வர்த்தக நிதியளித்தல் நடவடிக்கைகளை ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம் தொடர்ந்தும் ஏற்றுமதியாளர்களுக்கு துணையளித்து உற்பத்தியினை ஊக்குவிக்கின்றது. உலக வெப்பமயமாதல் இடர்கள் காணப்படும்வேளை, நாம் புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களுக்கான நிதியளிப்பிற்கு முன்னுரிமையளிப்பதன் மூலம் நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுவின் பயன்பாட்டினை ஊக்குவிக்கின்றோம். மேலாக, வங்கியானது நிலைபேறுடைய வளர்ச்சிக்காக சூ.ச.ஆ. (ESG) நடவடிக்கைகளையும் கடைப்பிடிக்கின்றது.

நாம் எமது டிஜிட்டல் அடிச்சுவட்டினை விரைவாக விரிவாக்கும்வேளை, எமது டிஜிட்டல் சொத்துக்களையும் எமது வாடிக்கையாளர்களின் இரகசியத்தன்மை மற்றும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்தல் என்பன முன்னிடம் பெறுகின்றது. எனவே நாம் அமைப்புமுறை பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் ஆகியவற்றில் துறைசார் சிறந்த நடைமுறைகளை கடைப்பிடித்துள்ளோம். இது வழக்கமான நலிவுறுநிலை சோதனை மற்றும் ஊடுருவல் சோதனை, பயனாளர் கணக்குகளுக்கு பல் காரணி அங்கீகாரத்தின் அமுலாக்கல், உணர்திறனுடைய தரவுகளை குறியாக்கல் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், வெளித்தோன்றும் அச்சுறுத்தல்களிலிருந்து முன்னணியில் பாதுகாப்பு மென்பொருள் மற்றும் அமைப்புமுறைகளை இற்றைப்படுத்தல் என்பவையாகும்.

நாடானது அதன் மீட்சிப் பாதையில் தொடரும்வேளை நாம் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி உள்ளடங்கலான பல்வேறு பங்காளிகளுடன் தொடர்ந்தும் ஈடுபடுவதுடன் இது இந்த முக்கியமான தருணத்தில் முறைசார் ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகும்.

எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தல்

நான் நிதி அமைச்சுப் பதவியினை வகிக்கும் மான்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும், மதிப்புமிக்க பிரதம மந்திரி மற்றும் இராஜாங்க நிதி அமைச்சர் அவர்களுக்கும் எமது நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத இந்த அத்தியாயத்தின்போது அவர்களது தலைமைத்துவத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் நான் ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரியின் செயலாளர், மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்கள் ஆகியோருக்கும் இவ்வாண்டின்போது வழங்கிய உறுதுணைக்கும் வழிகாட்டலுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு அவர்களது புத்திசாலித்தனமான உணர்வுகள் மற்றும முறைமைப்படுத்தல் நடவடிக்கைகளிலான சகல விடயங்களுக்கும் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். சபையிலுள்ள எனது சகாக்கள் அயராது செயற்பட்டு வங்கியின் வெற்றியினை நோக்கி தடங்கலற்ற பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் நான் அவர்களது பங்களிப்பிற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் வங்கியின் பொது முகாமையாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியான கிளைவ் பொன்சேகாவுக்கும் அத்துடன் முகாமைத்துவம் மற்றும் அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களுக்கும் வங்கியின் வெற்றிக்கான அவர்களது பங்களிப்பிற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மிகவும் முக்கியமாக, எமது வெற்றியின் மூலைக்கல்லாக எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களும் ஏனைய பங்காளிகளும் காணப்படுவதுடன், நாம் எமது கொள்திறனில் சிறந்த வகையில் உங்களுக்கு சேவையாற்றுவதற்கு தயாராயுள்ளோம். எமது நாட்டினை பெரிதாக, சிறந்ததாக மற்றும் திடமானதாக கட்டியெழுப்புவதற்கு உங்களது தொடர்ச்சியான உறுதுணையினை எதிர்பார்க்கின்றேன்.

அன்புடன்,



திரு. சுஜீவ ராஜபக்ஷ

தலைவர்

26 மார்ச் 2024

நாடானது அதன் மீட்சிப் பாதையில் தொடரும்வேளை நாம் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி உள்ளடங்கலான பல்வேறு பங்காளிகளுடன் தொடர்ந்தும் ஈடுபடுவதுடன் இது இந்த முக்கியமான தருணத்தில் முறைசார் ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகும்.

பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு



வங்கியின் வருமானக் கூற்றிலான அழுத்தத்தினை ஒழித்தலும் வங்கியின் திரவத்தன்மை மட்டங்களை வலுவூட்டலும் 2023 ஆம் ஆண்டிற்கான முதன்மையான முன்னுரிமையாகக் காணப்பட்டது. வங்கியானது 2023 இன் நடுப்பகுதியில் ரூபா மற்றும் USD திரவத்தன்மை பற்றாக்குறையினை வெற்றிகரமாக முறியடித்தது. வங்கியானது உள்வாரி பணமனுப்பல்கள் மற்றும் ஏற்றுமதிகளுக்கான அதன் இலக்கினை விஞ்சியதுடன் அதன்மூலம் கடுமையான டொலர் பற்றாக்குறையினை மீள்நிரப்பியது.

தொடர்ச்சியான மூலோபாய மறுசீரமைப்புகளின் பின்னணியில் பொருளாதாரமானது மெல்ல ஒரு புதிய சமநிலையினை மீட்டுப்பெறும்வேளையில் மக்கள் வங்கியின் ஒரு உருமாற்றல் வருடத்தினை எமது பங்காளிகளுக்கு அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு திடமான நிதியியல் தளத்தினால் துணையளிக்கப்பட்டு உலகளாவிய அணுகலைக் கொண்ட அதி நவீன டிஜிட்டல் நிதியியல் அமைப்புமுறையில் ஒன்றாக, இலங்கையிலுள்ள எந்தவொரு தனியான நிதியியல் நிருவகத்தினதும் பாரியளவு வாடிக்கையாளர் தளத்தினை இணைக்கும் பாரியளவு இயல்பியல் கிளை வலையமைப்பினை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் வசதியினைக் கொண்டு வங்கியான மக்கள் வங்கி 2023 இனை, ஒரு வெளித்தோன்றும் புதிய பொருளாதார கட்டமைப்பில் நிலைமாற்றமான மாற்றங்களை இயக்குவதற்கு தயாராயுள்ளது.

இலாபங்களுக்கு அப்பாலான முன்னுரிமைகள்

மக்கள் வங்கியின் இலாபகரத்தன்மையானது 2022 இல் காணப்பட்ட ரூபா 17.2 பில்லியனிலிருந்து 42.1% ஆல் வீழ்ச்சியடைந்து 2023 இல் ரூபா 10.0 பில்லியனை பதிவுசெய்தது. எவ்வாறாயினும், ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நிலவிய ஒட்டுமொத்த எதிர்மறையான சூழலைக் கருத்திலெடுக்கும்போது, ஒரு திரவத்தன்மை நெருக்கடியுடன் போராடும்வேளை பல செயற்பாட்டு மேம்பாடுகளை பயன்படுத்தி நாட்டிற்கான வங்கியின் பங்களிப்பில், 2023 ஆண்டின்போதான வங்கியின் செயற்திறனை இட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏற்கனவே தலைவரினால் அழுத்தமாக தெரிவிக்கப்பட்டவாறு, நாட்டின் மூலோபாயமாக தயாராயுள்ள அரச வங்கியாக வெறுமனே இலாபத்தை மாத்திரம் நோக்காது அதற்கப்பால் வங்கி பார்க்கவேண்டியது தவிர்க்கவியலாததாகும். 2021 மற்றும் 2022 நிதியாண்டுகளின்போது ஒரு அரச வங்கியாக மக்கள் வங்கியின் முன்னுரிமையாகக் காணப்பட்டது தொடர்ச்சியாக பொருளாதார நடவடிக்கைகளுக்கு துணைபுரிவதாகும். 2020-2022 வரையான 3 வருட காலத்தின்போது வங்கி அரசாங்கத்திற்கும் அரச உடைமை நிறுவனங்களுக்கும் குறிப்பிடத்தக்க நிதியியல் உறுதுணையினை வழங்கியதுடன் இவை நாட்டிற்கான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளில் வழங்கல்களுக்கு வசதியளிப்பதற்காகும்.

2019 முதல் 2022 வரையான காலத்தின்போது மக்கள் வங்கி மின் உற்பத்திக்கான எரிபொருள் மற்றும் நிலக்கரி இருப்புகளை தொடர்ச்சியாக பராமரிப்பதற்காக வலுத் துறைக்கு நிதியியல் உறுதுணையினை வழங்கியது. 2020 இலிருந்து கோவிட்-19 தொற்றினால் தாக்கமடைந்த வணிகங்களுக்கு கடன் காலம் தாழ்த்திச் செலுத்துவதற்கான வசதியினை வழங்கிய வங்கிகளில் ஒரு பிரதான வங்கியாகும் என்பதுடன் இதன்மூலம் கணிசமான தொகை சலுகைகளை வழங்கியது.

வங்கியின் வருமானக் கூற்றிலான அழுத்தத்தினை ஒழித்தலும் வங்கியின் திரவத்தன்மை மட்டங்களை வலுவூட்டலும் 2023 ஆம் ஆண்டிற்கான முதன்மையான முன்னுரிமையாகக் காணப்பட்டது. கடன் வழங்கலானது மட்டுப்படுத்தப்பட்டு ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புகளின் விரிவாக்கல் முன்னுரிமையளிக்கப்பட்டது வங்கியானது 2023 இன் நடுப்பகுதியில் ரூபா மற்றும் USD திரவத்தன்மை பற்றாக்குறையினை வெற்றிகரமாக முறியடித்தது. வங்கியானது உள்வாரி பணமனுப்பல்கள் மற்றும் ஏற்றுமதிகளுக்கான அதன் இலக்கினை விஞ்சியதுடன் அதன்மூலம் கடுமையான டொலர் பற்றாக்குறையினை மீள்நிரப்பியது.

செயற்திறனற்ற கடன்கள் விகிதத்தினை கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமையளித்தல் முக்கியமாக காணப்பட்டது. ஒரு மீட்டல் முன்னெடுப்பின் ஆரம்பம் மற்றும் வணிகப் புனர்வாழ்வுத் திட்டங்களின் அறிமுகம் என்பவற்றிற்கப்பால் 2023 இன் மொத்த செ.க. வீதமானது 4.7% இனை எட்டியது. இருந்தாலும், 2024 இல் செ.க. (NPL) தேக்கத்தினை முகாமைப்படுத்துவதற்கு மிகவும் பயனுறுதியான நடவடிக்கைகளை அமுல்படுத்துவது பற்றி நாம் நன்னம்பிக்கையுடன் உள்ளோம்.

வங்கியின் வணிகப் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலான தகவல்களுக்கு தயவுசெய்து பக்கங்கள் 76 முதல் 77 வரை காணப்படும் நிறுவன வங்கியியல் மீளாய்வினையும் 2023 இன் இறுதியியல் உள்ளவாறான வங்கியின் நிதி நிலைமையிலான விபரங்களுக்கு பக்கங்கள் 68 முதல் 73 வரை காணப்படும் நிதியியல் தலைவரின் நிதியியல் மீளாய்வினைப் பார்க்கவும்.

வெளிவாரி உறுதியின்மை இருந்தபோதிலும், நாம் வங்கியின் உருமாற்றலினை விரைவுபடுத்துவதற்கான ஒரு அடிப்படை கூறான டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நாம் தொடர்ந்தோம்.

உருமாற்றத்தினை இயக்குதல்

ஒரு புதிய மூலோபாயம்: நீடித்த பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக வங்கியின் நடைமுறையிலுள்ள மூலோபாயத் திட்டமானது கணிசமானளவு திருத்தியமைக்கவேண்டியிருந்தது. 2025 முதல் செயற்பாடுகளை வழிநடத்துவதற்கான ஒரு புதிய மூலோபாயத் திட்டத்தின் அமுலாக்கலானது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வணிக மாதிரியினை மீள்சமநிலைப்படுத்தல்: வங்கியின் பாரம்பரிய வணிக மாதிரியானது, வரலாற்று ரீதியாக வங்கியின் வணிகத்தில்ன் பாரியளவு பங்கினை கணக்கீடு செய்யும் அரச உடைமை நிறுவனங்களுக்கான வெளிப்பாட்டினை குறைப்பதன் மூலம் மீள்சமநிலைப்படுத்தப்பட்டது. பதிலாக, முன்னிறுத்தமானது தனியார் துறை நோக்கி நகர்த்தப்பட்டதுடன், முக்கியமாக ஏற்றுமதி துணைத் துறைக்கு வலியுறுத்தம் செய்யப்பட்டது. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டின்போது அரச உடைமை நிறுவனங்களுக்கான வெளிப்பாடானது கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. எமது இலக்கானது இத்துறைக்கான வெளிப்பாட்டினை மேலும் குறைப்பதாகும். மக்கள் வங்கியின் கூட்டாண்மை வாடிக்கையாளர் தேக்கமானது விரிவடைந்ததுடன், இந்த வேகத்தை 2024 இலும் நிலைபேறாக்குவதையிட்டு நாம் நம்பிக்கையுடன் உள்ளோம்.

தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு: நாம் மக்கள் வங்கியின் ATM, CDM மற்றும் CRM வலையமைப்பு மற்றும் மொபைல் செயலிகளின் அணுகலை விரிவாக்குவதனை நாம் தொடர்ந்தோம். செலவு, நேரச் சேமிப்பு மற்றும் வசதியினைப் பொறுத்தளவில் பொதுமக்கள் நன்மையடைந்துள்ளார்கள். உதாரணமாக, வங்கியின் வாடிக்கையாளர்கள் அவர்களது கொடுக்கல் வாங்கல்களுக்கு வங்கியின் ஒரு கிளைக்கு விஜயம் செய்யவேண்டிய தேவை இல்லாது காணப்படுகின்றது. அவர்கள் தற்போது அவர்களது வைப்புகள், பணமெடுத்தல்கள் மற்றும் ஏனைய வங்கியியல் கொடுக்கல் வாங்கல்களை எப்போது வசதிபடுகின்றதோ அப்போது அவர்களுக்கு மிகவும் அருகில் உள்ள சுய வங்கியியல் அலகுகளிலிருந்து மற்றும் டிஜிட்டல் செயலிகளினூடாக மேற்கொள்ளலாம். எமது செலவு மற்றும் கடன் அட்டைகள் மற்றும் டிஜிட்டல் செயலிகளின் பயன்பாட்டிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது ஒரு டிஜிட்டல் பொருளாதாரம் நோக்கிய பாதைக்கு வழியமைக்கின்றது.

டிஜிட்டல் இடம்பெயர்வு: நாடு பூராகவுமுள்ள எமது ஊழியர்கள் செயல்நிலையுடன் வாடிக்கையாளர்களை டிஜிட்டல் தளங்கள் மற்றும் அட்டை அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு வழிநடத்தி டிஜிட்டல் விரிசலை ஒடுக்கினார்கள். மக்கள் வங்கியின் டிஜிட்டல் ஆற்றல்களின் ஒரு குறிகாட்டியாக, 2023 இல் ஏறத்தாழ 75% ஆன பாரம்பரிய / சிற்றளவு வங்கியியல் கொடுக்கல் வாங்கல்கள் டிஜிட்டல் வழிமுறைகளான இயங்கலை வங்கியியல், மொபைல் செயலிகள் CDMகள், ATMகள் மற்றும் CRMகள் ஊடாக நடாத்தப்பட்டன. சிற்றளவு கடன்களின் ஏறத்தாழ 91% ஆனவைக்கு சிற்றளவு கடன் உருவாக்கல் முறையானது கணக்கீடு செய்தது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் சகல சிற்றளவு கொடுக்கல் வாங்கல்களில் 90% மற்றும் சிற்றளவு கடன்களில் 95% ஆனவை டிஜிட்டல் வழிகளுடான இடம்பெறும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

டிஜிட்டல் பொருளாதாரத்தினை அறிமுகப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கைக்கு இணையாக, மக்கள் வங்கியானது ஏனைய அரசதுறை நிறுவனங்களுக்கு அவர்களின் வங்கியியல் தேவைகளுக்காக டிஜிட்டல் தீர்வுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் டிஜிட்டல் மயமாக்கலை நீடித்தது.

முன்னோக்கல் மனோபாவம்: வாடிக்கையாளர்கள் நோக்கி ஒரு முன்னோக்கல் அணுகுமுறையினை கடைப்பிடிப்பதற்கு எமது ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள். மேலதிக வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான சாத்தியத்தினை வெளிப்படுத்தும் புதிய வாடிக்கையாளர்களை இனங்கண்டு வினைத்திறனான வங்கியியல் வசதிகளை வழங்குவதற்கு கிளையின் ஆளணியினர் மற்றும் பிராந்திய முகாமையாளர்கள் வலுவளிக்கப்பட்டுள்ளார்கள்.

பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

எமது உயரிய சொத்து எமது ஊழியர்களாகும். இவர்கள் பேராற்றலான விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியுள்ளதுடன், தீர்மானத்துடன் ஒரு அணியாக செயலாற்றியமையானது பல்வேறு அரண்கள் மற்றும் முட்டுக்கட்டைகளை வெற்றிகொள்வதற்கு எமக்கு உதவியது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

தொடர்ச்சியான மற்றும் திட்டமிடப்பட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் விபரங்களுக்கு தயவுசெய்து பக்கங்கள் 76 முதல் 77 வரை காணப்படும் நிறுவன வங்கியியல் அத்தியாயத்தினையும் பொருளாதார மீட்சிக்கான விசேட திட்டங்களுக்கு பக்கம் 77 இனையும் பார்க்கவும்.

சிக்கன முகாமைத்துவம் மற்றம் செயன்முறை மறுசீராக்கம்: சிக்கன முகாமைத்துவக் கொள்கைகள் 2023 இல் வங்கி பூராவும் செயற்படுத்தப்பட்டது. நாம் உடல் உழைப்பு மற்றும் மீண்டும் மீண்டும் செய்யும் பணிகளை நீக்குவதற்காக செயன்முறை மறுசீராக்கத்தினை ஆரம்பித்ததுடன் நடைமுறையிலுள்ள செயன்முறைகளையும் செம்மைப்படுத்தினோம்.

வாடிக்கையாளர் திருப்திக்கு முன்னுரிமையளித்தல்: வங்கி வாடிக்கையாளர் திருப்தி மற்றும் வணிகநாம கண்ணோட்டத்தினை மாத்திரம் அளவிடாது செயற்திறன் மீளாய்வின்போது சேவைத் தரத்தினை இணைத்துள்ளது.

மேலதிகத் தகவல்களுக்கு பக்கங்கள் 88 முதல் 89 வரை காணப்படும் சந்தைப்படுத்தல் அத்தியாயத்தினை பார்க்கவும்.

வங்கியானது பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் சாதனைகளை அடைந்துள்ளது. எமது டிஜிட்டல் வாடிக்கையாளர் தளமானது 3.4 மில்லியன் மைல்கல்லை எட்டியதை அறிக்கையிடுவதில் நாம் பெருமையடைவதுடன், இது எமது வாடிக்கையாளர்களிடையே டிஜிட்டல் சேவைகளுக்கான அதிகரிக்கும் முன்னுரிமையினை எடுத்துக்காட்டுகின்றது. டிஜிட்டல் புத்தாக்கத்தினை தழுவியுள்ள நாம் டிஜிட்டல் ரீதியாக 3.8 மில்லியன் கணக்குகளை திறப்பதற்கு வசதியளித்ததுடன், வாடிக்கையாளர் அனுபவத்தினை சீராக்கி மற்றும் எமது சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தியும் உள்ளோம். மேலும், நாம் 811,687 புதிய வாடிக்கையாளர்களை வெற்றிகரமாக சேர்த்து எமது அணுகலையும் சந்தை பிரசன்னத்தையும் விரிவாக்கினோம். எமது வாடிக்கையாளர் சனத்தொகையின் குறிப்பிடத்தக்க அம்சமாக மெச்சத்தக்க பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்பட்டதுடன் சேவையாற்றிய வாடிக்கையாளர்களில் 51% இற்கும் அதிகமானோர் பெண்களாவார்கள். இது எமது சேவைகள் உள்ளடக்கம் மற்றும் பாலின பன்முகத்தன்மைக்கான எமது கடப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது.

கண்ணோட்டமும் திட்டங்களும்

மக்கள் வங்கி 2024 இல் நுழையும் வேளை கடனுக்கான கேள்வியிலான எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிக்கு நிதியளிப்பதற்கு போதுமையான திரவத்தன்மைக்கு வங்கியானது நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்குகளை விரிவாக்குவதற்காக குறைவான வட்டி வீத நிலைமையில பயன்பெறுவதுடன், அந்நிய செலாவணி ஒதுக்கங்களை கட்டியெழுப்புவதற்காக வெளிநாட்டு நாணய வைப்புகள் மற்றும் உள்வாரி பணமனுப்பல்களையும் விரிவாக்கியது. எமது டிஜிட்டல் மயமாக்கல் இயக்கமானது வங்கியின் நடவடிக்கைகள் பூராவும் டிஜிட்டல் தீர்வுகளை விருத்தி செய்து ஒருங்கிணைப்பதன் மூலம் தொடரும்.


2024 இற்கான முன்னுரிமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- தரமான கடன்வழங்கல்: கடுமையான கடன் வழங்கல் நடைமுறைகளை நிலைநிறுத்துதல் - ஏற்றுமதியாளர்களுக்கு நிதியளிப்பதிலான அழுத்தத்துடன் ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய கடன் வழங்கலை அதிகரித்தல்.
- கடன் மீட்டல் மற்றம் மீள்கட்டமைப்பு: சேகரிப்புகள் மற்றும் செயற்திறனற்ற கடன்களது மீட்டல் முன்னுரிமை பெறும். செயற்திறனற்ற கடன் தேக்கம் மேலும் விரிவடைவதனை தடுப்பது வங்கியின் இலக்காகும்.
- விதிவிலக்கான வாடிக்கையாளர் அனுபவம்: புதிய கடன் வழங்கல்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் வலையமைப்பு பூராகவும் நிலைபேறுள்ள ஒரு சாத்தியமான வாடிக்கையாளர் அனுபவத்தினை அடைவதற்காகவும் தொடர்ச்சியாக ஊழியர்களை பயிற்றுவித்தல்.
- வணிகநாம உரித்துவம்: உலகளாவிய அணுகலுடன் ஒரு நவீன, உயர் தொழில்நுட்ப நிதியியல் சேவைகள் வழங்குநராக மக்கள் வங்கி வணிகநாமத்தினை ஒருங்கிணைத்தல்.

பாராட்டுக்கள்


நாம் சிறந்த காலத்தினை எதிர்நோக்கும் வேளையில், கடந்து வந்த ஆண்டில் வங்கிக்கு துணையளித்தல் பல்வேறு பங்காளிகளுக்கு நான் நன்றி சொல்ல விரும்புகின்றேன். எமது உயரிய சொத்து எமது ஊழியர்களாகும். இவர்கள் பேராற்றலான விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியுள்ளதுடன், தீர்மானத்துடன் ஒரு அணியாக செயலாற்றியமையானது பல்வேறு அரண்கள் மற்றும் முட்டுக்கட்டைகளை வெற்றிகொள்வதற்கு எமக்கு உதவியது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைக் தெரிவிக்கின்றேன். நான் எமது தலைவர், பணிப்பாளர்கள் சபை, திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் அதிகாரிகளுக்கும், கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்தின் எனது சக அங்கத்தவர்களுக்கும், எமது தொழிற்சங்கங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதுடன் மிகவும் முக்கியமாக எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது ஆதரவு மற்றும் விசுவாசத்தினால் எம்மை தொடர்ந்தும் ஊக்கமளிப்பதற்காக நன்றியினைத் தெரிவிக்கின்றேன். கூட்டாக, இலங்கையில் சிறந்த வங்கியாக மக்கள் வங்கியினை கொண்டு வரும் எமது இலக்கு நோக்கி நாம் செயல்படலாம்.

அன்புடன்



திரு. கிளைவ் பொன்சேகா
பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி

26 மார்ச் 2024


PEOPLE'S BANK
62
ANNIVERSARY
அறுபத்தியிரண்டு ஆண்டு காலமாக அளவிலா அபிமானத்துடன் நிலைத்திருக்கும் வங்கி
747 கிளைகளைக் கொண்ட நாடளாவிய வலையமைப்பு
2.7 டிரிலியன் ரூபாய்க்கு மேற்பட்ட ஒருங்கிணைந்த வைப்புகள்
15 மில்லியனுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள்
3 டிரிலியன் ரூபாய்க்கு மேற்பட்ட ஒருங்கிணைந்த சொத்துக்கள்
சிறந்த Fitch Rating 'A' தரப்படுத்தல்
ஸ்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை அதிகூடியளவில் உறுதிப்படுத்திய அரச வங்கியாக, தேசத்திற்கு தேவையான சகல சந்தர்ப்பங்களிலும் முன்வந்து, வங்கித்துறையை முன்னேற்றிச் சென்றிடும் முன்னோடியாக இணைந்திருக்கும் 'மக்கள் வங்கி', என்றும் தேசத்தின் பெருமிதமாகும்.

பணிப்பாளர்கள் சபை



இடமிருந்து வலம்

திருமதி. ஷியாமா விஜேகோன்
(பணிப்பாளர்கள் சபைக்கான செயலாளர்)

திரு. உதேனி சமரரத்ன
பணிப்பாளர்

திரு. துஷ்மந்த தொட்டவத்த
பணிப்பாளர்

திரு. மஞ்சுள வெள்ளாளகே
பணிப்பாளர்

திரு. சுஜீவ ராஜபக்ஷ
தலைவர்



இடமிருந்து வலம்

திரு. இசுரு பாலபட்டபெந்தி
பணிப்பாளர்

செல்வி. விசாகா அமரசேகர
பணிப்பாளர்

திரு. ஏ.எம்.பி.எம்.பீ.அத்தபத்து
பணிப்பாளர்

திரு. துஷான் சோசா
பணிப்பாளர்

பணிப்பாளர்கள் சபை

திரு. சுஜீவ ராஜபக்ஷ
தலைவர்



திரு. சுஜீவ ராஜபக்ஷ அவர்கள் ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமான BDO பார்ட்னர்ஸின் ஒரு முகாமைப் பங்காளி ஆவார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் ஒரு சக அங்கத்தவர் (FCA), இலங்கை பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவனத்தின் சக அங்கத்தவர் (FCMA)மற்றும் பட்டயச் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் அங்கத்தவர் (ACCA) ஆவார். திரு. ராஜபக்ஷ அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவனத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் (MBA) பெற்றுள்ளார். நான்கு தசாப்தங்களுக்கும் மேலான இவரது தொழில்வாழ்வில், இவர் பின்வரம் கௌரவப் பட்டங்களைப் பெற்றார். இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிருவனத்தின் (இ.ப.க.) தலைவர், பிரதித் தலைவர், சபை அங்கத்தவர், இ.ப.க. இன் கணக்காய்வு நியமங்கள் குழுவின் முன்னாள் தலைவர், இலங்கையின் நடைமுறை கணக்காளர்கள் மன்றத்தின் தலைவர், இலங்கை கிரிக்கட்டின் பொருளாளர், கிரிக்கட் உலகக் கோப்பை 2011 இன் பொருளாளர், தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் சபை அங்கத்தவர் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர், ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பின் தொழில்நுட்ப ஆலோசகரும் ஆவார். தற்போது இவர் ஹேகார்ப் பிஎல்சி, டிப்ட் பிரடக்ட்ஸ் பிஎல்சி, ஹேலீஸ் எக்ரிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் மற்றும் லங்கா ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் சபை அங்கத்தவராக சேவையாற்றுகின்றார். அத்துடன் இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சபை அங்கத்தவரும் ஆவார்.

இவர் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி இன் தலைவராகவும் இருந்துள்ளார். இவர் நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பிஎல்சி, NDB கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் - பங்களாதேஷ், த பைனான்ஸ் கம்பனி (மீள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் இ.ம.வ. இனால் நியமிக்கப்பட்டவர்), யுனிடில் பெக்கேஜிங் லிமிட்டட், யுனிடில் பெக்கேஜிங் அன்ட் சொலூசன்ஸ் லிமிட்டட் ஆகியவற்றின் பணிப்பாளர்கள் சபையில் சேவையாற்றியுள்ளதுடன், சொப்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பிஎல்சி இன் பிரதித் தலைவரும் ஆவார். இவர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவராகவும் இருந்துள்ளார்.

இவரது நிபுணத்துவம் சகல கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மற்றும் நடைமுறைகள், நிதியியல் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான அரசாங்க ஒழுங்குவிதிகள், மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் அரசாங்கத் துறை மற்றும் தனியார் துறையில் ஒட்டுமொத்த முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

திரு. இசுரு பாலபட்டபெந்தி
பணிப்பாளர்



திரு. இசுரு பாலபட்டபெந்தி அவர்கள் ஒரு சட்ட வழக்கறிஞர் மற்றும் தற்போது சிவில் மற்றும் வர்த்தகச் சட்டத்தில் ஒரு சட்ட சபையினை செயற்படுத்துகின்றார். இவர் அமெரிக்காவின் பென்சில்வேனியாவிலுள்ள பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்திலிருந்து LLM பட்டத்தைப் பெற்றுள்ளார்.

திரு. பாலபட்டபெந்தி அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒரு அரச வழக்கறிஞராக சேவையாற்றினார். அதன் பின்னர் இவர் நெதர்லாந்தின் ஹேக் இல் இலங்கை தூதரகத்தின் ஒரு இராஜதந்திரியாக 2008 முதல் 2010 வரை நியமிக்கப்பட்டார். இக்காலத்தின்போது இவர் இராசயன ஆயுதங்களைத் தடுத்தல் ஒழுங்கமைப்பு மற்றும் தனிப்பட்ட சர்வதேச சட்டத்தின் ஹேக் மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக சேவையாற்றினார். இவர் ஹேக்கில் இலங்கை தூதரகத்தில் தூதரக அலுவல்களின் தலைமையாகவும் நியமிக்கப்பட்டார். இவர் 2012 இல் இலங்கையில் முதலீட்டுச் சட்டங்கள் மற்றும் முதலீட்டுச் சபை தொடர்பான சட்ட விடயங்களுக்காக முதலீட்டு ஊக்கவிப்பு அமைச்சருக்கான சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். திரு. பாலபட்டபெந்தி அவர்கள் மக்கள் வங்கியின் சபைக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், செலான் வங்கி இலங்கை வங்கி ஆகியவற்றில் பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கை துறைமுக அதிகாரசபை, கொழும்பு மேற்கு சர்வதேச டேர்மினல் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் பணிப்பாளர்கள் சபையிலும் சேவையாற்றியுள்ளார். இவர் தற்போது பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி இன் தலைவர் மற்றும் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி மற்றும் சீலியோ நெச்சுரல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றில் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

இவர் இலங்கை சட்டச் சபையின் நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவராக சேவையாற்றியுள்ளார். இவர் 2007 கனிஷ்ட தேசிய சட்ட கருத்தரங்கின் தலைவராகவும், 2020 இன் தேசிய சட்டக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். திரு. பாலபட்டபெந்தி அவர்கள் 2022/23 மற்றும் 2023/24 வருடங்களுக்கான இலங்கை சட்ட சபையின் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

திரு. மஞ்சுள வெள்ளாளகே
பணிப்பாளர்



திரு. மஞ்சுள வெள்ளாளகே அவர்கள் ஏறத்தாழ இரண்டு தசாப்தங்கள் தனிப்பட்ட சட்ட சங்கத்தில் சேவையாற்றியுள்ள ஒரு சட்ட வழக்கறிஞர் ஆவார். ஒரு சட்ட வழக்கறிஞராவதற்கு முன்னர், இவர் நீதி அமைச்சினால் வழிநடத்தப்பட்ட சமூக அடிப்படையான சட்ட உதவித் திட்டத்திற்கு பொறுப்பான வளங்கள் மற்றும் பகுப்பாய்வு அதிகாரியாக சேவையாற்றினார். இவர் சட்ட மற்றும் அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சின் வளங்கள், பகுப்பாய்வு மற்றும் தகவல் மையம் (அரசியலமைப்பு அலுவல்கள்) ஆகியவற்றின் வளங்கள் அதிகாரியாக அவரது கடமைகளை நிறைவேற்றியுள்ளார். இவரது புகழ்மிக்க சட்ட தொழில் வாழ்வின்போது திரு. வெள்ளாளகே அவர்கள் அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் சமூக சட்ட விழிப்புணர்வினை எழுப்புதல் என்பவற்றில் பல்வேறு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தார். அத்துடன் நீதி அமைச்சின் சார்பில் முக்கியமான சட்ட சிக்கல்களை தீர்த்துவைப்பதற்கும் தலையீடு செய்தார். இவர் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

செல்வி. விசாகா அமரசேகர
பணிப்பாளர்



செல்வி விசாகா அமரசேகர அவர்கள் பொதுத் திறைசேரியில் 20 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், தற்போது இவர் வெளிவாரி வளங்கள் திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றுகின்றார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் மற்றும் முகாமைத்துவத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும் அமெரிக்காவின் வெண்டர்பில்ட் பல்கலைக்கழகத்திலிருந்து அபிவிருத்தி பொருளியலில் முதுமானி கலைப்பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளரும் ஒரு பொது பட்டய நிதியியில் கணக்காளரும் ஆவார். இவர் இலங்கை மின்சார சபை, சிலோன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை வங்கி உள்ளடங்கலான பல முக்கிய அரசு உடைமை நிறுவனங்களின் சபைகளில் பொதுத் திறைசேரியினை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

திரு. துஷ்மந்த தொட்டவத்த
பணிப்பாளர்



திரு. துஷ்மந்த தொட்டவத்த அவர்கள் 8 ஜூலை 2022 முதல் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார் மற்றும் கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டட் மற்றும் எல்சிபி பைனான்ஸ் பிஎல்சி இனதும் தலைவரும் ஆவார். மேலும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார். திரு. தொட்டவத்த அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் சக அங்கத்தவர் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி வர்த்தகப் (விசேட பட்டம்) பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் பொருளியலில் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார். இவர் நிதியியல் முகாமைத்துவம், கூட்டாண்மை ஆளுகை, மூலோபாய முகாமைத்துவம் மற்றும் பொது உறவுகளில் விரிவான அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு நிறைவேற்றுத் தலைவர் ஆவார். அத்துடன் இவர் பல அரச உடைமை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதம நிதியியல் அதிகாரியாக 40 வருடங்களுக்கும் மேலான வெற்றிகரமான சாதனையினைக் கொண்டுள்ளார்.

திரு. ஏ.எம்.பி.எம்.பீ. அத்தபத்து

பணிப்பாளர்



திரு. ஏ எம் பி எம் பீ அத்தபத்து அவர்கள் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக தற்போது சேவையாற்றுவதுடன், வங்கியியல், நிதி மற்றும் வணிக நிர்வாகத்தில் 28 வருடங்களுக்கும் மேலான தொழில் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் (பொது நிர்வாகம்) இரண்டாம் வகுப்பு உயர் பிரிவு பட்டத்தைப் பெற்றுள்ள இளமானிப் பட்டதாரியாவார். அத்துடன் இவர் அவுஸ்திரேலியாவின் விலின்டர்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச அபிவிருத்தியில் முதுமானி பட்டத்தைக் கொண்டுள்ளதுடன், இவர் பட்டப்படிப்பின் பின்னரான இரண்டு டிப்ளோமாக்களான, கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் அபிவிருத்தி மற்றும் ஜப்பானின் அபிவிருத்தி பொருளியல் நிருவத்திலிருந்து அபிவிருத்தி பொருளியல் என்பவற்றை பெற்றுள்ளார். 2004 இல் விலின்டர்ஸ் பல்கலைக்கழகத்தினானல் வழங்கப்பட்ட சர்வதேச அபிவிருத்தியில் அவரது முதுமானி பட்டத்திற்கான இவரது பகுப்பாய்வுத் தலைப்பு, "இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கான சீரமைப்பு" ஆகும். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவனத்திலிருந்து உரிமச் சான்றிதழையும் கொண்டுள்ளார்.

தற்போதைய பதவியியனை பொறுப்பேற்பதற்கு முன்னர், இவர் இலங்கையின் ஜனாதிபதிக்கு சிரேஷ்ட மேலதிகச் செயலாளராக செயலாற்றியதுடன், பொருளாதாரத்தின் ஸ்திரப்படுத்தல், மீட்டல் மற்றும் வளர்ச்சிப் பிரிவில் பொருளாதார மறுசீரமைப்பிற்கான கடமைகள் இவருக்கு ஒப்படைக்கப்பட்டது. கல்வி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக (திட்டமிடல்) இவர் கல்வி அமைச்சின் மூலதனப் பாதீட்டினை தயார்செய்ததுடன் அமைச்சின் அபிவிருத்தித் திட்டங்களை கண்காணித்தார்.

மேலும் திறைசேரியின் பிரதிச் செயலாளராக, இவர் நன்கொடை நிதியளித்தல் திட்டங்களுக்கும், அரசாங்கத்தின் வர்த்தக மற்றும் கட்டணக் கொள்கைகளின் அமுலாக்கத்திற்கும் தேசிய பாதீட்டினை கண்காணிப்பதற்கும் பொறுப்பாளியாவார். அத்துடன், அரசாங்கத்தின் தேசிய பாதீட்டு பிரேரணையான "நிறுவனங்கள் ஸ்ரீலங்கா துணைநிறுவனம் மற்றும அபிவிருத்தி திட்டம்" என்பதை ஆரம்பித்துள்ளார்.

திரு. அத்தபத்து அவர்கள் அபிவிருத்தி நிதியளித்தல் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியுள்ளார். இவர் விவசாயிகளுக்கு களஞ்சியச்சாலை பற்றுச்சீட்டுகள் நிதியளித்தல் முறைமை மற்றும் விவசாயிகளுக்கு உரக் காசு மானியத் திட்டங்களை முன்னெடுத்துள்ளார். மேலும், "சிறிய மற்றும் நடுத்தர நிறுவன பிராந்திய அபிவிருத்தித் திட்டம்" என்றழைக்கப்படும் மீள்நிதியளித்தல் கடன் திட்டங்களை அமுல்படுத்தியுள்ளார். இவை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படுகின்றது. உலக வங்கியினால் நிதியளிக்கப்படும் "சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அபிவிருத்தி வசதித் திட்டம்", ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படும் "சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கடன் வசதி" என்பனவாகும். மேலாக, இவர் ஜர்மனிய சர்வதேச ஒத்துழைப்பினால் நிதியளிக்கப்பட்ட சி.ந.நி. அபிவிருத்தி திட்டங்களையும் நிறைவேற்றியுள்ளார். அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட "கூரை மேலான சூரிய சக்தி உருவாக்கல் கடன் திட்டத்தையும்" நிறைவேற்றியுள்ளார்.

திரு. அத்தபத்து அவர்கள் திறைசேரியின் பிரதிநிதியாக முதலீட்டுச் சபை, மக்கள் வங்கி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட், இலங்கை தேயிலைச் சபை, தேசிய லொத்தர் சபை, இலங்கை சேமிப்பு வங்கி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, கூட்டுறவு மொத்தவிற்பனை நிறுவனங்கள், தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு ஆகியவற்றில் சேவையாற்றியுள்ளார்.

திரு. உதேனி சமரரத்ன

பணிப்பாளர்



உதேனி சமரரத்ன அவர்கள் 35 வருடங்களுக்கும் மேலாக தொழில் வாழ்வினைக் கொண்ட ஒரு அனுபவமிக்க சிரேஷ்ட நிதியியல் தொழில்வல்லுனர் ஆவார். இவர் இலங்கையின் பாரிய கம்பனிகளுள் ஒன்றான ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி போன்ற பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் பிரதம நிதியியல் அதிகாரியாக சிரேஷ்ட நிதியியல் பதவிகளை வகித்துள்ளார். இவர் லங்கா அசோக் லெய்லன்ட் பிஎல்சி, கௌனி டயர்ஸ் பிஎல்சி, எக்மீ பிஎல்சி, ரிச்சர்ட் பீரிஸ் பிஎல்சி போன்ற முன்னணி உள்ளூர் கம்பனிகளில் சேவையாற்றியுள்ளதுடன், உலகின் மிகப்பெரிய பீங்கான் உற்பத்தியாளர்களான நொரிடாக்கி ஜப்பான், உலகின் மிகப்பெரிய சாக்லேட் உற்பத்தியாளர்களான லக்சம்பேர்க்கின் பெராரோ போன்ற பல்தேசிய கம்பனிகளிலும், இலங்கையின் கௌனி டயர்ஸ் பிஎல்சி உடன் டயர்கள் உற்பத்திக்கான ஒரு கூட்டு முயற்சி ஒப்பந்தமான சீயட் இந்தியா ஆகியவற்றிலும் சேவையாற்றியுள்ளார்.

இவர் ஐ.இ. இன் ACCA மற்றும் ஐ.இ. இன் CIMA தகைமை பெற்றுள்ளார். இவர் சுவீரிச் சுவிற்சலாந்திலுள்ள சுவீஸ் வணிகக் கல்லூரியில் ஒரு முதுமானி பட்டத்தையும், சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்கா மத்திய நிலையத்தில் ஒரு உயர் டிப்ளோமாவினையும், பண்டாரநாயக்கா சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிருவகத்திலிருந்து தொழில்சார் இராஜதந்திரம் மற்றும் உலக அலுவல்களில் ஒரு டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் நிதியியல் பொருளாதாரத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு முதுமானி தகைமையினையும் பெற்றுள்ளார். அத்துடன் இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச அலுவல்களில் ஒரு முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் தலைவர் மற்றும் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் வைனான்சின் பணிப்பாளரும் ஆவார்.

திரு. துஷான் சோசா

பணிப்பாளர்



துஷான் சோசா அவர்கள் BPO துறை, நிதியியல் துறை மற்றும் பெறுநிறுவன ஆளுகை என்பவற்றில் பல்வேறு பின்னணியினைக் கொண்ட ஒரு உயர் தொழில்வல்லுனர் ஆவார். இவர் WNS குளோபல் சேரிவிசஸ் ஸ்ரீ லங்காவில் 15 வருடங்களாக முகாமைப் பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார். இவர் வணிகத்தினை ஆரம்பத்திலிருந்து ரூபா 1 பில்லியனுக்கும் மேலாக வருவாயுடன் வெற்றிகரமாக கட்டியெழுப்பினார். இங்கு நகர்தொடர் உலக வாடிக்கையாளர்களுக்கு சேவை மேற்கொள்ளப்பட்டது. SLASSCOM இன் ஒரு ஸ்தாபக அங்கத்தவராக இவர் இலங்கையில் IT/BPO துறையினை வடிவமைப்பதில் முக்கிய பங்கினை வகித்தார்.

துஷான் அவர்கள் IT மற்றும் இடர் குழுக்களுக்கு தலைமை தாங்கி சொப்ட்லொஜிக் பைனான்சின் சபையில் சேவையாற்றினார். தற்போது இவர் உருமாற்றல் மற்றும் செயன்முறை மறுசீராக்கத்தில் விசேடத்துவம் மிக்க ஒரு கம்பனியான BPMOne இனை நடாத்துகின்றார். வங்கியியலில் இவரது முக்கிய திறன்கள் மைய வங்கியியல், நிதித்தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இவர் நுகர்வோர் அலுவல்கள் சபையில் சேவையாற்றி நுகர்வோர் அலுவல்களுக்கும் பங்களிப்பு செய்துள்ளார்.

மேலாக, துஷான் அவர்கள் பீனிக்ஸ் பிரைவேட் லிமிட்டட் மற்றும் பிரின்ட்கெயார் டிஜிட்டல் ஆகியவற்றில் சபைப் பதவிகளை வைத்துள்ளதுடன் போர்ட் சிட்டி பொருளாதார ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குகின்றார். இவர் ரோட்டரி சமூகத்தின் ஒரு அர்ப்பணிப்புடைய அங்கத்தவராக இலங்கை மற்றும் மாலைதீவின் மாவட்ட ஆளுநராகவும் ரோட்டரி இன்டர்நேஷனல் இல் மூலோபாய குழுவின் அங்கத்தவரும் ஆவார்.

திருமதி. ஷியாமா விஜேகோன்

பணிப்பாளர்கள் சபையின் செயலாளர்



செல்வி. ஷியாமா விஜேகோன் அவர்கள் சபைக்கான ஒரு உதவிச் செயலாளராக 2016 இல் இணைந்து பின்னர் 2022 இல் சபை செயலாளர் பதவிக்கு பதவியுயர்வு பெற்றார். இவர் வழக்கறிஞர் ஆவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் கார்டிவ் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்தில் ஒரு முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலாக, வர்த்தகச் சட்டம் மற்றும் நடைமுறை அபிவிருத்திக்கான நிருவகத்திலிலிருந்து கப்பல் சட்டம் மற்றும் நடைமுறையில் (ICPL – CCC) ஒரு பாடத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலாக இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்திலிருந்து வங்கியியல் முகாமைத்துவத்தில் பட்டப்படிப்பின் பின்னரான நிறைவேற்றுனர் டிப்ளோமா பட்டத்தையும் வைத்துள்ளார். இது சபைக்கான செயலாளர் தரத்தில் அவரது தொழிலைப் புரிவதற்கு வெகுவாக துணைபுரிகின்றது. இவர் இலங்கையின் தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் ஆயுள் அங்கத்தவரும் ஆவார்.

பெறுநிறுவன முகாமைத்துவம்



முன்வரிசை இடமிருந்து வலம்

திருமதி.நில்மினி பிரேமலால், திரு. விக்கிரம நாராயண, திரு. கே.ஏ. நிஹால், திருமதி. பிரீத்தி கட்டுலந்த, திருமதி.பி.எஸ்.ஜே.குருகுலசூரிய, திரு. ரொஹான் பத்திரகே

பின்வரிசை இடமிருந்து வலம்

திரு. ஏ.யு.ஏ.அன்சார், திருமதி. துஷாரி ஹேவாவசம், திரு. நாலக விஜயவர்தன, திருமதி. சமந்தி சேனாநாயக்க



முன்வரிசை இடமிருந்து வலம்

திரு. கிளைவ் பொன்சேகா, திரு. அசாம் ஏ அஹமட், திருமதி. நிபுனிகா விஜயரத்ன, திரு. தம்மிக்க தசா, திரு. ஈ.ஏ.எம். திசாநாயக்க

பின்வரிசை இடமிருந்து வலம்

திரு. டி.எம்.டபிள்யு. சந்திரகுமார, திருமதி. ஷமீளா லொகு கலுகே, திரு. நலீன் பத்திரனகே, திரு. அரூர பெரேரா

பெறுநிறுவன முகாமைத்துவம்

திரு. கிளைவ் பொன்சேகா
பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்



திரு. பொன்சேகா அவர்கள் 2002 இல் மக்கள் வங்கியில் அவரது சேவையினை ஆரம்பித்த ஒரு மூத்த வங்கியாளர் ஆவார். இவர் நவம்பர் 2011 இலிருந்து வங்கியின் சிரேஷ்ட பெறுநிறுவன முகாமைத்துவ அணியில் பிரதிப் பொது முகாமையாளராக உள்ளார். இந்த பதவியில், இவர் வெளிநாட்டு நாணயச் செயற்பாடுகள், முதன்மை வர்த்தக அலகின் நடவடிக்கைகள், முதலீட்டு வங்கியியல் அலகு, மற்றும் USD மற்றும் ரூபா பணச் சந்தை செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தார். மேலாக, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான உறவினையும் முகாமைப்படுத்தினார். மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர், இவர் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி மற்றும் ஸ்டான்ட்ர்ட் சாட்டர்ட் வங்கி ஆகியவற்றினல் சிரேஷ்ட பதவிகளை வகித்தார்.

2018 முதல் 2020 வரை திரு. பொன்சேகா அவர்கள் முதன்மை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் பதவியினைப் பொறுப்பேற்றதுடன், தேசிய கொடுப்பனவுச் சபை, நிதியியல் அமைப்பு ஸ்திரத்தன்மை ஆலோசனைக் குழு, புதிய மாற்றீட்டு அளவுகோல் வட்டி வீதங்களை கற்று வடிவமைப்பதற்காக இ.ம.வ. இனால் நியமிக்கப்பட்ட செயற்குழு ஆகியவற்றில் அங்கத்தவராகவும் இருந்தார். மேலாக, இலங்கை மத்திய வங்கியின் உள்ளூர் நிதியியல் சந்தை உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்திலான சந்தை செயற்பாட்டு குழுவில் அங்கத்துவம் வகித்தார்.

தற்போது இவர், பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி இல் சுயாதீனமற்ற நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர், பீப்பள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட்டின் தலைவர், இலங்கை நிதிச் சேவைகள் பணியகம், வரையறுக்கப்பட்ட லங்கா பே தனியார் நிறுவனம், இலங்கை கடன் தகவல் பணியகம், தேசிய கொடுப்பனவுகள் சபை, பைனான்சியல் ஒம்புட்ஸ்மன் ஸ்ரீலங்கா (கரன்ட்டி) லிமிட்டட், இலங்கை வங்கியாளர்கள் நிருவனம் ஆகியவற்றில் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் IABF/DABF பரீட்சைகளுக்கு பிரதம பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. பொன்சேகா அவர்கள் இலங்கை வங்கியாளர்கள் நிருவனத்தின் சிரேஷ்ட சக அங்கத்தவர் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்தில் முதுமானி பட்டத்தையும் கொண்டுள்ளார். இவருக்கு ACI வர்த்தகச் சான்றிதழில் மேன்மை சித்தி வழங்கப்பட்டதுடன் திறைசேரி முகாமைத்துவத்தில் 29 வருடங்களுக்கும் மேலாக அனுபவத்தினைத் திரட்டியுள்ளார். இவர் அவுஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தின் சான்றளிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர் ஆவார்.

திரு. பொன்சேகா அவர்கள் 02 ஜனவரி 2023 இலிருந்து 31 ஜூலை 2023 வரை மக்கள் வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டதுடன், 1 ஆகஸ்ட் 2023 முதல் மக்கள் வங்கியின் பி.நி.அ/பொ.மு. ஆக நியமிக்கப்பட்டார்.

திரு. ரொஹான் பத்திரகே
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்



வங்கியியல் துறையில், மனித வளங்கள், சட்டம் மற்றும் நிர்வாகத்தில் 28 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தையுடைய திரு. ரொஹான் பத்திரகே ஒரு உயர் தமைமை மற்றும் சாதனைபடைத்த ஒரு தொழில்வல்லுனராவார். இவர் நியுசிலாந்தின் மெசே பல்கலைக்கழகத்திலிருந்து வங்கியியலில் ஒரு முதுமானி பட்டத்தையும் வங்கியியலில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமாவினையும் கொண்டுள்ளார். மேலாக, இவர் ஒரு சட்ட வழக்கறிஞர், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு சட்ட பட்டதாரிப் பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் மக்கள் வங்கியின் பெறுநிறுவன முகாமைத்துவ அணியில் ஒரு சிரேஷ்ட அங்கத்தவராக சேவையாற்றியுள்ளதுடன், முக்கிய முகாமைத்துவக் குழுக்களில் ஒரு அங்கத்தவரும் ஆவார்.

திரு. பத்திரகே அவர்கள் தற்போது மக்கள் வங்கியின் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் பதவியினை வகிக்கின்றார். இவர் பீப்ள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட்டின் தலைவர், பீப்பள்ஸ் லீசிங் பிலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்டின் தலைவர், பீப்பள்ஸ் மைக்ரோ கொம்ஸ் லிமிட்டட்டின் பணிப்பாளர், லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் பங்களாதேஷின் பணிப்பாளர், பீப்பள்ஸ் ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிருவனத்தின் மாற்றீட்டு பணிப்பாளரும் ஆவார்.

திரு. பத்திரகே அவர்கள் அவரது முன்னைய பதவியான மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் சட்டம்) வங்கியின் தொழிற்சேனையான 10,000 இற்கும் அதிகமான ஊழியர்களை வெற்றிகரமாக முகாமைப்படுத்தி வங்கியின் மனித வள தேவைப்பாடுகளுக்கிணங்க சிரேஷ்ட நிறைவேற்றுநர் பணிக்கமர்த்தலை மேற்பார்வை செய்தார். இவர் வங்கியின் சட்ட அணியான 70 அங்கத்தவர்களை வழிநடத்தியதுடன், மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு பிரதிப் பொது முகாமையாளர் - செயலாளராக கடமை புரிந்தார். வங்கியின் பணிப்பாளர்கள் சபை மற்றும் அதன் பல்வேறு உப குழுக்கள் தொடர்பான சகல விடயங்களிலும் அவரது நிர்வாக உறுதுணை மதிப்பிடவியலாததாகும்.

திரு. அசாம் ஏ அஹமட்
நிதியியல் பிரிவின் தலைவர்



திரு. அஹமட் அவர்கள் 3 ஜனவரி 2017 இல் மக்கள் வங்கியில் இணைந்தார். இவர் உள்ளூரிலும் சர்வதேசத்திலும் புகழ்மிக்க நிறுவனங்களில் சேவையாற்றி, மூலோபாய நிதியியல் முகாமைத்துவம், முதலீடுகள் மற்றும் இடர் வினைத்திட்பம் ஆகிய பிரிவுகளில் 23 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் சில பாரிய பன்நாட்டு தொழில்சார் சேவை நிறுவனங்களில், மற்றும் பன்முகமான துறைகள் மற்றும் சந்தைகளில் அடுக்கு 1 சேவை வழங்குனர்களிடம் தொழில் புரிந்துள்ளார்.

திரு. அஹமட் அவர்கள் பல உயர் தரத்திலான தொழில்சார் அங்கத்துவங்களைக் கொண்டுள்ளார். அவையாவன, UK இன் முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிருவனத்தின் சக அங்கத்தவர், UK இன் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்களின் பட்டய சங்கத்தின் சக அங்கத்தவர், இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தின் சக அங்த்துவம், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவத்தின் இணை அங்கத்துவம், மற்றும் சான்றளிக்கப்பட்ட நடைமுறை கணக்காளர் (அவுஸ்திரேலியா) இன் இணை அங்கத்தவரும் ஆவார். இதற்கும் மேலாக, இலண்டனின் இடர் முகாமைத்துவ நிருவகத்தின் தொழில்நுட்ப நிபுணரும், லண்டனின் கடன் முகாமைத்துவத்திற்கான பட்டய நிருவகத்தின் ஒரு சான்றளிக்கப்பட்ட அங்கத்தவர் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் அமுலாக்கல் மற்றும் விளக்கங்கள் குழுவின் அங்கத்தவரும் ஆவார்.

திரு. அஹமட் அவர்கள் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி, பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் லங்கன் எலாயன்ஸ் பைனான்ஸ் லிமிட்டட் பங்களாதேஷ் ஆகியவற்றின் பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

திருமதி. பி.எஸ்.ஜே. குருகுலசூரிய
பிரதிப் பொது முகாமையாளர் - மூலோபாயத் திட்டமிடல், செயற்திறன் முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வு



திருமதி. ஜயந்தி குருகூலசூரிய அவர்கள் 1994 இல் முகாமைத்துவ பயிற்சியாளராக வங்கியில் இணைந்து வங்கியியல் துறையில் 29 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவரது அனுபவம் பிரதானமாக, கிளை வங்கியியல், கடன், ஊழியர் பயிற்சி, மனித வளங்கள் அபிவிருத்தி, கடன் நிர்வாகம், கிளை முகாமைத்துவம் மற்றும் சிற்றளவு வங்கியியல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. வங்கியில் இணைவதற்கு முன்னர், வீதி கட்டுமாளம் மற்றும் அபிவிருத்தி கம்பனியில் ஒரு சிரேஷ்ட உதவி கணக்காளராக அனுபவத்தைப் பெற்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் (கௌரவம்) விசேட இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் ஒரு சக அங்கத்தவர், AAT ஸ்ரீ லங்காவின் ஒரு அங்கத்தவர், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் ஒரு உரிம அங்கத்தவர் மற்றும் மனித வளம் முகாமைத்துவத்தில் ஒரு டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் பட்டமளிப்பு விழா (1997) இல் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று வங்கியின் பிரதிமையினை மேம்படுத்தினார்.. இவர் இடைநிலை மற்றும் இறுதிப் பரீட்சைகளில் ஆகக்கூடிய எண்ணிக்கையிலான சிறப்பு சித்திகளை எய்தியதுடன், அனைத்து பாடங்களில் முதல் முயற்சியிலேயே சித்தி எய்தார். அத்துடன் அவ்வாண்டின்போது உயர்ந்த மொத்த மதிப்பெண்ணை பெற்று இறுதி பரீட்சையினை நிறைவுசெய்தார். இந்தப் பரிட்சையானது இரண்டு வருடக் காலத்தின்போது மூன்று அமர்வுகளை விஞ்சாத விதத்தில் உயர்ந்த மொத்த மதிப்பெண்களுடன் இடைநிலை மற்றும் இறுதி பரிட்சைகளை நிறைவுசெய்தார். இங்கு ஒவ்வொரு பாடமும் முதல் முயற்சியிலேயே சித்தி எய்துள்ளமையானது இன்னமும் தோற்கடிக்கவியலாத சாதனையாகும்.

இவரது சேவைக்காலத்தின்போது வங்கிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன், வங்கியின் மனித வள கொள்கையின் அபிவிருத்தி, 2021-2022 இற்கான வங்கியின் மூலோபாயத் திட்டத்தின் அபிவிருத்தி என்பவை உள்ளடங்கலாகும். மேலாக, இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தில் ஒரு வருகை விரிவுரையாளராகவும் பரீட்சைகளை மதிப்பிடுபவராகவும் சேவையாற்றி வங்கியியல் துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்துள்ளார்.

திருமதி. நிபுனிகா விஜயரத்ன

பிரதிப் பொது முகாமையாளர் - வங்கியியல் துணைச் சேவைகள்



திருமதி நிபுனிகா விஜயரத்ன அவர்கள் வங்கியியல் துணைச் சேவைகளுக்கான பிரதிப் பொது முகாமையாளராக சேவையாற்றுவதுடன், இவர் 1990 இல் வங்கியில் ஒரு முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்து வங்கியியல் துறையில் 33 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவர் பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து விவசாயத் துறையில் ஒரு இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியலில் ஒரு முதுமானி பட்டத்தையும் கொண்டுள்ளார். வங்கியில் இணைவதற்கு முன்னர், இவர் தனியார் துறையில் சேவையாற்றினார். இவர் வர்த்தகச் சேவைகள் மற்றும் தொடர்பு வங்கியியலில் 30 வருடங்களுக்கு அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் ஒரு இணை அங்கத்தவர் ஆவார். இவர் இலங்கையின் சர்வதேச வணிகச் சம்மேளனத்தின் ஒரு நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் ஆளுமை சபையில் ஒரு அங்கத்தவர் மற்றும் பிஎல்சி பீலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்டின் சபை அங்கத்தவரும் ஆவார்.

திருமதி. பிரீத்திக்கா கட்டுலந்த

பிரதம சட்ட அதிகாரி



திருமதி. பிரீத்தி கட்டுலந்த அவர்கள் 20 வருடங்கள் சட்டத் துறையில் செயல்நிலை நடைமுறை அனுபவத்தினைக் கொண்ட ஒரு சட்ட வழக்கறிஞர் ஆவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து மனித வள முகாமைத்துவத்தில் வணிக முகாமைத்துவத்தில் ஒரு முதுமானி பட்டத்தை கொண்டுள்ளார். இவர் ஆளணி முகாமைத்துவ நிருவகத்திலிருந்து மனித வள முகாமைத்துவத்தில் தொழில்சார் தகைமையினை வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ளார்.

திருமதி. பிரீத்தி கட்டுலந்த அவர்கள் 01.12.2021 இல் மக்கள் வங்கியில் இணைந்தார். இவர் மக்கள் வங்கியில் ஒரு சட்ட உள்ளகப் பயிலுநராக இவரது தொழில்வாழ்வினை ஆரம்பித்தார். ஒரு தனிப்பட்ட நடைமுறைப்படுத்துபவராக மற்றும் பெறுநிறுவனத் துறை அங்கத்தவராக இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவற்றுள் சட்டப் பிரிவில் 17 வருடங்கள் நிதியியல் துறை - வணிக நிறுவனங்கள் உடன் இணைந்த ஒரு இணை முகாமைத்துவ அணியின் அங்கத்தவர் என்பதுடன் இவை இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படுவதுடன், குறித்த நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம் ஆகிய பதவிகளில் சேவையாற்றியுள்ளார்.

திரு. தம்மிக்க தசா

பிரதம தகவல் அதிகாரி



தகவல் தொழில்நுட்பத் துயைில் 27 வருடங்களுக்கும் மேலாக அனுபவத்தினைக் கொண்ட திரு. தம்மிக்க தசா அவர்கள் மக்கள் வங்கியியல் பிரதான தகவல் அதிகாரியாக சேவையாற்றுகின்றார். இவர் மூலோபாய முகாமைத்துவம், திட்ட முகாமைத்துவம், உட்கட்டமைப்பு தொழில்நுட்ப முகாமைத்துவம், மென்பொருள் அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் வெளிப்பாடு உள்ளடங்கலான பல்வேறு பிரிவுகளில் கணிசமான வெளிப்பாட்டினையும் நிபுணத்துவத்தினையும் கொண்டுள்ளார். பல ஆண்டுகளாக இவர் நிதியியல், காப்புறுதி, வங்கியியல், உற்பத்தி, ஏற்பாட்டியல் மற்றும் ஓய்வு என்பவற்றில் இலங்கை, அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து நாடுகளில் இவரது திறமைகளை தீட்டியுள்ளார். மேலாக, இவர் தகவல் பாதுகாப்பு அமுலாக்கல்களில் ஒரு விரிவான புரிந்துணர்வினைக் கொண்டுள்ளார்.

திரு. தசா அவர்கள் களணிய பல்கலைக்கழகத்திலிருந்து கணிதவியல் மற்றும் கணினி விஞ்ஞானத்தில் ஒரு இளமானி விஞ்ஞான பட்டதாரியாவார். வங்கியில் இவர் பதவியினை பொறுப்பேற்பதற்கு முன்னர், இவர் ஏய்ட்கன் ஸ்பென்ஸ் குழுமம், இலங்கையின் KPMG மற்றும் விசேர்வ் போன்ற பிரசித்திபெற்ற நிறுவனங்களில் பன்முகமான சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார்.

திரு. கே. ஏ. நிஹால்

பிரதிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள்



திரு. கே. ஏ. நிஹால் அவர்கள் 1994 இல் ஒரு முகாமைத்துவ பயிற்சியாளராக வங்கியில் இணைந்து தற்போது மனித வளங்களுக்கு பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் பதவியினை வகிக்கின்றார். இவர் கிளைச் செயற்பாடுகள், தகவல் தொழில்நுட்பம், திறைசேரி, மற்றும் மனித வளங்கள் போன்ற துறைகளில் 29 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் இரண்டாம் வகுப்பு உயர் (விசேட) இளமாணி பட்டத்தைக் கொண்டுள்ளார். மேலாக, இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்திடமிருந்து தொழில்சார் வங்கியியல் தகைமை, வங்கியியல் மற்றும் நிதியியலில் டிப்ளோமாவினையும், இலங்கையின் CIPM இலிருந்து தொழில்சார் மனித வளங்கள் முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தையும் நிறைவேற்றியுள்ளதுடன், திரு. நிஹால் அவர்கள் திறைசேரி மற்றும் அந்நிய செலாவணி செயற்பாடுகளில் ஒரு சான்றிதழையும் பெற்றுள்ளார்.

திரு. ஈ.ஏ.எம். திசாநாயக்க

பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்



திரு. மஹிந்த திசாநாயக்க அவர்கள் கிளை வங்கியியல் மற்றும் உள்ளகக் கணக்காய்வில் 33 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் தற்போது மக்கள் வங்கியில் பிரதம உள்ளகக் கணக்காளராக சேவையாற்றுகின்றார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் சக அங்கத்தவர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவரும் ஆவார். மேலாக, இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு முதுமானி பட்டத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பொது நிர்வாகத்தில் (பொது) இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும் கொண்டுள்ளார். மேலும், இவர் இலங்கை பட்டயக் கணாக்காளர்கள் நிருவகத்திலிருந்து தகவல் அமைப்புமுறைகள், பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வில் ஒரு டிப்ளோமா பட்டத்தினை பெற்றுள்ளதுடன், இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்திலிருந்து தொழில்நுட்ப ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது.

திரு. விக்கிரம நாராயண

பிரதிப் பொது முகாமையாளர் - நிறுவன வங்கியியல்



1994 இல் ஒரு முகாமைத்துவ பயிற்சியாளராக மக்கள் வங்கியில் இணைந்த திரு. விக்கிரம நாராயண, கிளை வங்கியியல், பெறுநிறுவன மற்றும் கரை கடந்த வங்கியியல், மற்றும் மூலோபாயத் திட்டமிடல் போன்ற வங்கியியலின் பல்வேறு அம்சங்களில் 29 வருடங்களுக்கும் மேலான அனுவத்தைத் திரட்டியுள்ளார். சிறிய வணிகங்களுக்கான கடன் வழங்கல், திட்ட நிதியளிப்பு, தொழில்முனைவு அபிவிருத்தி, வணிக மறுமலர்ச்சி மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றில் விசேட முன்னிறுத்தத்துடன் சி.ந.நி. கடன் வழங்கல் துறையில் இவரது நிபுணத்துவம் 12 வருடங்களுக்கு மேல் காணப்படுகின்றது. தற்போது, இவர் மக்கள் வங்கியில் நிறுவன வங்கியியலுக்கு தலைமை தாங்குவதுடன், இங்கு இவர் வர்த்தகக் கடன், சி.ந.நி, அபிவிருத்தி நிதியளிப்பு, நுண்நிதியளிப்பு, திட்ட நிதியளிப்பு மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றில் இவரது நிபுணத்துவத்தினை பிரயோகிக்கின்றார்.

திரு. நாராயண அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் விஞ்ஞானப் பட்டதாரிப் பட்டத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்திலிருந்து வங்கியியல் மற்றும் நிதியியலில் முதுமானி பட்டத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்லைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் முதுமான விஞ்ஞானப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலாக, இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் சக அங்கத்தவராவார். வங்கியில் இவரது சேவையினை ஆரம்பிப்பதற்கு முன்னர், திரு. நாராயண அவர்கள் பல தனியார் துறை உற்பத்திக் கம்பனிகளில் சேவையாற்றினார். இவர் தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை வங்கியாளர்கள் நிருவனம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வங்கியியல் கற்கைக்கான மத்திய நிலையத்தில் விரிவுரையாளராக உள்ளார். மேலும் ஜனவரி 2023 இலிருந்து இவர் பிராந்திய அபிவிருத்தி வங்கியில் ஒரு பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

பெறுநிறுவன முகாமைத்துவம்

திருமதி. நில்மினி பிரேமலால்

பிரதிப் பொது முகாமையாளர் - கொடுப்பனவு, செயன்முறை முகாமைத்துவம் மற்றும் தர உறுதிமொழி



2002 இல் வங்கியில் ஒரு முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்துகொண்ட திருமதி நில்மினி பிரேமலால் கொடுப்பனவு, செயன்முறை முகாமைத்துவம் மற்றும் தர உத்தரவாதம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளராக சேவையாற்றுகின்றார். இவர் வங்கியில் 21 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், 18 வருடங்கள் நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கீட்டு பிரிவில் சேவையாற்றி, பின்னர் இரண்டு வருட காலத்திற்கு மூலோபாய திட்டமிடல், செயற்திறன் முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வு பிரிவுகளுக்கு நகர்ந்தார்.

நிதியியல் பிரிவின் பிரதித் தலைவராக சேவையாற்றும்வேளை திருமதி. பிரேமலால் அவர்கள் வங்கியின் ஒட்டுமொத்த செயற்திறனுக்கு பல்வேறு விசேடத்துவ பங்களிப்பினை ஆற்றினார். உதவிப் பொது முகாமையாளராக, இவர் மூலோபாய திட்டமிடல், செயற்திறன் முகாமைத்துவம் மற்றும் ஆய்வுப் பிரிவு போன்ற பிரிவுகளை உள்ளடக்கிய வங்கியின் மூலோபாய திட்டத்தினை உருவாக்கி விருத்திசெய்வதில் முக்கிய பங்காற்றினார்.

திருமதி பிரேமலால் அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும், களணிய பல்கலைக்கழகத்திலிருந்து முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் சக அங்கத்தவர், இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சக அங்கத்தவர், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவரும் ஆவார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தில் வருகை விரிவுரையாளராகவும் பரீட்சைகள் மதிப்பிடுவதிலும் பங்குபற்றி வங்கியியல் சமூகத்திற்கு அவரது அறிவினை பகிர்ந்துள்ளார். இவர் இலங்கையின் தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் அங்கத்தவரும் ஆவார். இவருக்கு லீன் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்டினால் லீன் மாஸ்டர் கிரீன் பெல்ட் சான்றிதழ் வழங்கப்பட்டது.

திருமதி. பிரேமலால் தற்போது பீபள்ஸ் மைக்ரோ கொம்ஸ் லிமிட்டட்டில் பணிப்பாளராக சேவையாற்றுவதுடன், முன்னர் பீபள்ஸ் மேர்ச்சன்ட் வங்கியில் பணிப்பாளராக சேவையாற்றியுள்ளதுடன், அதேசமயம் பீபள்ஸ் மேர்ச்சன்ட் வங்கியில் சபை கணக்காய்வுக் குழுவுக்கு தலைவர் பதவியினையும் வகித்தார். இவர் தற்போது இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் மாற்றுப் பணிப்பாளர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தேசிய கொடுப்பனவுகள் சபையின் மாற்றும் பணிப்பாளரும் ஆவார்.

திரு. டி.எம்.டபிள்யு. சந்திரகுமார

பிரதிப் பொது முகாமையாளர் - கிளை முகாமைத்துவம்



திரு. சந்திரகுமார அவர்கள் 1994 இல் மக்கள் வங்கியில் ஒரு முகாமைத்துவ பயிற்சியாளராக அவரது தொழில்வாழ்வினை ஆரம்பித்து வங்கியியல் துறையில் 29 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் தற்போது (கிளை முகாமைத்துவம்) இற்கான பிரதிப் பொது முகாமையாளராக சேவையாற்றுகின்றார். இவரது தொழில்வாழ்வின்போது இவர் உள்ளூரிலும் சர்வதேச ரீதியாகவும் பல்வேறு வெளிப்படுத்தல் திட்டங்களில் பங்குபற்றியுள்ளதுடன், 2018 இலிருந்து 2020 வரை பல்வேறு வணிக வங்கியியல் முகாமைத்துவ நடைமுறைகளில் விரிவான அறிவினைப் பெற்றுள்ளார். திரு. சந்திரகுமார அவர்கள் வழங்கல்கள், போக்குவரத்து, பாதுகாப்பு, பராமரிப்புப் பொறியியல், கட்டிடப் பொறியியல் மற்றும் பணித்தள வெளியீடுகள் ஆகிய ஆறு பிரிவுகளை மேற்பார்வை செய்யும் உதவிப் பொது முகாமையாளர் (வங்கியியல் துணைச் சேவைகள்) பதவியினை வகித்துள்ளார். இக்காலத்தின்போது, இவர் பின்வரும் பிரிவுகளில் மதிப்பிடவியலாத அனுபவத்தைப் பெற்றுள்ளார், கொள்முதல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, களஞ்சியம் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு, போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு செயன்முறைகள் என்பவையாகும். 2020 இலிருந்து 2023 வரை இவர் உதவிப் பொது முகாமையாளர் (த.தொ. நிர்வாகம் மற்றும் வணிக உறுதுணை), உதவிப் பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவப் பிரிவு) ஆக செயற்பட்டு கிளை வலையமைப்பு மற்றும் CEFT செயற்பாடுகளுக்கு 5S முறையினை அமுல்படுத்துவதில் கணிசமான வெளிப்பாட்டினை பெற்றார். திரு. சந்திரகுமார அவர்கள் களணிய பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகத்தில் (விசேடம்) இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் இளமானி பட்டத்தையும் பெற்றுள்ளதுடன், வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தில் (சர்வதேச வர்த்தக மையம் / WTO (UNCTAD), ஜெனிவா, சுவிற்சலாந்து) டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் அவுஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவர், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் உரிம அங்கத்தவர், இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்களின் அங்கத்தவர், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் அங்கத்தவரும் ஆவார். மேலாக, இவர் இலங்கை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ நிருவகத்தின் கூட்டாண்மை அங்கத்தவரும் ஆவார். திரு. சந்திரகுமார அவர்கள் டிசம்பர் 2022 இலிருந்து ATMகள், CDMகள், CRMகள், மற்றும் KIOSKகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கிளை வலையமைப்பின் 743 முறைமைப்படுத்தல் அலகுகளை உள்ளடக்கிய சேவை விநியோக வலையமைப்புகளுக்கு பொறுப்பாளியாவார்.

திருமதி. சமந்தி சேனாநாயக்க

பிரதிப் பொது முகாமையாளர் - இணக்கப்பாடு



திருமதி. சமந்தி சேனாநாயக்க அவர்கள் ஒரு சட்ட வழக்கறிஞராக 30 வருடங்கள் அனுபவத்துடனான ஒரு சட்ட தொழில்வல்லுநர் ஆவார். இவர் இந்தியாவின் டெல்லி பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் ஒரு முதுமானி பட்டத்தைப் பெற்றுள்ளார். மேலாக, இவர் இணக்கப்பாட்டு அம்சங்களில் தொழில்சார் தகைமைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதுடன், மென்சஸ்டர் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து சர்வதேச இணக்கப்பாட்டு சங்கத்தினால் இணக்கப்பாட்டில் சர்வதேச டிப்ளோமா பட்டம் வழங்கப்பட்டது.

திருமதி சேனாநாயக்க அவர்கள் மக்கள் வங்கியில் ஒரு சட்ட உள்ளகப் பயிலுநராக அவரது சட்ட தொழில் வாழ்க்கையினை ஆரம்பித்ததுடன் ஒரு தனிப்பட்ட வழக்குரைஞராக மற்றும் கூட்டாண்மைத் துறையில் ஒரு அங்கத்தவராக மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் 2011 இல் மக்கள் வங்கியில் ஒரு உதவி சட்ட அதிகாரியாக இணைந்து ஒரு சட்ட அதிகாரியாக அவரது கடமைகளை 9 வருடங்கள் மேற்கொண்டார்.

03 மார்ச் 2009 இல் திருமதி சேனாநாயக்க அவர்கள் வங்கியின் இணக்கப்பாட்டு உத்தியோகத்தராக பதவியினை பொறுப்பேற்று பின்னர் 28 ஏப்ரல் 2023 இல் பிரதிப் பொது முகாமையாளர் - இணக்கப்பாடு ஆக பதவியுயர்வு அளிக்கப்பட்டார்.

தற்போது திருமதி சேனாநாயக்க இலங்கையின் வங்கிகளின் இணக்கப்பாட்டு அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக சேவையாற்றுகின்றார். இவர் இலங்கையின் கடன் தகவல் பணியகத்திற்கு வங்கியின் இணக்கப்பாட்டு அதிகாரி பதவியினையும், தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தகவல் குழுவின் ஒரு அங்கத்தவரும் ஆவார். இவர். க.த.ப. (CRIB) இன் மாற்று பணிப்பாளராகவும் க.த.ப. இன் ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் செயலாற்றுகின்றார்.

திருமதி. ஷமீளா லொக்கு கலுகே

பிரதிப் பொது முகாமையாளர் - திறைசேரி, முதலீட்டு வங்கியியல் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்



திருமதி. ஷமீளா லொக்கு கலுகே அவர்கள் 2002 இல் ஒரு முகாமைப் பயிற்சியாளராக வங்கியில் அவரது தொழில்வாழ்வினை ஆரம்பித்து வங்கியின் திறைசேரி அலகில் 21 வருடங்களுக்கும் அதிகமாக அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் 2023 இல் வங்கியின் திறைசேரி, முதலீட்டு வங்கியியல் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான பிரதிப் பொது முகாமையாளராக பொறுப்பேற்று, அந்நியச் செலாவணிச் செயற்பாடுகள், பணச் சந்தை செயற்பாடுகள், பிரதம வர்த்தக அலகு மற்றும் வங்கியின் முதலீட்டு வங்கியியல் பிரிவிற்கு தலைமை தாங்குகின்றார். இதற்கும் மேலாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடன் வங்கியியல் தொடர்புகளையும் முகாமைப்படுத்துகின்றார். 2011 இலிருந்து 2022 வரையான காலப்பகுதியில், இவர் முதன்மை வர்த்தக அலகு உள்ளடங்கலான திறைசேரியின் பல்வேறு பிரிவுகளில் பிரதிநிதிப்படுத்தியதுடன், 2017 இலிருந்து திறைசேரி மற்றும் முதன்மை வர்த்தக அலகுகளின் ஒட்டுமொத்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்தள்ளார்.

திருமதி. ஷமீளா லொக்கு கலுகே அவர்கள் களணிய பல்கலைக்கழகத்திலிருந்து உயிரியல் விஞ்ஞானத்தில் இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவில்) ஒரு இளமானி விஞ்ஞானப்ப பட்டதாரி, கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து கணினி விஞ்ஞானத்தில் ஒரு முதுமானி விஞ்ஞானப் பட்டதாரி, ஐக்கிய இராச்சியத்தின் கார்டிவ் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் (நிதியியல்) ஒரு முதுமானி பட்டத்தையும் கொண்டுள்ளார். மேலாக, இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்திடமிருந்து திறைசேரி, முதலீடு, இடர் முகாமைத்துவத்தில் ஒரு டிப்ளோமா பட்டத்தினையும் வைத்துள்ளார். இவர் ACI நிதியியல் சந்தைகள் சங்கத்தின் ACI வர்த்தகச் சான்றிதழில் சிறப்பு சித்தியடைந்துள்ளதுடன், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவரும் ஆவார்.

திருமதி லொக்கு கலுகே அவர்கள் 2017 இல் முதன்மை வர்த்தகர்கள் சங்கத்தின் (APD) பணிப்பாளராக நியமிக்கப்பட்டு 2020 முதல் 2023 வரை மு.வ.ச. இன் செயலாளராகவும் தற்போது பிரதித் தலைவர் பதவியினை வகிக்கின்றார். இவர் இலங்கை அந்நியசெலாவணிச் சங்கத்தின் மற்றும் தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு. நாலக விஜயவர்தன

சந்தைப்படுத்தல் தலைவர்



திரு. நாலக அவர்கள் இலங்கை மற்றும் கனடாவில் வங்கியியல் துறையில் 30 வருடங்களுக்கும் மேலாக அனுபவத்தையுடைய ஒரு சந்தைப்படுத்தல் நிபுணராவார். இவரது வங்கியியல் தொழில்வாழ்வின்போது, இவர் மூலோபாய சந்தைப்படுத்தல் திட்டமிடல், வணிகநாம முகாமைத்துவம், பெறுநிறுவன பிரதிமை கட்டியெழுப்புதல், கடன் அட்டை சந்தைப்படுத்தல், மற்றும் வணிக வங்கியியல் கருவி முகாமைத்துவம் ஆகியவற்றில் விசேடத்துவம் பெற்றுள்ளார்.

மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர் இவர், பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன் இல் பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல், பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன் இல் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி

மற்றும் டொரன்டோவிலுள்ள கனடியன் இம்பீரியல் பேங்க் ஒவ் கொமர்சில் காசு முகாமைத்துவச் சேவையில் உற்பத்தி கருவி முகாமையாளராகவும் சேவையாற்றினார். இவர் சம்பத் பேங்க் பிஎல்சி இல் சிரேஷ்ட சந்தைப்படுத்தல் அதிகாரியாகவும் முன்னர் தொழில் புரிந்துள்ளார். இவர் ஐ.இ. இன் சந்தைப்படுத்தல் பட்டய நிருவகத்தின் சக அங்கத்தவராவார்.

திரு. நலீன் பத்திரனகே

பிரதிப் பொது முகாமையாளர் - சிற்றளவு வங்கியியல்



திரு. நலீன் பத்திரனகே அவர்கள் தற்போது மக்கள் வங்கியின் சிற்றளவு வங்கியியலுக்கு பிரதிப் பொது முகாமையாளராக கடமையாற்றுகின்றார். பிரதிப் பொது முகாமையாளர் பதவிக்கான நியமனத்திற்கு முன்னர், இவர் பொறுப்புக் கருவிகளுக்கான உதவிப் பொது முகாமையாளராக சேவையாற்றினார். இதன்போது இவர் வங்கியின் வைப்புத் தேக்கத்தினை பராமரித்தல் மற்றும் பொறுப்புக் கருவிகளின் குறிக்கோளுடனான வேகம் தொடர்பான முக்கிய செயற்பாடுகளை மேற்பார்வை செய்தார். திரு. பத்திரனகே அவர்கள் வங்கியியல் செயற்பாடுகளில் 24 வருடங்களுக்கும் மேலான அனுபவம் மற்றும் ஆழ்ந்த அறிவினைக் கொண்டுள்ளதுடன், அரச மற்றும் தனியார் வர்த்தக வங்கிகளில் சேவையாற்றியுள்ளார். இவற்றுள் மக்கள் வங்கியில் இவரது சேவைக்காலம் 22 வருடங்களாகும். இவர் 2002 இல் வங்கியில் ஒரு முகாமைத்துவப் பயிற்சியாளராக இணைந்தார்.

மக்கள் வங்கியில் இவர், பல்வேறு தரங்களில் கிளை வங்கியியல் மற்றும் கருவிகள் / தேக்க முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முகமான செயற்பாட்டுப் பிரிவுகளில் கடமையாற்றியுள்ளார். இவர் மாத்தளை மற்றும் கம்பஹா பிராந்தியங்களில் பிராந்திய முகாமையாளராக 5 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், இவர் வங்கியின் வணிக உந்துகைக்கு புத்தாக்கமாகவும் ஆக்கத்திறனுடனும் பாரிய அளவில் பங்களித்துள்ளார். சிற்றளவு வங்கியியலில் உதவிப் பொது முகாமையாளராக, இவர் பல்வேறு வைப்புத் திரட்டல் பிரச்சாரங்களினூடாக வங்கியின் ஒட்டுமொத்த வைப்புத் தேக்கத்தினை வடிவமைப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகித்ததுடன், குறிப்பாக வங்கியின் வைப்பு அவசரத்தேவைகளின்போது வங்கியினை சமாளித்தும் உள்ளார்.

திரு. பத்திரகே அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்த இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும், ஐ.இ. இன் பெட்வோட்சையர் பல்கலைக்கழகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் ஒரு முதுமானி பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவர் ஆவார்.

இவரது விசேடத்துவமான துறையில் விரிவான பயிற்சி / வெளிப்பாட்டுடன், திரு. பத்திரகே அவர்கள் வங்கியின் பல்வேறு பயிற்சித் திட்டங்களில் ஒரு பயிற்றுவிப்பாளராக ஊக்கமளிப்பவர் / வளவாளர் ஆக விசேட பங்களிப்பினை செய்துள்ளார். இந்த பயிற்சித் திட்டங்கள் வங்கிக்கான செயல்திறனான மற்றும் இயக்காற்றல் மிக்க வணிக ஊக்குவிப்பு தொழில் சேனையினை உருவாக்குவதற்காகும்.

திருமதி. துஷாரி ஹேவாவசம்

பிரதிப் பொது முகாமையாளர் - சர்வதேச வங்கியியல்



திருமதி துஷாரி ஹேவாவசம் அவர்கள் தற்போது மக்கள் வங்கியின் சர்வதேச வங்கியியல் பிரிவின் தலைவராக சேவையாற்றுகின்றார். 2002 இல் ஒரு முகாமைத்துவ பயிற்சியாளராக வங்கியில் இவரது தொழில்வாழ்வினை ஆரம்பித்த இவர், கடன், கிளை வங்கியியல், பெறுநிறுவன வங்கியியல் மற்றும் சர்வதேச வங்கியியல் உள்ளடங்கலான பன்முகமான வங்கியியல் அரங்கத்தில் 21 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளார். பெறுநிறுவன மற்றும் வணிகக் கடன் வழங்கலில் இவரது விசேடத் திறமையானது இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்டதாகும்.

திருமதி துஷாரி ஹேவாவசம் அவர்கள் பேராதெனிய பல்கலைக்கழகத்திலிருந்து விவசாயத்தில் இரண்டாம் வகுப்பு உயர் கௌரவ விசேட பட்டத்தைக்கொண்ட இளமானி விஞ்ஞானப் பட்டதாரி மற்றும் இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலாக, இலங்கையின் வங்கியாளர்கள் நிருவகத்தின் ஒரு இணை அங்கத்தவராவார். தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்கான இவரது கடப்பாட்டினை காட்சிப்படுத்துவதில், இவர் பின்வரும் மதிப்பிற்குரிய அங்கத்துவங்களை வைத்துள்ளார். ஐ.இ. இன் முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிருவகத்தின் இணை அங்கத்தவர் மற்றும் பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர்களின் ஒரு இணை அங்கத்தவரும் ஆவார்.

திருமதி ஹேவாவசம் அவர்களது பிரசித்திபெற்ற சங்கங்களில் முக்கிய பதவிகளில் தொழில்சார் இணைப்புகளைக் கொண்டுள்ளது. இவர் தொழில்சார் வங்கியாளர்கள் நிருவகத்தின் ஒரு சபை அங்கத்தவர் மற்றும் இலங்கையின் சர்வதேச வர்த்தகச் சம்மேளனத்தின் வங்கியியல் குழுவில் ஒரு பதவியினை வகிப்பதுடன், தொழில்சார் வங்கியியல் சமூகத்தில் செயல்நிலையான ஈடுபாட்டினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

திரு. அநுர பெரேரா

பிரதிப் பொது முகாமையாளர் – இடர் முகாமைத்துவம்



திரு. அநுர பெரேரா அவர்கள் தற்போது வங்கியின் இடர் முகாமைத்துவத்திற்கு பிரதிப் பொது முகாமையாளராக சேவையாற்றுகின்றார். 1991 இல் வங்கியில் இணைந்து பி.பொ.மு. - இடர் முகாமைத்துவ நியமனத்திற்கு முன்னர், இவர் முகாமையாளர் - திறைசேரி செயற்பாடுகள், சிரேஷ்ட முகாமையாளர் - இடர் முகாமைத்துவம், பிராந்திய முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம் மற்றும் கடன் கட்டுப்பாடு உள்ளடங்கலான பல முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். 33 வருடங்களுக்கும் மேலாக இவரது தொழில்வாழ்வில், திரு. அநுர பெரேரா அவர்கள் கிளை வங்கியியல், திறைசேரி செயற்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் கடன் கட்டுப்பாடு ஆகியவற்றில் விரிவான வெளிப்பாட்டினையும் அனுபவத்தையும் கொண்டுள்ளார். கல்வித் தகைமையில் இவர் களணிய பல்கலைக்கழகத்திலிருந்து வணிக முகாமைத்துவத்தில் ஒரு இளமானி பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வணிகக் கற்கையில் ஒரு முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார். தொழில்ரீதியாக இவர் நிதியியல் சந்தைகள் சங்கம் - பாரிசிலிருந்து சிறப்பு சித்தியுடன் ACI செயற்பாட்டுச் சான்றிதழைக் கொண்டுள்ளதுடன், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் ஒரு இணை அங்கத்தவரும் ஆவார்.

மேலும், திரு. அநுர பெரேரா அவர்கள் வங்கியியல் துறை இடர் தொழில்வல்லுனர்கள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் மற்றும் இலங்கை அந்நியசெலாவணிச் சங்கம் மற்றும் இலங்கையின் தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் அங்கத்தவரும் ஆவார்.

திரு. ஏ.யு.ஏ. அன்சார்

பிரதிப் பொது முகாமையாளர் - மீட்டல்கள்



திரு. அஹமட் அன்சார் அவர்கள் 1993 இல் வங்கியில் ஒரு ஊழியர் உதவியாளராக தொழில் வாழ்வினை ஆரம்பித்து, கிளை வங்கியியல், பிராந்திய முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கிளை முகாமைத்துவம், கடன் மீளாய்வு மற்றும் மீட்டல்கள் ஆகிய துறைகளில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் கிளை முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தலில் மெச்சத்தக்க திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

திரு. அன்சார் அவர்கள் இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து இயற்பியல் அறிவியலில் முதலாம் வகுப்பு கௌரவ இளமானி விஞ்ஞானப் பட்டம் பெற்றுள்ளதுடன் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவரும் ஆவார். இவர் வங்கியில் இணைவதற்கு முன்னர் களணிய பல்கலைக்கழகம் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றினார். இவர் இலங்கையின் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வங்கியியல் மற்றும் நிதியியலில் இறுதி வருட மாணவர்களுக்கு வருகை விரிவுரையாளராகவும் பங்குபற்றியுள்ளார். இவற்றுக்கும் மேலாக, இவர் இந்தியா, ஜப்பான், மலேஷியா மற்றும் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தில் பல வெளிப்பாட்டு திட்டங்களில் பயிற்சி பெற்றுள்ளார்.

நிறைவேற்று முகாமைத்துவம்



முன்வரிசை இடமிருந்து வலம்

திரு. யசஸ் ராஜபக்ஷ, திரு. மஞ்சுள திசாநாயக்க, திரு. எல்.யு.எல். அல்விஸ், திரு. மங்கள காரியவசம், திரு. அநுர திசாநாயக்க, திருமதி. தம்மிக்கா தசநாயக்க, திரு. பிரசாத் ஆரியவன்ச

பின்வரிசை இடமிருந்து வலம்

திரு. ஈ.பி.ஏ. சிசிர குமார, திரு. ரொஹான் பெரேரா, திரு. ஜி.எச்.யு.எஸ். குணரத்ன, திருமதி. வினிதா எபனீசர், திருமதி. காயத்திரி ஜயசேன, திரு. ஐ.கே. இந்திக, திரு. சாந்த கங்கபடகே, திருமதி. தீபிகா பிரேமதாச



முன்வரிசை இடமிருந்து வலம்

திருமதி. அருணி லியனகுணவர்தன, திரு. ஜயநாத் டயஸ், திரு. சமன் சமரக்கோன், திரு. ஆர்.ரவிகரன், திருமதி. விராஜினி முனசிங்க, திரு. நலின் பெரேரா, திருமதி. நிலந்தி ரூபசிங்க

பின்வரிசை இடமிருந்து வலம்

திரு. டி.ஜி.எஸ்.பி. குமாரசிறி, திரு. சமிந்த இஹலகோரல, திருமதி. இந்துமினி ரத்நாயக்க, திருமதி. சாதனா பெரேரா, திருமதி. திரிமாலி பர்னாந்து, திரு. டி.எம்.டி. திசாநாயக்க, திரு. லசந்த தேநுவர

பிரதம முகாமையாளர்கள்



திரு. என்.கே. விமலசிறி

பிராந்திய முகாமையாளர்
காலி பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. எஸ்.எல்.எம்.ஏ.எஸ்.சமரதுங்க

பிராந்திய முகாமையாளர்
கொழும்பு வெளி பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. கே. சுபசிங்க

பிரதம முகாமையாளர்
பெறுநிறுவனம் மற்றும் நிறுவன வங்கியியல்



திரு. டி.எம்.கபில

பிரதம முகாமையாளர்
கடன் மீட்டல்கள்



திரு. ஏ. ஜயசித்

பிராந்திய முகாமையாளர்
வன்னி பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. பிரசாத் மாரசிங்க

பிரதம முகாமையாளர்
பீபள்ஸ் காட் சென்டர்



திருமதி. எஸ்.எம். தீபாது குமாரி

சிரேஷ்ட சட்ட அதிகாரி
அநுராதபுரம் பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. யமுனா அத்தாவுத

சிரேஷ்ட சட்ட அதிகாரி
கம்பஹா பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. ரோஸ் குமாரி பர்னாந்து

சிரேஷ்ட சட்ட அதிகாரி
சட்டம்



திருமதி. விந்தியா அபேரத்ன

பிரதம முகாமையாளர்

பெறுநிறுவனம் மற்றும் நிறுவன வங்கியியல்



திரு. கீர்த்தி குணவர்தன

பிரதம முகாமையாளர்

பொறியியல் சேவைகள்
பராமரிப்பு



திரு. ஜி.ஆர்.எஸ். கோதாகொட

பிராந்திய முகாமையாளர்

கம்பஹா பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. வி. கனகசபை

பிராந்திய முகாமையாளர்

திருகோணமலை பிராந்திய தலைமைக் காரியாலயம்



செல்வி. ரேணுகா அருணாசலம்

பிரதம முகாமையாளர்

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்



திரு. என். ஸ்ரீஸ்கந்தா

பிரதம முகாமையாளர்

மையப்படுத்திய பின்புலக் காரியாலயம்



திருமதி. பியசீலி வானகுரு

பிரதம முகாமையாளர்

உள்ளகக் கணக்காய்வு



திருமதி. ஏ.எம்.வி.டி.எல்.அதிகாரி

பிராந்திய முகாமையாளர்

கேகாலை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. ஆர்.எல்.ஜே. பீரிஸ்

பிராந்திய முகாமையாளர்

குருணாகலை பிராந்திய தலைமைக் காரியாலயம்

பிரதம முகாமையாளர்கள்



செல்வி. நதீகா நிசங்க

பிரதம முகாமையாளர்
வர்த்தகக் கடன்



திரு. கே. கோடீஸ்வரன்

பிராந்திய முகாமையாளர்
யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. எச்.டி. குணரத்ன

பிராந்திய முகாமையாளர்
நுவரெலியா பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. எச்.எம்.யு.எச். ஹேரத்

பிராந்திய முகாமையாளர்
இரத்தினபுரி பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. மாதவ கனக்க ஹேவகே

பிரதம முகாமையாளர்
வழங்கல்களும் களஞ்சியமும்



திரு. புத்திக ரணதுங்ககே

பிராந்திய முகாமையாளர்
கொழும்பு தெற்கு பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. டி.ஈ.எச். வீரசூரிய

பிரதம வர்த்தகர்
திறைசேரி



திருமதி. டி.எஸ். லோரன்ஸ்

சிரேஷ்ட சட்ட அதிகாரி
கொழும்பு வடக்கு பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. ஏ.தீப்தி ஆர் மென்டிஸ்

சிரேஷ்ட சட்ட அதிகாரி
பெறுநிறுவனம் மற்றும் நிறுவன வங்கியியல்



திரு. ஜனத் ஜயவர்தன

சிரேஷ்ட சட்ட அதிகாரி

கொழும்பு வெளி பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. விசாகா சுபசிங்க

சிரேஷ்ட சட்ட அதிகாரி

சட்டம்



திரு. தரிந்து நிரூசன் டி சில்வா

பிரதம முகாமையாளர்

த.தொ. உட்கட்டமைப்பும் செயற்பாடுகளும்
தகவல் தொழில்நுட்பம்



திருமதி. எல். பிரதீபா நில்மினி குணவர்தன

பிரதம முகாமையாளர்

அபிவிருத்தியும் நுண் நிதியளித்தலும்



திருமதி. துலானி புத்திக

பிரதம முகாமையாளர்

இணக்கப்பாடு



திரு. டி.எஸ்.பி.என். ரத்நாயக்க

பிராந்திய முகாமையாளர்

மாத்தறை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. கே.ஏ.ஏ.எஸ். பீரிஸ்

பிராந்திய முகாமையாளர்

பொலன்னறுவை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. மொஹமட் ருவைஸ்

பிரதம முகாமையாளர்

உள்ளகக் கணக்காய்வு



திருமதி. நாலிகா லியனகே

பிராந்திய முகாமையாளர்

கொழும்பு வெளி பிராந்திய தலைமைக் காரியாலயம்

பிரதம முகாமையாளர்கள்



திருமதி. வினோதிகா பீரிஸ்

பிரதம முகாமையாளர்
இடர் முகாமைத்துவமும் கடன் கட்டுப்பாடும்



திருமதி. ஜீ.ஏ. அமல்கா ரனசிங்க

பிரதம முகாமையாளர்
மனித வளங்கள்



திரு. நலின் பொத்தேவெல

பிராந்திய முகாமையாளர்
கண்டி பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. எஸ்.எம்.ஏ.ஆர். சேனாநாயக்க

பிரதம முகாமையாளர்
பெறுநிறுவனம் மற்றும் நிறுவன வங்கியியல்



திரு. நிசாத குணதிலக்க

பிராந்திய முகாமையாளர்
மொனராகலை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. மஞ்சுளா அமரசிரி

பிராந்திய முகாமையாளர்
அம்பாறை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. நிசாந்த ஆரோஹன

பிராந்திய முகாமையாளர்
அம்பாந்தோட்டை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. அசித்த தனவலவிதான

பிராந்திய முகாமையாளர்
அநுராதபுரம் பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. வருணி பெரேரா

பிரதம முகாமையாளர்
பொது முகையாளர் பிரிவு



திருமதி. பிரியங்கா ரத்னசிறி

பிராந்திய முகாமையாளர்
பதுளை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. என். அருட்செல்வன்

பிராந்திய முகாமையாளர்
மட்டக்களப்பு பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. ரஜீவ் கருணாநாயக்க

பிராந்திய முகாமையாளர்
புத்தளம் பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. கே. சந்திரகுமார்

பிராந்திய முகாமையாளர்
மாத்தளை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. மொனிகா சூரியப்பெரும

பிராந்திய முகாமையாளர்
களுத்தறை பிராந்திய தலைமைக் காரியாலயம்



திரு. திஸ்ஸ தென்னக்கோன்

பிரதம முகாமையாளர்
இடர் முகாமைத்துவமும் கடன் கட்டுப்பாடும்



திருமதி. ரனிலா சமரவிக்கிரம

பிரதம முகாமையாளர்
மூலோபாய திட்டமிடலும் செயற்திறன் முகாமைத்துவமும்



திருமதி. எஸ்.எம். டில்னா நந்தனி

பிரதம முகாமையாளர்
உள்ளகக் கணக்காய்வு



திருமதி. சம்பா சிரிவீர

பிரதம முகாமையாளர்
தகவல் தொழில்நுட்பம்

பிரதம முகாமையாளர்கள்



திரு. ஏ.ஏ.எஸ். செனவிரத்ன

பிரதம முகாமையாளர்
உள்ளகக் கணக்காய்வு



திருமதி. டி.எம்.டி.எஸ். திசாநாயக்க

பிரதம முகாமையாளர்
பெறுநிறுவனம் மற்றும் நிறுவன வங்கியியலும்



திருமதி. டபிள்யு.எம். அமிதா சஞ்சீவனி

பிராந்திய முகாமையாளர்
கொழும்பு வடக்கு பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. சந்திமா இந்துருவ

சிரேஷ்ட சட்ட அதிகாரி
சட்டம்



திருமதி. ருவினி திசாநாயக்க

சிரேஷ்ட சட்ட அதிகாரி
புத்தளம் பிராந்திய தலைமைக் காரியாலயம்



திருமதி. எஸ்.ஏ.டபிள்யு. சமரவீர

சிரேஷ்ட சட்ட அதிகாரி
சட்டம்



திரு. விபுல இஹலகே

பிரதம பாதுகாப்பு கண்காணிப்பாளர்
பாதுகாப்புப் பிரிவு



திருமதி. நதீஷா பர்னாந்து

உதவிப் பிரதம உள்ளகக் கணகாய்வாளர்
உள்ளகக் கணக்காய்வு



மக்களின் துடிப்பு

மக்கள் வங்கியின் அடையாளமானது பலம், கவனிப்பு மற்றும் உறுதியான உணர்வு என்பவற்றால் பிணைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அது வெற்றிகள் மற்றும் இன்னல்கள் ஆகிய இரண்டினூடாகவும் பலதரப்பட்ட சந்ததிகளுக்கு அருகில் நின்றுள்ளது.

மூலோபாயம் மற்றும் பெறுமதி உருவாக்கம்

48 செயற்பாட்டுச் சூழல் | **53** பங்காளிகள் ஈடுபாடு | **56** பொருண்மை | **60** எமது மூலோபாயம் | **64** எமது பெறுமதி உருவாக்க மாதிரி மற்றும் மூலதன மீதிகள் | **66** நிலைபேறுடமைக்கான கடப்பாடு


செயற்பாட்டுச் சூழல்

உலகளாவிய பொருளாதாரம்

2023 இல் உலக பொருளாதார வளர்ச்சியானது குறிப்பிடத்தக்க தடைகளுக்கு முகங்கொடுத்ததுடன், சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்வுகூறல்கள் 2022 இல் காணப்பட்ட வளர்ச்சியான 3.5மூ இலிருந்து 3.0 ஆக வீழ்ச்சியடையும் என்பதாகும். இந்த வீழ்ச்சிக்கு பன்முகமான காரணிகளை குறிப்பிடலாம். குறிப்பாக கோவிட்-19 தொற்றின் நீடித்த விளைவுகள், யுக்ரேன் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மோதல்கள் என்பவற்றுடன் உலகளாவிய ரீதியில் அரசாங்கங்களினால் அமுல்படுத்தப்பட்ட நாணய மற்றும் அரச நிதிக் கொள்கை என்பவையாகும். மேலாக, காலநிலை மாற்றங்களின் தாக்கங்கள் உலகளாவிய மீட்டல் முயற்சிகளை மேலும் கட்டுப்படுத்தியுள்ளன.

உலகளாவிய ரீதியில் தொற்றின் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டபோதிலும், உற்பத்தித் துறையானது தொடர்ச்சியாக சுருங்கியதுடன், உற்பத்தியாளர்களினால் ஊழியர்கள் மற்றும் உற்பத்தியிலான குறைப்புகளுக்கு இட்டுச்சென்றது. மேலும், உலகளாவிய வர்த்தக மீட்பின் வேகமானது மந்தமாகக் காணப்பட்டது. கேள்வியிலான மந்தமான மீட்பானது பெருமளவில் தொடர்ச்சியான பணவீக்கத்தினாலாகும், குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் போன்ற பாரிய பொருளாதாரங்களில், என்பதுடன் இதன் விளைவாக நுகர்வோரது செலவழிக்கும் கொள்திறனை வீழ்ச்சியடையச் செய்துள்ளது. மேலும், 2023 முழுவதும் உலகப் பண்டங்களின் விலைகள் ஒரு வீழ்ச்சியினை சந்தித்ததுடன், இது பலவீனமான உலகளாயி வளர்ச்சியின் காரணமாக 2024 மற்றும் 2025 இல் மேலும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கீழிறக்கப் போக்கு காணப்பட்டாலும், விலைகள் தொற்றிற்கு முன்னராக விலை மட்டங்களுக்கு மேல் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு உலகளாவிய மட்டத்தில் நிலவுகின்ற பொருளாதார சவால்களை குறிப்பிடுகின்றன.


உலகளாவிய பொருளாதாரம் (%)



மூலம்: ஊீஉ உலக வர்த்தக கண்காணிப்பி

தலைப்பு பணவீக்க மட்டங்களில் சமீபத்தைய வீழ்ச்சியடையும் போக்கானது பொருளாதார மீட்பிற்கு ஒரு சாத்தியமான பாதை காணப்படுவதை குறிப்பிடுகின்றது. இதற்கு உலகளாவிய வழங்கல் சங்கிலிகளிலான தொடர்ச்சியான மறுசீரமைப்பு மற்றும் உலகளாவிய நிதியியல் நிலைமைகளிலான மேம்பாடுகள் என்பவற்றால் துணையளிக்கப்படுகின்றது. பணவீக்க அழுத்தங்களிலான வீழ்ச்சியினை, வீழ்ச்சியடையும் கேள்வி, இதன்காரணமாக வலு மற்றும் உணவுப் பண்டங்களின் விலைகளிலான வீழ்ச்சிய என்பவற்றைக் குறிப்பிடலாம். விலைகளிலான இந்த வீழ்ச்சியானது தலைப்பு பணவீக்கத்தின் ஒட்டுமொத்த தணிப்பிற்கு பங்களிப்பு செய்ததுடன், இது 2022 இல் காணப்பட்ட 8.7மூ இலிருந்து 2023 இல் 6.9மூ ஆக வீழ்ச்சியடையும் என எதிர்வுகூறல்கள் குறிப்பிடுகின்றன. கேள்விகளிலான மீட்பிற்கு மத்தியில் வழங்கல் சங்கிலிகள் மீள் நிறுவுதலுக்கு ஆட்படும்வேளை நிலைபேறுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு சாத்தியமான கண்ணோட்டம் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மத்திய கிழக்கில் மோதல் நீடிக்கக்கூடிய அச்சுறுத்தல் இடரானது இந்த முன்னேற்றங்களுக்கு ஒரு சாத்தியமான அச்சுறுத்தலை விடுப்பதுடன், சாத்தியமாக வழங்கல் சங்கிலிகளில் இடையூறினை விளைவித்து 2024 இல் எதிர்பாரா பொருளாதார சவால்களுக்கு இட்டுச்செல்லும். அத்தகைய இடர்களை சமாளிப்பது மற்றும் தொடர்ச்சியான பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியினை உறுதிசெய்வதற்கு விழிப்புணர்வும் முன்முயற்சியும் மிகவும் முக்கியமானதாகும்.

உலகளாவியத் தகவல்கள்



மூலம்: ஐஆகு உலக பொருளாதார கண்ணோட்டம் ஒக்டோபர் 2023

இலங்கையின் பொருளாதாரம்

2023 இல் இலங்கையின் பொருளாதாரமானது தொடர்ச்சியான சுருக்கத்திற்கு முகங்கொடுத்ததுடன், பிரதானமாக, கோவிட்-19 நீடித்த தாக்கம் தொடர்பான பொருளாதார நட்டங்கள், வெளிவாரி நிச்சயமற்றதன்மைகள், உயர் பணவீக்கம் மற்றும் உயர் வட்டி வீதங்களினால் மோசமடைந்த உள்ளூர் கேள்வியிலான வீழ்ச்சி உள்ளடங்கலான காரணிகளின் ஒரு சேர்க்கை காரணமாயிருந்தது. எவ்வாறாயினும், இந்த சவால்களுக்கு மத்தியில், குறிப்பிடத்தக்க சாத்தியமான அபிவிருத்திகள் வெளித்தோன்றின. மார்ச் 2023 இல் சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதியளித்தல் வசதியின் அங்கீகாரமானது பொருளாதாரத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நம்பகத்தன்மையினை ஊட்டியதுடன், உறுதியாக்கல் மற்றும் மீட்சி நோக்கிய ஒரு சாத்தியமான பாதையினை குறிப்பிட்டது. மேலும், உள்ளூர் கடன் உகப்பாக்கத் (உ.க.உ.) திட்டத்தின் வெற்றிகரமான நிறைவுடன், இலங்கையானது சாத்தியமான சர்வதேச அங்கீகாரத்தினை கண்டது. விட்ச் ரேட்டிங்ஸ் இலங்கையின் நீண்டகால உள்ளூர் நாணய வழங்குநர் தவறுதல் தரத்தினை (IDR) இலிருந்து 'CCC' இற்கு தரமுயர்த்தியது. இது மேம்பட்ட வளவாய்ப்புக்களைப் பிரதிபலிப்பக்கும் வேளை S&P குளோபல் தரப்படுத்தல்கள் நாட்டின் நீண்டகால உள்ளூர் நாணய இறையாண்மை கடன் தரத்தினை CCC+ ஆக உயர்த்தியதுடன், இது ஒரு "திடமான" கண்ணோட்டத்துடன் மேம்பட்ட கடன் தகுதியினை குறிப்பிடுகின்றது. இந்த தரமுயர்த்தல்கள் பொருளாதார மறுசீரமைப்பிற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை உறுதியாக்குவது மாத்திரமன்றி எதிர்வரும் வருடங்களில் முதலீடுகளை கவர்வதற்கும் நிலைபேறுடைய வளர்ச்சியினை ஆதரிப்பதற்கும் மிகவும் சாதகமான சூழலினை வழங்குகின்றது.

பணவீக்க வீதம்

2023 இல் இலங்கையின் பொருளாதாரமானது 2022 இல் காணப்பட்ட முன் நிகழ்ந்திராத பணவீக்க மட்டங்களை வெற்றிகரமாக கட்டுப்படுத்தி பணவீக்கமானது தனி எண் மட்டங்களுக்கு கொண்டுவரப்பட்டது. இந்த சாதனையானது பிரதானமாக இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளின் அமுலாக்கம், வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் உலகளவில் பண்டங்களில் விலையிலான வீழ்ச்சி என்பவற்றால் அடையப்பெற்றதாகும். இந்தக் காரணிகள் நுகர்வோர் விலைகளை ஸ்திரப்படுத்தவும பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்கும் கூட்டாக பங்களிப்பு செய்தன. இந்த முயற்சிகளுக்கு அப்பால், சவால்கள் தொடர்கின்றன, குறிப்பாக பெறுமதி சேர்த்தல் வரியிலான (ஏயுவு) செம்மையாக்கல்கள் மற்றும் கடுமையான காலநிலை நிகழ்வுகளின் காரணமாக நுகர்வோர் விலைகளில் சாத்தியமான உயர்வடையும் அழுத்தம் வடிவில் வந்துள்ளன. இலங்கை மத்திய வங்கி பணவீக்கமாக 5மூ இனை இலக்கு வைத்த வேளை பெ.சே.வ. இன் செம்மையாக்கல்கள் மற்றும் கணிக்கவியலாத காலநிலை போக்குகளின் தாக்கங்கள் விரும்பப்படும் பரப்பெல்லையினுள் பணவீக்கத்தினை பராமரிப்பதில் சவால்களை தோற்றுவிக்கலாம். விழிப்புடனான கண்காணிப்பு மற்றும் செயலுாக்கமான கொள்கை வழிமுறைகள் இந்த சாத்தியமான பணவீக்கமான இடர்களை சமாளிப்பதற்கு மற்றும் பணவீக்க மட்டங்களை ஸ்திரப்படுத்தலில் அடைந்த சாதனைகளை நிலைபேறாக்குவதற்கு அவசியமானதாகும்.


வேலையின்மை

2023 இன் இரண்டாம் காலாண்டில் அறிக்கையிடப்பட்ட மோசமடையும் வேலையின்மை வீதமானது இலங்கையில் பொருளாதாரத்திலன் பல்வேறு அம்சங்களில் ஆழ்ந்த விளைவுகளை கொண்டுள்ளன. வேலையின்மையிலான அதிகரிப்பானது குடும்பங்களின் வறுமை மட்டங்களை அதிகரித்துள்ளதுடன், குடும்பங்கள் ஒரு திடமான வருமான மூலங்களை பெறுவதற்கு போராடுகின்றன. அவர்களிடம் காணப்படும் செலவழிக்கக்கூடிய குறைந்த வருமானத்துடன் குடும்பங்கள் அவர்களது செலவழிக்கும் கொள்திறன்களை கட்டுப்படுத்தவேண்டியுள்ளதுடன், இதன் காரணமாக சந்தை கேள்வியின் மீட்சியினை தடை செய்கின்றன. மேலாக, உயர்ந்த மட்டத்திலான வேலையின்மையானது வணிகங்களுக்கு கணிசமான சவால்களை ஏற்படுத்துவதுடன், தனிநபர்கள் அவர்களது நிதியியல் கடப்பாடுகளை சந்திப்பதற்கு போராடுவதனால் கடன் இடரானது அதிகரிக்கின்றது. இந்த கூட்டுக் காரணிகள் வேலையின்மையினை பரவலான பொருளாதார குறிகாட்டிகளுடன் இணைக்கப்பட்டுள்ளமையினை சுட்டிக்காட்டுவதுடன், வேலையின்மையினை மற்றும் அதனுடன் இணைந்த சமூக பொருளாதார பின்விளைவுகளையும் விளித்துரைப்பதற்கு இலக்குவைத்த தலையீடுகளின் அவசரத் தேவை எடுத்துக்காட்டப்படுகின்றது. வேலை உருவாக்கலை தூண்டுவதற்கு முயற்சித்தல், தொழிற்சேனையின் திறன்களை மேப்படுத்துதல், மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு துணைபுரிதல் என்பன வேலையின்மையின் பாதகமாக விளைவுகளை தணிப்பதற்கு மற்றும் இலங்கையில் நிலைபேறுடைய பொருளாதார மீட்சியினை வளர்த்தல் என்பன முக்கியமானதாகும்.

வட்டி வீதங்கள்


ஜூன் 2023 இல் மற்றும் அதிலிருந்து இலங்கையில் சந்தை வட்டிவீதங்கள் பல்வேறு முக்கியமான காரணிகளுக்கு பதலளிக்கும் விதமாக செம்மையாக்கல்களுக்கு உட்பட்டன. முதலாவதாக, வீழ்ச்சியடையும் பணவீக்க வீதமானது வட்டி வீதங்களிலான மீள்மதிப்பீட்டிற்கு தூண்டியதுடன், கடன் வழங்குநர்கள் அவர்களது வட்டி வீதங்களை குறைத்து குறைவான கிரயத்தில் கடன் பெறுகைகளுக்கு வசதியளித்தார்கள். மேலாக, அரசாங்கப் பிணையங்களிலான விளைவுகளின் படிப்படியான வீழ்ச்சியானது உள்ளூர் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் வெற்றிக்கு காரணியாயிருந்ததுடன், கடன் வழங்கல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர் வட்டத்தினை குறைப்பதற்கு பங்களிப்பு செய்துள்ளது. மேலும், ஜூன் 2023 முதல் கொள்கை

காலாண்டு மொ.உ.உ. வளர்ச்சி (%)




மூலம்: மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

பணவீக்கம் (%)



மூலம்: மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

வேலைவாய்ப்பற்றோர் வீதம் மற்றும் மெய் ஊதிய வீத சுட்டிகள்




மூலம்: மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

செயற்பாட்டுச் சூழல்

வட்டிவீதங்களை குறைக்கும் இலங்கை மத்திய வங்கியின் தீர்மானமானது சந்தை வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய அழுத்தத்தினை பிரயோகித்தன. இந்த ஒன்றிணைந்த காரணிகளின் விளைவாக, சராசரி நிறையளிக்கப்பட்ட வைப்பு வீதம் (AWDR), மற்றும் சராசரி நிறையளிக்கப்பட்ட கடன்வழங்கல் வீதம் (AWLR) மற்றும் சராசரி நிறையிடப்பட்ட முதன்மை கடன் வழங்கல் வீதம் (AWPLR) என்பன மாறுபட்ட வேகத்தில் வீழ்ச்சியடைந்தன. இந்தப் போக்கானது கடன் பெறுநர்களுக்கு ஒரு சாதகமான சூழலைக் குறிப்பிடுகின்றது, ஏனெனில் குறைவான வட்டி வீதங்கள் கடனுக்கான அணுகலுக்கு வசதியளித்து பொருளாதார நடவடிக்கையினை தூண்டும் என்பதனாலாகும். மேலாக, இது பொருளாதார மீட்சிக்கு துணையளிக்கும் மற்றும் உதவும் போக்குடைய நாணயக் கொள்கை நடைமுறைகளினூடாக ஸ்திரத்தன்மைக்கான இலங்கை மத்திய வங்கியின் முயற்சிகளை பிரதிபலிக்கின்றது. இலங்கையில் நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மையினை ஊக்குவிக்கும் இந்த கொள்கைகளின் பயனுறுதித்தன்மையினை மதிப்பிடுவதற்கு சந்தை வட்டி வீதங்களின் தொடர்ச்சியான கண்காணிப்பானது அவசியமாகின்றது.

ஜூன் 2023 தொடக்கம் கொள்கை வட்டி வீதங்களைத் தொடர்ச்சு அரசாங்கப் பிணையங்களிலான விளைவுகள் கணிசமாக வீழ்ச்சியடைந்ததுடன் சந்தை வட்டி வீதங்களும் படிப்படியாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தன.

சந்தை வட்டி வீதங்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அந்நிய செலாவணி

2023 இன் முதல் பத்து மாதங்களில் இலங்கையில் உள்ளூர் அந்நிய செலாவணிச் சந்தையானது கணிசமான மேம்பாட்டினை காண்பித்ததுடன், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயானது 10.9% ஆல் பெறுமதி உயர்வடைந்தது. இந்த சாத்தியமான போக்கானது முன்னைய ஆண்டில் காணப்பட்ட கூர்மையான பெறுமதி வீழ்ச்சியான 44.8% இற்கு முற்றிலும் வித்தியாசமாக உள்ளது. இந்தத் திருப்புமுனைக்கு பல காரணிகளை குறிப்பிடலாம், முக்கியமாக 2022 இல் கடுமையான பெறுமதியிறக்கத்தின் காரணமாக எழுந்த அந்நிய செலாவணித் திரவத்தன்மை பற்றாக்குறையினை விளித்துரைப்பதற்கான முயற்சிகளையும் உள்ளடக்குகின்றது. 2023 முழுவதுமாக, திரவத்தன்மை பற்றாக்குறையினை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக படிப்படியாக நடவடிக்கைகளை அமுல்படுத்தப்பட்டதுடன், இது இலங்கை ரூபாயின் படிப்படியான பெறுமதியுயர்வுக்கு இட்டுச்சென்றது. எவ்வாறாயினும், ஆண்டின் மூன்றாம் காலாண்டில், இறக்குமதிக் கட்டுப்பாடுகளிலான தளர்த்தலும் உள்ளூர் கடன் உகப்பாக்கத் திட்டத்தின் கீழ் இலங்கை அபிவிருத்தி முறிகளின் பரிமாற்றுவதற்கு தேவையான அந்நிய நாணயத்தின் காரணமாக இந்த பெறுமதியுயர்வுப் போக்கினை தற்காலிகமாக திருப்பி ரூபாயானது மீண்டும் ஒரு முறை பெறுமதி இழக்கச் செய்தது.


இந்த பின்னடைவு இருந்தாலும், 2023 இன்போது ஒட்டுமொத்த அந்நிய செலாவணி திரவத்தன்மை நிலைமையானது பிரதானமாக பல்வேறு காரணிகளினால் துணையளிக்கப்பட்டு மேம்பட்டது. இவை ச.நா.நி. (IMF) திட்டத்தினை அமுல்படுத்துதல், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற நிறுவனங்களிலிருந்து பாதீட்டு உறுதுணை, அதிகரித்த உள்வாரி பணமனுப்பல்கள், ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருமானம் என்பவையாகும். இந்த நடவடிக்கைகள் அந்நிய செலாவணி ஒதுக்கங்களை அதிகரிப்பதற்கும், உள்ளூர் அந்நிய செலாவணி சந்தையினை ஸ்திரப்படுத்துவதற்கும், வெளிவாரி அதிர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகளை தணிப்பதற்கும் உதவின.

இலங்கையின் வங்கியியல் துறை

பொருளாதார நெருக்கடியினைத் தொடர்ந்து பல்வேறு சவால்களை அனுபவித்த வங்கியியல் துறையானது 2023 இல் தொடர்ந்தும் தொந்தளிப்பான சூழலுக்கு முகங்கொடுத்தது. ச.நா.நி. (IMF) திட்டமானது நம்பகத்தன்மையினை மேம்படுத்தியபோதிலும், இறையாண்மை கடன் மீள்கட்டமைப்புச் செயன்முறை பற்றிய நிச்சயமற்றதன்மைகள் மற்றும் வங்கியின் பரிசோதனை நடவடிக்கைகளின் விளைவுகள் துறையில் சில அக்கறைகளை எழுப்பின. எவ்வாறாயினும், கடன் சுற்றின் பள்ளமானது கடந்துள்ளதை தரவுகள் குறிப்பிடுவதுடன், சுற்றானது மீட்புக் கட்டத்திற்குள் நுழைந்துள்ளதுடன், துறையின் ஸ்திரத்தன்மைக்கு இட்டுச்செல்லும்.

வங்கியியல் துறை சொத்துத் தளமானது 2022 இல் காணப்பட்ட ரூபா 19.4 டிரில்லியனிலிருந்து 2023 இன் இறுதியில் ரூபா 20.4 டிரில்லியனாக விரிவடைந்ததுடன், இது வருடத்திலிருந்து வருடம் 5.1% மேம்பாட்டினை பிரதிபலிப்பதுடன், குறுங்கால நிதியியல் கருவிகளிலான முதலீடுகளினால் அதிகரித்தது. நவம்பர் 2023 இன் இறுதியில் அரசாங்கப் பிணையங்களிலான வங்கியியல் துறையின் மொத்த முதலீடுகள் ரூபா 5.3 டிரில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 2022 இல் ஒத்த காலத்துடன் ஒப்பிடும்போது 200மூ அதிகரிப்பாகும்.

தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கு எதிராக ரூபாயின் அசைவு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வங்கியியல் துறையின் கடன்கள் மற்றும் வருமதிகள் டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டின்போது 2.8% ஆல் சுருக்கமடைந்தது. இது ஜூன் 2023 வரை காணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு மத்தியில் மற்றும் 2023 இன் இரண்டாம் பாதியியல் இலங்கை மத்திய வங்கியினால் கொள்கை வட்டி வீதங்களிலான தளர்த்தலுடன் கடனியல் படிப்படியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதேசமயம், டிசம்பர் 2023 இன் இறுதியில் முன்னைய ஆண்டின் ஒத்த காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது செயற்திறனற்ற கடன் வீதமானது ஒரு உயர்ந்த மட்டமான 12.8% இல் காணப்பட்டது.

ஜூன் 2023 இலிருந்து கடன்கள் மற்றும் வருமதிகளிலான விரிவாக்கத்துடன் கட்டம் 3 கடன்களிலான வளர்ச்சியின் வேகம் குறைக்கப்பட்டதுடன் வங்கியியல் துறையில் கடன் இடரின் ஸ்திரத்தன்மையினை குறிப்பிட்டது.

இலாபகரத்தன்மை

2023 இன் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கையின் வங்கியியல் துறையானது இலாபகரத்தன்மையில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை அவதானித்தது. துறையின் வரிக்கு பிந்திய இலாபமானது 68.7% ஆல் உயர்வடைந்து செப்டம்பர் 2023 இன் இறுதியில் ரூபா 144.3 பில்லியனை எட்டியது. முன்னைய ஆண்டில் இதே காலத்தில் வரிக்கு பிந்திய இலாபமானது ரூபா 85.5 பில்லியனாகக் காணப்பட்டது. இலாபத்திலான இந்த குறிப்பிடத்தக்க எழுச்சிக்கான பிரதான உந்துதலாகக் காணப்பட்டது புதிய வலுக்குன்றலுக்கான வங்கிகளின் ஒதுக்கத்திலான வீழ்ச்சியினாலாகும். இது துறையில் மேம்பட்ட சொத்துத் தரத்தினையும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளையும் குறிப்பிடுகின்றது. குறிப்பாக, பல வங்கிகள், இரண்டு உள்ளூர் அமைப்புரீதியான


ஜூன் 2023 இலிருந்து கடன்கள் மற்றும் வருமதிகளிலான விரிவாக்கத்துடன் 3வது கட்டமாக கடன்களிலான வளர்ச்சியின் வேகம் குறைக்கப்பட்டதுடன் வங்கியியல் துறையில் கடன் இடரின் ஸ்திரத்தன்மையினை குறிப்பிட்டது.

முக்கியமான இரண்டு வங்கிகள் உள்ளடங்கலானவை (D-SIBs), இந்த ஒன்பது மாத காலத்தின்போது இலாபத்திலான வீழ்ச்சியினை அறிக்கையிட்டதுடன், துறையில் வேறுபாடான செயற்திறன்களை தெரிவிக்கின்றது. மேலும், வங்கிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இக்காலத்தின்போது கடன்கள், வருமதிகள், மற்றும் ஏனைய நிதியியல் சொத்துக்களில் புதிய வலுக்குன்றல் செலவுவைக்கப்படுவதனை கணிசமாகக் குறைத்தது. இந்த மூலோபாய நகர்வானது உருவாகின்ற சந்தை இயக்கவியல் மற்றும் பொருளாதார நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில் சாத்தியமான கடன் இடர்களை தணிப்பதற்கும் ஒட்டுமொத்த இலாபகரத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை பிரதிபலிக்கின்றது. வங்கியியல் துறை இலாபகரத்தன்மையிலான ஒட்டுமொத்த ஏற்றமானது துறையினுள்ளான மீளெழுச்சி மற்றும் இணக்கத்தன்மையினை சுட்டிக்காட்டுகின்றது. இது வங்கிகள் இலங்கையில் நிலைபேறுடைய வளர்ச்சி மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மையினை இயக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தவும் சவால்களை சமாளிக்கும்போதும் இயலுமையாகின்றது. விவேகமான இடர் முகாமைத்துவம், புத்தாக்கம், வாடிக்கையாளர் மையப்படுத்திய மூலோபாயங்கள் என்பவற்றிலான தொடர்ச்சியான முன்னிறுத்தம் எதிர்வரும் மாதங்களில் வங்கியியல் துறையில் இலாபகரத்தன்மையினை நிலைபேறுடமையாக்குவதற்கும் மேலும் மேம்படுத்துவதற்கும் அவசியமானதாகும்.

வட்டி வீத இடர்

வங்கியியல் துறையின் வட்டி வீத இடரானது 2023 இன் செப்டம்பர் மாத இறுதியில், 2022 இல் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடும்போது வீழ்ச்சியடைந்தன. வங்கியில் துறையின் வட்டி தாங்கும் 6 மாதங்கள் வரையான பொறுப்புக்கள் மொத்த பொறுப்புக்களின் ஒரு பங்காக 2023 இன் 3ஆம் காலாண்டின் இறுதியில் 75.1% ஆல் அதிகரித்தது. இது 2022 இல் 68.6% ஆக காணப்பட்டது. அதேநேரத்தில், 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்களுக்கு இடையேயான வட்டியினைக் தாங்கும் சொத்துக்கள் மொத்த வட்டியினைத் தாங்கும் சொத்துக்களுடன் ஒப்பிடும்போது 33.7% ஆல் அதிகரித்தது. இது 2022 இல் 26% ஆக காணப்பட்டது. இந்த முன்னேற்றமானது வங்கிகளுக்கு நலன் பயக்கும், ஏனெனில் அநேகமான வட்டியினைத் தாங்கும் பொறுப்புக்கள் எதிர்வரும் காலங்களில் மீள்விலையிடப்படலாம். அதேவேளை வட்டியினைத் தாங்கும் சொத்துக்களின் பாரிய தொகைகள் ஒப்பீட்டளவில் நீண்ட காலத்தில் மீள்விலையிடப்படலாம்.

வங்கியியல் நன்னிலை வரைபடம்




மூமையத்திலிருந்து விலகியிருத்தல் வங்கியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு ஒரு சாத்தியமான தாக்கத்தை குறிகாட்டுகின்றது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ROE, ROA மற்றும் NIM

வங்கியியல் துறையானது இலாபத்திலான அதிகரிப்பின் காரணமாக உரித்துவத்தில் வரிக்கு பிந்திய விளைவு (ROE) மற்றும் சொத்துக்களில் வரிக்கு முந்திய விளைவு (ROA) என்பவற்றில் என்பவற்றில் மேம்பாடுகளை அறிக்கையிட்டது. எவ்வாறாயினும், தேறிய வட்டி விடுமிகையானது, தேறிய வட்டி வருமானத்திலான வீழ்ச்சியின் காரணமாக, செப்டம்பர் 2023 இன் இறுதியில் 3.6% ஆக காணப்பட்டவேளை 2022 இல் அதே காலத்தில் இது 4.1% ஆக காணப்பட்டது. வங்கியியல் துறையின் ROE ஆனது செப்டம்பர் 2023 இல் 11.2% ஆக முன்னேற்றமடைந்ததுடன் இது செப்டம்பர் 2022 இல் 8% ஆக காணப்பட்டது. வங்கியியல் துறையின் ROA ஆனது ROE போன்ற ஒத்தபோக்கினை பின்தொடர்ந்ததுடன், செப்டம்பர் 2023 இல் 1.5 சதவீதத்தால் அதிகரித்ததுடன் இது முன்னைய வருடத்தின் ஒத்த காலத்தீல் 0.95 சதவீதமாக காணப்பட்டது.

வங்கி குழுமத்தினால் வரிக்கு பிந்திய இலாபம்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

செயற்பாட்டுச் சூழல்

மூலதனப் போதுமை விகிதம் (CAR)

வங்கியியல் துறையின் மூலதனப் போதுமை விகிதமானது (CAR) 2023 இன் 3ஆம் காலாண்டின் இறுதியியல் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது கணிசமாக முன்னேற்றமடைந்தது, பிரதானமாக துறையின் இடர் நிறையிடப்பட்ட சொத்துக்களின் சுருக்கத்தினாலாகும். துறையின் CAR செப்டம்பர் 2023 இல் 16.4% ஆக முன்னேற்றமடைந்தது. 2022 இன் அதே காலப்பகுதியில் 15.3% ஆக காணப்பட்டது. துறையின் முறைமைப்படுத்தப்படும் மூலதனமானது வருடத்திலிருந்து வருடம் சற்று 1.8% இனால் அதிகரித்து 2023 இன் 3ஆம் காலாண்டின் இறுதியில் அதிகரித்த CAR க்கு பங்களிப்பு செய்தது. எவ்வாறாயினும், துறையானது 2023 ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டின்போது விரிவடைந்த கடனைப் பிரதிபலிக்கும் விதமாக இடர் நிறையிடப்பட்ட சொத்துக்கள் அதிகரித்து மூலதனப் போதுமையில் ஒரு வீழ்ச்சியினைப் பதிவு செய்தது.

எதிர்காலத்திற்கான பார்வை

2024 இல் சர்வதேச நாணய நிதியம் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் 2023 இல் காணப்பட்ட 3.0% இலிருந்து 2.9% ஆக வீழ்ச்சியடையும் என எதிர்வுகூறியுள்ளது. இந்த வீழ்ச்சிக்கு பல காரணிகளைக் கூறலாம், மத்திய கிழக்கு பிராந்தியங்களில் நிகழுகின்ற மோதல்கள், குறிப்பாக காஸா பிராந்தியம் உள்ளடங்கலாகும். மத்திய கிழக்கில் நடைபெறும் யுத்தமானது உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு ஒரு கணிசமான இடரினை ஏற்படுத்துவதுடன், உயர்வடையும் பதற்றங்கள் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளில் அதிகரிப்பிற்கு இட்டுச்செல்வதுடன், உயர்வடையும் உற்பத்தி மற்றும் போக்குவரத்து செலவினங்களுடன் இறுதியாக உலகளாவிய பணவீக்கத்தில் மேல்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தலாம்.

இந்த உலகளாவிய சவால்களுக்கு அப்பால், இலங்கை மிகவும் நம்பிக்கையான கண்ணோட்டத்தினை முன்னிலைப்படுத்துகின்றது. நாடானது சில சாத்தியமான முன்னேற்றங்களை அனுபவித்துள்ளதுடன் இவை பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளாச்சிக்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு முக்கிய காரணியாக கடன் ஒத்திப்போடல் கட்டளை (DDO) காணப்படுவதுடன், இது விளைவுகளைக் குறைத்து அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல்களிலான அழுத்தத்தினை தளர்த்தியுள்ளது. விளைவுகளிலான குறைப்பானது வட்டி வீதங்களில் காணப்பட்ட சமநிலையின்மைகளை பகுதியளவில் சரிசெய்துள்ளது.

பாரிஸ் க்ளப் மற்றும் உத்தியோகபூர்வ கடன்கொடுத்தோர் குழு (OCC) போன்ற சர்வதேச கடன் கொடுத்தோர்களுடனான பேரம்பேசல்களுடன் சீனாவின் எக்சிம் வங்கி போன்று நிறுவனங்களுடனான உடன்படிக்கைகள் வட்டி வீதங்களிலான சமநிலையின்மைகளை மேலும் விளித்துரைக்கும்

வங்கியியல் துறை எதிர் மக்கள் வங்கியின் வருவாய்கள் மற்றும் இலாபகரத்தன்மை

ரூபா மில்.	2023 Q3	2023 Q4	2022	
	வங்கியியல் துறை	மக்கள் வங்கி	வங்கியியல் துறை	மக்கள் வங்கி
மொத்த வருமானம்	2,143,569	422,242	2,359,928	357,229
வட்டி வருமானம்	1,989,156	394,795	2,079,368	321,936
செயற்பாட்டுச் செலவினங்கள்	272,193	50,703	323,994	47,342
கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான வலுக்குன்றல்கள்	111,048	7,438	468,836	33,346
பெ.சே.வ. மற்றும் வரிகளுக்கு முந்திய இலாபம்	291,237	22,664	238,543	29,534
கூட்டாண்மை வரிகளுக்கு முந்திய இலாபம்	223,818	15,345	177,798	21,338
கூட்டாண்மை வரிக்கு பிந்திய இலாபம்	146,385	10,083	153,758	17,192

என எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிவாரி கடன் மீள்கட்டமைப்பின் (EDR) எதிர்பார்க்கப்பட்ட முடிவுறுத்தலானதும் கடன் கடப்பாடுகளை மிகவும் வினைத்திறனாக முகாமைப்படுத்துவதன் மூலம் பொருளாதார ஸ்திரத்தன்மையினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், செப்டம்பர் 2023 இல் அமுல்படுத்தப்பட்ட புதிய இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் வசதியளிக்கப்பட்ட அரசாங்க வருவாய் நிர்வாகத்திலான முன்னேற்றங்கள், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு சாத்தியமான பங்களிப்பினை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சட்டமானது நாணய நிதியளிப்பினை கட்டுப்படுத்துகின்றது, அரசு நிதி நிலைமையில் ஒழுக்கத்தினை ஊக்குவிப்பதுடன் பணவீக்க அழுத்தங்களின் இடர்களை குறைக்கின்றது.

2023 இன் நடுப்பகுதியிலிருந்து முன்னெடுக்கப்பட்ட நாணயக் கொள்கை தளர்த்தலானது உள்ளூர் கேள்வியினையும் இலங்கையின் பொருளாதார நடவடிக்கையினை தூண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார நடவடிக்கையிலான இந்த மீளுயர்வானது வருமான மட்டங்களை மேம்படுத்தி குடும்பங்கள் மற்றும் நிறுவனங்களில் அழுத்தங்களை தணிக்கும். மேலாக, மத்திய காலத்தில் உள்ளூர் பணவீக்கத்தினை 5மூ அளவில் ஸ்திரப்படுத்துவதற்கான இலக்குவைத்த முயற்சிகள் கொள்வனவு சக்தியினை மேம்படுத்தி கடன் மீள்செலுத்தல் ஆற்றலினை அதிகரித்து 2024 இல் பொருளாதார மீட்சிக்கு மேலும் துணையளிக்கும்.

ஒட்டுமொத்தத்தில், உலகளாவிய பொருளாதார சவால்கள் தொடரும் வேளை, இலங்கையின் முன்முயற்சி நடவடிக்கைகள், கொள்கை சீர்திருத்தங்கள், கடன் முகாமைத்துவம் மற்றும் வருவாய் நிர்வாகத்திலான முன்னேற்றங்கள் எதிர்வரும் ஆண்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளாச்சிக்கு மிகவும் நம்பிக்கையான கண்ணோட்டத்தினையும் வழங்குகின்றது. இந்த பிரிவுகளிலான தொடர்ச்சியான முயற்சிகள் வெளிவாரி அதிர்வுகளுக்கு எதிராக மீளெழுச்சியினை வளர்ப்பதற்கும் மீட்டல் வேகத்தினை நிலைபேறாக்குவதற்கும் அவசியமானதாகும்.

பங்காளிகள் ஈடுபாட்டிற்கான அணுகுமுறை : பங்காளிகளை இனங்காணல்

GRI 2-29

அரச உடைமை வங்கியான மக்கள் வங்கியானது நாட்டில் காணப்படும் ஏனைய தனியார் துறை வங்கிகளிடமிருந்து தெளிவாக வேறுபடுத்திக் காட்டப்படல் வேண்டும் ஏனெனில், ஒரு பொதுச் சொத்தாக அதன் சட்டரீதியான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் காரணத்தினாலாகும். ஒரு வர்த்தக நிறுவனமாக உள்ளபோதிலும், தனியார் உடைமையாக்கப்பட்ட வங்கிகளைப் போலல்லாது, மக்கள் வங்கி ஒரு இலாப நோக்கின் கீழ் மாத்திரம் செயற்படுவதற்கு முனைவதில்லை. வங்கியானது, ஏதேனும் மேலதிக கூ.ச.பொ. முன்னெடுப்புகளுக்கும் மேலாக, வங்கியியல் சேவைகளின் அதன் மையமான வணிக நடவடிக்கைகளினூடாக பொதுமக்களது நல்வாழ்வினை உறுதிப்படுத்துவது ஒரு உயர் முன்னுரிமையாக கருதுகின்றது.

எனவே, வங்கியின் முக்கியமான பங்காளிகளை இனங்கண்டு முன்னுரிமையளிக்கும் செயன்முறையானது பிரதானமாக பின்வருவனவற்றின் அடிப்படையிலாகம்:

1. மக்கள் வங்கிச் சட்டமானது வங்கியின் உரித்துடைமை, குறிக்கோள்கள் மற்றும் நடவடிக்கைகளின் நோக்கெல்லையினை குறிப்பிடுகின்றது.
2. தொடர்ச்சியான செயற்பாட்டு உரிமங்களை உறுதிப்படுத்துவதற்கான முறைமைப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டு தேவைப்பாடுகள்
3. ஒரு அரச வங்கியாக இலங்கையின் பொது மக்களுக்கு வங்கியின் மூலோபாய வணிகக் குறிக்கோள்கள் மற்றும் கடப்பாடுகள்

பங்காளிகளுக்கு முன்னுரிமையளித்தல்

நாட்டிலுள்ள பாரிய வங்கிகளுள் ஒன்றான மக்கள் வங்கி ஒரு நாளாந்த அடிப்படையில் பரந்த எல்லையிலான பன்முகமான பங்காளிகளுடன் ஈடுபடுகின்றது. இது நாட்டினுள் மற்றும் மற்றும் வெளிநாடுகளிலும் அமைந்துள்ள பங்காளிகளுடன் குறுங்காலம் மற்றும் முறைமைப்படுத்தல் நோக்கங்களுக்காக நீண்டகால ஈடுபாடுகளிலும் ஈடுபடுகின்றது. எனவே, தனித்துவமான பங்காளிகள் குழுமங்களை இனங்காண்பதற்கும் மேலாக, வங்கியானது முக்கியமான பங்காளி குழுக்களை இனங்காண்பதற்காக அதன் பன்முகமான பங்காளிக் குழுக்களை முன்னுரிமைப்படுத்துகின்றது. இது ஒவ்வொரு குழுவுடனான சரியான பதில்கள் மற்றும் ஈடுபாட்டு மூலோபாயங்களை சீரமைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகும். பங்காளிகள் வங்கியில் செயற்பாடுகளில் அவர்கள் கொண்டுள்ள செல்வாக்கு மட்டங்களின் பிரகாரம் மற்றும் ஒவ்வொரு குழு மீது வங்கியின் செல்வாக்கின் பிரகாரம் தரப்படுப்படுத்தப்படுகின்றது. இது ஒவ்வொரு குழுவுடனுமான தொடர்பாடல்கள் மற்றும் ஈடுபாடுகளின் நிகழ்வெண் மற்றும் முறைகளில் செல்வாக்கு செலுத்துகின்றது.

ஒவ்வொரு பங்காளிகள் குழுவின் முக்கியத்துவ மட்டம் எதுவாக இருந்தாலும், வங்கியானது ஒவ்வொரு குழுவுடனும் தொழில்சார், நெறிமுறையான மற்றும் வெளிப்படையான தொடர்பாடல்களை உறுதிசெய்கின்றது. இது தொடர்ச்சியான ஊழியர் பயிற்சி மற்றும் நாடு பூராவும் பரந்து காணப்படும் அதன் கிளைகளின் சேவை மட்டங்களை மதிப்பிடுதலினாலாகும்.

சமீபத்தை வருடங்களில் வங்கி எவ்வாறு பங்காளிகளுடன் ஈடுபடுகின்றது என்பதில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது வங்கியின் தொடர்பாடல்கள், சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளருடனான ஈடுபாடுகளில் விரைவான டிஜிட்டல் மயமாக்கலினாலாகும். வங்கியானது இந்த மாற்றத்தினை முன்கூட்டியே உணர்ந்து அதன் சகல ஊழியர்கள் மற்றும் புதிய பணிக்குச் சேர்க்கப்பட்டவர்களுக்காக வெளிவாரி தொடர்பாடல் நெறிமுறைகள், சரியான இயங்கலை ஒழுக்கம் மற்றும் பிரசுரித்தல் வழிகாட்டிகள், குறிப்பாக வங்கியின் சமூக ஊடக மேடைகள் மற்றும் இலத்திரணியல் தொடர்பாடல்களில் பயிற்றுவித்தது.



திருப்தியுடன் வைத்திருங்கள்



முறைமைப்படுத்துபவர் / பாராளு. உறுப்பினர்கள்



கணக்காய்வாளர் தலைமை அதிபதி



வணிகப் பங்காளிகள்



வழங்குநர்கள்



ஊழியர்கள்



தொழிற் சங்கங்கள்



முக்கிய பங்காளி



அரசாங்கம்



சிறுபான்மை பங்குதாரர்கள் (கூட்டுறவுச் சங்கங்கள்)



வாடிக்கையாளர்கள்



கண்காணிப்பாளர்



சமூகம் / சூழல்



தெரியப்படுத்துங்கள்



பொது மக்கள்



சமூக குழுக்கள்

பங்காளிகள் செல்வாக்கு

பங்காளிகள் ஆர்வம்

பங்காளிகள் ஈடுபாடு

முக்கிய பங்காளிகள் வகைகள், ஈடுபாட்டிற்கான நோக்கம் மற்றும் அணுகுமுறை GRI 2-29, 207-3

பங்காளிகளின் வகைகள்	பங்காளி ஈடுபாட்டின் நோக்கம்	நாம் எவ்வாறு அர்த்தமுள்ள ஈடுபாட்டினை உறுதிசெய்கிறோம்
அரசாங்கம் (நிதி அமைச்சு) • 92.27% பங்குகளுக்கு உரித்துடைய பிரதான பங்குதாரர்	• அரசாங்க அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு கொள்கைகளுக்கு துணைபுரிவதற்கு வங்கியின் மூலோபாயங்கள் / நடவடிக்கைகளை சீரமைத்தல் • நிதி அமைச்சிற்கு வங்கியின் முன்னேற்றம் / நிலைமையினை அறிவித்தல் • வரிகள் மற்றும் கட்டணங்களை உறுதிசெய்தல் • வங்கியில் அரசாங்க / பொது மக்களது முதலீடுகளை பாதுகாத்தல்	அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு ஒரு இடைநிலையாக செயற்படுவதன் மூலம் துணையளித்தல்: • அரசாங்கத்திடமிருந்து சலுகையிலான கடனை நுண் மற்றும் சி.ந.நி. களுக்கு செலுத்துதல் • அஸ்வசும திட்டத்தின் கீழ் நிதிகளை வழங்குதல் • ஓய்வூதியங்கள் மற்றும் அரச ஊழியர்களின் சம்பளங்களை வழங்குனர் • அரசாங்கத்திற்கு கடன் வழங்குதல் • அரச உடைமை நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல் வங்கி அரசாங்கத்துடன் அர்த்தமுள்ள ஈடுபாட்டினை உறுதி செய்தல் • வங்கியின் செயற்திறனை மீளாய்வு செய்வதற்காக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் ஆண்டறிக்கையின் பிரதிகளை னையும் நிதி அமைச்சிற்கு சமாப்பித்தல் • தேவைப்படும்போது நிதி அமைச்சினை சந்தித்து தொடர்பாடுதல்
ஏனைய பங்குதாரர்கள் • 7.73% பங்குகளுக்கு உரித்துடைய கூட்டுறவுச் சங்கங்கள்	மக்கள் வங்கிச் சட்டமானது வங்கி கூட்டுறவுத் துறையின் அபிவிருத்திக்கு ஆதரவளித்தலை வேண்டுகின்றது. எனவே, வங்கி அதன் கடப்பாட்டினை நிறைவேற்றவும் கூட்டுறவுத் துறையிடையே அதன் சந்தை பங்களிப்பினை பாதுகாக்கவும் இத்துறையுடன் ஈடுபடுகின்றது.	நிதியளித்தல் ஆலோசனை வழங்கல் பிரிவுகளில் வங்கியின் சி.ந.நி. மற்றும் நுண் நிதியளித்தல் பிரிவுகளூடாக கூட்டுறவுத் துறைக்கு துணையளித்தல். சபையிலுள்ள பிரதிநிதி பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு வங்கியின் அனைத்து அம்சங்களில் அவரை அறிவுறுத்தல். தேவைப்படும்போது கூட்டுறவுப் பிரதிநிதிகளுடன் தொடர்புகொள்ளுதல்.
முறைமைப்படுத்துபவர்கள் • இலங்கை மத்திய வங்கி	• சகல ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளுடன் முழு இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல் • சலுகை அடிப்படையிலான நிதியளிப்பினை சி.ந.நி. மற்றும் நுண் நிறுவனங்களுக்கு செலுத்துதல் • நற்பெயர் இடரினை முகாமைப்படுத்தல்	• சகல சட்டரீதியான அறிக்கைகளை நேரத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் மற்றும் தொடர்ச்சியான கலந்துரையாடலகளின் மூலம் மத்திய வங்கி மற்றும் ஏனைய முறைமைப்படுத்துபவர்களுடன் வங்கி ஈடுபடுகின்றது. • சகல சட்டரீதியான கொடுப்பனவுகளும் நேரத்திற்கு மேற்கொள்ளப்பட்டன. • நிலைபேறுடைய செயற்திறனை உறுதிசெய்தல்
வாடிக்கையாளர்கள் • அ.உ.நி.கள் • கூட்டாண்மைகள் • சி.ந.நி.கள் • தொழில்முனைபவர்கள் • தனிநபர்கள் • புலம்பெயர் பணியாளர்கள்	பல வகையான வாடிக்கையாளர்களுடனான ஈடுபாட்டின் பிரதான நோக்கம் வங்கியின் சந்தைப் பங்களிப்பினை விரிவாக்குதல், வைப்புகளை விரிவாக்குதல் மற்றும் இலாபத்தை அதிகரித்தல். எவ்வாறாயினும், ஒரு அரச வங்கியாக மக்கள் வங்கி, உள்ளூர் வணிகங்கள், தொழில்முனைவோர், குடும்பங்கள் மற்றும் தனிநபர்களது அபிவிருத்திக்கு துணைபுரியும் மேலதிகக் பொறுப்பினைக் கொண்டுள்ளது.	பல்வேறு வாடிக்கையாளர் குழுக்களுடன் ஈடுபடுவதற்கு வங்கி தனித்தனியான மூலோபாயங்களைக் கொண்டுள்ளது. 2023 இல் வங்கி வைப்புச் பிரச்சாரங்கள் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களை ஆதரவு கோருவதில் முன்னிறுத்தம் செய்தது. இரகசியம் மற்றும் சைபர் பாதுகாப்பினை உறுதிசெய்தல். சௌகரியம் மற்றும் அணுகுதலை பராமரிக்கும் வேளை உயர்தரமான சேவையுடன் சாத்தியமான உறவுமுறைகள். நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல். வாடிக்கையாளர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்தல்.

பங்காளிகளின் வகைகள்	பங்காளி ஈடுபாட்டின் நோக்கம்	நாம் எவ்வாறு அர்த்தமுள்ள ஈடுபாட்டினை உறுதிசெய்கிறோம்
ஊழியர்கள்	வங்கியானது சகல இன குழுக்களையும் உள்ளடக்கிய பாரிய நாடு முழுவதிலுமான தொழிற்சேனையினைக் கொண்டுள்ளது. ஈடுபாட்டின் பிரதான நோக்கம் இந்த பரந்த மற்றும் பன்முகமான தொழிற்சேனையினை வங்கியின் மூலோபாயத் திசையுடன் இணைத்தல். ஈடுபாட்டின் ஏனைய குறிக்கோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: • சேவைத் தரங்களை பராமரிப்பதன் மூலம் நற்பெயர் இடரினை முகாமைப்படுத்துதல் • கடன் மற்றும் திரவத்தன்மை இடர் உள்ளடங்கலான ஏனைய இடர்களை, கொள்கைகள் மற்றும் வரையறைகளின் வழமையான தொடர்பாடலூடாக ஏனைய இடர்களை முகாமைப்படுத்தல்.	இலக்குவைத்த பயிற்சித் திட்டங்கள், கூட்டங்கள், தொடர்ச்சியான மதிப்பிடல்கள், மற்றும் வழமையான கீழிருந்து மேலான தொடர்பாடல்களூடாக நாம் அர்த்தமுள்ள ஈடுபாட்டினை உறுதிசெய்தோம். ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்வதன் மூலம் ஊழியர்களின் நல்வாழ்வினை வங்கி உறுதிசெய்கின்றது. ஊக்கத்தொகைகள் மற்றும் நலன்கள், வெளிப்படையான, நியாயமான, மற்றும் கவர்ச்சிகரமான வேதனங்களை வழங்குதல் மற்றும் திறமையுடையோரை இணக்காணுதல். பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தினை உறுதிசெய்தல்.
தொழிற் சங்கங்கள் • வங்கி 6 தொழிற் சங்கங்களைக் கொண்டுள்ளது	வங்கியின் செயற்பாடுகளை சீர்குலைக்கும் கைத்தொழில் பிணக்குகள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளை தவிர்ப்பது ஈடுபாட்டின் பிரதான நோக்கமாகும்.	2023 இல் வங்கி தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் வழமையான கூட்டங்களை நடாத்துவதன் மூலம் அர்த்தமுள்ள ஈடுபாட்டினை உறுதிசெய்தது.
வழங்குநர்கள்	ஈடுபாட்டின் நோக்கமானது, தடையற்ற மற்றும் உயர் தரமான கருவிகள் மற்றும் சேவைகளை உறுதிசெய்வதற்கு தேவையான கருவிகள் மற்றும் சேவைகளின் வழமையான வழங்கலை உறுதிசெய்வதாகும்.	2023 இல் வங்கி கலந்துரையாடல்கள் மற்றும் பேரம் பேசல்களின் மூலம் வழங்குநர்களுடன் கருத்துணர்வுடனான ஈடுபாட்டினை உறுதிசெய்தது.
சமூகங்கள்/பொது மக்கள்	ஒரு அரச வங்கியாக மக்கள் வங்கிக்கு இலங்கை பொது மக்களுக்கு ஒரு கடப்பாட்டினைக் கொண்டுள்ளது ஈடுபாட்டின் பிரதான நோக்கம் ஒரு பொதுச் சொத்தாக வங்கியின் நாமம் மற்றும் நற்பெயரினை பராமரிப்பதாகும். மேலாக, வங்கி CSR திட்டங்களுக்காக பொது மக்களுடன் ஈடுபாடு கொள்கின்றது..	2023 இல் வங்கியானது அஸ்வெசும திட்டத்திற்கு நிதியினை பகிர்ந்தளிப்பதன் மூலம் இலங்கை பொது மக்களுக்கு உதவியதுடன், ஓய்வூதியங்கள் மற்றும் சம்பளங்களை தொடர்ந்து பகிர்ந்தளிக்கின்றது. "மஹஜன மெஹெவர" திட்டத்தின் கீழ் வங்கியானது பிரதானமாக குறைவாக சேவையாற்றப்பட்ட சமூகங்கள் மற்றும் பிள்ளைகளுக்கு பல CSR நிகழ்வுகளையும் நடாத்தியது.

எமது பங்காளிகளுக்கு வழங்கப்பட்ட பெறுமதி 2022 எதிர் 2023

பங்காளிக் குழு	உருவாக்கப்பட்ட பெறுமதி	2022	2023
முதலீட்டாளர்கள்	உரிமைத்துவத்திலான விளைவு	12.2%	6.6%
	பங்கொன்றிற்கான உழைப்பு	ரூபா 17,192	ரூபா 10,083
	பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி	ரூபா 145,294	ரூபா 160,059
	வரிகள்	ரூபா 13.9 பில்.	ரூபா13.9 பில்.
வாடிக்கையாளர்கள்	வாடிக்கையாளர்களின் மொத்த எண்ணிக்கை	14.7 மில். மேல்	15 மில். மேல்.
	இணைத்துக்கொள்ளப்பட்ட புதிய வாடிக்கையாளர்கள்	682,300	811,687
ஊழியர்கள்	பயிற்றுவித்தல் செலவு	ரூபா 92.8 மில்.	ரூபா 96.6 மில்.
	ஊழியர் நலன்கள்	ரூபா 26.6 பில்.	ரூபா 24.5 பில்.
	பதிவியுயர்வுகள்	33	239
வழங்குநர்கள்	வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள்	ரூபா 15.9 பில்.	ரூபா 21.4 பில்.
	ஊடான வழங்குநர் பதிவீடு	e-GP	e-GP
சமூகம்	கூ.செ.பொ. இல் முதலீடு	ரூபா 38.2 மில்.	ரூபா 40.7 மில்.
	சேவையளிக்கப்படும் ஓய்வூதியர்களின் எண்ணிக்கை	7,507	7,440

பொருண்மை

மக்கள் வங்கி தற்போது தீவிரமாக இளம் சந்ததியினரை கவர்வதுடன், இது வணிகநாம பொருந்துமை மற்றும் தொடர்ச்சியான வணிக விரிவாக்கலை தக்கவைப்பதற்காகும்.

பொருண்மையான தலைப்புகளை தீர்மானிக்கும் செயன்முறை

GRI 3-1

பொருண்மையான தலைப்புகளை தீர்மானிப்பதில், வங்கியானது பொருளாதாரத்தில், சூழலில், மற்றும் சமூகத்தில், அதன் வளர்ச்சி மூலோபாயத்தினை நிறைவேற்றும் செயன்முறையில் நடைமுறை மற்றும் சாத்தியமான தாக்கங்களை கருத்திலெடுக்கின்றது. அதேவேளை, அதன் பங்காளிகளது தேவைகள் மற்றும் அபிலாஷைகளையும் கருத்திலெடுக்கின்றது.

இந்தச் செயற்பாட்டில் கருத்திலெடுக்கப்பட்ட பிரதான பங்காளிகள் பின்வருமாறு:

- வங்கியின் பிரதான பங்குதாரர் - இலங்கை அரசாங்கம்
- சிறுபான்மை பங்குதாரர் - கூட்டுறவுச் சங்கங்கள்
- நடைமுறையிலுள்ள மற்றும் சாதகமான வாடிக்கையாளர்கள்
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வணிகப்ப பங்காளிகள்
- ஊழியர்கள்
- தொழிற் சங்கங்கள்



வெளிப்படுத்தலுக்காக பொருண்மையான தலைப்புகளை தெரிவுசெயவதில் முக்கிய பலசீலனைகள்

மக்கள் வங்கியின் சட்டப் பொறுப்பாண்மை மற்றும் தேசிய கடப்பாடுகள்	அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள்	வங்கியின் மூலோபாய முன்னுரிமைகள்	வங்கியின் செயற்பாட்டுச் சூழமைவு	பங்காளிகள் பின்னூட்டம் மற்றும் எதிர்பார்ப்புகள்	வங்கியின் எதிர்கால நிலைபேறுடமை
மக்கள் வங்கியானது பாராளுமன்றத்தின் ஒரு சட்டத்தினால் கட்டுப்பட்டுள்ளதுடன், இது பொதுமக்களின் நல்வாழ்வு நோக்கிய வங்கியின் பொறுப்புக்களை குறிப்பிடுவதுடன், இதன் காரணமாக வங்கி முற்றிலும் ஒரு இலாப குறிக்கோளின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளவியலாது.	ஒரு அரசு உடைமை வங்கியாக, மக்கள் வங்கி அரசாங்கத்தின் பொருளாதார, சமூக நல்வாழ்வு மற்றும் வறுமை ஒழிப்பு கொள்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டிய தேவை காணப்படுவதுடன், இவை உயர்ந்த செயற்பாட்டுச் செலவுகளை விளைவிக்கின்றன, ஆனால் பாரியளவில் சாத்தியமான சமூக தாக்கத்தினைக் கொண்டுள்ளது.	வளர்ச்சியினை நிலைபேறுடையதாக ஆக்குவதற்கு தெளிவாக வரையறை செய்யப்பட்ட வங்கியின் மூலோபாய முன்னுரிமைகளுடன் மக்கள் வங்கி ஒரு மூலோபாயத் திட்டத்தினைக் கொண்டுள்ளது.	பொது மக்களின் நல்வாழ்வு நோக்கிய மக்கள் வங்கியின் பொறுப்புக்களின் காரணமாக, வங்கியானது பொருளாதார மீட்சிக்கு வசதியளிப்பது தொடர்பாக ஒரு பாரிய சுமையினை பொறுப்பேற்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.	பொது மக்களுக்கான அதன் கடப்பாடுகளுக்கு மேலாக, உயர்ந்த போட்டித்தன்மையான துறையில் உயிர் பிழைப்பதற்கு, மக்கள் வங்கி சேவைத் தரங்கள் மற்றும் தொழில்நுட்பத்தினைப் பொறுத்தளவில் அதன் நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான வாடிக்கையாளர்களின் மற்றும் ஊழியர்கள் மற்றும் வணிகப் பங்காளிகள் போன்ற ஏனைய பங்காளிகளின் அபிலாஷைகளை கருத்தில் எடுக்கவேண்டும்.	அமைப்பு ரீதியாக (முறைமையான) ஒரு முக்கிய வங்கியாக, மக்கள் வங்கியின் நீண்டகால நிலைபேறுடமை முழு நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் பொதுமக்களின் நல்வாழ்விற்கும் மிகவும் முக்கியமானதாகும்.

பொருண்மையான தலைப்புகளுக்கு முன்னுரிமையளித்தல்

வங்கியின் முன்னுரிமைகள் பொருண்மையான தலைப்புகளின் ஒரு பட்டியலாக பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. வங்கியின் முன்னுரிமைகள், வங்கியின் நீண்டகால நிலைபேறுடமை நோக்கிய பங்களிப்பு மட்டங்களின் அடிப்படையில் பிரதானமாக தீர்மானிக்கப்படுகின்றது. வங்கியின் நீண்டகால நிலைபேறுடமையானது, விரைவாக மாற்றமடையும் வெளிவாரி சூழல் மற்றும் வாடிக்கையாளர் சுயவிபரங்களில் வங்கி போட்டித்தன்மையாகவும் திடமாகவும் காணப்படுவதற்கான தேவையினை வங்கி கொண்டுள்ளது. நாட்டிலுள்ள பழமையான வங்கிகளில் ஒன்றாக இருந்தாலும், மக்கள் வங்கி தற்போது தீவிரமாக இளம் சந்ததியினரை கவர்வதுடன், இது வணிகநாம பொருந்துமை மற்றும் தொடர்ச்சியான வணிக விரிவாக்கலை தக்கவைப்பதற்காகும். இதற்கு சமமான அல்லது விஞ்சும் கருவிகள் மற்றும் சேவைகள் மற்றும் தொழில்நுட்ப அமைப்புமுறைகள் தேவைப்படுகின்றன.

பொருண்மையான் தலைப்புகளின் பட்டியல் GRI 3-2, 3-3

வங்கியின் முன்னுரிமைகள்	தலைப்பிற்கு முன்னுரிமையளிப்பதற்கான காரணங்கள்	பொருத்தமான பொருண்மையான தலைப்புகள்	பார்க்கவேண்டிய பிரிவுகள்	முகாமைத்துவ அணுகுமுறை
சிறந்த ஆளுகை	சிறந்த ஆளுகைக்கு முன்னுரிமை அளிப்பதற்காக பிரதான காரணிகள்: • பொதுமக்கள் நலனை மேம்படுத்துதல் • ஊழலினை விளித்துரைத்தல் • இலாபகரத்தன்மை மற்றும் சொத்துக்களை மேம்படுத்துதல் • வாடிக்கையாளர் இரகசியம் மற்றும் தரவுப் பாதுகாப்பிற்கு வசதியளித்தல் • பொருத்தமான சகல ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல்	• GRI 205: ஊழல் எதிர்ப்பு • GRI 206: போட்டிக்கு எதிரான நடத்தை • GRI 418: வாடிக்கையாளர் இரகசியத்தன்மை	மனித மூலதனம் (பக்கபங்கள் 103 முதல் 113 வரை)	ஒரு வலுவான ஆளுகை மற்றும் மேற்பார்வை கட்டமைப்பினை பராமரிப்பதனூடாக பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்கவிதிகள் கடுமையாக கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிசெய்தல்.
நிதியியல் ஸ்திரத்தன்மை	நிதியியல் ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை அளிப்பதற்காக பிரதான காரணங்கள்: • இடர் காரணிகளை விளித்துரைத்தல் - கட்டம் 3 கடன்கள், திரவத்தன்மை, கடன் இடர் முதலியன • இலாபகரத்தன்மையினை மேம்படுத்துதல் • பொருளாதார மீட்சிக்கு துணையளித்தல் • வங்கியின் நேரடியான மற்றும் மறைமுகமான பொருளாதார தாக்கங்களை மேம்படுத்துதல் • தேசிய திறைசேரிக்கான பங்களிப்பினை மேம்படுத்ததல்	• GRI 201: பொருளாதாரச் செயற்திறன் • GRI 203: மறைமுகமான பொருளாதார தாக்கங்கள் • GRI 207: வரி	நிதியியல் தலைமையின் மீளாய்வு (பக்கங்கள் 68 முதல் 73 வரை), வணிகப் பிரிவு மீளாய்வுகள் (பக்கங்கள் 74 முதல் 91 வரை), இடர் முகாமைத்துவ அறிக்கை (பக்கங்கள் 144 முதல் 173 வரை)	சந்தை வாய்ப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் மற்றும் இலாபகரத்தன்மையினை மேம்படுத்துவதற்கான வினைத்திறனான செலவுச் சிக்கனப்படுத்தல் நடைமுறைகளின் அமுலாக்கல் மூலம் சகல வணிகப் பிரிவுகளினதும் வருவாயினை பெருமமாக்குதல். மூலோபாயமாக இடர்களை முகாமைப்படுத்தல், மூலதன நிலையினை வலுப்படுத்துதல் மற்றும் வங்கியின் ஐந்தொகையினை வலுவூட்டுதல். வடிவத்தின் உச்சம்
டிஜிட்டல் தலைமைத்துவம்	டிஜிட்டல் மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான பிரதாக காரணங்கள்: • இளைஞர் மற்றம் உயர் நிகர மதிப்புடைய பிரிவினரை கவர்வதற்கு மக்கள் வங்கியின் வணிக நாமத்தை மீள்நிலைப்படுத்தல் • புதிய மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட கருவிகளை விருத்திசெய்தல் • மெய்நேர கொடுக்கல் வாங்கல்களை இயலுமையாக்குதல் • மெய்நேர/ சிறந்த தீர்மானம் மேற்கொள்வதற்கு துணையளித்தல் • செலவுகளை குறைத்தல்/கட்டுப்படுத்தல் • விரயத்தைக் குறைத்தல் • செயற்பாட்டு வினைத்திறனை அதிகரித்தல் • சிறந்த ஆளுமைக்கு துணையளித்தல் • ஊழலை சிறுமமாக்குதல் • வெளிப்படைத்தன்மையினை அதிகரித்தல் • மனித தவறுகள் /பிழைகளை சிறுமமாக்குதல் • வாடிக்கையாளர் சௌகரியத்தை அதிகரித்தல் • சூழல் தாக்கங்களை சிறுமமாக்குதல்	தயவுசெய்து பார்க்கவும்: • GRI 417: சந்தைப்படுத்தல் மற்றும் குறியிடல்	உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம் (பக்கங்கள் 92 முதல் 95 வரை), அறிவுசார் மூலதனம் (பக்கங்கள் 96 முதல் 102 வரை), வாடிக்கையாளர் மூலதனம் (பக்கங்கள் 114 முதல் 119 வரை)	நாட்டின் டிஜிட்டல் ரீதியாக மிகவும் முன்னேற்றமடைந்துள்ள வங்கியாக, இதன் மூலம் எமது பொருளாதாரம் மற்றும் பங்காளிகளுக்கு மேம்பட்ட பெறுமதியினை விநியோகித்தல், எமது நிலையினை நிலைநிறுத்துவதற்காக டிஜிட்டல்மயமாக்கலிலான நிரந்த முதலீட்டிற்கு கடப்பாடுடன் உள்ளது.
வணிகநாம புலப்படும் தன்மை	வணிகநாமமிடலுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக பிரதான காரணங்கள் • வணிகநாம பொருந்துமையினை பராமரித்தல் • புதிய வாடிக்கையாளர் பிரிவுகளை கவர்தல் • சாத்தியமான சமூக தாக்கங்களை உருவாக்குவதற்காக வங்கியின் தோற்றம் மற்றும் பாரம்பரிய நற்பெயரை பராமரித்தல்	• GRI 417: சந்தைப்படுத்தலும் குறியிடலும்	வாடிக்கையாளர் மூலதனம் (பக்கங்கள் 114 முதல் 119 வரை)	டிஜிட்டல் தலைமைத்துவம், புத்தாக்கம், வலுவான ஆளுகை, வாடிக்கையாளர் சேவையில் தனிச்சிறப்பு, வினைத்திறனான வாடிக்கையாளர் உறவுமுறை முகாமைத்துவம், ஒரு முனைப்பான சந்தை பிரசன்னம் மற்றும் நிலையுறுதியுடைய ஸ்திரத்தன்மை ஊடாக வணிகநாமம் புலப்படலை மேம்படுத்துதல்.

பொருண்மை

வங்கியின் முன்னுரிமைகள்	தலைப்பிற்கு முன்னுரிமையளிப்பதற்கான காரணங்கள்	பொருத்தமான பொருண்மையான தலைப்புகள்	பார்க்கவேண்டிய பிரிவுகள்	முகாமைத்துவ அணுகுமுறை
திறன் முகாமைத்துவம்	திறனுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான பிரதான காரணங்கள்: • நிலைபேறுடைய வளர்ச்சிக்கு அவசியமான திறன்களை தக்கவைப்பதன் மூலம் மூளைசாலிகளின் வெளியேற்றத்தை தடுத்தல் • டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு துணையளிப்பதற்கு ஊழியர்களை பயிற்றுவித்தல் • வாடிக்கையாளர் தக்கவைத்தல் மற்றும் வளர்ச்சிக்கு வசதியளித்தல்	• GRI 401: வேலைவாய்ப்பு • GRI 402: தொழிலாளர்/ முகாமைத்துவ உறவுகள் • GRI 404: பயிற்சி மற்றும் கல்வி • GRI 405: பன்முகத்தன்மையும் சமத்துவமான வாய்ப்பும் • GRI 406: பாகுபாடற்ற	மனித மூலதனம் (பக்கங்கள் 103 முதல் 113 வரை)	வங்கியின் மூலோபாய நிகழ்ச்சிநிரலை நிறைவேற்றுவதற்கு ஒரு உயர் செயற்திறனுடைய அணியினை கவர்தல், தக்கவைத்தல் மற்றும் வளர்த்தல்.
ஊழியர் மனநிலை நலம்	• மனித சொத்துக்களைப் பாதுகாத்தல் • நல்வாழ்வினை உறுதிசெய்தல் • தொழில் வாழ்க்கை சமநிலை	• GRI 401: வேலைவாய்ப்பு • GRI 404: பயிற்சி மற்றும் கல்வி • GRI 406: பாகுபாடற்ற	மனித மூலதனம் (பக்கங்கள் 103 முதல் 113 வரை)	ஊழியர்களுக்கு நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத நலன்களை வழங்குதல் மற்றும் நாளாந்த சிக்கல்களில் ஆலோசகர்களுடன் நேரடியாக கதைப்பதற்கு அவர்களுக்கு வசதியளித்தல்.
வாடிக்கையாளர் அனுபவம்	• வாடிக்கையாளர்களுக்கு ஒரு கட்டாய மதிப்பு முன்மொழிவினை விநியோகித்தல் • ஒரு மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்கும் டிஜிட்டல் வழிகளுக்கு தடையற்ற மாற்றலுக்கு வசதியளித்தல்	• GRI 418: வாடிக்கையாளர் இரகசியத்தன்மை • GRI 417: சந்தைப்படுத்தலும் குறியிடலும் • GRI 411: பூர்வீக மக்களின் உரிமைகள்	உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் (பக்கங்கள் 92 முதல் 95 வரை), அறிவுசார் மூலதனம் (பக்கங்கள் 96 முதல் 102 வரை), வாடிக்கையாளர் மூலதனம் (பக்கங்கள் 114 முதல் 119 வரை).	வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்தும் டிஜிட்டல் வழிகளுக்கு தடையற்ற மாற்றலுக்கு வசதியளித்தல் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய அணுகுமுறையினை தழுவுவதன் மூலம் கட்டாய மதிப்பு முன்மொழிவினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.
ஊழியர் ஆக்கத்திறன்	• வங்கியின் மூலோபாய நிகழ்ச்சிநிரல் மற்றும் செயற்திறனை இயக்குவதற்கான அவசியம்	• GRI 401: வேலைவாய்ப்பு	மனித மூலதனம் (பக்கங்கள் 103 முதல் 113 வரை)	ஊழியர் பயிற்சி, அபிவிருத்தி, வெகுமதிகள் மற்றும் அங்கீகாரத்திற்கு வளங்களை ஒதுக்குதல் மற்றும் உயர்ந்த ஈடுபாட்டினையுடைய தொழிற்சேனையினை வளர்த்தல்.
பயிற்சியும் அபிவிருத்தியும்	• ஒரு முதன்மையான பங்காளிகள் அனுபவத்தை விநியோகிப்பதற்கு வங்கியின் மூலோபாய திட்டத்தினை அமுலாக்குவதற்கு	• GRI 404- பயிற்சி மற்றும் கல்வி	மனித மூலதனம் (பக்கங்கள் 103 முதல் 113 வரை)	துறைசார் முன்னணி ஆற்றல்களை விருத்திசெய்தல் மற்றும் எமது ஊழியர்கள், விரிவான பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களிலான முதலீட்டினூடாக, அவர்களது முழு சாத்தியத்தினை எட்டுவதற்கு வலுவளித்தல் உடன் அவற்றின் அமுலாக்கலுக்கு துணைபுரிவதற்கு அவசியமான உட்கட்டமைப்பு.
நேர்மை வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல்	• பொது மக்களிடையே வங்கியியல் அமைப்புமுறையில் நெறிமுறையான சமூகம் மற்றும் நம்பிக்கை	• GRI 205: ஊழல் எதிர்ப்பு • GRI 206: போட்டித்தன்மை எதிரான நடத்தை.	மனித மூலதனம் (பக்கங்கள் 103 முதல் 113 வரை), நிதியியல் தலைமையின் மீளாய்வு (பக்கங்கள் 68 முதல் 73 வரை), அறிவுசார் மூலதனம் (பக்கங்கள் 96 முதல் 102 வரை), இடர் முகாமைத்துவ அறிக்கை (பக்கங்கள் 114 முதல் 173 வரை)	கடுமையான நெறிமுறை நியமங்களை நிலைநாட்டுதல், சட்டத்துடன் இணக்கப்பாடு காணுதல், மற்றும் ஒழுக்கமான நேர்மையினைக் கொண்ட ஒரு கலாச்சாரத்தினை வங்கியினுள் வளர்த்தல், ஊழியர்கள் உயர்ந்த மட்டத்திலான நடத்தையினை பராமரிப்பதனை உறுதிசெய்தல்.
ஊழியர்களுக்கு மீள்திறன் அளிப்பதற்கான தேவை	• சந்ததி Z வாடிக்கையாளர் தேவைகளை சந்திப்பதற்கு • நவீன தொழில்நுட்பப் போக்குகள் மற்றும் அபிவிருத்திகளுடன் முன்னணியில் இருப்பதற்கு	• GRI 404: பயிற்சி மற்றும் கல்வி	மனித மூலதனம் (பக்கங்கள் 103 முதல் 113 வரை)	ஊழியர்கள் பொருத்தமான மீள்திறனளித்தலுக்கு உட்படுவதை உறுதிசெய்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக துணையளிப்பதற்காக நவீன தொழில்நுட்பங்களுடன் இற்றைப்படுத்திக்கொள்வதனை ஊக்குவித்தல்.

வங்கியின் முன்னுரிமைகள்	தலைப்பிற்கு முன்னுரிமையளிப்பதற்கான காரணங்கள்	பொருத்தமான பொருண்மையான தலைப்புகள்	பார்க்கவேண்டிய பிரிவுகள்	முகாமைத்துவ அணுகுமுறை
பொறுப்பான கடன் வழங்கல்	• நிலவுகின்ற பொருளாதார நிலைமைகளின் காரணமாக உயர்வாகக் காணப்படும் கட்டம் 3 மாற்றல் இடரினை சிறுமமாக்குதல்.		வாடிக்கையாளர் மூலதனம் (பக்கங்கள் 114 முதல் 119 வரை).	நிதியியல் உள்ளடக்கத்தினை ஊக்குவிப்பதற்கான தேவை காணப்படும்வேளை, நாம் கடன் வழங்கலில், குறைவாக பாதிக்கப்பட்ட துறைகளில் செறிவூட்டுவதில் அவதானத்தை கடைப்பிடித்தல் வேண்டும். .
இடர் ஆளுகை	• வங்கியின் நேர்மை, நம்பிக்கை மற்றும் ஸ்திரத்தன்மையினை மேம்படுத்துதல்.		இடர் முகாமைத்துவ அறிக்கை (பக்கங்கள் 144 முதல் 173 வரை), கூட்டாண்மை ஆளுகை (பக்கங்கள் 174 முதல் 195 வரை)	நிதியியல் உள்ளடக்கத்தினை ஊக்குவித்தல் அவசியமானவேளை, நாம் கடன் வழங்கலில் அவதானத்தை கடைப்பிடிப்பதுடன், குறைவாக பாதிக்கப்பட்ட துறைகளில் முன்னிறுத்தம் செய்தல்.
சூழல் தாக்கம்	• சூழல் தோழமையான மற்றும் நிலைபேறுடைய வணிக நடைமுறைகள் ஊடான நிலைபேறுடைய, பசுமைச் சூழல்.	• GRI 302: வலு • GRI 303: தண்ணீர் மற்றும் கழிவுநீர் • GRI305: உமிழ்வுகள்	இயற்கை மூலதனம் (பக்கங்கள் 134 முதல் 142 வரை)	சூழல் தோழமையான உட்கட்டமைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களில் முதலீடு செய்வதன் மூலம் எமது கரியமில அடிச்சுவட்டினை தணித்தல், அதேவேளை நிதியியல் மற்றும் முதலீட்டுத் தெரிவுகளை மேற்கொள்ளும்போது சூழல் சிந்தனைகளை கருத்திலெடுத்தல்.
சமூக பொருளாதார தாக்கம்	• தேசிய முன்னுரிமை சிக்கல்களுடன் பொருந்துதல்	• GRI 202: சந்தை பிரசன்னம் • GRI 203: மறைமுகமான பொருளாதார தாக்கம் • GRI 413: உள்ளூர் சமூகங்கள்	சமூக மூலதனம் (பக்கங்கள் 129 முதல் 133 வரை)	உள்ளூர் சமூகங்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு துணையளிப்பதன் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளை விளித்துரைத்தல்.
ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு	• பாதுகாப்பான, ஊக்கமளிக்கும் மற்றும ஈடுபாடுடைய ஒரு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வங்கியியல் சூழலை உறுதிசெய்தல்	• GRI 403: பணியிட ஆரோக்கியமும் பாதுகாப்பும் • GRI 416:வாடிக்கையாளர் ஆரோக்கியமும் பாதுகாப்பும்	வாடிக்கையாளர் மூலதனம் (பக்கங்கள் 114 முதல் 119 வரை).	கடுமையான ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நியமங்களை சந்திக்கும் கருவிகள் மற்றும் சேவைகளை விநியோகித்தல் மற்றும் பாதுகாப்பான வணிக வளாகத்தைப் பராமரிப்பதன் மூலம் எமது பங்காளிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வினை உறுதிசெய்தல்
வழங்குநர் பெறுமதி உருவாக்கம்	• வழங்கல் சங்கிலிகளிலான நிலைகுலைவின் காரணமாக வணிக இடையூறுகளை சிறுமமாக்குதல்	• GRI 204: கொள்முதல் நடைமுறைகள் • GRI 308: வழங்குநர் சூழல் மதிப்பீடு • GRI 414: வழங்குநர் சமூக மதிப்பீடு	வணிகப் பங்காளி மூலதனம் (பக்கங்கள் 120 முதல் 124 வரை)	நீண்டகால, பரஸ்பரமான நன்மையளிக்கக்கூடிய வணிகப் பங்காளி உறவுமுறைகளை பலப்படுத்துதல் மற்றும் பகிரப்பட்ட பெறுமதியினை உருவாக்குதல்



மூன்று வெவ்வேறான காலகட்டத்தில் அமுல்படுத்தப்பட்டவை

குறுங்காலம்	மத்திய காலம்	நீண்டகாலம்
இலாபகரத்தன்மை, திரவத்தன்மை மற்றும் மூலதன மட்டங்களை, சொத்தின் தரத்தைப் பாதுகாத்தல் மற்றும் செலவு குறைத்தல்கள் போன்ற தந்திரோபாய செம்மையாக்கல்களை அமுலாக்குவதன் மூலம், உறுதி செய்தல்.	கட்டண அடிப்படையிலான வருமான வழிகளுக்கு பன்முகப்படுத்துதல், மேம்பாடுகளை செயன்முறைப் படுத்துவதற்கு அதிக டிஜிட்டல் தீர்வுகளில் முதலீடு செய்தல்.	வாடிக்கையாளரினால் மிகவும் வேண்டப்படும் வங்கியாக காணப்படுதல், துறையில் சிறந்த ஊழியர் திருப்தி மட்டத்தினைக் கொண்டிருத்தல்.

எமது மூலோபாயம்

மக்கள் வங்கியின் நிலைபேறுடைய அபிவிருத்தி மூலோபாயமானது தொடர்ச்சியாக சேவைத் தரங்களை மேம்படுத்துதல், மிகவும் வாடிக்கையாளர் மையப்படுத்தியதாக வருவது மற்றும் எதிர்காலத்திற்கு வங்கியின் நிலைபேறுடமையினை மேம்படுத்துவதற்கு வங்கியினை எதிர்காலத்தை சந்திப்பதற்கு தயாராயிருந்தல் என்பவற்றை இலக்குவைத்துள்ளன.

2022 இல் காணப்பட்ட முன்னெப்போதும் நிகழ்ந்திராக பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்த சமயம் மக்கள் வங்கியானது 2022-2024 இற்கான ஒரு மூலோபாயத் திட்டத்தினை விருத்தி செய்தது. இது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நாணயத்திலான திரவத்தன்மை வரையறைகள், விரைவாக உயர்வடையும் பணவீக்க வீதங்கள் மற்றும் சந்தை வட்டி வீதங்கள் மற்றும் அத்துடன் சிதறலான சமூக அமைதியின்மையும் உள்ளடக்கியிருந்தது. மூலோபாய உருவாக்கலானது ஒரு பங்குபற்றல் அணுகுமுறையினை கடைப்பிடித்தது. இது நிலைபேறுடமையினை மேம்படுத்துவதற்கும் கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ அங்கத்தவர்கள் மற்றும் சகல பிராந்தியங்களையும் உள்ளடக்கிய தெரிவுசெய்யப்பட்ட கிளை முகாமையாளர்களை உள்ளடக்கிய ஏனைய அணி அங்கத்தவர்களையும் உள்ளடக்கியது.

நிலைபேறுடைய அபிவிருத்தி மூலோபாயத்திலான கூற்று

GRI 2-22

நாட்டின் பாரிய அரச வங்கிகளுள் ஒன்றாக மக்கள் வங்கி, சமூக நல்வாழ்வு மற்றும் வறுமை ஒழிப்பிற்கு வசதியளிப்பதிலும் அவற்றில் நேரடியாக முதலீடு செய்வதிலும் ஒரு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. வங்கியானது, அதன் நடைமுறை நவீனமயப்படுத்தல் இயக்கத்தில் இந்த மையமான வணிகத் தத்துவத்தைக் கைவிடவில்லை. எனவே, மக்கள் வங்கியின் நிலைபேறுடைய அபிவிருத்தி மூலோபாயமானது தொடர்ச்சியாக சேவைத் தரங்களை மேம்படுத்துதல், மிகவும் வாடிக்கையாளர் மையப்படுத்தியதாக வருவது மற்றும் எதிர்காலத்திற்கு வங்கியின் நிலைபேறுடமையினை மேம்படுத்துவதற்கு வங்கியினை எதிர்காலத்தை சந்திப்பதற்கு தயாராயிருந்தல் என்பவற்றை இலக்குவைத்துள்ளன.

வங்கியானது நான்கு பாரிய தெளிவான கட்டாயமான இலக்குகளை (BHAG) நிறுவியுள்ளதுடன், இவை 3 வருட மூலோபாயப் பாதையின் மீது அதன் மூலோபாய முன்னேற்றத்தை அவதானிப்பதற்காகும். அவையாவன:

1. எமது வாடிக்கையாளர்களில் 35% ஆனோருக்கு முதன்மை வங்கியாக வருவதற்கு
2. முன்னணியிலுள்ள உள்ளூர் போட்டியாளர்களிடையே உயர்ந்த தேறிய ஊக்குவிப்பாளர் புள்ளியினைப் (NPS) பெறுதல்
3. ஏற்றுமதி மற்றும் உள்வாரி பணமனுப்பல்களுக்காக நாட்டில் முதல் வங்கியான வருதல்
4. இலங்கையில் சிறந்த இடத்தில் பணிபுரிவதற்கான தங்க விருது (கூடுதல் பெரிய நிறுவன வகையில்)

முன்னேற்ற மீளாய்வு பொறிமுறை

2023 இல் வங்கியானது ஒவ்வொரு பிரிவின் இரண்டாம் அடுக்கிலும் மூலோபாய மேற்பார்வை மற்றும் மூலோபாய நிர்வாகம் ஆகியவற்றை விரிவுபடுத்தியதுடன், முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு மேலாக, இந்த ஆளணியினர் மூலோபாய முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களிலும் சமூகமளிக்கின்றார்கள். இந்த விரிவாக்கமானது கீழ் மட்டத்தில் மூலோபாய அமுலாக்கல் தொடர்பாக பின்னூட்டத்தின் உயரிய வேறுபாடு மற்றும் ஆழத்தினை இயலுமையாக்குகின்றது. இதன் மூலம் தீர்மானம் மேற்கொள்வதற்காக முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் மிகவும் நுண்ணறிவாக தகவல்கள் வழங்கப்படுகின்றது.

வங்கியின் மூலோபாயத் திட்டமானது பிரதான வணிக அலகுகளுக்கு 26 மூலோபாய முன்னெடுப்புகளையும் துணையளிக்கும் அலகுகளுக்கு மேலும் ஆறு மூலோபாய முன்னெடுப்புகளையும் உள்ளடக்கியதுடன் மொத்தமாக மதிப்பிடக்கூடிய மற்றும் அளவிடக்கூடிய 59 சபை மேற்பார்வை முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளை உள்ளடக்குகின்றது. மூலோபாய முன்னெடுப்புக்கள் மூலோபாயத் திட்டத்தின் முழுக் காலத்திலும் நடைபெறுவதுடன், ஒவ்வொரு முன்னெடுப்பின் கீழும் நேர வரையறையுடைய கட்டங்கள் காணப்படுகின்றன. இந்த விளைவுகள் வருடம் பூராவும் நடாத்தப்படும் வழமையான மீளாய்வுகளில் கணக்காணிக்கப்படுகின்றது.

பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளரின் தலைமையில் மாதாந்த மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன், தலைவரினால் தலைமை தாங்கப்படும் சபை மூலோபாய திட்ட மீளாய்வுக் குழுவினால் (BSPRC) காலாண்டு மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. KPI இற்கு எதிரான செயற்திறனானது இந்தக் கூட்டங்களில் கவனமாக மதிப்பிடப்படுவதுடன் அவசியமானபோது திருத்த நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

மூலோபாயத் தூண்களின் கீழான முன்னெடுப்புகள்

முதன்மை நிலையினை இயக்குதல்

1. செயற்பாட்டு முதன்மைநிலை
   - வணிக அபிவிருத்தி வளர்ச்சி
   - செயற்பாட்டு செயன்முறை முன்னேற்றங்கள்
   - செயற்பாடுகளின் டிஜிட்டல் உருமாற்றம்
   - திருப்புமுனை நேரத்தில் முன்னேற்றம்
   - கிளை முன்னிறுத்தத்தினை மறுசீரமைத்தல்
   - மேம்பட்ட வாடிக்கையாளர் திருப்தி
   - கிளைகளின் நேரப் பயன்பாடு
   - வாடிக்கையாளரின் பணப்பை பகிர்வின் அதிகரிப்பு மற்றும் தக்கவைத்தல்
   - ஒவ்வொரு பிரிவினதும் வ.மு.இ. (PBT)
   - கருவி மற்றும் சேவை வரி

வாடிக்கையாளர் மையப்படுத்தலை கட்டியெழுப்புதல்

1. வாடிக்கையாளர் சேவை மேம்படுத்தல்கள்
   - C1/C2 வாடிக்கையாளர்களின் வளாச்சியும் C3 - C5 வாடிக்கையாளர்களின் தக்கவைத்தலும் (சிற்றளவு)
   - உயர் சாத்தியமான காலங்கடந்த வாடிக்கையாளர்கள் கையகப்படுத்தல் / மீள் ஈடுபடல் (கூட்டாண்மை / சி.ந.நி.)
   - வாடிக்கையாளர் வளர்ச்சிக்கு தே.வ.வ.
   - வாடிக்கையாளர் சிக்கல்கள் தீர்வும் திருப்புமுனை நேர மேம்பாடுகள்
   - வர்த்தகர்/விநியோகிஸ்தர் நிதியியல் வருவாய் /நடத்திகள்
   - ஏற்றுமதி வருமானத்தில் வளர்ச்சி

எதிர்காலத்திற்கு தயாராயிருத்தல்

1. இடையூறினை முந்திக்கொள்ளுதல்
   - மூலோபாயப் பங்காளிகளின் எண்ணிக்கை
   - வெளிநாட்டு கணக்கு வளாச்சி
   - வெளிநாட்டு கிளை விரிவாக்கம்
   - பணமனுப்பல் பெறுமதி / பருமனில் வளர்ச்சி
   - வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வலையமைப்பு
   - வங்கியினூடாக கொண்டுவரப்பட்ட வெ.நே.மு.கள்.
   - ஒரு சூழலமைப்பினை விருத்திசெய்தல் - கைத்தொழில்களை இனங்கண்டு உருமாற்றம் மற்றும் சகல தொடு புள்ளிகள்

முதன்மை நிலையினை இயக்குதல்	வாடிக்கையாளர் மையப்படுத்தலை கட்டியெழுப்புதல்	எதிர்காலத்திற்கு தயாராயிருத்தல்
2. தேக்கத்தின் தரம் • சொத்தின தர மேம்பாடு • செயற்திறனற்ற சொத்துக்களின் குறைப்பு	**2. சிறப்பான இலக்குவைத்தலும் மதிப்பு முன்மொழிவுகளும்** • உயர் முன்னுரிமைத் துறை வளர்ச்சி • திறைசேரி பருமன் வளர்ச்சி • வெளிநாட்டு அடிப்படையான வாடிக்கையாளர் வளர்ச்சி • வாடிக்கையாளர்களின் சராசரி பணப்பை அளவு • வழங்கப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை • மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் திருப்தி • ஏற்றுமதி வாடிக்கையாளர் வளர்ச்சி • பாரம்பரியமற்ற ஏற்றுமதி வாடிக்கையாளர் வளர்ச்சி • கடன் அட்டை வளர்ச்சி - தே.வ.வ., பருமன் மற்றும் சராசரி வரையறை	**2. வளர்ச்சி மனப்பான்மை நோக்குடைய அணியினை கட்டியெழுப்புதல்** • வெற்றிக்கான திட்டமிடல் தந்திரோபாயத்தினை அமுலாக்கல் • ம.வ. இனால் முகாமைப்படுத்தப்படும் நிறுவனப் பரவலான முன்னெடுப்புகள் • உள்ளக பிரிவுகளுக்கிடையேயான முன்னெடுப்புகளின் எண்ணிக்கை • பயிலுதல் கல்வியகத்திலிருந்து பட்டம்பெறும் ஊழியர்களின் எண்ணிக்கை • உருமாற்றலான/இயக்காற்றலான • பயிற்சித் தொகுதிகள்
3. செயற்திறனால் வழிநடத்தப்படும் கலாச்சாரம் • ஊழியர் ஈடுபாடு • ஊழியர் ஒருவருக்கான வருவாய் / செலவு • ஊழியர் திறன்மேம்படுத்தல் • வங்கிக்கு அர்த்தமுள்ள நிறுத்திவைப்பும் பங்களிப்பும் • வெளிவாரி எதிர் உள்வாரி அமர்த்தல்கள்		

எதிர்கால நிலைபேறுடமைக்கான திட்டங்கள்

எதிர்கால நிலைபேறுடமையினை உறுதிசெய்வதற்கான வங்கியின் திட்டங்கள் ஏழு தூண்களின் அடிப்படையிலாகும். அவையாவன, நிலைபேறுடைய வைப்பு வளர்ச்சி, வலுவான இடர் முகாமைத்துவம், ஒரு ஆரோக்கியமான கடன் தேக்கம், தேக்கத்தினை பன்முகப்படுத்துதல், ஊழியர்களின் பயிற்சியும் அபிவிருத்தியும், முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (கூ.ச.பொ.) என்பனவாகும்.



ஒரு நிலைபேறுடைய அடித்தளம்

நிலைபேறுடைய வைப்பு வளர்ச்சி	வலுவான இடர் முகாமைத்துவம்	ஆரோக்கியமான கடன் தேக்கம்	தேக்கத்தினை பன்முகப்படுத்தல்	பயிற்சியும் அபிவிருத்தியும்	முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு	கூ.ச.பொ.
வங்கியானது அதன் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு ஒப்பிட்டளவில் குறைந்த செலவுடைய நிதியளித்தல் மூலமாக வைப்புக்களை தொடர்ந்தும் கவரும்.	முறைமைப்படுத்தல் பணிப்புரைகள் மற்றும் சர்வதேச துறைசார் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப இடர் முகாமைத்துவ முறைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு பலப்படுத்தப்படும்.	வங்கியின் கடன் வரன்முறைகளுக்கு எதிராக கடன் தேக்கங்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படும் வேளை சகல புதிய கடன்கள் கடுமையாக மதிப்பிடப்படும்.	இளைஞர், கூட்டாண்மைகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உள்ளடங்கலான புதிய பிரிவுகளினுள் தேக்க பன்முகப்படுத்தலை வங்கி ஆரம்பித்துள்ளதுடன், இந்த நடவடிக்கையானது தேக்க இடரினை மீள் சமநிலைப் படுத்துவதற்காக எதிர்காலத்திலும் தொடரும்.	வங்கியின் சகல ஊழியர்களும் தொடர்ச்சியாக பயிற்சி அளிக்கப்படுவார்கள், இது பின்புல செயற்பாடுகள் மாத்திரமன்றி முன்புல சேவைத் தரங்களிலும் ஆகும். இவை வணிகநாம உரித்துவம் மற்றும் நற்பெயர் இடர்கள் முகாமைப் - படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஆகும்.	வங்கியானது அதன் டிஜிட்டல் மேடைகளை மேலும் மேம்படுத்தும் செயன்முறையில் உள்ளதுடன், ஊழியர் பயிற்சியுடன் சேர்த்து முழு இணக்கப்பாட்டினை இயலுமை ஆக்குவதற்காகும்.	மக்கள் வங்கியின் கூ.ச.பொ. பாரம்பரியமானது வணிகநாம அடையாளத்தின் ஒரு கூறாக தொடரப்படும்வேளை, வங்கியானது ஒரு நவீன நிதியியல் சேவைகள் வழங்குநராக உருமாற்றமடையும்.

எமது மூலோபாயம்

செயற்திறனை மேம்படுத்துவதற்கு குறுங்கால மற்றம் மத்திய கால நடவடிக்கைகள்

குறுங்கால நடவடிக்கைகள்

1. **செலவு உகப்பாக்கம்:**
செயற்பாட்டு செலவினங்களில் ஒரு முழுமையான மீளாய்வினை நடாத்தி உடனடியாக செலவுச் சேமிப்பு பிரிவுகளை இனங்காணுதல்.

2. **டிஜிட்டல் சேவை மேம்பாடு:**
வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் கொடுக்கல் வாங்கல்களை அதிகரிப்பதற்காக டிஜிட்டல் வங்கியியல் சேவைகளின் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பினை விரைவாக்கல்.

3. **கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரித்தல்:**
கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரிப்பதற்கு கட்டண கட்டமைப்புகளை மீளாய்வுசெய்து உகப்பாக்குதல்

4. **கடன் இடர் முகாமைத்துவத்தினை மேம்படுத்தல்:**
கடன் தேக்கத்தின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக கடன் இடர் முகாமைத்துவத்தினை பலப்படுத்துதல்.

5. **திரவத்தன்மை முகாமைத்துவம்:**
வங்கி அதன் கடப்பாடுகளை சந்திப்பதற்கு அவசியமான நிதியினை கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்காக குறுங்கால திரவத்தன்மை முகாமைப்படுத்தலை மேம்படுத்துதல்.

திரவத்தன்மைக்கு இலாபகரத்தன்மைக்கு இடையில் சமநிலையினை உகப்பாக்குதல்.

6. **ஊழியர் பயிற்சியும் ஈடுபாடும்:**
வங்கி ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக பயிற்சித் திட்டங்களில் முதலீடு செய்தல் குறிப்பாக வாடிக்கையாளர் சேவை மற்றும் டிஜிட்டல் வங்கியியல்.

ஊழியர் ஊக்கமளித்தல் மற்றும் ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்

7. **தொழில்நுட்பத்தினை மேம்படுத்தல்:**
மென்பொருள் மேம்படுத்தல் போன்ற நவீன தொழில்நுட்பங்களை இனங்கண்டு அமுலாக்குதல், இது முறையின் செயற்திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காகும்.

8. **முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு:**
முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் கடுமையாக கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிசெய்தல் மற்றம் ஏதேனும் இணக்கப்பாட்டு சிக்கல்களை உடனடியாக விளித்துரைத்தல்.

மத்திய கால நடவடிக்கைகள்

1. **தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை தரமுயர்த்தல்**
வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வினை அறிமுகப்படுத்துவதில் அளவிடுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகும்.

2. **டிஜிட்டல் உருமாற்ற வரைபடம்:**
இயங்கலை வங்கியியல், மொபைல் வங்கியியல் மற்றும் டிஜிட்டல் வாடிக்கையாளர் அனுபவங்கள போன்ற பிரிவுகளை உள்ளடக்கிய டிஜிட்டல் உருமாற்றலுக்கான ஒரு விரிவான வரைபடத்தினை உருவாக்குதல்.

3. **வாடிக்கையாளர் அனுபவ மேம்பாடு:**
சேவை விநியோகம், பதிலளிக்கும் நேரம் மற்றும் முறையீடு தீர்த்தல் உள்ளடங்கலான ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துவதற்கு மத்திய கால முன்னெடுப்புகளை அமுலாக்கல்.

வாடிக்கையாளர் பின்னூட்ட பொறிமுறைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு தரவுகளை பயன்படுத்தல்.

4. **இடர் முகாமைத்துவத்தினை பலப்படுத்தல்:**
கடன், சந்தை, செயற்பாடு மற்றும் இணக்கப்பாடு இடர்களை உள்ளடக்கும் ஒரு விரிவான இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை விருத்திசெய்து அமுலாக்கல்.

5. **கிளை பகுத்தறிவாக்கம்**
கினை வலையமைப்பில் ஒரு முழுமையான மீளாய்வினை நடாத்தி மாற்றமடையும் வாடிக்கையாளர் நடத்தைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் அதன் கட்டமைப்பினை உகப்பாக்குதல்.

6. **முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு உத்தமம்:**
இணக்கப்பாட்டு அம்சங்களை உறுதிசெய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

7. **செயற்திறன் கண்காணிப்பும் அறிக்கையிடலும்:**
மூலோபாய இலக்குகளுக்கு எதிராக முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்காக செயற்திறன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் முறைகளை அமுலாக்கல்.

கொள்கைகளும் நடைமுறைகளும் GRI 2-23

GRI வெளிப்படுத்தல்	வங்கியின் பதில்	UNSDG கடப்பாடுகள்
பொறுப்பான வணிக நடத்தைக்கான கொள்கை கடப்பாடுகள்	• பணிப்பாளர்கள் சபையானது கூ.ச.பொ. இனை விருத்திசெய்வதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளியாயுள்ளவேளை, கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவமானது கொள்கை வழிகாட்டிகளுக்கமைய அன் நிறைவேற்றலுக்கும் நிதி ஒதுக்கீட்டிற்கும் பொறப்பாளியாயுள்ளது. • ஒரு நிலைபேறுடைய அறிக்கையிடல் வரம்புறுகையானது நிறுவப்பட்டுள்ளது (ஒரு மத்திய நிலைபேறுடைய குழு, பிராந்திய நிலைபேறுடைய அதிகாரிகள், கிளை / பிரிவு நிலைபேறுடைய அதிகாரிகள்). வரம்புறுகையானது ஒரு முக்கிய தகவல் திரட்டுதல் செயன்முறையினை உள்ளடக்குகின்றது.	

சமூக நிலைபேறுடமை

சமூக நல்வாழ்வினை ஊக்கமளித்தல்: வங்கி தேசிய நல்வாழ்வு மற்றும் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் அரசாங்கத்திற்கு துணையளிப்புடன், அதன் சொந்த கூ.ச.பொ. திட்டங்களையும் நடாத்துகின்றது.

பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் சமய அபிவிருத்தி: வங்கியானது கலை, கலாச்சாரம் மற்றும் சமயங்களை அது செயலாற்றும் சமூகங்களினுள் துணையளிக்கின்றது.

பன்முகத்தன்மை மற்றும் பாலின சமத்துவம்: வங்கியானது ஒரு உள்ளடக்கமான ஆட்களை சேர்த்தல் கொள்கையினைக் கொண்டுள்ளதுடன், நாட்டின் சகல பகுதிகளிலிருந்து சகல சமூகபொருளாதார குழுக்களிலிருந்து மக்களை பணிக்கமர்த்துகின்றது. பாலின சமநிலையானது பெருமைக்குரிய பகுதிகளில் முக்கியமானதாகும் என்பதுடன் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் 39.6மூ பெண்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள்.

சூழல் நிலைபேறுடமை

கட்டிடங்கள்: வங்கியானது அனைத்து புதிய கட்டிடங்களுக்கும் நடைமுறையிலுள்ள கட்டிடங்களை புதுப்பிக்கும்போது பசுமை கட்டிட நியமங்களை கடைப்பிடித்துள்ளது. டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வங்கியியல் திட்டத்தின் கிழ் பெயரிடப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட கிளைகள் கார்பன் நடுநிலையானவையாக சான்றளிக்கப்படும், சூரிய சக்தி உருவாக்கல் அமைப்புமுறைகள் LEED/ GREENSL/ CIOB பசுமைக் குறி சான்றளித்தல் வழிகாட்டிகளின் பிரகாரம் கட்டிடங்களினுள் ஒருங்கிணைக்கப்படும். அனைத்து ஒப்பந்ததாரர்களும் புதிய முக்கியமான கிளைகளுக்கு LEED/ GREENSL/ CIOB பசுமைக் குறி சான்றளித்தலை பின்பற்றும் தேவையைக் கொண்டிருப்பதுடன் இத்தேவைப்பாடுகளுடன் அவர்களது பொருட்களும் இணங்குதல் வேண்டும்.

GRI வெளிப்படுத்தல்	வங்கியின் பதில்	UNSDG கடப்பாடுகள்

டிஜிட்டல்மயமாக்கல்: அநேகமான அதன் செயற்பாடுகளில் தாள்களற்ற வங்கியியலின் அறிமுகத்துடன், மக்கள் வங்கி பசுமையான வங்கி எனும் நற்பெயரினை உழைத்துள்ளது:

- காசு மற்றும் காசோலை வைப்பு இயந்திரங்கள் (CDM)
- பயன்பாட்டு பட்டியல் கொடுப்பனவுகளுக்கு KIOSK
- நாட்டில் பரந்தளவிலான ATM வலையமைப்பு
- தாள்களற்ற கணக்குகள் திறத்தல் மற்றும் கணக்குகளுக்கு இ-கூற்றுக்கள்
- தாள்களற்ற சூழலில் கடன் செயன்முறைப்படுத்தல்
- இணைய, மொபைல், மற்றும் இணையம் அடிப்படையிலான வங்கியியல்
- செலவு மற்றும் கடன் அட்டைகள்
- 24/7 பீபள்ஸ் அழைப்பு மையம்

வாடிக்கையாளர்கள்: பின்வருவன உள்ளடங்கலாக பசுமை வங்கியியல் எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டது:

- ஒரு தாள்களற்ற செயற்பாடாக விரைவு வங்கியியலினூடாக கணக்குகளை திறத்தல்
- கணக்கு வைத்திருப்பவர்களினால் வேண்டப்படக்கூடிய இ- கூற்றுக்கள்
- SMS மற்றும் இணையவழி வங்கியியல்
- செலவு அட்டைகள் - காசற்ற ஒரு சமூகத்திற்கான நாட்டம்
- புதிய வாடிக்கையாளர்களுக்கான விரைவு வங்கியியலை வழங்குதல்
- CDM-காசு வைப்பிலிடுதல், ATM-காசு மீள்பெறுகைகள் மற்றம் Kiosk-பட்டியல் கொடுப்பனவுகள்
- குறைவான வட்டி வீதங்களுடன் பசுமை கடன் திட்டம்

ஊழியர்கள்: சூரிய சக்தி அமைப்புமுறைகளின் கொள்வனவுக்காக சலுகையிலான கடன்களை பெற்றுக்கொள்வதற்கு ஊழியர்கள் ஊக்கப்படுத்துகின்றார்கள், சூழல் தோழமையான கட்டுமான முறைகளை பயன்படுத்துதல் மற்றும் இலத்திரணியல் அல்லது கலப்பு வாகனங்களின் கொள்வனவு. உள்ளக மற்றும் வாடிக்கையாளர் தொடர்பாடலுக்காக இலத்திரணியல் ஆவணப்படுத்தல் மற்றம் தொடர்பாடல் முறைகளுக்கு மாற்றுவதற்கு அவர்கள் ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.

ஏனைய நடவடிக்கைகள்

- **பசுமை வங்கியியல் முன்னெடுப்புகள்:** தாள்களற்ற வங்கியியல், இயற்கை வளங்களின் குறைவான பயன்பாடு போன்ற தாள்களற்ற வங்கியியல் போன்ற வங்கியியல் செயற்பாடுகளில் சூழல் நிலைபேறுடமைக்கு கொள்கைள் மற்றும் நடைமுறைகளை அமுலாக்கல்.
- **புதுப்பிக்கத்தக்க வலு பயன்பாடு:** வங்கியின் செயற்பாடுகள் மற்றும் குறைவான கார்பன் உமிழ்வுகளுக்காக, சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தன வலு மூலங்களில் முதலீடு செய்தல்.
- **கார்பன் அடிச்சுவட்டின் குறைப்பு:** கார்பன் அடிச்சுவட்டினை அளவிடுதல் மற்றும் வங்கியின் செயற்பாடுகளில் கார்பன் அடிச்சுவட்டினை குறைத்தல், இது போக்குவரத்து, வலுப் பயன்பாடு மற்றும் கழிவு முகாமைத்துவம் உள்ளடங்கலாக ஆகும்.
- **தாள்களற்ற வங்கியியல் முன்னெடுப்புகள்:** தாள்களின் பயன்பாட்டினை குறைப்பதற்கு டிஜிட்டல் வங்கியியல் சேவைகளை ஊக்குவித்தல்
- **ஊழியர் சூழல் விழிப்புணர்வு:** தொழில் மற்றும் அர்களது தனிப்பட்ட வாழ்வில் நிலைபேறுடைய நடைமுறைகளில் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.
- **சூழல் தோழமையான போக்குவரத்து:** வங்கி தொடர்பான நடவடிக்கைகளுக்கு சூழல் தோழமையான போக்குவரத்து தெரிவுகளின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்.
- **சூழல் ஒழுங்கமைப்புகளுடன் பங்குடைமைகள்:** சூழல் ஒழுங்கமைப்புகளுடன் பங்குடைமைகளை நிறுவுதல் மற்றும் சூழல் நிலைபேறுடமை மற்றும் பாதுகாப்பினை ஊக்குவிப்பதில் பங்கேற்றல்.

பொருளாதார நிலைபேறுடமை

- **பசுமை நிதியளித்தல்:** புதுப்பிக்கத்தக வலு, வலு பயனுறுதித்தன்மை, மற்றும் சூழல் தோழமையான முன்னெடுப்புகள் போன்ற நிலைபேறுடைய மற்றும் சூழல் தோழமையான திட்டங்களை ஊக்குவித்தலும் நிதியளித்தலும்.
- **நுண்நிதியளித்தல் மற்றம் சி.ந.நி. உறுதுணை:** அடிமட்ட நிலையிலுள்ள நுண். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு நிதியியல் கருவிகள், பொருளாதார வளர்ச்சியினை வளர்ப்பதற்கான நிதியியல் அறிவு மேம்படுத்தலக்களை வழங்குவதன் மூலம் உறுதுணையினை பலப்படுத்துதல்.
- **நிதியியல் அறிவு மேம்படுத்தல் திட்டங்கள்:** குறைசேவையாற்றப்பட்ட சனத்தொகையினை எட்டுவதற்கு நிதியியல் உள்ளடக்க முன்னெடுப்புகளை விரிவாக்குதல்.
- **டிஜிட்டல் நிதியியல் சேவைகள்:** வினைத்திறனை அதிகரித்தல், செலவுகளைக் குறைத்தல் மற்றும் நிதியியல் அணுகலை மேம்படுத்துதல், விசேடமாக தொலைவிலுள்ள மற்றும் கிராமப் புறங்களில், ஆகியவற்றுக்கு டிஜிட்டல் நிதியியல் சேவைளின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்.
- **கிராமிய மற்றும் விவசாய அபிவிருத்தி:** சிறப்பு கடன் திட்டங்களினூடாக விவசாய அபிவிருத்திக்கு துணையளித்தல்.
- **சமூக முதலீட்டு திட்டங்கள்:** ஆரோக்கிய மருத்துவமனைகள், பாடசாலைகளுக்கு வசதியளித்தல் மற்றும ஏனைய அத்தியாவசிய உட்கட்டமைப்பு போன்ற சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல், இது உள்ளூர் சமூகங்களின் நல்வாழ்விற்கு பங்களிப்பு செய்வதற்காகும்.
- **கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR):** கல்வி, சுகாதாரம் மற்றும் சூழல் பாதகாப்பு உள்ளடங்கலான சமூகத் தேவைகளை விளித்துரைக்கும் கூ.ச.பொ. முன்னெடுப்புகளில் ஈடுபடுதல், இது சமூக பொருளாதார நல்வாழ்விற்கான கடப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது.
- **நெறிமுறையான வங்கியியல் நடைமுறைகள்:** வங்கியியல் முறையில் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை கட்டியெழுப்புவதற்கு நெறிமுறையான வங்கியியல் நடைமுறைகளை நிலைநாட்டுதல், வெளிப்படைத்தன்மையான, நியாயமான மற்றும் பொறுப்பான கடன் வழங்கலை ஊக்குவித்தல்.



எமது பெறுமதி உருவாக்கல் மாதிரியும் மூலதன மீதிகளும்

31 டிசம்பர் 2022 உள்ளவாறான உள்ளீடுகள்

நிதியியல் மூலதனம்
தே.வ.வ. ரூ. **75.8 பில்.**
கட்டண வருமானம் ரூ. **16.4 பில்.**
ப.உ. ரூ. **17,192**
பதேசொபெ ரூ. **145,294**
செலுத்திய வரிகள் ரூ. **13.9 பில்.**
மூலதனப் போதுமை விகிதம் **16.3%**

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்
தலைமைக் காரியாலய கட்டிடம் :
சதவீத நிறைவு **21.3%**
ஆட்பட்ட செலவினம் ரூ. **2,204.2 மில்.**
கிளை புத்தாக்கச் செலவு ரூ.**211.3 மில்.**

அறிவுசார் மூலதனம்
வணிகநாம உரித்துவச் சுட்டி **4.0**
வாடிக்கையாளர் திருப்தி
90% இற்கு மேல்
விட்ச் லங்கா கிரடிட் ரேட்டிங் A(lka)

மனித மூலதனம்
மொத்த ஊழியர்கள் **7,377**
40,970 மணித். டிஜிட்டல் பயிற்சி
பதவியுயர்வுகளின் எண்ணிக்கை **33**
ஊழியர் நிறுத்திவைத்தல் **97.6%**
4,530 பெண் ஊழியர்கள்

முதலீட்டாளர் மூலதனம்
உரித்துவ மூலதனம் ரூ.**145.3 பில்.**
ROA **0.8%**
ROE **12.2%**

வாடிக்கையாளர் மூலதனம்
வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை
14.7 மில். மேல்
சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய வாடிக்கையாளர்கள் **682,300** மேல்
73% ஆன கொடுக்கல் வாங்கல்கள் டிஜிட்டல் ரீதியாக நடாத்தப்பட்டன
வாடிக்கையாளர் தொடு புள்ளிகளின் எண்ணிக்கை **2,301**

வணிகப் பங்காளி மூலதனம்
வழங்குநர்களின் எண்ணிக்கை **258**
தொடர்பு வங்கிகளின் எண்ணிக்கை **43**
கொள்வனவுகளின் மொத்த பெறுமதி
ரூ. **15.9 பில்.**
வாஸ்ட்ரோ முகவர்களின் எண்ணிக்கை
82

சமூக மூலதனம்
சமூகத் திட்டங்களின் எண்ணிக்கை **44**
சமூகத் திட்டங்களிலான செலவினம் ரூ. **38.2 மில்.**

இயற்கை மூலனதம்
சூரிய சக்தியைப் பயன்படுத்தும் கிளைகள் **20**
டிஜிட்டல் ரீதியாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை **2.7 மில்.**

செயற்பாடுகள்

வணிக அலகுகள்

- சிற்றளவு வங்கியியல்
- வெளிநாட்டு வங்கியியல்
- கூட்டாண்மை வங்கியியல்
- சர்வதேச வங்கியியல்
- நிறுவன வங்கியியல்
- திறைசேரி

நிதியியல் இடைநிலை
பல்வேறு பங்காளிகளிடையே இடையீட்டாளராக செயற்படுதல்



துணைச் சேவைகள்

- மனித வளங்கள்
- தகவல் தொழில்நுட்பம்
- கொள்முதல்
- நிர்வாகம்
- சந்தைப்படுத்தலும் தொடர்பாடலும்
- இடர் முகாமைத்துவமும் இணக்கப்பாடும்
- தந்திரோபாயத் திட்டமிடல்
- நிதியியல் முகாமைத்துவம்
- மூலதன முகாமைத்துவம்

முதிர்வு உருமாற்றம்
குறுங்கால நிதியினைப் பயன்படுத்தி நீண்டகால சொத்துக்களுக்கு நிதியளித்தல்



31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான வெளியீடுகள்

நிதியியல் மூலதனம்
தே.வ.வ. ரூ. **54.3 பில்.**
கட்டண வருமானம் ரூ.**13.8 பில்.**
ப.உ. ரூ. **10,083**
ப.தே.சொ.பெ. ரூ.**160,059**
செலுத்திய வரி ரூ.**13.9 பில்.**
மூலதனப் போதுமை விகிதம் **17.4%**

வாடிக்கையாளர் மூலதனம்
வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை **15 மில். இற்கு மேல்**
சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய வாடிக்கையாளர்கள் **812,000** மேல்
ரூ.1.1 பில்.பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் டிஜிட்டல் ரீதியாக நடாத்தப்பட்டன
புதிய வாடிக்கையாளர் தொடு புள்ளிகள் **2,241**

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்
தலைமைக் காரியாலய கட்டிடம்: சதவீத நிறைவு **52.9%**
ஆட்பட்ட செலவினம் ரூ. **3,157.1 மில்.**
வங்கி புத்தாக்கத்தின் கிரயம்
ரூ. 270.96 மில்.

வணிகப் பங்காளி மூலதனம்
தொடர்பு வங்கிகளின் எண்ணிக்கை **44**
கொள்வனவுகளின் மொத்த பெறுமதி **ரூ. 21.4 பில்.**
வொஸ்ட்ரோ முகவர்களின் எண்ணிக்கை **80**

அறிவுசார் மூலதனம்
வணிகநாம உரித்துவச் சுட்டி **3.8**
வாடிக்கையாளர் திருப்தி **90%** இற்கு மேல்
விட்ச் லங்கா கடன் தரம் **A(lka)**

முதலீட்டாளர் மூலதனம்
உரித்துவ மூலதனம் ரூ.**160.1 பில்.**
ROA **0.5%**
ROE **6.6%**

சமூக மூலதனம்
சமூகத் திட்டங்களின் எண்ணிக்கை **21**
சமூகத் திட்டங்களிலான செலவு
ரூ. 40.7 மில்.

மனித மூலதனம்
மொத்த ஊழியர்கள் **7,656**
29,468 மணித். டிஜிட்டல் பயிற்சி
பதவியுயர்வுகளின் எண்ணிக்கை **239**
ஊழியர் நிறுத்திவைத்தல்**96.4%**
4,662 female employees

இயற்கை மூலதனம்
சூரிய சக்தியை பயன்படுத்தும் கிளைகள **20**
டிஜிட்டல் ரீதியாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை **3.8 மில்.**

நிலைபேறுடமைக்கான கடப்பாடு

கொள்கை கடப்பாடுகளை உட்புகுத்தல் GRI 2-24

பணிப்பாளர்கள் சபையானது கூட்டாண்மை நிலைபேறுடமை வரம்புறுகையினை விருத்திசெய்வதற்கு பொறுப்பாயுள்ளவேளை, கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவமானது கொள்கை வழிகாட்டிகளுக்கமை நிறைவேற்றலுக்கும் நிதி ஒதுக்கீட்டிற்கும் பொறுப்பாயுள்ளன. இது நிலைபேறுடைய கருத்தாக்கங்கள் முகாமைத்துவத்தின் உயர்ந்த மட்டத்திலான உரிமையினை உறுதிசெய்கின்றது.

மக்கள் வங்கி ஊழியர்களினூடாக கொள்கை கடப்பாடுகள் உட்புகுத்தப்படுவதுடன், இவர்களே கொள்கை முன்னெடுப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாயுள்ள முதன்மை பங்காளிகளாவார்கள்.

சூழல், சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கங்களை திருத்தம் செய்யும் செயன்முறை (மனக்குறை பொறிமுறைகள்) GRI 2-25

வாடிக்கையாளர் குறைகளை கையாளுதல்: ஏதேனும் வாடிக்கையாளர் குறைகளுக்கு உடனடி கவனிப்பினை வழங்குவதும் அவசியமானபோது உடனடி பரிகாரங்களை வழங்குவதும் வங்கியின் கொள்கையாகும். நாம் ஒரு குறைகள் கையாளுதல் செயன்முறையினை நிறுவியுள்ளதுடன் இது பயனுறுதியாகவும் ஆற்றலுடனும் செயற்படுகின்றது. எமது செயன்முறையில் ஏதேனும் அதிருப்தி காணப்படுமாயின், வாடிக்கையாளர் அப்பிரச்சனையினை நிதியியல் குறைதீர்ப்பாளருக்கு கொண்டு செல்லக்கூடிய தெரிவு காணப்படுகின்றது. 24 மணித்தியால வாடிக்கையாளர் சேவை துரிதஅழைப்பு இலக்கம் 1961 மற்றும் தனிப்பயனுடைய வாடிக்கையாளர் சேவை கையாளுதல் அலகு ஊடாக முறையீடுகள் பெறப்படுவதுடன் உடனடியாக செயலாற்றப்படுகின்றன.

ஊழியர் குறைகள் கையாளுதல்: ஊழியர்கள் ஏதேனும் குறைகளை வங்கியின் மனித வளங்கள் பிரிவினை நேரடியாக தொடர்பு கொள்வதன் மூலம் ஊக்குவிக்கும் வெளிப்படையான பொறிமுறை காணப்படுகின்றது.

எதிர்மறையான சூழல், சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள் தொடர்பாக தனிநபர்கள் ஆலோசனையினை நாடுவதற்கும் கரிசனைகளை எழுப்புவதற்குமான பொறிமுறைகள் GRI 2-26

ஒரு உட்குறை உரைப்போர் கொள்கை முறையீடுகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஒரு பணிப்பாளர் செயலாற்றப்படுவதுடன், ஊழியரை பாதுகாப்பதற்காக அநாமதய உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது. பின்வரும் பிரச்சனைகள் நேரடியாக உடனடியான மேற்பார்வையாளருக்கு அல்லது சபை கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடப்படலாம்.

i. ஒழுக்காற்று கோவையினை மீறுதல்

ii. சட்ட / முறைமைப்படுத்தல் கடப்பாட்டுடன் இணக்கப்பாடு காணத் தவறுதல்

iii. நீதி வலுவல்

iv. நிதியியல் ஒழுங்கீனங்கள்

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு GRI 2-27

வங்கியானது 2023 இல் ரூபா 7 மில்லியன் அபராத்திற்கு முகங்கொடுத்தது. இது கொடுக்கல் வாங்கல் கண்காணிப்பு அமைப்புமுறையில் (AML முறை) ஒரு தவறின் காரணமாக நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணக்கப்பாடு காணப்படாமைக்காகும். அமைப்பு முறையானது முழுமையான துருவலை நடாத்தத் தவறியமை, அரசியல் வெளிப்பாடுடைய நபர்களை இனங்காண்பதில் சில இணக்கப்பாடற்ற சந்தர்ப்பங்கள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட கணக்குகளில் கொடுக்கல் வாங்கல்களை கட்டுப்படுத்துவதற்கு தவறியமை போன்றவை.

எவ்வாறாயினும், டிசம்பர் 2023 இன் இறுதியில், வங்கியானது அத்தகைய நிகழ்வுகள் மீண்டும் நிகழ்வதனை தடுக்கும் செயன்முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், சிறந்த இணக்கப்பாடு மற்றும் மிகவும் கடுமையான கண்காணிப்பினை அமுலாக்கும் செயன்முறைக்காக அமைப்புமுறையிலான மாற்றங்கள் நடந்தவண்ணமுள்ளன.

மக்கள் வங்கி வேறு ஏதேனும் பொருத்தமான பணிப்புரை அல்லது ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடின்மைக்காக ஏதேனும் மேலதிக அபராதங்களுக்கு முகங்கொடுக்கவில்லை.

சங்கங்களில் அங்கத்துவம் GRI 2-28

வங்கி பின்வரும் ஒழுங்கமைப்புகளில் அங்கத்துவத்தினை வைத்துள்ளது:

- இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்
- இலங்கை வர்த்தகச் சம்மேளனம்
- வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை வங்கியாளர்கள் சங்கம்
- வங்கியியல் துறை இடர் தொழில்வல்லுநர்கள் சங்கம் - இலங்கை
- ஆசிய பசுபிக் கிராமிய மற்றும் விவசாய கடன் சங்கம்
- வங்கியின் இணக்கப்பாட்டு அதிகாரிகள் சங்கம், இலங்கை
- வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) நிதியியல் குறை தீர்ப்பாளர் இலங்கை
- வங்கியாளர்களின் தீர்வகச் சங்கம்
- இலங்கையின் முதலாளிமார் சம்மேளனம்
- முதன்மை வர்த்தகர்கள் சங்கம் (பி.பொ.மு. - திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கியியலின் உறுதிப்பாட்டிற்கு உட்பட்டதாகும்)
- இலங்கை பொரெக்ஸ் சங்கம்



மக்களின் வளர்ச்சி

நிலைத்திருக்கும் பெறுமதியினை இயக்குவதில், மக்கள் வங்கி அதன் பங்காளிகளது அக்கறைகளை பாதுகாப்பது மாத்திரமன்றி தேசிய செழிப்புடைய ஒரு புதிய யுகத்திற்கு இட்டுச்செல்வதில் நிலையுறுதியாக உள்ளது.

முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

68 நிதியியல் தலைவரின் மீளாய்வு| **74** வணிகப் பிரிவு மீளாய்வுகள் | **74** சிற்றளவு வங்கியியல் | **76** நிறுவன வங்கியியல் | **78** பெறுநிறுவன வங்கியியல் | **80** திறைசேரி | **82** வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் | **84** சர்வதேச வங்கியியல் | **86** த.தொ. மற்றும் டிஜிட்டல் வங்கியியல் | **88** சந்தைப்படுத்தல் | **90** கடன் அட்டைகள் | **92** உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் | **96** அறிவுசார் மூலதனம் | **104** மனித மூலதனம் | **114** சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - **114** வாடிக்கையாளர் மூலதனம், **120** வணிகப் பங்காளி மூலதனம், **125** முதலீட்டாளர் மூலதனம், **129** சமூக மூலதனம் | **134** இயற்கை மூலதனம்

நிதியியல் தலைவரின் மீளாய்வு

கடந்த ஐந்து வருடங்களாக, இலங்கை கணிசமான பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளதுடன் இவை 2019 இற்கும் 2022 இற்கும் இடையே சுருக்கங்களையுடைய நான்கு காலங்களினால் வகைப்படுத்தப்படுகின்றன. பொருளாதார வீழ்ச்சியானது 2023 இன் முதல் பாதிக்கு தொடர்ந்ததுடன், இறுதி அரைவாசியிலேயே மீட்சிக்கான குறிகாட்டிகள் வெளித்தோன்றின.



மக்கள் வங்கி 2023 முழுவதும் சகல முறைமைப்படுத்தல் நிதியியல் ஸ்திரத்தன்மை தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு கண்டுள்ளது.

- **மூலதனப் போதுமை விகிதம்:** வங்கியின் அடுக்கு 1 மூலதனம் 2022 இல் 11.9% உடன் ஒப்பிடும்போது 2023 இன் இறுதியில் 12.4% ஆக காணப்பட்டதுடன் ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் விகிதம் 9.5% ஆகும். மொத்த மூலதனப் போதுமை விகிதமானது 2022 இல் காணப்பட்ட 16.3% உடன் ஒப்பிடும்போது 2023 இல் 17.4% ஆக காணப்பட்டதுடன் இது முறைமைப்படுத்தல் ஆகக்குறைந்த விகிதமான 13.5% இனை விஞ்சிக் காணப்பட்டது.

- **திரவச் சொத்துக்கள் விகிதம்:** வங்கியின் மொத்த திரவச் சொத்துக்கள் விகிதமானது 2022 இல் காணப்பட்ட 21.3% இலிருந்து 2023 இல் கணிசமாக உயர்வடைந்து 37.4% ஆக காணப்பட்டது. உள்ளூர் வங்கியியல் அலகானது (உ.வ.அ.) 2022 இல் காணப்பட்ட 21.4% உடன் ஒப்பிடும்போது 2023 இல் 37.4% ஆக பராமரிக்கப்பட்டது. கரைகடந்த வங்கியியல் அலகானது (க.வ.அ.) 2022 இல் காணப்பட்ட 20.1% உடன் ஒப்பிடும்போது 2023 இல் 38.4% ஆக காணப்பட்டதுடன், இவை யாவும் ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் தேவைப்பாடான 20.0% இனை இலகுவமக விஞ்சியியிருந்தன.

- **திரவத்தன்மை காப்பீட்டு விகிதம்:** 2022 இன் இறுதியில் காணப்பட்ட ரூபாவுக்கான திரவத்தன்மை காப்பீட்டு விகிதமான 213.1% இலிருந்து 2023 இன் இறுதியியல் 256.7% ஆக உயர்வடைந்தது. அனைத்து நாணயங்களுக்கும் 2022 இல் 119.5% ஆக காணப்பட்ட இந்த விகிதமானது 2023 இல் 207.9% ஆக காணப்பட்டதுடன் இவை இரண்டுமே ரூபா மற்றும் அனைத்து நாணயங்களுக்குமான ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் விகிதமான 100.0% இனை விஞ்சிக் காணப்பட்டன.

- **கடன் மூலதனப் பயன் விகிதம்:** 2023 இன் இறுதியியல் கடன் மூலதனப் பயன் விகிதமானது 4.2% ஆகக் காணப்பட்டவேளை இது 2022 இல் காணப்பட்ட 3.8% இலிருந்து சற்று அதிகரித்துள்ளது. ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் விகிதம் 3% ஆக காணப்பட்டது.

- **தேறிய நிலையான நிதியளித்தல் விகிதம்:** 2023 நிதியாண்டின் இறுதியில் தேறிய நிலையான நிதியளித்தல் விகிதமானது 164.3% ஆகக் காணப்பட்டவேளை இது 2022 இல் காணப்பட்ட 117.1% இலிருந்து கணிசமாக அதிகரித்துள்ளது. ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் விகிதம் 100% ஆக காணப்பட்டது.

நிதியியல் தலைவரின் நிதியியல் மீளாய்வு

நிதியாண்டு 2023 இற்கான வங்கியின் செயற்திறனை மீளாய்வு செய்வதில், இலங்கையின் பொருளாதார நிலைத்தோற்றத்தில் ஒரு அரச நிறுவனமாக வங்கியின் பங்கினை சூழ்நிலைப்படுத்துவது முக்கியமானதாகும். கடந்த ஐந்து வருடங்களாக, இலங்கை கணிசமான பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளதுடன் இவை 2019 இற்கும் 2022 இற்கும் இடையே சுருக்கங்களையுடைய நான்கு காலங்களினால் வகைப்படுத்தப்படுகின்றன. பொருளாதார வீழ்ச்சியானது 2023 இன் முதல் பாதிக்கு தொடர்ந்ததுடன், இறுதி

அரைவாசியிலேயே மீட்சிக்கான குறிகாட்டிகள் வெளித்தோன்றின. இந்த சுருக்கங்களின் திரண்ட விளைவானது கணிசமாகக் காணப்பட்டதுடன், இவை பொருளாதார முன்னேற்றத்தை ஏறத்தாழ ஒரு தசாப்தத்திற்கு பின்னோக்கிக் கொண்டுசென்றதுடன், நடைமுறை திகதியானது 2024 இன் ஆரம்பமாக இருந்தாலும், இவை 2014 இல் கடைசியாக கண்ட மட்டங்களை நினைவூட்டின. இதன் விளைவாக ஒரு அரச வங்கியாக, பொருளாதார நெருக்கடிகளின்போது உயர்ந்த சுமையினை தாங்கியுள்ளதுடன், ஆழ்ந்த பொருளாதார நட்டங்களின் எதிர்விளைவுகளை சமாளிக்கும்வேளை அதன் கடப்பாட்டினை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் நிறைவேற்றவேண்டிய நோக்கினைக் கொண்டிருந்தது.


மார்ச் 2020 இல் தொடங்கிய கோவிட்-19 முடக்கங்கள், இலங்கை அரசாங்கத்தின் வருமான இழப்புகளை மேலும் அதிகரித்ததுடன், வருமானமானது வரி விதிகளிலான திருத்தங்களிலிருந்து ஏற்கனவே எழுந்த நட்டங்களான ஏறத்தாழ ரூபா 600 பில்லியனுடன் சேர்க்கப்பட்டது. இதன் விளைவாக 1 ஜனவரி 2020 இற்கும் 31 மார்ச் 2022 இற்கும் இடையில் வங்கியானது அரசாங்கத்திற்கு ரூபா 720 பில்லியனை விஞ்சிய தொகையை கடனாக அளித்தது, இது அத்தியாவசிய பொதுமக்களுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளின் தடையற்ற கிடைக்கப்பெறுதலை உறுதிசெய்வதற்காகும். இந்த கணிசமான தொகையானது நாட்டிலுள்ள பல சக வங்கிகளின் ஐந்தொகையினை விஞ்சியுள்ளது. மேலும், ஜூன் 2022 இல் இறையாண்மைத் தரமிறக்கலானது வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்காக அரசாங்கத்தின் ஆற்றலை தடுத்ததுடன், இது அரச உடைமை வங்கிகளில் அரச நிதியளித்தல் சுமையினை விசாலமாக்கியது. இந்த சவால்மிக்க காலம் பூராவும் வங்கி எரிபொருள், உலைக்கள எண்ணெய் போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நாணயக் கடிதங்களை திறப்பதன் மூலம் வசதியளிப்பதில் உறுதியாயிருந்ததுடன், இவை வீடுகளுக்கும் கைத்தொழில்களுக்கும் முக்கியமானவை என்பதுடன், முக்கியமான சேவைகளான தண்ணீர் விநியோகம் மற்றும் வைத்தியசாலை செயற்பாடுகளை நிலைநிறுத்துவதற்கும் ஆகும். வங்கியினால் சுமக்கப்பட்ட இந்த தனித்துவமான சுமையானது அதன் விரிவான பொறுப்பாணையினை கோடிட்டுக்காட்டுவதுடன், அரசாங்கத்தின் குறிக்கோள்களுடன் இணைந்து சமூகத்தின் பரவலான அக்கறைக்கு சேவையாற்றும் அதிகப்படியான பொறுப்பினையும் காண்பிக்கின்றது.

2022 இல் நிலைபேறான மற்றும் கணிசமான அரசாங்கத்திற்கான நிதி வழங்கலின் காரணமாக வங்கியானது உள்ளூர் நாணயம் மற்றும் அந்நிய செலாவணியில் திரவத்தன்மை பற்றாக்குறைகளைக்கு முகங்கொடுத்தது. இதன் விளைவாக, 2023 ஆனது வங்கிக்கு முதன்மையாக மீட்டல் மற்றும் ஒருங்கிணைப்பிற்காக வகைப்படுத்தப்பட்டதாக காணப்பட்டது. இக்காலத்தின்போது, . நாட்டின் ஒட்டுமொத்த நிதியியல் அமைப்புமுறையின் தொடரும் ஸ்திரத்தன்மையினை நிலைநிறுத்துவதற்காக ஒதுக்கங்களை மீள்நிரப்புதல் மற்றும் தேக்கத்தை வலுவளித்தல் முதன்மையான முன்னிறுத்தமாகக் காணப்பட்டது. இந்த மூலோபாயமான அணுகுமுறையானது எதிர்கால பொருளாதார உறுதியின்மைகளை வினைத்திறனாக சமாளிப்பதற்கு வங்கியின் கொள்திறனை மேம்படுத்தும் நோக்கினைக் கொண்டவேளை, தேசிய நிதியியல் நிலத்தோற்றத்தின் நேர்மையினை பாதுகாப்பதில் அதன் முக்கிய பங்கினை வலிமைப்படுத்தியது.

2023 இன் முக்கிய முன்னிறுத்தப் பிரிவுகள்

நிதியியல் ஆண்டு 2023 ஆனது ஒரு சாதகமற்ற பாரியபொருளாதார பின்னணிக்கு மத்தியில் திறந்ததுடன், இது வீழ்ச்சியடையும் மொ.உ.உ., உயர்வடைந்த வட்டி வீதங்கள், அந்நியச் செலாவணிப் பற்றாக்குறைகள், உயர்வடைந்த பணவீக்கம் மற்றும் இறையாண்மை மற்றும் உள்ளூர் கடன் மீள்கட்டமைப்புடன் சுற்றியுள்ள முக்கியமான உறுதியின்மைகளினால் விபரிக்கப்பட்டன. இதற்கு பதிலளிக்கும் விதமாக, வங்கியானது நிதியியல் ஸ்திரத்தன்மையின் மறுசீரமைப்பிற்கு, அதன் முக்கியமான குறிக்கோள் ஆதலால், முன்னுரிமையளித்தது. இதற்காக

பாரிய யதார்த்தங்கள்: மொத்த உள்ளூர் உற்பத்தி - % வளர்ச்சி



மூலம் : CBSL

வங்கியானது உடனடியாக ஏழு முக்கிய பிரிவுகளில் அதன் முயற்சிகளில கவனஞ் செலுத்தியது.

இந்த மையப் புள்ளிகளிடையே வங்கியின் மெய்யான செயற்திறனிலான ஒரு மீளாய்வானது பல குறிப்பிடத்தக்க போக்குகளை வெளிப்படுத்துகின்றது. முதலாவதாக, திரவத்தன்மை பற்றாக்குறைகளை விளித்துரைப்பதற்காக மற்றும் மீள்கொள்வனவு கடன் பெறுகைகளை குறைப்பதற்காக வைப்புகளின் வளர்ச்சியினை விரைவாக்கும் நோக்குடைய முன்னெடுப்புகள் எதிர்பார்ப்புகளை விஞ்சி வெற்றிகரமான அமுலாக்கலினை குறிப்பிட்டது. அதேபோன்று, வங்கியானது அந்நிய செலாவணி ஒதுக்கங்களை அதிகரிப்பதிலான இலக்குகளை விஞ்சியதுடன், குறிப்பாக உள்வாரி பணமனுப்புதல்களை மேம்படுத்துவதற்கான குறுங்கால முயற்சிகளினூடாகும். எவ்வாறாயினும், ஏற்றுமதி வருவாயில் தங்கியிருக்கும் மத்திய கால மூலோபாயங்களூடாக ஒதுக்கங்களை அதிகரிப்பதற்கான முயற்சிகள் எதிர்பார்த்த அளவிற்கு இருக்கவில்லை என்பதுடன், இது இந்த பிரிவில் முன்னேற்றத்திற்காக சாத்தியமான பிரிவுகளைக் குறிப்பிட்டது.

மேலும், அரச உடைமை நிறுவனங்களிடமிருந்து மீட்டல்களை பாதுகாக்கும் வங்கியின் முயற்சிகள் வெற்றியடைந்ததுடன், இது அ.உ.நி. இடர் வரையறைகள் மற்றும் அத்தகைய நிறுவனங்களிடமிருந்து நிலைபேறான மீட்டல்களுடன் முழு இணக்கப்பாட்டின் மூலம் தெளிவாகின்றது. மேலாக, வங்கியானது ஏனைய வாடிக்கையாளர் பிரிவுகளிலிருந்து திரட்டல்கள் மற்றும் மீட்டல்களில் ஒரு முன்னிறுத்தத்தினை பராமரிப்பதில் மீளெழுச்சியினை காண்பித்ததுடன் இது தொடர்பில் முன்நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விஞ்சியது.

இருந்தாலும், பின்வருவனவற்றில் சவால்கள் முகங்கொடுக்கப்பட்டன. கடன் வட்டிகளை மீள்விலையிடல், சி.ந.நி. கடன்களில் வளர்ச்சியினை தூண்டுதல் மற்றும் செலவு முகாமைத்துவம் மற்றும் வினைத்திறன் இலாபங்கள் ஆகியவற்றுக்கான மேம்பட்ட டிஜிட்டல் மாற்றலை முன்னேற்றுதல், இவை அனைத்தும் எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்கு தவறின. இந்தப் பிரிவுகள் நுண்சீராக்கம் மற்றும மூலோபாய செம்மையாக்கல்களுக்கான வாய்ப்புக்களை பிரதிநித்துவம் செய்ததுடன், இவை எதிர்கால செயற்திறனை மேம்படுத்தவும், அமைப்புசார் கொள்கைகள் நோக்கிய நிலைபேறுடைய முன்னேற்றத்தினை உறுதிசெய்தது.

திரவத்தன்மையினை முகாமைப்படுத்தல்

2023 இன் ஆரம்பத்திலேயே, வங்கியானது ரூபா திரவத்தன்மை பற்றாக்குறையாக ரூபா 185 பில்லியனுக்கும் டொலர் பற்றாக்குறையாக USD 600 மில்லியனுக்கும் முகங்கொடுத்ததுடன், இது நிலைபேறுடைய அரசுக்கு நிதியளித்தல் முன்னெடுப்புகளின் காரணத்தினாலாகும். ரூபா பற்றாக்குறைக்கு, அரசுக்கு நிதியளித்தல் செயற்பாடுகளை நிலைபேறாக்குவதற்கும், மீள்கொள்வனவு கடன் பெறுகைகளுக்கான தேவையை ஏற்படுத்தின. இதற்கு பதிலளிக்கும் விதமாக வங்கியானது, உடனடியாக இந்த பற்றாக்குறையினை தணிப்பதற்காக நாடு பூராவுமான வைப்புத் திரட்டல் பிரச்சாரத்தினை முன்னெடுத்தது. இந்த பிரச்சாரமானது மிகவும் வெற்றிகரமானதாக நிரூபிக்கப்பட்டது, முதல் ஆறு மாதங்களிலேயே ரூபா திரவத்தன்மை இலக்கினை விஞ்சியதுடன், 2023 இன் இறுதியில் ஒரு தேறிய வைப்பு வளர்ச்சியாக ரூபா 250 பில்லியனை விளைவித்தது. இதன் விளைவாக, வங்கியானது அதன் திரவத்தன்மை கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டது மாத்திரமன்றி, 2022 இல் காணப்பட்ட மீள்கொள்வனவு கடன் பெறுகையான ரூபா 185.4 பில்லியனிலிருந்து ரூபா 58 பில்லியனாக கணிசமாகக் குறைக்கக்கூடியதாயிருந்தது.

பிரச்சாரமானது அற்புதமான விளைவுகளை வழங்கியவேளை, வருடத்தின் முதல் பாதியில் நிலவிய விதிவிலக்கான உயர் வட்டி வீதங்களினால் கணிசமான செலவினத்திற்கு ஆட்பட்டது. இருந்தாலும், 2023 இன் இறுதி அரைவாசியில் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைய ஆரம்பித்ததுடன், வைப்புக்களின் கணிசமான பகுதியானது 2024 இல் நிலவும் வட்டி வீதங்களில் மீள்விலையிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த படிப்படியான மீள்விலையிடலானது எதிர்வரும் மாதங்களில் விடுமிகையின் மீள்சமநிலைப்படுத்தலுக்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது நிலைபேறுடைய நிதியியல் ஸ்திரத்தன்மைக்கான வங்கியின் மூலோபாய குறிக்கோள்களுடன் இணைக்கப்படும்.

அந்நிய செலாவணி ஒதுக்கங்களை கட்டியெழுப்புதல்

2023 இல் வங்கியானது அதன் வைப்புத் திரட்டல் முயற்சிகளைப் போன்று ஒரு தீவிரமான பிரச்சாரத்தினை தொடர்ந்தது. இது அந்நிய செலாவணி ஒதுக்கங்களை அதிகரிப்பதற்காக உள்வரும் பணமனுப்பல்கள் மற்றும் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதிலான முன்னிறுத்தமாகும். உள்வாரி பணமனுப்பல்கள் வருடாந்த இலக்குகளை விஞ்சியவேளை, விரும்பிய ஏற்றுமதி வருவாய் இலக்குகளை அடைவதில் வங்கி தவறியது. குறிப்பாக, உள்வாரி தொழிலாளர் பணமனுப்பல்கள் USD 970 மில்லியனை எட்டியதுடன், இது இலக்குவைத்த USD 710 மில்லியனை விஞ்சியது. அதேசமயம், வெளிநாட்டு நாணய வைப்புகளின் தேறிய வளர்ச்சி USD 75 மில்லியனாக இலக்குவைக்கப்பட்டாலும் அது USD 113.7 மில்லியனை அடைந்தது. மாறாக, வருடத்திற்கான ஏற்றுமதி பெறுகைகள் USD 110 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இங்கு நிறுவப்பட்ட இலக்குகளை அடைவதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டன.

நிதியியல் தலைவரின் மீளாய்வு

அதேநேரத்தில், வங்கியானது அதன் கடன்வழங்கல் தேக்கத்தினுள் தனியார் துறையின் பங்கினை விரிவாக்குவதற்காக வங்கி ஒரு உறுதியான பிரச்சாரத்தை முன்னெடுத்ததுடன், பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான மீட்டெழுச்சியுடன் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் 2024 இல் அடையப்படும். அந்நிய செலாவணி திரவத்தன்மை அடைப்பட்டபோதிலும், ரூபாயின் பெறுமதியிறக்கம் மற்றும் பணமனுப்பல்களை ஊக்கப்படுத்துவதற்கு புலம்பெயர் தொழிலாளர்களை வழங்கப்பட்ட ஊக்கத்தொகைகள் என்பவற்றால் இவற்றுக்கான செலவுகளுக்கும் ஆட்பட்டன. எவ்வாறாயினும், ஒரு சாதகமான பார்வையில், டொலர்களின் உள்வருகையானது வங்கி அதன் டொலர் கடன்பெறுகைகளை மீளச்செலுத்துவதனை இயலுமையாக்கியதுடன், இதனால் அதன் பொறுப்புக்கள் குறைவடைந்தன.

முன்னோக்கிப் பார்க்கும்போது, வங்கி நிலவுகின்ற வட்டிவீதங்களில் அதன் அந்நிய செலாவணி தாங்கிகளை வலுப்படுத்துவதற்கு கடப்பாட்டுடன் உள்ளதுடன், 2024 இல் ஏற்றுமதி நடவடிக்கைகள் உத்வேகம் அடைவதுடன் செலவைக் கட்டுப்படுத்த எதிர்பார்க்கின்றது. இந்த மூலோபாய கண்ணோட்டமானது வங்கியின் முன்னோக்கிய நிலைப்பாட்டினை வலியுறுத்தும்வேளை நிலைபேறுடைய நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு கடுமையாக முயற்சிகின்றது.

அ.உ.நி. (SOEs) இன் மீட்பாற்றலை பாதுகாத்தல்

வங்கி வைத்திருக்கும் நிலுவையிலுள்ள கடன்களில் பெரும்பாலானவை, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் சபை மற்றும வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற அரச உடைமை நிறுவனங்களுடன் இணைந்தவையாகும். இந்த நிதியியல் ஈடுபாடுகள், எரிபொருள், நிலக்கரி, உரம், மருந்து மற்றும் பொதுமக்கள் நல்வாழ்வு மற்றும் பொருளாதார தொடர்ச்சிக்கு முக்கியமான ஏனைய அத்தியாவசிப் பொருட்கள் ஆகியவற்றின் தடையற்ற வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு சேவையாற்றின.

எவ்வாறாயினும், நிலைபேறுடைய நிதியியல முகாமைப்படுத்தலுக்கான ஒரு விரிவான மூலோபாயமாக, வங்கி 2023 பூராவும் வேண்டுமென்றே அ.உ.நி. களுக்கான அதன் வெளிப்பாட்டினை கட்டுப்படுத்தியதுடன், முன்னோக்கிச் செல்லும்போதும் இந்த அணுகுமுறையினை பராமரிக்க எண்ணியுள்ளது. இதற்காக, 2023 ஒரு அ.உ.நி. கடன் மீள்கட்டமைப்பு முன்னெடுப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த நிறுவனங்களிடமிருந்து மீட்டல்களை தொடரும் அதேசமயம் அ.உ.நி. இடர் வரையறைகளுக்கு கடுமையான கடைப்பிடிப்பு நிலைநாட்டப்பட்டது.

இந்த மூலோபாய நகர்வானது விவேகமான இடர் முகாமைத்துவ நடைமுறைகளுக்கு வங்கியின் கடப்பாட்டினை வலியுறுத்துவதுடன், பரிணமிக்கும் பொருளாதார நிலத்தோற்றங்களுக்கு மத்தியில் நிதியியல் மீளெழுச்சி மற்றும் ஸ்திரத்தன்மையினை வளர்க்கும் அதன் முழுமையான இலக்குடன் ஒத்திருக்கின்றன.

கடன் மீள்விலையிடல்

சகாக்களுக்கு எதிர்மறையாக, வங்கியானது ஜனவரி 2023 வரை சிற்றளவு கடன்களின் மீள்விலையிடலை ஒத்திவைப்பதற்கு தெரிவுசெய்தது. இந்த தீர்மானமானது, தற்போதைய பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில், மீள்செலுத்தல்களில் திடீரென்ற மற்றும் கணிசமான அதிகரிப்பினை அமுலாக்குதல், நடைமுறைக்கு இயலாத மற்றும் கடன்பெறுநரின் நிதியியல் அழுத்தத்தினை சாத்தியமாக மேலும் அதிகப்படுத்தி தவறுதல் நிகழ்வுகளை அதிகரிக்கும் என்பதை தெரிந்துகொண்டதில் இருந்து எழுகின்றது. இதன் விளைவாக, வங்கி மீள்விலையிடலை 1 ஜனவரி 2023 வரை ஒத்திவைத்ததுடன், அதிலிருந்து வட்டி வீதங்கள் 4.5% ஆல் அதிகரிக்கப்பட்டன. எவ்வாறாயினும், மீள்விலையிடலிலான தாமதமானது 2023 நிதியாண்டிற்கு வங்கியின் வட்டி வருமானத்தில் பாதகமாக தாக்கத்தினை விளைவித்ததுடன், இது ரூபா 13 பில்லியன் பற்றாக்குறையாகும். ஆட்பட்ட செலவுகள் இருந்தபோதிலும், இந்த மூலோபாய அணுமுறை விவேகமான இடர் முகாமைத்துவத்திற்கான வங்கியின் கடப்பாட்டினையும் சவால்மிக்க பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில், நிலைபேறான கடன்பெறுநர் உறவினை பராமரிப்பதனையும் பிரதிபலிக்கின்றது.

கட்டம் 3 கடன்கள்

2023 இல், வங்கி அதன் வலுக்குன்றிய கடன்கள் (கட்டம் 3) விகிதத்தில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை கண்டதுடன், இது 2022 இல் காணப்பட்ட 12.8% இலிருந்து 8.8% ஆக குறைவடைந்தது. இந்த வீழ்ச்சியானது வங்கியின் கடன் தேக்கத்தில் ஒட்டுமொத்த தரத்திலான மேம்படுத்தலை குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், வலுக்குன்றிய கடன் விகிதத்தில் இந்த வீழ்ச்சி இருந்தாலும், வலுக்குன்றலிலிருந்து (கட்டம் 3) கட்டம் 3 கடன் விகிதத்திற்கு ஒரு அதிகரிப்பு காணப்பட்டது. இது 2022 இல் காணப்பட்ட 29.9% இலிருந்து 2023 இல் 41.0% ஆக அதிகரித்தது. இந்த நகர்வானது பின்வருவனவற்றை தெரிவிக்கின்றது. வலுக்குன்றல் கடன்களின் ஒட்டுமொத்த விகிதம் குறைவடைந்த போதிலும், வங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 இல் குறிப்பாக கட்டம் 3 கடன்களுக்கு உயர் சதவீதத்திலான வலுக்குன்றல் தள்ளுபடிகளை ஒதுக்கியது.

மேலும், இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான வங்கியின் வெளிப்பாடு ஒன்றுமில்லை, மற்றும் சர்வதேச இறையாண்மை முறிகளுக்கான அதன் வெளிப்பாடு ரூபா 51 பில்லியனுக்கு வரையறை செய்யப்பட்டதுடன், துறைசார் நியமங்களின் பிரகாரம் வங்கி 40% பெறுமதியிழப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவை காணப்படுகின்றது.

தனியார் துறையின் நிலுவையிலுள்ள கடன்களை விளித்துரைப்பதற்காக, வங்கியானது ஒரு வணிக மீட்டெழுச்சி முன்னெடுப்புடன் ஒரு விரிவான மீட்டல் திட்டத்தினை முன்னெடுத்தது. இது கடன் மீட்டலிலான சமூகத்திலான தாக்கங்களை தணிப்பதனை, குறிப்பாக நுண் மற்றும் சிறிய வணிகங்களுக்கு, நோக்காகக் கொண்டிருந்தன. முன்னோக்கி நகரும்போது, வங்கியானது படிப்படியான பொருளாதார மீட்டல்களை பயன்படுத்தி சேகரிப்பு மற்றும் செயற்திறனற்ற கடன்களின் மீட்டலில் நெருக்கமான மேற்பார்வையினை பராமரிக்கும். எவ்வாறாயினும், உயர் வரிகளின் சாத்தியமான சுமத்தலானது மீள்செலுத்துதல் ஆற்றலில் அழுத்தத்தை பிரயோகிக்கலாம், இது விழிப்புள்ள கண்காணிப்பு மற்றும் மூலோபாய பதிலளிப்பு வழிமுறைகளுக்கான அவசியத்தினை ஏற்படுத்தியுள்ளது.

சி.நு.நி. கடன் வளர்ச்சி

2023 இன் பெரும்பகுதியில், கடனுக்கான கேள்வியில் ஒரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதுடன், இதற்கு பிரதானமாக நடைமுறையிலுள்ள உயர் வட்டி வீதங்கள், உயர்வடைந்த வாழ்க்கைச் செலவு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு பொதுவான மந்தநிலை ஆகியவை காரணியாயிருந்தன. இந்த சவால்கள் இருந்தபோதிலும், வருடத்தின் இறுதி நான்கு மாதங்களின்போது சி.நு.நி. கடன் வளர்ச்சியில் ஒரு படிப்படியான உயர்வடையும் போக்கு அவதானிக்கப்பட்டதுடன் 2024 இற்கு இது தொடரும் சாத்தியத்தினை குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், 2023 இற்கான அதன் சி.நு.நி. கடன்வழங்கலில் வளர்ச்சி இலக்கினை அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த விளைவானது, பாதகமான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் கடனுக்கான கேள்வியினை ஊக்குவிப்பதில் வங்கியினால் முகங்கொடுக்கப்படும் சிக்கல்கள் மற்றும் கட்டுப்பாடுகளை வலியுறுத்துகின்றது. இது வருடத்தின் இறுதிப் பகுதியின்பொது சி.நு.நி. கடன் வழங்கலில் சாத்தியமான பாதை அவதானிக்கப்பட்ட போதிலும் ஆகும்.

டிஜிட்டல் இடப்பெயர்வு

உள்ளக தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் இழப்புடன் சில கூறுகளின் கிடைக்காமை மற்றும் உயர்வடையும் செலவினங்களின் காரணமாக 2023 இல் டிஜிட்டல் மயமாக்கலின் வேகமானது சற்று குறைவடைந்தது. இருந்தாலும், இலங்கையில் டிஜிட்டல் வங்கியியலில் மக்கள் வங்கியானது முன்னணியில் உள்ளது. சிற்றளவு கடன் உருவாக்கல் அமைப்புமுறையினூடாக 92% ஆன சிற்றளவு கடன்கள் செயன்முறையாக்கப்பட்டதுடன், டிஜிட்டல் வழிகளூடாக 74% ஆன கணக்கு திறத்தல்களும் இடம்பெற்றன. டிஜிட்டல் மயமாக்கல் இயக்கமானது வினைத்திறன் மற்றும் ஆக்கத்திறனை தொடர்ச்சியாக அதிகரிக்கும் என்பதுடன், காலப்போக்கில் வங்கி அதன் ஊழியர் தேவைப்பாடுகளை குறைப்பதனை இயலுமையாக்கும்.

இலாபகரத்தன்மை

மேற்குறிப்பிட்ட ஏழு முக்கிய பிரிவுகளிலான வங்கியின் மூலோபாய முன்னிறுத்தமானது 2023 பூராகவும் அதன் நிதியியல் நிலைமையினை விரைவாக திடப்படுத்துவதற்கு ஒரு முக்கிய பங்கினை வகித்தது. எவ்வாறாயினும், இந்த முயற்சிகள் இருந்தாலும், வங்கியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இலாபகரத்தன்மையில் ஒரு வீழ்ச்சியினை அனுபவித்ததுடன் இதற்கு பிரதானமாக பல காரணிகள் காணப்படுகின்றன, சிற்றளவு கடன்களின் மீள்விலையிடலிலான தாமதம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்தான வட்டிக் கொடுப்பனவுகளின் நிறுத்தம், பிரிவு 83 நிதியளித்தலுடன் இணைந்த அதிகரிக்கும் கிரயங்கள் மற்றும் இ.ம.வ. பரிமாற்றத்தில் ஆட்பட்ட நட்டங்கள் என்பனவாகும்.

பெறுமதி சேர்த்தல் வரிக்கு முந்திய வங்கியின் செயற்பாட்டு இலாபம் 2022 இல் காணப்பட்ட ரூபா 29.5 பில்லியனிலிருந்து ரூபா 22.7 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. நிதிச் சேவைகளிலான பெ.சே.வ. கழித்தல் தொகையான ரூபா 7.3 பில்லியனைத் தொடர்ந்து (2022 இல் ரூபா 8.2 பில்லியன்) வரிக்கு முந்திய இலாபம் 2022 இல் காணப்பட்ட 21.3 பில்லியனிலிருந்து ரூபா 15.3 பில்லியனாக காணப்பட்டது. மேலும், வருமான வரிச் செலவினமானது 2022 இல் காணப்பட்ட 4.1 பில்லியனிலிருந்து ரூபா 5.3 பில்லியனாக அதிகரித்ததுடன், இதன் விளைவாக வரிக்கு பிந்திய இலாபமானது 2022 இல் காணப்பட்ட ரூபா 17.2 பில்லியனிலிருந்து ரூபா 10.1 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது.

இருந்தபோதிலும், வருடத்தின் இறுதி மூன்று மாதங்களில் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக உத்வேகத்தினை அடைந்ததுடன், வங்கியின் இலாபகரத்தன்மையானது இறுதிக் காலாண்டில் ஒரு உயர்வடையும் பாதையினை காண்பித்தது. குறிப்பாக, வருடத்தின் இறுதி மூன்று மாதங்களில் வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 4.9 பில்லியன் பதிவுசெய்யப்பட்டதுடன், இது வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களின் வரிக்கு பிந்திய இலாபமான ரூபா 5.1 இனை விஞ்சிக் காணப்பட்டது. இந்த மீட்டெழுச்சியானது ஒரு வலுவான மீட்டலைக் குறிப்பிடுவதுடன் மேம்படும் பொருளாதார நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு 2024 இற்கான சாத்தியமான வளர்ச்சியினை வலியுறுத்துகின்றது.


வருவாய்

வருடத்தின் ஆரம்பத்தில், வங்கியானது ஒரு திரவத்தன்மை பற்றாக்குறையுடன் நாடு பூராவும் உறுதியாயிருந்து கடனுக்கான கேள்வியில் மந்தமான வளர்ச்சியினால் மோசமடைந்ததன் காரணமாக கடன் வழங்கல் நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. இந்த மந்தமான கேள்வியானது பல்வேறு காரணிகளின் உச்சநிலையாகும். அவையாவன, உயர்வடையும் வாழ்க்கைச் செலவுகளின் மோசமான பாதிப்புகள், உயர்வடைந்த வட்டி வீதங்கள், தொடர்ச்சியான ரூபாயின் பெறுமதியிழப்பு, ஆகியன வருடத்தின் முதலாம் அரைவாசி காலம் பூராவும் நிலவியது. குறிப்பாக, வட்டி வீதங்கள் 2022 இன் இறுதியில் ஏறத்தாழ 30% ஆக உயர்வடைந்தது, 2023

இல் உயர்வடைந்து காணப்பட்டபோதிலும், படிப்படியாக குறைவடைய ஆரம்பித்து 2023 டிசம்பரில் 12.9% இனை எட்டியது. இந்த பாரியபொருளாதார இயக்காற்றல்களும் கடன் மீள்செலுத்தல்களில் உறுதியான தாமதங்களுக்கு பங்களித்தது.

மேலும், 2023 இன் முதல் ஒன்பது மாதங்களின்போது, ஏனைய சிறப்பு முதலீட்டு வங்கியியல் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு வீழ்ச்சியினை கண்டது. இதன் விளைவாக, 2022 இன் ஒப்பிடும்போது அதே காலத்தின்போது வட்டி வருமானம், கட்டண வருமானம் மற்றும் தரகு வருமானம் என்பன வீழ்ச்சிகளை அனுபவித்தன. சிறப்புச் சேவைகளிலான கேள்விக்கு இந்த வீழ்ச்சியானது 2023 இன் போது முதல் மூன்று காலாண்டுகளில் நிலவிய பரவலான பொருளாதார சவால்களையும் சந்தை நிலைமைகளையும் பிரதிபலிக்கின்றன. இவை வங்கியின் வருவாய் பாய்ச்சல்களை பாதித்தன.


வரிக்கு பிந்திய இலாபம் : 9M23 எதிர் Q423 (ரூ. பில்.)




வங்கியானது அதன் தேறிய வட்டி விடுமிகையில் 2023 பூராவும் ஒரு வீழ்ச்சியினை அனுபவித்ததுடன், இதற்கு பிரதான காரணியாக காணப்பட்டது கடன் வழங்கல் மற்றும் நிதியளித்தல் பொருத்தமின்மையாகும். குறிப்பாக, சிற்றளவு கடன்கள் மொத்த கடன் புத்தகத்தில் 25% இனை கொண்டுள்ளதுடன், இந்தக் கடன்களில் மூன்றில் இரண்டு வட்டி வீதங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்ட 2019 முதல் 2021 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டவையாகும். இக்கடன்களுக்கு சராசரி விளைவாக 10.9% காணப்பட்டது. 2022 இல் காணப்பட்ட தே.வ.வி. ஆனது 2.7% இலிருந்து 2023 இல் 1.8% ஆக வீழ்ச்சியடைந்ததனால், வருடத்தின் இறுதியில் இது ரூபா 21.4 பில்லியன் நட்டத்தினை விளைவித்தது. எவ்வாறாயினும், வங்கியானது 2024 இல் தே.வ.வி. இல் முன்னேற்றத்தினை எதிர்பார்க்கின்றது. இதற்கு கட்டுப்படுத்தப்பட்ட பண வீக்கமும் கணிசமான குறைந்த வட்டி வீதங்களாலும் துணையளிக்கப்படுவதுடன், எதிர்வரும் வருடத்தில் வட்டிச் செலவினமானது ரூபா 26.0 பில்லியனால் குறைவடைவதற்கு இட்டுச்செல்லும்.

2022 இல் ரூபா 1,783.1 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த கடன்களும் முற்பணங்களும் 4.1% ஆல் குறைவடைந்து ரூபா 1,709.5 பில்லியனாகக் காணப்பட்டபோதிலும், வங்கியின் வட்டி வருமானமானது 2022 இல் காணப்பட்ட ரூபா 321.9 பில்லியனிலிருந்து 22.6% ஆல் அதிகரித்து ரூபா 394.8 பில்லியனாக உயர்வடைந்தது. எவ்வாறாயினும் வட்டி வருமானத்தில் காணப்பட்ட இந்த வளர்ச்சியானது வட்டிச் செலவிலான 38.3% அதிகரிப்பினால் ஈடுகட்டப்பட்டது. இதன் விளைவாக தேறிய வட்டி வருமானமானது 28.3% ஆல் குறைவடைந்து ரூபா 54.3 பில்லியனாகக் காணப்பட்டது. மேலாக, வங்கி அதன் தேறிய கட்டண மற்றும் தரகு வருமானத்தில் 17.5% வீழ்ச்சியுடன் ரூபா

மாதமொன்றுக்கான வட்டிச் செலவினம்: ஜனவரி முதல் டிசம்பர் 2023 (ரூ. பில்.)



வட்டி வீதச் சூழல் (364 நாள் திறைசேரி உண்டியல் விளைவு): 2012 இலிருந்த 2023 டிசம்பர் வரை (%)



12.8 பில்லியனையும், வர்த்தகம் மற்றும் அந்நிய செலாவணியிலான தேறிய இலாபங்கள் 44.6% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 9.4 பில்லியனாகவும், ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய) 2022 இல் காணப்பட்ட ரூபா 1.9 பில்லியனிலிருந்து ரூபா 4.2 பில்லியனாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, மொத்தச் செயற்பாட்டு வருமானமானது 2023 இல் 26.7% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 80.8 பில்லியனை அடைந்ததுடன், கடன்களுக்கான வலுக்குன்றலின் பின்னரான செயற்பாட்டு வருமானம் 2022 இல் காணப்பட்ட ரூபா 76.9 பில்லியனிலிருந்து 4.6% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 73.4 பில்லியனாகக் காணப்பட்டது.

முன்னோக்கி பார்க்கும்போது, பொருளாதாரம் ஒரு மறுமலர்ச்சிக்கு ஆட்படும்போது, வங்கியானது உயர்வடையும் கேள்வியினை சந்திப்பதற்கு தாராளமாக திரவத்தன்மையுடன் மற்றும் பன்முகமான கடன் திட்டங்களுடன், குறிப்பாக சி.ந.நி. வளர்ச்சியினை இலக்குவைத்து தயாராயுள்ளது. கடன் தேக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு கடன் வழங்கல் தரத்தினை மேம்படுத்துவதும், தனியார் துறைக்கான கடன் வழங்கலை விரிவுபடுத்துவதும் மிக முக்கியமானதாகும். 2024 இல் வங்கியானது கடன் வழங்கலில் ஒரு தேறிய வளர்ச்சியாக ரூபா 140 பில்லியனை எதிர்பார்ப்பதுடன், இது பிரதானமாக, சிற்றளவு வங்கியியல், கூட்டாண்மை வங்கியியல் மற்றும் நிறுவன வங்கியியல் நடவடிக்கைகளிலிருந்து எழும்.

செலவினம்

வருவாயில் ஒரு வீழ்ச்சி இருந்தாலும், வங்கி நிதியாண்டின்போது செலவுகளில் ஒரு உயர்வினை கண்டதுடன், இதற்கான காரணமாக, வரிகள் உள்ளடங்கலாக உயர்வடையும் செயற்பாட்டு செலவினங்கள், திரவத்தன்மை முகாமைத்துவ வழிமுறைகள் மற்றும் த.தொ. அமைப்புமுறைகளில் முதலீடுகள் ஆகியன இருக்கலாம். செயற்பாட்டுச் செலவினமானது 2022 இல் காணப்பட்ட ரூபா 47.3 பில்லியனிலிருந்து 7.1% ஆல் அதிகரித்து ரூபா 50.7 பில்லியனை அடைந்தது. இந்த அதிகரிப்பானது பிரதானமாக, உயர்வடைந்த அலுவலக நிர்வாக மற்றும் நிலையச் செலவுகளில் இருந்தாகும் என்பதுடன், 2023 இல் ஆளணிச் செலவினங்கள் ரூபா 26.6 பில்லியனில் இருந்து ரூபா 24.5 பில்லியனாகக் குறைவடைந்த போதிலும், ஆகும். இந்த எதிர்மை நிலையானது, வெளிப்படுகின்ற சந்தை இயக்காற்றலுக்கு மத்தியில், அதேவேளை நிறுவனச் செலவினங்களை முகாமைப்படுத்தி செயற்பாட்டு செயற்திறன்களை உகப்பாக்குவதில், வங்கியின் மூலோபாய முன்னிறுத்தலை வலியுறுத்துகின்றது.

நிதியியல் தலைவரின் மீளாய்வு

மிகையான திரவத்தன்மையுடன் மற்றும் பயன்படுத்துவதற்கு தயாராயுள்ள ஒரு விரிவான தொகுப்பான பொருளாதார மீட்டல் முன்னெடுப்புகளுடன் வங்கியானது 2024 பூராவும் அதன் கடன் வழங்கல் மற்றும் ஏனைய வணிக நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு தயாராயுள்ளது.

வலுக்குன்றல் கட்டணங்கள்

தேறிய வலுக்குன்றல் கட்டணங்கள் 2022 இல் காணப்பட்ட ரூபா 33.3 பில்லியனிலிருந்து 2023 இல் ரூபா 7.4 பில்லியனாகக் குறைவடைந்தது. இத்தொகையானது மீட்டல்கள் நிகராக என்பதைத் தெளிவுபடுத்தல் முக்கியமாகும், SLFRS 9 - "நிதியியல் கருவிகள்" இன் பிரிவு 5.4.1. இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்கு செயற்திறனற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பாக தொங்கலிலுள்ள மொத்த வட்டி உள்ளடங்கலாகும். இந்த செம்மையாக்கலானது வெளிப்படைத்தன்மையினை உறுதிசெய்வதுடன் கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கப்பாடு காண்பதுடன், வங்கியில் நிதியியல் செயற்திறனில் வலுக்குன்றல் கட்டணங்களின் மெய்யான தாக்கம் தொடர்பான தெளிவினை வழங்குகின்றது.

கடன் தீர்க்கும் ஆற்றல்

2023 இன் இறுதியில், வங்கி அடுக்க 1 மூலதன விகிதமாக 12.4% ஆக காணப்படுவதுடன் இது 2022 இன் இறுதியில் காணப்பட்ட 11.9% இலிருந்து ஒரு அதிகரிப்பினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. மேலாக, மொத்த மூலதனப் போதுமை விகிதமானது (மு.போ.வி.) முன்னைய ஆண்டில் காணப்பட்ட 16.3% இலிருந்து 17.4% ஆக உயர்வடைந்து காணப்பட்டது. அடுக்கு 1 மூலதன விகிதம் மற்றும் மொத்த மு.போ.வி. இலான உயர்வடையும் போக்குகள் 2023 பூராவும் வங்கியின் மூலதன நிலைமை பலமடைந்துள்ளதை குறிப்பிடுகின்றது. அத்தகைய மேம்படுத்தல்கள் முறைமைப்படுத்துபவர்கள், முதலீட்டாளர்கள், மற்றும் வைப்பீட்டாளர்களுக்கு நட்டங்களை தாங்கக்கூடிய மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மையினை நிலைநிறுத்தும் வங்கியின் கொள்திறன் தொடர்பாக மீளுறுதியளிக்கின்றது.

2019 இல் மக்கள் வங்கிச் சட்டத்திலான திருத்தத்தினை தொடர்ந்து, வங்கியானது வெற்றிகரமாக பாசல் III இணக்கப்பாடான மேலதிக அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2 இற்கு ரூபா 35 பில்லியன் பெறுமதியான தொகுதிக்கடன்களை வழங்கியது. இந்த மூலோபாய முன்னெடுப்பானது சர்வதேச முறைமைப்படுத்தல் நியமங்களுடன் இணங்கும் மற்றும் வெளித்தோன்றும் சந்தை இயக்காற்றல்களை சிறப்பாக சமாளிப்பதற்கு அதன் மூலதனத் தளத்தினை வலுப்படுத்தல் ஆகியவற்றுக்கான வங்கியின் கடப்பாட்டினை வற்புறுத்துகின்றது.

நிதியியல் நிலைமை

நிதியாண்டு 2023 இல், வங்கி அதன் ஐந்தொகையில் வருடத்திலிருந்து வருடம் ஒரு மிதமான 2.2% வளர்ச்சியினை அனுபவித்தது, இதற்கு பிரதானமாக வைப்புகளின் விரிவாக்கம் காணப்பட்டது. வங்கியின் மொத்த சொத்துக்கள் 2022 இல் காணப்பட்ட ரூபா 2,972.0 பில்லியனிலிருந்து 2023 இல் 3,038.2 பில்லியனாக அதிகரித்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கடன்கள் ரூபா 582.8 பில்லியனிலிருந்து 45% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 320.4 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு பிரதான காரணியாக இவ்வாண்டின்போது அவதானிக்கப்பட்ட ரூபாயின் பெறுமதி அதிகரிப்பாகும். குறிப்பாக, அரச உடைமை நிறுவனங்கள் மொத்த கடன்களில் 43% இனை கணக்கீடு செய்ததுடன், இந்த கடன்களில் குறிப்பிடத்தக்க பகுதியானது அரசாங்க உத்தரவாதத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ளது.

மாறாக, மொத்த பொறுப்புக்கள் 2022 இல் காணப்பட்ட ரூபா 2,826.7 பில்லியனிலிருந்து 1.8% ஆல் அதிகரித்து ரூபா 2,878.1 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இந்த அதிகரிப்பானது வைப்புகளிலான வளர்ச்சியின் மூலம் இயக்கப்பட்டதாகும். வங்கியின் வைப்புத் தளமானது, 11.9% ஆல் விரிவிடைந்து 2022 இல் காணப்பட்ட ரூபா 2,371.5 பில்லியனிலிருந்து ரூபா 2,653.1 பில்லியனாக காணப்பட்டது. மொத்த வைப்புக்களுள் உள்ளூர் நாணய வைப்புகள் 26.8% இனையும் வெளிநாட்டு நாணய வைப்புகள் 36.4% இற்கும் கணக்கீடு செய்தன.

சமீபத்தைய வருடங்களில் இலங்கை முகங்கொடுத்த பரவலான பொருளாதார போராட்டங்களுடன் வங்கியின் நிதியியல் செயற்திறனை சூழ்நிலைப்படுத்துவது முக்கியமானதாகும். தொடர்ச்சியான பொருளாதார சுருக்கங்களிலிருந்து எழுகின்ற வலிமையான சவால்கள் இருந்தாலும், வங்கியானது பொருளாதாரத்தினுள் ஒரு நிலைப்படுத்தும் சக்தியாக அதன் பங்கினை உறுதியாக நிலைநாட்டியுள்ளது. அசைக்கமுடியாத அர்ப்பணிப்பினூடாக, வங்கியானது அரசாங்கத்திற்கும் அதன் சனத்தொகைக்கும் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதுடன், தேசத்தின் நீண்டகால பொருளாதார மீளெழுச்சி மற்றும் செழிப்பிற்கு பங்களிப்பதற்கு முயற்சிக்கின்றது.

மக்கள் வங்கி குழுமத்தின் செயற்திறன்

2024 இற்கான கண்ணோட்டம்

மிகையான திரவத்தன்மையுடன் மற்றும் பயன்படுத்துவதற்கு தயாராயுள்ள ஒரு விரிவான தொகுப்பான பொருளாதார மீட்டல் முன்னெடுப்புகளுடன் வங்கியானது 2024 பூராவும் அதன் கடன் வழங்கல் மற்றும் ஏனைய வணிக நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு தயாராயுள்ளது. எவ்வாறாயினும், வங்கியின் வளர்ச்சி மூலோபாயங்களை எய்தப்பெறுதல் ச.நா.நி. திட்டத்தின் தொடர்ச்சி மற்றும் விளைவுகளில் தங்கியுள்ளதுடன் இது சிறப்பான பொருளாதார முன்கணிப்புத்தன்மையினை உறுதிசெய்வதில் முக்கியமானதாகும். ச.நா.நி. திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ள செம்மையாக்கல்கள் உடனடியான நெருக்கடிகளை ஏற்படுத்தும்வேளை, அவை நாணய மற்றும் இறைவரி ஒழுக்கத்தினை அரசாங்கத்தினுள் உட்புகுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், குறுகிய மற்றும் மத்திய காலத்தில் வங்கியியல் துறையின் நிதியளித்தல் மற்றும் கடன்வழங்கல் நடவடிக்கைகளுக்கு உகந்த முன்கணிக்கக்கூடிய வட்டி வீத நடைமுறையினை பராமரிப்பது முக்கியமாகும்.

ஒரு திடமான வட்டி வீதச் சூழலானது வங்கியின் தேறிய வட்டி விடுமிகையினை மேம்படுத்தும் என எதிர்பார்ப்பதுடன், இது படிப்படியாக வட்டிச் செலவினங்களை குறைப்பதன் மூலமும் ஆகும். வட்டி வீத குறைப்பினூடாக மாத்திரம் 2024 இல் ரூபா 26 பில்லியனை சேமிக்கக்கூடியதாயிருக்கும். மேலும், வங்கியானது ரூபா 245.9 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை, கூப்பன்கள் நீங்கலாக, வைத்திருப்பதுடன் இவை 2024 இல் முதிர்வடைவதுடன், கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்கு மேலும் உயர் கிரயத்திலான வைப்புகளின் தேவையினை தவிர்க்கின்றது. பதிலாக, வங்கியானது அதன் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளை விரிவாக்குவதில் முன்னிறுத்தம் செய்வதற்கு எண்ணியுள்ளது. மேலாக, தனியார் துறை வங்கிகளைப் போன்று ஒரு மூன்று வருட கடன் மீள்விலையிடலை கடைப்பிடிப்பதற்கு திட்டமிட்டுள்ளதுடன், இது செலவு பிரதிபலிப்பான கடன் வழங்கல் வட்டிகளை பராமரிப்பதற்காகும்.

2024 இல், ரூபா மற்றும் USD வைப்புகளிலான வலுவான வளர்ச்சியுடன், கடன் புத்தகத்தில் குறிப்பிடத்தக்க விரிவாக்கமும் எதிர்பார்க்கப்படுகின்றது. வட்டி வருமானம், கட்டண மற்றும் தரகு வருமானத்தில் திட்டமிடப்பட்ட வளர்ச்சியானது வங்கியின் இலாபத்தை குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் மூலம் முக்கிய நிதியியல் குறிகாட்டிகளான வங்கியின் அடுக்கு 1 மூலதனம் மொத்த மூ.போ.வி. ஆனது பலப்படுத்தப்படும்.

இந்த நம்பிக்கைக்குரிய வாய்ப்புக்கள் இருந்தாலும், அரச உடைமை நிறுவனங்களின் கடன் தொடர்பான கரிசனைகள் 2024 இல் நிலைத்திருக்கின்றன. ஒட்டுமொத்த அமைப்புமுறை உறுதிப்பாட்டிற்கு, அரச வங்கிகளை சீர்குலைக்கக்கூடிய முதல் நாள் நட்டங்கள் அல்லது ஏனைய பாதகமான விளைவுகளை, ஏதேனும் அ.உ.நி. கடன் மீள்கட்டமைப்பானது விளைவிக்காது இருத்தல் வேண்டும். கடன் இடர் அதிகரிப்பினை தணிப்பதற்கு அ.உ.நி. இல் கடன் வழங்கல் வரையறைகளை பராமரித்தல் கட்டாயமாகும். அதேவேளை அ.உ.நி. இன் மீள்செலுத்தல் ஆற்றல்களை உறுதிப்படுத்தி வங்கிக்கு அவை அவற்றின் கடன்களை சேவையாற்றல் வேண்டும்.


வங்கி ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்தினை தொடங்கும்போது, மக்களுக்கு மற்றும தேசத்திற்கு சேவையாற்றும் அதன் அசைக்கவியலாத அர்ப்பணிப்பானது உறுதியாக உள்ளது. நவீன வங்கியியலில் தொழில்நுட்ப மேம்பாடுகளின் முக்கிய பங்கினை அங்கீகரித்து, வங்கியானது இலங்கை பூராவும் அதன் வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான அணுகத்தக்க சேவைகளை வழங்குவதற்கு அதன் தொழில்நுட்ப அமைப்புமுறைகளை மேம்படுத்துவதற்கு வங்கி அர்ப்பணிப்புடன் உள்ளது. இது வங்கியியல் செயன்முறைகளை ஒழுங்குபடுத்தி வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துவதற்கு புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளில் முதலீடுகள் மேற்கொள்வதனை உள்ளடக்கும்.

மேலும், வங்கியானது அதன் பன்முகமான வாடிக்கையாளர் தளத்தின் வெளித்தோன்றும் தேவைகளை சந்திப்பதற்கு அதன் கருவிகள் மற்றும் சேவைகளை தொடர்ந்தும் செம்மைப்படுத்துவதற்கு கடப்பாட்டுடன் உள்ளது. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான வங்கியியல் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வங்கியானது தனிநபர்கள், வணிகங்கள், மற்றும் சமூகங்களை வலுப்படுத்தி அவர்களது நிதியியல் இலக்குகள் மற்றும் அபிலாஷைகளை அடைவதற்கு முனைகின்றது.

மக்களுக்கு மற்றும் தேசத்திற்கு சேவையாற்றும் அதன் உறுதியான கடப்பாட்டினூடாக, வங்கியானது அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரு பிரகாசமான மற்றும் செழிப்பான எதிர்காலத்தினை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு செய்வதற்கு முயற்சிக்கின்றது. தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, கருவிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தி, மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மையினை நிலைநாட்டுவதன் மூலம் வங்கியானது நிலைபேறுடைய பொருளாதார அபிவிருத்தி, செழிப்பு மற்றும் நாடுபூராவுமுள்ள தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் நல்வாழ்விற்கு உகந்த ஒரு சூழலை உருவாக்குவதற்கு இலக்கு வைத்துள்ளது.

அதன் வாடிக்கையாளர் மையப்படுத்திய முன்னெடுப்புகளுக்கு அப்பால், வங்கியானது இலங்கையின் நிதியியல் அமைப்புமுறையின் ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்தும் அதன் பரந்த பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றது. நாட்டின் வங்கியியல் துறையில் ஒரு முக்கிய அங்கமாக, வங்கியானது நிதியியல் அமைப்புமுறையின் நோமை மற்றும் மீளெழுச்சியினை நிலைநாட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளதோடு, இதன் மூலம் ஒட்டுமொத்த பொருளாதார ஸ்திரத்தன்மை வளர்ச்சிக்கு பங்களிக்கக் கூடியதாயுள்ளது. இது வலுவான இடர் முகாமைத்துவ நடைமுறைகள், முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அமைவுறுதல் மற்றும் பங்காளிகளிடையே நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை வளர்ப்பதையும் உள்ளடக்குகின்றது.

மக்களுக்கு மற்றும் தேசத்திற்கு சேவையாற்றும் அதன் உறுதியான கடப்பாட்டினூடாக, வங்கியானது அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரு பிரகாசமான மற்றும் செழிப்பான எதிர்காலத்தினை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு செய்வதற்கு முயற்சிக்கின்றது. தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, கருவிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தி, மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மையினை நிலைநாட்டுவதன் மூலம் வங்கியானது நிலைபேறுடைய பொருளாதார அபிவிருத்தி, செழிப்பு மற்றும் நாடுபூராவுமுள்ள தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் நல்வாழ்விற்கு உகந்த ஒரு சூழலை உருவாக்குவதற்கு இலக்கு வைத்துள்ளது. இவ்வாறு செய்வதில், மக்கள் வங்கி இலங்கையின் செழிப்பான எதிர்காலம் நோக்கிய பயணத்தில் ஒரு நம்பிக்கையான பங்காளியாகவும் நண்பனாகவும் உள்ளது.



திரு. அசாம் ஏ. அஹமட்
நிதியியல் பிரிவின் தலைவர்

26 மார்ச் 2024

சில்லறை வங்கியியல்

அடகு பிடித்தல் தேக்கமானது பின்வரும் வாடிக்கையாளர் தளத்தினை எட்டியது

2.7 மில்.

கொண்டாடுதல்

51

வருடங்கள் முன்னோடியான

குழந்தைகள் சேமிப்பு

கொண்டாடுதல்

30

வருடங்கள்

'வனிதா வாசனா'

கொண்டாடுதல்

25

வருடங்கள்

'இசுரு உதான'



சிற்றளவு வங்கியியல் பிரிவின் அயராத முயற்சியினால் நிலைபேறாக்கப்பட்டு மக்கள் வங்கி 2023 இன் போது அடகு வைத்தல் சேவைகளில் சந்தைத் தலைமையாக இருந்ததுடன், தங்கக் கடன்கள் ஊடாக சகல சமூகங்களுக்குமான நிதிக்கான அணுகலுக்கு வசதியளித்தது.

இலங்கையின் சிற்றளவு வங்கியியல் துறையில் பல புதிய கருவிகளுக்கு முன்னோடி எனும் தனித்தன்மையினை வைத்துள்ள, குழந்தைகள் மற்றம பெண்களுக்கான தனிப்பயனுடைய சேமிப்பு கருவிகள் உள்ளடங்கலான, மக்கள் வங்கியின் சிற்றளவு வங்கியியல் பிரிவானது பின்வரும் வங்கியியல் கருவிகளின் தொகுப்பினை வழங்குகின்றது. இது இலங்கை சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் வசதியளிப்பதற்காக உருவாக்கப்பட்ட சேமிப்புப் கருவிகள் மற்றும வைப்புத் திட்டங்கள், தனிநபர்கள் மற்றும் தொழில்வல்லுநர்களுக்கான கடன் வசதிகள் மற்றும் அடகு பிடித்தல் சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. 2022 நிதியாண்டின்போது இரண்டு முதன்மையான வாடிக்கையாளர் பிரிவுகளை இரண்டு புதிய கருவிகளுடன் இலக்குவைத்தது. இவை உயர் நிகர மதிப்புடைய தனிநபர்கள் மற்றும் அதியுயர் சம்பளம் பெறுபவர்களுக்கும் எலிகன்ஸ், உயர் மத்திய மட்டத்திலான சம்பளம் பெறும் தொழில்வல்லுநர்களுக்கு எக்செல்சியர் என்பவையாகும். இதன்மூலம் வங்கியின் வாடிக்கையாளர் தேக்கத்தையும் சந்தை பங்களிப்பினையும் விரிவாக்க இயலுமையாயிருந்து.

2023 நிதியாண்டின்போது, இப்பிரிவானது பின்வருவனவற்றினூடாக வங்கியின் வளர்ச்சித் திட்டங்களுக்கு தொடர்ச்சியாக வசதியளித்தது. உயர் வெற்றியான நாடு பூராவுமான வைப்பு மற்றும் சேமிப்புத் திரட்டல் பிரச்சாரங்கள், குழந்தைகள், இளைஞர் மற்றும் பெண்களுக்கான விசேட சேமிப்புப் பிரச்சாரங்கள் என்பன ஒரு தொடரான மூலோபாய பயன்பாட்டினூடக ஆகும். இப்பிரிவின் சேமிப்புத் திரட்டல் பிரச்சாரங்களின் வினைத்திறனானது வருடத்தினுள் வங்கியின் ரூபா திரவத்தன்மை மட்டங்களிலான கூர்மையான அதிகரிப்பின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டது.

சிற்றளவு வங்கியியல் பிரிவின் அயராத முயற்சியினால் நிலைபேறாக்கப்பட்டு மக்கள் வங்கி 2023 இன் போது அடகு வைத்தல் சேவைகளில் சந்தைத் தலைமையாக இருந்ததுடன், தங்கக் கடன்கள் ஊடாக சகல சமூகங்களுக்குமான நிதிக்கான அணுகலுக்கு வசதியளித்தது. நிலவிய கடுமையான பொருளாதார நிலைமைகளுக்கு பதிலளிப்பதில் அடகு வைத்தல் சேவையானது தனிநபர்கள் மற்றும் வணிகங்களிடையே உத்வேகத்தினை அடைந்ததுடன், 2023 இல் மிகவும் விரைவாக வளாச்சியடைந்த சேவைகளில் ஒன்றாகக் காணப்பட்டது. மக்களின் தேவையினை அறிந்து, சிற்றளவுப் பிரிவானது அடகு வைத்தலினூடாக நிதியானது விரைவாக பகிர்ந்தளிக்கப்படுவதனை உறுதிசெய்ததுடன், அதன் வாடிக்கையாளர்களுக்கு துணையளிப்பதற்காக மாதாந்த மீள்செலுத்தலுக்கான வாய்ப்பினையும், மேலாக தங்கக் கடன் காலத்தின் இறுதியில் முழுத் தொகையினையும் மீளச்செலுத்துவதற்கான தெரிவினையும் வழங்கியுள்ளது.

பொதுமக்களுக்கான அதன் நிதிச் சேவைகளுக்கும் மேலாக, சிற்றளவு வங்கியியல் பிரிவானது ஆண்டுதோறும் பல்வேறு கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (கூ.ச.பொ.) திட்டங்களை நடாத்துகின்றது. இவை சமூக நல்வாழ்விற்கு துணைபுரிதல் மற்றும் சாதி, இனம் அல்லது மதம் என்பவற்றை பொருட்படுத்தாது குறை சேவையாற்றப்பட்ட சனத்தொகைகளுக்கு உதவி புரிதல் மற்றும் கலாச்சார மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு வசதியளித்தல் ஆகிய குறிக்கோளைக் கொண்டவையாகும். இப்பிரிவானது சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதுடன், இது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகங்களிடையே ஒற்றுமை மனப்பான்மையினை ஊக்குவிக்கும் நோக்த்தினைக் கொண்டதாகும். இந்த சமூக மற்றும் சூழல் நடவடிக்கைகள் பொதுச் சேவைக்கான மக்கள் வங்கியின் மரபாண்மையினை மாத்திரம் நிலை நிறுத்தாது ஒரு குடிமை எண்ணம் கொண்ட ஒரு பொறுப்பான கூட்டாண்மையாக மக்கள் வங்கியின் வணிகநாமம் மற்றும் நற்பெயரையும் நிலை நிறுத்துகின்றது.

இப்பிரிவானது கூட்டுப்பணி, உயர் நெறிமுறை நியமங்கள் மற்றும் ஒரு செயற்திறன அடிப்படையான மனப்பான்மை என்பவற்றை ஊக்குவிப்பதுடன், பொருளாதார மற்றும் சமூக தராதரங்களை பொருட்படுத்தாது இலங்கையின் பொதுமக்களுக்கு அதன் சேவைத் தரங்களை தொடர்ச்சியாக மேம்படுத்துகின்றது. வெற்றிக்கான இந்த சூத்திரமானது சிற்றளவு வங்கியியல் பிரிவினால் வருடம் பூராவும் நடாத்தப்படும் விருதுவழங்கல் வைபவங்களினூடாக வலுவூட்டப்படுகின்றது. இது ஒவ்வொரு விளம்பரப் பிரச்சாரம் மற்றும் கருவி வகையில் விதிவிலக்கான செயற்திறனை ஏற்றுக்கொள்வதற்காகும். ஊழியர் அங்கீகார வைபவங்கள் சிறந்த கிளை மற்றும ஏனைய தொடர்புடைய பிரிவுகளுக்கான விருதுகளையும் உள்ளடக்குகின்றன. மேலாக, அணியினை கட்டியெழுப்பும் முன்னெடுப்பில் வங்கியின் வலையமைப்பு பூராவும் போட்டித்தன்மையும் ஒத்துழைப்பும் ஊக்கமளிக்கப்படுகின்றது. சிற்றளவு வங்கியியல் பிரிவானது அதன் வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கியின் சிறந்த அக்கறைகளை ஒரு உயர்ந்த மெச்சத்தக்க விதத்தில் சேவையாற்றுவதற்கு திடமான அர்ப்பணிப்புடன் உள்ளது.

செயற்திறன் மீளாய்வு 2022 எதிர் 2023

கருவியின் வகை	செயற்திறன் மீளாய்வு 2023	வணிகப் பெறுமதி 2022 ரூ. மில்.	வணிகப் பெறுமதி 2023 ரூ. மில்.
தனிப்பட்ட கடன் வழங்கல்	ஒட்டுமொத்தத்தில், சிற்றளவு தனிப்பட்ட கடன் வழங்கல் வருடத்தின் பெரும்பகுதியில் நிலவிய உயர்ந்த வட்டி வீதங்களினால் வீழ்ச்சியடைந்தது. இது புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு புறப்படுவதற்கு முன்னரான கடன்களை வழங்குதல் போன்ற வெளித்தோன்றும் தேவைகளுக்கு வங்கி பதிலளித்தபோதிலும் ஆகும். வங்கியானது அதன் செயற்திறனற்ற கடன் விகிதத்தினை 2% இற்கு கட்டுப்படுத்தியதுடன், இது துறைசார் சராசரியிலும் பார்க்க குறைவானதாகும்.	450,180	395,820
அடகு வைத்தல்	அடகுவைத்தல் தேக்கமானது 2023 இன் போது தொடர்ச்சியாக விரிவடைந்து 2.7 மில்லியன் வாடிக்கையாளர் தளத்தினை எட்டியது. வங்கியானது மீண்டும் மீண்டும் வரும் வாடிக்கையாளர்களிடமிருந்து மிகவும் உயர்ந்த வீதத்திலான கட்ன புதுப்பித்தல்களை தொடர்ந்து அனுபவித்ததுடன், இது வங்கியில் பொது மக்களின் உயர்ந்த மட்டத்திலான நம்பிக்கையினை வெளிப்படுத்துகின்றது	184,778	260,985
வைப்புக்கள்	நாடு பூராவுமான வைப்புத் திரட்டல் பிரச்சாரமானது வங்கியின் வாடிக்கையாளர் தளத்தினை விரிவாக்குவதில் மிகவம் வெற்றியடைந்தது.	2,371,519	2,653,106

- **குழந்தைகளின் சேமிப்பில் 51 வருடங்கள் முன்னோடியினை கொண்டாடுதல்**

மக்கள் வங்கி 1972 இல் 50 சத வைப்புடன் முதலாவது குழந்தைகள் சேமிப்புக் கணக்கினை திறந்ததன் மூலம் இலங்கையில் குழந்தைகள் சேமிப்பில் முன்னோடியாக உள்ளது.

- **வனிதா வாசனாவின் 30 வருடங்களை கொண்டாடுதல்**

மக்கள் வங்கி 1993 இல் பெண்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட வணிக நாமமுடைய சேமிப்புக் கருவிகளை முன்னோடியது. இது உயர்வாக மதிப்பளிக்கப்பட்ட வனிதா வாசனா சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்தது. 2023 இல் இந்த தனித்துவமான கருவியானது அதன் 30 ஆவது ஆண்டுவிழாவினை நினைவூட்டியதுடன் இது நாடு பூராவும விளம்பர நிகழ்வுகளுடன் இலங்கையின் பெண்களுக்கு வலுவளித்தது.

- **இசுரு உதானவின் 25 ஆண்டுகள் கொண்டாட்டம்**

மக்கள் வங்கி 5 வயதிற்கும் குறைவான குழந்தைகளுக்கான அதன் இசுரு உதான சேமிப்புக் கணக்கின் 25 ஆவது ஆண்டுவிழாவினை நாடுபூராவும் சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப் பிரச்சாரங்களுடன் கொண்டாடியது.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

வட்டி வீதங்களிலான வீழ்ச்சியினைத் தொடர்ந்து வங்கியானது தனிப்பட்ட கடன்களுக்கான கேள்வியில் ஏற்கனவே வளர்ச்சியினை அனுபவிக்கின்றது. 2024 இல் வங்கியானது பல்வேறு முன்னெடுப்புகளினூடாக தனிப்பட்ட கடன் வழங்கலை மேம்படுத்தும்::

- **தனிப்பட்ட கடன்களுக்கான இயங்கலை கடன் விண்ணப்பங்கள்:** இந்த முன்னெடுப்பானது கடன் விண்ணப்பதாரிகள் வங்கியின் கிளைகளுக்கு உடல் வருகைக்கான தேவைப்பாட்டினை குறைக்கும்.
- **வாடிக்கையாளர் உறவுமுறை முகாமைத்துவ மேடை** (CRM): CRM மேடையானது வாடிக்கையாளர்களுக்கு புதிய வசதிகளை இயலுமையாக்குவதற்காக 2024 இன் நடுப்பகுதியில் பயன்படுத்தப்படும்.
- **புதிய இஸ்லாமிய வங்கியியல் கருவிகள்:** வங்கியானது ஷரியா இணக்கப்பாடான நிலையான வைப்புகளையும் நடைமுறை கணக்குகளையும் அறிமுகப்படுத்தும், அத்துடன் இவை அதன் முதாரபஹா கருவிகளின் கீழ்காணப்படும் நடைமுறையிலுள்ள சேமிப்புக் கருவிகளுக்கு மேலாகும்.

2023 இல் கூ.ச.பொ. முன்னெடுப்புகள்

மக்கள் வங்கியின் சிற்றளவு வங்கியியல் பிரிவு 2023 இன்போது ஈடுபட்ட கூ.ச.பொ. கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- **தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இலவச கருத்தரங்குகள்:** வங்கி நாடுபூராவும் 2023 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு அமர்வதற்கு திட்டமிட்டுள்ள அண்ணளவாக 50,000 பிள்ளைகளுக்கு 70 கருத்தரங்குகளுக்கு உதவி செய்தது.
- **சூழல் பாதுகாப்பு:** YES கருவியின் கீழ் வங்கியானது சர்வதேச இளைஞர் தினத்தை நினைவு கூரும் முகமாக ஆகஸ்ட் 12 இலிருந்து செப்டம்பர் 30 வரை 50 நாட்களுக்கு பரந்தளவிலான சூழல் தோழமையான திட்டங்களை நடாத்தியது.
- **பெண்களுக்கு வலுவளித்தல்:** அதன் வனிதா வாசனா பெண்களுக்கான கருவியின் கீழ், வங்கியானது பெண் நுண்தொழில் முனைவோருக்கு அவர்களது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்காக மார்ச் 08 முதல் மே 31 வரை சர்வதேச பெண்கள் தினத்தை நினைவு கூரும்முகமாக சந்தைகளை ஒழுங்குசெய்தது. இந்த சந்தைகள் 300 இற்கும் மேலான பெண் தொழிமுனைவோர்களுக்கு நன்மையளித்தது.

நிறுவன வங்கியியல்



திரு. ஜனுக்க கருணாசேன
இணை ஸ்தாபகர் / பணிப்பாளர்
ஏர்த்போம் (மக்கள் வங்கியின் முக்கிய வாடிக்கையாளர்)

ஒத்த வசதிகளுக்கு பல வங்கிகள் இடர் அற்ற விளைவினை பார்க்கும்போது அவசியமான நேரத்தில் எமது வணிகத்திற்கு நிதியியல் உறுதுணையினை வழங்கியதில் நான் உண்மைத்தன்மையினை உணர்ந்தேன். கலாச்சாரத்தினை விரும்புவதுடன் அற்புதமான சேவைக்கு எனது நன்றிகள்.

நிறுவன வங்கியியல் பிரிவானது, அதன் நான்கு உப பிரிவுகளினூடாக நுண், சிறிய, மற்றும நடுத்தர நிறுவன அபிவிருத்தி, வர்த்தகக் கடன், வணிக மறுமலர்ச்சி மற்றும் புனர்வாழ்வு அலகுகளை 2023 இல் முன்னெடுத்ததுடன், இது பொருளாதார தோற்றங்கள் இடையே தொழில்முனைவோர் மற்றும் ஏற்றுமதியாளர்களின் அபிவிருத்தியினூடாக தேசிய பொருளாதார மறுமலர்ச்சிக்கு துணையளிப்பதற்காகும்.

செயற்திறன் கண்ணோட்டம்

வர்த்தக கடன் பிரிவு (கூட்டாண்மைகள் மற்றும் பாரிய சி.ந.நி. இற்கு சேவையாற்றுகின்றது)

நிறுவன வங்கியியல் பிரிவின் வர்த்தகக் கடன் பிரிவானது பாரிய சி.ந.நி. மற்றும் கூட்டாண்மைகளுக்கான நிதியியல் சேவைகளில் நிபுணத்துவம் கொண்டுள்ளது. 2023 இன் போது, இத்துறையிலான வணிகப் பருமன்கள் உயர் வட்டி வீதங்களின் காரணமாக வருடத்தின் பெரும்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், செப்டம்பர் 2023 இன் பின்னர் வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்க வீதங்களிலான வீழ்ச்சியினைத் தொடர்ந்து இப்பிரிவானது விரைவாக ஒரு வளர்ச்சிப் பாதைக்கு திரும்பியது. இப்பிரிவானது 2022 உடன் ஒப்பிடும்போது 2023 இல் கடன் வழங்கல் பெறுமதியில் 17.0% வளர்ச்சியினை அறிக்கையிட்டது.

சி.ந.நி. அபிவிருத்தி அலகு

சி.ந.நி. அபிவிருத்தி அலகானது, இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு போன்ற பல்வேறு உச்சநிலை அமைப்புகளுடன் ஒருங்கிணைவதன் மூலம் மீள்நிதியளித்தல் மற்றும் வரி மானிய திட்டங்களினூடாக பன்முகமான சலுகை அடிப்படையிலான கடன் வழங்கல்களை வழங்குகின்றது. எவ்வாறாயினும், வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளில், அதிகரிக்கும் பணவீக்கம், உயர் வாழ்க்கைச் செலவு மற்றும் அதன்மூலம் அதிகரித்த வட்டி வீதங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவுகளின் காரணமாக கடனுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தது. செப்டம்பர் 2023 முதல், தாராளமான நாணயக் கொள்கை முறை மற்றும் குறைவடையும் பணவீக்கப் போக்கு ஆகியவற்றைத் தொடர்ந்து சி.ந.நி. பிரிவானது மீண்டும் ஒரு படிப்படியான வளர்ச்சியினை அனுபவித்தது. 2023 இல் இப்பிரிவானது கடன் வழங்கல் பெறுமதியில் 2.7% வளர்ச்சியினை பதிவுசெய்துள்ளது.

அபிவிருத்தி மற்றும் நுண் நிதியளித்தல் பிரிவு

காணப்பட்ட பாதகமான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில், ஒரு தொடரான மீள்நிதியளித்தல் மற்றும் வட்டி மானிய கடன் திட்டங்களின் கிடைக்கும் தன்மையின் காரணமாக டிசம்பர் 2023 இல் அபிவிருத்தி மற்றும் நுண் நிதியியல் பிரிவினால் கணிசமான கடன் வளர்ச்சி அடையப்பட்டது.

"ஏற்றுமதியாளர் மையங்களின்" அறிமுகம்

கப்புருக்கா ஆயோஜன மீள்நிதியளித்தல் திட்டம் பின்வரும் வளர்ச்சியினை பதிவுசெய்தது

141.8%

சி.ந.நி. பிரிவில்

2.7%

வளாச்சி

பசுமை சக்தி

கடன் திட்டத்தின் அறிமுகம்

கப்ருக்கா ஆயோஜன மீள்நிதியளிப்புத் திட்டமானது, தென்னை சாகுபடி சபையுடன் ஒருங்கிணைந்து நடாத்தப்படும் சலுகையான நிதியியல் உறுதுணை சேவையாகும், 2022 உடன் ஒப்பிடும்போது 2023 இல் 141.81% வளர்ச்சியினை பதிவு செய்தது. சிறிய வைத்திருப்பவர் வேளாண்மை வணிக பங்குடைமைத் திட்டமானது (சி.வை.வே.ப.தி.), இது உள்ளூர் வேளாண்மை துறையின் அபிவிருத்திக்காகும், இலங்கை மத்திய வங்கியின் விசேட மீள்நிதியளித்தல் கடன் திட்டத்தின் கீழ் வருவதுடன், வருடத்திலிருந்து வருடம் 36.08% வளர்ச்சியினை அடைந்தது. SEPI-11 மீள்நிதியளித்தல் கடன் திட்டமானது, நாட்டில் தொழில்பயிற்சி நிருவகங்களிலிருந்து சித்தியடையும் பயிற்றுவிக்கப்பட்ட இளைஞர்களுக்கு நிதியியல் உறுதுணையினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட விசேட கடன் திட்டமாகும். இது அவர்களது சுய வேலைவாய்ப்பு திட்டங்களை நிறுவுவதற்காகும். இக்கடன் திட்டமானது 2022 உடன் ஒப்பிடும்போது 415.0% வளர்ச்சியினை பதிவுசெய்தது.

NCRCS வட்டி மானிய கடன்கள் பருவகால பயிர்களின் (குறுங்காலம்) பயிர்ச்செய்கையில் ஈடுபடும் நுண் மற்றும் சிறிய அளவிலான விவசாயிகளின் சமூக பொருளாதார நிலைமைகளை தரமுயர்த்தும் பிரதான நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு குறைந்த செலவில் தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளுக்கு நிதியளிப்பதன் மூலமாகும் என்பதுடன், இக்கடன்கள் 2022 இற்கு எதிராக 2023 இல் 86.88% வளர்ச்சியினை பதிவு செய்தது. STaRR கடன் பிரிவின் கீழான வட்டி மானிய கடன்கள் 2023 இல் 560.86% ஆல் வளர்ந்தது.

வணிக மறுமலர்ச்சி மற்றும் புனர்வாழ்வு அலகு

பெருமளவிலான வணிகங்கள் நிதியியல் நெருக்கடிகளில் உள்ளதனால் இவ்வாண்டின்போது வணிக புனர்வாழ்விற்கான கேள்வியானது நேர்த்தியாக அதிகரித்தது. வங்கியானது 2023 இன் போது நெருக்கடியிலுள்ள அதன் பல சி.ந.நி., வர்த்தக மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு துணைபுரிந்தது. இது கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, சுற்றுலாத்துறை, கட்டுமானத் துறைகள் போன்ற முக்கிய பொருளாதார துறைகளின் மறுமலர்ச்சிக்கு, கடன் காலம் தாழ்த்திச் செலுத்துதல், கடன் மீள்அட்டவணைப்படுத்தல், கடன் மீள்கட்டமைத்தல், மேலதிக தொழிற்படு மூலதன நிதியளிப்பு மற்றும் வணிக ஆலோசனைச் வேசவைகளை வழங்குதல் போன்ற பல்வேறு தனிப்பயனாக்கப்பட்ட புனர்வாழ்வு மற்றும் மறுமலர்ச்சி பொறிமுறைகளினூடாக வசதியளிக்கப்பட்டது. வங்கியின் தலையீடுகளின் பயனுறுதித்தன்மையினை வெளிப்படுத்துவதில், 60% ஆன நெருக்கடியிலுள்ள வணிகங்கள் டிசம்பர் 2023 இன் இறுதியில் சாத்தியமான காசுப் பாயச்சல் நிலைமைக்கு திரும்பியுள்ளன.

வணிக மறுமலர்ச்சியின் வெற்றிக் கதை: செவன சிட்டி ஹோட்டல், கண்டி

டிசம்பர் 2023 இன் இறுதியில் மக்கள் வங்கியின் மறுமலர்ச்சி அலகிடமிருந்து உறுதுணையினை பெற்ற 60மூ ஆன வணிகங்கள், சரிவடையும் அபாயத்திலுள்ள அவர்களது வணிகங்கள் மீட்டுயிர் பெற்றன. அத்தகைய ஒரு உதாரணமாக, கண்டி நகரத்தில் அமைந்துள்ள பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா ஹோட்டலான, செவன சிட்டி ஹோட்டல் (பிரைவேட்) லிமிட்டட் ஆகும்.

திரு. மற்றும் திருமதி. செனவிரத்ன அவர்கள் 1983 இல் அவர்களது வணிகத்தை ஒரு விருந்தினர் விடுதியாக ஆரம்பித்து, படிப்படியாக அதனை ஒரு சுற்றுலா ஹோட்டலாக விருத்திசெய்தார்கள். எவ்வாறாயினும், சுற்றுலாத் துறையானது கோவிட்-19 தொற்று முடக்கல்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மிகவும் பாதிப்படையக்கூடியதுடன், இது இத்துறையினை 2022 இல் பெரும்பாலும் முற்றாக முடக்கியது. இது செவன சிட்டி ஹோட்டலில் ஒரு கணிசமான எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தி வணிக வழிகளை நிறுத்துவதனையும் வணிகச் செயற்பாடுகளில் மந்த நிலையினையும் விளைவித்தது.

இந்தச் சவாலுக்கு பதிலளிப்பதில், மறுசீரமைப்பு அலகானது நேரகாலத்துடனான பரிகாரச் செயற்பாடுகளை வழங்கி வணிகத்தின் நடைமுறையிலுள்ள காசுப் பாய்ச்சலுக்கு இணையான ஒரு தனிப்பயனாக்கப்பட்ட மீள்செலுத்தல் திட்டமொன்று விருத்திசெய்யப்பட்டது. இந்தச் செயன்முறையானது அதன் கடன்களை செலுத்தும் அதேவேளை வணிகம் மீட்சி பெறுவதற்கு போதுமான இடைவெளியினை வழங்கியது. 2023 இன் இறுதியில், ஹோட்டல் அதன் நிதியியல் இக்கட்டிலிருந்து மீண்டது மாத்திரமன்றி அது இலாபகரத்தன்மையான நிறுவனமாக வந்தது.

பொருளாதார மறுமலர்ச்சிக்கான விசேட திட்டங்கள்

பொருளாதார மறுமலர்ச்சிக்கு துணைபுரிவதற்காக மக்கள் வங்கி பல்வேறு விசேட திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டங்கள் ஏற்றுமதியினை மேம்படுத்துதல், சி.ந.நி. மற்றும் கிராமிய வாழ்வாதாரங்களை விருத்திசெய்தல், கூட்டுறவுத் துறைக்கான உறுதுணையினை பலப்படுத்துதல் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு உறுதுணையளித்தல் எனும் நோக்கங்களை உடையவையாகும். இந்தத் திட்டங்களிலான விபரங்களுக்கு இந்த அறிக்கையின் பக்கம் 77 இல் உள்ள பொருளாதார பங்களிப்பு பிரிவினை பார்க்கவும்.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

ஏற்றுமதித் துறை குறிப்பிடப்பட்ட சி.ந.நி. மையங்கள் (ஏற்றுமதி மையங்கள்) நிறுவப்பட்டதுடன், தொழில்முனைவோர் கிராமங்கள், பெண்கள் தொழில்முனைவோர் அபிவிருத்தித் திட்டங்களின் அமுலாக்கம் மற்றும் வணிக மறுமலர்ச்சி மற்றும் புனர்வாழ்வு அலகினை நிறுவுதுல் உடன் பிராந்திய கடன் அலகின் நோக்கெல்லையானது நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, தேவையான திறன்களுடன் கடன் அலகுகளை பலப்படுத்துவதன் மூலம் வங்கியில் ஒரு திடமான கடன் கலாச்சாரத்தினை நிறுவுவதன் மூலம், நிறுவன வங்கியியல் பிரிவானது அதன் தரமான கடன்வழங்கல் தேக்கத்தினை விரைவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

நு.சி.ந.நி. துறையின் கடன் உட்கவர்தல் கொள்திறனானது 2024 இல் கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், வங்கியானது சலுகையான கடன் மற்றும் ஏனைய வடிவிலான உறுதுணைகளை நு.சி.ந.நி. இக்கு தொடர்ந்தும் வழங்கும்.

இதன் பிரகாரம், 2024 இல் திட்டமிடப்பட்டுள்ள புதிய முன்னெடுப்புகள், பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- **இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் ஒன்றுசேரல்:**

வங்கியானது 2024 இல் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் பங்குடைமையில் ஈடுபடும் செயன்முறையில் உள்ளது. இந்த பங்குடைமையானது, நிதியியல் உறுதுணையினை வழங்குதல், நிதியியல் அறிவினை மேம்படுத்துதல், ஏற்றுமதி சந்தை தேவைகளை சந்திப்பதற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதித் துறை அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும். இவை நு.சி.ந.நி.கள் மற்றும் பாரிய அளவிலான தொழில்முனைபவர்கள் அல்லது வணிகங்களுக்கு வழங்கப்படுவதுடன் இதன்மூலம் நாட்டில் வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன.

- **நிலைபேறுடைய நிதியளித்தல் முன்னெடுப்புகளை அமுலாக்கல்**

வங்கியில் பசுமை நிதியளித்தல் முன்னெடுப்புகளை அமுலாக்குவதின் முக்கியத்துவத்தினை இனங்கண்டதன் பின்னர், இ.ம.வ. இன் வழிகாட்டிகளைத் தொடர்ந்து, வங்கியானது நிதியளித்தல் நடவடிக்கைகளுக்கு ஒரு விசேட கடன் திட்டத்தினை அறிமுகம் செய்தது. இது வளங்களின் பயன்பாடு, விரயம் மற்றும் கசிவுகளை குறைப்பதற்கு, வளங்களை பாதுகாத்தல், சூழல் மாசடைதலை குறைத்தல், வறுமையினை குறைத்தல் மற்றும் சமூக நல்வாழ்வினை அதிகரித்தல் போன்றவை ஒரு சுழற்சி பொருளாதாரத்தை உருவாக்குவதனை விளைவிக்கும்.

இக்கருவியானது "பசுமை சக்தி" என வணிக நாமமிடப்பட்ட கடன் திட்டமாகும், இது ஒரு சூழல் தோழமையான, சமூக ரீதியாக பொறுப்புள்ள விதத்திலுள்ள வணிகங்களுக்கு மற்றும் "பசுமை நிதியளித்தல்" வரையறையிலுள்ள சூழல் மற்றும் சமூகம் சார்ந்த திட்டங்கள், கைத்தொழில்கள், வணிகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு நிதியியல் உறுதுணையினை வழங்கும்.

வங்கியானது பசுமை, சமூக ரீதியான உள்ளடக்கமான, சூழல் தோழமையான திட்டங்களுக்கு நிதியியல் உறுதுணையினை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பெண்கள் வலுவளித்தல் திட்டங்களை நடாத்துதல்**

நாட்டில் பெண் தொழில்முனைவோருக்கு வலுவளிக்கும் ஒரு முயற்சியாக வங்கியானது அவர்களது தொழில்முனைவுத் திறன்கள் மற்றும் ஆற்றல்களை பலப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை வடிவமைத்துள்ளது.

இதன் பிரகாரம், வங்கியானது சர்வதேச நிதியளித்தல் கூட்டுத்தாபனத்துடன் ஒன்றிணைந்து ஒரு தொடரான திட்டங்களை முன்மொழிந்துள்ளது. இவை நு.சி.ந.நி. இல் ஈடுபட்டுள்ள பெண்களை வலுவளிப்பதற்கு, ஊக்கமளிப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்காகும். விசேடமாக கிராமியப் பகுதிகளில் ஆகும்.

- **தேசிய கடன் உத்தரவாத நிருவகத்துடன் ஒன்றுசேர்தல்**

இலங்கையிலுள்ள சி.ந.நி. க்கான ஒரு கடன் உத்தரவாத திட்டத்தினை விருத்திசெய்வதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டு, வங்கியானது 2023 இல் தேசிய கடன் உத்தரவாத நிருவகத்துடன் ஒருங்கிணைந்தது. இதன் இறுதிக் குறிக்கோள் என்னவெனில், சாத்தியமான காசுப் பாய்ச்சல்களைக் கொண்ட வணிகங்கள் ஆனால் வங்கிகளிடமிருந்து கடனைப் பெறுவதற்கு போதியளவு பிணைச்சொத்தைக் கொண்டிராத வாடிக்கையாளர்களுக்கான நிதியியல் அணுகலை மேம்படுத்துவதற்காகும். வங்கியானது 2024 இல் இத்திட்டத்தினை விரிவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

- **நடைமுறையிலுள்ள நு.சி.ந.நி.கள் மற்றும் புதிய வாடிக்கையாளரின் அணுகலுக்கு பெறுமதி சேர்ப்பதற்கு தொழில்சார் அங்கங்களுடன் பங்குடைமைகளை விருத்திசெய்தல்.**

இளைஞர் மற்றும் பெண் தொழில்முனைவோர்களை இனங்காண்பதற்காக வங்கியானது தொழில்சார் அங்கங்களுடன் பல்வேறு பங்குடைமைகளில் ஈடுபடும் செயன்முறையிலுள்ளது. இது அவர்களது வணிகங்களை விருத்திசெய்வதற்கும் சந்தைகள்'. வாடிக்கையாளர்களை பெறுவதற்கு துணையளிப்பதற்கும் நிறுவன உறுதுணையினை அவர்கள் பெறுவதற்கு உதவிசெய்வதற்காகும். வங்கியானது பெயர்பெற்ற சூரிய வலு அமைப்புமுறை வழங்குநர்கள், விவசாயம் தொடர்பான இயந்திரங்களை வழங்குபவர்கள் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி நடவடிக்கையிலுள்ள ஏனைய சேவைகள் வழங்குநர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்க திட்டமிடுகின்றது.

பெறுநிறுவன வங்கியியல்

ஏற்றுமதி சார்ந்த வாடிக்கையாளர் தளத்தின் அதிகரிப்பு

15%

வெளிநாட்டுநாணய பண உள்வருகைகள் தளத்தின் அதிகரிப்பு

21%

ரூ. **43** பில்.

புதிய கடன்கள் 2023 இன் இறுதிக் காலாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்டன

கூட்டாண்மை இணைய வங்கியியல் வசதியினை ஊக்குவித்தல்



வங்கியானது ஏற்றுமதியாளர்களுக்கான உறுதுணைக்கு முன்னுரிமையளித்து பலப்படுத்துவதன் மூலம் அதன் ஏற்றுமதி சார்ந்த வாடிக்கையாளர் தளத்தினை கணிசமாக விரிவாக்கக்கூடியதாயிருந்ததுடன், இது வெளிநாட்டு நாணய வருவாய் உட்பாய்ச்சல்களில் ஒரு தீவிர அதிகரிப்பினை விளைவித்தது.

மக்கள் வங்கியின் கூட்டாண்மை வங்கியியல் பிரிவானது ஒரு மூலோபாய தேக்கச் மீள்சமநிலைப்படுத்தலினை தனியார் துறையில் அதன் பங்களிப்பினை விரிவாக்குவதன் மூலம் விரைவுபடுத்தியது. அதேவேளை வங்கியானது பிரதானமாக ஏற்றுமதி சார்ந்த அரச உடைமை நிறுவனங்களிலான செறிவினை குறைத்தது. இவ்வாண்டின்போது, வங்கியானது நடைமுறையிலுள்ள பாரிய கூட்டாண்மைகளுடன் வணிகப் பருமன்களை அதிகரிப்பதில் முன்னிறுத்தம் செய்ததுடன், புதிய கூட்டாண்மைகளையும் அதன் வாடிக்கையாளர் தளத்திற்கு சேர்த்தது. இதன் விளைவாக, வங்கியானது ஏற்றுமதியாளர்களுக்கான உறுதுணைக்கு முன்னுரிமையளித்து பலப்படுத்துவதன் மூலம் அதன் ஏற்றுமதி சார்ந்த வாடிக்கையாளர் தளத்தினை கணிசமாக விரிவாக்கக்கூடியதாயிருந்ததுடன், இது வெளிநாட்டு நாணய வருவாய் உட்பாய்ச்சல்களில் ஒரு தீவிர அதிகரிப்பினை விளைவித்தது.

இப்பிரிவின் நடவடிக்கைகள், பாதிப்படைந்த கூட்டாண்மைகள் மற்றும் அரச உடைமை நிறுவனங்களுக்கு நிதியியல் உறுதுணையினை வழங்குவதன் மூலம் உள்ளூர் கடன் உகப்பாக்கல் / உள்ளூர் கடன் மீள்கட்டமைப்பு (உ.க.உ./உ.க.மீ.) செயன்முறையிலிருந்த விடுவிப்பதற்கு துணையளித்து நாட்டின் கடன் மீள்கட்டமைத்தல் செயன்முறை நோக்கி பங்களிப்பு செய்கின்றது. அதேவேளை ச.நா.நி. இலக்குகளை சந்திப்பதற்கு உ.க.உ./உ.க.ம. செயன்முறையினை நிறைவுசெய்வதற்கு கடப்பாட்டுடன் உள்ளது.

கூட்டாண்மை இணைய வங்கியியல் வசதிகள் ஊக்கமளிக்கப்பட்டதுடன், இது கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரிப்பதற்காகும். அத்துடன் செயற்திறனற்ற நடைமுறை கணக்குகளை செயற்திறனான கணக்குகளாக மாற்றுவதற்கு தீவிரமான உறவுமுறை கட்டியெழுப்பல் பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டன.

செயற்திறன் கண்ணோட்டம் 2022 எதிர் 2023

வங்கியானது சி.ந.நி. இற்கு ஒரு குறைவடையும் மூலோபாயத்தினை பிரயோகித்துள்ளதுடன், நடைமுறையிலுள்ள வெளிப்பாட்டினை அதிகரிப்பதற்கு புதிய பகிர்ந்தளிப்புகள் எதும் இடம்பெறவில்லை.

2023 இன் இறுதிக் காலாண்டில் ரூபா 43 பில்லியன் புதிய கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வெளிநாட்டு நாணய பணஉள்வருகைகள் தளமானது 2022 இல் காணப்பட்ட USD 336 மில்லியனிலிருந்து 21% ஆல் அதிகரித்து 2023 இல் USD 408 மில்லியனாகக் காணப்பட்டது.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

- **தனியார் துறை சந்தைப் பங்களிப்பினை தொடர்ச்சியாக விரிவாக்குதல்:**

வங்கியின் ஒரு முக்கிய மூலோபாய குறிக்கோளாக அரச உடைமை நிறுவனங்களுக்கும் தனியார் துறைக்கும் இடையே 50:50 சமநிலையினை பிரதிநிதித்துவம் செய்வதற்கு அதன் தேக்கத்தினை மீள்சமநிலைப்படுத்துதலாகும். அரச வங்கியாக, மக்கள் வங்கி தனியார் துறை மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. எனவே, வங்கியானது 2024 இல் ஏற்றுமதித் துறைக்கு முன்னுரிமையளித்து அதன் தனியார் துறை விரிவாக்கலை தொடரும்.

- **செ.க. களை விளித்துரைத்தல்**

2024 இல் ஒரு முன்னிறுத்தமான பிரிவாக, பிரதானமாக உயர் பெறுமதியுடைய செயற்திறனற்ற கடன் தேக்கத்தினை குறைப்பதாகும். இது முன்னைய ஆண்டுகளின் பொருளாதார நெருக்கடிகளின் விளைவினாலாகும்.

- **கூட்டாண்மை வாடிக்கையாளர் தளத்தினை விரிவாக்குதல்**

கூட்டாண்மை வைப்புத் தளமானது 2023 இல் வீழ்ச்சியடைந்தது. கம்பனிகள் உயர் செலவிலான வங்கியியல் நிதியளிப்புகளுக்கு பதிலாக இந்த நிதிகளை தொழிற்படு மூலதனத்திற்கு பயன்படுத்தியதனாலாகும். 2024 இல் வங்கியானது அதன் கூட்டாண்மை வைப்புத் தளத்தினை மீளக்கட்டியெழுப்பும்.

திறைசேரி

சராசரியாக கீழ்காணும் வீதத்தினால் சந்தையை வெற்றிகண்டது

30%

'இலங்கையில் சிறந்த முதலீட்டு வங்கி 2023'

குளோபல் பேங்கிங் மற்றும் வைனான்சியல் மீளாய்வினால்

'அடுத்த 100 குளோபல் கம்பனிகளில்' ஒன்று

குளோபல் பேங்கிங் மற்றும் வைனான்சியல் மீளாய்வினால்

வெளிநாட்டு நாணய மற்றும் ரூபாய் திரவத்தன்மை நிலைமைகளில் ஒரு மிகை.



திறைசேரிப் பிரிவானது, அந்நிய செலாவணி இலாபங்கள், மூலதன இலாபங்கள், வட்டி வருமானம், கட்டண வருமானம், மற்றும் ஏனைய முதலீட்டு வங்கியியல் கருவிகளிலிருந்தான வருமானம் நோக்கி அதன் பங்களிப்பில் தொடர்ந்து சிறப்புறுத்தியுள்ளது. அதேசமயம், வங்கி அதன் கடப்பாடுகளைச் சந்திப்பதற்காக வங்கியின் திரவத்தன்மை மட்டங்களது விரைவான மேம்படுத்தலை உறுதிசெய்கின்றது.

மக்கள் வங்கியின் திறைசேரி அலகானது உயர்வான நிபுணத்துவமுடைய நிதியியல் செயற்பாடாகும். இது வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், திரவத்தன்மை, அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள், முதலீடுகள் மற்றம் நிதியளித்தல்களை முகாமைப்படுத்தும் ஒரு முக்கிய பங்கினை செயலாற்றுகின்றது. இவை வங்கியின் ஸ்திரத்தன்மை மற்றும் இலாபகரத்தன்மைக்கு முக்கியமானதாகும். திறைசேரி அலகின் செயற்பாடுகள் முதன்மை வர்த்தக அலகு (மு.வ.அ.) மற்றும் முதலீட்டு வங்கியியல் அலகு (மு.வ.அ.) ஆகியவற்றால் துணையளிக்கப்படுகின்றது. முதன்மை வர்த்தக அலகானது இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டு அரசாங்கப் பிணையங்கள் தேக்கத்தினை முகாமைப்படுத்தும்வேளை மூலதன இலாபங்களையும் வட்டி வருமானத்தினையும் உழைப்பதற்காக அரசாங்கப் பிணையங்களில் வர்த்தகம் மற்றும் முதலீட்டினை மேற்கொள்கின்றது. அத்துடன் முதலீட்டு வங்கியியல் அலகானது வங்கியின் வர்த்தகத் தேக்கத்தினையும் உரித்துவத் தேக்கத்தினையும் முகாமைப்படுத்துவதுடன் தொதிக்கடன்கள் கூட்டாண்மை கடன் கருவிகளை கட்டமைப்பதனை கையாளுவதுடன், அதன் பிரதான செயற்பாடு வங்கியின் கட்டண வருமான அடித்தளத்திற்கு பங்களிப்பு செய்வதாகும். முதலீட்டு வங்கியியல் அலகின் நிபுணத்துவத்தினூடாக, திறைசேரிப் பிரிவானது, வங்கியின் சொந்த உரித்துவத் தேக்கத்தை முகாமைப்படுத்துவதற்கு மேலாக சந்தைக்கான அதன் சேவைகளை வினைத்திறனாக விரிவாக்கியது.

2023 இல் செயற்பாடுகள்

உள்வாரி மற்றும் வெளிவாரி சூழல்களினுள் நிலவிய சவாலான சூழ்நிலை இருந்தாலும், திறைசேரிப் பிரிவானது, அந்நிய செலாவணி இலாபங்கள், மூலதன இலாபங்கள், வட்டி வருமானம், கட்டண வருமானம், மற்றும் ஏனைய முதலீட்டு வங்கியியல் கருவிகளிலிருந்தான வருமானம் நோக்கி அதன் பங்களிப்பில் தொடர்ந்து சிறப்புறுத்தியுள்ளது. அதேசமயம், வங்கி அதன் கடப்பாடுகளைச் சந்திப்பதற்காக வங்கியின் திரவத்தன்மை மட்டங்களது விரைவான மேம்படுத்தலை உறுதிசெய்கின்றது.

சந்தையின் செயற்திறனுடன் ஒப்பிடும்போது, மக்கள் வங்கியின் முதலீட்டுத் தேக்கமானது, பங்குகளில்

திறைசேரியின் விவேகமான முதலீட்டின் காரணமாக, மீண்டும் ஒரு முறை சந்தையைவிட சராசரியாக 30% இனால் சிறப்பாகச் செயற்பட்டது. நிலவிய உயர் வட்டி வீதங்களின் காரணமாக, இவ்வாண்டின்போது சந்தையில் தொகுதிக்கடன்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட கருவிகள் காணப்படாவிட்டாலும், முதலீட்டு வங்கியியல் அலகானது நம்பிக்கைப் பொறுப்பு சேவைகள் மற்றும் பெறுமதியிடல்களில் சிறப்பான செயற்திறனை பதிவுசெய்தது. இது 2023 இல் இப்பிரிவின் பிரதான வருமான மூலங்களில் ஒன்றாகக் காணப்பட்டது. முதலீட்டு வங்கியின் அலகின் சாதனைகளை பிரதிபலிக்கும் வண்ணம், மக்கள் வங்கிக்கு குளோபல் பேங்கிங் அன்ட் வைனான்சியல் மீளாய்வினால் மதிப்புமிக்க இலங்கையில் 2023 இற்கான சிறந்த முதலீட்டு வங்கி விருது வழங்கப்பட்டதுடன், மக்கள் வங்கியினை "அடுத்த 100 உலகளாவிய கம்பனிகள்" உள் ஒன்றான் வெற்றிச் சின்னமாக குளோபல் பேங்கிங் அன்ட் வைனான்சியல் மீளாய்வினால் மக்கள் வங்கி அங்கீகரிக்கப்பட்டது. இது நாட்டில் பல சவால்கள் காணப்பட்டபோதிலும் வங்கியின் சாத்தியத்தினை குறிப்பிடுகின்றது.

மக்கள் வங்கியின் முதன்மை வர்த்தக அலகானது நாட்டிலுள்ள ஒரு முன்னணி முதன்மை வர்த்தகர்களுள் ஒன்றாகும். உயர் விளைவினையுடைய திறைசேரி உண்டியல்களில் முதலீடு செயய்ததன் மூலம் 2023 இன் போது முதன்மை வர்த்தக அலகானது வருமானத்திற்கு கணிசமான பங்களிப்பினை செய்தது. இது வட்டி வீத போக்குகளின் கவனமான மதிப்பீடுகளின் அடிப்படையில் நேரகாலத்தில் முதலீடுகள் மேற்கொண்டமையினாலாகும். அந்நிய செலாவணி இலாபங்கள் போன்ற ஏனைய வருமானப் பிரிவுகள், மூலதன இலாபங்கள் மற்றும் கட்டண வருமானத்தினால் துணையளிக்கப்பட்டு வலுவான இலாபங்களை வெளிக்காட்டியது.

வங்கியின் அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் தொடர்பாக, சமீப வருடங்களில் மிகவும் சவால் மிக்க நேரமானது 2022 இல் காணப்பட்டவேளை, வங்கியானது 2023 இல் முற்றாக மீட்டெழுந்தது. முன்னெப்போதும் நிகழ்ந்திராத மட்டங்களிலான திரவத்தன்மை நெருக்கடியானது கோவிட் தொற்றினால் பலவீனமடைந்த பொருளதாரம் மற்றும் கடுமையான ரூபாய் பெறுமதியிறக்கம் என்பவற்றால் உடன்சேர்ந்து இது அந்நிய செலாவணி திரவத்தன்மையிலான கடுமையான பற்றாக்குறையினால் மேலும் பெருப்பிக்கப்பட்டது. வெளிநாட்டு கடன் மீள்செலுத்தல் கடப்பாடுகள் தொடர்பாக முகங்கொடுத்த சிரமங்களைத் தொடர்ந்து இலங்கையின் இறையாண்மை தரப்படுத்தலானது தரமதிப்புக்குறைக்கப்பட்டது. எதிர்வரும் சந்தை உறுதியின்மையினை எதிர்பார்த்து, திறைசேரிப் பிரிவானது வெளிநாட்டு நாணய காசுப் பாயச்சல்களை ஒழுக்கமைப்பதற்காக வெளிநாட்டு நாணய கடப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கு விரைந்து செயலாற்றியது. அதேவேளை, பிரதானமான அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு துணையளிப்பதற்கு USD ஒதுக்கீடுகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டன.

2023 இல் வங்கியின் திரவத்தன்மை மட்டங்கள் முற்றாக மீளெழுந்ததுடன் வங்கி வெளிநாட்டு நாணயம் மற்றும் இலங்கை ரூபாயில் மிகையான திரவத்தன்மை நிலைமைகளை அனுபவித்தது. இந்த மீட்டலுக்கு, ஒரு சௌகரியமான மட்டத்தில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையினை பராமரிப்பதற்கான திறைசேரி அலகின் நேரகாலத்துடனான செயலாகும். 2023 ஆம் வருடத்தின் ஆரம்பத்தில், போக்குவரத்து மற்றும் சக்தி துறைகளது தேவைகளை சந்திப்பதற்கான எரிபொருள் இறக்குமதி போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டன. அதேபோன்று, ஏனையவற்றுக்கிடையில் மருந்துவகைகள், நிலக்கரி, உரம் ஆகியவற்றின் இறக்குமதிக்கும் நிதி ஒதுக்கப்பட்டது. வங்கியின் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை நிலைமையானது 2023 இன் இறுதிப் பாகத்தில் மீண்டெழுந்தது. இதற்கு தொடர்ச்சியாக அதிகரித்த உள்வாரி பணமனுப்பல்கள், இதன்மூலம் 2022 உடன் ஒப்பிடும்போது உள்வாரி பணமனுப்பல்களில் வங்கியின் சந்தைப் பங்களிப்பானது விரிவடைந்தது. வங்கியின் ஏற்றுமதி வருவாயும் 2023 இல் அதிகரித்ததுடன் அது மீண்டும் வங்கியின் அந்நிய செலாவணி ஒதுக்கங்களுக்கு பங்களிப்பு செய்தது.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

கடந்த காலங்களில் திறைசேரி அலகானது பல்வேறு நிதியளித்தல் மூலங்கள் மற்றும் வெளிநாட்டு எதிர்தரத்தவர்களுடன் திடமான உறவினை பராமரித்துள்ளதுடன், இந்த உறவுகளை சூழ்நிலை மேம்படும்போது எதிர்காலத்தில் பயன்படுத்தலாம். இது தொடர்பில், வங்கியானது ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் இந்த தரத்தவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதுடன், இவை ஒரு சாத்தியமான விளைவினை கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேசமயம், சந்தை நிலைமைகள் மேம்படும்போது, வங்கியின் அந்நிய செலாவணி மட்டங்கள் 2024 இல் ஒரு உயர்நோக்கிய பாதையினை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மறு புறத்தில் அரசாங்கப் பிணையங்களிலான விளைவுகள் வட்டி வீத அசைவுகளில் தங்கியுள்ளதுடன், அது ஓரளவிற்கு முன்கணிக்கவியலாது உள்ளது. எவ்வாறாயினும், திறைசேரிப் பிரிவானது அதன் தேக்கங்களின் மூலோபாய முகாமைப்படுத்தலூடாக வருவாய்களை மேம்படுத்துவதற்கு முற்றாக கடப்பாட்டுடன் உள்ளது.

புதிய வாடிக்கையாளர் பிரிவுகளை இலக்குவைப்பதன் மூலம் வணிக வளர்ச்சிக்கான வங்கியின் திட்டங்களுக்கு துணையளிப்பதற்காக, திறைசேரி அலகானது 2022 இலிருந்து அதன் விற்பனை அணியின் நடவடிக்கைகளை விரிவாக்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, திறைசேரி அலகானது, அதன் வணிக நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு நன்கு தயாராயுள்ளதுடன், குறிப்பாக, 2024 இல் கூட்டாண்மைகளுக்கு அதிக சேவைகள் வழங்குவதனூடாக அதன் முதலீட்டு வங்கியியல் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றது. 2023 இல் சந்தை நிலைமைகள் மீட்சியினை ஆரம்பித்துள்ளதுடன், தொடர்ச்சியான சந்தை மீட்சியானது முதலீட்டு வங்கியியலுக்கான சந்தைக் கேள்வியினை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலாக, மக்கள் வணிக நாமத்துடன் இணைந்துள்ள கௌரவம் மற்றும் நம்பிக்கையுடன் அலகானது வாடிக்கையாளர்களுக்கு அதன் சேவைகளை விரிவாக்குவதற்கு தயாராயுள்ளது.

வணிகப் பிரிவு மீளாய்வுகள்

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்



தொழிலாளர்கள் பணமனுப்பல்கள் பெறுமதி கீழ்காணும் சதவீதத்தால் அதிகரித்துள்ளது

75%



இன்னொருவருடன் புதிய உறவுகள்

10

பணமனுப்பல் பங்காளிகள்



பீபள்ஸ் FX வியூச்சர் ப்ளஸ்

வெளிநாட்டு நாணய நிலையான வைப்பு ஆரம்பிக்கப்பட்டது



ஒரு பணமனுப்பல் கண்காணிப்பு

ஆரம்பிக்கப்பட்டது



மக்கள் வங்கி "பீபள்ஸ் ரெமிட்டன்ஸ் வாசி கோட்டியய்" சீட்டிழுப்பினை தொடர்ச்சியாக 2ஆவது ஆண்டாக வெற்றிகரமாக நடாத்தியதுடன் இது இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை முறையான வழிகளூடாக பணமனுப்புவதனை ஊக்குவிப்பதற்காகும்.

புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பணமனுப்பல் சேவைகளை வழங்குவதற்கான ஒரு தனிப்பபனாக்கப்பட்ட பிரிவாக, ஏற்றுமதியாளர்கள், முதலீட்டாளர்கள் ஆகியோருக்கு 2023 இல் ஆரம்பிக்கப்பட்டது. வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், வங்கியின் அந்நிய செலாவணி ஒதுக்கங்களை மேம்படுத்துவதற்கான வங்கியின் ஒட்டுமொத்த மூலோபாயத்திற்கு துணையளித்ததுடன், இது அதன் சர்வதேச எட்டுதலை விரிவாக்குவதற்காக உள்வாரி பணமனுப்பல்கள் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புகளை வேண்டி பிரச்சாரம் செய்வதன் மூலமாகும்.

2023 இல், வங்கியின் தொழிலாளர் பணமனுப்பல்களின் பெறுமதி 2022 உடன் ஒப்பிடும்போது 75% ஆல் அதிகரித்தது.

31.12.2023 இல் உள்ளவாறான வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புகள் ரூபா 299.7 பில்லியன் ஆகும்.

2023 இல் இப்பிரிவின் முக்கிய முன்னெடுப்புகளுள் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

- வெளிநாட்டு பரிவர்த்தனை இல்லங்களில் மேலும் 6 மக்கள் வங்கியின் பிரதிநிதிகளை அமர்த்தியதுடன், இது மொத்த பிரதிநிதிகளின் எண்ணிக்கையினை 12 ஆக உயர்த்தியது.
- அதன் பணமனுப்பல் பங்காளிகள் வலையமைப்பினை நீடித்தது. இது பத்து புதிய பங்காளிகளுடன் புதிய உறவினை நிறுவியதன் மூலம் ஏற்பட்டது.
- வெஸ்டர்ன் யூனியன் கொடுக்கல் வாங்கல்களை மேம்படுத்துவதற்காக பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி ஒரு உப முகவராக நியமிக்கப்பட்டது.
- உள்வாரி பணமனுப்பல்களின் தடையற்ற செயன்முறைக்காக வருடம் பூராவும் தொடர்ச்சியான தொழில்நுட்ப புத்தாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- உலகெங்கும் காணப்படும் புலம்பெயர் தொழிலாளர்களை இலக்குவைத்து பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- மக்கள் வங்கி "பீபள்ஸ் ரெமிட்டன்ஸ் வாசி கோட்டியய்" சீட்டிழுப்பினை தொடர்ச்சியாக 2ஆவது ஆண்டாக 1 ஜனவரி 2023 முதல் 31 டிசம்பர் 2023 வரையான காலத்திற்கு வெற்றிகரமாக நடாத்தியது. இது இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை முறையான வழிகளூடாக பணமனுப்புவதனை ஊக்குவிப்பதற்காகும். வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பின் வெற்றியாளர் தெரிவுசெய்யப்பட்டு

மாபெரும் பரிசான ரூபா 10 மில்லியன் வழங்கப்பட்டது. மேலாக, இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசில்களாக முறையே ரூபா 3 மில்லியன் மற்றும் ரூபா 2 மில்லியன் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ஒரு வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு ரூபா 1 மில்லியன் வழங்கப்படுவதுடன் வாராந்த வெற்றியாளர்களுக்கு ரூபா 100,000 வழங்கப்படுகின்றது.

- "துா தரு எதெர இசுர" பிள்ளைகளுக்கான வெளிநாட்டு நாணய கணக்கானது மேலதிக சிறப்பம்சங்களுடன் மீள் நிலைப்படுத்தப்பட்டது.

- ஒரு புதிய கருவியான, பீபள்ஸ் FX வியூச்சர் ப்ளஸ் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைப்பானது மக்கள் வங்கிக்கு நீண்டகாலத்திற்காக அதிக புதிய வெளிநாட்டு நாணய வைப்புகளை கவர்வதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

- புலம்பெயர் தொழிலாளர்களுக்கு புறப்படுவதற்கு முன்னர் நிதியளிப்பதற்கு, வீடமைப்பதற்கு மற்றும் கல்விக்கு மற்றும் ஏனைய நோக்கங்களுக்காக விசேட கடன் வசதிகள் ஊக்குவிக்கப்பட்டன.

தொழில்நுட்ப மேம்பாடுகள்

2023 இன் இறுதியில், மக்கள் வங்கி நாட்டில் மிகவும் நவீன பணமனுப்பல்கள் சேவைகளில் ஒன்றாக அதனை ஒருக்கிணைத்துக் கொண்டதுடன், இது உயர் தொழில்நுட்ப பாதுகாப்பான அமைப்புமுறையினால் துணையளிக்கப்பட்டது. வங்கியின் பணமனுப்பல் முறைகள் முற்றாக ஒருங்கிணைக்கப்பட்டதுடன், உதாரணமாக, ஏனைய வங்கிகளுக்குள்ளான உள்வாரி பணமனுப்பல்கள் உள்ளடங்கலாக மெய் நேர கொடுக்கல் வாங்கல்கள். உயர்ந்த மட்டத்திலான வாடிக்கையாளர் சௌகரியத்திற்கு வசதியளிப்பதற்காக வங்கியானது, அதன் சொந்த பீபள்ஸ் ரெமிட்டன்ஸ், பீபள்ஸ் இன்ஸ்டன்ட் ரெமிட், பீபள்ஸ் வெப் ரெமிட் மற்றும் ஏனைய உலகளாவிய எனிவெயார் பேஹவுட் மேடைகள், வெஸ்டர்ன் யூனியன் மற்றும் ரியா உள்ளடங்கலான SWIFT போன்ற பன்முகமான பணமனுப்பல் முறைகளை பராமரிக்கின்றது.

- ஒரு பணமனுப்பல் கண்காணிப்பானது ஒக்டோபர் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது வாடிக்கையாளர்கள் எமது கூட்டாண்மை இணையத்தளத்தினூடாக அவர்களது பணமனுப்பல் நிலையினைக் கண்காணிப்பதற்காகும்.

அந்நிய செலாவணி தேவைகளுக்கான அவசியத்தினை நாம் இனங்கண்டுள்ளதுடன், வங்கியின் வெளிநாட்டு பணமனுப்பல் தளத்தினை விரிவாக்குவதற்காக பல்வேறு பயனுறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இவை இவ்வாண்டின்போது எதிர்வுகூறப்பட்ட தொகைக்கும் மேலாக வெளிநாட்டு பணமனுப்பலை மேம்படுத்துவதற்காகும். இதன் விளைவாக, உயர்வான பணமனுப்பல் உட்பாய்ச்சலுடன் வங்கியானது அதன் அனைத்து அந்நிய செலாவணி கடப்பாடுகளை உள்ளூரிரும் மற்றும் வெளிநாட்டு வங்கிகளுக்கும தீர்ப்பனவு செய்வதற்கு இயலுமையாயிருந்தது.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் புலம்பெயர்ந்தோரது தேவைகளுக்கு உணர்வுடையதாகவும் பதிலளிப்பதாகவும் தொடர்ந்து காணப்படும்வேளை, அதன் சர்வதேச பிரசன்னத்தை விரிவாக்குவதிலும், அதன் புலம்பெயர் மற்றும் வெளநாட்டு வாடிக்கையாளர் தளத்தினை அதிகரித்தல் மற்றும் த.தொ. புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துதல், முன்னிறுத்தம் செய்யப்படுவதுடன் இது புலம்பெயர்ந்தோருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் மேம்பட்ட சௌகரியத்தினூடாக பெறுமதி சேர்க்கைகளை உருவாக்குவதற்காகும்.

சர்வதேச வங்கியியல்

மீ

110 நாடுகளிடையே

1000

வெளிநாட்டு தொடர்பு வங்கி வலையமைப்புகள்

மீள்சான்றளிப்பு

ISO 9001: 2015

மற்றும்

2015 SLS 9001: 2015

வர்த்தக நிதியளித்தல் சேவைகளுக்கான சான்றளிப்பு

3,900

எண்ணிக்கையிலான

ஏற்றுமதி கொடுக்கல் வாங்கல்கள்

12,553

எண்ணிக்கையிலான

இறக்குமதி கொடுக்கல் வாங்கல்கள்



வங்கிக்கு அப்பால் அதன் நிபுணத்துவத்தினை வழங்கும் இப்பிரிவானது ஏனைய நிறுவனங்களுக்கும் வர்த்தக நிதியளிப்பில் பயிற்சிகளை வழங்கியது.

சர்வதேச வங்கியியல் பிரிவானது அதன் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் கிளைகளின் வாடிக்கையாளர்களுக்கும் சர்வதேச வணிக நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கின்றது. இது அனைத்து வர்த்தக நிதியளித்தல் வசதிகள் உள்ளடங்கலான பலதரப்பட்ட கருவிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காகும். இந்த சேவைகள் கரைகடந்த வங்கியியல் அலகு உள்ளடங்கலான மையப்படுத்தப்பட்ட செயற்பாட்டு அலகுகளினால் வழங்கப்படுவதுடன், இவை 110 நாடுகளிலுள்ள 1000 இற்கும் அதிகமான வெளிநாட்டு தொடர்புகள் வங்கி வலையமைப்பினைக் கொண்டுள்ளன.

சர்வதேச வங்கியியல் பிரிவானது அதன் ISO 9001: 2015 மீள்சான்றளிப்பினை பெறக்கூடியதாகவும் மற்றும் வர்த்தக நிதியளித்தல் சேகைளுக்காக மீண்டும் ஒருமுறை SLS 9001: 2015 சான்றளிப்பினை பெறக்கூடியதாகவும் இருந்தது. இவை சர்வதேச வர்த்தக கொடுக்கல் வாங்கல்களுக்கான மக்கள் வங்கியின் செயன்முறைகள் மற்றும் சேவைகளின் சர்வதேச நியமத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

இப்பிரிவானது வங்கியின் இறக்குமதி-ஏற்றுமதி கலவையினை மீள்சமநிலைப்படுத்தும் வங்கியின் ஒட்டுமொத்த மூலோபாயத்திற்கு துணைபுரிந்தது. இது அரச உடைமை நிறுவனங்களுக்கான வெளிப்பாட்டினைக் குறைப்பதன் மூலமும் நாட்டின் ஏற்றுமதி துறையில் வங்கியின் பங்கினை விரிவாக்குவதின் மூலமும் ஆகும். இப்பிரிவானது, தனித்துவமாக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சிகளை, நிறுவன வங்கியியல் அலகு, பிராந்திய கடன் அலகுகள், கிளை ஊழியர்கள் மற்றும் கூட்டாண்மை பிரிவு ஆகியவற்றிற்கு வழங்கியதுடன் இது ஏற்றுமதியாளர் வாடிக்கையாளர் தளத்தினை கவர்ந்து விரிவாக்குவதற்காகும்.

வங்கிக்கு அப்பால் அதன் நிபுணத்துவத்தினை வழங்கும் இப்பிரிவானது ஏனைய நிறுவனங்களுக்கும் வர்த்தக நிதியளிப்பில் பயிற்சிகனை வழங்கியது.

செயற்திறன் கண்ணோட்டம் 2022 எதிர் 2023

கருவிப் பிரிவுகள்	செயற்திறன் கண்ணோட்டம் 2023	வணிகப் பெறுமதி 2022 ரூ. மில்.	வணிகப் பெறுமதி 2023 ரூ. மில்.
இறக்குமதிகள்	இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் அந்நிய செலாவணி வரையறைகளின் காரணமாக வீழ்ச்சியடைந்த வணிகப் பருமன்கள், அனேகமான பொருட்களிலான இறக்குமதி கட்டுப்பாடுகளின் அகற்றலினைத் தொடர்ந்து மே 2023 இன் பின்னர் மாத்திரமே மீண்டெழுவதற்கு ஆரம்பித்தது. வருடத்தின் இறுதியியல் இறக்குமதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்தன. இறக்குமதியாளர்களின் வணிகத்திலான முன்னேற்றங்கள் மற்றும் வங்கியின் தரகு வீதங்களிலான குறைப்பும் இறக்குமதி சேவைகளுக்கான கேள்விக்கு துணையளித்தது. எவ்வாறாயினும், 2023 இல் வங்கி மேற்கொண்ட மொத்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியானது 2022 மட்டங்களுக்கும் பார்க்கக் குறைவாக இருந்ததுடன், இதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை நிறுத்தியதும் காரணமாயிருக்கலாம். 2023 இல் இறக்குமதி கொடுக்கல் வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 12,553 ஆக காணப்பட்டதுடன் இது 2022 இல் 14,608 ஆக காணப்பட்டது.	1,131,095	972,792
ஏற்றுமதிகள்	வங்கியானது 2023 இல் ஏற்றுமதி சேவைகளை வலியுறுத்தியதுடன், ஏற்றுமதி வாடிக்கையாளர் தளத்தினை வளர்ப்பதன் மூலமும் ஏற்றுமதி கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதன் மூலமும் இது தொடர்பில் குறிப்பிடத்தக்க வெற்றியினை அடைந்தது. 2023 இல் காணப்பட்ட மொத்த ஏற்றுமதி கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை 3,900 என்பதுடன் இது 2022 இல் 3,663 ஆக காணப்பட்டது.	97,763	214,236

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

சர்வதேச வங்கியியல் பிரிவானது ஏற்றுமதி தொடர்பான வணிகங்களில் அதிக முன்னிறுத்தம் செய்வதன் மூலம் அதன சந்தை பங்களிப்பினை விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றது. இப்பிரிவானது மிகவும் சௌகரியமான மற்றும் பயனுறுதியான வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதற்காக டிஜிட்டல் மேடைகள் மற்றும் கருவிகளில் பெருமளவில் தங்கியுள்ளது.

சர்வதேச வங்கியியல் பிரிவானது வங்கியின் ஆளணியினருக்கு தொழில்நுட்ப உறுதுணை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஏற்றுமதி ஆவணப்படுத்தல் மற்றும் செயன்முறை பயிற்சி ஆகியவற்றை வழங்குவதில் தொடர்ந்தும் முன்னிறுத்தம் செய்யும். இது புதிய நிதியாண்டில் வங்கியின் ஏற்றுமதிச் சேவை நியமங்களை பராமரிப்பதற்கும் ஏற்றுமதி வாடிக்கையாளர் தளத்தினை விரிவாக்குவதற்கும் ஆகும்.

கூ.ச.பொ. முன்னெடுப்புகள்

வர்த்தக நிதியளித்தல் வசதிகள் மற்றும் செயன்முறைகளில் வெளிவாரி நிறுவனங்களுக்கான பயிற்சித் திட்டங்கள் சர்வதேச வங்கியியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கூ.ச.பொ. முன்னெடுப்புகளில் ஒன்றாகும். 2023 இல் இப்பிரிவானது இலங்கை வான்படை, சிலோன் உரக் கம்பனி, கொழும்பு கொமர்ஷல் கம்பனி ஆகியவற்றுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்தியது. இத்திட்டங்கள் நிறுவனங்களிடையே உறவினைக் கட்டியெழுப்புவதற்கு பெருமளவில் உதவியவேளை வர்த்தக நிதியளித்தல் செயன்முறைகளில் விழிப்புணர்வினையும் மேம்படுத்தியது.

வணிகப் பிரிவு மீளாய்வுகள்

த.தொ. மற்றும் டிஜிட்டல் வங்கியியல்

2.3 மில்
எண்ணிக்கையான
டிஜிட்டல் சிற்றளவு வாடிக்கையாளர்கள்

13,100+
எண்ணிக்கையான
டிஜிட்டல் கூட்டாண்மை வாடிக்கையாளர்கள்

3.8 மில்.
டிஜிட்டல் கணக்குகள்

98.3 மில்.
கொடுக்கல் வாங்கல்கள்
இயங்கலை மற்றும் மொபைல் வங்கியியலினூடாக



மக்கள் வங்கியானது அதன் மொபைல் செயலி - பீபள்ஸ் வேவ் மற்றும் பீபள்ஸ் பே உடன் ஒரு மைல்கல்லான 2 மில்லியன் டிஜிட்டல் சிற்றளவு வாடிக்கையாளர் தளத்தினை எட்டியது. வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி உருவாக்குவதற்காகவும் மத்திய வங்கியின் கொள்கையான பணமற்ற நிதியியல் முறைமைக்கு துணையளிப்பதற்காகவும் பல புதிய டிஜிட்டல் தீர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மக்கள் வங்கியின் 2023-2026 டிஜிட்டல் மயமாக்கல் மூலோபாயமானது த.தொ. பிரிவு மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் பிரிவு ஆகிவற்றுக்கிடையேயான தொடர்ச்சியான ஒத்துழைப்பினூடாக செயலாற்றப்பட்டது. இது வங்கியின் வணிக அலகும் மற்றும் கிளை வலையமைப்பு பூராவும் மிகவும் வினைத்திறனான டிஜிட்டல் தீர்வுகளை விநியோகிப்பதற்காகும்.

சிற்றளவு வங்கியியல் தீர்வுகள்

2023 இன் போது மக்கள் வங்கியானது அதன் மொபைல் செயலி - பீபள்ஸ் வேவ் மற்றும் பீபள்ஸ் பே உடன் ஒரு மைல்கல்லான 2 மில்லியன் சிற்றளவு வாடிக்கையாளர் தளத்தினை எட்டியது. இந்த எண்ணிக்கையில் பெரும்பாலும் 85% ஆனோர் மேல் மாகாணத்திற்கு வெளியே காணப்படுவதுடன் இது மக்கள் வங்கியின் டிஜிட்டல் அணுகலின் விரிவாக்கத்தினை குறிப்பிடுகின்றது. தற்போது மாதத்திற்கு 8 மில்லியன் டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி உருவாக்குவதற்காகவும் மத்திய வங்கியின் கொள்கையான பணமற்ற நிதியியல் முறைமைக்கு துணையளிப்பதற்காகவும் பல புதிய டிஜிட்டல் தீர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- ஒரு செயற்கை நுண்ணறிவு அடிப்படையான செட் பொட் மக்கள் வங்கியின் இணையத்தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டது. இது வாடிக்கையாளர்களுக்கும் இணையத்தளத்திற்கு விஜயம் செய்வோருக்கும் துணையளிப்பதற்காகும். செட் பொட் பதிலளிக்க இயலாதபோது வருகையாளர் தன்னியக்கமாக மனித தலையீட்டிற்காக ஒரு அழைப்பு மத்திய நிலையத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றார்.

- QR கொடுப்பனவு தீர்வுகள் POS இயந்திரங்களுக்கான QR வசதிகளை இயலுமையாக்குவதன் மூலம் மேம்படுத்தப்பட்டன.

- மக்கள் வங்கி "வீசா" உடன் கூட்டு சேர்ந்து வங்கியின் QR வர்த்தகர்களுக்கு "வீசா நியமங்கள்" இனை அறிமுகப்படுத்தியது.

- ஒரு மொபைல் தொலைபேசி அடிப்படையிலான POS தீர்வானது சிறிய மட்டத்திலான வர்த்தகர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இது வழமையான POS இயந்திரங்களுக்கு குறைந்த செலவிலான ஒரு மாற்றீடாகும் என்பதுடன் நாட்டில் அட்டை கொடுக்கல் வாங்கல்களுக்கு பரவலான பாவனைக்கு வசதியளிக்கும்.

- நடைமுறையிலுள்ள சிற்றளவு கடன் உருவாக்குதல் முறையானது அனைத்து கிளைகளுக்கும் வழங்கப்பட்டதுடன், நாடு பூராவுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு விரைவான மற்றும் மிகவும் சௌகரியமான பகிர்ந்தளிப்பினை இயலுமையாக்குகின்றது.
- வாடிக்கையாளர்கள் அவர்களது கணக்கு மீதியினை SMS ஊடாக அவர்களுக்கு விருப்பமான மொழியில், வங்கியின் அழைப்பு மத்தியநிலையத்திற்கு ஒரு தவறவிட்ட அழைப்பினை அழுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
- பீபள்ஸ் ரெமிட்டன்ஸ் ட்ரெக்கர் மொபைல் செயலியானது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இதனால் அவர்கள் இலங்கைக்கு அவர்களது பணமனுப்பல் நிலையினைத் தெரிந்தகொள்ளலாம்.
- ஒரு புதிய, மையப்படுத்தப்பட்ட, அடகு பிடித்தல் முறையானது அனைத்து கிளைகளுக்கும் அமுல்படுத்தப்பட்டது. இம்முறையானது மையப்படுத்தப்பட்டமையினால் வாடிக்கையாளர்கள் அடகு பிடித்தல் சேவையினை வங்கியின் எந்த கிளையிலும் பெற்றுக்கொள்ள இயலுமையாயுள்ளது.

கூட்டாண்மைத் தீர்வுகள்

வங்கியின் டிஜிட்டல் தீர்வுகள் கூட்டாண்மை வாடிக்கையாளர் தளத்தினை விரிவாக்குவதில் ஒரு முக்கிய மதிப்பு முன்மொழிவாகும். 2023 இல் வங்கியானது அதன் அதி நவீன, கூட்டாண்மை சார்ந்த, நிதியியல் தீர்வுகளை ஊக்குவிப்பதன் மூலம் புதிய கூட்டாண்மை வாடிக்கையாளர்களைக் கவர்வதில் மிகவும் வெற்றியடைந்தது.

மேலாக, வங்கியானது அரசாங்க நிறுவனங்களின் கொடுப்பனவு திரட்டல்களை டிஜிட்டல்மயமாக்குதில் செயலூக்கமாக ஈடுபட்டது. இது பொதுமக்கள் கணிசமாக நலனடைந்துள்ள கொடுப்பனவுகள் மற்றும் திரட்டல்களுக்கான பல்வேறு டிஜிட்டல் தீர்வுகளினூடாகும்.

2023 இன் போது:

- கூட்டாண்மை கடன் உருவாக்கல் முறையானது மேலும் மேம்படுத்தப்பட்டது.
- கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு அவர்களது குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் தனிப்பயனாக்கப்பட்ட கொடுப்பனவுத் தீர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

முன்னேற்றக் குறிகாட்டிகள் 2022 எதிர் 2023

	2022	2023
மேல்மாகாணத்திற்கு வெளியேயுள்ள ATM, CDM மற்றும் CDM இயந்திரங்களின் எண்ணிக்கை	815	778
டிஜிட்டல் சிற்றளவு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை	1.5 மில்.	2.3 மில்.
டிஜிட்டல் கூட்டாண்மை வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை	9700+	13100+
டிஜிட்டல் கணக்குகளின் எண்ணிக்கை	2.7 மில்.	3.8 மில்.
வருடத்திற்கு இயங்கலை மற்றும் மொபைல் வங்கியியலிலூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை	77.4 மில்.	98.3 மில்.
வருடத்திற்கு இயங்கலை மற்றும் மொபைல் வங்கியியலிலூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி	ரூ. 623.3 பில்.	ரூ. 1042 பில்.

உயர் கிடைக்கும்திறன் மற்றும் பேரிடர் மீட்பு

வங்கியானது அதன் முக்கியமான பணி முறைமைகளின் உயர் கிடைக்கும்திறன் மற்றும் பேரிடர் மீட்பு ஆற்றலினை மேம்படுத்துவதில் முதலீடு செய்துள்ளது. அனைத்து முக்கிய பணி முறைமைகளதும் பேரிடர் மீட்பு தளத்திற்கு மெய் நேர பிரதிசெய்கை தற்போது அமுலாக்கப்பட்டதுடன் வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் பிரயோகங்களின் கிடைக்கும்திறன் இன்றைய போட்டித்தன்மையான வணிகச் சூழலில் மிகவும் முக்கியமானதாகும்.

SD-WAN அமுலாக்கம்

வங்கியானது 2023 இல் நாடு பூராவுமுள்ள 375 கிளைகளை உள்ளடக்கிய SD-WAN தொழில்நுட்பத்தினை அமுல்படுத்தியது. இதுவே இலங்கையில் நிதியியல் துறையினுள் உள்ள மிகப்பெரிய நிறுவலாக்கமாகும்.

SD-WAN, ஒரு அதிநவீன வலையமைத்தல் தொழில்நுட்பமானது, நிறுவனங்களை பயனாளர்களுடன், செயலிகளுடன், மற்றும் பன்முகமான இடங்களிலுள்ள தரவுகளுடன், பாதுகாப்பாக இணைப்பதற்கு வலுவளிப்பதுடன், செயற்பாட்டில் வேகம், பாதுகாப்பு மற்றும் நெகிழ்வுத்தன்மையினை மேம்படுத்துகின்றது.

பயன்பாட்டின் முக்கிய அம்சங்கள் கொழும்பு 02 இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்திலுள்ள ஒரு மத்திய SD-WAN மையத்தினை உள்ளடக்குவதுடன், அது தடையற்ற சேவையினை உறுதிசெய்வதற்காக மிகைமை பேரிடர் மீட்டல் வழிமுறைகளுடன் வலுப்படுத்தப்பட்டுள்ளது. SD-WAN தொழில்நுட்பத்தினை கடைப்பிடிப்பதன் மூலம் மக்கள் வங்கி செலவுச் சிக்கனம், வலையமைப்பு போக்குவரத்தினை உகப்பாக்குதல், WAN சுற்றின் செலவுகளைக் குறைத்தல், முகாமைப்படுத்தலை மையப்படுத்துதல் நோக்கிய முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்தப் பயன்பாடானது வெளித்தோன்றும் தொழில்நுட்ப நிலத்தோற்றத்துடன் ஒருங்கிணைவதுடன் டிஜிட்டல் வங்கியியல் புத்தாக்கத்தில் மக்கள் வங்கி அதன் முதன்மை நிலையினை திடப்படுத்துகின்றது.

த.தொ. அமைப்புமுறை பாதுகாப்பு 2023 இல்

- ISO 27001 தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறையானது 2023 இல் புதுப்பிக்கப்பட்டதுடன், இது த.தொ. பாதுகாப்பில் சர்வதேச தரங்களை பராமரிக்கின்றது.
- தகவல் அமைப்புமுறைகள் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அடிப்படை பாதுகாப்பு வழிகாட்டிகளுடன் ஒருங்கிணைந்துள்ளன.
- வாடிக்கையாளர் தரவுகளை பாதுகாப்பதற்காக, த.தொ. அமைப்புமுறை கணக்காய்வுகள் ஒரு வெளிவாரி கணக்காய்வாளரினால் ஒவ்வொரு காலாண்டும் நடாத்தப்பட்டன.
- தகவல் பாதுகாப்பு கொள்கையானது வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுவதுடன் அமைப்புமுறைகள் மற்றும் அமைப்புமுறை கட்டுப்பாடுகள் தரமுயர்த்தப்படுகின்றன.
- இறுதிப் புள்ளி பாதுகாப்புத் தீர்வுகள் புதிய அம்சங்களுடன் மறுசீரமைப்பு செய்யப்பட்டன.
- இணையத்தளம் மற்றும் ஏனைய சமூக ஊடகங்கள் சைபர் தாக்குதல்களை தவிர்ப்பதற்காக வழக்கமாக கண்காணிக்கப்படுகின்றன.
- ஒரு இணையத்தள ஏமாற்ற ஒப்புருவாக்கப் பயிற்சியானது அனைத்து பிரிவுகளிலுமுள்ள ஊழியர்களுக்கும் இடம்பெற்றதுடன், இது இணையத்தள ஏமாற்றல் தாக்குதல்களில் விழிப்புணர்வினை எழுப்புவதற்காகும்.
- பேரிடல் மீட்டலுக்காகா மெய் நேர பிரதிசெய்கை மேம்படுத்தப்பட்டது.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

த.தொ. மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் பிரிவுகள், தொடர்ச்சியான டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மாற்றீடுகளூடாக வங்கியின் கிளைகளுக்கான விஜயங்களை சிறுமமாக்கும் வங்கியின் குறிக்கோளில் முன்னிறுத்தம் செய்யும்.

- 2024 இல் செயற்கை நுண்ணறிவினை பயன்படுத்தி செயன்முறை தன்னியக்கமாக்கலில் முன்னிறுத்தம் செய்யப்படும். தன்னியக்கமாக்கல் செயன்முறையினை வரையும் வங்கி முழுவதுமான செயற்பாடானது முன்னெடுக்கப்பட்டது.
- வங்கி அதன் கொடுப்பனவு மையம், ATM, POS இணையக் கொடுப்பனவு வாயில்கள் மற்றும் மொபைல் செயலிகளில் ஒரு மறுசீரமைப்பு திட்டமிடப்பட்டுள்ளதுடன், இது 2024 இன் நடுப்பகுதியில் செயலில் இருக்கும். புதிய ATM மற்றும் அட்டை முகாமைத்துவ முறையுடன், வங்கியானது CUP போன்ற அதிக அட்டை திட்டங்களை வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. மேலும், வங்கியானது பயண அட்டைகள், இணைய அட்டைகள், இ-வொலட், கிரீன் பின், அட்டையற்ற பணம் எடுத்தல் போன்றவற்றை வழங்கவதற்கு திட்டமிட்டுள்ளது.
- ஒரு மோசடி முகாமைப்படுத்தல் முறையானதும் புதிய ATM இணைப்பி, மற்றும் அட்டை முகாமைத்துவ முறைகளுடன் அறிமுகப்படுத்த உள்ளதுடன் இவை வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும்.

சந்தைப்படுத்தல்

துறையின் உயர்ந்த மனதின் மேல் விழிப்புணர்வு (கூட்டாண்மை வணிகநாமம்)

36%

வணிகநாமத்திற்கு வழங்கப்பட்டது

AAA

உயர்ந்த வணிகநாம உரித்துவ புள்ளிகள்

4.0

அனைத்து
இலங்கை வங்கிகளிலும்

அனைத்து இலங்கை வங்கிகளிடையே பாரிய சந்தாதாரர் தளம்
YouTube

2ஆவது பெரிய இரசிகர் தளம்
Facebook



2023 இன் இறுதியில், இலங்கையிலுள்ள வங்கிகளிடையே, மக்கள் வங்கியானது ஒரு திடமான சமூக ஊடக பிரசன்னத்தை அனுபவதித்துள்ளது, டிக் டொக்கில் பாரிய பின்பற்றுநர்கள் தளம், யூ டியூப்பில் பாரிய சந்தாதாரர் தளம் மற்றும முகப்புத்தகத்தில் 2ஆவது பாரிய இரசிகர் தளம் என்பவையாகும்.

வங்கியின் பிரதான குரலாக சந்தைப்படுத்தல் பிரிவு காணப்படுவதுடன், இது மக்கள் வங்கி வணிகநாமத்தினை ஒரு நவீன, இயக்காற்றலான, தொழில்நுட்பத்தால் வழிநடத்தப்பட்ட மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய நிதியியல் சேவைகள் வழங்குநராக நிலைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. இப்பிரிவானது கருவிகள் மற்றும் சேவைகளை விளம்பரப்படுத்தவதற்கு, வங்கியினால் முகங்கொடுக்கப்படும் நற்பெயருக்கான இடர்கள், புதிய சந்தைப் பிரிவுகளான மிலெனியல்கள், ஜென் Z, உயர் மதிப்புடையோர் மற்றும் கூட்டாண்மைகள் ஆகியோரை கவர்வதற்கான தொடர்பாடல்களுக்கான உறுதுணையினை வழங்குவதுடன் மற்றும் அதன் பாரம்பரிய வெகுஜன சந்தை வாடிக்கையாளர் தளத்தினை பலப்படுத்துவதற்கும் துணைபுரிகின்றது. துணையற்ற வங்கியியல் வழிமுறைகளை பயன்படுத்துவதில் இலங்கையின் பொதுமக்களை ஊக்குவிப்பதற்கு சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் பயன்படுத்துப்படுவதுடன் இதன்மூலம் உள்ளக வினைத்திறன்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் நோக்கிய தேசிய இயக்கத்திற்கு துணையளிக்கின்றது.

இன்று, வங்கியானது அனைத்து டிஜிட்டல் வழிகளிலும் மற்றும் சமூக ஊடகங்களிலும் அதன் வணிகநாம பிரசன்னத்தையும் தொடர்பாடல்களையும் முழுவதுமான ஒருங்கிணைத்துள்ளதுடன், இலங்கையின் அடுத்த சந்ததியுடன் ஈடுகொடுக்கின்றது. இந்த முயற்சிகள் வங்கியின் பிரதிமையினை கணிசமானளவு நவீனமாக்கியுள்ளதுடன் அதன் வாடிக்கையாளர் தளத்தினை வளர்ச்சியடையும் பிரிவான மிலெனியல்கள் மற்றும் ஜென் Z உடன் புத்துயிரளித்துள்ளது. 2023 இன் இறுதியில், இலங்கையிலுள்ள வங்கிகளிடையே, மக்கள் வங்கியானது ஒரு திடமான சமூக ஊடக பிரசன்னத்தை அனுபவதித்துள்ளது, டிக் டொக்கில் பாரிய பின்பற்றுநர்கள் தளம், யூ டியூப்பில் பாரிய சந்தாதாரர் தளம் மற்றும முகப்புத்தகத்தில் 2ஆவது பாரிய இரசிகர் தளம் என்பவையாகும்.

இப்பிரிவானது வங்கியின் கூட்டாண்மை சமூக பொறுப்பினை ஒட்டுமொத்த சந்தைப்படுத்தல் மூலோபாயத்தினுள் ஒருங்கிணைத்துள்ளதுடன், இதன் மூலம் வணிக நாமத்திற்கும், பெருமமான தாக்கத்திற்காக சமூக நலன் திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் நிறைவேற்றல் ஊடாக சமூகத்திற்கும் பெறுமதி உருவாக்கலை மேம்படுத்தியுள்ளது. 2023 இன் போதான வங்கியின் கூ.ச.பொ. நடவடிக்கைகளின் மேலதிக விபரங்களுக்கு இந்த அறிக்கையின் சமூக மூலதன அத்தியாயத்தினை தயவுசெய்து பார்வையிடவும்.

சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் தொடர்பான இணக்கப்பாடற்ற சந்தர்ப்பங்கள் GRI 417-3

2023 இல் மக்கள் வங்கி சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் மற்றும் / அல்லது மனமுவந்த கோவைகளுடன் எந்தவிதமான இணக்கப்பாடின்மைகளுக்கு முகங்கொடுக்கவோ, சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் அல்லது சட்டங்களுடன் இணக்கப்பாடின்மைக்காக எவ்விதமான அபராதங்கள், தண்டப்பணங்கள் அல்லது எச்சரிக்கைகளுக்கு முகங்கொடுக்கவில்லை. வைப்புக் கருவிகள் தொடர்பான அனைத்து சந்தைப்படுத்தல் பத்திரங்களும் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணக்கப்பாடு கண்டுள்ளன. அனைத்து சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் பத்திரங்களும் அவை பொது மக்களுக்கு வெளியிடப்படுவதற்கு முன்னர் முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.

வணிகத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் பொதுவாக மூன்று மொழிகளின் அடிப்படையில் நடாத்தப்படுவதுடன், கருவிகளது சிற்றேடுகள் பொருத்தமான தகவல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் ஆகக்குறைந்தது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்படுகின்றது. இவை எமது அனைத்து கிளைகளிலும் கிடைக்கப்பெறுகின்றது. வாடிக்கையாளர்கள் பிரத்தியேகமாக 24 மணித்தியால அழைப்பு மையத்துடன் கருவியின் தகவல்களுக்கு தொடர்புகொள்ளலாம். மேலாக, மக்கள் வங்கியின் மும்மொழி இணையத்தளமானது கருவிகளது பண்புகள், வட்டி வீதங்கள், பரிமாற்ற வீதங்கள், பொருத்தமான கட்டணங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான தகவல்களை வழங்குகின்றது. இத்தகவல்கள் நாளாந்தம் மீட்டல் செய்யப்படுகின்றன.

வருடத்தின் சிறப்பம்சங்கள் - முகவரை கீழ்காண்பவற்றை எடுத்துக்காட்டச் சொல்லவும்

- வரலாற்றில் முதற்தடவையாக, மக்கள் வங்கியின் வணிக நாமத்திற்கு பிரான்ட் வைனான்ஸ் லங்காவினால் முன்னைய தரப்படுத்தலான AAA- இலிருந்து AAA தரமானது 2023 இல் வழங்கப்பட்டது. இது இலங்கையில் இந்த தரத்தை அடைந்த நான்கு வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கியினை உள்ளடக்கியுள்ளது.

- வருடாந்த புலனுணர்வுகள், உளப்பாங்குகள் மற்றும் பயன்பாட்டு மதிப்பாராய்வு 2023 ஆனது மக்கள் வங்கி அனைத்து இலங்கை வங்கிகளிடையே உயர்ந்த வணிகநாம உரித்துவ புள்ளியாக 4.0 இனைக் கொண்டுள்ளதாக குறிப்பிடுகின்றது. வங்கியானது துறையின் உயர்ந்த மனநிலை விழிப்புணர்வாக 36% இனை (கூட்டாண்மை வணிகநாமம்) பராமரித்தது.

வாடிக்கையாளர் உணர்வுகளை பின்தொடர்தல்

வாடிக்கையாளர் மனப்பான்மை ஒவ்வொரு வணிகத்தினதும் ஒரு உள்ளார்ந்த அம்சமாகும். வங்கியுடனான வாடிக்கையாளரின் உறவானது கருவிகள் மற்றும் சேவைத் தரம், வாடிக்கையாளர்களுடனான ஊடாட்டம் அல்லது வங்கியின் விழுமியங்களில் ஆழமான உணர்வுகள் மற்றும் உளக்கிளர்ச்சியினை வெளிக்கொணரலாம். வாடிக்கையாளர்கள் வங்கியைப் பற்றி நேர்மறையாக அல்லது எதிர்மறையாக கதைக்கும்போது அதனை செவிமடுப்பது, கண்காணிப்பது மற்றும் அதிலிருந்து கற்றுக்கொள்வது முக்கியமாகும். எனவே, சந்தைப்படுத்தல் பிரிவானது பின்வரும் கற்கைகளூடாக வாடிக்கையாளர் உணர்வுகளை கண்காணிக்கின்றது.

- **மர்மமான வாடிக்கையாளர் மதிப்பாய்வு**

  விற்பனைத் தரம் மற்றும் வாடிக்கையாளர் சேவையினை மேம்படுத்துவதனை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் முறை இதுவாகும். ஒரு போலி வாடிக்கையாளர் (மர்ம வாடிக்கையாளர்) வங்கியின் ஊழியர்கள் சில நியமங்களுடன் இணங்கியுள்ளார்களா என சரிபார்க்கின்றது. ஒரு வாடிக்கையாளரின் மொத்த அனுபவமானது சூழ்நிலை, ஊழியர் நிபுணத்துவம் மற்றும் மரியாதை ஆகியவற்றை மதிப்பிடுவதற்கு மீளுருவாக்கப்படுகின்றது. மர்மமான வாடிக்கையாளர் மதிப்பாய்வானது பாரம்பரிய முறைகளுடன் அவதானிக்கப்படாது கடந்து செல்லும் சிக்கல்களை மதிப்பிடுவதற்கு பயனுள்ளதாகும். கண்டுபிடிப்புகள் கிளை முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய முகாமையாளர்களின் மு.செ.கு. இல் ஒருங்கிணைக்கப்படுவதுடன் இவை செயற்திறன் மதிப்பிடுதல் மற்றும் பயிற்சியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது.

- **நிகர விளம்பரப் புள்ளி**

  இது பரவலாகப் பயன்படுத்தப்படும் சந்தை மதிப்பாய்வு அளவீடாகும் என்துடன் இது பொதுவாக ஒரு தனியான மதிப்பாய்வு வினா வடிவினை எடுக்கின்றது. இது பதிலளிப்பவர்களிடமிருந்து ஒரு கம்பனி, உற்பத்தி அல்லது ஒரு சேவையினை ஒரு நண்பனுக்கு அல்லது ஒரு சகாக்கு அவர்கள் பரிந்துரைக்கும் சாத்தியப்பாட்டினை தரப்படுத்துவதாகும்.

- **புலனுணர்வுகள் மற்றும் உளப்பாங்குகள் மதிப்பாய்வு**

  இந்த மதிப்பாய்வானது ஒரு கம்பனி, உற்பத்தி, திட்டம் அல்லது ஒரு சிக்கல் பற்றிய அபிப்பிராயங்களை சேகரிக்கும் குறிக்கோளுடன் நிறைவு செய்யப்பட்ட ஒரு கற்கை, அல்லது ஆய்வுத் திட்டமாகும். அத்தகைய மதிப்பாய்வுகள் பல்வேறு தரப்பட்ட அவையோரின் அடிப்படையில் இருக்கலாம், பலதரப்பட்ட நோக்கங்களுக்காக இருக்கலாம் மற்றும் நுகர்வோர் அபிப்பிராயங்களை வெளிக்கொணரும் நோக்கத்துடன் நடாத்தப்பட்டது.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

சந்தைப்படுத்தல் பிரிவானது அதன் சந்தைப்படுத்தல் மூலோபாயத்தினை வங்கியின் மூலோபாய முன்னுரிமைகளுடன் தொடர்ந்தும் இணைக்கும், அது மீளுருவாகி வளர்ச்சி உத்வேகத்தினை விரைவாக்கி, நிலைபேறுடைய நிதியியல் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். இந்த செயன்முறையின் ஒரு முக்கிய கூறானது மக்கள் வங்கியின் வணிகநாமத்தின் வணிகநாம உரித்துவத்தினை கட்டியெழுப்புதலை உள்ளடக்குவதுடன், இது வங்கியின் ஒலு நவீன, வாடிக்கையாளர் மையப்படுத்திய மற்றும் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் நிதியியல் சேவை வழங்குநராக புலனுணர்வு உருமாற்றலானது விரைவுபடுத்தப்படும். இப்பிரிவானது எந்நேரமும் வங்கியின் வணிகநாமத்தினையும் கூட்டாண்மை நற்பெயரையும் பாதகாப்பதற்காக அனைத்து மார்க்கங்களூடாக மக்களின் துடிப்பில் ஒரு நெருக்கமான கண்காணிப்பினை பராமரிக்கும். அதேவேளை, சமூக சந்தைப்படுத்தல் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கூட்டாண்மை சமூக பொறுப்பு நடவடிக்கைகளினூடாக ஒரு சாத்தியமான வணிக நாம பிரதிமையினை வேரூண்டும்.

வணிகப் பிரிவு மீளாய்வுகள்

கடன் அட்டைகள்

15,000

JCB பற்று அட்டைகள்

கடன் அட்டை தேக்கம் விரிவடைந்த சதவீதம்

20%

கடன் அட்டை கொடுக்கல் வாங்கல் அதிகரித்த சதவீதம்

32%

பற்று அட்டை கொடுக்கல் வாங்கல் அதிகரித்த சதவீதம்

37%



வங்கியின் கடன் அட்டைத் தேக்கமானது தொடர்ச்சியாக 20% இற்கும் மேலாக விரிவடைந்து கடன் அட்டைகளின் உயர்ந்த வீதத்திலான பயன்பாட்டினை பிரதிபலிக்கின்றது. கடன் மற்றும் பற்று அட்டைகள் ஆகிய இரண்டினதும் கொடுக்கல் வாங்கல் பருமன்கள், பன்மடங்கான கொடுக்கல் வாங்கல் ஊடகத்தினூடாக தொடர்ச்சியாக அதிகரித்தன.

மக்கள் வங்கியின் கடன் அட்டைப் பிரிவானது ஒரு டிஜிட்டல், பணமற்ற பொருளாதாரத்தினை உருவாக்குதல் நோக்கிய இயக்கத்திற்கு ஒரு தவிர்க்கமுடியாத பங்காளி என்பதுடன், மேல் மாகாணத்திற்கு வெளியேயுள்ள சமூகங்களிடையே நவீன, அட்டை அடிப்படையிலான நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை ஊக்குவிப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகித்துள்ளது.

கடன் அட்டை வைத்துள்ள வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையானது 2023 இல் குறைவடைந்தபோதிலும், வங்கியின் கடன் அட்டைத் தேக்கமானது 20% க்கும் மேல் விரிவடைந்து கடன் அட்டைகளின் உயர்ந்த வீதத்திலான பயன்பாட்டினை பிரதிபலிக்கின்றது. 2023 இன் போது கடன் மற்றும் வரவு அட்டை ஆகிய இரண்டினதும் கொடுக்கல் வாங்கல்களின் பருமனானது தொடர்ந்தும் அதிகரித்தன, இது பன்முகமான கொடுக்கல் வாங்கல் மேடைகளான, POS மற்றும் **MPOS** இயந்திரங்கள், இணையத்தள கொடுப்பனவு நுழைவாயில்கள் (IPGs) என்பவற்றினூடாக ஆகும். கடன் அட்டை மற்றும் வரவு அட்டை கொடுக்கல் வாங்கல்கள் முறையே 32% மற்றும் 37% ஆல் வருடத்திலிருந்து வருடம் அதிகரித்தது.

இலங்கையின் நுகர்வோர்கள் காசுடன் ஒப்பிடுமபோது அட்டைகளின் சௌகரியத்திற்காக மற்றும் பாதுகாப்பிற்காக அதிகளவில் பயன்படுத்துகின்றார்கள். கடன் அட்டைப் பிரிவானது பல விளம்பரங்கள் மற்றும் கழிவு விற்பனைகளை 2023 இன் போது நடாத்தியதுடன், இது நுகர்வோர்கள் மற்றும் வணிகங்களிடையே காட் பாவனையினை ஊக்குவித்து பிரபல்யப்படுத்துவதற்காகும். சிரமமான பொருளாதார சூழல் நிலவியபோதிலும், இப்பிரிவானது கடன் அட்டைகளுக்கு செயற்திறனற்ற கடன் வீதத்தினை துறைசார் சராசரியிலும் பார்க்க குறைவான வீதத்தில் பராமரித்தது.

2023 இல் புதிய கருவிகள்

- ஒரு MPOS வர்த்தகர் தீர்வானது நுண், சிறிய மற்றும் நடுத்தர வாடிக்கையாளர்களை இலக்குவைத்து செப்டம்பர் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது நு.சி.ந.நி. களை டிஜிட்டல் மேடைகளுக்கு மாற்றி குறைவான கிரயத்திலான நிதியியல் தீர்வுகளுடன் அவர்களுக்கு வலுவளிப்பதற்காகும்.
- பீபள்ஸ் காட் மத்தியநிலையம் காசற்ற கொடுக்கல் வாங்கல்களை ஊக்குவிப்பதற்காக நிதி அமைச்சிற்கு ஒரு கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளல் தீர்வினை அறிமுகப்படுத்தியது.



- 2023 இல், மக்கள் வங்கியே இலங்கையில் லங்காபே JCB வரவு அட்டையினை வழங்கி கையகப்படுத்திய முதலாவது வங்கியாகும். ஒரு வருடத்தினுள், கடன் அட்டைப் பிரிவானது மக்கள் வங்கியின் கிளை வலையமைப்பினூடாக வாடிக்கையாளர்களுக்கு 15,000 JCB வரவு அட்டைகளை வழங்கியது.

சந்தைப்படுத்தலும் விளம்பரங்களும்

கடன் அட்டைகளின் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்துவதற்காக, கடன் அட்டைப் பிரிவானது இரண்டு முழு அளவிலான கடன் அட்டை வர்த்தகர் விளம்பரப் பிரச்சாரங்களை ஏப்ரல் மற்றும் டிசம்பர் 2023 பண்டிகைக் காலங்களின்போது நடாத்தியது. இப்பிரிவானது பொதுவான வர்த்தகர் விளம்பரங்களையும் கழிவுகளையும் வருடம் முழுவதும் நடாத்தியது.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

கடன் அட்டைப் பிரிவானது, நாடு முழுவதிற்கும், குறிப்பாக பிராந்திய இடங்களுக்கு, மக்கள் வங்கியின் கடன் அட்டை வணிக நாமத்தினை விரிவாக்கும்வேளை வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியினை மேம்படுத்துவதற்காக சிக்கனமான மற்றும் புதிய தொழில்நுட்பங்களை பகுப்பாய்வு செய்கின்றது. இப்பிரிவானது அதன் கடன் அட்டை உடைமையாளர்களுக்கு அதிநவீன கடன் அட்டைக் கருவி சிறப்பம்சங்களை பெறுவதற்கு முனைவதுடன், சேவைத் தரங்களையும் தொழில்நுட்ப அமைப்புமுறைகளை மேம்படுத்தவும் முனைகின்றது. மேலாக, இப்பிரிவானது அட்டைத் தீர்வுகளை விருத்திசெய்தல் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் செயற்திறன் மற்றும் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்காக POS, MPOS, IPG வசதிகள் கிடைக்கப்பெறுவதினை மேற்கொள்ளல் மூலம் அரசாங்க நிறுவனங்களின் டிஜிட்டல் மயமாக்கலுக்கு தொடர்ந்தும் துணைபுரியும்.



உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனமானது வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கான முக்கியமான அதன் பௌதீக உட்கட்டமைப்பு உள்ளடங்கலான வங்கியினால் சொந்தமாக்கப்பட்ட உருவச் சொத்துக்களை உள்ளடக்குகின்றது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் இருந்தாலும் குறிப்பிட்ட அமைவிடமானது குறிப்பாக மேலோங்கிய கிராமிய சனத்தொகையுடன் முக்கியத்துவத்தினை பராமரிக்கின்றது. எனவே, எமது அடிச்சுவடானது ஒரு விரிவான கிளைகள் வலையமைப்பு, சேவை மத்தியநிலையங்கள், சுய-வங்கியியல் அலகுகள் (SBU), தன்னியக்க டொலர் இயந்திரங்கள் (ATM), காசு வைப்பு இயந்திரங்கள் (CDM) மற்றும் வாடிக்கையாளர் ஊடாட்டங்களுக்கான ஏனைய வசதிகள் என்வற்றுக்கு நீண்டுள்ளது. மேலாக, எமது டிஜிட்டல் உட்கட்டமைப்பானது வெளிக்கள ஆற்றல்களை மேம்படுத்துவதுடன் எமது பிரசன்னத்தினை மேலும் பலப்படுத்துகின்றது.

எமது அணுகுமுறை

எமது வங்கியியல் சேவைகள் அணுக்கத்திற்கும் தாங்குமைக்கும் தொடர்ச்சியாக முன்னுரிமையளிக்கின்றது, இது எமது பரவலான பூகோளவியல் உள்ளடக்கத்தின் காரணமாக மக்கள் வங்கிக்கு முக்கிய பலமாகும். இந்த அணுகுமுறையானது எமது வாடிக்கையாளர்களுடன் திடமான உறவினை வளர்த்துள்ளது. எமது விரிவான கிளை வலையமைப்பானது, நாட்டிலுள்ள பாரியது, அத்துடன் கணிசனமான எண்ணிக்கையிலான சுய-வங்கியியல் அலகுகள் எமது வணிக வளர்ச்சி மற்றும் புதிய கணக்குகளை கையகப்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கினை வகித்துள்ளது. மேலும், சேவைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளை அறிமுகப்படுத்துவதற்குமான எமது தொடர்ச்சியான முயற்சிகள், நாடு முழுவதும் நவீன வங்கியியல் சேவைகளை வழங்குவதில் எமது முதன்மை நிலையினை பராமரிப்பதற்கு உதவியுள்ளது.



முக்கிய சிறப்பம்சங்கள்

பாரிய வலையமைப்பு

747

கிளைகளும் சேவை மத்திய நிலையங்களும்

பாரிய வலையமைப்பு

307

சுய-வங்கியியல் அலகுகள்

வாடிக்கையாளர் தேக்கமானது உள்ளடக்குகின்றது

68%

ஆன சனத்தொகை

பசுமை கட்டிடங்கள்

புதுப்பிக்கப்படக்கூடிய வலு நோக்கி தொடர்ச்சியான உருமாற்றம்



பொருண்மையான கருப்பொருள்

- டிஜிட்டல் தலைமைத்துவம்
- வாடிக்கையாளர் அணுக்கம்

வாய்ப்புக்கள்

- வினைத்திறனை மேம்படுத்தி செலவுகளை குறைப்பதற்கு டிஜிட்டல் தீர்வுகளின் விரைவாக்கம்

சவால்கள்

- பாரியபொருளாதார மந்தநிலை
- உயர் பணவீக்கமும் தேங்கிய வருமான மட்டங்களும்
- அரசியல் கொந்தளிப்பும் உறுதியின்மையும்
- போக்குவரத்து/இயக்காற்றல் சிக்கல்கள்
- அந்நியசெலாவணி பற்றாக்குறை



ஐ.நா. நி.அ.இ. க்கான பங்களிப்பு

தாங்கத்தக்க மற்றும் சுத்தமான வலு

மக்கள் வங்கியானது புதைபடிம எரிபொருளின் தாக்கத்தினை குறைப்பதற்காக பசுமை கிளைகளை கட்டியெழுப்புதல் மற்றும் நடைமுறையிலுள்ள கிளைகளில் புதுப்பிக்கத்தன்ன வலுவினை கடைப்பிடிப்பதன் மூலம் பசுமை கட்டியெழுப்பல் கருத்தாக்கத்தினை கடைப்பிடிக்கின்றது.

ஏற்புடைய பணியும் பொருளாதார வளர்ச்சியும்

வங்கியானது அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களது பொருளாதார வளர்ச்சிக்காக ஏற்புடைய பணி மற்றும் நலன்களை உறுதிசெய்கின்றது.

கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு

புதிய டிஜிட்டல் கருவிகள், புதிய வன்பொருள் மற்றும அதன் வணிக மாதிரிகளின் டிஜிட்டல்மயமாக்கல் நோக்கிய வங்கியின் தொடர்ச்சியான முதலீடுகள் ஒட்டுமொத்த துறை, புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பிற்கு பங்களிப்பு செய்கின்றது.

சமத்துவமின்மைகளை குறைத்தல்

நாடு பூராவுமுள்ள வாடிக்கையாளர் தொடுபுள்ளிகளினூடாக நிதிக்கான அணுக்கத்தில் சமூக சமத்துவமின்மையினை குறைத்துள்ளோம். இது வாழ்வின் ஒவ்வொரு தராதரத்திலுள்ள மக்களுக்கும் எமது கருவிகள் மற்றும் சேவைகள் அணுகக்கூடியதாயுள்ளது

பொறுப்பான நுகர்வும் உற்பத்தியும்

வங்கி தொடர்ச்சியான டிஜிட்டல் மயமாக்கலினூடாக பொறுப்பான நுகர்வினை நிலைநிறுத்துவதுடன், இது வங்கியியல் சேவைகளை வழங்குவதிலும் கொள்முதல் நடவடிக்கைகளிலும் தாள்களின் பயன்பாட்டினை அதிகளவில் நீக்குகின்றது

காலநிலை செயற்பாடு

வங்கியானது வளங்களின் விரயம் மற்றும் பயன்பாட்டினை சிறுமமாக்குவதன் மூலம் காலநிலை செயற்பாடு நோக்கிய ஒரு கடப்பாட்டினை மேற்கொண்டுள்ளது. அதேவேளை சூழல் மாசடைதலையும் குறைக்கின்றது.

பெறுமதி உருவாக்கம்



ATMs, CDMs, CRMs மற்றும் KIOSKs

ரூ. 1.888 பில்.
மேலான
113 மில்.
கொடுக்கல் வாங்கல்கள்



டிஜிட்டல் செயலிகள்

ரூ. 1,042.1 பில்.
மேலான
98.3 மில்.
கொடுக்கல் வாங்கல்கள்



கணக்குகளும் கடன்களும்

அண்ணளவாக 1.1 மில்.
கணக்குகள் திறக்கப்பட்டன

ரூ. 16.5 பில். கடன்கள்
டிஜிட்டல் ரீதியாக
வழங்கப்பட்டன

மூலதன இணைப்புகள்



நிதியியல் மூலதனம்

செலவு குறைப்புகள்



மனித மூலதனம்

புதிய தொழில்நுட்பமும் செயன்முறைகளும்



அறிவுசார் மூலதனம்

சு.வ.அ. (SBU) மற்றும் தொடர்ச்சியான வணிக நாமம் பார்த்தல் உணருதல்



சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

வாடிக்கையாளர் சௌகரியம்



இயற்கை மூலதனம்

பசுமை கிளைகளும் புதுப்பிக்கத்தக்க வலுவும்

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

23 மாடிகளுடனும் மூன்று அடித்தள மாடிகளுடனும் வடிவமைக்கப்பட்ட புதிய மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம் 2023 இல் தொடரப்பட்டதுடன் அதன் பணியில் 50% பூர்த்தியாகியுள்ளது.

வங்கியும் அதன் துணை நிறுவனங்களும் முற்றாக சேவை வழங்குநர்களாகையால், உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத் தளமானது நிலையான சொத்துக்களுக்கு மாத்திரம் வரையறை செய்யப்பட்டுள்ளது. இது தலைமைக் காரியாலயங்கள் மற்றும் கிளைக் காரியாலங்கள், சேவை மத்திய நிலையங்கள், சுய வங்கியியல் அலகுகளை அமர்த்தியுள்ள நாடு பூராவுமுள்ள ஆதனங்கள், தளபாடமும் பொருத்திகளும், அலுவலக உபகரணங்களையும் உள்ளடக்குகின்றது. குழுமத்திலுள்ள கம்பனிகளும் அசையும் சொத்துக்களாக அவர்களது சொந்த வாகனங்களை வைத்துள்ளன.

மேலாக, வங்கியின் உற்பத்தி செய்யப்பட்ட சொத்துக்கள், கணினிகள், சேர்வர்கள், மடிக்கணினிகள், பாம்டொப்கள், மற்றும் ஸ்மாட் போன்கள் உள்ளடங்கலான பௌதீக டிஜிட்டல் உட்கட்டமைப்புகளின் விரிவான திரட்டலை உள்ளடக்குவதுடன், இவை வங்கியின் டிஜிட்டல்மயமாக்கல் மூலோபாயத்தில் ஒரு அவசியமான பங்கினை வகிக்கின்றது.

வருடம் பூராவும் வினைத்திறனான செயற்திறனை உறுதிப்படுத்துவதற்காக, வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் மறுசீரமைப்புகளுடன் அவற்றின் அனைத்து பௌதீக சொத்துக்களையும் எப்போது தேவைப்படுகின்றதோ அதற்காக பராமரித்ததுடன் அதன் பௌதீக சொத்துத் தளத்தினை வணிக வளர்ச்சி தேவைப்பாடுகளுக்கு அமைய விரிவாக்கியது.

வங்கியின் உற்பத்திசெய்யப்பட்ட சொத்துக்கள்

சொத்தின் வகை	பெறுமதி 2022 (ரூ. '000)	பெறுமதி 2023 (ரூ. '000)	மாற்றம் %
இறையிலி நிலம்	24,079,999	24,775,609	2.89
இறையிலி கட்டிடம்	7,398,919	10,760,917	45.44
குத்தகை காணியிலான கட்டிடங்கள்	3,158,121	3,352,340	6.15
மோட்டார் வாகனங்கள்	1,496,655	1,448,468	(3.22)
தளபாடம்	676,169	750,748	11.03
இயந்திரம், உபகரணம் மற்றும் சுய வங்கியியல் அலகுகள்	5,117,370	5,525,264	7.97
கணினி	7,513,405	8,226,740	9.49
மொத்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	49,440,637	54,840,085	10.92

- 23 மாடிகளுடனும் மூன்று அடித்தள மாடிகளுடனும் வடிவமைக்கப்பட்ட புதிய மக்கள் வங்கி தலைமைக்காரியாலயம் 2023 இல் தொடரப்பட்டதுடன் அதன் பணியில் 50% பூர்த்தியாகியுள்ளது. இது 374, கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 2 இல் அமைந்துள்ளது.
- 2023 இல் வங்கி, பெரும்பாலும் மேல் மாகாணத்திற்கு வெளியே, 18 புதிய SBU மற்றும 233 புதிய CRM இயந்திரங்களை சேர்ப்பதன் மூலம் அதன் கிளைகளற்ற வலையமைப்பிளை விரிவாக்கியது.
- தற்போது 20 கிளைகளுக்கு சூரிய வலுவினால் சக்தியளிக்கப்படுவதுடன், 50 கிளைகள் இறுதிக் கட்டத்திலுள்ளன. மற்றுமோர் 81 கிளைகள் 2024 இல் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

குழுமத்தின் உற்பத்திசெய்யப்பட்ட சொத்துக்கள்

சொத்தின் வகை	பெறுமதி 2022 (ரூ. '000)	பெறுமதி 2023 (ரூ. '000)	மாற்றம் %
இறையிலி நிலம்	27,868,121	29,219,040	4.85
இறையிலி கட்டிடம்	12,154,270	15,895,921	30.78
குத்தகை காணியிலான கட்டிடங்கள்	3,243,884	3,438,103	5.99
மோட்டார் வாகனங்கள்	1,882,890	1,718,942	(8.71)
தளபாடம்	1,256,191	1,337,011	6.43
இயந்திரம், உபகரணம் மற்றும் சுய வங்கியியல் அலகுகள்	6,168,366	6,634,352	7.55
கணினி	8,517,895	9,192,438	7.92
மொத்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	61,091,617	67,435,808	10.38







எமது வாடிக்கையாளர்களை எட்டுதல்

747 கிளைகள்	307 SBUs	28 KIOSKs
820 ATMs	19 CDMs	318 CRMs

கிராமிய மற்றும் வசதி குறைந்த சமூகங்களுக்கு சேவையாற்றுவதில் வங்கியின் முன்னிறுத்தம் காரணமாக, நாம் ஒரு விரிவான கிளைகள் வலையமைப்பினையும் வசதிகளையும் காலப் போக்கில் நிறுவி விரிவாக்கியுள்ளோம்.



வங்கியில் வலையமைப்பு /வாடிக்கையாளர் தொடுபுள்ளிகளின் பூகோளவியல் விநியோகம்

GRI 2-6

வங்கி அதன் வணிகச் செயற்பாடுகளை முற்றாக இலங்கையினுள் மாத்திரம் நடாத்துகின்றது. கீழேயுள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வங்கியின் வலையமைப்பானது இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்குகின்றது. வங்கி பொருளாதாரத்தின் அனைத்து துறைகளுக்கும் சேவையாற்றுகின்றது: விவசாயம், கைத்தொழில், மற்றும் சேவைகள். எமது வாடிக்கையாளர்கள் சிற்றளவு, கூட்டாண்மை மற்றும் SME வாடிக்கையாளர்களை உள்ளடக்குகின்றார்கள்.

மேல்	வட மேற்கு	வட மத்திய
100	32	26
110	26	23
16	3	2
253	74	59
14	1	-
112	29	25

கிழக்கு	வடக்கு	தெற்கு
30	22	41
19	15	31
2	1	2
63	49	99
1	-	-
19	15	33

சபரகமுவ	ஊவா	மத்திய
32	26	44
23	19	41
1	-	1
64	57	102
3	-	-
22	19	44

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

வங்கியானது, பௌதீக உட்கட்டமைப்பிலான வலியுறுத்தலுடன், தொடர்ந்தும் அதன் உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத் தளத்தினை மேம்படுத்தும். இது அதன் வணிக விரிவாக்கத் திட்டங்கள் மற்றும் மூலோபாய டிஜிட்டலமயமாக்கல் திட்டங்களுக்கு துணையளிப்பதற்காகும்.

அறிவுசார் மூலதனம்

அறிவுசார் மூலதனமானது வங்கியின் அருவச் சொத்துக்களை உள்ளடக்குகின்றது. இவை ஊழியர்களினால் கையகப்படுத்தப்பட்ட களஞ்சியப்படுத்தப்பட்ட அறிவு, நிபுணத்துவம், மறைமுகமான அறிவு, அறிவுசார் சொத்து, வணிகநாமமிடல், பிரதிமை தொடர்பான சொத்துக்கள், செயன்முறைகள், ஊழியர் பயிற்சி முன்னெடுப்புகள் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் விசுவாசம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. அத்துடன், கலாச்சாரம், நெறிமுறைகள் மற்றும் புத்தாக்க ஆற்றல்களையும் உள்ளடக்குகின்றன. அறிவு, நிபணத்துவம் மற்றும் புத்தாக்கம் என்பன போட்டித்தன்மை நலனுக்கான மூலங்களாக செயற்படுவதுடன் துறையினுள் வேறுபடுத்திக் காட்டுகின்றது.

எமது அணுகுமுறை

வருடத்தின் ஆரம்பத்தியில் நிலவிய அரசியல் அமைதியின்மை மற்றும எமது பிரச்சார முயற்சிகளிலான கட்டுப்பாடுகளுக்கு பதிலளிக்கும் விதமாக, நாம் சமூகத்துடன் இணைவதற்கும் மிகவும் கருணை அணுகுமுறையினை கடைப்பிடிப்பதனை தெரிவுசெய்தோம். எமது மூலோபாயமானது மக்கள் வங்கிக்கான மனதின் மேலான விழிப்புணர்வினை பராமரிப்பதில் முன்னிறுத்தம் செய்ததுடன், இது கணிசமான தேவைகள் காணப்படும் பிரிவுகளில் சமூகங்களுக்கு துணைபுரிவதற்கு ஒரு தொடரான நடவடிக்கைகளை ஒழுங்குசெய்யப்பட்டன. நாடு பூராவும் முன்னெடுக்கப்பட்ட சமூகச் சேவை திட்டமான □மஹாஜன மெஹெவர□ எனும் புதிய வணிகநாமம் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுச் சேவை முன்னெடுப்புகள் வணிகநாம புலப்படுத்தன்மையினை நிலைபேறாக்கும் வேளை, புதிய வாடிக்கையாளர்களை கவர்வதற்கு தனிச்சிறப்பான சேவை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இது தொடர்பில் எமது செயற்திறனை மதிப்பிடுவதற்காக, நாம் பெறுமதியான வாடிக்கையாளர் உள்ளீடகளை பெறுவதற்காக வருடம் பூராவும் விரிவான ஆய்வினை நடாத்தியதுடன், இது எமது சேவை தரங்களை உயர்த்தும்.



முக்கிய சிறப்பம்சங்கள்

டிஜிட்டல் வாடிக்கையாளர் தளம் விரிவடைந்தது

3.8 மில.

நாடுபூராவும்

கீழ்காணும் சதவீதத்திற்கு மேலாக

75%

வங்கியின் பாரம்பரிய கொடுக்கல் வாங்கல்கள் தற்போது SBU மற்றும் POS உள்ளடங்கலாக டிஜிட்டல் வழிகளூடாக நடாத்தப்பட்டன.

2023 இல் அண்ணளவாக

100 மில்.

கொடுக்கல்வாங்கல்கள் மொத்தமாக ரூ. 1 டிரில்லியன், பீபள்ஸ் வேவ், பீபள்ஸ் வின், பீபள்ஸ் பே மற்றும் பீபள்ஸ் வெப் ஊடாக நடாத்தப்பட்டன.

டிஜிட்டல் வைப்புக்கள் கடந்தன

ரூ. **723** பில்.

டிசம்பர் 2023 இல் உள்ளவாறானது



பொருண்மையான கருப்பொருள்

- டிஜிட்டல் தலைமைத்துவம்
- வாடிக்கையாளர் அணுக்கம்

வாய்ப்புக்கள்

- வினைத்திறனை மேம்படுத்தி செலவுகளை குறைப்பதற்கு டிஜிட்டல் தீர்வுகளின் விரைவாக்கம்

சவால்கள்

- பாரிய பொருளாதார மந்தநிலை
- உயர் பணவீக்கமும் தேங்கிய வருமான மட்டங்களும்
- அரசியல் கொந்தளிப்பும் உறுதியின்மையும்
- போக்குவரத்து/இயக்காற்றல் சிக்கல்கள
- அந்நிய செலாவணி பற்றாக்குறை



ஐ.நா. SDGS களுக்கான பங்களிப்பு

கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு

புதிய டிஜிட்டல் கருவிகள், புதிய வன்பொருள் மற்றும அதன் வணிக மாதிரிகளின் டிஜிட்டல்மயமாக்கல் நோக்கிய வங்கியின் தொடர்ச்சியான முதலீடுகள் ஒட்டுமொத்த துறை, புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பிற்கு பங்களிப்பு செய்கின்றது.

பொறுப்பான நுகர்வும் உற்பத்தியும்

வங்கி தொடர்ச்சியான டிஜிட்டல் மயமாக்கலினூடாக பொறுப்பான நுகர்வினை நிலைநிறுத்துவதுடன், இது வங்கியியல் சேவைகளை வழங்குவதிலும் கொள்முதல் நடவடிக்கைகளிலும் தாள்களின் பயன்பாட்டினை அதிகளவில் நீக்குகின்றது

அமைதி. நியாயம் மற்றும் திடமான நிறுவனங்கள்

ஒரு நெறிமுறையான மற்றும் பாகுபாடற்ற நிறுவனம் நோக்கிப் பங்களிப்பு செய்யும் ஒரு திடமான ஆளுகை மற்றும் இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை வங்கி பராமரிக்கின்றது.

பெறுமதி உருவாக்கம்

2.3 மில். இற்கு மேலான பீபள்ஸ் வேவ் செயலி பதிவிறக்கங்கள்

35000+ புதிய பீபள்ஸ் வெப் - சிற்றளவுக்கு மாதாந்தம் பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர்கள்

மூலதன இணைப்புகள்

நிதியியல் மூலதனம்

புதிய வணிகநாமமிடல் மூலோபாயங்கள் ஊடாக இலாபகரமான சந்தைப் பிரிவுகளை அணுகுதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஊடாக வினைத்திறனை அதிகரித்தல்

மனித மூலதனம்

வருடத்தின் ஆரம்பத்தில் கட்டுப்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளின் மீள் ஆரம்பம் மற்றும் மேம்படுத்தல் மற்றும் பாரம்பரிய பிராந்திய பணியிலான பயிற்சிக்கு இணைப்பதற்காக இ-பயிலல் திட்டங்கள் நோக்கி நகர்தல்.

உறபத்தி செய்யப்பட்ட மூலதனம்

டிஜிட்டல் மயமாக்கலின் தொடர்ச்சியான வளர்ச்சி

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

வாடிக்கையாளர் விசுவாசத்தின் வளர்ச்சி மற்றும் வினைத்திறனான தொடர்பாடலூடாக பங்கபற்றுதல்

இயற்கை மூலதனம்

வெளிவாரியாக வாடிக்கையாளர்களுடன் மற்றும் உள்ளக நிர்வாகத்திற்கு தாள்களற்ற செயன்முறை நோக்கி நகருதல்

அறிவுசார் மூலதனம்

ஒரு சேவை வழங்குநராக, வங்கியின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் அறிவுசார் சொத்துக்கள் வர்த்தகச் சின்னங்கள், கூட்டு மறைவு மற்றும் ஆளணியினரின் தொழில்நுட்ப அறிவு, தனித்துவமான நிறுவன கலாச்சாரம் மற்றும் பல தசாப்தங்களாக வெளித்தோன்றிய அமைப்புமுறைகள் மற்றும் செயன்முறைகளுக்கு வரையறை செய்யப்பட்டுள்ளன. மிகவும் சமீபத்தில் வங்கி மற்றும் குழுமத்திற்கு தனித்துவமான தொழில்நுட்ப அடிப்படையிலான அமைப்பு முறைகளையும் உள்ளடக்கும்.

கடந்த பத்து வருடங்களில் மக்கள் வங்கியின் தீவிர நவீனமயப்படுத்தல் இயக்கத்தினைத் தொடர்ந்து, டிஜிட்டல் அமைப்புமுறைகளும் தொழில்நுட்ப ஆளணியினரும் தற்போது வங்கியின் ஒரு முக்கிய அறிவுசார் மூலதனமாக பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள். இது உள்ளகத்தே ஒரு கலாச்சார மாற்றத்திற்கும் வங்கியினை இலங்கையில் அதிக டிஜிட்டல் மயமாக்கலாக்கப்பட்ட நிதியியல் சேவை வழங்குநராக மீள்நிலைப்படுத்துவதற்கும் வழிநடத்தியுள்ளது.

மக்கள் வங்கியின் 2023-2026 டிஜிட்டல் மயமாக்கல் மூலோபாயமானது த.தொ. பிரிவிற்கும் டிஜிட்டல்மயமாக்கல் பிரிவிற்கும் இடையே தொடர்ச்சியான ஒத்துழைப்பினூடாக செயலாற்றப்பட்டதுடன், இது வங்கியின் வணிக அலகுகள் மற்றும் கிளை வலையமைப்பு பூராவும் மிகவும் பயனுறுதியான டிஜிட்டல் தீர்வுகளை விநியோகிப்பதற்காகும்.

தனிப்பயனாக்கப்பட்ட மென்பொருள் மற்றும் டிஜிட்டல் தீர்வுகள்

வங்கியானது தொடர்ச்சியாக அதன் மென்பொருள் அமைப்புமுறைகள் மற்றும் டிஜிட்டல் தீர்வுகளை உள்ளகத்தேயான மென்பொருள் அபிவிருத்திகள் மற்றும் வங்கியின் தனித்துவமான தேவைப்பாடுகளுக்காக தனிப்பயனாக்கப்பட்ட வெளிவார் தொழில்நுட்ப தீர்வுகளை கொள்வனவு செய்வதன் மூலம் மேம்படுத்துகின்றது. 2023 இன் இறுதியில் மக்கள் வங்கியானது டிஜிட்டல் அபிவிருத்திகளில் சில பிரிவுகளில் அதன் தனியார் துறை போட்டியிலும் பார்க்க முன்னணியில் இருந்தது.

- 2023 இல் மக்கள் வங்கி SD-WAN தொழில்நுட்பத்திற்கு இடம்பெயர்ந்த முதலாவது பாரிய வங்கியாக வந்ததுடன், இது நாடு பூராவும் உள்ள அனைத்து 375 கிளைகளையும் இணைக்கின்றது.
- த.தொ. பிரிவானது பயன்படுத்துவதற்கு தயாராயுள்ள மென்பொருள் பொதிகளை கொள்வனவு செய்யாது செயன்முறை தன்னியக்கமாக்கல் தீர்வுகளை உள்ளகத்தே விருத்தி செய்தது. இது செலவினைச் சேமிப்பதோடு சிறந்த பிரயோக நெகிழ்வுத்தன்மை மற்றும் தனிப்பயனாக்கலை இயலுமையாக்குகின்றது.
- அடகு பிடித்தல் முறையானது முழு கிளை வலையமைப்பிற்கும் தனிப்பயனாக்கப்பட்டது.
- 2023 இன் இறுதியில், வங்கியின் 75% சேர்வர் தனிப்பட்ட முகில் தயாரான மேடைக்கும் இடம்பெயர்ந்ததுடன் இது தரவுப் பாதுகாப்பு மற்றும் வணிகத் தொடர்ச்சியினை மேம்படுத்துகின்றது.

டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வுகள்

பீப்பள்ஸ் வேவ்

- இலங்கையில் அதிகமாக பதிவிறக்கம் செய்யப்படும் சிற்றளவு மொபைல் செயலிகளுள் ஒன்று
- 2017 இலிருந்து 2.3 மில்லியனுக்கும் மேலாக பதிவிறக்கங்கள்
- தொலைதூரத்திலிருந்து 50 வெவ்வேறு வங்கியியல் வசதிகளை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்களை அனுமதிக்கின்றது
- நிதியியல் உள்ளடக்கத்தினை இயக்குவதற்கு குறிப்பிட்ட பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டது.
- சுய பதிவிடல்கள் மற்றும் உயிரியல் அணி அணுக்கம்.

பீப்பள்ஸ் வின்

- கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு தனியாக வடிவமைக்கப்பட்ட மொபைல் வங்கியியல் செயலி
- கூட்டாண்மைகளை அவர்களது அனைத்து வணிக பணிகளை மொபைல் சாதனத்தில் எந்நேரமும் உலகில் எங்கிருந்தாலும் மேற்கொள்வதற்கு வசதியளித்தல்
- CEFT, SLIPS மற்றும் RTGS ஊடாக வங்கிகளிடையேயான மாற்றல்களுக்கு மற்றும் பயன்பாட்டு பட்டியல் கொடுப்பனவுகளுக்கு அனுமதிக்கின்றது.
- கொடுக்கல் வாங்கல் அங்கீகரித்தல் வசதிகளை வழங்குதல்.

பீப்பள்ஸ் வெப் - சிற்றளவு

- பீப்பள்ஸ் வேவ் இல் கிடைக்கக்கூடிய அனைத்து தெரிவுகளுக்கும் மேலாக பல்வேறு சிற்றளவு வங்கியியல் அம்சங்களை வழங்குதல்
- வருட இறுதியில் அண்ணளவாக 1.9 மில்லியன் வாடிக்கையாளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.
- 35000+ புதிய வாடிக்கையாளர்கள் வசதியுடன் மாதாந்தம் பதிவுசெய்யப்படுகின்றார்கள்.

பீப்பள்ஸ் வெப் - பெறு நிறுவனம்

- பீபள்ஸ் வின் இல் கிடைக்கக்கூடியவற்றுக்கும் மேலாக பல்வேறு கூட்டாண்மை வங்கியியல் அம்சங்களை பாதுகாப்பான இரட்டை அங்கீகார கொடுக்கல் வாங்கல் வசதியுடன் வழங்குகின்றது.
- இந்த வசதியுடன் 13,000 கூட்டாண்மைகள் பதிவுசெய்துள்ளன.
- தாள்களற்ற வர்த்தக நிதியளித்தல் கொடுக்கல் வாங்கலகளுக்கு வசதியளிக்கின்றது.
- ஊதியச் செயன்முறை, தந்திப் பரிமாற்ற - வெளிவாரி பணமனுப்பல்கள் மற்றும நிலையான வைப்புகள் திறத்தல் மற்றும் மீள்பணமெடுத்தல் என்பவற்றை முகாமைப்படுத்துகின்றது (தாள்களது பயன்பாடின்றி முனைவிலிருந்து முனையம் வரையான டிஜிட்டல் மயமாக்கல்).
- இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் பல்வேறு வர்த்தக நிதியளித்தல் கருவிகளுக்கு நேரலையாக விண்ணப்பிக்க இயலும். (தாள்களது பயன்பாடின்றி முனைவிலிருந்து முனையம் வரையான டிஜிட்டல் மயமாக்கல்) நாணயக் கடிதம், கப்பல் உத்தரவாதங்கள், வங்கி உத்தரவாதம் மற்றும் வர்த்தக கடன்களை போன்றவற்றை வங்கியின் கிளைக்கு விஜயம் செய்யாது பெற்றுக்கொள்ளுதல்.

பீப்பள்ஸ் விஷ் கணக்குகள்

- தெற்காசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் முதன் முதலான மெய்நேர டிஜிட்டல் வாடிக்கையாளர் சேர்த்தல் வங்கியியல் பிரயோகம்.
- பசுமை வங்கியியல் தொலைநோக்கிற்கு பங்களிப்பு செய்றும் தாள் பயன்பாட்டில் கணிசமான வீழ்ச்சி
- ஜுலை 2017 இலிருந்து 3.8 மில்.+ வாடிக்கையாளர்கள் சேர்த்தக்கொள்ளப்பட்டார்கள்
- பணம் சலவை செய்வதற்கு எதிரான முறையொன்றின் ஒருங்கிணைப்பானது தனியான முறையினுள் உட்புகுவதற்கான தேவையினை அகற்றி கணக்கு திறத்தல் செயன்முறையினை விரைவுபடுத்துகின்றது.
- ஆவணப்படுத்தல் நடைமுறைகளை மேம்படுத்துதல்: அச்சிடல், கையொப்பமிடல் மற்றும் மின்னஞ்சல் மற்றும அமைப்பு முறையூடாக ஆவணங்களை நிரப்புதலுக்கான அவசியம் சிறுமமாக்கப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்கு பொதிசெய்யப்பட்ட வழங்கல்கள், இயங்கலை மெய்நேர சேவைகளை செயற்படுத்துதல் (வரவு அட்டை/ இ.கூற்று / இணையவழி வங்கியியல் / மொபைல் வங்கியியல் / அட்டைகளற்ற காசு வசதி), இது நேரப் பயன்பாடு மற்றும் செயற்பாட்டு பணிகளை குறைக்கின்றது.
- வெற்றிகரமான கணக்கு திறத்தல், கணக்கு இலக்கங்களில் பிழைகளைத் தவிர்த்தலுக்கு SMS/மின்னஞ்சல் அறிவித்தல்கள்.
- தன்னியக்கமான ஆவணக் காப்பக முறை, எதிர்காலப் பார்வைக்கு ஆவணங்களின் சேமிப்பினை அனுமதிக்கின்றது.

பீப்பள்ஸ் விஷ் கடன் - சில்லறை கடன் உருவாக்கல் முறை (RLOS)

- மனித இயக்க முறையினை மாற்றீடு செய்யும் மேம்பட்ட சிற்றளவு கடன் செயன்முறை அமைப்புமுறை.
- தன்னியக்கமாக கடன்பெறுகை இடர் தரப்படுத்தலை கணிப்பீடு செய்யும் அம்சமானது இயலுமையாக்கப்பட்டுள்ளது.
- சட்ட ஆவணங்களை தன்னியக்கமாக உருவாக்குதல், ஆவணப்படுத்தலில் நிலைத்தன்மை மற்றும் சீரான தன்மையினை உறுதிசெய்தல்
- மனித தவறுகளை சிறுமமாக்குவதற்கா கடன் செயன்முறை தரப்படுத்தப்பட்டது.
- அங்கிகாரச் செயன்முறை தன்னியக்கமாக்கப்பட்டுள்ளது, முடிவுறுத்தலுக்கு தேவையான நேரத்தினை கணிசமாக குறைத்தல்.
- விண்ணப்பத்திலிருந்த பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் வரை முனையத்திலிருந்து முனையம் வரையான செயன்முறை
- 2023 இன் இறுதியில் 340 கிளைகளில் செயற்படுகின்றன.

பீப்பள்ஸ் விஷ் கடன் - பெறுநிறுவன கடன் உருவாக்கல் முறை (CLOS)

- முனையத்திலிருந்து முனையம் வரையான டிஜிட்டல் வணிக கடன் உருவாக்கல் அமைப்புமுறை
- தனிப்பட்ட கடன் வசதிகள் மற்றும் கடன் பொதிகளைக் கையாளுதல், இது பல்வேறு வகையான வணிகங்களுக்கு பன்முகமாக கருவி வகைகளுடன்.
- 2023 இன் இறுதியில் 207 கிளைகளில் செயற்படுகின்றன.

அறிவுசார் மூலதனம்

பீப்பள்ஸ் பே- வொலட் செயலி

- மும்மொழியிலான பயனாளர் தோழமையான அணுக்கத்துடன் இடைமுகப்பு மற்றும் உயிரளவையியல் மற்றும் சுய பதிவீடு உள்ளடங்கலான புதிய பல அம்சங்களுடன்.
- வாடிக்ககையாளரின் நாளாந்த வாழ்க்கையினை இலகுவாக்கல். இது அவர்கள் அவர்களது கொடுப்பனவு விபரங்களை எதிர்காலத் தேவைக்காக சேமிப்பு வைப்பதனை இயலுமையாக்குகின்றது.
- கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏனைய வங்கிக் கணக்குகளை இணைக்கும் சுய கொடுக்கல் வாங்கல் வரையறை திருத்தல் வசதி.
- பயன்பாட்டு சேவை வழங்குநர்களுடன் கூட்டுசேர்ந்த மெய்நேரத்தில் உரிய கொடுப்பனவுத் தொகைகளை இயங்கலையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.
- வருட இறுதியியல் 400,000 வாடிக்கையாளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.
- 2400ஆ புதிய வாடிக்கையாளர்கள் இவ்வசதியுடன் மாதாந்தம் பதிவுசெய்யப்படுகின்றார்கள். .

பீப்பள்ஸ் பே - வர்த்தகர் தொகுதி லங்கா QR பதிவீடுகள்

- சிறிய வணிகங்களை மெய்நேரத்திற்கு உருமாற்றுவதற்கு ஊக்கமளித்தல்.
- நிதியியல் உள்ளடக்கத்தினை மேம்படுத்துதல்.
- சி.ந.நி. களுக்கு விரைவான, பாதுகாப்பான, குறைந்த கட்டண டிஜிட்டல் கொடுப்பனவினை வசதியளித்தல்.
- 2023 இன் இறுதியில், 54,000 வர்த்தகர்களுக்கும் மேலானவர்கள் பதிவுசெய்யப்பட்டார்கள்.
- வீசா மற்றும் லங்கா QR நியமங்களுடன் பொருந்தத்தக்க QR உருவாக்கத்திற்கு வசதியளித்தல்.

பீப்பள்ஸ் ஈஸ் கணக்குகள் : இயங்கலை கணக்கு திறத்தல் சேவை

- நேருக்கு நேரற்ற டிஜிட்டல் வாடிக்கையாளர் இனங்காணல் மற்றும் சரிபார்த்தல் செயன்முறை
- தொலைதூரத்திலிருந்து இணைந்துகொள்ளும் செயன்முறையினை நிறைவேற்றுவதற்கு வாடிக்கையாளர்களை அனுமதித்தல்.
- மெய்நேர தேசிய அடையாள அட்டை சரிபார்த்தலுக்கு ஆட்கள் பதிவுசெய்தல் திணைக்களத்துடன் தடையற்ற ஒருங்கிணைப்பு.
- செ.நு. அடிப்படையிலான சரிபார்த்தல் வாடிக்கையாளரது பௌதீகத் தோற்றத்தினை தேசிய அடையாள அட்டை மற்றும் தரவேற்றப்பட்ட படத்துடன் குறுக்குச் சோதனை.
- தொலைதூர KYC செயன்முறையின் காணொளி ஆவணப்படுத்தல எதிர்கால பாவனைக்கு கிடைக்கப்பெறுகின்றது.
- கூகள் சேவைகளூடாக அமைவிடம் சார்ந்தவைகளைச் சரிபார்த்தல்

சிற்றளவு வங்கியியல் தீர்வுகள்

2023 இன்போது மக்கள் வங்கி அதன் மொபைல் செயலி பீப்பள்ஸ் வேவ் மற்றும் பீப்பள்ஸ் பே உடன் இரண்டு மில்லியன் டிஜிட்டல் சிற்றளவு வாடிக்கையாளர் தளமான மைல்கல்லை எட்டியுள்ளது. தற்போது அனைத்து கொடுக்கல் வாங்கல்களின் 75% ஆனவை டிஜிட்டல் ரீதியாக செயலாற்றப்படுகின்றன. இந்த எண்ணிக்கையின் 85% ஆனவை மேல் மாகாணத்திற்கு வெளியே காணப்படுவதுடன், வங்கியின் விரிவடையும் டிஜிட்டல் எட்டுதலை குறிப்பிடுகின்றது. தற்போது 8 மில்லியனுக்கும் அதிகமான டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள் மாதாந்தம் பதிவுசெய்யப்படுகின்றது. 2023 இல் டிஜிட்டல் ரீதியாக இணைந்துகொண்டு புதிய வாடிக்கையாளர்களில் 77% ஆனோர் Gen Z மக்கள் தொகையிலிருந்தாகும்.

வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி உருவாக்குவதற்காகவும் மத்திய வங்கியின் காசற்ற நிதியியல் அமைப்புமுறைக் கொள்கைக்கும் துணைபுரிவதற்காகவும் பல புதிய டிஜிட்டல் தீர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டன:

- ஒரு செ.நு. அடிப்படையிலான செட் பொட் மக்கள் வங்கியின் இணையத்தளத்தினுள் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் இது வாடிக்கையாளர்கள் மற்றும் இணையத்தளத்திற்கு விஜயம் செய்வோருக்கு துணையளிப்பதற்கும் ஆகும். செட் பொட் பதிலளிக்க இயலாதவிடத்து, மனித தலையீட்டிற்காக விஜயம் செய்தவர் தன்னியக்கமாக மத்திய அழைப்பு மத்திய நிலையத்துடன் இணைக்கப்படுகின்றார்.
- POS இயந்திரங்களுக்கான QR வசதிகளை இயலுமையாக்குவதன் மூலம் QR கொடுப்பனவு தீர்வுகள் மேம்படுத்தப்பட்டன.
- மக்கள் வங்கி "வீசாவுடன்" ஒன்றுசேர்ந்து வங்கியின் QR வர்த்தகர்களுக்கு "வீசா நியமங்கள்" அறிமுகப்படுத்தப்பட்டன.
- ஒரு மொபைல் தொலைபேசி அடிப்படையிலான POS தீர்வு சிறிய மட்டத்திலான வர்த்தகர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இது வழமையான POS இயந்திரங்களுக்கு ஒரு குறைந்த செலவிலான மாற்றீடாகும் மற்றும் இது நாட்டில் அட்டை கொடுக்கல் வாங்கல்களின் பரவலான பயன்பாட்டிற்கு வசதியளிக்கும்.
- நடைமுறையிலுள்ள சிற்றளவு கடன் உருவாக்குதல் அமைப்புமுறையானது அனைத்து கிளைகளுக்கும் வழங்கப்பட்டதுடன் நாட்டில் எல்லா பாகங்களிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு விரைவான மற்றும் மிகவும் செளகரியமான பகிர்ந்தளிப்பினை இயலுமையாக்கும்.
- SMS ஊடாக வாடிக்கையாளர்கள் அவர்களது கணக்கு மீதிகளை அவர்களது தெரிவான மொழியில் வங்கியின் அழைப்பு மையத்திற்கு ஒரு தவறுதல் அழைப்பினை விடுத்து பெற்றுக்கொள்ளலாம்.



வாடிக்கையாளர் சேவையினை உயர்த்துவதற்கான ஒரு நகர்வாக மக்கள் வங்கி அதன் செ.நு. வலுவளிக்கப்பட்ட செட்பொட் அம்சத்தினை அதன் இணையத் தளத்தில் ஆரம்பித்துள்ளதை அறிவித்தது.

வங்கியானது SD-WAN தொழில்நுட்பத்தினை அமுல்படுத்தியதுடன் இது 2023 இல் நாடு பூராவுமுள்ள 375 கிளைகளை உள்ளடக்கியதுடன் இதுவே இலங்கையின் நிதியியல் துறையினுள்ளான பாரிய நிறுவுதலாகும்.

- பீபள்ஸ் ரெமிட்டன்ஸ் ட்ரெக்கர் மொபைல் செயலியானது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இது இலங்கைக்கான அவர்களது பணமனுப்பலின் நிலையினை தெரிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது.
- ஒரு புதிய. மையப்படுத்தப்பட்ட, அடகுவைத்தல் முறையானது அனைத்து கிளைகளுக்கும் அமுல்படுத்தப்பட்டது. இம்முறையானது மையப்படுத்தப்பட்டமையினால், வாடிக்கையாளர்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் அடகு வைத்தல் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டாண்மை தீர்வுகள்

கூட்டாண்மை வாடிக்கையாளர் தளத்தினை விரிவாக்குவதில் வங்கியின் டிஜிட்டல் தீர்வுகள் ஒரு முக்கிய மதிப்பு முன்மொழிவாகும். 2023 இல், வங்கியானது அதன் அதிநவீன, கூட்டாண்மை சார்ந்த, டிஜிட்டல். நிதியியல் தீர்வுகளை ஊக்குவிப்பதன் மூலம் புதிய கூட்டாண்மை வாடிக்கையாளர்களை கவர்வதில் தீவிரமாக வெற்றியடைந்தது.

மேலாக, வங்கியானது அரசாங்க நிறுவனங்களது கொடுப்பனவு மற்றும் திரட்டல்களை டிஜிட்டல் மயமாக்குவதில் செயலூக்கமாக ஈடுபட்டது. இது கொடுப்பனவுகள் மற்றும் திரட்டல்களுக்கான பரவலான டிஜிட்டல் தீர்வுகளாகும் என்பதுடன், இவை பொது மக்களுக்கு கணிசமானளவு நன்மையளித்துள்ளது.

2023 இன் போது:

- கூட்டாண் கடன் உருவாக்கல் அமைப்புமுறையானது மேலும் மேம்படுத்தப்பட்டது.

கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் தனிப்பயனாக்கப்பட்ட கொடுப்பனவு தீர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

உயர் கிடைக்கும் தன்மை மற்றும் பேரிடர் மீட்டல்

வங்கியான அதன் முக்கியமான பணிகளுக்கான அமைப்புமுறைகளின் உயர் கிடைக்கும்தன்மை மற்றும் பேரிடர் மீட்டல் ஆற்றலினை மேம்படுத்துவதற்கு முதலீடு செய்துள்ளது. அனைத்து முக்கிய பணி அமைப்புமுறைகளுக்கான பேரிடர் மீட்புத் தளமானது மெய்நேர மீள் உருவாக்கத்துடன் தற்போது அமுலாக்கப்பட்டது. இன்றைய போட்டித்தன்மையான சூழலில் வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் பிரயோக்கங்கள் கிடைக்கப்பெறுதல் மிகவும் முக்கியமானதாகும்.

முன்னேற்றக் குறிகாட்டிகள் 2022 எதிர் 2023

	2022	2023
நாடு பூராவுமான ATMs, CDM மற்றும் CRM களின் எண்ணிக்கை	1141	1157
மேல் மாகாணத்திற்கு வெளியேயுள்ள நாடு பூராவுமான ATMs, CDM மற்றும் CRM இயந்திரங்களின் எண்ணிக்கை	719	779
டிஜிட்டல் சிற்றளவு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை	1.5மில்.	2.3மில்.
டிஜிட்டல் கூட்டாண்மை வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை	9700+	13100+
டிஜிட்டல் கணக்குகளின் எண்ணிக்கை	2.7மில்.	3.8மில்.
இயங்கலை மற்றும் மொபைல் வங்கியியலூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை	77.4 மில்.	98.3மில்.
இயங்கலை மற்றும் மொபைல் வங்கியியலூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி	ரூ. 623.3பில்.	ரூ. 1042 பில்.

SD-WAN அமுலாக்கம்

வங்கியானது SD-WAN தொழில்நுட்பத்தினை அமுல்படுத்தியதுடன் இது 2023 இல் நாடு பூராவுமுள்ள 375 கிளைகளை உள்ளடக்கியதுடன் இதுவே இலங்கையின் நிதியியல் துறையினுள்ளான பாரிய நிறுவுதலாகும்.

SD-WAN, ஒரு அதிநவீன வலையமைத்தல் தொழில்நுட்பமானது பயனாளர்கள், பிரயோகங்கள் மற்றும் பன்முக அமைவிடங்களிலிருந்து தரவுகளை பாதுகாப்பாக இணைப்பதற்கும், வேகம், பாதுகாப்பு மற்றும் செயன்முறையிலான நெகிழ்வுத்தன்மை என்பவற்றை மேம்படுத்தவும் நிறுவனங்களுக்கு வலுவளிக்கின்றது.

இந்த ஈடுபடுத்தலின் முக்கிய அம்சங்கள், தடையறற் சேவைகளை உறுதிசெய்வதற்காக மிகைமை பேரிடர் மீட்டல் வழிமுறைகளுடன் கொழும்பு 02 இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் ஒரு மத்திய SD-WAN மையம் உள்ளடக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டது. SD-WAN தொழில்நுட்பத்தினை கடைப்பிடிப்பதன் மூலம் மக்கள் வங்கி, செலவு வினைத்திறன், வலையமைப்பு போக்குவரத்தினை உகப்பாக்குதல், WAN சுற்றின் கிரயத்தினைக் குறைத்தல் மற்றும முகாமைத்துவத்தினை மையப்படுத்துதல் போன்றவை நோக்கி முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த ஈடுபடுத்தலானது வெளித்தோன்றும் தொழில்நுட்ப நிலத்தோற்றத்துடன் இணங்குவதுடன், டிஜிட்டல் வங்கியியல் புத்தாக்கத்தில் ஒரு முதல்வராக மக்கள் வங்கியின் நிலையினை திடப்படுத்துகின்றது.

2023 இல் த.தொ. அமைப்புமுறை பாதுகாப்பு

- ISO 27001 தகவல் பாதுகாப்பு முகாமைப்படுத்தல் முறையானது 2023 இல் புதுப்பிக்கப்பட்டதுடன், த.தொ. பாதுகாப்பில் சர்வதேச நியமங்கள் பராமரிக்கப்பட்டன.
- தகவல் அமைப்புமுறைகள் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அடித்தள பாதுகாப்பு வழிகாட்டிகளுடன் இணங்கியுள்ளன.
- வாடிக்கையாளர் தரவுகளை பாதுகாப்பதற்காக, ஒவ்வொரு காலாண்டும் ஒரு வெளிவாரி கணக்காய்வாளரினூடாக த.தொ. அமைப்புமுறை கணக்காய்வுகள் நடாத்தப்படுகின்றன.
- தகவல் பாதுகாப்பு கொள்கையானது வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுவதுடன், அமைப்புமுறைகளும் முறைகள் கட்டுப்பாடுகளும் தரமுயர்த்தப்பட்டன.
- புதிய அம்சங்களுடன் இறுதிப் புள்ளி பாதுகாப்புத் தீர்வுகள் புதுப்பிக்கப்பட்டன.
- சைபர் தாக்குதல்களை தவிர்ப்பதற்காக இணையத்தளங்கள் மற்றும் ஏனைய சமூக ஊடகங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.
- ஏமாற்றல் தாக்குதல்களில் விழிப்புணர்வினை எழுப்புவதற்காக அனைத்து பிரிவுகளிலும் உள் ஊழியர்களுக்கு ஒரு ஏமாற்றல் ஒப்புருவாக்கப் பயிற்சி இடம்பெற்றது.
- பேரிடர் மீட்டலுக்கு மெய்நேர மீளுருவாக்கல் மேம்படுத்தப்பட்டது.

வணிகச் செயன்முறை அபிவிருத்தி

- **பீபள்ஸ் விஷ் கணக்குகள்:** வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சௌகரியத்தினை மேம்படுத்துவதற்கு டிஜிட்டல் அம்சங்கள் மற்றும சேவைகள் பொதியினை உள்ளடக்கிய ஒரு விரிவான டிஜிட்டல் கணக்கு திறத்தல் வசதியினை வழங்குகின்றது.
- **பீபள்ஸ் ஈஸ்:** KYC இனை அமைவிடத்திலிருந்து காணொளியூடாக தொலைதூரத்திலிருந்து இணைந்துகொள்ளும் சௌகரியத்திற்கு வாடிக்கையாளர்களுக்கு வசதியளிக்கின்றது
- **பீபள்ஸ் விஷ் கடன்:** ஒரு தாள்களற்ற கடன் உருவாக்குதல் முறையானத அமுல்படுத்தப்பட்டது, இது தாள்களின் பாவனைக்கான அவசியத்தினை நீக்குவதுடன், ஒரு முற்றான டிஜிட்டல் மற்றும் முறையான கடன் விண்ணப்பச் செயன்முறையினை இயலுமையாக்குகின்றது.
- **பீபள்ஜ் பே வர்த்தகர் தொகுதி:** எளிமையாக்கப்பட்ட "லங்கா QR" பதிவீட்டுச் செயன்முறை, இது சிறிய வணிகங்கள் இந்த டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வின் கடைப்பிடிப்பினை இயலுமையாக்கி ஊக்கப்படுத்துகின்றது.

அறிவுசார் மூலதனம்

தொழில்நுட்ப திறன்களும் அமைப்பு ரீதியான அறிவும்

வங்கியின் அறிவுசார் சொத்துத் தளமானது பல்வேறு துறைகளிலுள்ள நிபுணத்துவத் தேக்கத்தினை உள்ளடக்குகின்றது. பல்வேறு தொழில்நுட்ப திறன்கள் மற்றும் நிபுணத்துவங்கள் கிடைக்கப்பெறுவதனை உறுதிசெய்வதற்காக வழமையான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது வங்கியின் வளர்ச்சிக் குறிக்கோள்களை சந்திப்பதற்கு தேவையானதாகும்.

வங்கியின் பலமான த.தொ. பிரிவானது மென்பொருள் பிரயோகங்களை தழுவுதற்கு மற்றும் உள்ளகத்தேயான தனிப்பயனாக்கப்பட்ட டிஜிட்டல் தீர்வுகளை விருத்திசெய்வதற்கான நிபுணத்துவத்தினைக் கொண்டுள்ளது. வங்கியின் டிஜிட்டல்மயமாக்கலின் வேகத்தை பராமரிப்பதற்கு த.தொ. திறன்கள் அவசியமாகும் என்பதுடன் 2023 இல் முளைசாலிகளின் வெளியேற்றம் மற்றும் எதிர்கால தேவைப்பாடுகளின் எதிர்பார்ப்பின் காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதக்காக வங்கி 32 த.தொ. பட்டதாரிகளை சேர்த்துக்கொண்டது.

ஆறு தசாப்தங்களான செயற்பாடுகளின்போது, வங்கியானது ஒரு விதிவிலக்கான நிபுணர்கள் தேக்கத்தினை கட்டியெழுப்பியுள்ளது. இந்த சேனையானது நீண்டகால சேவையுடன் ஊழியர்களையும் உள்ளக பயிலுநர்களையும் உள்ளடக்குகின்றது.

புதிய கண்ணோட்டம் மற்றும் இளமை வீரியம் என்பவற்றை கொண்டுவருதற்கும், வங்கியினை தகைமையுடைய மற்றும் இயக்காற்றலான புதிய திறன்களுடன் மேம்படுத்தவும் 2023 இல் கணிசமான ஆட்சேர்ப்பு முயற்சிகள் இடம்பெற்றன.

பதவி	ஆட்சேர்ப்பின் எண்ணிக்கை	மட்டம்
வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள்	496	செயற்பாடு
முகாமைத்துவ பயிற்சியாளர்கள்	49	அதிகாரிகள்
த.தொ. பட்டதாரி பயிற்சியாளர்கள்	32	அதிகாரிகள்
பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி	01	நிறைவேற்றுநர்
பிரதம பாதுகாப்பு மேற்பார்வையாளர்	01	நிறைவேற்றுநர்
ஏனையவை - த.தொ. பிரிவு	13	செயற்பாடு

வங்கியின் மனித அறிவுசார் மூலதனத் தளமானது கீழே பட்டியலிட்டவாறு பல உயர்ந்த தகைமையுடைய ஆளணியினரை உள்ளடக்குகின்றது.

தகைமை	ஊழியர்களின் எண்ணிக்கை
MSc / MBA / பட்டப்படிப்பின் பின்னரான பட்டதாரி	666
BA / BSc	1652
CIMA / CFA / CMA / CA ஸ்ரீலங்கா / வங்கியியல்	1930
சட்டத்திலான தகைமைகள்	86
த.தொ. இலான தகைமைகள்	264
டிப்ளோமாக்கள் மற்றும் ஏனையவை	4193
மொத்தம்	8791

கூட்டாண்மைக் கலாச்சாரம்

ஒரு அரச உடைமை வங்கியாக, தேசிய வறுமை ஒழிப்பு மற்றும் கிராமிய பொருளாதாரங்களை விருத்திசெய்வதில் நீண்ட பாரம்பரியமான ஈடுபாட்டினைக் கொண்டுள்ள மக்க வங்கியானது நாட்டிலுள்ள தனியார் துறை வங்கிகளுடன் ஒப்பிடும்போது ஒரு தனித்துவமான நிறுவன கலாச்சாரத்தினைக் கொண்டுள்ளது. முன்னைய மனித தலையீட்டுடனான செயன்முறையின் விரைவான டிஜிட்டல்மயமாக்கல் ஊடாக மிகவும் இயக்காற்றலான மற்றும் தொழில்நுட்பம் அடிப்படையிலான அமைப்புமுறைகள் நோக்கிய கலாச்சார மாற்றத்தினை வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளது. அத்துடன், நாட்டின் தனியார் துறை மற்றும் இளைஞர் சனத்தொகைகளது தேக்கத்தினை விரிவாக்கியுள்ளதுடன், மக்கள் வங்கி அதன் மக்கள் சார்ந்த சம்பிரதாயங்களை தக்கவைத்து அனைத்து பொருளாதார பிரிவுகளிலிருந்து அனைத்து சமூகங்களுக்கும் சேவையாற்றுகின்றது.

ஆய்வும் அபிவிருத்தியும் / புத்தாக்கம்

மக்கள் வங்கி இலங்கையின் முதலாவது புத்தாக்க மத்திய நிலையத்தினை ஆரம்பித்து வைத்தது, இது அனைத்து பங்காளிகளதும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் புத்தாக்கமான டிஜிட்டல் நிதியியல் தீர்வுகளை ஊக்குவிப்பதற்காகும். வின்டெக் கம்பனிகளுடனான ஒத்துழைப்பானது வெளித்தோன்றும் போக்குகளுடன் எம்மை விரைவூக்கமாக இருப்பதற்கும் பதிலளிக்கக்கூடியதாக இருப்பதற்கும் துணையளித்துள்ளது.



எதிர்காலத்திற்கான திட்டங்கள்

டிஜிட்டல் எதிர்காலத்தில், போட்டிசார் மேம்பாட்டிற்கு அறிவுசார் சொத்துக்கள் முக்கியமானதாகும். எனவே, வங்கியானது அதன் மனித வள அடிப்படையிலான அறிவுசார் மூலதனத்தினை, நிபுணர்களது ஆட்சேர்ப்புடன் மற்றும் அதன் தொழில் சேனையினை தொடர்ச்சியாக பயிற்றுவிப்பதனூடாக தொடர்ச்சியாக முதலீடு செய்கின்றது. வங்கி அதன் செயற்பாடுகளை தொடர்ந்தும் டிஜிட்டல்மயமாக்குவதுடன் டிஜிட்டல் கருவிகள் உள்ளடங்கலான அதன் வணிகக்குறியிடப்பட்ட கருவிளையும் விரிவாக்கும்.

த.தொ. மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் பிரிவானது தொடர்ச்சியான டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மாற்றீடுகளை பயன்படுத்துவதன் மூலம் வங்கியின் கிளைகளுக்கான பௌதீக விஜயங்களை சிறுமமாக்குவதற்கு அவற்றின் அர்ப்பணிப்பினை தொடரும். இவ்வருடத்திற்கான பிரதான முன்னிறுத்தம் செயற்கை நுண்ணறிவினை (செ.நு.) பயன்படுத்தி செயன்முறை தன்னியக்கமாக்கலாகும். இந்த முன்னெடுப்பானது 2023 இல் ஆரம்பிக்கப்பட்ட வங்கி வாரியாக பல்வேறு பிரிவுகள் பூராவும் தன்னியக்கமாக்கல் செயன்முறைகளை திட்டமிடுவதனை கட்டியெழுப்பும்.

மேலாக, வங்கியானது அதன் கொடுப்பனவு மையமான, ATM வலையமைப்பு, விற்பனைப் புள்ளி (POS) முறைகள், இணையத்தள கொடுப்பனவு நுழைவாயில்கள், மற்றும் மொபைல் பிரயோகங்களில் ஒரு விரிவான மறுசீரமைப்பினைத் திட்டமிட்டுள்ளது. இந்த இற்றைப்படுத்தல்கள் 2024 இன் நடுப்பகுதியில் நேரலையாக செல்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மறுசீரமைப்பானது வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் அனைத்து வழிகள் பூராவும் பயனாளர் அனுபவத்தினை மேம்படுத்துவதற்கு இலக்குவைத்துள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற கொடுக்கல் வாங்கல்களை உறுதிசெய்கின்றது. இந்த இற்றைப்படுத்தல்களின் பகுதியாக, வங்கி புதிய ATM மற்றும் அட்டை முகாமைத்துவ முறைகளை அறிமுகப்படுத்துவதுடன், இது வாடிக்கையாளர்களுக்கு நவீன அம்சங்களுடன் மேம்பட்ட அட்டை முகாமைப்படுத்தல் தெரிவினையும் வழங்குகின்றது. இது மேம்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள், விரிவாக்கப்பட்ட செயல்பாடு, மற்றும் வங்கியியல் செயன்முறைகளை சீரமைப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பயனாளர் தோழமையான இடைமுகப்ப மற்றும் வாடிக்கையாளர் திருப்தியினை மேம்படுத்துவதும் ஆகும்.

எமது மனித மூலதனமானது எமது நிறுவனத்தின் சாரம்சத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது, குறிப்பாக வங்கியானது சாதாரண தனிநபர்களுடன் நாளாந்த வாழ்க்கையில் ஆழமாக இணைந்துள்ளது. எமது அடையாளமானது மாற்றமடையும் நேரங்களுடனும் வாடிக்கையாளர் மக்கள் தொகையுடனும் வெளிவரும்வேளை, எமது மக்கள் எமது மிகவும் பெறுமதியுடைய சொத்தாக உள்ளார்கள். இலங்கை முழுவதும் பன்முகமான பின்னணியிலிருந்து வருகின்ற 7,656 தனிநபர்களைக் கொண்டு தொழிற்சேனையுடன் மக்கள் வங்கியானது நாட்டில் உள்ள பாரிய வங்கிகளுள் ஒன்றாக திகழ்கின்றது. ஒரு முக்கியமான அரச வங்கியாக, நாம் எமது வாடிக்கையாளர்களது வாழ்வில் மற்றும் வாழ்வாதாரங்களில் ஒரு முக்கியமான பங்கினை வகிப்பதுடன், நாட்டின் அனைத்து மூலைகளிலிருந்தும் வளமான அனுபவம் மற்றும் கண்ணோட்டம் பெறப்படுகின்றது.

எமது அணுகுமுறை

சமீப காலங்களில், எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பான முயற்சிகள் எமது வெற்றிக்கான மூலைக்கல்லாக சேவையாற்றியுள்ளதுடன், இந்த வருடம் அதற்கு விதிவிலக்கல்ல. இவை வகிக்கும் முக்கியமான பங்கினை இனங்கண்டு, எமது பகிர்ந்துகொள்ளப்படும் இலக்குகளை அடைவதற்கு அவசியமான அனைத்து வளங்களையும் ஊக்கத்தினையும் அவர்கள் கொண்டிருப்பதனை உறுதிசெய்வதற்காக நாம் அவர்களுக்கு அயராத உறுதுணையினை வழங்குவதில் உறுதியாய் உள்ளோம். விரிவான பயிற்சி திட்டங்கள், தொழில்சார் அபிவிருத்தி வாய்ப்புக்களுடாக அல்லது ஒரு துணையளிக்கும் பணியிடல் சூழலினூடாக, நாம் எமது அணியின் அங்கத்தவர்களிடையே நம்பிக்கை மற்றும் கடப்பாட்டு உணர்வினை வளர்ப்பதில் முன்னுரிமையளித்துள்ளோம். எமது ஊழியர்களுக்கு வலுவளித்து அவர்களது வளர்ச்சியில் முதலீடு செய்வதன் மூலம் நாம் எமது நிறுவனத்தின் அடித்தளத்தினை பலப்படுத்தியது மாத்திரமன்றி, தொடர்ச்சியான வெற்றிக்கு எம்மை முன்னோக்கித் தள்ளும் தனிச்சிறப்பும் மற்றும் சாதனையுடைய கலாச்சாரத்தினையும் மேற்கொள்ளும்.



முக்கிய அம்சங்கள்

மொத்த ஊழியர்கள்:
7,656

பெண் ஊழியர்கள்
60%
இற்கும் மேல்

தக்கவைத்தல் வீதம்:
96.4%

ஊழியர் ஒருவருக்கான இலாபம்:
ரூ. 1.3 மில.

மூலதன இணைப்புகள்

நிதியியல் மூலதனம்

வங்கியின் வருவாய் வளர்ச்சிக்கான ஊழியர்களின் பங்களிப்பு. சக்தி மற்றும் ஏனைய வளங்களின் நுகர்வினை குறைத்து செலவு சேமிக்கும் ஊழியர்களின் முன்னெடுப்புகள்

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

வாடிக்கையாளர் உறவுமுறை முகாமைத்துவம், வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் கூ.ச.பொ. திட்டங்கள் மூலம் பெறுகின்ற வெளிப்பாடுகளினால் எமது ஊழியர்கள் அவர்களது சொந்த திறன்களை விருத்தி செய்கின்றார்கள். இது சிறந்து தொழில் திருப்தி மற்றும் ஊழியர் தக்கவைப்பிற்கு வழிசமைக்கின்றது

அறிவுசார் மூலதனம்

தற்போது அமுலாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இற்றைப்படுத்தப்பட்ட பயிற்சிக் கூறுகள் வங்கியின் அறிவுசார் மூலதனத்தினை மேம்படுத்தும்.

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

புதிய மனிதவள செயற்பாட்டு மீள்கட்டமைப்பு முறையானது உற்பத்திசெய்யப்பட்ட மூலதனத்திற்கு கணிசமான பங்களிப்பினை செய்கின்றது.

இயற்கை மூலதனம்

நாடு முழுவதும் இடம்பெறும் மரம் நடுகை பிரச்சாரங்களுக்கு விதைகள் விநியோகித்தல் மற்றும் தாள் பாவனையினை சிறுமமாக்குதல் போன்ற நிலைபேறுடைய நடைமுறைகளில் ஊழியர்கள் பங்கேற்கின்றார்கள். பசுமையான கிளைகளில் பணிபுரியும் ஊழியர்கள் வழமையான பணிநாள் வழக்கமாக நிலைபேறுடைய வளங்கள் பயன்பாடு மற்றும் சக்தி சேமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

மனித மூலதனம்

பொருண்மையான கருப்பொருள்

- ஊழியர் ஆக்கத்திறன்
- திறன் முகாமைத்துவம்
- பயிற்சியும் அபிவிருத்தியும்
- ஊழல் எதிர்ப்பு
- ஊழியர்களுக்கு மீள்திறனளித்தல்

வாய்ப்புக்கள்

- சாத்தியமானவாறு இயங்கலை பயிற்சிக் கூறுகளுக்கு நகர்தல்
- பிரிவுகளுக்கிடையே கூட்டுப்பணியினை கட்டியெழுப்பல், இது பணி அட்டவணையின்படி முன்னேறுவதை உறுதிப்படுத்துவதற்கு
- உள்ளக பயிலுனர் மட்டத்தில் புதிய நகர்வுகள்

சவால்கள்

- 2022 இன் முதல் காலாண்டில் பொருளாதார நெருக்கடி, இது வருடத்தின் எஞ்சிய பகுதியில் அந்நியச்செலாவணி கட்டுப்பாடு மற்றும் எரிபொருள் பற்றாக்குறையினை விளைவித்தது.
- போக்குவரத்து சிக்கல்கள் ஊழியர் வருகையினை பாதித்தது. இது வங்கியினால் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளுக்கான அவசியத்தினை ஏற்படுத்தியது.
- பெரும்பாலான ஆளணியினருக்கு உட்கட்டமைப்பு இல்லாததனால் வீட்டிலிருந்து பணிபுரிவதில் கட்டுப்பாடுகள், மற்றும் வங்கியின் பல செயற்பாடுகள் நடைமுறைக்கு சாத்தியமல்லாதது.
- அந்நியசெலாவணி மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடுகளினால் பயிற்சித் திட்டங்களில் தாமதங்கள் மற்றும் தடைகள்
- மூத்த முகாமையாளர்களுக்கு டிஜிட்டல்மயமாக்கப்பட்ட பணிப்பாய்வு முறைகளில் பயிற்சி தேவைப்படுகின்றது. இது புதிய ஜென் Z ஆட்சேர்ப்பிற்கு தலைமைத்துவம் வழங்க இயலுமையாக்கும்.
- திறனுள்ள ஊழியர்களின் இடம்பெயர்வில் அதிகரிப்பு



ஐ.நா. நி.அ.இ. களுக்கான பங்களிப்பு

1 NO POVERTY

வறுமையற்ற

வங்கியானது நேரடியான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் நாடு பூராகவுமான வறுமை ஒழிப்பிற்கு பங்களிப்பு செய்கின்றது.

3 GOOD HEALTH AND WELL-BEING

நல் ஆரோக்கியமும் நல்வாழ்வும்

வங்கியானது அனைத்து ஊழியர்களதும் வாடிக்கையாளர்களதும் பாதுகாப்பு மற்றும் ஆரொக்கியத்திற்கு அதன் திடமான ஆரோக்கிய மற்றும் சுகாதார நியமங்களைத் தொடர்ந்துள்ளது

4 QUALITY EDUCATION

தரமான கல்வி

வங்கியானது அனைத்து தரத்திலுமுள்ள ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை வழங்குவதுடன் கல்வி மேம்பாட்டிற்கும் துணையளிக்கின்றது.

8 DECENT WORK AND ECONOMIC GROWTH

ஏற்புடை பணியும் பொருளாதார வளர்ச்சியும்

வங்கியியல் துறையில் பாரிய பணிக்கொள்பவராக வங்கி காணப்படுவதுடன் பல்வேறு மனித வளங்கள் கொள்கைகளையும் ஊழியர் நலன்களையும் கொண்டுள்ளதுடன், பொருத்தமான அனைத்து தொழிலாளர் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காண்கின்றது.

10 REDUCED INEQUALITIES

குறைக்கப்பட்ட சமத்துவமின்மைகள்

வங்கி ஒரு பாகுபாடற்ற பணிக்கொள்பவர் என்பதுடன், இனம், மதம் அல்லது வேறு ஏதேனும் மக்கள் தொகைசார் பாரபட்சமின்றி ஊழியர்களுக்கு தகுதியின் அடிப்படையில், வெகுமதிகளையும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களையும் வழங்குகின்றது.

உருவாக்கப்பட்ட பெறுமதி



ரூ. **24.5** பில்.
ஊழியர் நலன்களாக
ஒதுக்கப்பட்டது



இவ்வாண்டின்போது ஊழியர்களுள்
239 அங்கத்தவர்கள்
பதவியுயர்த்தப்பட்டு
தரமுயர்த்தப்பட்டார்கள்



பாலினம், இனம் மற்றம் ஏனைய மக்கள் இயல்களை பொருட்படுத்தாது இலங்கையர்களுக்கான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக பல வாய்ப்புக்களை வங்கி வழங்குகின்றது.

மக்கள் வங்கியானது வங்கியியலில் குறிப்பிட்ட துறையில் செயற்படுவதனால், வங்கியின் மனித மூலதன அடித்தளமாகது ஒரு முக்கியமான அறிவுசார் சொத்தாகும். இது வங்கியின் நாளாந்த செயற்பாடுகளில் ஒரு தவிர்க்கவியலாத பங்காளியாக மற்றும் வழங்கப்படும் சேவையின் தரத்தினூடாக வங்கியின் வணிக நாமத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

ஒரு அரச உடைமை வங்கியாக, மக்கள் வங்கி நாட்டின் அனைத்து பாகத்திலுமுள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் உயர் தரமான வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் அதன் பொறுப்பு குறித்து அறிந்துள்ளது. வங்கியானது பால், இனம் மற்றும் ஏனைய மக்கள் தொகைசார் ஆகியவற்றை பொருட்படுதாது இலங்கையர்களுக்கு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான பல வாய்ப்புக்களை வழங்குகின்றது. அத்துடன் இந்த குறிக்கோள் நோக்கி அதன் வருவாயில் ஒரு பாரிய பகுதியினை போட்டித்தன்மையான சம்பளங்கள், ஏனைய நலன்களூடாக வழங்குவதில் மற்றும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் தொழில் மேம்பாட்டிற்கான வாய்ப்புக்களிலும் முதலீடு செய்கின்றது.

2023 நிதியாண்டின்போது, வங்கி அதன் அனைத்து செயற்பாட்டு அலகுகளிலும் ஒரு அதிகரித்த மூளைசாலிகளின் வெளியேற்றத்தினை அனுபவித்ததுடன், தடையற்ற மற்றும உயர் தரத்திலான சேவை விநியோகத்தினை பராமரிப்பதற்கான அதன மனித வளங்கள் நிர்வாகச் செயற்பாட்டில் அழுத்தத்தினை ஏற்படுத்தின. எவ்வாறாயினும், வங்கியானது தொடர்ச்சியான ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்றுவித்தல் ஊடாக நிலைமையினை வினைத்திறனாக முகாமைப்படுத்தியது. அதேவேளை வங்கியின் ஐந்தொகையினை பலப்படுத்துவதற்கு கிடைக்கக்கூடிய அனைத்து தொழிற்சேனையினையும் அணிதிரட்டியது.

வங்கியின் எதிர்கால நிரூபித்தல்

மனித வள நிர்வாகத்தின் மீள்கட்டமைப்பு செயன்முறையானது 2021 இல் புதிய மென்பொருளின் கொள்வனவுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் அமுலாக்கம் 2023 இல் தொடர்ந்தது. ம.வ. நிர்வாகத்தின் தன்னியக்கமாக்கல் அனைத்து ம.வ. செயன்முறையினையும் டிஜிட்டல்மயமாக்கும் நோக்கினைக் கொண்டதாகும். ஊதியப் பதிவு பகுதியளவில் தன்னியக்கமாக்கப்பட்டுள்ளதுடன், இது மேலதிகநேரக் கணிப்புகள், விடுமுறை முகாமைத்துவம், மற்றும் ஏனைய நிர்வாகச் செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. எதிர்காலத்தில், அத்தகையச் செயற்பாடுகள் மைய அமைப்புமுறையுடன் நேரடியாக இணைக்கப்பட்டு மனித தலையீடின்றி செயற்படும் ஆற்றலைக் கொண்டிருக்கும். 2024 இல் ம.வ. முறை அனைத்தும் அனைத்து ஊழியர்களுக்கும் நேரலையாக அணுகக்கூடியதாயிருக்கும்.

மேற்குறிப்பிட்டவற்றிற்கும் மேலாக, வங்கிவாரியான நிறுவனக் கலாச்சார மாற்றம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இது வங்கியினை எதிர்காலத்திற்கு தயாரான 21 ஆம் நூற்றாண்டு நிறுவனமாக உருமாற்றுவதற்காகும். இந்தச் செயன்முறையானது மனித வளப் பிரிவினால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

2021 இல் இயங்கலை பயிற்சியானது ஒரு முன்னேற்றகரமான பயணத்தின் ஆரம்பத்தைக் குறிப்பிட்டது. முன்னோக்கி நகரும்போது, புதிய மனித வள தகவல் அமைப்புமுறையின் வரம்புறுகையினுள், இ-பயிலல் கல்விக்கூடத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த முன்னெடுப்பினை மேம்படுத்துவதற்கான திட்டம் காணப்படுகின்றது. எதிர்பார்க்கின்ற மேடையானது, வங்கியினுள் இ-பயிலல் கலாச்சாரத்தினை வளர்க்கும் நோக்கினைக் கொண்டுள்ளதுடன், தொடர்ச்சியான அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்கு பன்முகமான பயிலல் கருவிகள் மற்றும் பொருள்களையும் வழங்கும்.

தொடர்வுத் திட்டமிடல்

வங்கியானது நிறைவேற்று முகாமைத்துவம் மற்றும் பெறுநிறுவன முகாமைத்துவத்திற்கு ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொடர்வுத் திட்டத்தினை விழிப்புடன் பராமரிக்கின்றது. இந்த மூலோபாய அணுகுமுறையானது நிறுவனத்திற்குள்ளேயெ அடுத்த அணி முகாமைத்துவத்தினை தயார்படுத்துவதனை உறுதிசெய்கின்றது.

அத்துடன், வங்கியானது ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சேனை திட்டத்தினை 2024 ஆம் ஆண்டிற்கு ஒரு மூலோபாய முன்னிறுத்தத்துடன் செயலாக்கமாக முகாமைப்படுத்துகின்றது. இது முகாமையாளர் மற்றும் அதற்கு மேலாக தரத்திலுள்ள ஊழியர்களுக்காகும்.

மேலும், வங்கியானது முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் பதவிகளுக்கான மேல்வருகின்ற ஊழியர்களை பயிற்றுவிப்பதற்காக நிறைவேற்று அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தலைமைத்துவ திறன்கள் அபிவிருத்தித் திட்டங்களையும் நடாத்துகின்றது.

தொழிற்சேனை சுயவிபரம் GRI 2-7

டிசம்பர் 2023 இன் இறுதியில் உள்ளவாறு, வங்கியின் மொத்த தொழிற்சேனையானது, நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற் ஊழியர்களுடன், 7,656 ஆகக் காணப்பட்டது. இது 2022 இன் இறுதியில் 7,377 ஆக இருந்தது. எமது ஊழியர்கள் அனைவரும் முழு நேர அடிப்படையில் சேவையாற்றுகின்றார்கள்.

பால் வாரியாகவும் பிராந்திய வாரியாகவும் மொத்த ஊழியர்களின் பிரித்தல் (நிரந்தர ஊழியர்கள் மற்றும் ஏனையோர்)

மாகாணம்	ஆண்	பெண்	மொத்தம்	மொத்தம் %
மேல்	1,114	1,961	3,075	40%
தென்	282	502	784	10%
மத்திய	305	469	774	10%
வட மேல்	221	398	619	8%
ஊவா	204	233	437	6%
வடக்கு	176	210	386	5%
சபரகமுவ	203	317	520	7%
கிழக்கு	267	281	548	7%
வட மத்திய	222	291	513	7%
மொத்தம்	**2,994**	**4,662**	**7,656**	**100%**

மனித மூலதனம்

பால் வாரியாகவும் பிராந்திய வாரியாகவும் நிரந்தர ஊழியர்களின் பிரித்தல்

மாகாணம்	ஆண்	பெண்	மொத்தம்
மேல்	1,002	1,820	2,822
தென்	259	471	730
மத்திய	280	445	725
வட மேல்	209	383	592
ஊவா	176	215	391
வடக்கு	161	187	348
சபரகமுவ	169	300	469
கிழக்கு	251	267	518
வட மத்திய	196	254	450
மொத்தம்	**2,703**	**4,342**	**7,045**

பால் வாரியாகவும் பிராந்திய வாரியாகவும் நிரந்தரமற்ற ஊழியர்களின் பிரித்தல்

வங்கியின் நிரந்தரமற்ற ஊழியர்களான தொழிலாளர்கள் ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள். வங்கி பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்களது பட்டத்தின் இறுதி ஆண்டிலுள்ளோருக்கு உள்ளகப் பயிலுநர்கள் வசதியினை வழங்குகின்றது. மேலாக, பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதற்கு காத்திருக்கும் 1,308 மாணவர்களுக்கு பயிற்சிக்கான வாய்ப்புக்களை வழங்கியது.

மாகாணம்	ஆண்	பெண்	மொத்தம்
மேல்	112	141	253
தென்	23	31	54
மத்திய	25	24	49
வட மேல்	12	15	27
ஊவா	28	18	46
வடக்கு	15	23	38
சபரகமுவ	34	17	51
கிழக்கு	16	14	30
வட மத்திய	26	37	63
மொத்தம்	**291**	**320**	**611**

ஊழியர்கள் அல்லாத தொழிலாளிகள்

GRI 2-8

பாதுகாப்பு மற்றும் துப்புரவாக்கல் சேவைகளை வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனிநபர்கள் வங்கியின் ஊழியர்களாகக் கருதப்படமாட்டர். இவர் ஒப்பந்த உடன்படிக்கைகளினூடாக ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இந்தச் சேவைகள் வங்கியின் மையமாக செயற்பாடுகளுடன் ஒருங்கிணையாததனால், இந்த குறிகாட்டிகள் தொடர்பான தரவுகள் கண்காணிக்கப்படவில்லை.

கூட்டு பேரம்பேசல் உடன்படிக்கைகள்

GRI 2-30

மொத்த ஊழியர்களில் 94.7% ஆனோர் கூட்டு பேரம்பேசல் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதனால், நிறுவனமானது, இந்த உடன்படிக்கைகளின் கீழ் வருகின்றார்களோ அல்லது இல்லையோ என்பதைப் பொருட்படுத்தாது அனைத்து ஊழியர்களுக்கும் சமத்துவமான கவனிப்பினை உறுதிசெய்கின்றது. கூட்டு பேரம்பேசல் உடன்படிக்கைகளின் கீழ் உள்ளடக்கப்படாத ஊழியர்கள் உள்ளடக்கப்பட்டவர்களைப் போன்று அதே நிபந்தனைகள் மற்றும் நலன்களைப் பெறுகின்றார்கள். ஊழியர்களிடையே நியாயத்தன்மை மற்றும் நிலைத்தன்மைக்கான கடப்பாடானது ஒரு ஒத்திசைவான பணிச் சூழலை வளர்ப்பதற்கும் சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தின் நியமங்களை நிலைநிறுத்துவதற்கும் நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கின்றது.

உள்ளூர் ஆகக்குறைந்த வேதனத்துடன் ஒப்பிடும்போது பால் வாரியான வழக்கமான நுழைவு மட்டத்திலான வேதனத்தின் விகிதம்

GRI 202-1

வங்கியியல் துறையில் நுழைவு மட்டத்திலான பதவிகளுக்கு சட்டரீதியாக கட்டாயப்படுத்தப்படும் ஆகக்குறைந்த வேதனம் ஒன்றும் இல்லை. வங்கியானது ஆகக்குறைந்த நுழைவு மட்ட சம்பள வீதத்திலும் பார்க்க மேலான சம்பளங்களை வழங்குகின்றது. சம்பள திருத்தங்கள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கொருமுறை இடம்பெறுவதுடன், வங்கியின் செயற்திறனினால், துறைசார் அளவுகோல்களினால் மற்றும் சந்தை நிலைமைகளினால் சம்பள அதிகரிப்புகள் தீர்மானிக்கப்படுகின்றன.

உள்ளூர் சமூகத்திலிருந்து பணிக்கமர்த்தப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவத்தின் விகிதாசாரம் GRI 202-2

வங்கியின் செயற்பாடுகள் இலங்கைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் அதன் தொழிற்சேனையானது முதன்மையாக உள்ளூரில் ஆட்சேர்க்கப்பட்ட இலங்கை பிரஜைகளை உள்ளடக்கியிருத்தல், என்ற சூழமைவில் சிரேஷ்ட முகாமையாளர்களின் ஆட்சேர்ப்பும் நியமனமும் பல்வேறு இனப் பின்னணியினையும் குறிப்பிட்ட பூகோளவியல் இடங்களிலிருந்தும் காணப்படுவதனால், இது உள்ளூர் சமூகங்களுடனான தொடர்பாடல் மற்றும் தொடர்பினை மேம்படுத்துவதற்கு சேவையாற்றுகின்றது. "உள்ளூர்" எனும் பதமானது நாட்டினுள் காணப்படும் பூகோளவியல் இடங்களைக் குறிப்பிடுகின்றது. குறிப்பாக, முக்கியமான இடங்களை வங்கிக்கு உயர்ந்த வருவாயினை உருவாக்கும் பிராந்தியங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. சிரேஷ்ட முகாமைத்துவம் அனைத்தும் உள்ளூர் சமூகங்களிலிருந்து பணிக்கமர்த்தப்படுவதுடன், இதன் மூலம் வங்கி உள்ளூர் சமூகங்களுடன் ஆழமான தொடர்பினை வளர்ப்பதற்கும், அவர்களது தேவைகள் மற்றும் அக்கறைகளை புரிந்துகொள்வதற்கும் மற்றும் அதற்கேற்றவாறு அதன் சேவைகள் மற்றும் மூலோபாயங்களை மேற்கொள்கின்றது. இந்த அணுகுமுறையானது கலாச்சாரப் பண்முகத்தன்மை, வினைத்திறனான தொடர்பாடல் மற்றும சமூக ஈடுபாடு ஆகியவற்றை வற்புறுத்துவதுடன் இதன்மூலம் இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களுடன் அதன் உறவுமுறைகள் மற்றும் தாக்கத்தினை பலப்படுத்துகின்றது.

கொள்கை கடப்பாடுகள்

GRI 2-16, 2-23, 2-24

வங்கியின் சார்பில் வணிகத்தினை நடாத்தும்போது அனைத்து ஊழியர்களிடையேயும் அதிகபட்சமான நேர்மை மற்றும் நடத்தையினை நிலைநிறுத்துவதற்கு பின்வரும் கொள்கைகளை நாம் அமுல்படுத்தினோம்.

- **பெறுநிறுவன ஆளுகைக் கோவை**

வங்கியினால் தேவைப்படும் விழுமியங்கள் நடத்தையினை கொண்டிருக்கும் கூட்டாண்மை ஆளுகைக் கோவையானது அனைத்து ஊழியர்களுக்குமான பாதையினை நிறுவுகின்றது. நெறிமுறையான நடத்தை மற்றும் நேர்மையிலான அதன் முன்னிறுத்தமானது ஊழியர்களுக்கான பாதையினை நிறுவுவது மாத்திரமன்றி, நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் சூழலைக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதுடன், வங்கிக்கு நீண்டகால முதலீடு, நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் வணிக நோ்மைக்கும் இட்டுச்செல்லும்.

- **ஊழியர்களுக்கான நடத்தைக் கோவை**

இது வங்கியின் தொலைநோக்கு, விழுமியங்கள் மற்றும் தொழில்சார் நடத்தை நியமங்களுடன் கொள்கைகள் ஆகியவற்றை இணைப்பதுடன், அனைத்து ஊழியர்களும் வங்கியுடனான அவர்களின் வேலைவாய்ப்பின் ஆரம்பத்தில் இந்த ஆவணத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

- **ஒழுக்காற்றுக் கோவை**

இந்த ஆவணமானது தன்மையில் உத்தியோகபூர்வமானது மற்றும் துர்நடத்தை என்பதில் வங்கியினை வரைவிலக்கணத்தை வரையறை செய்வதுடன், அத்தகைய ஒரு சூழ்நிலையில் பிரயோகிக்கப்படும் முறையான ஒழுக்காற்று நடைமுறையினையும் நிறுவுகின்றது. இதன் நோக்கம் துர்நடத்தை விடயங்களை சாமர்த்தியமான கையாளும் ஒரு முன்னேற்றகரமான பணியிடத்தினை நிறுவுதல் மூலம் அதன் நேர்மையினை தக்கவைக்க இயலுமையாயிருக்கும்.

- **உட்குறை உரைப்போர் கொள்கை**

உட்குறை உரைப்போர் கொள்கையானது துர்நடத்தை மற்றும் ஊழலுக்கு எதிரான வங்கியின் நிலைப்பாட்டின் மற்றுமோர் வழிமுறையாகும் என்பதுடன் வங்கியின் பூச்சிய சகிப்புத்தன்மை கொள்கையினை பிரதிபலிக்கின்றது. வங்கியினால் நியமிக்கப்பட்ட ஒரு பணிப்பாளர் அத்தகைய முறையீடுகளை மீளாய்வு செய்யும்வேளை ஊழியரைப் பாதுகாப்பதற்கு அநாமதேயத்தினை உத்தரவாதம் செய்கின்றார். பின்வரும் சிக்கல்கள் நேரடியாக உடனடியாகவுள்ள மேற்பார்வையாளருக்கு அல்லது சபை கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடப்படலாம்.

i. ஒழுக்காற்றுக் கோவையின் மீறல்

ii. சட்ட / முறைமைப்படுத்தல் கடப்பாட்டுடன் இணக்கப்பாடு காண்பதற்கு தவறுதல்

iii. நீதி தவறுதல்

iv. நிதியியல் முறைகேடுகள்

ஊழல் எதிர்ப்பு கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் பற்றிய தொடர்பாடல் மற்றும் பயிற்சி GRI 205-2

வங்கியானது ஒரு வலுவான ஊழல் எதிர்ப்பு கலாச்சாரத்தினை வளர்த்துள்ளதுடன், இது உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் நிர்வகிக்கப்பட்ட ஒரு விரிவான தொடரான பயிற்சி முன்னெடுப்புகளினாகும். இந்தத் திட்டங்கள் ஊழல் நடைமுறை மற்றும் மோசமான நடத்தையினை தவிர்த்தல் தொடர்பாக அனைத்து ஊழியர்களையும் அறிவு மற்றும் விழிப்புணர்வுடன் தயார்படுத்தியுள்ளது. மேலும், ஊழியர்கள் முழுமையாக வங்கியின் ஊழல் எதிர்ப்பு கொள்கையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளதுடன், இது பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுள்ளது. இலஞ்சம் மற்றும் ஊழலில் எமது நிலைப்பாடானது பூச்சிய சகிப்புத்தன்மை கொள்கையுடன் தெளிவானதாகும். ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்ட தவறுகள் உடனடியாக மற்றும் கடுமையான ஒழுக்காற்று நடைமுறைகளை சந்திக்கின்றன.

GRI 205-3

	எண்ணிக்கை	சதவீதம்
நிறுவனத்தின் ஊழல்எதிர்ப்பு கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் அறிவிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் சதவீதம்	அனைவரும்	100%
நிறுவனத்தின் ஊழல்எதிர்ப்பு கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் அறிவிக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் சதவீதம்	அனைவரும்	100%
ஊழல் எதிர்ப்பில் பயிற்சிபெற்ற ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் சதவீதம்	4,140	54%
வருடத்திற்கான உறுதிசெய்ப்பட்ட புதிய ஊழல் நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கை	96	57%
உறுதிசெய்யப்பட்ட மொத்த நிகழ்வுகளின் எண்ணிக்கையில் ஊழலுக்காக பணிநீக்கப்பட்டவர்கள் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள்.	270	2.3%

மோசடிகள், வங்கிக்கு நட்டமேற்படுத்ததிய கவனயீனம் மற்றும் ஏனைய துர்நடத்தைகளின் காரணமாக ஊழல் நிகழ்வுகள் பிரதானமாக அறிக்கையிடப்பட்டன.

மனக்குறை கையாளுதல GRI 2-16

"ஊழியர் அக்கறைகளை விழித்துரைப்பதற்கான பொறிமுறை" சுற்றறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளவான ஊழியர் மனக்குறைகளை விழித்துரைப்பதற்கு ஒரு முறைமையினை அமுலாக்கியுள்ளது. ஊழியர்கள் ஆரம்பத்தில் முறையீடுகள் மற்றும் மனக்குறைகளை பி.நி.அ. / பொது முகாமையாளருக்கு கொண்டுசெல்வதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. அதன் பின்னர், பெறுநிறுவன முகாமைத்துவத்தின் அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு குழுவானது, இந்த அக்கறைகளில் ஒரு முழுமையான மீளாய்வினை நடாத்தும். மீளாய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், பி.நி.அ. / பொது முகாமையாளர் ஊழியர்களினால் எழுப்பப்படட மனக்குறைகளை விழித்துரைத்து தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கின்றார். 2023 இன் போது மொத்தமாக முன்னிலைப்படுத்தப்பட்ட 170 மனக்குறை நிகழ்வுகளில் 87 திருத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மனித மூலதனம்

ஆட்சேர்ப்பும் புரள்வும் GRI 401-1

புதிய ஊழியர் பணிக்கமர்த்தல்

வயது	18 – 25 வருடம்		26 – 35 வருடம்		36 – 45 வருடம்		46 – 55 வருடம்		>56 வருடம்		மொத்தம்
	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	
மேல்	73	101	26	30	3	1	1	1			236
தென்	21	29	2	2							54
மத்திய	22	23	3	3							51
வடமேல்	12	14		1							27
ஊவா	23	16	3	2							44
வடக்கு	13	21		2							36
சபரகமுவ	32	14	2	3							51
கிழக்கு	14	14									28
வட மத்திய	23	35	3	2							63
மொத்தம்	**233**	**267**	**39**	**45**	**3**	**1**	**1**	**1**	**0**	**0**	**590**

ஊழியர் புரள்வு

வயது	18-25 வருடம்		26-35 வருடம்		36-45 வருடம்		46-55 வருடம்		56 வருடங்கள் அதற்குமேல்	
	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
மேல்	-	-	4	23	16	66	4	3	29	23
தென்	-	-		5	2	5			2	4
மத்திய	-	-		3	2	5	1	4	7	5
வடமேல்	-	-	2		5	8	2		1	3
ஊவா	-	-			2		1		2	1
வடக்கு	-	-	1	6		3	1		3	
சபரகமுவ	-	-		2	1	2		1	2	4
கிழக்கு	-	-	1	2	3	2	2		4	1
வட மத்திய	-	-		2	2	4			4	
மொத்தம்	**-**	**-**	**8**	**43**	**33**	**95**	**11**	**8**	**54**	**41**

வேதனம் மற்றும் நலன்கள்

வங்கியானது ஒரு பாரபட்சமற்ற வேதனக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளதுடன், எமது ஊழியர்களுக்கு நியாயமான, போட்டித்தன்மையான, மற்றும் கவர்ச்சிகரமான பொதிகளை வழங்குகின்றது. இவை செயற்திறன் அடிப்படையிலான வெகுமதிகள் மற்றும ஏனைய நாணய மற்றும் நாணயமற்ற நலன்களை உள்ளடக்குகின்றன. சம்பள திருத்தங்கள் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறுவதுடன், இங்கு வங்கியின் செயற்திறன்கள், துறைசார் நியமங்கள் மற்றும் சந்தை நிலைகளின் அடிப்படையில் அவசியமான அதிகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊழியர்கள் பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதியம், மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவுகளுக்கு உரிமையுடையவர்கள் மற்றும் இவை உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவானதாகும். வங்கியானத ஊ.ந.நி. இற்கு ரூபா 426.9 மில்லியனையும், ஊ.சே.நி. இற்கு ரூபா 1,707.7 மில்லியனையும் நிதியாண்டு 2023 இற்கு செலுத்தியது.

முழுநேர ஊழியர்களுக்கான வழமையான நலன்கள் ஆனால் நிரந்தரமற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படாதவை GRI 401-2

ஆயுள் காப்புறுதி	தனிப்பட்ட விபத்துக் காப்புறுதித் திட்டம்
சுகாதாரப் பாதுகாப்பு	மருத்துவ நலன்கள், இறப்பு பணிக்கொடை
இயலாமையும் செல்லாத்தன்மை காப்பீடு	ஆம்
பெற்றோர் விடுமுறை	மகப்பேற்று விடுமுறை மாத்திரம்
இளைப்பாறுதல் ஏற்பாடு	ஆம்
பங்கு உரித்துவம்	இல்லை
ஏனையவை	வருடாந்த உபகாரங்கள், சில தரங்களுக்கு பிரயாணப் படிகள், விடுமுறை பங்களாக்கள், ஊழியர் கடன்கள்

பெற்றோர் விடுமுறை GRI 401-3

	பெண்கள்
மகப்பேற்று விடுமுறைக்கு உரிமையுடைய ஊழியர்களின் எண்ணிக்கை	4,662
மகப்பேற்று விடுமுறையினை எடுத்த ஊழியர்களின் எண்ணிக்கை	266
மகப்பேற்று விடுமுறைக்கு பின்னர் திரும்பிய ஊழியர்களின் எண்ணிக்கை	266
வேலைக்குத் திரும்பியோர் (%)	100%

செயற்பாட்டு மாற்றங்கள் தொடர்பாக ஆகக்குறைந்த அறிவித்தல் காலங்கள் GRI 402-1

ஊழியர்களுக்கு ஏதேனும் செயற்பாட்டு மாற்றங்கள் மற்றும் அவர்களது செயற்பாடுகளிலான அவற்றின் சாத்தியமான தாக்கம் என்பவற்றில் போதுமான அறிவித்தல் வழங்கப்படுகின்றது. இது ஊழியர்களது மனோநிலையில் இடம்பெறக்கூடிய ஏதேனும் பாதகமான தாக்கங்களைத் தணிப்பதற்கு உதவுகின்றது.

பொதுவாக, அவர்களை கணிசமாக பாதிக்கும் முக்கியமான செயற்பாட்டு மாற்றங்களது அமுலாக்கத்திற்கு முன்னர் அவை ஊழியர்களுக்கும் அவர்களது பிரதிநிதிகளுக்கும் ஆகக்குறைந்த எண்ணிக்கையிலான கிழமைகளது அறிவித்தல்கள் வழங்கப்படுகின்றன, அவையாவன பின்வருமாறு:

- மாற்றல்கள்: 2 கிழமைகள்
- பதவி விலகல்கள்: 1 மாதம்
- இளைப்பாறுதல்கள்: 3 மாதங்கள்
- பதவி நீக்கங்கள்: 1 - 3 மாதங்கள்

அறிவித்தல் காலமும் ஆலோசனை மற்றும் பேரம்பேசலுக்கான ஏற்பாடுகள் வங்கியுடனான கூட்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்படுகின்றன.

சுகாதாரமும் பாதுகாப்பும்

GRI 403-2, 403-3, 403-4, 403-5, 403-6, 403-7 403-9, 403-10

கொவிட் தொற்றானது 2023 இல் குறைவடைந்தாலும், வங்கியானது தொடர்ந்தும் சுத்தப்படுத்திகள் மற்றும் முகக் கவசங்கள் போன்ற அவசியமானவற்றை அனைத்து கிளைகளுக்கும் வழங்கி ஊழியர்களை பாதுகாப்பதற்காக மருத்துவ அவசர ஊர்திச் சேவையினையும் செயற்படுத்தியது.
ஏனைய பாதுகாப்பு நடவடிக்கைகள், "தீ மற்றும் பேரிடர் மீட்டல்" பிரிவு என ஒரு தனியான பிரிவினை உள்ளடக்குவதுடன், இது DGM (வணிகத் துணைச் சேவைகள்) கீழ் வருகின்றது. கிளை வலையமைப்பு மற்றும் தலைமைக் காரியாலய பிரிவுகளை உள்ளடக்கும் பிரதிநிதிகள் ஒத்துழைத்தல் புள்ளிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். பயிற்றுவித்தல் அமர்வுகளும் இடம்பெற்றன.
ஆபத்துக்கள், இடர் மதிப்பீடு மற்றும் நிகழ்வு விசாரணை ஆகியவற்றுக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் உள்ளார். பேரிடர் சூழ்நிலைகளின்போது உடனடி செயற்பாட்டினை உறுதிசெய்வதற்காக முதலுதவி ஒத்திகைகள் நடாத்தப்பட்டன. மீளாய்வாண்டின்போது அலவலுக சூழல் ஆபத்தின்போது எவ்வாறு அவற்றை தவிர்த்தல் மற்றம் கையாளுதல் என்பவற்றில் விசேட பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

வங்கியானது பின்வரும் தொழில்சார் மற்றும் சுகாதாரச் சேவைகளை வழங்குகின்றது:

- கொழும்பின் தீயணைப்பு திணைக்களத்துடன் சேர்ந்து வருடாந்த தீ பயிற்சி நடாத்தப்படல்
- ஊழியர்களுக்கு மருத்துவ அவசர ஊர்திச் சேவை
- தலைமைக் காரியாலயத்தில் நவலோக்க மருத்துவ மத்திய நிலையம்
- கோவிட்-19 முன்னெச்சரிக்கைகள் மற்றும் வலுவூட்டி தடுப்பூசி இயக்கம்
- ஊழியர் நலனுக்காக சும்பா நிகழ்வுகள்
- இலவசமான உடற்பயிற்சிக் கூட மற்றும் விளையாட்டு வசதிகளுக்கான அணுகல்

ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களது மருத்துவ கோரல்கள் தொடர்பாக ஆட்பட்ட செலவினம் ரூபா 2,574.7 மில்லியன் ஆகும்.

14 தொழில் தொடர்பான காயங்கள் அறிக்கையிடப்பட்டதுடன், 2023 இல் தொழில் தொடர்பான சுகயீன நிகழ்வுகள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை. இவை பிரதானமாக ஆரோக்கியம் தொடர்பான காயங்களாகும், ஒரு மோட்டார் சைக்கிள் விபத்து மற்றும் ஒரு பூரான் கடி என்பனவாகும்.

மனித மூலதனம்

ஆபத்து இனங்காணல், இடர் மதிப்பீடு மற்றும் நிகழ்வு புலனாய்வு

பணியிடத்திலான அழுத்தத்தினை குறைப்பதனூடாக ஊழியர்களின் நல்வாழ்வும் ஆக்கத்திறனும் பராமரிக்கப்படுவதுடன், இதன் மூலம் அங்கீகரிக்கப்படாத விடுமுறைகள் மற்றும் சாத்தியமான வருமான இழப்பு குறைக்கப்படுகின்றது. நாம் ஒரு ஆரோக்கியமான பணிக் கலாச்சாரத்தினை வளர்ப்பதற்காக நடைமுறைகளை அமுலாக்கியுள்ளதுடன், இவை ஊழியர்கள் நிறைவான வாழ்க்கையினை கொண்டு செல்வதினையும் திருப்திகரமாக தொழில் புரிவதனையும் இயலுமையாக்குகின்றது. இம்முன்னெடுப்புகள் யோகா பயிற்சிகளை வழங்குதல் முழு வசதியுடைய பயிற்சிக்கூடத்திற்கான அணுகலையும் உள்ளடக்குகின்றது. மேலாக, தலைமைக் காரியாலயத்தில் உள்ள அதி நவீன நூலகம் ஊழியர்களின் தொடர்ச்சியான பயிலலுக்கு வசதியளிக்கின்றது. நாம் உயர் கல்விக்கு MBA நிறைவேற்றலுக்கான பரீட்சை கட்டணங்கள் மற்றும் தொழில்சார் சந்தாப்பணங்களுக்கு ஊக்கத்தொகையினை அளிக்கின்றோம். மேலும், வங்கியின் விளையாட்டுக் கழகம், கலைக் கழகம் மற்றும் ஒத்த ஒழுங்கமைப்புகளினால் ஒழுங்குசெய்யப்படும் ஊழியர் ஈடுபாட்டு நடவடிக்கைகள் பங்குபற்றலுக்கு மேலதிக வாய்ப்புக்களை வழங்குகின்றன.

கடந்த சில வருடங்களாக, எமது ஊழியர்கள் சவால்மிக்க சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்தார்கள் என்பதுடன், இவை பணியிடத்தில் அழுத்தத்திற்கு கணிசமானளவு பங்களிப்பு செய்துள்ளன. எமது ஊழியர்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமையளிக்கும் எமது தலையான பொறுப்பினை அடையாளங்கண்டு, நாம் அவர்களது உடல்ரீதியான மற்றும மனதளவிலான நல்வாழ்வினை உறுதிசெய்யாது எமது இலக்குகளை அடைவது என்பது எட்டமுடியாதொன்றாகும் என்பதனை புரிந்துகொண்டோம். எனவே, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அக்கறைகளுடன் இணைந்த பொருத்தமான பணியிட வழிகாட்டிகளை நிறுவி உறுதிசெய்தல் எமக்கு தவிர்க்கவியலாததாகும்.

இந்த சிக்கல்களை விரிவாக விளித்துரைப்பதற்கு, நாம் 2023 முழுவதும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்காக பல செயலூக்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

தலைமைக்க காரியாலயத்தில் மற்றும் பிராந்திய மட்டங்களில் பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டதுடன், இவை இந்த பிரதிநிதிகளையும் ஊழியர்களையும் உள்ளடக்கியிருந்தன. எமது தொடர்ச்சியான பாதுகாப்பு நெறிமுறைகளின் ஒரு பகுதியாக, பொறுப்பான அதிகாரிகளுக்கு ஆபத்துக்களை இனங்காணுதல், இடர் மதிப்பீடுகளை நடாத்துதல், மற்றும் நிகழ்வுகளை புலனாய்வு செய்தல் போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டன. மேலாக, அவசர சூழ்நிலைகளில் உடனடியாக பதிலளிப்பதனை உறுதிசெய்வதற்காக முதலுதவி ஒத்திகைகளை நாம் ஒழுங்குசெய்துள்ளோம்.

இந்து முன்னெடுப்புகளுக்கு முன்னுரிமையளித்தல், மற்றும் ஒரு பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுகள் கலாச்சாரத்தினை வளர்த்தல் மூலம் நாம் எமது ஊழியர்கள் துணையளிக்கப்படுதல், பாதுகாப்பு மற்றும் அவர்களது சிறந்த செயற்திறனுக்கு வலுவளிக்கபடுவதனை உணரும் ஒரு உகந்த பணியிடச் சூழலினை உருவாக்க முனைகின்றோம்.

மறுபுறத்தில், ஊழியர்களது மன ஆரோக்கியம் குறித்து கலந்துரையாடல் வரும்போது, தொழில்-வாழ்க்கை சமநிலையின்மையின் அதிர்வலைகள் ஒரு எதிர்மறையான நிறுவனக் கலாச்சாரம், ஒத்துழைப்பு புத்தாக்கம் மற்றும் ஊழியர் ஈடுபாட்டினை தடுத்தல் போன்றவற்றை வெளிப்படுத்தலாம். மேலும் தனிப்பட்ட ஊழியர்களிலான திரண்டிய விளைவானது அணி மனோநிலை மற்றும் ஒற்றுமையில் வீழ்ச்சிக்கு இட்டுச்செல்லும் என்பதுடன், தொழிற்சேனையின் ஒட்டுமொத்த பயனுறுதி மற்றும் வினைத்திறனையினை பாதிக்கும்.

வங்கியின் முகாமைத்துவமானது இந்த சூழ்நிலைகளின் பாதகமான விளைவுகளை புரிந்துகொண்டு, மற்றும் தொழில் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் அத்தகைய கஷ்டமான நிலைமையினூடாக கடந்துசெல்லும் ஊழியர்களுக்கு அவர்களது அவலநிலை, சொல்லவியலாத கதைகள் மற்றும் உள்ளே அடக்கிவைத்தவற்றை அவர்கள் அவர்களது முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள், நண்பர்களின் குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோருக்கு வெளிப்படுத்த இயலாதவற்றை செவிமடுப்பதற்கு அவர்களுக்கு ஒரு துணையின் அவசியம் தேவைப்படுகின்றது.

மேற்குறிப்பிட்டவற்றில், வங்கியானது "சுய நல்வாழ்வு மத்தியநிலையம்" எனப் பெயரிடப்பட்ட ஒரு விசேட பிரிவினை மனித வளப் பிரிவின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ளதுடன் இது தற்போது வெளிவாரி நிபுணர்கள், இத்துறையில் முதறிவர்கள் ஆகியோரது ஒத்துழைப்புடன் செயற்படுவதுடன், இது ஊழியர்களின் மனநிலை நல்வாழ்வினை மேம்படுத்துவதற்காக மாத்திரம் செயலாற்றுகின்றது.

அத்தகைய மனநிலை ஊக்கப்படுத்தல் அமர்வுகளை வேண்டும் ஊழியர்கள் தொடர்பாக 100% இரகசியத்தன்மையினை பிரிவானது உறுதிசெய்கின்றது. அதேவேளை, அனைத்து அமர்வுகளும் தனித்தனியானவை மற்றும் இலவசமானவை என்பதுடன், இது வங்கியில் அவர்களது தரம் அல்லது பதவியினை பொருட்படுத்தாது எந்தவொரு ஊழியருக்கும் கிடைக்கின்றது. தனிநபர்களுக்கான நேர ஒதுக்கீடானது மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு என்பது ஒரு மேலதிக படியாக ஊழியர்களின் பின்னூட்டத்தின் அடிப்படையிலாகும். மனித வளப் பிரிவானது ஆலோசகருடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களைக் கொண்டிருப்பதுடன், பணிக்கொள்பவரின் பார்வையில் ஊழியர்களுக்கு சாதமாக பணியிடச் சூழலினை உருவாக்குவதற்கு அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றார்கள்.



தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பில் தொழிலாளர் பயிற்சி GRI 405-3

திட்டம்	திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுனர்கள் எண்ணிக்கை
BCP/DRP/தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு	2	120
BCP/DRP/ தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு	13	1212
வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவ அமைப்புமுறை	1	1
மக்கள் வங்கியின் வணிகத் தொடர்ச்சித் திட்டம்	1	52
பணியிட தீ மற்றும் பாதுகாப்பு கருத்தரங்கு	1	3
மொத்தம்	**18**	**1388**

பயிற்சியும் அபிவிருத்தியும்

வங்கியிடம் ஒரு ஊழியர் பயிற்றுவித்தல் கல்லூரி உள்ளதுடன், இது வருடத்திற்கான பயிற்றுவித்தல் நிகழ்ச்சிநிரலுக்கு துணையளிக்கின்றது. ஊழியர் பயிற்சியின் பிரதான முன்னிறுத்தம் 2022 -2024 வருடங்களுக்கான புதிய மூலோபாய முன்னெடுப்புகளுக்கு இணையாக வங்கியின் இலக்குகளை அடைவதாகும். இவை தனிச்சிறப்பினை இயக்குதல், வாடிக்கையாளர் மையப்படுத்தலை கட்டியெழுப்புதல் மற்றும் எதிர்காலத்திற்கு தயாராயிருந்தல் எனும் மூலோபாயத் தூண்களாகும்.

வங்கியானது இ-பயிலல் முறைகள் அறிமுகப்படுத்துவதுடன், பயிற்சியின் விளைவுகள் வேதனம், பதவியுயர்வுகள் மற்றும் ஏனைய நலன்களுடன் இணைக்கப்பட்டிருக்கும், இவை பயிற்சியின் பயனுறுதித்தன்மையினை நிச்சயமாக மேம்படுத்தும்.

மென் மற்றும் கருத்தியல் திறன்களை உள்ளடக்கிய பின்வரும் பிரிவுகளில் எதிர்கால பயிற்சித் திட்டங்களை கவனஞ் செலுத்தும்:

- மனப்பான்மை அபிவிருத்தி மற்றும் வாடிக்கையாளர் சேவை தனிச்சிறப்பிற்கு ஊக்கமளித்தல்
- வாடிக்கையாளர் மையப்படுத்திய மனப்பான்மை, முறையீடு முகாமைத்துவம் மற்றும் பேரம்பேசல் திறன் அபிவிருத்தி
- ஆளுமை அபிவிருத்தி, தனிப்பட்ட சீராக்கல் மற்றும சமூக மற்றும் கூட்டாண்மை பண்பாடு
- அழுத்த முகாமைத்துவம் மற்றும் ஆலோசனையளித்தல் திறன்கள்
- மூலோபாயத் திட்டமிடல்
- தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்கள் (பிரதானமாக கருவிகளிலான அறிவினை மேம்படுத்துதல், இவை டிஜிட்டல், கடன், அடகுபிடித்தல், திறைசேரி மற்றும் அந்நியசெலாவணிக் கருவிகள் மற்றும் கணக்காய்வு, இணக்கப்பாடு, இடர் முகாமைத்துவம் மற்றும அதிகாரிகள் தரத்திலுள்ள ஊழியர்களுக்கு தொடர்ச்சியான மேம்பாட்டிலான முகாமைத்துவம் ஆகியவற்றிலான முன்னிறுத்தம்).
- புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட முகாமைத்துவ பயிலுனர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்
- நிறைவேற்றுனர் அபிவிருத்தி திட்டங்கள் (மென் திறன்கள் அபிவிருத்தியில் சிரேஷ்ட முகாமைத்துவம் / உயர் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சித் தொடர்கள்)

வருடத்திற்கு ஒரு ஊழியருக்கான சராசரி பயிற்சி மணித்தியாலங்கள் GRI 404-1

	2023
பயிற்சிச் செலவு (ரூபா மில்லியன்)	96.6
பயிற்சி மணித்தியாலங்கள்	190,671
ஊழியர் ஒருவருக்கான சராசரி பயிற்சி மணித்தியாலங்கள்	25
டிஜிட்டல் பயிற்சியிலான மணித்தியலாங்களின் எண்ணிக்கை	29,468
இயங்கலை பயிற்சி அமர்வுகள்	25

திட்டம்	பங்குபற்றுநர்கள் எண்ணிக்கை	பயிற்சி மணித்தியாலங்கள்
ஊழல் எதிர்ப்பு கொள்கைகள் பற்றிய தொடர்பாடலும் பயிற்சியும் (கணக்காய்வு, இணக்கப்பாடு, இடர் மற்றும் தகவல் பாதுகாப்பிலான பயிற்சி)	4,140	22,735


ஊழியர் பிரிவுவாரியாக சராசரி பயிற்சி மணித்தியாலங்கள்

ஊழியர் பிரிவுவாரியாக சராசரி பயிற்சி மணித்தியாலங்கள் திட்டம்	சராசரி பயிற்சி மணித்தியாலங்கள்	
	ஆண்	பெண்
பெறுநிறுவன முகாமைத்துவம்	34	60
நிறைவேற்று முகாமைத்துவம்	67	104
அதிகாரிகள்(3-III - தரம் I)	35	31
SA	20	18
CSA	15	17
MT/IT பட்டதாரிகள்	111	188


பயிற்சி புள்ளிவிபரங்கள் - நிரந்தர மற்றும் ஒப்பந்த ஊழியர்கள்

பயிற்சியின் வகை	திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுர்களின் எண்ணிக்கை	பயிற்சி மணித்தியாலங்கள்
உள்ளக பயிற்சித் திட்டங்கள்	429	23,509	186,043
வெளிவாரி பயிற்சித் திட்டங்கள்	77	376	4,514
வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள்	5	5	114
மொத்தம்	**511**	**23,890**	**190,671**


பயிற்சி புள்ளிவிபரங்கள் - நிரந்தர மற்றும் ஒப்பந்த ஊழியர்கள்



பாலினம் வாரியான சராசரி பயிற்சி மணித்தியாலங்கள்



மொத்த பயிற்சிச் செலவு (ரூ. மில்.)



மனித மூலதனம்

ஊழியர் திறன்களை தரமுயர்த்தும் திட்டங்கள் மற்றும் உருமாற்றல் உறுதுணைத் திட்டங்கள் GRI 404-2

2023 இற்கான மூலோபாய முன்னெடுப்புகளுடன் இணையாக மற்றும் நாட்டில் எழுந்த பேரின மற்றும் நுண் சூழல் சவால்களை கருத்திற்கொண்டு, ஊழியர்களின் பயிற்சியும் அபிவிருத்தியும் வங்கியின் இலக்குகளை அடைவதிலும் ஊழியர்களின் மென் திறன்கள் மற்றம் தொழில்நுட்ப திறன்களை விருத்திசெய்வதில் உயர்ந்த முன்னிறுத்தம் காணப்பட்டது. பயிற்சி அவசிய மதிப்பாய்வின் பிரகாரம், பயிற்சித் தேவைப்பாடகள் இனங்காணப்பட்டு வருடாந்த பயிற்சித் திட்டமானது தொிவுசெய்யபப்டுகின்றது.

2023 இல் நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள்

- மென் மற்றும் கருத்தியல் திறன்கள் அபிவிருத்தித் திட்டங்கள் (பின்வரும் பிரிவுகளில் முன்னிறுத்தம்)
  - பகுப்பாய்வுத் திறன்கள்
  - சாத்தியமான மன்பான்மை அபிவிருத்தி
  - தொடர்பாடல் திறன்கள் /வணிக எழுதுதல் மற்றம மின்னஞ்சல் பண்பாடு/பேரம்பேசல் திறன்கள் அபிவிருத்தி/முன்னிலைப்படுத்தல் திறன்கள் அபிவிருத்தி
  - கருத்தியல் திறன்கள் அபிவிருத்தி
  - வாடிக்கையாளர் சேவைத் தனிச்சிறப்பு/ வாடிக்கையாளர் மையப்படுத்திய மனப்பான்மை, முறையீடு முகாமைத்துவம் மற்றும் பேரம்பேசுதல் திறன்கள் அபிவிருத்தி
  - மனவெழுச்சி நுண்ணறிவு
  - தலைமைத்துவ திறன்கள் அபிவிருத்தி/ மாற்ற முகாமைத்துவம்/பன்முகமான மக்களை முகாமைப்படுத்தல்/அணி உருவாக்கம் மற்றும் உயர் செயற்திறனுக்கு அணிக் கூட்டுவிளைவு/ நேர முகாமைத்துவம் மற்றும் தொழில் வாழ்க்கை சமநிலை (முகாமைப்படுத்தலூடான சாத்தியத்தினை கட்டவிழ்த்தல்)
  - ஆளுமை அபிவிருத்தி, தனிப்பட்ட சீர்படுத்தல் மற்றும் கூட்டாண்மை பண்பாடு
  - அழுத்த முகாமைத்துவம்/ஊக்கமளிப்பு, பயிற்றுவித்தல் மற்றும் ஒரு மேற்பார்வையாளராக ஆலோசனையிடல் மற்றும் வழிப்படுத்தல் திறன்கள்
- AGM மற்றும் CM களை முன்னிறுத்தி நிறைவேற்று அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன
- தூண்டல் திட்டங்கள் (முகாமைத்துவ பயிலுநர்களுக்கு வெளிவாரி பயிற்சி/புதிதாக சேர்க்கப்பட்ட த.தொ. பட்டதாரிகளுக்கான பயிற்சித் திட்டம்/ புதிதாக சேர்க்கப்பட்ட முகாமைத்துவ பயிலுநர்களுக்கான பயிற்சித் திட்டம்/ புதிதாக சேர்க்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை உதவியாளர்களுக்கான பயிற்சித் திட்டம்)
- தொழில்நுட்ப திறன்கள் அபிவிருத்தித் திட்டங்கள் (டிஜிட்டல், வெளிநாட்டு நாணயக் கருவிகள், திறைசேரிக் கருவிகள், மற்றும் கணக்காய்வு, இணக்கப்பாடு, இடர் முகாமைத்துவம், கடன், அடகு பிடித்தல் மற்றும் அதிகாரிகள் தர ஊழியர்களுக்கு தொடர்ச்சியான மேம்பாட்டு முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் கருவிகளிலான அறிவினை மேம்படுத்துவதில் முன்னிறுத்தம்)
- ஏற்றுமதி மையத்தின் அமுலாக்கலில் விசேட பயிற்சித் திட்டங்கள் (செயற்பாட்டு செயன்முறைகள் மற்றும சர்வதேச வர்த்தக நிதியளிப்பிற்கான வசதிகளில் கோட்பாடு சார் மற்றும் நடைமுறை அறிவு)
- பணி தொடர்பான வேலைகளை எளிமையாக்குவதற்கான ChatGpt பிரயோகம்/ MS-Office (2016) அடிப்படை/புதிய மின்னஞ்சல் தீர்வு (Office 365) விழிப்புணர்வு அமர்வு/Office 365 மின்னஞ்சல் & MS Teams/நாளாந்த கிளைச் செயற்பாடுகளுக்காக SIB முறை/ MS-Excel இல் மேம்பட்ட கணினி பயிற்சி

  வங்கியின் டிஜிட்டல் உருமாற்றத்திற்கிணங்க, ஊழியர் பயிற்சிச் கல்லூரியானது 25,000 பயிற்சி மணித்தியாலங்களுக்கு மேலாக வழங்கக் கூடியதாய் இருந்ததுடன், இது டிஜிட்டல் கருவிகள் மற்றும் சேவைகள் தொடர்பான பயிற்சிகளாகும். சராசரியாக, மொத்தமாக 25 பயிற்சி மணித்தியாலங்கள் ஒவ்வொரு ஊழியருக்கும் 2023 இல் நிறைவுசெய்யப்பட்டன.

செயற்திறன் மதிப்பீடு GRI 404-3

வங்கியானது ஒரு புதிய செயற்திறன் மதிப்பீட்டு முறைமையினை அனைத்து ஊழியர்களதும் செயற்திறனை மதிப்பிடுவதற்காக அமுலாக்கியுள்ளது. நடைமுறையிலுள்ள செயற்திறன் மதிப்பீட்டு முறைமையிலான ஒரு முற்றான பரிசீலனையினை தொடர்ந்து, வங்கியானது முகாமையாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட தரங்களுக்கு அளவுசார் அடிப்படையிலான சமநிலை மதிப்பெண் அட்டைக்கு தொிவுசெய்ததுடன், பிரதி முகாமையாளர்கள் மற்றும் அத்தரத்திற்கு கீழான பதவிகளுக்கு ஒரு திறமை / பண்புசார் அடிப்படையிலான 180 பாகை செயற்திறன் மதிப்பீட்டு முறையானது பயன்படுத்தப்பட்டது.

அனைத்து முகாமையாளர்கள் மற்றும் அதற்கு மேலான தரத்திலுள்ள ஊழியர்களை தயாராக்குவதற்கு நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் பின்னர், 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டிற்கு அவசியமான திறன்கள், செயற்திறன் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்ப கட்டத்தில் ஊக்கத்தொகைகளை தீர்மானிப்பதில் விளைவுகள் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதுடன், அதன் பின்னர் புதிய செயற்திறன் முகாமைப்படுத்தல் அமைப்பு முறையின் விளைவுகள் எதிர்கால பதவியுயர்வுகள், வேதனம் மற்றும் பயிற்சித் தேவைகளை இனங்காணுதல் என்பவற்றைக் கருத்திலெடுக்கும்.

இவ்வாண்டின்போது, தகுதியுடைய எமது அனைத்து நிரந்தர ஊழியர்களும், ஒப்பந்த ஊழியர்கள் நீங்கலாக, செயற்திறன் மீளாய்வுகளில் ஈடுபட்டதுடன், இது 2023 இல் மொத்த ஊழியர்களின் 99.8% என்பதுடன் எஞ்சியோர் அவர்களது ஒப்பந்த புதுப்பித்தல் வருடத்தில் மதிப்பிடப்படுவார்கள்.

பதவியுயர்வுகளும் இடமாற்றல்களும்

செயன்முறையில் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்தும் ஒரு முறையான பதவியுயர்வு மற்றும் மாற்றல் கொள்கைகளை வங்கி கொண்டுள்ளது. ஒவ்வொரு தரத்தினருக்கும் பதவியுயர்வுத் திட்டங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், சிரேஷ்ட முகாமையாளர் மட்டம் (தரம் II) வரைக்கும் பதவியுயர்வுகள் ஒரு பரீட்சை மற்றும் நேர்காணல் செயன்முறையினூடாக நடாத்தப்படுகின்றன.

நிறைவேற்றுனர், கூட்டாண்மை முகாமைத்துவம், மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளுக்கான பதவியுயர்வுகளை பணிப்பாளர்கள் சபையானது ஒரு நேர்காணல் செயன்முறையினூடாகத் தீர்மானிக்கின்றது. அனேகமாக தரங்களுக்கு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ளோருக்கான பதவியுயர்வு வாய்ப்புக்கள் வெற்றிடங்கள் ஏற்படும்போது எழுகின்றன.

ஊழியர்களின் மாற்றல்கள் அவர்களது தற்போதைய பிராந்தியங்களினுள் மற்றும் பிராந்தியங்களுக்கு வெளியே ஏற்படலாம். ஒரு மாற்றல் பணிப்புறுத்தலுடன் அதிருப்தியடைந்து யாரேனும் ஊழியர், மாற்றல் கொள்கையின் கீழ் நிறுவப்பட்டுள்ள மேன்முறையீட்டு குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

பன்முகத்தன்மை GRI 405-1

வங்கியானது அதன் தொழிற்சேவையின் பன்முகத்தன்மையினை அதன் தகுதி அடிப்படையிலான ஆட்சேர்த்தல் மற்றும் செயற்திறன் முகாமைத்துவ முறைகளுடாக சிறுபான்மையினருக்கும் பெண்களுக்கும் சமத்துவமான வாய்ப்புக்களை வழங்குகின்றது.

வயது	ஆண்	பெண்
18-25	202	232
26-35	625	1,248
36-45	1,235	2,432
46-55	716	521
>56	216	229

ஊழியர்களின் பூகோளவாரியான பரவல்

பிராந்தியம்	ஆண்	பெண்
அம்பாறை	125	109
அநுராதபுரம்	130	177
பதுளை	132	160
மட்டக்களப்பு	78	104
கொழும்பு வடக்கு	69	172
கொழும்பு வெளிப்புறம்	122	368
கொழும்பு தெற்கு	88	215
காலி	92	195
கம்பஹா	139	375
அம்பாந்தோட்டை	97	132
யாழ்ப்பாணம்	85	131
களுத்தறை	83	186
கண்டி	135	270
கேகாலை	81	181
குருணாகலை	147	295
மாத்தளை	73	95
மாத்தறை	93	175
மொனராகலை	72	73
நுவரெலியா	97	104
பொலன்னறுவை	92	114
புத்தளம்	74	103
இரத்தினபுரி	122	136
வன்னி	91	79
திருகோணமலை	64	68
தலைமைக் காரியாலயம்	613	645
மொத்தம்	**2,994**	**46,62**

பாகுபாட்டு நிகழ்வுகள் மற்றும் எடுக்கப்பட்ட திருத்தல் நடவடிக்கைகள் GRI 406-1

ஊழியர்களை உடல்ரீதியான மற்றும் வார்த்தை பிரயோகத்திலான துன்புறுத்தல்களிலிருந்து மற்றும் இனம், மதம், பாலினம், வயது அல்லது சமூக அந்தஸ்து போன்ற காரணிகளின் அடிப்படையில் பாகுபாடுகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கும் ஒரு சூழலினை வளர்ப்பதில் எமது கடப்பாடு தங்கியுள்ளது. இந்தக் கொள்கையானது ஊழியர் வாழ்க்கைச் சுற்று, ஆட்சேர்ப்பு, வெகுமதி, அங்கீகாரம் மற்றும் பதவியுயர்வு செயன்முறை உள்ளடங்கலானவை பூராகவும் நியாயமான கவனிப்பினை உறுதிசெய்கின்றது. ஒரு பாகுபாடற்ற நிலைப்பாட்டினை பராமரிப்பதில் நாம் பெருமையடைவதுடன், இது பெண் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவத்திற்கான துறையில் நாம் முதன்மை நிலையில் காணப்படுவதனை எடுத்துக்காட்டுகின்றது.

2023 இல் நிறுவனமானது எவ்விதமான பாகுபாட்டு நிகழ்வுகளையும் அறிக்கையிடவில்லை என்பதுடன் இது ஒரு பாகுபாடில்லான சூழலைப் பராமரிப்பதில் ஒரு மெச்சத்தக்க சாதனையாகும் மற்றும் எழக்கூடிய ஏதேனும் சிக்கல்களை உடனடியாக விளித்துரைத்தல் என்பதனை குறிப்பிடுகின்றது.

அடிப்படை சம்பளம் மற்றும் வேதனத்தின் ஆண்களுக்கு பெண்களின் அடிப்படை விகிதாசாரம் GRI 405-2

வேலைவாய்ப்பு பிரிவுகள் மற்றும் முக்கியமான செயற்பாட்டு இடங்களில் நாம் பெண்களுக்கான அடிப்படை சம்பளம் மற்றும் வேதனத்தினை ஆண்களோடு ஒப்பிடும்போது 1:1 என்ற விகிதாசாரத்தில் தொடர்ச்சியாக நிலைநாட்டியுள்ளோம். எமது கொள்கையானது பெண்கள் மற்றும் ஆண்களுக்கு முழுமையான பாகுபாடற்ற சமத்துவமான கவனிப்பினை வழங்குகின்றது. எவ்வாறாயினும், வேதன விகிதாசாரங்களிலான வேறுபாடுகள் ஊழியர்களது சேவைக் காலங்கள் மற்றும் சம்பள தரங்களிலான வித்தியாசங்களின் காரணமாக எழலாம்.

பாகுபாடின்மை

வங்கியானது எந்தவொரு மக்கள் தொகையிலும் பாகுபாடற்ற ஒரு சமத்துவமான வாய்ப்பினை வழங்கும் பணிப்கொள்பவராகும் என்பதுடன் ஊழியர்களை உடல் ரீதியான மற்றும் வார்த்தை பிரயோகத்திலான தொல்லைகள் மற்றும் இனம், மதம், பாலினம், வயது அல்லது சமூக அந்தஸ்தின் அடிப்படையில் பாகுபாடற்றவிதத்தில ஊழியர்களை பாதுகாக்கும் ஒரு சூழலினை வளர்ப்பதற்கு கடப்பாடுடையதாயுள்ளது.

மேற்குறிப்பிட்ட கொள்கையானது நியாயமான ஊழியர் ஆட்சேர்ப்பு, வெகுமதி மற்றும் அங்கீகாரத்தினை உறுதிசெய்கின்றது. பதவியுயர்வுகள் வரும்போது அனைத்து ஊழியர்களுக்கும் நியாயமான மற்றும் சமத்துவமான கவனிப்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

துறையில் அதிக எண்ணிக்கையிலான பெண் ஊழியர்களை மக்கள் வங்கி கொண்டுள்ளதுடன் இது வங்கியின் பாகுபாடற்ற கொள்கையினை எடுத்துக்காட்டுகின்றது.

60.9% பெண் ஊழியர்களுடன் நாடு பூராகவுமான நிறுவனமாக வங்கியானது அதன் பெண் ஊழியர்களின் தொழில்-வாழ்க்கை சமநிலையிலான சவால்களுக்கு வசதியளிக்கின்றது. தொற்று பூராவும் கர்ப்பிணி ஊழியர்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் வீட்டிலிருந்து தொழில்புரிவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

2024 இல் வங்கியானது 2023 இற்கான அதன் வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டினை பொறுப்பேற்கின்றது, இது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட செயற்திறன் முகாமைத்துவ முறையினை பயன்படுத்தி ஆகும். இந்த முறையானது தனிப்பட்ட ஊழியர் செயற்திறனை மதிப்பிடவும், ஏதேனும் செயற்திறன் இடைவெளிகளை இனங்காணவும் மற்றும் பயிற்சித் தேவைகளை சுட்டிக்காட்டும் நோக்கத்தினைக் கொண்டதாகும்.

ஒரேநேரத்தில், புதிய மனித வள தகவல் அமைப்புமுறையிலன் அமுலாக்கத்தினை முடிவுறுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னெடுப்பு உள்ளடங்கியுள்ளதுடன், இது விடுமுறை மற்றும் வருகை, சம்பளப்பொதி, பதவியுயர்வுகள், ஆட்சேர்ப்பு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் செயற்திறன் மதிப்பு போன்ற பல்வேறு செயன்முறைகள் தன்னியக்கமாக்கப்படும். இது வங்கியின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க உருமாற்றலை குறிப்பிடுகின்றது.

மேலும், 2023 இல் நடாத்தப்பட்ட நிறுவன கலாச்சார மதிப்பாய்விலிருந்தான முதன்மை கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நிறுவனம் பூராகவும் ஒரு விரிவான கலாச்சார நகர்வினை முடுக்கிவிடுவதற்கு மனித வளப்பிரிவானது கடப்பாட்டுடன் உள்ளது. இந்தக் கலாச்சார நகர்வானது ஆய்வில் இனங்காணப்பட்ட மூன்று முக்கிய பிரிவுகளுக்கு இணையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலாக, முதன்மையான குறிக்கோளானது அனைத்து முகாமைத்துவ மற்றும் உயர் தரத்திலான ஊழியர்களுக்கு தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சியினை விநியோகிப்பதாகும். இந்த முன்னெடுப்பானது இந்த தனிநபர்களை வெளித்தோன்றும் சந்ததியான வாடிக்கையாளர்கள் மற்றும் புதிதாக சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுடன் வினைத்திறனாக ஈடுபடுவதற்கு தயார்படுத்துவதாகும். இளம் இயக்காற்றல் மற்றும் பரீட்சையமான அனுபவம் ஆகியவற்றின் மூலோபாயமான கூட்டிணைப்பு வங்கியின் மனித மூலதனத்தினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - வாடிக்கையாளர் மூலதனம்

எமது திடமான வாடிக்கையாளர் மூலதனமானது பாரம்பரியமாக நாடு பூராகவுமுள்ள எமது விரிவான கிளை வலையமைப்பிலிருந்து பெறப்படுகின்றது. எவ்வாறயினும், உருவாகின்ற பொருளாதார நிலைமைகள் மற்றும் மாறுபாடான மக்கள்தொகை தோற்றுருவங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுடன் பன்முகமான வாடிக்கையாளர் பிரிவுகளின் வெளித்தோன்றல்கள் புதிய மூலோபாய அணுகுமுறைகளின் கடைப்பிடிப்பின் அவசியத்தினை ஏற்படுத்தியுள்ளது.

எமது அணுகுமுறை

எமது வாடிக்கையாளர் தளமானது சனத்தொகையின் அண்ணளவாக மூன்றில் இரண்டை உள்ளடக்குவதுடன், இது இலாபகரத்தன்மையிலும் பார்க்க அணுகுவதிலான எமது அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கின்றது. இவ்வாண்டின்போது பணவீக்கம் மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடிகள் போன்ற முக்கியமான சவால்கள் இருந்தாலும், மக்கள் வங்கி எமக்கு தொடர்ச்சியாக விசுவாசத்தினைக் காட்டும் அதன் பாரம்பரிய வாடிக்கையாளர் தளத்திற்கு அர்ப்பணிப்புடன் இருக்கும். எவ்வாறாயினும், பன்முகமான வருமான மட்டங்கள், தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் அபிலாஷைகளுடனான புதிய வாடிக்கையாளர் குழுக்களுக்கான எமது அணுகலை தீவிரமாக விரிவாக்குதல் தவிர்க்கமுடியாதது என தெரிந்துள்ளது. மேலும், மிலெனியல் வாடிக்கையாளர்களின் வளர்ச்சியடையும் செல்வாக்கை நாம் ஏற்றுக்கொள்வதுடன், இவர்கள் எமது வாடிக்கையாளர் தளத்தின் ஒரு கணிசமான பகுதியினை உள்ளடக்குவதுடன், இது டிஜிட்டல் மயமாக்கல் நோக்கிய ஒரு திடமான சாய்வினை வெளிப்படுத்துகின்றது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, இதன் பிரகாரம் நாம் அவர்களது தெரிவுகளுக்கு வசதியளிப்பதற்காக எமது கருவிகள் மற்றும் தொடர்பாடல்களை கடைப்பிடித்தோம்.



முக்கிய சிறப்பம்சங்கள்

15 மில்.
மேலான வாடிக்கையாளர்கள்

87.2%
ஆன வாடிக்கையாளர் முறையீடுகள் தீர்க்கப்பட்டன

811,687
புதிய வாடிக்கையாளர்கள் 2023 இல் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்

51.2%
ஆன வாடிக்கையாளர்கள் பெண்களாவார்கள்



பொருண்மையான கருப்பொருள்

- நிதியியல் செயற்திறன்
- வாடிக்கையாளர் அனுபவம்
- செயற்பாட்டு செயற்திறன்
- திறன் முகாமைத்துவம்
- சமூக - பொருளாதார தாக்கங்கள்
- வணிகநாம உரித்துவம்
- வாடிக்கையாளர் அணுகல்
- ஆரோக்கியமும் பாதுகாப்பும்



சவால்கள்

- அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை
- பாரம்பரிய சந்தைப்படுத்தல் தொடர்பாடலுக்கான ஏற்புத்திறன் இல்லாமை
- உயர் வட்டி வீதங்களினால் தாக்கமடைந்த கடன் வழங்கல்
- சந்தைப்படுத்தல் செலவில் முறைமைப்படுத்துபவர்களது கட்டுப்பாடுகள்

வாய்ப்புக்கள்

- டிஜிட்டல்மயமாக்கலின் நலன்களை உணரல்
- வெளிநாட்டு பணமனுப்பல்களில் மேலும் அதிகரித்த பங்கு

பெறுமதி உருவாக்கம்



சனெல்கள் இலாபகரத்தன்மை
ரூ.10.1 பில்.

ஐ.நா. நி.அ.இ. களுக்கான பங்களிப்பு

1 NO POVERTY

வறுமையின்மை

நிதியியல் உள்ளடக்கத்தில் வங்கியின் கொள்கையானது வணிகங்கள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான நிதிக்கு வசதியளிப்பதனூடாக அதன் அனைத்து வாடிக்கையாளர்களும் வறுமையினை வெற்றிகொள்வதற்கு வலுவளிக்கின்றது.

10 REDUCED INEQUALITIES

சமத்துவமின்மைகளை குறைத்தல்

வங்கியானது ஏதேனும் மக்கள் தொகையின் அடிப்படையில் எந்தவொர நபருக்கெதிராகவும் பாகுபாடு காண்பிப்பதில்லை, மற்றும் அனைவருக்கும் நிதியியல் சேவைகளுக்கான அணுக்கத்தினூடாக சமூக சமத்துவமின்மையினை குறைப்பதற்கு துணையளிக்கின்றது.

மூலதன இணைப்புகள்

நிதியியல் மூலதனம்

பணமனுப்பல்களில் அதிகரித்த சந்தைப் பங்களிப்பு, டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் புதிய வாடிக்கையாளர் பிரிவுகளது திறத்தலானது அதிகரித்த நிதியியல் மூலதனத்திற்கு இட்டுச்சென்றது.

மனித மூலதனம்

வாடிக்கையாளர் திருப்தியுடன் வேதனத்தினை இணைத்தல் பரஸ்பரமான நலன்களை வழங்குகின்றது.

அறிவுசார் மூலதனம்

வாடிக்கையாளர் தேவைகளை நிரப்பும் புத்தாக்கமான பிரயோகங்களின் ஆரம்பத்திற்கு தொழில்நுட்ப திறன்கள் துணைபுரிகின்றன.

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

டிஜிட்டல் மயமாக்கலிலான முதலீடுகள் மிலெனியல் சந்ததியின் எதிர்பார்ப்புக்களுடன் இணையான புதிய வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குகின்றது.

இயற்கை மூலதனம்

டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பசுமைக் கட்டிடங்களின் விளைவான குறைந்த தாள் பயன்பாடானது இயற்கை மூலதனத்தினை பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்யும்.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - வாடிக்கையாளர் மூலதனம்

வங்கியின் 15 மில்லியன் வாடிக்கையாளர் தளத்தில் 75% ஆனோர் மேல் மாகாணத்திற்கு வெளியே வசிப்பதுடன், நிதிச் சேவைகள் ஊடாக பெண்களுக்கு வலுவளிப்பதில் முன்னோடியான வங்கி என்பதுடன் அதன் வாடிக்கையாளர்களில் 51.2% ஆனோர் பெண்களாவார்கள்.

நாட்டிலுள்ள பாரிய வங்கிகளில் ஒன்றான மக்கள் வங்கி இலங்கையின் நிதியியல் சேவைகள் துறையில் பாரிய வாடிக்கையாளர் தளங்களுக்கு வசதியளிப்பதுடன், குழந்தைகள், தொழில்புரியும் வயதிலான வயதுவந்தோர் மற்றும் முதியர்வர்களைக் கொண்ட நாட்டின் சனத்தொகையில மூன்றில் இரண்டினை பிரதிநித்துவம் செய்யும் 15 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. இது இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர் சமூகத்தின் ஒரு பாரிய பங்கினை உள்ளடக்குவதுடன், பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்டகள் மற்றும் சேவைகளை வழங்கும் பல SOE க்கள் மற்றும் வளர்ச்சியடையும் ஒரு தனியார் துறை கம்பனிகளின் தளத்தையும் உள்ளடக்குகின்றது.

அதன் மையமான வங்கியியல் சேவைகளுக்கு மேலாக மக்கள் வங்கியானது குறை சேவையாற்றப்படும் சமூகங்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு அரசாங்கத்தினால் விநியோகிக்கப்படும் சமூக நலன்புரி நிதிகளுக்கான ஒரு முக்கியமான இணைப்பாகவும் உள்ளது. இதன் மூலம் CSR, வங்கியின் வணிக மாதிரியின் ஒரு ஒருங்கிணைந்த கூறாக உள்ளது. .

சமூக நலன்புரிச் சேவைகள்

- அ.உ.நி. களுக்கான அதன் நிதியியல் சேவைகளினூடாக மக்கள் வங்கியானது தேசிய வலுப் பாதுகாப்பினை உறுதிசெய்கின்றது. இது பெற்றோலியம் மற்றும் மின் உற்பத்திக்கான நிலக்கரி மற்றும் உற்பத்தி மற்றும் போக்குவரத்துக்கான பெற்றோலியக் கருவிகள் உடன் ஏனைய அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்கு வசதியளித்தல் மூலமாகும்.
- இளைப்பாறுதலடைந்த அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியங்களை விநியோகிப்பதில் மக்கள் வங்கி ஒரு முதன்மை வழிமுறையாகும் என்பதுடன் ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான ஓய்வூதியம் பெறுவோருக்கு வசதியளிக்கின்றது.
- மக்கள் வங்கியானது நுண் மற்றும் சி.ந.நி. க்காக மத்திய வங்கி மற்றும் கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றிலிருந்தான அபிவிருத்தி நிதியளிப்பினை வழிமுறைப்படுத்துகின்றது.
- 2023 இல், மக்கள் வங்கி அஸ்வெசும திட்டத்தினூடாக குறை சேவையாற்றப்பட்ட சமூகங்களுக்கு நலன்புரி நிதிகளை வழிநடத்தும் பிரதான வங்கியாக தெரிவுசெய்யப்பட்டது. வங்கியும் அதன் கிளைகள் வலையமைப்பும் அஸ்வெசும திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தனிநபர்களுக்கு வசதியளித்துள்ளது. இது தன் நாளாந்த வணிக நடவடிக்கைகளை நடாத்துவதற்கு மேலாகும்.
- வங்கியும் அதன் கிளைகளும் வருடம் பூராகவும் நாடு முழுவதும் பல்வேறு கூ.ச.பொ. நடவடிக்கைகளை நடாத்தின. .

புதிய வாடிக்கையாளர்கள்

மக்கள் வங்கியும் புதிய வாடிக்கையாளர் பிரிவுகளை விரைவாக பெறுவதுடன், குறிப்பாக உயர் வருமான பிரிவுகள் மற்றும் இளைஞர் சனத்தொகையில், இது புதிய சனத்தொகையான தொழில்நுட்ப அறிவுத்திறன், உயர்வான மொபைல் வாடிக்கையாளர்கள் ஊடாக வங்கியின் நிலைபேறுடமை மற்றும் பொருந்துமையினை உறுதிப்படுத்துகின்றது.

புதிய, டிஜிட்டல் கருவிகள் மற்றம் சேவைகள் மிலெனியல்கள் மற்றும் Z தலைமுறைகளை வங்கிக்கு கவர்கின்றன. இது புதிய கருவிகள் மற்றும் மூலோபாயங்களின் உருவாக்கலினை கருத்திலெடுக்கும் ஒரு பாரிய காரணியாகும்.


எலிகன்ஸ் மற்றும் எக்செல்சியர் பொதிகளின் கீழ் முதன்மை வழங்கல்களூடாக வங்கியானது உயர் பெறுமதியுள்ள வாடிக்கையாளர்களைக் கவர்கின்றது. எலிகன்ஸ் உயர் பெறுமதியான தனிநபர்களை இலக்கு வைப்பதுடன், எக்செல்சியர் உயர் வருமானமுடைய் உயர்வான மொபைல் தொழில்வல்லுநர்களைக் கவர்கின்றது. இந்த பொதிகள் உயர் பெறுமதியான தனிநபர்களின் வாழ்க்கைமுறை மற்றும் அந்தஸ்திற்கு வசதியளிக்கின்றது, இது முதன்மையான கவனிப்பு மற்றும் தனிப்பட்ட சேவைகளை வழங்குகின்றது.

வாடிக்கையாளர் சுயவிபரம்


வங்கியின் 15 மில்லியன் வாடிக்கையாளர் தளத்தில் 75% ஆனோர் மேல் மாகாணத்திற்கு வெளியே வசிப்பதுடன், நிதிச் சேவைகளூடாக பெண்களுக்கு வலுவளிப்பதில் முன்னோடியான வங்கி அதன் வாடிக்கையாளர்களில் 51.2% ஆனோர் பெண்களாவார்கள்.

பழமையான வங்கிகளில் ஒன்றாக இருந்தாலும், மக்கள் வங்கியானது ஒரு வளர்ச்சியடையும் இளம் வாடிக்கையாளர் தளத்தினை பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் 28.2% ஆன வாடிக்கையாளர்கள் மிலெனியல் சந்ததியிலிருந்தாகும்.


கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி (ரூ. பில்.)



பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை




வாடிக்கையாளர் கைத்தொழில் சுயவிபரம் (%)




- விவசாயம், வனவியல் மற்றும் மீன்பிடித்தல்
- உற்பத்தி
- சுற்றுலாத்துறை
- போக்குவரத்து மற்றும் களஞ்சியம்
- கட்டுமானம்
- உட்கட்டமைப்பு அபிவிருத்தி
- மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைகள்
- நிதியியல் சேவைகள்
- தொழில்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள்
- கல்வி
- சுகாரத்துறை, சமூக சேவைகள் மற்றும் துணைச் சேவைகள்
- நுகர்வு
- நிதி அமைச்சு
- வெளிநாட்டு நிறுவனங்கள்

பூகோளவாரியான வாடிக்கையாளர் சுயவிபரம் (மூ)




- மத்திய
- கிழக்கு
- வடக்கு
- வட மத்திய
- வட மேல்
- தென்
- சபரகமுவ
- ஊவா
- மேல்

வயதுவாரியான வாடிக்கையாளர் சுயவிபரம் (%)



- வயது எல்லை 10–15 வருடங்கள்
- வயது எல்லை 16–25 வருடங்கள்
- வயது எல்லை 26–45 வருடங்கள்
- வயது எல்லை 46–60 வருடங்கள்
- வயது எல்லை 60 வருடங்களுக்கு மேல்

பாலினம் வாரியான வாடிக்கையாளர் சுயவிபரம் (%)



- ஆண்
- பெண்

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - வாடிக்கையாளர் மூலதனம்

மக்கள் வங்கியின் தனித்துவமான சேவை முன்மொழிவு



மக்கள் வங்கியின் தனித்துவமான சேவை முன்மொழிவு

அணுகலுக்கான எளிமை

353

கிளைகள்,

394

சேவை மத்திய நிலையங்கள்

அர்ப்பணிக்கப்பட்ட

24X7

அழைப்பு மத்திய நிலையம் கிடைக்கப் பெறுவதுடன் சேவைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் வழங்கப்படுகின்றன.

டிஜிட்டல் நிதியியல் தீர்வுகள்

(பாரிய டிஜிட்டல் வாடிக்கையாளர் தளம்

3.4 மில்.

டிஜிட்டல் வாடிக்கையாளர்கள்)

நிதியியல் உள்ளடக்கமும் பன்முகத்தன்மையும்

(கைக்குழந்தை முதல் ஓய்வூதியர் வரை, புலம்பெயர்ந்தோர் அல்லது வெளிநாட்டு தொழில்புரிவோர், ஆண் அல்லது பெண், நு.நி.ந.நி. இலிருந்து பாரிய நிறுவனம், இறக்குமதியாளர் மற்றும் ஏற்றுமதியாளர்)

பொது மனசாட்சி (இலாபத்தினால் மாத்திரம் இயக்கப்படாதவை)

அடுத்த சந்ததி தயாரான - 15 மில்லியன் வாடிக்கையாளர்களில் 52% ஆனோர் 16 முதல் 45 வயது வரையானோர். ஊழியர்களின் சராசரி வயது 38 வருடங்கள்

மக்கள் வங்கியின் கிளைகள் இலாபமீட்டாத தொலை தூரங்களிலும் அமைவுற்றுள்ளன. எவ்வாறாயினும், வங்கி சமூக பொறுப்பின் ஒரு வடிவில் இந்த கிளைகளை தொடர்ந்தும் பராமரிக்கின்றது.

- இயங்கலை பெறுநிறுவன கடன் திட்டம் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டது.
- பீபள்ஸ் வேவ் மற்றும் பீபள்ஸ் பே செயலிகள் மாதாந்த சராசரியாக 62,700 பதிவீடுகளையும் 597 பில்லியன் கொடுக்கல வாங்கல்களையும் கொண்டுள்ளது.
- முகப்புத்தக பக்கம் ஏறத்தாழ 798,000 ரசிகர்களை கொண்டுள்ளது.
- வங்கியின் இணையத்தளமானது மாதாந்தம் சராசரியாக 473,000 பார்வைகளைக் கொண்டுள்ளது.

சேவைத் தரங்களை மேம்படுத்துதல்

- வாடிக்கையாளர் ஊடாட்டத்தினை மிருதுவாக்குவதற்கு கிளை தளவமைப்புகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.
- நாடு பூராவும் 3 மொழிகளையும் பயன்படுத்தி சுய வங்கியியல் அலகுகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஒரு அர்ப்பணிப்பான 24X7 அழைப்பு மத்திய நிலையமானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கிடைக்கின்றது.

வாடிக்கையாளர் மதிப்பாய்வுகள்

சேவைத் தரங்களை அளவிடுவதற்காக வங்கியானது இவ்வருடத்தின்போது மூன்று வாடிக்கையாளர் முன்னிறுத்திய மதிப்பாய்வுகளை நடாத்தியது. அவை, இரகசிய வாடிக்கையாளர் மதிப்பாய்வு, உணர்வு மற்றும் உளப்பாங்கு மதிப்பாய்வு மற்றும் தேறிய ஊக்குவிப்பாளர் புள்ளி மதிப்பாய்வு என்பனவாகும்.

மக்கள் நோக்குநிலை முன்னெடுப்புகள்

வங்கியானது கிளை மட்டத்தில் பல சேவை தர மேம்பாட்டு திட்டங்களை நடாத்தியதுடன் இது கிளைகளுக்கும அடகு பிடித்தல் மத்திய நிலையங்களுக்கும் சேவை தர தரப்படுத்தல்கள் ஒதுக்கப்படுவதுடன், இவை கிளை முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய முகாமையாளர்களின் KPIs உடன் இணைத்துள்ளது.

செயன்முறை நோக்குநிலை முன்னெடுப்புகள்

விரிவாக்கம், இடம்மாறல், இணைப்புகள் மற்றும் / அல்லது ஊழியர்களை பலப்படுத்துவதற்கான உள்ளக வளங்கள் மற்றும் வெளிவாரி வளங்கள் சேர்க்கையினை மதிப்பிடுவதன் மூலம் செயன்முறை நோக்குநிலையானது மேற்கொள்ளப்படுகின்றது.

இயல்பியல் சான்று முன்னெடுப்புகள்

இயல்பியல் சான்று முன்னெடுப்புகள் 5S பிரயோகம் தொடர்பானது என்பதுடன், இது வணிக அலகுகளின் செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காகும்.

வாடிக்கையாளர் தொடர்பாடல்

வங்கியின் வாடிக்கையாளர் சாசனமானது இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டிகளுக்கு அமைய வரையப்பட்டுள்ளது.

வங்கியானது தற்போது டிஜிட்டல் வழிகளூடாக முழுவதும் ஒன்றிணைக்கப்பட்ட இருவழி தொடர்பாடலைக் கொண்டுள்ளது. இந்த வழிகள் வாடிக்கையாளர்களுக்கு, கேள்விகள் கேட்பதற்கு, முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு மற்றும் உடனடி பின்னூட்டத்தினை பெறுவதற்கு வசதியளிக்கின்றது. வங்கியானது வாடிக்கையாளர் உள்ளீடுகளுக்கு 24X7X365 அடிப்படையில் பதிலளிப்பதுடன், இது ஒரு இலங்கையின் வங்கிக்கு ஒரு தனித்துவமான சாதனையாகும். இணையத்தளமானது ஒழுங்கீனங்களைக் குறைத்து ஏனைய உயர் தோற்றத்திலான இணையத்தளங்களுக்கு ஒத்திருக்கின்ற அதேவேளை இணையத்தளமாக மீள்வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயலி மற்றும் ஏனைய டிஜிட்டல் மயமாக்கப்பட்ட செயலிகளும் ஒரு பெரும் வெற்றியாகும்.

வாடிக்கையாளர் முறையீடுகள்

வங்கி ஒரு மனக்குறை கையாளும் செயல்முறையினைக் கொண்டிருப்பதுடன், எமது செயன்முறையில் ஏதேனும் அதிருப்தி நிகழும்போது இவ்விடயத்தினை நிதியியல் குறை தீர்ப்பாளருக்கு எடுத்துச்செல்லும் தெரிவு காணப்படுகின்றது. முறையீடுகள் 24 மணித்தியால வாடிக்கையாளர் சேவை ஹாட்லைன் ஊடாக மற்றும் தனிப்பயனான வாடிக்கையாளர் சேவை கையாளுதல் அலகு ஊடாக பெறப்படுவதுடன் உடனடியாக செயலாற்றப்படுகின்றது. மாதாந்த கிளை முகாமையாளர்கள் கருத்தரங்குகளில் ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் முறையீடுகள் குறித்து அறிவிக்கப்படுகின்றார்கள். அத்துடன் அவை மீள்நிகழ்வதனை தடுப்பதற்கு திருத்த நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

ATM சேவைகளின் இடையூறுகள் தொடர்பான முறையீடுகள் மத்திய ATM கட்டுப்பாட்டு பிரிவினால் கையாளப்படுகின்றது. இங்கும், ஆகக்குறைந்த தாமதத்துடன் நிலைமையினை சரிசெய்வதற்கான செயன்முறைகள் காணப்படுகின்றன.

வாடிக்கையாளர் முறையீடுகளின் நிலைமை 2023

விபரம்	எண்ணிக்கை
பெறப்பட்ட வாடிக்கையாளர் முறையீடுகளின் எண்ணிக்கை	484
தீர்க்கப்பட்ட வாடிக்கையாளர் முறையீடுகளின் எண்ணிக்கை	422
நிலுவையிலுள்ள முறையீடுகள்	62
நிலுவையிலுள்ள புலனாய்வுகள்	2
நிலுவையிலுள்ள சட்ட வழக்குகள்	2
நடந்கொண்டிருப்பவை	58

வாடிக்கையாளர் ஆரோக்கியமும் பாதுகாப்பும்

GRI 416-1

அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் தொடுபுள்ளிகளும் வாடிக்கையாளர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், தீ வெளியேறல், தீ அணைப்பிகள் மற்றும் தீ சைரன்கள் போன்ற அவசர நிலைமைகளுக்காக முன்னெச்சரிக்கைகள் உள்ளன. ஆயுதம் தரித்த மற்றும் ஆயுதம் தரிக்காத பாதுகாப்பு ஆளணியினர்களும் உள்ளார்கள். கோவிட்-19 தொற்றானது குறைவடைந்த போதிலும் வங்கியானது தொடர்ச்சியாக ஆரோக்கியம் தொடர்பான இடர்களையிட்டு விழிப்பாக உள்ளது.' அரசாங்க வழிகாட்டிகளின் பிரகாரம் வாடிக்கையாளர் தொடுபுள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் தொடர்ச்சியாக உள்ளன.

உற்பத்தி கருவி மற்றும் சேவை குறியிடல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள்

GRI 417-1, 417- 2

அனைத்து சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களும் வங்கியின் வாடிக்கையாளர் சாசனம் மற்றும் மத்திய வங்கியின் வழிகாட்டிகளின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளன. இவை வங்கியின் கருவிகள் மற்றும் சேவைகள் தொடர்பாக பொது மக்களுக்கு துல்லியமான தகவல்கள் பரப்பப்படுவதனை உறுதிசெய்வதற்காக மற்றும் இவை மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) உரிய தகவல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கையேடுகள் அச்சிடப்பட்டன. இவை அனைத்தும் எமது கிளைகளில் கிடைக்கப்பெறுகின்றன. மேலாக, வாடிக்கையாளர்கள் அவசியமான தகவல்களை எமது தனிப்பயனான 24 மணித்தியாலய அழைப்பு மத்திய நிலையத்துடன் மற்றும் இணையத்தளத்துடன் இணைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். கருவிகள் மற்றும் சேவைகளது தகவல் மற்றும் குறியிடல் தொடர்பாக எந்தவிதமான இணக்கப்பாடற்ற நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

வாடிக்கையாளர் இரகசியம் மற்றும் வாடிக்கையாளர் தரவுகளின் இழப்பில் ஆதாரப்படுத்தப்பட்ட முறையீடுகள்

GRI 418-1

வாடிக்கையாளர் இரகசியத்தன்மையானது வழமையான IT நலிவுறுநிலை மதிப்பீடுகள், வலையமைப்பு மதிப்பீடுகள், மூன்றாம் தரப்பினரால் த.தொ. கணக்காய்வுகள், மற்றும் த.தொ. பாதுகாப்பில் தொடர்ச்சியான பயிற்சி என்பவற்றூடாக பாதகாக்கப்படுகின்றது.

மக்கள் வங்கியானது 2023 இல் வெளிவாரி தரப்பினரிடமிருந்தோ அல்லது முறைமைப்படுத்தல் அங்கங்களில் இருந்தோ வாடிக்கையாளர் இரகசியத்தன்மையில் மீறல்கள் மற்றும் / அல்லது வாடிக்கையாளர் தரவுகள் இழப்பில் எவ்விதமான ஆதாரப்படுத்தப்பட்ட முறையீடுகளையும் பெறவில்லை. வங்கியானது வாடிக்கையாளர் இரகசியத்தன்மையினை பாதுகாப்பதுடன், அதன் சந்தை மதிப்பாய்வுகளில் இரகசியத்தன்மையினை அதன் சந்தை ஆய்வு முகவர்களிடமிருந்து வாடிக்கையாளர் இரகசியத்தன்மை கட்டாயமாகப் பேணப்படல் வேண்டும் என்று ஒரு தனியான வெளிப்படுத்தல் ஆகாத உடன்படிக்கையினை சந்தை ஆய்வு முகவர்கள் மற்றும் அத்தகைய வெளிவாரி சேவை வழங்குநர்களுடன் கைச்சாத்திடுகின்றது.

தடைசெய்யப்பட்ட அல்லது சர்ச்சைக்குரிய கருவிகளின் விற்பனை

இ.ம.வ. இன் வாடிக்கையாளர் சாசனம், மற்றும் வங்கியின் சொந்த நெறிமுறைக் கோவைகளுக்கு இணக்கப்பாட்டுடன், வங்கி சந்தையில் தடைசெய்யப்பட்டுள்ள அல்லது பங்காளி அல்லது பொது விவாதத்திற்குட்பட்ட கருவிகளை விற்பனை செய்வதோ அல்லது சந்தைப்படுத்துவதோ இல்லை. சட்டவிரோதமான எந்தவொரு திட்டத்திற்கும் வங்கி நிதியளிப்பதில்லை. இவ்வாண்டின்போது தடைசெய்யப்பட்ட அல்லது சர்ச்சைக்குரிய கருவிகளின் விற்பனை தொடர்பாக எவ்விதமான இணக்கப்பாடற்ற நிலையும் காணப்படவில்லை.



சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - வணிகப் பங்காளி மூலதனம்

எமது வணிகப் பங்காளிகள் வளங்கள், கருவிகள் மற்றும் எமது செயற்பாடுகளை நிலைபேறுடையதாக்குவதற்கு வெளிவாரியாக பெறப்பட்ட சேவைகள் ஆகியவற்றை வழங்கம் அத்தியாவசிய வழங்குநர்களாகும். இந்தப் பங்குடைமைகள் எமது பெறுமதி உருவாக்கல் செயன்முறையின் ஒரு முக்கிய கூறாக அமைவதுடன், இந்த வெளிவாரி நிறுவனங்களுடனான எமது உறவுமுறையின் முக்கியத்துவத்தினை கோடிட்டுக்காட்டுவதுடன், எமது வணிகத்தின் தடையற்ற செயற்பாட்டினை உறுதிசெய்கின்றது.

எமது அணுகுமுறை

வங்கியானது அதன் வணிகப் பங்காளிகளுடன் பரஸ்பரமாக நன்மை பயக்கக்கூடிய உறவுமுறைகளை வளர்ப்பதற்கு கடப்பாட்டுடன் உள்ளதுடன் இது செயலூக்கமான ஒத்துழைப்புடன் இடம்பெறுவதுடன் கடந்த வருடத்தில் ஒரு கொடுக்கல் வாங்கல் தொகையாக ரூபா 21.4 பில்லியனை விளைவித்தது. இந்த பங்குடைமையானது ஒரு திறந்த, பொறுப்பான, மற்றும் நெறிமுறையான கொள்முதல் கொள்கை என்பவற்றால் வகைப்படுத்தப்படுவதுடன், இது பாகுபாடற்ற மற்றும் நியாயமான விலைகோரல் செயன்முறைகளுக்கு உத்தரவாதமளிப்பதுடன், ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை பராமரிக்கின்றது. துறைசார் ஒழுங்குவிதிகளுடன் கடுமையான இணக்கப்பாட்டினை நிலைநிறுத்தி வங்கியானது வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையுடன் செயற்படுவதுடன் நெறிமுறையான வணிக நடைமுறைகளைக் கடைப்பிடித்து நிதியியல் கடப்பாடுகளை உடனடியாக சந்திக்கின்றது.



முக்கிய சிறப்பம்சங்கள்

வழங்குநர் பதிவீடு
e-GP

11
அங்கத்தவர் சங்கங்கள்

91%
இற்கும் மேலான பெறுமதி உள்ளூர் வழங்குனர்களுக்காக உருவாக்கப்பட்டது

உறவுகள்
44
தொடர்பாடல் வங்கிகள் மற்றும்
80 வொஸ்ட்ரோ முகவர்கள்

மூலதன இணைப்புகள்

நிதியியல் மூலதனம்
வினைத்திறனான வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் ஆக்கத்திறனை மேம்படுத்தி செலவு சேமிப்பினை உருவாக்கின்றது.

மனித மூலதனம்
வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்திலான பயிற்சி வணிகப் பங்காளி மூலதனத்தினை வளர்ப்பதற்கு வசதிசெய்கின்றது.

அறிவுசார் மூலதனம்
கோவிட்-19 தொற்றின்போது அறிமுகப்படுத்தப்பட்ட விலைகோரல் செயன்முறைகளின் டிஜிட்டல் மயமாக்கலானது வினைத்திறனை மேம்படுத்துகின்றது. நெறிமுறையான வணிக நடைமுறைகளை நிலைநிறுத்துதல் வணிகப் பங்காளிகளுடன் வலுவான பங்குடைமையினை வளர்க்கின்றது.

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்
டிஜிட்டல் மயமாக்கலிலான முதலீடு மற்றும் கொள்முதல் செயன்முறைகளை மேம்படுத்துதல் வணிகப் பங்காளி மூலதனத்தினை அதிகரிக்கின்றது.

இயற்கை மூலதனம்
வழங்குனர்களை நிலைபேறுடைய நடைமுறைகளை தழுவுமாறும் வலு செயற்திறனை மேம்படுத்துமாறும் ஊக்குவித்தல் அவர்களின் தாக்கத்தினை குறைப்பதற்கு உதவுகின்றது. அனைத்து வழங்குனர்களிலும் கடுமையான சலித்தல் செயன்முறைகளை விதித்தல் சூழல் மற்றும் சமூக நிலைபேறுடைமையினை ஊக்குவிக்கின்றது. வங்கியினால் கொள்முதல் செய்யப்படும் பொருட்களும் சேவைகளும் சமூக மற்றும் சூழல் ரீதியாக பொறுப்பான விதத்தில் உற்பத்திசெய்யப்படல், விநியோகித்தல் மற்றும் அகற்றுதலை உறுதிப்படுத்துதல் இயற்கை மூலதனத்தின் பாதுகாப்பினை மேம்படுத்துகின்றது.

பொருண்மையான கருப்பொருள்

- செயற்பாட்டு வினைத்திறன்
- வழங்குனர் பெறுமதி உருவாக்கம்

வாய்ப்புக்கள்

- நிதியியல் கட்டுப்பாடுகளினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கட்டுமான திட்டங்களை மீள்தொடங்குவதற்கான ஆற்றல்

சவால்கள்

- இறக்குமதிகளிலான கட்டுப்பாடுகளும் அந்நிய செலாவணியின் வரையறையான கிடைக்கும்திறனும் சில இறக்குமதிசெய்யப்பட்ட வழங்கல்களின் கொள்முதலில் தாமதங்களை ஏற்படுத்தின.
- நிதியியல் கட்டுப்பாடுகளின் காரணமாக சில திட்டங்கள் நிறுத்தப்படவேண்டி இருந்தது அல்லது தள்ளிப்போட வேண்டியிருந்தது.
- இலங்கையின் இறையாண்மை தரப்படுத்தலின் தரமிறக்கலுடன் வெளிநாட்டு பங்காளிகளின் கடன் வசதிகள் குறைக்கப்பட்டன



ஐ.நா. நி.அ.இல. களுக்கான பங்களிப்பு

5 GENDER EQUALITY

பாலினச் சமத்துவம்

வங்கி அதன் வணிகப் பங்காளிகளிடையே ஆண் பெண் இருபாலாருக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்குகின்றது.

8 DECENT WORK AND ECONOMIC GROWTH

பண்பான தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி

வங்கியின் வணிகப் பங்காளிகள் அவர்களது பொருளாதாரப் பங்களிப்பினை மேம்படுத்தி பண்பான வேலைவாய்ப்பினை வழங்குதவற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளார்கள்.

11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

நிலைபேறுடைய நகரங்கள் மற்றும் சமூகங்கள்

வங்கியின் விரிவான வழங்கல் சங்கிலிகள் அதன் வணிகப் பங்காளிகளிடையே நிலைபேறுடைய செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றது.

13 CLIMATE ACTION

காலநிலைச் செயற்பாடு

சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பினை ஊக்கமளிக்கும் பொறுப்பான கொள்முதல் நடைமுறைகளை வங்கி பராமரிக்கின்றது.

17 PARTNERSHIPS FOR THE GOALS

இலக்குகளுக்கான பங்குடைமைகள்

வங்கி அதன் இலக்குகளை அடைவதற்கு ஒரு பாரிய வலையமைப்பான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வணிகப் பங்காளிகளை கொண்டுள்ளது.

பெறுமதி உருவாக்கம்



உள்ளூர் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டது

ரூபா **19.4** பில்.

91%



வெளிநாட்டு வழங்குநர்களுக்கு செலுத்தியது

ரூபா **2.0** பில்.

9%



சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - வணிகப் பங்காளி மூலதனம்

GRI 2-6 சந்தையில் வங்கியின் போட்டிசார் மேம்பாட்டிற்கு துணையளிப்பதற்கும் தடையற்ற வங்கியின் செயற்பாடுகளுக்கான அத்தியாவசியம் அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் ஒரு பரந்த மற்றும் பன்முகமான வணிகப் பங்காளிகள் வலையமைப்பினை வங்கி கொண்டுள்ளது. உள்ளக கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணைந்த வெளிப்படையான செயன்முறைகளூடாக வங்கி அவர்களுக்கான பெறுமதியினை மேம்படுத்துகின்றது. இவை அரசாங்க ஒழுங்குவிதிகள் மற்றும் வங்கியின் உள்ளக கொள்முதல் கையேடு ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், இது அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளிலும வெளிப்படைத்தன்மையினை பராமரிப்பதற்கு இயலுமையாயுள்ளது. மேலாக, வங்கியின் வழங்குநர் மதிப்பிடுதல் முறையானது சூழல் மற்றும் சமூக அக்கறைகளை கணக்கிலெடுக்கின்றது. சாத்தியமானவாறு, வங்கி ஆக்கபூர்வமான பின்னூட்டத்தினூடாக அதன் வழங்குநர்கள் உயர் தரத்திலான நியமங்களைப் பராமரிப்பதற்கும் நேரகாலத்துடனான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கும் பங்களிப்பு செய்கின்றது.

கொள்முதல் கொள்கை

வணிகம் தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும்போது விலை, தரம், மற்றும் செயற்திறன ஆகியவற்றின் மிகவும் நன்மையான சமநிலையினை விளைவிக்கும் அதன் கொள்முதல் கொள்கையினை வங்கி உறுதிசெய்வதுடன், இது ஊழல், விரயம் மற்றும் கொள்வனவு செயன்முறையிலான சாத்தியமான முறைகேடுகளையும் சிறுமமாக்கின்றது. கொள்முதல் கையேடானது கொள்முதல் கொள்கையினை விருத்திசெய்வதில் வழிகாட்டிகளை நிறுவியுள்ளதுடன், வெளிவரும் தேவைகளுக்கு வசதியளிப்பதற்காக கொள்முதல் கொள்கைகளை திருத்தியமைக்கப்படுகின்றன. கொள்முதல் செயன்முறையானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினால் (தொ.ம.கு.) துணையளிக்கப்படுவதுடன், இவை நிபுணர்களை உள்ளடக்குவதுடன், கொள்முதல்களில் அனைத்து தொழில்நுட்ப விவரக்குறிப்புகளையும் மதிப்பீடு செய்கின்றது. தொ.ம.கு. அனைத்து நடவடிக்கைகளுக்கும் செயற்பாட்டு மற்றும் மூலதன பாதீட்டினை (CAPEX மற்றும் OPEX) விருத்திசெய்கின்றது. இவை கொள்முதல் மற்றும் செயற்பாடுகளுக்கான திட்டங்களின் அமுலாக்கத்திற்கு தயாராகுவதற்கு, கள அறிவு மற்றும் நிறுவன கட்டமைப்பின் பிரகாரம் ஆளணியினரிடையே பணிகளை ஒப்படைப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

கொள்முதல் செயன்முறை

GRI 308-1, 414-1

- விலைக்கோரல் செயன்முறைகளுக்கு சபை அங்கீகாரம் பெறப்படுவதுடன், புதிய வழங்குநர்கள் கடுமையான மதிப்பிடலுக்கு உட்படுகின்றார்கள். **DI** அட்டைகள் மற்றும் த.தொ. உபகரணம் போன்ற முக்கியமான மற்றும் உயர் பயன்பாட்டு உருப்படிகள் ஒரு உலகளாவிய விலைக்கோரலினூடாக கொள்முதல் செய்யப்படுவதுடன், வங்கியானது தெரிவுசெய்யப்பட்ட உலகளாவிய வழங்குநர்களுடன் பங்குடைமைகளை பராமரிக்கின்றது.
- மத்திய சூழல் அதிகாரசபையின் மற்றும் சிறுவர் அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட தொழில் உள்ளடங்களான ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் சூழல் மற்றும் சமூக வரன்முறையுடன் இணக்கப்பாடு காண்பதற்காக அனைத்து புதிய வழங்குநர்களும் மதிப்பிடப்படுகின்றார்கள்.
- கோவிட்-19 தொற்றின்போது டிஜிட்டல் முறைகளின் அதிகரித்த பயன்பாட்டுடன், விலைக்கோரல்களும் ஒரு இயங்கலை செயன்முறையினூடாக பெறப்பட்டன. இது ஒரு தனிப்பயனான மின்னஞ்சல் மற்றும் Zoom ஊடாக திறக்கப்பட்டு, கொள்முதல் செயன்முறையில் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.
- நிதி அமைச்சின் கீழ் கட்டாயமாக்கப்பட்ட இலத்திரனியல் அரசாங்க கொள்முதல் முறைமையில் பதிவுசெய்ய வேண்டிய தேவையினை வழங்குநர்கள் கொண்டுள்ளார்கள்.



வணிகப் பங்காளி வகைகள்

வணிக வளர்ச்சிப் பங்காளிகள்

- தொடர்பு வங்கிகள்
- வொஸ்ட்ரோ முகவர்கள்
- உரிமை பங்காளிகள்
- அரச நிறுவனங்கள்

வழங்குனர்கள்

- பயன்பாட்டுச் சேவை வழங்குனர்கள்
- பொருட்கள் வழங்குநர்கள்
- நிலையான சொத்து வழங்குனர்கள்
- பிரயாணமும் போக்குவரத்தும்

பராமரிப்பு பங்காளிகள்

- மென்பொருள் வழங்குநர்கள்
- கழிவு முகாமைத்துவம்
- தொடர்பாடல்
- கடன் திரட்டல் முகவர்கள்
- மனித வள வழங்குநர்கள்

ஏனையோர்


- ஒப்பந்ததாரர்கள்
- வளாக வழங்குனர்கள்

வணிகப் பங்காளிகள் 2022 எதிர் 2023 GRI 204-1

	2022	2023
பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் எண்ணிக்கை	2020 இலிருந்து நிதி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட இ-கொள்முதல் மேடையினை நாம் பயன்படுத்துவதுடன் வழங்குநர் பதிவீடுகளை நடைமுறைப்படுத்துவது இல்லை.	
தொடர்பு வங்கிகளின் எண்ணிக்கை	43	44
வொஸ்ட்ரோ முகவர்களின் எண்ணிக்கை	82	80
வழங்குநர்களுக்கான கொடுப்பனவு ரூபா பில்.	15.9	21.4
- உள்ளூர்	14.8	19.4
- வெளியூர்	1.1	2.0

வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்

நாட்டிலுள்ள பாரிய வங்கியான மக்கள் வங்கியின் பாரிய செயற்பாட்டு தேவைகளினால், தடையற்ற செயற்பாடுகள் மற்றும் சேவைத் தரங்களுக்கு வழங்கல் சங்கிலிகளை முகாமைப்படுத்துதல் முக்கியமானதாகும். அதேவேளை, கொள்முதல்களில் செலவுச் சிக்கனம் உறுதிப்படுத்தப்படுகின்றது. வங்கி வெற்றிகரமாக வழங்கல் சங்கிலி கட்டங்களை ஒருங்கிணைப்பதுடன், இது சரியான இடத்தில், சரியான பொருட்கள் மற்றும் சேவைகள் சரியான நேரத்தில் கிடைக்கப்பெறுவதனை உறுதிசெய்யும்வேளை மொத்தச் செலவினங்களையும் குறைப்பதற்காகும். அதன் வழங்குநர்களை முகாமைப்படுத்துவதில், வங்கிக்கு பெறுமதியினை உகப்பாக்கும் பரஸ்பரமான நலன் விளைவுகளை வங்கியானது வளர்ப்பதுடன், இது சிறந்த விலையில் உயர் தரத்திலான பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்முதலினூடாக ஆகும். அதேவேளை, நியாயமான



விலைகள் மற்றும் உடனடி கொடுப்பனவுகளுடாக ஏற்ற விளைவினை வழங்குநர்களுக்கு உறுதிசெய்கின்றது. வெற்றி-வெற்றி கொடுக்கல் வாங்கல்களை உருவாக்கும் இந்த தத்துவமானது வங்கிக்கு ஒரு நீண்ட கால வழங்குனர்களின் பாரிய தரவுத் தளத்தினை கட்டியெழுப்புவதனை விளைவிக்கும்.

நீண்டகால உறவுமுறைகள்

மக்கள் வங்கியின் சர்வதேச அணுக்கத்தின் ஒரு முக்கிய கூறாக, உலகின் வெவ்வேறு இடங்களில் செயற்படும் வங்கியியல் பங்காளிகள் மற்றும் முகவர்கள் காணப்படுகின்றார்கள். இந்த நம்பிக்கையான மற்றும் பாதுகாப்பான வலையமைப்பானது, வெளிநாடுகளில் வாழுகின்ற பாரிய எண்ணிக்கையான புலம்பெயர் தொழிலாளிகள் மற்றும் இலங்கையர்களுக்கு நிதியியல் சேவைகளது வழங்கலை இலங்கையின் கரைக்கு அப்பால் நீடிப்பதனை இயலுமையாக்குகின்றது. பல வருடங்களாக, வங்கியானது ஒரு நீண்ட பட்டியலுடைய வங்கியியல் பங்காளிகளுடன் நீண்டகால உறவுகளை கட்டியெழுப்பியது. இது தற்போது 44 தொடர்பு வங்கிகளையும் 80 வொஸ்ட்ரோ முகவர்களையும் உள்ளடக்குகின்றது.

குறைவான கிரயத்தில் நிதியினை பெறுவதில் கடந்த காலங்களில் வங்கி ஈடுபட்ட வெளிநாட்டு கடன் வழங்கல் நிறுவனங்கள் வங்கியின் மற்றொரு வகை வணிகப் பங்காளிகளாகும். நடைமுறை நிதியாண்டின்போது, நாட்டின் இறையாண்மை தரப்படுத்தலானது தரமிறக்கப்பட்டதனால், அத்தகைய முகவர்களிடமிருந்து நிதிகளைப் பெறுவதில் தடையேற்பட்டதுடன், வங்கியானது எதிர்காலத்தில் அத்தகைய நிதியினை அணுகுவதற்காக அத்தகைய பெயர்பெற்ற மற்றும் உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுடன் வங்கியானது தொடர்ந்தும் தொடர்பினை பராமரிக்கின்றது.

வழங்குநர் சூழல் மதிப்பீடு GRI 308-1

சூழல் நிலைபேறுடமையானது நிலைபேறுடமைக்கான வங்கியின் அர்ப்பணிப்பின் ஒரு அடிப்படை அம்சமாகும். அதன் செயற்பாடுகள் மற்றும் வழங்கல் சங்கிலியில், இந்த அர்ப்பணிப்பானது நிலைநிறுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்காக வங்கி ஒரு முறையான கொள்கையினை அமுல்படுத்தியுள்ளது. இந்தக் கொள்கையானது சூழல் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளைக் கடைப்பிடிக்கும் வழங்குனர்கள், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுடன் வங்கி பிரத்தியேகமாக ஈடுபடுவதனை ஆணையிடுகின்றது. இது தேசிய சூழல் சட்டம், மற்றும் வங்கியின் சொந்த சூழல் கொள்கையினை கடைப்பிடித்தல் போன்ற தேசிய சட்டங்களுடனான இணக்கப்பாட்டினை உள்ளடக்குகின்றது.

மக்கள் வங்கியின் சர்வதேச அணுக்கத்தின் ஒரு முக்கிய கூறாக, உலகின் வெவ்வேறு இடங்களில் செயற்படும் வங்கியியல் பங்காளிகள் மற்றும் முகவர்கள் காணப்படுகின்றார்கள். இந்த நம்பிக்கையான மற்றும் பாதுகாப்பான வலையமைப்பானது, வெளிநாடுகளில் வாழுகின்ற பாரிய எண்ணிக்கையான புலம்பெயர் தொழிலாளிகள் மற்றும் இலங்கையர்களுக்கு நிதியியல் சேவைகளது வழங்கலை இலங்கையின் கரைக்கு அப்பால் நீடிப்பதனை இயலுமையாக்குகின்றது

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - வணிகப் பங்காளி மூலதனம்

மேலும், வங்கி இந்த சூழல் பொறுப்பினை அதன் வழங்கல் சங்கிலி மற்றும் கொள்முதல் செயன்முறைகளினுள் நீடிக்கின்றது. சூழல் பாதுகாப்பு உட்கூறுகள் கொள்முதல் கொள்கைகள் மற்றும் விலைக்கோரல்களில் ஒருங்கிணைக்கப்படுவதுடன், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் தெரிவில் சூழல் அக்கறைகள் ஒருங்கிணைந்திருப்பதனை உறுதிசெய்கின்றது.

இந்தி நியமங்களை வலியுறுத்துவதற்காக, வங்கியானது அனைத்து புதிய வழங்குனர்களையும் முழுமையான மதிப்பீட்டு செயன்முறைக்கு உட்படுத்துகின்றது. இந்த செயன்முறைகள் சூழல் மற்றும் சமூக வரன்முறைகளில் வழங்குனர்களது இணக்கத்தினை மதிப்பிடுவதுடன், அவர்களது உற்பத்திச் செயன்முறையானது மத்திய சூழல் அதிகாரசபையினால் நிறுவப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுடன் இணைந்திருப்பதனை உறுதிசெய்கின்றது. மேலாக, வழங்குநர்கள் சிறுவர் தொழில் அல்லது கட்டாயத் தொழில் தடை உள்ளடங்கலான நெறிமுறையான தொழில் நடைமுறைகளுக்கான ஒரு அர்ப்பணிப்பினை வெளிக்காட்டல் வேண்டும்.

சிறார் தொழிலாளி

ஒரு அரச வங்கியாக, மக்கள் வங்கி பொருத்தமான அனைத்து தொழிலாளர் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காண்பதுடன், சிறார் தொழிலாளிகளை பணிக்கமர்த்துவதில்லை.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

மக்கள் வங்கியானது உள்ளூர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர் வாடிக்கையாளர்களுக்கு அதன் சேவைகளுக்கான அணுக்கத்தினை மேம்படுத்துவதற்கு புத்தாக்கமான தொழில்நுட்ப தீர்வுகளை தொடர்ந்தும் விருத்திசெய்யும் என்பதுடன் 2024 இல் இத்துறையில் சந்தைப் பங்களிப்பில் தொடர்ச்சியான வளர்ச்சியினை எதிர்பார்க்கின்றது. அ.உ.நி. மற்றும் அரசாங்க முகவர்களுக்கு தொடர்ச்சியாக துணையளிக்கும்வேளை வங்கியானது அதன் இளம் மற்றும் தனியார் துறை வாடிக்கையாளர்களது, குறிப்பாக கூட்டாண்மைத் துறையின் விரிவாக்கத்தினை வலியுறுத்தும். வங்கியானது வாடிக்கையாளர் திருப்தியினை பராமரிப்பதற்காக அதன் சேவைத் தரங்களை மேம்படுத்தும் மற்றும் வணிகப் பங்காளிகளின் அதன் உலகளாவிய வலையமைப்பினை விரிவாக்கி அனைத்து பங்காளிகளுக்குமான பெறுமதியினை மேம்படுத்துவதற்கு நிலைநிறுத்தப்பட்ட பங்குடைமைகளைப் பயன்படுத்தும்.



60 வருடங்களுக்கும் மேலாக ஒரு மரபுரீதியான பரவலுடன், வங்கியானது எமது முதன்மை பங்குதாரரான, இலங்கை அரசாங்கத்தின் நிதியியல் வளங்களுக்கு ஒரு முக்கிய பங்களிப்பாளராக உள்ளது.

எமது அணுகுமுறை

மக்கள் வங்கி அதன் அனைத்து செயற்பாடுகளிலும் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மை நியமத்தினை இடைவிடாது நிலைநிறுத்தியுள்ளது. பங்காளிகளுக்கு வங்கியின் நிதி நிலைமை மற்றும் செயற்பாட்டு விளைவுகளின் துல்லியமான மற்றும் உரிய நேரத்திலான தொடர்பாடலை வழங்குவதன் மூலம், நாம் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை அதிகரித்துள்ளோம். எமது வலிமையான சொத்துத் தளம் மற்றும் தேக்கத்தின் தரம் என்பன ஒரு திடமான மூலதனப் போதுமை நிலைமையினை உறுதிசெய்துள்ளதுடன், எம்மை சவாலான நேரங்களினூடாக சமாளிப்பதனை இயலுமையாக்குகின்றது. உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம், ஆளணி அபிவிருத்தி மற்றும் செயல்முறைப் பொறியியல் ஆகியவற்றில் முதலீடு செய்யும் வேளை வங்கியானது போதுமான திரவத்தன்மை நிலைமையினைப் பராமரித்துள்ளது. இந்த அணுகுமுறையானது எமது செயற்பாட்டு மீளெழுச்சியினை வலுப்படுத்தியுள்ளதுடன், இன்னல்களை பயனுறுதியாக சமாளிப்பதற்கு அனுமதிக்கின்றது.



முக்கிய சிறப்பம்சங்கள்

உரித்துவத்திலான விளைவு
6.6%

சொத்துக்களிலான விளைவு
0.5%

ரூ. 40.7 மில்
சமூகங்களுக்கு

92%
இற்கும் மேலான அரச உரித்துடைமை



சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - முதலீட்டாளர் மூலதனம்

பொருண்மையான கருப்பொருள்

- நிதியியல் செயற்திறன்
- செயற்பாட்டு வினைத்திறன்
- ஊழியர் ஆக்கத்திறன்
- பொறுப்பான கடன்வழங்கல்
- வணிகநாம உரித்துவம்
- வாடிக்கையாளர் அணுகல்

சவால்கள்

- இவ்வாண்டின்போது கொந்தளிப்பான பொருளாதார நிலைமைகள்
- இலாபகரத்தன்மையினை பாதித்த கடன் வழங்கலிலான கட்டுப்பாடுகள்

வாய்ப்புக்கள்

- 2023 இல் மேம்பட்ட பொருளாதார நிலைமைகள் அதிகரித்த இலாபகரத்தன்மை மற்றும் பங்கிலாப கொடுப்பனவுகளை விளைவிக்கலாம்

பெறுமதி உருவாக்கம்

ரூ. 13.9 பில்.
வரிகள், விசேட கட்டணம் மற்றும் பங்குதாரர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம்



ஐ.நா. நி.அ.இ. களுக்கான பங்களிப்பு

பண்புடைய தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி

வங்கி அதன் வணிக நடவடிக்கைகளுடாக ஒரு முக்கியமான நேரடி பொருளாதார பங்களிப்பினை மேற்கொள்வதுடன், மறைமுகமான பொருளாதார பங்களிப்புகளுக்கும் ஆகும்.

அமைதி, நியாயம் மற்றம் திடமான நிருவகங்கள்

வங்கி ஒரு பரந்தளவிலான அரசாங்க மற்றும் அரசல்லாத நிருவகங்களுடன் பொது மக்களுக்கு பல்வேறு கருவிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஈடுபடுகின்றது.

மூலதன இணைப்புகள்

நிதியியல் மூலதனம்

எமது வருவாயினை நிலைபேறாக்கல் மற்றும் இலாபங்களிலான அதிகரிப்புகள் முதலீட்டாளர் மூலதனத்தினை மேம்படுத்தும்

மனித மூலதனம்

ஊழியர்களின் திறன்கள் மற்றும் திறமைகள் அதிகரித்த மற்றும் இலாபகரத்தன்மை வளர்ச்சிக்கு இட்டுச்செல்லும்

அறிவுசார் மூலதனம்

டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் புத்தாக்கத்திலான துறைசார் முதன்மைநிலை அதிகரித்து முதலீட்டாளர் மூலதனத்திற்கு பங்களிப்பு செய்கின்றது

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

பொறி மற்றும் உபகரணங்களிலான முதலீடானது பெறுமதி உருவாக்கத்திற்கும் அதிகரித்த முதலீட்டாளர் மூலதனத்திற்கும் இட்டுச்செல்லும்

இயற்கை மூலதனம்

டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தன்னியக்கமாக்கல்களிலான முதலீடுகள் சூழலில் எமது தாக்கத்தினை தணிக்கின்றது

முதலீட்டாளர் மூலதனம்

1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் (2019 இல் திருத்தியமைக்கப்பட்டது) நிறுவப்பட்ட மக்கள் வங்கியானது நாட்டிலுள்ள இரண்டாவது பெரிய வங்கியாகும் என்பதுடன், இலங்கை அரசாங்கமானது உரித்துவ பங்கு மூலதனத்தில் 92.27% இனையும் எஞ்சிய 7.73% ஆனது கூட்டுறவுச் சங்கங்களினாலும் வைத்திருக்கப்படுகின்றது. வங்கியானது நிதி அமைச்சு மற்றும் இலங்கையின் பாராளுமன்றத்தினூடாக இலங்கையின் பொது மக்களுக்கு நேரடியான பொறுப்பாளியாகும். எனவே, மக்கள் வங்கியானது அதன் உரித்துடைமையில் மற்றும் அதன் பொறுப்பாணையில் மெய்யாகவே ஒரு மக்களின் வங்கியாகும்.

வங்கியின் நோக்கமானது சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"வங்கியின் நோக்கமானது இலங்கையின் கூட்டுறவு அமைப்பினை, கிராமிய வங்கியியல் மற்றும் விவசாயக் கடனை விருத்திசெய்தல், இது கூட்டுறவுச் சங்கங்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வேளாண்மை குழுக்கள் மற்றும் ஏனைய நபர்களுக்கு நிதியியல் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதன் மூலம் ஆகும்."

ஒரு பொது வங்கியாக, மக்கள் வங்கியின் சமூக நலன்புரி கடப்பாடுகள் எந்தவொரு தனியார் வர்த்தக வங்கிக்கும் மேலானதாகும் மற்றும் ஒரு வர்த்தக நிறுவனமாக இருந்தாலும் மக்கள் வங்கி இலாப நோக்குடன் மாத்திரமே செயற்படவியலாது. அதன் சமூக நலன்புரி பங்களிப்புகளூடாக, வங்கி ஒரு விதிவிலக்கான விசாரமான மறைமுகமான பொருளாதார தாக்கத்தினை உருவாக்குவதுடன், இது நாட்டிலுள்ள எந்தவொரு தனியார் வர்த்தக வங்கியுடன் ஒப்பிடும்போது அதன் பாரிய பொருளாதார தாக்கத்திற்கு மேலாகும்.

தேசத்திற்கு முக்கியமான நிதியல்லாத பங்களிப்புகள்

- மக்கள் வங்கியானது அரசாங்கத்திற்கு பங்கிலாபக் கொடுப்பனவுகளூடாக பொதுமக்களின் நல்வாழ்விற்கு நேரடியாக துணைபுரிகின்றது, (வரிக் கொடுப்பனவுகளுக்கும் மேலாக) இவை பொதுமக்களுக்கு அரசாங்க நலன்புரி சேவைகளின் வடிவில் மீள்விநியோகிக்கப்படுவதுடன், வங்கியும் ஓய்வூதியங்கள், அஸ்வெசும கொடுப்பனவுகள் போன்ற அரசாங்க நலன்புரி விநியோகத்திற்கு வசதியளிக்கின்றது. இது கிராமிய உட்பகுதிகளில் ஆழமான எட்டுதல்களையுடைய அதன் நாடு பூராகவுமான வலையமைப்பினூடாகும்.

- வங்கியானது அத்தியாவசிய, அரச உடைமை நிறுவனங்களுடான பாரிய அளவிலான பொது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கும் இரண்டு பொது வங்கிகளில் ஒன்றாகும். 2023 இன் இறுதியில், மக்கள் வங்கி பெற்றோலியம், உரம் மற்றும் நிலக்கரி இறக்குமதி கொடுக்கல் வாங்கல்களில் பெரும் பகுதிக்கு கணக்கீடு செய்ததுடன், மருத்துவ மருந்துகள் மற்றும் உணவு போன்ற பல ஏனைய அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்காகவும் ஆகும்.


- அதன் மையமான வங்கியியல் செயற்பாடுகளின் ஒரு பாகமாக மக்கள் வங்கி கடுமையான கிராமங்கள், பாரம்பரியமாக தனியார் வர்த்தக வங்கிகளினால் குறைசேவையாற்றப்பட்ட சனத்தொகைக்கு முறையான, பாதுகாப்பான நிதியியல் சேவைகளுக்கான அணுகலுக்கு வசதியளிக்கின்றது.

- அதன் கூட்டுறவுத்துறை இணைப்புகளூடாக, வங்கி தனியார் வர்த்தக வங்கிகளினால் பாரம்பரியமாக சேவையாற்றப்படாத கிராமிய பொருளாதாரங்களுக்கு நிதியியல் சேவைகளை வழிநடத்துகின்றது.


2023 இல் நாட்டிற்கான முக்கிய பங்களிப்புகள்

தேசிய பங்களிப்பு	2022	2023
அரசாங்கத்திற்கு - வரிகள், விசேட கட்டணம் மற்றும் பங்கிலாபம்	ரூ. 13.94 பில்.	ரூ. 13.93 பில்.
உரித்துவத்திலான விளைவு (%)	12.2	6.6
சொத்துக்களிலான விளைவு (%)	0.8	0.5

சொத்துக்களிலான விளைவு



உரித்துவத்திலான விளைவு



பொருளாதார பங்களிப்பு


உருவாக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட நேரடி பொருளாதார பெறுமதி

உருவாக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட நேரடிப் பொருளாதார பெறுமதியானது நாட்டிற்கு வங்கியினால் உருவாக்கப்பட்ட செல்வத்திற்கான ஒரு அறிகுறி என்பதுடன், வங்கி அதன் வளர்ச்சிக்காக நிறுத்திவைத்த தொகைக்கான ஒதுக்கீட்டினையும் பிரதிபலிக்கின்றது.

உருவாக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட நேரடி பொருளாதார பெறுமதி

GRI 201-1

a. ஒரு அட்டறு அடிப்படையில் உருவாக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்ட நேரடி பொருளாதாரப் பெறுமதியானது, நிறுவனத்தின் உலகளாவிய செயற்பாடுகளுக்கான அடிப்படைக் கூறுகளையும் உள்ளடக்குவதுடன், அவை பின்வருமாறு:



சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - முதலீட்டாளர் மூலதனம்

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2019 ரூ. 000	2020 ரூ. 000	2021 ரூ. 000	2022 ரூ. 000	2023 ரூ. 000	2023 எதிர் 2022 வளர்ச்சி %
வருமான மூலங்கள்						
வட்டி	186,714,218	179,717,526	197,330,011	321,935,983	**394,794,898**	22.6%
பரிவர்த்தனை	800,416	3,311,844	(965,361)	2,740,436	**10,355,650**	277.9%
தரகும் கட்டணங்களும்	7,336,594	6,723,826	8,268,168	16,397,745	**13,806,168**	-15.8%
மூலதன இலாபம்	329,071	336,495	143,459	184,223	**347,203**	88.5%
ஏனையவை	4,548,686	892,017	2,473,543	15,970,222	**2,938,224**	-81.6%
மொத்தம்	**199,728,985**	**190,981,708**	**207,249,820**	**357,228,609**	**422,242,143**	**18.2%**
வருமானத்தின் பயன்பாடு						
வைப்பீட்டாளர்களுக்கும் / கடன் பெறுநர்களுக்கும் வட்டியாக	125,507,699	118,783,744	114,869,171	246,177,918	**340,473,452**	38.3%
ஊதியமாக ஊழியர்களுக்கு	19,226,233	19,685,506	22,711,335	26,602,748	**24,493,737**	-7.9%
பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்குநர்களுக்கு	12,153,293	11,128,830	12,276,709	15,882,049	**21,352,264**	34.4%
நிதிச் சொத்துக்களில் தேறிய வலுக்குன்றல் நட்டம்	8,488,026	11,567,174	14,472,820	33,346,451	**7,437,572**	-77.7%
அரசாங்கத்திற்கு - வரி, விசேட கட்டணம் மற்றும் பங்கிலாபம்	19,817,027	14,444,917	16,328,960	13,944,390	**13,926,049**	-0.1%
சமூகத்திற்கு	35,683	28,703	12,665	38,213	**40,721**	6.6%
வளர்ச்சிக்கு நிறுத்திவைக்கப்பட்டவை	14,501,024	15,342,833	26,578,159	21,236,840	**14,518,348**	-31.6%
மொத்தம்	**199,728,985**	**190,981,708**	**207,249,820**	**357,228,609**	**422,242,143**	**18.2%**

வரி GRI 207-1 / 207-2 / 207-3

வரி முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாட்டிற்கு வங்கியானது ஒரு விரிவான அணுகுமுறையினை வெளிக்காட்டுகின்றது. வங்கி வரி விடயங்களை வினைத்திறனாக மேற்பார்வை செய்வதற்காக நிதியியல் பிரிவின் தலைமையினால் வழிநடத்தப்படும் ஒரு பிரத்தியேகமான நிபுணர் குழுவினை நிறுவியுள்ளது. மேலும், வருமானவரி கணிப்பீடு, கோப்பிடுதல் மற்றும் தொடர்புடைய நிர்வாகப் பணிகள் போன்ற சிக்கலான அம்சங்களை கையாளுவதற்கு வெளிவாரி ஆலோசகர்களின் நிபுணத்துவத்தினை பயன்படுத்துகின்றார்கள்.

வங்கி அதன் உள்ளகக் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு அலகினூடாக வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் சேர்ந்து தீவிரமான கண்காணிப்பு பொறிமுறையினை பராமரிப்பதுடன், இது வரிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கடுமையாக இணங்குவதனை உறுதிசெய்வதற்காகும். இந்த செயலூக்கமாக அணுகுமுறையானது இணக்கப்பாடின்மை இடரினை தணிப்பதற்கு உதவுவதுடன் வங்கி சட்ட வரம்புறுகையினுள் செயற்படுவதனை உறுதிசெய்கின்றது. மேலும், இலங்கையின் மக்கள் வங்கியானது அதன் வரி நடைமுறைகளில் சமூகப் பொறுப்பிற்கான கொள்கைகளை நிலைநிறுத்துவதுடன் இது நெறிமுறையான நடத்தைக்கான அர்ப்பணிப்பினை வெளிக்காட்டுவதுடன், சமூகத்திற்கு சாத்தியமாக பங்களிப்புசெய்கின்றது. வரி அலகின் தலைமையானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் ஒத்துழைப்பினை வளர்ப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதுடன், வெளித்தோன்றும் வரிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் தொடர்ச்சியான இணக்கத்தினை உறுதிசெய்கின்றது. வருடம் பூராகவும் வரிச் சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடற்ற சந்தர்ப்பங்கள் எதுவும் காணப்படவில்லை.

அறுபது வருடங்களுக்கும் மேலாக மக்கள் வங்கியானது சமூகத்துடன் நிலையுறுதியான தொடர்புகளை பராமரித்துள்ளதுடன், பின்வரும் அதன் கற்பனையான பங்கினை பூர்த்திசெய்கின்றது. சாதாரண பிரஜையின் தேவைகள் விளித்துரைத்தல், கிராமிய தொழில்முனைவோர்களின் வளர்ச்சியினை வளர்த்தல், மற்றும் சமூக மேம்பாட்டிற்கு செயலூக்கமாக பங்களித்தல் என்பவையாகும். இந்தக் கடப்பாடானது வங்கியின் மையமான விழுமியங்களில் ஆழமாக உட்பொதிந்துள்ளதுடன், எமது வாடிக்கையாளர்கள் மற்றும பரவலான சமூகத்திற்கு உதவியினையும் உறுதுணையினையும் நீட்டுவதற்கு எம்மை கட்டாயமாக்குவதுடன், குறிப்பாக எமது பிரசன்னம் மற்றும் சேவைகள் மிகவும் முக்கியமான பிராந்தியங்களிலாகும்.

எமது அணுகுமுறை

வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் சமூக உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை வலுவூட்டுவதற்கும் நாம் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம். அவையாவன, எமது கூ.ச.பொ. திட்டமான, "மஹஜன மெஹெவர" வின் அறிமுகம், இது எமது சமூக சேவை முன்னெடுப்புகளை நீடிப்பதற்காகும். எமது முதன்மையான முன்னிறுத்தம் நிதியியல் அறிவினை வழங்குவது மற்றும் பொதுமக்களிடையே வணிக புத்திசாலித்தனத்தினை வளர்த்தல், குறிப்பாக கிராமப் புறங்களில், தொழில்முனையினை தூண்டிவிடுவதற்காகும். மேலும், கலாச்சார பாரம்பரியங்கள், கலை, மற்றும் சமூகத்தின் கைவினை ஆகியவற்றை பாதுகாப்பதற்கு கடப்பாட்டுடன் உள்ளதோடு, இந்த ஆற்றல்களை முன்னேற்றும் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. மேலாக, எமது முயற்சிகள் நிலைபேறுடமை மற்றும் சூழல் பாதுகாப்பினை முன்னேற்றும் குறிக்கோளினைக் கொண்டுள்ளதுடன், இன்றைய சாதனைகள் எதிர்கால சந்ததிகளுக்கு நலனடைவதை உறுதிசெய்கின்றது.



முக்கிய சிறப்பம்சங்கள்

கணிசமான முதலீட்டுத் தொகை

ரூ. 40.7 மில்.

நாடு முழுவதும் சமூக அபிவிருத்தியில்

"இளம் தொழில்நுட்பம்" திறன் அபிவிருத்தித் திட்டம் வழங்கும்

100

கணினி விஞ்ஞானத்தில் பாடசாலை மாணவர்களுக்கு உதவித்தொகைகள்

சூரிய சக்தியினால் இயங்கும் தண்ணீர் திட்டங்களின் நலன்கள்

7

நாட்டின் பின்தங்கிய பிரிவுகளில் உள்ள நலிவடைந்த கிராமிய பாடசாலைகள்

மூலதன இணைப்புகள்

நிதியியல் மூலதனம்

வங்கியின் நிதியியல் மூலதனமானது சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் நோக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இது சமூக அபிவிருத்தியின் நீடித்தல் உள்ளடங்கலானது. சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளிலான முதலீடு சமூகத்தின் மேம்பாடு நோக்கிய ஒரு அவசியமான பங்களிப்பாகும்.

மனித மூலதனம்

வழங்கல் சங்கிலி முகாமைப்படுத்தலிலான பயிற்சியானது வணிகப் பங்காளி மூலதன வளர்ச்சிக்கு வசதியளிக்கும்.

அறிவுசார் மூலதனம்

சமூக வெளிக்களத் திட்டங்கள், புதிதாக உருவாக்கப்பட்ட கூ.ச.பொ. வணிகநாமமான மஹஜன மெஹெவர வின் கீழ் நடாத்தப்பட்டதுடன் இது பொது மக்களிடையே வங்கியின் படிமத்தினை மேம்படுத்தியுள்ளது.

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

சுய-வங்கியியல் அலகுகளின் வழங்கலானது தொலைதூரத்திலுள்ள சமூகங்களுக்கு வங்கியியல் சேவைகளுக்கான சௌகரியம் மற்றும் அணுகலை அதிகரித்துள்ளது. இதன் மூலம் வங்கியின் உற்பத்திசெய்யப்பட்ட மூலம் மேம்படுத்தப்படுகின்றது.

இயற்கை மூலதனம்

சுய-வங்கியியல் அலகுகளின் அறிமுகத்துடன், வங்கியானது டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களை ஊக்குவிப்பதன் மூலம் தாள் நுகர்வினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இது இயற்கை மூலதனத்தினை பாதுகாக்கவும், ஒரு நிலைபேறுடைய எதிர்காலத்தினை கட்டியெழுப்புதல் நோக்கியும் பங்களிப்பு செய்கின்றது.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - சமூக மூலதனம்

பொருண்மையான கருப்பொருள்

- சமூக பொருளாதார தாக்கம்
- பொறுப்பான கடன் வழங்கல்

சவால்கள்

- உயர்வடையும் செலவுகள் மற்றும் பாதீட்டுக் கட்டுப்பாடுகள் ஊழியர்கள் பல சமூகச் சேவை திட்டங்களினால் பங்குபற்றுவதனை தடைசெய்தது

வாய்ப்புக்கள்

- மக்கள் வங்கியின் கூட்டாண்மை வணிக நாமத்தினை மேலும் மேம்படுத்துவதற்கு 'மஹஜன மெஹெவர" கூ.ச.பொ. முன்னெடுப்புகளின் கீழ் அதிக சமூக அடிப்படையிலான நடவடிக்கைகளை நடாத்தியதன் மூலமாகும்.

பெறுமதி உருவாக்கம்



ரூ. **8.9** பில். பெறுமதியான
21.307 எண்ணிக்கையிலான சமூக அடிப்படை அபிவிருத்திக் கடன்கள்



ஐ.நா. நி.அ.இ. களுக்கான பங்களிப்பு

வறுமையற்ற

சேமிப்புகள் மற்றும் நிதியியல் அறிவினை ஊக்குவிப்பதுடன், தொழில் உருவாக்கத்தினூடாக, சமூகங்களினுள் வறுமையினை குறைப்பதற்கு வங்கி பங்களிப்பு செய்கின்றது.

பூச்சிய பசி

நாட்டில் உணவுச் சங்கிலிகளுக்கு துணையளிப்பதில் விவசாயிகள் மற்றும் ஏனைய உணவு உற்பத்தியாளர்களுக்கு வங்கி கடன் வசதிகளை வழங்குகின்றது.

நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு

கூ.ச.பொ. நடவடிக்கைகளின் ஒரு பாகமாக வங்கி மருத்துவமனைகளுக்கு நிதி மற்றும் பொருட்களை நன்கொடை செய்கின்றது.

தரமான கல்வி

பாடசாலை புத்தகங்களை கொடையளிப்பதன் மூலம் வங்கி கல்விக்கு துணைபுரிகின்றது.

சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்

பின்தங்கிய கிராமிய பாடசாலைகளுக்கு குடிநீரை வழங்கும் கூ.ச.பொ. திட்டத்தினை வங்கி கொண்டுள்ளது.

மலிவான மற்றும் சுத்தமான வலு

தொலைதூர கிராமிய பாடசாலைகளுக்கு வங்கி சூரிய சக்தியினை வழங்குகின்றது.

இலக்குகளுக்கான பங்குடைமைகள்

கூ.ச.பொ. திட்டங்களை நடாத்துவதற்கு வங்கி பல்வேறு அரசாங்க மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் கூட்டுசேர்ந்துள்ளது.



வங்கியானது அதன் அபிவிருத்தி கடன்வழங்கல் தேக்கத்தினூடாக சிறிய மட்டத்திலான நிறுவனங்களுக்கு துணையளிப்பதுடன், இது வங்கியினால் வழங்கப்படும் கடன்களையும் மீள்நிதியளிப்பு திட்டங்களையும் உள்ளடக்குகின்றது.

மக்கள் வங்கி நாட்டின் சாதாரண பிரஜையினை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு நீண்ட பாரம்பரியத்தினைக் கொண்டுள்ளதுடன், மலிவான மற்றும் அணுகத்தக்க முறையான வங்கியியல் சேவைகளை வழங்குவதனூடாக குறைசேவையாற்றப்படும் சமூகங்களின் அபிவிருத்திக்கு துணையளிக்கின்றது. மேலாக, வங்கி அதன் கூ.ச.பொ, தேக்கத்தின் ஒரு பாகமாக சமூகம், கலாச்சாரம் மற்றும் மத நிகழ்வுகளுக்கு துணைபுரிகின்றது. அதேவேளை நடைபெற்றுக்கொண்டிருக்கும் கூ.ச.பொ. திட்டங்களைப் பராமரிக்கின்றது. இந்த முயற்சிகள், வங்கியின் பொருளாதார பெறுமதி உருவாக்கத்திற்கும் மேலாக வங்கியினூடாக குறிப்பிடத்தக்க மறைமுகமான பொருளாதார தாக்கத்தினை சேர்த்துள்ளது. பூர்வீக மக்களின் உரிமைகள் உள்ளடக்கப்பட்ட எந்தவிதமான மீறல்களும் அறிக்கையிடப்படவில்லை. GRI 411-1

கூ.ச.பொ. திட்டங்களிலான முதலீடுகள்

	2022	2023
கூ.ச.பொ. இலான முதலீடு (ரூ.மில்.)	38.2	40.7
சமூக அடிப்படையிலான அபிவிருத்தி கடன்களின் எண்ணிக்கை	22,150	21,307
சமூக அடிப்படையிலான அபிவிருத்தி கடன்களின் பெறுமதி (ரூ.மில்.)	9,568.1	8,892.8


சமூக அடிப்படையிலான அபிவிருத்தி கடன்வழங்கல் GRI 203-1

வங்கியானது அதன் அபிவிருத்தி கடன்வழங்கல் தேக்கத்தினூடாக சிறிய மட்டத்திலான நிறுவனங்களுக்கு துணையளிப்பதுடன், இது வங்கியினால் வழங்கப்படும் கடன்களையும் மீள்நிதியளிப்பு திட்டங்களையும் உள்ளடக்குகின்றது. இந்தக் கடன்கள் பல்வேறு துறைகள் முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2023 இல் சமூக அடிப்படையிலான கடன்கள்

	வங்கியினால் நிதியளிக்கப்பட்டவை		மீள்நிதியளிப்பு திட்டங்களூடாக நிதியளிக்கப்பட்டவை	
	கடன்களின் எண்ணிக்கை	நிலுவையிலுள்ள தொகை ரூ. மில்.	கடன்களின் எண்ணிக்கை	நிலுவையிலுள்ள தொகை ரூ. மில்.
விவசாயம்	8,838.0	2,376.0	3,873.0	4,389.4
வர்த்தகம்	485.0	328.4	1,420.0	743.1
நுகர்வு	-	-	24.0	12.3
நிதியியல்	9.0	1.3	62.0	23.1
வீடமைப்பும் ஆதனமும்	11.0	3.5	35.0	6.4
கைத்தொழில்	266.0	70.8	362.0	45.0
ஏனைய பொருளாதார நடவடிக்கைகள்	947.0	139.5	4,626.0	541.3
சேவைகள்	156.0	55.6	145.0	50.1
சுற்றுலாத்துறை	43.0	105.9	5.0	1.2
மொத்தம்	**10,755.0**	**3,080.9**	**10,552.0**	**5,811.9**

உள்ளூர் சமூக ஈடுபாட்டுடனான செயற்பாடுகள்



உள்ளூர் சமூக ஈடுபாட்டுடனான செயற்பாடுகள் GRI 413-1

பிரிவு	தொகை ரூ.'000
கலையும் கலாச்சாரமும்	10,175.0
கல்வி	14,355.0
சூழல்	980.9
ஆரோக்கியம்	7,597.7
ஏனையவை	7,612.2
உப மொத்தம்	**40,720.8**

இவ்வாண்டின்போது, மக்கள் வங்கி உள்ளூர் சமூக ஈடுபாட்டு நடவடிக்கைகளில் ரூபா 40.7 மில்லியனை செலவழித்ததுடன், இது வங்கி கல்வி நடவடிக்கைகளுக்கு செலவழித்த ரூபா 14.4 மில்லியனையும் உள்ளடக்குகின்றது. சூழல் நடவடிக்கைகளுக்கு ரூபா 0.9 மில்லியனை வங்கி செலவழித்ததுடன், ஆரோக்கிய நிகழ்வுகளுக்கு வங்கி ரூ. 7.6 மில்லியனை செலவழித்ததுடன் மீதியானது ஏனைய நடவடிக்கைகளில் செலவழிக்கப்பட்டன.

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு

பாரிய வாடிக்கையாளர் அடித்தளம் மற்றும் ஒரு முன்னணி நிதியியல் சேவைகள் வழங்குநராக, மக்கள் வங்கி சமூகத்தில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றது. வங்கி சமூகங்களின் சமூக பொருளாதார முன்னெற்றத்திற்கு துணைபுரிகின்றது. இது அவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அது செயற்படும் சமூகங்களில் முதலீடு செய்வதுடன் இது வளர்ச்சி மற்றும் மீளெழுச்சிக்கு துணைபுரியும். வங்கி அதன் நிலைபேறுடமைக் கொள்கையினால் வழிநடத்தப்படுவதுடன், இது அதன் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு திட்டங்களினூடாக உள்ளூர் சமூகங்களின் வாழ்வினை மேம்படுத்தும். உள்ளடக்கமான நிதியளித்தலினூடாக வங்கி சமூகத்திற்கு வலுவளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துகின்றது.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் - சமூக மூலதனம்

நிதியியல் அறிவினை மற்றும் வணிக நுண்ணறிவினைக் கட்டியெழுப்புதல் பெண்கள் மற்றும் இளைஞர்களை சமூகத் தலைமைகளாக மற்றும் தொழில்முனைபவர்களாவதனை இயலுமையாக்கியுள்ளது. வங்கியின் நிதியியல் உள்ளடக்கத் திட்டங்கள் நலிவுற்ற மக்களுக்கு நிதியியல் முகாமைத்துவத் திறன்களுக்கும் சேமித்தல் ஆற்றல்களுக்கும் துணைபுரிகின்றது. சமூகரீதியாக பொறுப்புள்ள விதத்தில் வணிகத்தினை நடாத்தும்வேளை, வங்கியனாது கலைகள் மற்றும் கலாச்சாரம், ஆரோக்கியம் மற்றும் கல்வியினை அபிவிருத்திசெய்வதன் மூலம் நலிவுற்ற சமூகங்களை தரமுயர்த்துவதற்கு முயற்சிக்கின்றது.

சந்தைப்படுத்தல் பிரிவானது மக்கள் வங்கியின் கூ.ச.பொ. திட்டங்களை ஒரு மூலோபாயமான விதத்தில் முகாமைப்படுத்துகின்றது. இது வங்கிக்கு சமூகரீதியாக பொறுப்புள்ள வழியினை வடிவமைத்து சமூகம் மற்றும் துறையில் ஒரு சாத்தியமான தாக்கத்தினை மேற்கொண்டு அதன் ஒட்டுமொத்த வணிகநாம நிலைப்படுத்தல் மூலோபாயத்தினை நிரப்புகின்றது.



'மஹாஜன மெஹெவர்'

மக்கள் வங்கியின "மஹாஜன மெஹெவர்" பல்வேறு மட்டங்களில் (தலைமைக் காரியாலயம், கிளை அல்லது நலன்புரி சங்கம்) உருவாகிய கூ.ச.பொ. முன்னெடுப்புகளை ஒரு பொதுவான குடையின்கீழ் கொண்டுவருகின்றது. இந்த திட்டத்தின் கீழ் வங்கியானது தீவிரமாக நலிவடைந்த சமூகத்தின் பிரிவினர்களுக்கு, மிகவும் தொலைதூரமான மற்றும் பின்தங்கிய பாடசாலைகள் மற்றும் சுகாதாரத் துறைக்கு உதவிசெய்கின்றது.

குறைசேவையாற்றப்பட்ட பாடசாலைகளுக்கான சூரிய சக்தியளிக்கப்பட்ட ஓடும் நீர்

2023 இன் போது வங்கியானது, பாடசாலைப் பிள்ளைகளுக்கு குடி நீரை வழங்குவதற்கு சூரிய சக்தியினால் ஓடும் நீரை உருவாக்குவதற்காக சூரியப் பலகங்கள் மற்றும் மின்தொகுப்பிற்கு அப்பாலான மின்கல முறைகளை வழங்குவதன் மூலம் குறைசேவையாற்றப்பட்ட ஏழு பாடசாலைகளுக்கு துணைபுரிவதற்காக தொழில்நுட்பத்தினை பயன்படுத்தியது.

இதனால் நலனடைந்த பாடசாலைகள், எல்லெவெவ முஸ்லிம் வித்தியாலயம், பம்பரே கனிஷ்ட பாடசாலை, தும்பர தமிழ் வித்தியாலயம், கலமுடுவ கனிஷ்ட வித்தியாலயம், கௌரி அம்பால் GTMS, கலுகெலே கனிஷ்ட வித்தியாலயம் மற்றும் பிட்டதெனிய மஹா வித்தியாலயம் ஆகிய அநுராதபுரம், குருணாகலை, இரத்தினபுரி, கண்டி, மன்னார், பதுளை மற்றும் காலி மாவட்டங்களிலிருந்தாகும். இந்த முன்னெடுப்பினூடாக ஏறத்தாழ 2,000 பிள்ளைகளும் ஆசியர்களும் நலனடைந்தார்கள்.

நாளைய புத்தாக்கதாரர்களுக்கு வலுவளித்தல்: இளைஞர் தொழில்நுட்ப திறன் அபிவிருத்தித் திட்டம்


அதன் கூ.ச.பொ. முன்னெடுப்புகளுக்கான அதி நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் மூலோபாய திசையினை மேலும் விரிவாக்குவதில், மக்கள் வங்கி " நாளைய புதுமைப் புனைவாளர்களை வலுவளித்தல்:இளைஞர் தொழில்நுட்பத் திறன் அபிவிருத்தித் திட்டம்" அமுலாக்கல் பங்காளியான சர்வோதய விபூசன உடன் கூட்டிணைந்து ஆரம்பித்தது. இந்த திட்டத்தில் ஈடுபட்ட ஏனைய முக்கிய துறைசார் பங்காளிகள், நிதி அமைச்ச, கல்வி அமைச்சு, இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (SLTC) மற்றும் TRACE சிட்டி ஸ்ரீலங்கா என்பவையாகும்.

இந்தத் திட்டத்திற்கு நிதியளிப்பதன் மூலம் மக்கள் வங்கி, சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வது மாத்திரமன்றி, இலங்கைக்கு சாத்தியமான மாற்றத்திற்கான மற்றும புத்தாக்கத்திற்கான ஒரு வினையூக்கியாக தன்னை நிலைப்படுத்தியுள்ளது. இத்திட்டமானது கணினி விஞ்ஞான டிப்ளோமா திட்டத்திலள்ள ஆற்றல்மிக்க இளைஞர்களுக்கு உதவித்தொகைகளை வழங்கும் நோக்கினைக் கொண்டதாகும். இதன்மூலம் இளைஞர் வேலைவாய்ப்பின்மை, திறன் இடைவெளிகளை நிரப்புதல் மற்றும் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவினை வளர்த்தல் ஆகியவற்றை விளித்துரைக்கின்றது.

இத்திட்டமானது கணினி விஞ்ஞான டிப்ளோமா பயிலும் 15 - 19 இற்கும் இடைப்பட்ட வயதுடைய 100 பாடசாலை மாணவர்களுக்கு உதவித்தொகைகளை வழங்கும். இந்த பாடநெறியானது, நிரலாக்கம், இணைய அபிவிருத்தி, வலையமைத்தல், வரைவியல் மற்றும் கணினி கணிதவியல் போன்ற பல்வேறு கணினி விஞ்ஞான அம்சங்களை உள்ளடக்குகின்றது. இது ஒன்பது மாதங்களை எடுப்பதுடன், NVQ மட்டம் 5 இற்கு சமனானதாகும் என்பதுடன் கணினி விஞ்ஞானத்தில் ஒரு திடமான அடித்தளத்தினை வழங்குகின்றது. இந்தத் தகைமையானது டிப்ளோமா வைத்திருப்பவரை NIBM மற்றும் இலங்கை தொழில்நுட்ப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மட்டத்தினை தொடர்வதனை இயலுமையாக்குகின்றது.

மேலும், திட்டத்தின் முதலாம் வருடம், திட்டத்தினை ஆரம்பித்தல், மக்கள் வங்கி கிளைகளினூடாக பயன்பெறுநர்களை தெரிவுசெய்தல் மற்றும் கணினி விஞ்ஞான டிப்ளோமா திட்டத்தின் ஆரம்பம் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கும். இந்த வருடமானது ஒரு ஹெக்கத்தொன் மற்றும் பட்டமளிப்பு விழாவுடன் நிறைவடையும். வருடம் 2 ஆனது, ஹெக்கத்தொன்னிலிருந்து முதல் 10 செயலாற்றுபவர்களுக்கு நிதியளிக்கப்பட்ட உயர் கல்விக்கான வாய்ப்புக்களுடன் திட்டத்தின் தாக்கத்தினை விரிவுபடுத்துகின்றது.

இத்திட்டத்தில் முதலீடு செய்வதன் மூலம், மக்கள் வங்கி அதன் தொலைநோக்கான நிலைபேறுடைய பெறுமதியினை உருவாக்குதல் மாதிரியுடன் இணைந்திருப்பதுடன் நாடு மற்றும அதன் இளைஞர்கள் நலனடைவதில் ஒரு நீண்ட தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.



சுகாதார சேவைகளை மேம்படுத்துதல்

சுவசெரிய மருத்துவ அவசர ஊர்தியொன்றிற்கான நிதியுதவி

மக்கள் வங்கியானது நாட்டின் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக பல கூ.ச.பொ. முன்னெடுப்புகளை அமுல்படுத்தியுள்ளது. அத்தகைய ஒரு திட்டமாக, "ஒரு மருத்துவ அவசர ஊர்தியினை சுவீகரித்தல்" முன்னெடுப்பின் கீழ் 1990 சுவசெரிய அறக்கட்டளை மூலம் ஒரு 1990 சுவசெரிய மருத்துவ அவசர ஊர்தியினை ஆதரவளித்தது. சுவசெரிய 2016 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது நாடு முழுவதும் ஒரு மருத்துவ அவசர ஊர்தியின் மூலம் இலவசமாக அவசர மருத்துவ உறுதுணையினை வழங்குவதற்காகும்.

மக்கள் வங்கியின் "மஹாஜன மெஹெவர" கூ.ச.பொ. திட்டத்தின் கீழ் இந்த ஆதரவளிப்பானது இலங்கையின் சமூகத்தின் மேம்பாட்டிற்கான தொடர்ச்சியான வங்கியின் அர்ப்பணிப்பின் ஒரு பாகமாக மற்றும் நாட்டின் சுகாதார சேவை அமைப்பிற்கு துணையளிப்பதற்காகவும்.

மேற்கொள்ளப்பட்டது.

மேலாக, வங்கியானது "புனித நினைவுச் சின்னத்தைக் கொண்ட விகாரையின் (ஸ்ரீ தலதா மாளிகாவ) பௌத்த நலன்புரி நிதியம்" போன்ற முன்னெடுப்புகளுக்கு துணைபுரிவதன் மூலம் சமூக நலனுக்கான அதன் அர்ப்பணிப்பினை வெளிக்காட்டுகின்றது. அதன் கிளைகளில் பணம் சேர்த்தல் கல்லாப்பெட்டிகளை வழங்குவதன் மூலம், வங்கியானது தேவையிலுள்ள சமூகங்கள் நலனடைவதை நோக்காகக் கொண்ட தொண்டு முயற்சிகளுக்கான நன்கொடைகளுடன்

வசதியளிக்கின்றது.

மேலும், மக்கள் வங்கி ஏற்றுமதிகளை மேம்படுத்தும், சி.ந.நி, கள் மற்றம் கிராமிய வாழ்வாதரங்களை விருத்திசெய்தல், கூட்டுறவுத் துறைக்கான உறுதுணையினை பலப்படுத்துதல் மற்றும் தொழில்முனைவோருக்கு துணையளிக்கும் நோக்கில், பொருளாதார புத்துயிர்ப்புகளுக்கு துணையளிக்கும் விசேட திட்டங்களை முன்னெடுத்தது. மேலும், வங்கியானது பிராந்திய கடன் அலகுகளுக்கு நிதியியல் உறுதுணையினை வழங்குவதுடன், வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாக ஈடுபடுவதனை இயலுமையாக்குதல், வணிக மூலோபாயங்களில் நிபுணத்துவ ஆலோசனையினை வழங்கல், சொத்து மீள்கட்டமைத்தல், மற்றும் அவர்களின் பொருளாதார மீட்டெழுச்சிக்கு வசதியளிக்கின்றது. இந்த பன்முகமான முயற்சிகளூடாக வங்கி பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பது மாத்திரமன்றி, அது சேவையாற்றும் சமூகத்தினுள் சமூக ஒத்திணைவு மற்றும்

வலுவளித்தலை வளர்க்கின்றது.



டி சொய்சா மகப்பேற்று மருத்துவமனையின் புதுப்பித்தல்

மேலும், மக்கள் வங்கி பொரள்ளையிலுள்ள டி சொய்சா மகப்பேற்று மருத்துவமனையில் பல்வேறு அவசியமான புத்தாக்கங்களின் நிறைவுக்கு ரூபா 3 மில்லியன் செலவில் வசதியளித்தது. இப்புத்தாக்க வேலைகள் உள்நோயாளிக் கூடத்திலுள்ள 120 கட்டில்களுக்கு வண்ணம் பூசுதல், கூரையினை பழுதுபார்த்தல், நடைபாதைகள் மற்றும் உள்நோயாளிக் கூடங்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் நடைபாதைகளில் ஒளிரும் அடையாளங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மேலாக, வங்கி மருத்துவமனைக்கு அவசியமான

உபகரணங்களை கையளித்தது.

மறைமுகமான பொருளாதார தாக்கங்கள்

GRI 203-2

வங்கி அதன் செயற்பாட்டு கோளத்தினுள் பொருளாதாரத்திற்கு சாத்தியமான மறைமுகமான பங்களிப்புகளை வளர்ப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. நாட்டின் முதன்மை நிதியியல் நிறுவனமாக, மக்கள் வங்கி, ஓய்வூதிய பகிர்ந்தளிப்புகள், பல்கலைக்கழக கட்டண கொடுப்பனவுகள், மற்றும் கற்பிப்போர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் போன்றவற்றுக்கு வசதியளிப்பதன் மூலம், பெறுநர்களுக்கு எவ்விதமான செலவுமின்றி, பல்வேறு தன்னலமற்ற

முன்னெடுப்புகளை பொறுப்பேற்றுள்ளது.

எதிர்கால கண்ணோட்டம்

வங்கியின் செயற்பாடானது மக்களுக்கு பாரிய நன்மைகளை உருவாக்குவதனைப் பொறுத்தளவில், சமூக நலன்புரிதல் பாரம்பரியமாக ஒரு பொது வங்கியாக தொடர்ந்தும் வழிநடத்தப்படுகின்றது. பரந்த சமூகத்தினுள்ளான வங்கியின் வேர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகம் ஆகிய இரண்டிற்கும் துணையளிக்கும் நோக்கில் பல சமூக நலன்புரி நடவடிக்கைகளின் வினைத்திறனா விநியோகத்தினை இயலுமையாக்கும் வழிமுறைகளை வழங்குகின்றது. "மஹாஜன மெஹெவர" திட்டமானது எதிர்காலத்தில் அத்தகைய முன்னெடுப்பகளை தொடர்ந்தும்

முன்னெடுத்துச் செல்லும்.



இயற்கை மூலதனம்

இயற்கை மூலதனம் மண், தண்ணீர் மற்றும் அனைத்து ஜீவராசிகளதும், மனிதர்கள் உள்ளடங்கலான், வாழ்வாதாரம் மற்றும் நலனக்கு அவசியமான காற்று போன்ற வரையறையான இயற்கை வளங்களது தேக்கத்தினை உள்ளடக்குகின்றது. இந்த தேக்கத்திலிருந்து நாம் பிரித்தெடுப்பதனை மீள் நிரப்புவதனை உறுதிசெய்தல் தவிர்க்கவியலாததாகும், இது எமது உயிர்வாழ்வானது தங்கியுள்ள மென்மையான சூழலமைப்பின் பாதிப்பினை தவிர்ப்பதற்காகும். எமது பங்காளிகளுக்கு உகப்பாக்கமான சேவைகளை வழங்கும்வேளை, வங்கியினது இந்த வளங்களில் சிலவற்றை தவிர்க்கவியலாது பயன்படுத்துகின்றது. எவ்வாறாயினும், எமது வணிகச் செயற்பாடுகளில் நாம் அவற்றை சிறியதாக்கும், மீள்சுழற்சிசெய்யும் மற்றும் மீள்பயன்படுத்தும் நோக்கிலான மூலோபாயங்களுக்கு முன்னுரிமையளிக்கின்றோம்.

எமது அணுகுமுறை

சூழல் பாதுகாப்பிற்கான எமது அர்ப்பணிப்பானது எமது நிறுவன பண்பாடுகளில் ஆழமாக வேரூன்றியுள்ளதுடன் எமது கொள்கை வரம்புறுகையில் இது தெளிவாகின்றது. ஆரம்பத்திலிருந்தே நாம் பூமியுடன் நெருக்கமாக இணைந்துள்ள கைத்தொழில்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களில், விவசாயம், உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் சமுத்திரம் உள்ளடங்கலாக, முன்னுரிமையளிக்கின்றோம். இந்த மனப்பான்மையானது. எமது செயற்பாடுகளின் அனைத்து அம்சங்களிலும் நிலைபேறுடமையினை ஒருங்கிணைப்பதற்கு வசதியளித்துள்ளது. இது கடன் வழங்கல் கொள்கைகளிலிருந்து, நிர்வாகத் தீர்மானங்கள் வரை, மற்றும் பசுமை கிளைகளை நிறுவுவதிலிருந்து டிஜிட்டல் வங்கியியல் தீர்வுகள் வழங்குவது வரைக்குமாகும். நாம் எமது கார்பன் அடிச்சுவட்டினை சிறுமமாக்குவதற்கு, புதுப்பிக்கத்தக்க வலுவின் கடைப்பிடிப்பினை அதிகரிப்பதற்கு,

எமது பங்காளிகளிடையே சூழல் பாதுகாப்பினை ஆதரிப்பதற்கு இடைவிடாது முயற்சி செய்கின்றோம். வங்கியியல் துறையில் டிஜிட்டல் மயமாக்கலின் முன்னோடி நிலையினூடாக, நாம் ஒரு முன்மாதிரியினை நிறுவியுள்ளதுடன், மற்றவர்களை இதனைப் பின்தொடர்வதற்கு ஊக்கமளிப்பதுடன் எதிர்கால சந்ததிகளுக்கு வங்கியியலில் ஒரு புது யுகத்திற்கான அடித்தளத்தினை வைத்துள்ளோம். ஒரு புத்தாக்கமான நகர்வாக "மஹஜன மெஹெவர" வணிக நாமத்தின் அறிமுகம் காணப்படுவதுடன், இது எமது அனைத்து கூ.ச.பொ, முயற்சிகளையும் உள்ளடக்குவதுடன், இதன் மூலம் கூ.ச.பொ. நடவடிக்கைகளை மக்கள் வங்கியின் வணிக நாமத்தின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாக ஏற்படுத்தியுள்ளது.



முக்கிய சிறப்பம்சங்கள்

20
பசுமை கிளைகள் சூரிய சக்தியினால் வலுவளிக்கப்பட்டுள்ளன

3,318cu.m.
இனால் தண்ணீர் பாவனை குறைக்கப்பட்டுள்ளது

571 tonCo$_2$e
இனால் மொத்த ப.இ.எ. உமிழ்வு குறைக்கப்பட்டுள்ளது



பொருண்மையான கருப்பொருள்

- பொறுப்பான கடன் வழங்கல்
- வணிகங்களில் சூழல் தாக்கம்

சவால்கள்

- போக்குவரத்து நெருக்கடி மற்றும் எரிபொருள் பற்றாக்குறையானது ஊழியர்களுக்கு வங்கி போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டியிருந்ததனால் அதிகரித்த புதைபடிவ எரிபொருளின் பயன்பாடு
- வேலை நிறுத்தங்கள் மற்றும் உயர்வடையும் செலவுகளினால் பசுமைக் கிளை கட்டிடங்களின் நிர்மாணத்தில் தாமதங்கள்

வாய்ப்புக்கள்

- வாடிக்கையாளர்களை டிஜிட்டல்ரீதியாக சேர்த்துக்கொள்வதில் அதிகரித்த பயன்பாடு
- நிர்வாகம், நேர்காணல்கள், கூட்டங்கள் (உள்ளக மற்றும் வெளிவாரி) பிரயாணக் கட்டுப்பாடுகளின் காரணமாக இயங்கலையில் நடாத்தப்பட்டன
- டிஜிட்டல் மயமாக்கலினூடாக உள்வாரியான தாள் பாவனையில் மேலதிக குறைப்பு



ஐ.நா. நி.அ.இ. களுக்கான பங்களிப்பு

சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்

வங்கி அதன் சூழல் அரிப்பணிப்பின் ஒரு பகுதியாக நீரைப் பாதுகாக்கின்றது

மலிவான மற்றும் தூய்மையான வலு

வங்கிக் கிளை கட்டிடங்களை பசுமையாக்குதல்

நிலைபேறுடைய நகரங்கள் மற்றும் சமூகங்கள்

தொலைதூர அமைவிடங்களிலுள்ள நலிவுற்ற பாடசாலைகளுக்கு சுத்தமான குடி நீர் மற்றும் சூரிய வலுவினை வழங்கும் சமூக திட்டங்களினூடாக வங்கி நிலைபேறுடைய சமூகங்களை ஊக்குவிக்கின்றது.

பொறுப்புள்ள நுகர்வு மற்றும் உற்பத்தி

டிஜிட்டல் தீர்வுகளை கடைப்பிடிப்பதன் மூலம் தாள் பாவனையினை சிறுமமாக்குதல் மற்றும் அனைத்து கட்டிடங்களிலும் மின்சாரப் பாவனையினை பாதுகாத்தல் என்பவற்றின் மூலம் வங்கி

காலநிலை செயற்பாடு

வங்கி அதன் GHG உமிழ்வுகளை கணக்காணிக்கின்றது

பெறுமதி உருவாக்கம்




இவ்வாண்டின்போதான தாள் மீள்சுழற்சி

4,432 Kg



7.12 GJ வலு

ஊழியர் ஒருவருக்கான செறிவு



சூரிய சக்தியை அறிமுகப்படுத்துவதற்கான எதிர்கால திட்டங்கள்

2024 அளவில் 50 கிளைகள்

மூலதன இணைப்புகள்



நிதியியல் மூலதனம்

அனைத்து கிளைகள் முழுவதும் புதுப்பிக்கத்தக்க வலுவிற்கான மாற்றமானது மின்தொகுப்பிலிருந்தான மின் பாவனையினை குறைக்கின்றது. விசேடமாக, மின் கட்டணங்களிலான கடும் அதிகரிப்புகளினால், சூரிய வலுவிற்கான நகர்வானது எதிர்காலத்தில் நிதியியல் நன்மைகளை கொண்டுவரும். தண்ணீர் மற்றும் தாள் பாவனைகளிலான குறைப்பின் மூலம் அதேபோன்ற நலன்களை எதிர்பார்க்கலாம்.



மனித மூலதனம்

சூழல்ரீதியாக பொருத்தமான கூ.ச.பொ. திட்டங்கள் அனைத்து கிளைகளிலும் பிராந்தியங்களிலும் ஊக்கப்படுத்தப்படுவதுடன், இதனால் ஊழியர்கள் நாடு முழுவதும் அவர்களது சொந்த சமூகத்தினுள் நிலைபேறுடமை கொடியினை பிடிக்கலாம்.

மின்சார நுகர்வினை சிறுமமாக்குவதற்காக மின்விசிறிகள், காற்றுப் பதனாக்கி, மற்றும் ஒளியேற்றல்களின் பயன்பாட்டினை முகாமைப்படுத்துமாறு ஊழியர்கள் வேண்டப்படுகின்றார்கள்.



அறிவுசார் மூலதனம்

'மஹஜன மெஹெவர" வணிக நாமத்தின் ஆரம்பமானது வங்கியின் ஒட்டுமொத்த வணிகநாம் பிரதிமையினை மேம்படுத்தியுள்ளது.



உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

பகல் வெளிச்சத்தினை உகப்பாக்கும் வேளை சூரிய சக்தி மற்றும் LED ஒளியேற்றல்களை பயன்படுத்தி வங்கியின் கிளைகளை பசுமை கட்டிடங்களாக நாம் தொடர்ச்சியாக மாற்றுகின்றோம். நாம் இலங்கையின் பசுமை கட்டிடச் சபையின் பிளாட்டினம் அங்கத்தவர், மற்றும் அனைத்து புதிய கட்டிடங்களும் அவற்றின் பசுமை SL தரப்படுத்தல் முறையினை சந்திக்கும் விதமாக கட்டப்படுகின்றன



சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

திரவத்தன்மை பிரச்சனை மற்றும் உயர் பணவீக்கத்தின் காரணமாக கடன் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்ட வருடத்தில், சூழல் ரீதியாக பொருத்தமான மற்றும் நிலைபேறுடைய திட்டங்களுக்கு நிதியளித்தல் கிடைக்கப்பெற்றது. இது மத்திய கலாச்சார நிதியத்துடன் கூட்டாக பொறுப்பேற்ற இடிக்கட் தீவின் மூலம் நாடு பூராவுமுள்ள சுற்றுலா இடங்களுக்கு உள்நுழைவு டிக்கட்டுகளை நேரலையாக வழங்கப்பட்டன.

இயற்கை மூலதனம்

ஒரு சேவை வழங்குநராக சூழலிலான வங்கியின் தாக்கம் வரையறையானது ஏனெனில் வங்கி நேரடியாக சூழல் மாசடைவதில், அல்லது சூழல் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. மேலாக, வங்கி அதன் கடன் வழங்கல்களில் நேரடியான சூழல் தாக்கங்களை சிறுமமாக்குவதற்கு அவற்றை மதிப்பிடுவதில் முன்னெச்சரிக்கையினை எடுப்பதுடன், இது அதன் வாடிக்கையாளர்களினால் சூழல் நன்மையடைக்கூடிய மற்றும் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை ஊக்குவிப்பதனாலாகும். வங்கி அதன் கார்பன் அடிச்சுவட்டினை குறைப்பதற்கும் புதுப்பிக்கத்தக்க வலுப் பாவனையினை அதிகரிப்பதற்கும், அதன் பங்காளிச் சமூகங்களிடையே அதன் ஊடாட்டங்கள் மற்றும் கூ.ச.பொ. திட்டங்களினூடாக கடும் முயற்சி செய்கின்றது. மிகவும் வினைத்திறனான அணுகுமுறைகளில் ஒன்றாக தொலைதூர அமைவிடங்களிலுள்ள நலிவுற்ற பாடசாலைகளுக்கு சுத்தமான குடி நீர் மற்றும் சூரிய வலுவினை வழங்கும் வங்கியின் சமூகச் சேவை திட்டங்களாகும். இந்த நடவடிக்கைகளின் விபரங்களுக்கு சமூக மூலதன அத்தியாயத்தினை தயவுசெய்து பார்க்கவும்.

எனவே, அனேகமான சந்தர்ப்பங்களில் வங்கியின் ஒட்டுமொத்த சூழல் தாக்கமானது இயற்கை வளங்களை நுகர்தல் நோக்கி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது நாடுபூராவுமான வங்கியின் பாரிய தொழிற்சேனையின் காரணமாக தவிர்க்கமுடியாததொன்றாகும். மறுபுறத்தில், மக்கள் வங்கி டிஜிட்டல் மயமாக்கலில் முன்னணியில் இருப்பதுடன், இது குறைந்த தாள் பாவனை மற்றும் குறைந்த விரையத்தினை விளைவித்துள்ளது.

பொறுப்பான நிதியளிப்பும் பசுமை நிதியளிப்பும்

ஒரு நிதியியல் சேவை வழங்குநராக, தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கடன் வழங்குதல் வங்கியின் பிரதான நடவடிக்கைகளுள் ஒன்றாகும். சூழல் பாதகாப்பிற்கு துணையளிப்பதற்காக, வங்கி கடன் வழங்கும் செயன்முறையின் ஒரு பகுதியாக சூழல் மதிப்பீட்டினை நடாத்துகின்றது. மேலாக, கடன் வழங்குவதற்கு முன்னர், CEA இன் உரிமங்களுடன் மற்றும் ஏனைய பொருத்தமான சூழல் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு மதிப்பிடப்படுகின்றன. கடன் அங்கீகரித்தல் செயன்முறையில் சூழல் தோழமையான கட்டுப்பாடுகள் வங்கியின் பகுதியில் பொறுப்பான நிதியளித்தலுக்கு துணைசெய்வதுடன், வங்கியின் வாடிக்கையாளர்களிடையே சிறந்த சூழல் விழிப்புணர்வினை ஊக்கப்படுத்துகின்றது.

சூரிய சக்தி அமைப்புமுறைகளின் கொள்வனவு மற்றும் கலப்பான மற்றும் மின்சார வாகனங்களின் கொள்வனவு போன்ற சூழ்நிலையில் தோழமையான முன்னெடுப்புகளுக்கு வங்கி குறிப்பிட்ட கடன் திட்டங்களை வழங்குகின்றது.

வங்கியின் சூழல் கொள்கையானது அதன் அனைத்து நடவடிக்கைகளிலும் சூழல்ரீதியான பொறுப்பினை ஒருங்கிணைப்பதற்கு முயற்சிக்கின்றது.

பசுமை செயன்முறைகள்

தாள்களற்ற செயற்பாடுகள்:

- ATMs, CDMs மற்றும் KIOSK களின் பயன்பாடானது கார்பன் அடிச்சுவட்டினைக் குறைக்கும்
- தாள்களற்ற கணக்கு திறத்தல், இ-கூற்றுக்கள் மற்றும் கடன் செயல்முறையாக்கல்
- இயங்கலை மற்றும் மொபைல் வங்கியியல் முறைகள்
- வரவு மற்றும் கடன் அட்டைகளின் பயன்பாடு

வாடிக்கையாளர்கள்: சேமிப்புக்களுக்கான பசுமை வங்கியியல் பிரச்சாரங்கள்:

- தாள்களற்ற, விரைவான வங்கிக் கணக்கு திறத்தல் மற்றும் ATMs, CDMs போன்றவற்றின் பயன்பாடு
- தாள்களுக்கு மாற்றீடாக இ-கூற்றுக்கள்
- SMS மற்றும் இணையத்தளமூமான பிரச்சாரம்
- காகப் பயன்பாடற்ற சமூகத்தினை ஊக்கவிப்பதற்கு வரவு அட்டைகள் பாவனையினை ஊக்குவித்தல்
- புதிய வாடிக்கையாளர்களுக்கு விரைவான வங்கியியல்

வாடிக்கையாளர்கள்: கடன்களுக்கான பசுமை வங்கியியல் பிரச்சாரங்கள்

- மின்சார / கலப்பு வாகனங்கள், சூரிய சக்தி அமைப்புமுறைகளின் கொள்வனவிற்கு துணையளிப்பதற்காக குறைந்த வட்டியில் பசுமைக் கடன்கள்
- சூழல் தோழமையான சக்தி மூலங்களை ஊக்குவித்தல்
- சூழல் தோழமையான நடைமுறைகள் / செயன்முறைகளை ஊக்குவித்தல்



ஊழியர்கள்

- சூழல் நிலைபேறுடமையின் நன்மைகளில் ஊழியர்களை கற்பித்தல்
- சூரிய சக்தி அமைப்புமுறைகளை கொள்வனவு செய்வதற்கு சலுகையான கடன்களை பெறுவதற்கு, சூழல் தோழமையான கட்டுமான முறைகளை மற்றும் மின்சார / கலப்பின வாகனங்களை பயன்படுத்துவதற்கு ஊழியர்களை ஊக்கமளித்தல்.
- ஊழியர் கடன் திட்டத்தின் கீழ் மின்கார அல்லது கலப்பு வாகனத்தை மாத்திரமே கொள்வனவு செய்யும் வங்கியின் கொள்கை
- மின்னஞ்சல் மற்றும் டிஜிட்டல் ஆவணப்படுத்தலின் பயன்பாட்டினை ஊக்கமளித்தல்

சமூகம்

- வங்கியின் செயற்பாடுகளிலிருந்து கார்பன் உமிழ்வுகளை சிறுமமாக்குதல்
- கார்பன் முகாமைத்தவம் மற்றும் கார்பன் வர்த்தக நடைமுறைகளை கொண்டுவருதல்
- சூழல் நிலைபேறுடமையில் சமூகத்தினை கற்பித்தல்
- மர நடுகை திட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் கார்பன் வரவுகளைப் பெறுதல்

கட்டிடங்கள்

- வங்கியின் அனைத்து நிர்மாணிப்புகளுக்கும் பசுமை கட்டிடங்கள் கொள்கை - புதிய கட்டிடங்கள் LEED/ GREENSL வழிகாட்டிகளைப் பின்பற்றுதல் மற்றும் கட்டிட ஒப்பந்ததாரர்கள் LEED/ GREENSL/ CIOB Green Mark சான்றளிப்புகளை பின்பற்றல்
- தெரிவுசெய்யப்பட்ட கட்டிடங்களை கார்பன் நடுநிலையாக சான்றளிக்கப்பட்டுள்ளன |
- 20 வங்கிக் கட்டிடங்கள் சூரிய சக்தியினால் இயங்குகின்றன

பசுமை கிளைகள் நோக்கிய முன்னேற்றம்

கட்டிடத்தின் விபரம்	அமைவிடம்	பசுமை நிலைமை	கட்டுமான நிலைமை	பசுமை சான்றளிப்பு எதிர்பார்க்கப்படும் திகதி
பிராந்திய தலைமைக் காரியாலயம் மற்றும் வங்கிக் கிளைக் கட்டிடம்	மாத்தளை	பசுமை கட்டிட கருத்தமைவுகளின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளது	பசுமை கட்டிடச் சபையின் GREENSL தரப்படுத்தல் முறையின் வழிகாட்டிகளுக்கு அமைவாக நடந்த வண்ணமுள்ளது.	2024
பிராந்திய தலைமைக் காரியாலயம் மற்றும் வங்கிக் கிளைக் கட்டிடம்	யாழ்ப்பாணம்	பசுமை கட்டிட கருத்தமைவுகளின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளது	நடந்த வண்ணமுள்ளது; பசுமை கட்டிடச் சபையின் GREENSL தரப்படுத்தல் முறையின் வழிகாட்டிகளைப் பின்பற்றி கட்டமைப்பு நிறைவுசெய்யப்பட்டது. எஞ்சிய நிர்மாணம் 2022 இல் தொடங்கியது, பசுமை கட்டிடச் சபையின் GREENSL தரப்படுத்தல் முறையின் பிரகாரம் தொடர்கின்றது.	2024
பிராந்திய தலைமைக் காரியாலயம் மற்றும் வங்கிக் கிளைக் கட்டிடம்	கேகாலை	நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சூழல் மற்றும் நிலத்தோற்ற பிரிவின் வழிகாட்டிகளின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டு திட்டமிடப்பட்டது	நகர அதிகாரசபையின் பசுமை கட்டடி தரப்புடுத்தல் முறையினை சந்திப்பதற்கு நடந்த வண்ணமுள்ளன.	2024
மக்கள் வங்கிக்கான காரியாலய அபிவிருத்தி	இல 374, கலாநிதி. கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை கொழும்பு 2	பசுமை கட்டிட கருத்தமைவுகளின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளது	பசுமை கட்டிடச் சபையின் GREENSL தரப்படுத்தல் முறையின் வழிகாட்டிகளுக்கு அமைவாக நடந்த வண்ணமுள்ளது.	2025
ஊழியர் பயிற்சி மற்றும் வதிவிட மத்திய நிலையம்	பாசிக்குடா	பசுமை கருத்தமைவுகளைப் பிரயோகித்து, சூரிய வலு, வலு செயற்திறனான ஒளி பொருத்திகள், தண்ணீர் செயற்திறனான சுத்திகரிப்பு பொருத்திகள், இயற்கை வெளிச்சம் ஆகியவற்றினைப் பயன்படுத்தி, நிலத்தோற்றப்படுத்தலுக்காக பண்படுத்தப்பட்ட நீர் ∴ கழிவு நீரின் மீள்பாவனை, மழை நீரை தரைக்கு மீள்விடுதல் ஆகியவற்றுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.	நிறைவுசெய்யப்பட்டது	2024
பிராந்திய தலைமைக் காரியாலய கட்டிடம்	பிரதான வீதி, காலி	பசுமை கட்டிட கருத்தமைவுகளின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளது	நடந்தவண்ணமுள்ளது	-
திட்டமிட்டுள்ள கிளைக் கட்டிடங்கள்	தம்புத்தேகம, திருகோணமலை, பதுரலிய, மாங்குளம், கிண்ணியா, கல்முனை, கடவத்த, மெதிரிகிரிய	பசுமை கட்டிட கருத்தமைவுகளின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளது	நடந்தவண்ணமுள்ளது	-

மக்களின் பசுமைத் துடிப்பு

இதன் குறிக்கோள் வங்கியின் செயற்பாடுகளில் சூழல் தாக்கத்தினை கண்காணித்தல் மற்றும் நவீன நிலைபேறுடைய வங்கியியல் நடைமுறைகள் பற்றி ஊழியர்களை கற்பிப்பதன் மூலம் இந்த விளைவுகளை சிறுமமாக்குதல். இந்த முன்னெடுப்புகள் பற்றி வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்களிடையே விழிப்புணர்வினை உருவாக்குவதிலும் இது ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் பரவலான சமூகம் பூராவும் நிலைபேறுடைய வங்கியியல் நடைமுறைகள் பற்றி பரப்புதல்.

அனைத்து கிளைகள் மற்றும் பிராந்தியங்களில் நிலைபேறுடமை அணிகள் நிறுவப்பட்டுள்ளதுடன் இது மக்களின் பசுமைத் துடிப்பில் பங்கேற்று சூழல் முன்னெடுப்புகளை முன்கொண்டு செல்வதற்காகும்.

எமது கார்பன் அடிச்சுவட்டினைக் குறைத்தல்

2019 இல் நிலைபேறுடைய எதிர்கால குழுமத்தினால் ஆசியாவிலேயே முதலாவதாக சான்றளிக்கப்பட்ட அரச உடைமை வங்கியாக, மக்கள் வங்கியானது வலுச் செயற்திறன், புதுப்பிக்கத்தக்க வலுவில் முதலீடு செய்தல் மற்றும் கார்பன் வரவுகளை கொள்வனவு செய்தல் என்பவற்றை அதிகரித்துள்ளது.

உமிழ்வுகள் முகாமைத்துவம்

வங்கியின் போக்குவரத்து வாகனத்தொகுதி மற்றும் வணிகப் பிரயாணங்களின் ளரிபொருள் பாவனை மற்றும் உமிழ்வுகள் சிறுமமாக்கப்பட்டுள்ளன. இது வினைத்திறனான செல்வழி திட்டமிடல், பசுமை வாகனங்களின் பயன்பாடு மற்றும் பொருட்களின் தொகைப் போக்குவரத்து என்பவற்றினூடாக அடையப்பெற்றது.

அதன் உமிழ்வுகளை முகாமைப்படுத்தல் நோக்கிய வங்கியின் கடப்பாட்டினை வெளிப்படுத்துவதில், வங்கி பி - எட்வான்சி சேர்ட்டிவிகேச்ன லங்கா பிரைவேட் லிமிட்டட்டிடமிருந்து 2023 ஆம் ஆண்டிற்கு ISO 14064-1:2018 சான்றளிப்பினை பெற்றது.

இயற்கை மூலதனம்

ISO 14064-1:2018 இற்கான சான்றளிப்பு

அறிக்கையிடப்படும் காலம்:	1 ஜனவரி 2023 முதல் 31 டிசம்பர் 2023 வரை
நிறுவனம்:	மக்கள் வங்கி, இலங்கை
கூற்றின் இலக்கம்:	SL/PB/20240130
வழங்கப்பட்ட திகதி:	09.02.2024
உறுதிமொழியின் மட்டம்:	நியாயமானது
மொத்த உமிழ்வுகள்:	3795.41 tonnes of CO2e
நேரடி உமிழ்வுகள்:	316.28 tonnes of CO2e
வலு மறைமுகமான உமிழ்வுகள்:	960.52 tonnes of CO2e
ஏனைய மறைமுகமான உமிழ்வுகள்:	2518.61 tonnes of CO2e
உயிர்வேதியியல் உமிழ்வுகள்:	-


B-ADVANCY

Certificate

VERIFICATION STATEMENT OF GREENHOUSE GAS

B-Advancy Certification Lanka Private Limited

(No 415, Orion City Shopping Complex, Elvitigala Mawatha, Colombo 08, Sri Lanka)

attests that the GHG inventory reported by (3rd party verification)

People's Bank - Head office

Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo 02

for organizational boundary

Operationally Controlled Business Operations in the Head Office of People's Bank

has been verified in accordance with ISO 14064-3:2019 as meeting the requirements of

ISO 1464-1:2018

Total Emissions	3795.41 tonnes of CO_2e	Reporting period	: 1st Jan 2023 to 31st Dec 2023
Direct Emissions	316.28 tonnes of CO_2e	Level of assurance	: Reasonable
Energy Indirect Emissions	960.52 tonnes of CO_2e	Statement Number	: SL/PB/20240130
Other Indirect Emissions	2518.61 tonnes of CO_2e	Date of Issue	: 09.02.2024
Biogenic Emissions	-		

Authorized Signature

ADVANCING EXCELLENCE™

ப.இ.வா. (GHG) உமிழ்வுகளை கண்காணித்தல்

மக்கள் வங்கியின் சூழல் நிலைபேறுடமை கூற்றானது சூழல்ரீதியாக பொறுப்பான செயற்பாடுகள் நோக்கிய ஒரு கடப்பாட்டினை மேற்கொள்வதுடன், உகப்பாக்கமான வலு, விரயம் மற்றும் வளங்கள் முகாமைப்படுத்தலுக்கு இட்டுச்செல்லும் எமது உற்பத்தி கருவிகள் மற்றும் சேவைகளின் வினைத்திறனை அதிகரிப்பதனூடாக வங்கியின் ஒட்டுமொத்த ப.இ.வா. (பசுமை இல்ல வாயு) உமிழ்வுகளை குறைப்பதனை உள்ளடக்குகின்றது.

எனவே, வங்கியானது ப.இ.வா. உமிழ்வுகளை வருடாந்தம் கண்காணிப்பதுடன் 2023 இல் மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்திற்காக 2023 பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் கையிருப்பு அறிக்கையானது தொகுக்கப்பட்டது. ப.இ.வா. கையிருப்பு அறிக்கையினை தயாரிப்பதில் மக்கள் வங்கியானது ISO 14064 – 1:2018 வழிகாட்டிகளுடன் இணைந்துள்ளதுடன் அறிக்கையினை அதன் பங்காளிகள் பார்வையிடலாம். மக்கள் வங்கியின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ப.இ.வா. வெளிப்படுதல்களை துல்லியமாக மதிப்பிடுவதன் மூலம் வங்கியானது ப.இ.வா. உமிழ்வுகளை குறைப்பதனை தொடரலாம்.

ப.இ.வா. குறைத்தல் மூலோபாயங்கள்

- டங்ஸ்டன் மின்குமிழ்களை LED குமிழ்களினால் மாற்றீடு செய்தல், பழைய காற்றுப் பதனாக்கிகளை இன்வெர்டர்களுடன் மாற்றீடு செய்தல் ஆகியவற்றிற்கான செயற்பாடுகளை அமுலாக்குதல் வங்கியின் வலுச் செயற்திறனை அதிகரிக்கும்.
- கசிவுகளை தவிர்ப்பதற்காக வங்கியானது CO2 தீ அணைப்பான்களை கண்காணிக்கின்றது.
- வங்கியின் போக்குவரத்து நடவடிக்கைகளில் இருந்து ப.இ.வா. உமிழ்வுகளை சிறுமமாக்குவதற்கு கம்பனிக்கு சொந்தமான வாகனங்களுக்கு ஒரு செயற்திறனான செல்வழி திட்டமிடல் முறையினை வங்கி நிறுவியுள்ளது.
- விரயத்தினை சிறுமமாக்குவதன் மூலம் வங்கியின் கார்பன அடிச்சுவட்டினை குறைப்பதற்கு, வங்கியானது அதன் வங்கியியல் செயற்பாடுகளில் தாள் பயன்பாட்டினை குறைப்பதற்கு அனைத்து முன்னெடுப்புகளையும் எடுத்துள்ளது.
- சுற்றுச்சூழல் பூங்காக்களை பராமரிப்பதன் மூலம் வங்கியானது ஒரு புத்தாக்கமான நிலைபேறுடைய செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளது.

நிலைபேறுடமை நோக்கிய ஏனைய முன்னெடுப்புகள்

- வலுப் பாதுகாப்பு மற்றும் மின்சாரம் மற்றும் தண்ணீர் பாவனையின் குறைப்பில் கல்வி மற்றும் விழிப்புணர்வு
- வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் / இயங்கலை வங்கியியல் வசதிகளை ஊக்குவிக்கின்றது.
- வங்கியானது அதன் உணவு விரயத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

ப.இ.வா. உமிழ்வுகளை இனங்காண்பதற்கான வரன்முறைகளை தீர்மானிப்பதற்கான கொள்கைகள் மற்றும் அதன் செயற்பாட்டுடன் இணைந்த அகற்றல் வகைகள்.

- பொருத்தம்: கருதப்படும் பயனாளர்களின் தேவைகளைச் சந்திப்பதற்காக எந்த மறைமுகமான உமிழ்வுகள் அல்லது அகற்றல்கள் தெரிவுசெய்யப்படல் வேண்டும் என்பதனை கருத்திலெடுத்தல் (உம். வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், முதலீட்டாளர்கள், அரசாங்கங்கள், NGOs.) ஒன்றில் அவர்கள் சுயமாக அல்லது ஏனைய வளங்களுடன் கூட்டிணைந்து ஆகும்.
- பூரணத்துவம்: கையிருப்பானது அனைத்து பொருத்தமான மூலங்களையும் உள்ளடக்குவதற்காக கையிருப்பில் எந்த மறைமுகமான உமிழ்வுகள் மற்றும் அகற்றல்கள் கருத்தில் கொள்ளல்.
- நிலைத்தன்மை: பயனாளர் ஒரு அர்த்தமுள்ள ஒப்பிடல்களை மேற்கொள்வதற்கு மறைமுகமான உமிழ்வுகள் மற்றும் அகற்றல்கள் அவசியமானதா என கருதுவதற்கு (உம். ப.இ.வா. தொடர்பான தகவல் கையிருப்பினுள்).
- துல்லியம்: கையிருப்பு கூட்டுத்தொகைகள் உறுதியின்மைகளிலிருந்து நியாயமாக விலகியிருப்பதற்கான அவசியமானது, மறைமுக உமிழ்வுகள் மற்றம் அகற்றல்களின் உள்ளடக்கமானது, சுயமாக அல்லது ஏனைய மூலங்களுடன் கூட்டாக, கருத்திலெடுக்கப்படுகின்றது.
- வெளிப்படைத்தன்மை: மறைமுகமான உமிழ்வுகள் மற்றும் அகற்றல்கள், வெளிப்படுத்தல் மற்றும் நியாயப்படுத்தல் இன்றி, நீக்கப்பட்டிருப்பதானது உத்தேசித்த பயனாளர்கள் நியாயமான நம்பிக்கையுடன் தீர்மானங்கள் மேற்கொள்வதனை தடுக்கின்றதா என கருதுதல்.

குறிப்பிடத்தக்க உமிழ்வுகளை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் வரன்முறை

- பருமன்: உமிழ்வுகள் அல்லது அகற்றல்கள் பருமன்ரீதியாக கணிசமாயிருப்பதாக அனுமானித்தல்.



மக்கள் வங்கியின் சூழல் நிலைபேறுடமை கூற்றானது சூழல்ரீதியாக பொறுப்பான செயற்பாடுகள் நோக்கிய ஒரு கடப்பாட்டினை மேற்கொள்வதுடன் இது ஒட்டுமொத்த ப.இ.வா. உமிழ்வுகளை குறைப்பதனை விளைவிக்கும்.

- செல்வாக்கின் மட்டம்: உமிழ்வுகள் மற்றும் அகற்றல்களை கண்காணித்து குறைப்பதற்கான ஆற்றலினை நிறுவனம் எந்த அளவிற்கு கொண்டுள்ளது (உ.ம். வலுச் செயற்திறன், சுற்றுச்சூழல் வடிவமைப்பு, வாடிக்கையாளர் ஈடுபாடு, குறிப்பாணை)
- இடர் அல்லது வாய்ப்பு: இடருக்கான நிறுவனத்தின் வெளிப்பாட்டிற்கு பங்களிக்கும் உமிழ்வுகள் அல்லது அகற்றல்கள் (உ.ம். நிதியியல், முறைமைப்படுத்தல், வழங்கல் சங்கிலி, கருவி மற்றும் வாடிக்கையாளர், வழக்காடல்கள், நற்பெயர் இடர்கள்) அல்லது வணிகத்திற்கான அதன் வாய்ப்புக்கள்(உ.ம். புதிய சந்தை, புதிய வணிக மாதிரி)
- துறை குறிப்பிடப்பட்ட வழிகாட்டி: துறை குறிப்பிட்ட வழிகாட்டிகளின் மூலம் வழங்கப்படுகின்றவாறு, ப.இ.வா. உமிழ்வுகள் வணிகத் துறையினால் கணிசமானதாக கருதப்படுதல்.
- புற ஒப்படைப்பு: புற ஒப்படைப்பு நடவடிக்கைகளிலிருந்து பொதுவாக மைய வங்கியியல் நடவடிக்கைகள் விளைகின்ற உமிழ்வுகள் மற்றும் அகற்றல்கள்.
- ஊழியர் ஈடுபாடு: ஊழியர்களை வலுவின் பாவனையினை குறைப்பதறகு ஊக்கமளிக்கும் உமிழ்வுகள் அல்லது கால நிலை மாற்றம் தொடர்பான கூட்டு முயற்சியினை கூட்டமைத்தல் (உ.ம். வலுப் பாதுகாப்பு ஊக்கத்தொகைகள், வாகனப் பொதுபாவனை, உள்வாரியான கார்பன் விலையிடல்).

வகை 1 - நேரடியான உமிழ்வுகள் மற்றும் அகற்றல்கள்

- காத்திருப்பு மின் இயற்றிக்கான டீசல்
- LPG
- காற்றுப் பதனாக்கிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளிலிருந்து தப்பியோடும் ப.இ.வா. உமிழ்வுகள்
- தீ அணைப்பான்களிலிருந்து தப்பியோடும் உமிழ்வுகள்
- கம்பனிக்குச் சொந்தமான வாகனங்கள்
- கம்பனியினால் கட்டுப்படுத்தப்படும் வாகனங்கள்

வகை 2 - இறக்குமதி செய்யப்பட்ட வலுவிலிருந்து மறைமுகமான உமிழ்வுகள்

- மின்தொகுப்பிலிருந்து கொள்வனவு செய்யப்படும் மின்சாரம்

வகை 3 - போக்குவரத்திலிருந்து மறைமுகமான உமிழ்வுகள்

- கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்
- வணிக வான் பயணம்
- ஊழியர் போக்குவரத்து

பசுமை இல்ல வாயு (ப.இ.வா.) கையிருப்புச் சுருக்கம் 2023 GRI 305-1, 305-2, 305-3

நோக்கெல்லை	உமிழ்வு மூலங்கள்	ப.இ.வா. உமிழ்வுகள் (தொன்கள்)			மொத்த உமிழ்வு
		CO_2	CH_4	N_2O	$tonCO_2e$
நோக்கெல்லை 1 நேரடியான உமிழ்வு	நிலையான கனற்சி	27,046.60	0.73	0.12	27.10
	அசையக்கூடிய கனற்சி	27,2351.60	14.41	15.40	277
	தப்பியோடும் உமிழ்வுகள்	12,347.00	-		12.35
	நோக்கெல்லை 1: மொத்தம்	311.75	0.02	0.02	316.28
நோக்கெல்லை 2 மறைமுகமான உமிழ்வு	கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரம்	96,0519.06			960.52
	நோக்கெல்லை 2: மொத்தம்				
நோக்கெல்லை 3 ஏனைய மறைமுகமான உமிழ்வு	கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்	136.67	0.01	0.01	0.14
	வணிகப் பிரயாணம் - வான்	34,888.58	2.60	174.48	81.20
	ஊழியர் போக்குவரத்து	845,820.09	1,438.07	5,482.54	2,338.96
	நோக்கெல்லை 3: மொத்தம்	880.85	1.44	5.657	2,420.30
ஏனைய மறைமுகமான உமிழ்வு	செலுத்துகை மற்றும் விநியோகித்தல் நட்டம்	95,667.70			95.67
	NWSDB இனால் நீர் வழங்கல்	2,784.56			2.78
	வகை 6: மொத்தம்	98.45			98.45
மொத்த உமிழ்வுகள்		**2,251.56**	**1.46**	**5.67**	**3,795.41**

ஊழியர் ஒருவருக்கான ப.இ.வா. உமிழ்வின் செறிவு 2023 இல் 5.39 tonCO2e, 2022 இன் 5.9 tonCO2e உடன் ஒப்பிடும்போது. GRI 305-4

அறிக்கையிடப்படும் ஆண்டிற்கான ப.இ.வா. உமிழ்வானது 2022 உடன் ஒப்பிடும்போது மொத்த உமிழ்வில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. அது 4,366 tonCO2e இலிருந்து 3,795.41 tonCO2e ஆக குறைந்துள்ளது. GRI 305-5

இயற்கை மூலதனம்

நேரடி (நோக்கெல்லை 1) ப.இ.வா. உமிழ்வுகள் GRI 305-1

a.	மொத்த நேரடி (நோக்கெல்லை 1) ப.இ.வா. உமிழ்வுகள் மெட்ரிக் தொன்களில் CO_2 ஒத்தவை	• மொத்த எரிபொருள் பாவனை(தலைமைக் காரியாலய டீசல் மின்இயற்றி - டிசம்பர் 2023 வரைக்கும்) 5800 லீட்டர்கள் CO_2 உமிழ்வு/ வருடம்= 16,053.7 kg (16.1 தொன்)
b.	கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட வாயுகள்; இவையா CO_2 , CH_4 , N_2O, HFCs, PFCs, SF_6 , NF_3 அல்லது அனைத்துமா.	• மொத்த காற்றுப்பதனாக்கி குளிர்சாதனம் R22,R410 -33kG (2022 தரவுகளின் அடிப்படையில்) CO_2 உமிழ்வு/ வருடம்= 68,904 kg (68.9 தொன்)

வலு மறைமுகமானது (நோக்கெல்லை 2) ப.இ.சா. உமிழ்வுகள் GRI 305-2

a.	மொத்த அமைவிட அடிப்படையிலான வல எதிர்மறையானது (நோக்கெல்லை 2) ப.இ.வா. உமிழ்வுகள் மெட்ரிக் தொன்களில் CO_2 ஒத்தவை	• ப.இ.வா. உமிழ்வுகள் தலைமைக் காரியாலயக் கட்டிடம் (இ.மி.ச. மின்சாரம் ஒக்டோபர் 2023 வரைக்கும்): 944,016 kg (944 மெட்ரிக் தொன்) https://www.energy.gov.lk/index.php/en/knowledge/resources/your-life/carbon-footprint

ப.இ.வா. உமிழ்வு ஒப்பிடல்

நிதியாண்டுகள் 2022 மற்றும் 2023 இடையேயான ஒப்பிடல்கள் சூழல் இலக்குகளை மற்றும் உலகளாவிய நிலைபேறுடைய இலக்குளுடனான சீரமைப்பினை சந்திப்பதில் வங்கியின் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.

வணிகப் பங்காளிகள் 2022 எதிர் 2023

நிதியாண்டு	மொத்த உமிழ்வுகள் ($tonCO_2e$)	வகை 01 உமிழ்வுகள் ($tonCO_2e$)	வகை 01 உமிழ்வுகள் ($tonCO_2e$)	வகை 1 உமிழ்வுகள் ($tonCO_2e$)	வகை 01 உமிழ்வுகள் ($tonCO_2e$)
2022	4235.69	373	945	2,821	97
2023	3,795.41	316.28	960.52	2,420.30	98.45

LPG மற்றும் வங்கிக்கு சொந்தமான / கட்டுப்பாட்டிலுள்ள வாகனங்களிலிருந்தான ப.இ.வா. உமிழ்வுகள் நிதியியல் ஆண்டு 2022 உடன் ஒப்பிடும்போது உயர்வடைந்துள்ளன. எவ்வாறாயினும், அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடும்போது காத்திருப்பிலுள்ள மின்னியற்றி மற்றும் குளிரூட்டிகளிலிருந்தான உமிழ்வுகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

2023 இல் நோக்கெல்லை 02 உமிழ்வானது நிதியாண்டு 2022 உடன் ஒப்பிடும்போது அதிகரித்துள்ளது. ஆனால் அந்த அதிகரிப்பானது குறிப்பிடத்தக்க அளவில் இல்லை.

முறைமுகமான உமிழ்வுகளின் பெரும்பகுதியானது ஊழியர் போக்குவரத்திலிருந்து வருவதுடன், இது நிதியாண்டு 2022 உடன் ஒப்பிடும்போது குறைவடைந்துள்ளது. வான் பயணம் மூலம் மேற்கொள்ளப்படும் வணிகப் பிரயாணங்களும் வகை 03 ப.இ.வா. உமிழ்வுகளுக்கு கணிசமான பங்களிப்பினை மேற்கொண்டுள்ளது. வான் பயணம் மூலமான வணகப் பிரயாணங்களிலிருந்தான உமிழ்வுகள் 2022 இலிருந்து 2023 இல் அதிகரித்துள்ளன.

நிதியாண்டு 2023 இல் செலுத்தீடுகள் மற்றும் விநியோக நட்டங்கள் நிதியாண்டு 2022 உடன் ஒப்பிடும்போது அதிகரித்துள்ளன. எவ்வாறாயினும், அந்த அதிகரிப்பானது குறிப்பிடத்தக்கதாக இல்லை. அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடும்போது நீர் வழங்கலில் இருந்தான உமிழ்வுகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

தாள் பாவனையினை குறைத்தல் மற்றும் தாள் மீள்சுழற்சி

வங்கியின் விரைவான டிஜிட்டல் மயமாக்கலானது தாள் பாவனையினை கணிசமானளவு குறைத்துள்ளது.

நாடு பூராவுமான SBUs, Kiosks, ATMs மற்றும் CDMs வலையமைப்பானது பல வாடிக்கையாளர்களை கிளைகளின் பணிக்களங்களிலிருந்து டிஜிட்டல் வழிமுறைகளுக்கு நகர்ந்துள்ளதுடன், இது தாள் பாவனையினை குறைத்துள்ளதுடன், வங்கியின் ஊழியர்களை அதிக பகுப்பாய்வு பணிகளில் ஈடுபடுவதற்கு விடுவித்துள்ளது. எங்கெங்கு சாத்தியமோ, அவசியமானபோது இரகசியத்தன்மையினை பேணுவதற்கு முதலில் கழிவுத் தாள்கள் துண்டாக்கப்பட்டு மீள்சுழற்சிக்கான வெளிவாரி தரப்பினர்களுக்கு கையளிக்கப்படுகின்றன. செய்யப்பட்டு

மீள்சுழற்சி செய்யப்பட்ட தாள் 2022 எதிர் 2023

	2022	2023
மீள்சுழற்சி செய்யப்பட்ட தாள்களின் பருமன்	5,968 kgs	4,432 Kgs

கழிவு முகாமைத்துவம GRI 303-1

வங்கி அதன் கழிவினை பாதுகாப்பாக அகற்றப்பட்டு மீள்சுழற்சி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. வங்கியினால் உருவாக்கப்படும் குப்பைகள் வகைப்படுத்தப்பட்டு, எந்த கழிவு மீள்சுழற்சி செய்யப்படலாம் எந்த கழிவு அகற்றப்படல் வேண்டும் என வேறாக்கப்படுகின்றது. எமது பொதுவான கழிவு முகாமைத்துவமானது உரிய மாநகர / நகர சபைகளினால் மற்றும் மத்திய சூழல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்களினால் துணையளிக்கப்படும்வேளை, எமது கழிவு நீரானது தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் சபையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வெளியேற்றப்படுகின்றது.

ஒரு வெளிப்படைத்தன்மையான விலைகோரல் செயன்முறையானது இ-கழிவு மீள்சுழற்சி சேவை வழங்குநர்களை தெரிவுசெய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றது. இலத்திரணியல் உபகரணங்களின் பழுதுபார்த்தல் மற்றும் மீள்பயன்படுத்தல் நடைமுறையானது 2023 இல் தொடர்ந்தது.

தண்ணீர் பாதுகாப்பு GRI 303-1, 303-5

வங்கியானது அதன் தலைமைக் காரியாலயத்தில் மற்றும் கிளைகளில் மொத்த நீர் பயன்பாட்டினை குறைப்பதனை ஊக்கப்படுத்துகின்றது. 2023 இல் 16,482 கன மீற்றர் தண்ணீர் தலைமைக் காரியாலயத்தில் நுகரப்பட்டதுடன் இது 2022 இல் 18,157 கன மீற்றர் ஆக காணப்பட்டது.

தண்ணீர் பாதுகாப்பு வழிமுறைள்

வங்கியானது ஒரு கழிவுநீர் சுத்திகரித்தல் வசதியினை கட்டியுள்ளதுடன் இந்த கழிவுநீரை மலசலகூடங்களில் கழிவகற்றுவதற்கும் தோட்டத்திற்கும் மீள்பயன்படுத்தப்படுகின்றது. இரட்டை கழிவகற்றல் தொட்டிகள், தானியங்கி கழிவகற்றல் மலசலகூடங்கள் மற்றும் தானியங்கி நீர் குழாய்கள் என்பன வங்கியின் ஒய்வறைகளில் நிறுவப்பட்டுள்ளமை எடுக்கப்பட்ட சில ஏனைய வழிமுறைகளாகும். ஊழியர்கள் மூலோபாயமாக வைக்கப்பட்டுள்ள அறிவித்தலினூடாக பாதுகாப்பதற்கு தொடர்ச்சியாக ஞாபகம் ஊட்டப்படுகின்றார்கள்.

வங்கியின் கிளைகளில் சூரிய ஒளிமின்னழுத்த முறைகளை நிறுவுவதன் மூலம் வங்கியானது புதுப்பிக்கத்தக்க வலுவினை தழுவியுள்ளது. 2023 இல் சூரிய பலகங்கள் 20 கிளைகளில் நிறுவப்பட்டதுடன் இன்னுமோர் 50 கிளைகளில் 2024 இற்குள் நிறைவுசெய்யப்படும்.



பராமரிப்பு மற்றும் பொறியியல் பிரிவானது இந்த செயன்முறைகளை தொடர்ச்சியாக கண்காணிப்பதுடன், தண்ணீர் கசிவு மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்களை வழமையாக கையாளுகின்றன.

ஒரு பகிரப்படும் மூலமாக தண்ணீருடனான ஊடாட்டங்கள்

வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகள், முதன்மையாக வங்கியியல் சேவைகளில் ஈடுபடுவதுடன் உற்பத்தியில் அல்ல என்பதுடன், இதனால் வரையறையான தண்ணீர் நுகர்வுத் தேவைகளைக் கொண்டுள்ளது, இது பிரதானமாக குடிப்பதற்கு, கழுவுவதற்கு மற்றும் சுகாதார வசதிகளுக்காகும். வங்கியின் தண்ணீர் பயன்பாட்டு நடைமுறை பின்வருமாறு:

தலைமைக் காரியாலய கட்டிடம்:

- குடி நீர்: குடிக்கும் தேவைக்காக போத்தலில் அடைக்கப்பட்ட நீர் பயன்படுத்தப்படுகின்றது.
- கழுவுதல்: கழுவும் தேவைக்காக தேசிய நீர் வழங்கல் சபையிலிருந்து தண்ணீர் பயன்படுத்தப்படுகின்றது.
- கழிவு நீர்: கழிவு நீரானது மாநகரசபை கழிவு வடிகாலுக்கு அனுப்பப்படுகின்றது.

பாசிக்குடா ஊழியர் பயிற்சி நிலையம்:

- குடிநீர் மற்றும் கழுவுதல்: குடிப்பதற்கும் கழுவுவதற்கும் கிணற்று நீரை சுத்தமாக்குவதற்கு ஒரு மறுதலையான ஒஸ்மோசிஸ் (R/O) பொறியானது பயன்படுத்தப்படுகின்றது.
- கழிவு நீர்: கழிவுநீர் சுத்திகரித்தல் பொறி வசதியானது கழிவுநீரை சுத்திகரிப்பதற்கு கிடைக்கப்பெறுவதுடன், அதன்பின்னர் இது தோட்ட தேவைகளுக்கு மீள்பயன்படுத்தப் படுகின்றது.

தங்காலை பிராந்திய தலைமைக் காரியாலயம் (பி.த.கா.):

- கழிவு நீர்: ஏனைய அமைவிடங்களுக்கு ஒத்ததாக, ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியானது கழிவுநீரை சுத்திகரிப்பதற்கு கிடைக்கின்றது.

அம்பாறை பி.த.கா.:

- கழிவு நீர்: ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியானது இந்த இடத்திலுள்ள கழிவு நீரை சுத்திகரிப்பதற்கு கிடைக்கின்றது.

வவுனியா பி.த.கா:

- கழிவு நீர்: ஏனைய பிராந்திய தலைமைக் காரியாலங்களைப் போன்று ஒரு கழிவுநீர் சுத்திகரித்தல் பொறியானது கழிவு நீரை சுத்திகரிப்பதற்கு கிடைக்கின்றது.

ஹக்மன கிளை:

- கழிவு நீர்: ஏனைய கிளைகள் மற்றும் காரியாலங்களைப் போன்று ஒரு கழிவுநீர் சுத்திகரித்தல் பொறியானது கழிவு நீரை சுத்திகரிப்பதற்கு கிடைக்கின்றது.

வலு பாதுகாப்பு மற்றும் செயற்திறனான மேம்பாடு

GRI 302-1, 302- 3, 302- 4

வங்கியின் வலுப் பயன்பாட்டில் மின்சாரம் மற்றும் போக்குவரத்தானது பெருமளவில் கணக்கிடப்படுகின்றது. போக்குவரத்து வலு நுகர்வானது வங்கியின் வாகனத் தொகுதியிலிருந்தும் ஏனைய வணிகம் தொடர்பான பிரயாணங்களிலிருந்தும் வருகின்றது.

வங்கியின் கிளைகளில் சூரிய ஒளிமின்னழுத்த முறைகளை நிறுவுவதன் மூலம் வங்கியானது புதுப்பிக்கத்தக்க வலுவினை தழுவியுள்ளது. 2023 இல் சூரிய பலகங்கள் 20 கிளைகளில் நிறுவப்பட்டதுடன் இன்னுமோர் 50 கிளைகளில் 2024 இற்குள் நிறைவுசெய்யப்படும்.

வங்கியின் வல பாதுகாத்தல் இலக்குகளை அடைவதற்கு பின்வரும் செயன்முறைகள் நிறுவப்பட்டுள்ளன:

- வலுப் பயன்பாட்டினை குறைப்பதற்கு அனைத்து புதிய இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களது "வலு செயற்திறன் விகிதத்தினை" கருத்திலெடுத்தல்
- வலுவினை சேமிப்பதற்கு ஒளியிடல் தேவைகளுக்கு LED மின்குமிழ்களை பயன்படுத்துதல்
- ஒரு வலுச் செயற்திறன் நட்சத்திர தரத்துடனான த.தொ. உபகரணங்களின் கொள்வனவு
- அலைமின் மாற்றி தொழில்நுட்பத்துடனான வலுச் செயற்திறனாக காற்றுப் பதனாக்கிகளை நிறுவி நேரகாலத்துடனான சேவை மற்றும் பழுதுபார்த்தலூடாக தடுப்பு பராமரிப்பினை செயலாற்றல்
- சூழல் தோழமையான குளிரூட்டிகளை பயன்படுத்தல்
- ஒலிபுகாத, குறை உமிழ்வுடன் மற்றும் எரிபொருள் செயற்திறனான மின்னியற்றிகளை தொலைதூர கண்காணிப்பு ஆற்றலுடன் நிறுவுதல்

மக்கள் வங்கியின் வலுப் பயன்பாடு - தலைமைக் காரியாலயம்

வலு மூலம்	வலுவின் வகை	நுகர்வு மட்டம் (Giga Joules)
புதுப்பிக்கத்தக்கது	மின்சாரம்	5,727.47
புதுப்பிக்கவியலாத எரிபொருள்	பெற்றோல்	504.27
	டீசல்	2,736.77
மொத்தம்		**8,968.51**

வலுச் செறிவு (ஒரு ஊழியருக்கு)- *7.12 GJ*

இயற்கை மூலதனம்

காலநிலைக்கான செயற்பாடுகள்

GRI 201-2

காலநிலை மாற்றத்தில் அதன் தாக்கத்தினை தணிப்பதற்காக வங்கியானது மீளாய்வாண்டின்போது பல முன்னெடுப்புகளை அமுல்படுத்தியுள்ளதுடன், இது ஐ.நா. நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுக்கு இணையானதாகும். இந்த முயற்சிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- சூழல் அடிச்சுவட்டினை குறைப்பதற்காக வங்கிக் கிளை கட்டிடங்களில் பசுமை நடைமுறைகளை அமுல்படுத்துதல்.
- நிலைபேறுடைய தண்ணீர் பாவனையினை ஊக்குவிப்பதற்காக கிளைக் காரியாலயங்களில் தண்ணீர் பாதுகாப்பு வழிமுறைகளை வலியுறுத்துதல்.
- வரையறையான வளங்களைக் கொண்ட தொலைதூர இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு சுத்தமான குடிநீர் மற்றும் சூரிய வலுத் தீர்வுகளை வழங்குவதை நோக்காகக் கொண்ட சமூக சேவைத் திட்டங்களைப் பொறுப்பேற்றல்.
- வங்கியின் செயற்பாடுகள் பூராகவும் தாள்களின் பயன்பாட்டினை குறைப்பதற்கான மூலோபாயங்களை அமுலாக்குதல் மற்றும் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களுடன் சூழல் தாக்கத்தினை சிறுமமாக்குவதற்காக டிஜிட்டல் ஊடாட்டத்தினை ஊக்கமளித்தல்.
- செயற்திறனான மின்சாரப் பயன்பாடு மற்றும் கார்பன் உமிழ்வுகளைக் குறைப்பதற்காக காற்றுப் பதனாக்கிகளின் பயன்பாட்டினை வரையறைசெய்து செயலூக்கமாக கண்காணித்தல் மற்றும் செயற்திறனான மின்சாரப் பாவனையினை ஊக்குவித்தல்.

எதிர்கால கண்ணோட்டம்

வங்கியானது அதன் வளர்ச்சி மூலோபாயத்தினுள் சூழல் உணர்வினை தொடர்ந்தும் ஒருங்கிணைக்கும், இதன் மூலம் அதன் எதிர்மறையான சூழல் தாக்கத்தினை சிறுமமாக்குவதுடன், பொறுப்பான கடன் வழங்கலூடாக அதன் சாத்தியமான சூழல் தாக்கங்களை விரிவாக்குதல்.

வங்கியானது சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க வலு மூலங்கள் நோக்கி நகர்வதுடன் த.தொ. உபகரணங்களை வலு செயற்திறனான நட்சத்திர தரப்படுத்தலுடன் கொள்வனவு செய்கின்றது. புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்யும்போது, வங்கியானது டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்களுக்குப் பதிலாக மின்சார வாகனங்களைக் கொள்வனவு செய்கின்றது. ஒலி புகாத, குறைவான உமிழ்வுடைய மற்றும் ளரிபொருள் செயற்திறனான மற்றும் தொலைதூரத்திலிருந்து கண்காணிக்கும் ஆற்றலுடைய மின்னியற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. வங்கியானது தற்போது பசுமை இல்ல வாயுக்களை சிறுமமாக்குவதற்கு அதி நவீன தொழில்நுட்பத்துடன் ஒரு புதிய வலு செயற்திறனான தலைமைக் காரியாலயத்தினை கட்டும் செயல்முறையில் உள்ளது.



மக்களின் மரபுவழி

மக்கள் வங்கி நாட்டின் முன்னேற்றத்தில் தொடர்ந்தும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும் வேளை அதன் மரபுவழியானது பலம், கொள்திறன், மற்றும் வரவுள்ள சந்ததியினரை கவனிப்பதற்கு ஆழமாக வேரூன்றிய அர்ப்பணிப்பு என்பவற்றுக்கு ஒரு நற்செய்தியாகும்.

ஆளுகை

144 இடர் முகாமைத்துவ அறிக்கை | **174** கூட்டாண்மை ஆளுகை | **196** சபை உபகுழு அறிக்கைகள் | **196** சபை கணக்காய்வுக் குழு (BAC) | **197** சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு அறிக்கை (BHRRC) | **198** சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை (BIRMC) | **199** சபை நிறைவேற்றுக் கடன் குழு அறிக்கை (BECC) | **200** சபை பெயரிடல் குழு அறிக்கை (BNC) | **201** சபை முதலீட்டு வங்கியியல் குழு அறிக்கை (BIBC) | **202** சபை தகவல் தொழில்நுட்பக் குழு அறிக்கை (BITC) | **203** சபை மூலோபாயத் திட்டமிடல் மீளாய்வுக் குழு அறிக்கை (BSPRC) | **204** நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று | **206** உள்ளகக் கட்டுப்பாடுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் உறுதிமொழி அறிக்கை

இடர் முகாமைத்துவ அறிக்கை

2024 இலான பொருளாதார மீட்சியானது சர்வதேச இறையாண்மை தரப்படுத்தல்களை பலப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் குறைவான பணவீக்கத்தினையும் வட்டி வீத எதிர்பார்ப்புகளையும் சந்திப்பதற்கும் மிகவும் அவசியமானதாகும்.

இடர் முகாமைத்துவம் என்பது ஒரு முக்கியமான செயற்பாடாகவும் மக்கள் வங்கியின் ஒரு பெறுமதி சேர்க்கப்பட்ட சேவையாகவும் கருதப்படுகின்றது. எனவே, வங்கி அனைத்து செயற்பாட்டு மற்றும் வணிகச் செயற்பாடுகளில் இடர் முகாமைத்துவ முயற்சிகளை உயர்வாக வசதியளித்து ஊக்கப்படுத்துகின்றது. ஒரு பாரிய மற்றும் முறையான முக்கியமான வங்கியாக, அது ஒவ்வொரு அம்சத்திலும் ஒரு திடமாக ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகையின் இருப்புடன் அனைத்து பங்காளிகளதும் பாதுகாப்பு மற்றும் நலன்களை இடைவிடாது உறுதிசெய்கின்றது.

2023 இல் பொருளாதார சுருக்கம் இருந்தாலும், வங்கியானது தேசிய நலனைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்திற்கும் அரசாங்க முகவர்களுக்கும் தொடர்ச்சியாக உறுதுணையினை வழங்கியது.

அதேவேளை, வைப்பீட்டாளர்களது நிதிகளைப் பாதுகாத்தல், அனைத்து முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை பராமரித்தல் மற்றும் நியாயமான செயற்திறன் இலக்குகளை அடைதல் ஆகியவற்றை உறுதிசெய்தது.

ச.நா.நி. திட்டத்தின் முன்னேற்றம், தொழிலாளர் பணமனுப்பல்களில் இருந்து வளர்ச்சியடையும் அந்நிய செலாவணி உட்பாய்ச்சல்கள், சுற்றுலாத்துறையின் மீள்நிலைப்படுத்தல், நிதியியல் மறுசீரமைப்புகள் மற்றும் அரச உடைமை நிறுவனங்களின் சாத்தியமான மீள்கட்டமைப்பு பிரேரணைகள் என்பவற்றை கருத்திற்கொண்டு 2024 இல் சாத்தியமான பொருளாதார வளர்ச்சியில் ஒரு எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. ஆனால் வருடத்தின் பெரும்பகுதியில் பாரியபொருளாதார சூழலானது நிதியியல் நிறுவனங்களுக்கு சவாலாகக் காணப்பட்டதுடன், பின்வருவனவற்றில் தொடர்ச்சியான அழுத்தத்தினை ஏற்படுத்தின, தரமான கடன் தேக்கங்களைப் பராமரித்தல். சொத்துக்களின் மெதுவான மீள்விலையிடல்கள், மற்றும் எதிர்பார்க்கும் குறைவான சந்தை வட்டி வீதங்கள் மற்றும் தேறிய வட்டி வரம்பினை பராமரித்தல் என்பவற்றிலாகும்.

நிதியியல் முறையின் இடரானது, அரசாங்கம் அதன் கடன் மீள்கட்டமைத்தல் இலக்குகளை சந்திக்கக்கூடிய மற்றும் ஒரு நிலைபேறுடைய மீள்செலுத்தல் திட்டத்திற்கிணங்க தவறிய கடன்களின் மீள்செலுத்தல் ஆரம்பம் போன்றவற்றை சந்திக்கக்கூடிய அரசாங்கத்தின் ஆற்றலில் பெருமளவில் தங்கியுள்ளது. 2024 இலான பொருளாதார மீட்சியானது சர்வதேச இறையாண்மை தரப்படுத்தல்களை பலப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் குறைவான பணவீக்கத்தினையும் வட்டி வீத எதிர்பார்ப்புகளையும் சந்திப்பதற்கும் மிகவும் அவசியமானதாகும்.

சாதகமான உள்ளூர் கடன் உகப்பாக்கத்தினால் பின்தொடர்ந்த பணவீக்க வீத நிலைப்படுத்தல் மற்றும் சந்தை வட்டி வீதங்களிலான வீழ்ச்சி என்பன 2023 இன் இறுதியியல் நிதியியல் நிறுவனங்களுக்கு ஒரு சாத்தியமான நிதியியல் விளைவினை வழங்கின. எவ்வாறாயினும், நாடு பூராவும் மற்றும் அனைத்து பொருளாதார துறைகள் பூராம் காணப்படும் வணிகங்களும் நுகர்வோரும் தொடர்ந்தும் நிதியியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்ததுடன், இது ஆரம்ப மீட்டல் கட்டத்தின் பலவீனமான நிலையினைக் குறிப்பிடுகின்றது.

2023 இல் இடர் நிலத்தோற்றம்

2023 இன் முக்கிய இடர்கள்	பதில்
கடன் இடர்: தொடர்ச்சியான உயர் வீதத்திலான தவணை தவறுதலுடன், வங்கியின் இடர் நிறையிடப்பட்ட சொத்துக்களின் பெரும்பகுதி காணப்படுவதனால் கடன் இடர் உயர்வாக இருந்தது. கோவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடியினால் பாதிப்படைந்த வணிகங்களுக்கான கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதி நிறைவடைந்ததுடன், 2023 இன் இறுதியில் பல வணிகங்கள் முழுவதுமாக மீட்சியடையவில்லை. உயர்வடையும் வரிவிதிப்பு வீதங்கள், வலு மற்றும் மூலப் பொருட்களிலான உயர் வீதங்கள், ஆற்றல்மிக்க மனித வளங்களின் பற்றாக்குறை என்பன ஒரு விரைவான மீட்டலினை தடுத்தது.	சந்தை மாற்றங்களுக்கமைய வங்கியானது கடன் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை மீளாய்வு செய்து இற்றைப்படுத்தலின் மூலம பதிலளித்ததுடன், அழுத்தத்திற்குள்ளான வாடிக்கையாளர்களுடன் மீள்கட்டமைத்தல், நிதியியல் ஆலோசனை மற்றும் அவசியமாயின் மறுவாழ்வளித்தல் / மீட்டெடுத்தல் என்பவற்றைப் பொறுத்தளவில் நெருக்கமாக பணியாற்றியது. மேலும் தேவையின் அடிப்படையில் குறிப்பாக செயற்படு மூலதன தேவைப்பாடுகளுக்கு ஒரு சலுகையான வட்டி வீதத்தில் மேலதிக நிதியளித்தல் வசதிகள் வழங்கப்படும். வங்கியானது அதன் இடர் ஆர்வத்தினுள், தரமான தேக்கம் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்காக பல்வேறு கடன் வரையறைகளை நிறுவியுள்ளது.
திரவத்தன்மை இடர்: வங்கியானது தேசிய நலனைக் கருத்திற்கொண்டு நாட்டில் 2022 மற்றும் 2023 இல் நிலவிய அந்நிய செலாவணி பற்றாக்குறை நிலைமையின்போது அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தொடர்ச்சியாக அரசாங்க நிறுவனங்களுக்கு உதவிசெய்தது. இதன் விளைவாக, வங்கி 2023 இன் ஆரம்பத்தில் ஒரு திரவத்தன்மை இடருக்கு முகங்கொடுத்தது. இதற்கு பிரதானமாக நாட்டின் இறையாண்மை தரத்தின் தரமிறக்கலின் விளைவாக வெளிநாட்டு நிதியியல் வசதிகளின் கட்டுப்பாடு காணப்பட்டது.	வங்கி நாடுபூராவுமான வைப்புத் திரட்டல் இயக்கியினை நடாத்துவதன் மூலம் இந்நிலைமையினை வங்கி விவேகமாக முகாமைப்படுத்தியவேளை, அதேசமயம் ஏற்றுமதி வாடிக்கையாளர்களை விரிவாக்கி உள்வாரி பணமனுப்பல்களில் சந்தைப் பங்களிப்பினை மூலோபாயமாக மேம்படுத்தியது. 2023 இன் இறுதியில், வங்கி உள்ளூர் நாணயத்தில் மிகையான திரவத்தன்மையினை பதிவுசெய்ததுடன், அந்நிய செலாவணி திரவத்தன்மையினை வெற்றிகரமாக முகாமைப்படுத்தியது.
செறிவாக்கல் இடர்: வங்கியின் கடன்வழங்கல் தேக்கத்தின் உயர்ந்த செறிவாக்கல் இடராக அரச உடைமை நிறுவனங்களின் வெளிப்பாடு இருந்தது. மேலாக, கட்டுமானத் துறை மற்றும் சுற்றுலாத் துறை 2023 இல் அழுத்தத்துடன் காணப்பட்டதுடன், இது கடன் தேக்கத்தில் அழுத்தத்தினை பிரயோகித்தது.	கடன் தேக்க மட்டத்தில், துறைசார் மட்டத்தில், இடர் தரப்படுத்தல் மட்டம் ஆகியவற்றில் முக்கிய கடன் வரையறைகளை நிறுவி மாற்றியமைத்தது. இது வங்கியின் கடன் தேக்கத்தின் தொகுப்பினை மீள் ஒழுங்குபடுத்துவதற்காகும். வைப்புகளைப் பொறுத்தளவில், வங்கியானது 14.5 வைப்பீட்டாளர்களுக்கு சொந்தமான ஒரு உயர்ந்த பன்முகப்படுத்தப்பட்ட வைப்புத் தேக்கத்தினை பராமரித்துள்ளதுடன், வைப்புகளிலான செறிவாக்கல் இடரானது ஆகக் குறைந்த மட்டத்தில் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது.

2023 இன் முக்கிய இடர்கள்	பதில்
த.தொ. மற்றும் சைபர் பாதுகாப்பு இடர்: டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களின் பெருக்கத்தின் காரணமாக, த.தொ. மற்றும் சைபர் பாதுகாப்பு ஒரு உயர் இடர் காரணியாக உள்ளது. மேலாக, புதிய நுகர்வோர் தரவுப் பாதுகாப்பு சட்டம் மற்றும் வங்கிகளுக்கான இலங்கை மத்திய வங்கியின் தொழில்நுட்ப இடர் வழிகாட்டிகள் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவ முறைகளுக்கு மேம்படுத்தல்களை வேண்டுகின்றது.	வங்கி ஒரு பிரத்தியேகமான தகவல் பாதுகாப்புப் பிரிவினை நிறுவியுள்ளதுடன், இங்கு சிறப்பான த.தொ. ஆளணியினர் பணிபுரிகின்றார்கள். வங்கி அதன் செயற்பாடுகளை தரவுப் பாதுகாப்புச் சட்டத்துடன் சீரமைத்துள்ளதுடன், குறிப்பிட்ட காலவரையறையினுள் மத்திய வங்கியின் தொழில்நுட்ப இடர் வழிகாட்டிகளுடன் முழு இணக்கப்பாட்டினையும் கண்டுள்ளது. மேலும், அனைத்து டிஜிட்டல் மேடைகளும் முறையான DR வசதிகள் மற்றும் DR தீர்வுகளுடன் நிறுவப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற சேவையினை உறுதிப்படுத்துவதற்காக காலாகாலம் பரீசீலனை செய்யப்படுகின்றன.
சந்தை இடர்: 2023 இன் இறுதிப் பாகத்தில் வட்டி வீதங்கள் ஒரு வீழ்ச்சியடையும் போக்கினை ஆரம்பித்தன. எவ்வாறாயினும், 2024 இல் தொடர்ச்சியான வட்டி வீத இடர் குறித்து வங்கி எச்சரிக்கையாக உள்ளது. சந்தை இடர் தொடர்பாக வங்கியானது சந்தை வட்டி வீதங்கள், நாணயமாற்று வீதங்கள் மற்றும் உரித்துவங்களின் விலைகள் ஆகியவற்றில் அக்கறையாய் உள்ளது.	வங்கியானது அதன் தேக்கங்களை சந்தை இடர் விளைவுகளை குறைக்கும் நோக்கில் பராமரிக்கின்றது. வெளிநாட்டு நாணய இருப்புகள் எப்போதும் முறைமைப்படுத்தல் வரையறையினுள் பராமரிக்கப்படுவதுடன், இருப்பற்ற நிலைமைக்கு நெருக்கமாக பராமரிப்பதற்கு ஒவ்வொரு முயற்சியினையும் எடுக்கின்றது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பாதகமாக அசைவுகளிலிருந்தான ஏதேனும் நட்டங்களை குறைப்பதற்காக உரித்துவ தேக்கமானது நிறுவப்பட்ட விரிவான வரையறையுடன் பராமரிக்கப்படுகின்றது. கடன் தேக்கங்கள் முறையான பன்முகப்படுத்தலுடன் பராமரிக்கப்படுவதுடன் வணிகத் தேக்கங்கள் பொருத்தமான மிதக்கும் வீதங்களில் பராமரிக்கப்படுகின்றன.
செயற்பாட்டு இடர்: வங்கி பாரிய வலையமைப்பு, பாரிய டிஜிட்டல் மேடை மற்றும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களைப் பராமரிக்கின்றது. எனவே, ஏதேனும் செயற்பாட்டு இடர் நிகழ்வினை தூண்டுவதற்கான நலிவுறுநிலை சாத்தியமாகின்றது. செயற்பாட்டு இடரினை முகாமைப்படுத்தல் வாடிக்கையாளர் நம்பிக்கையினை பராமரிப்பதற்கும சேவை தனிச்சிறப்பினை பராமரிப்பதற்கும் மிகவும் முக்கியமானதாகும்.	செயற்பாட்டு செயன்முறையின் தடையற்ற செயற்பாட்டினை உறுதிசெய்வதற்காக செயன்முறைகள், கொள்கைகள் மற்றும் போதுமான கட்டுப்பாடுகள் காணப்படுவதனை வங்கி உறுதிசெய்கின்றது. வங்கி செய்பவர் - பரிசீலிப்பவர் கருத்தாக்கத்தினை பராமரிப்பதுடன் இது உள்ளகக் கணக்காய்வு மற்றும உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வுகளினால் சரிபார்க்கப்படுகின்றது. வங்கி ஒவ்வொன்றுடன் தொடர்பு இல்லாத சுயாதீனமான மூன்று பாதுகாப்பு வரிசைகள் காணப்படுவதனை உறுதிசெய்கின்றது. மேலும், இடர் கட்டுப்பாடு சுய மதிப்பீடானது (RCSA) காலாகாலம் பிரயோகிக்கப்படுவதுடன் பிராந்திய இடர் அதிகாரிகளினால் சரிபார்க்கப்படுகின்றது. ஏதேனும் செயற்பாட்டு இடர் விடயமானது செயற்பாட்டு இடர் முகாமைத்துவ குழுவில் தீவிரமாக கலந்துரையாடப்படுவதுடன், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவசியமாயின் BIRMC இற்கு அறிக்கையிடப்படுகின்றது. மீள்செலுத்தல் திட்டங்களின் உருவாக்கம் மற்றும் அமுலாக்கம். (RCP)
நற்பெயர் இடர்: சமூக ஊடக மேடைகள் நற்பெயர் பாதிக்கக்கூடிய வெளித்தோன்றும் இடரினை ஏற்படுத்தலாம். இது சாத்தியமான விரைவாக பரப்பக்கூடிய தவறான தகவல்களினால் உயர்வான பாதிப்பினை ஏற்படுத்துவதனாலாகும்.	மக்கள் வங்கி இந்த சாத்தியமான இடரினை தீவிரமாகக் கருதி வங்கியின் நற்பெயரினை பாதுகாப்பதற்கு வழிமுறைகளை எடுக்கின்றது. இது சமூக ஊடகங்களை கண்காணித்தல், அதன் ஆளணியினரை பயிற்றுவித்தல், மற்றும் அனைத்து வெளிவாரி தொடர்பாடல்களையும் மூலோபாயமாக முகைப்படுத்தல் மூலமாகும். மேலும், வங்கி பல்வேறு வழிகளில் மற்றும் பல CSR திட்டங்களின் மூலம் நாட்டின் சமூக அபிவிருத்தியினை ஊக்கமளித்து துணைசெய்கின்றது. இவை வங்கியினால் உத்தியோகபூர்வமாகவும் நாடு பூராவும் பரந்திருக்கும் ஊழியர்களது வலையமைப்பினால் மனமுவந்தும் மேற்கொள்ளப்படுகின்றன.
இணக்கப்பாட்டு இடர்: பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நடத்தைக் கோவை, சிறந்த நடைமுறைகளின் நியமங்களுடன் இணக்கப்பாடின்மையானது நிதியியல் நட்டத்தையும் நற்பெயர் நட்டத்தையும் விளைவிக்கலாம். இணக்கப்பாடானது வங்கியின் நற்பெயரினை பராமரித்து மேம்படுத்துவதற்கு துணைபுரிகின்றது.	வங்கி ஒரு இணக்கப்பாட்டு பிரிவினை பராமரிப்பதுடன் இது தேவையான வளங்களுடன் மற்றும் பரவலாக்கப்பட்ட பிராந்திய இணக்கப்பாட்டு அதிகாரிகளுடன் கிளை வலையமைப்பானது நெருக்கமாக கண்காணிக்கப்படுகின்றது. காலாகால பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் நடாத்தப்படுகின்றன, மற்றும் முறை அடிப்படையிலான கண்காணித்தல் மற்றும் சரிபார்த்தல் முறைகளும் காணப்படுகின்றன.
மோசடி இடர்: தனிநபர்களின் அழுத்தமான பொருளாதார நிலைமைகளை கருத்தற்கொண்டு மோசடி மற்றும் குற்றவியல் நடவடிக்கை இவ்வாண்டின்போது நாடு பூராவும் அதிகரித்துள்ளன.	வங்கி அதன் அனைத்து பௌதீக அமைவிடங்களில் பாதுகாப்பினை பலப்படுத்தியுள்ளதுடன், மேம்படுத்தப்பட்ட சரிபார்த்தல், கண்காணித்தல் மற்றும் துல்லியத்திற்காக கருவிகள் மற்றும் செயன்முறைகளை தொடர்ந்தும் டிஜிட்டல் மயமாக்கின்றது.

இடர் முகாமைத்துவ அறிக்கை

2023 இன் முக்கிய இடர்கள்	பதில்
திறன் இடர்: வங்கி 2023 இன் 12 மாதங்களின்போது நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமையின் காரணமாக அதன் ஊழியர்களில் கணிசமான புரள்வினை அனுபவித்தது. ஏனைய நிறுவனங்களைப் போன்று மத்திய முகாமைத்துவ மட்டங்களை இது கணிசமாக பாதித்தது.	2023 இல் இழந்த திறன்களை மாற்றீடு செய்வதற்காக வங்கி ஒரு ஆட்சேர்த்தல் இயக்கியினை ஆரம்பித்ததுடன், கணிசமானளவு முகாமைத்துவ பயிற்சியாளர்களையும் பயிற்சி வாடிக்கையாளர் சேவை உதவியாளர்களையும் சேர்த்தது. எவ்வாறாயினும், திறன்களை இழப்பதன் தொடர்ச்சியான தாக்கமானது 2024 இல் உணரப்படுவதுடன், வங்கி இத்தாக்கத்தினை சிறுமமாக்குவதற்கு அதன் டிஜிட்டல் முன்னெடுப்புகளை தொடர்வதுடன் ஒரு மூலோபாய கிளை சீராக்கல் செயன்முறையினை எதிர்பார்த்துள்ளது.
காலநிலை இடர்: வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பாதகமாக விளைவுகளை உருவாக்கும் மற்றும் வங்கியுடன் இணங்கிய கடப்பாடுகளை சந்திப்பதற்கு அவர்களது இயலாமையினை உருவாக்கும் காலநிலை மாற்றங்களின் காரணமாக சாத்தியமாக காலநிலை இடர் காணப்படுகின்றது. மேலும், பாதகமாக காலநிலை மாற்றங்கள் வங்கியின் பௌதீக வளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இது வாழ்க்கைகள், அமைப்புமுறைகள் மற்றும் பௌதீக சொத்துக்களை உள்ளடக்குகின்றது. காலநிலை இடரின் தன்மையின் காரணமாக, அளவு, நிகழ்வெண் அல்லது நேரம் என்பன இலகுவாக முன்கணிக்கவியலாது என்பதுடன், தற்போதைய காலநிலை மாற்றத்தின் போக்குகள் மற்றும் எல் நினோ தோற்றப்பாடுகள் பல சிக்கல்களை உருவாக்குகின்றன.	வங்கி சூழல் நிலைபேறுடமை நோக்கி முறையான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. வங்கி இலங்கை மத்திய வங்கியின் 2022 இன் பணிப்புரை இலக்கம் 05 – உரிமமளிக்கப்பட்ட வங்கிகளின் நிலைபேறுடைய நிதியியல் நடவடிக்கைகள், உடன் இணக்கப்பாடு காண்பதற்கு முற்றாக கடப்பாட்டுடன் உள்ளது. இ.ம.வ. இன் சாலை வரைபடமானது, நிதியியல் முறைமைப்படுத்துபவர்களுக்குமன் நிதியியல் நிறுவனங்களுக்கும் சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) இடர்களை வினைத்திறனாக முகாமைப்படுத்துவதற்கு ஒரு பரவலான வழிகாட்டியினை வழங்குகின்றது. இது வங்கி நிதியளிக்கும் இவ்விடர்களுடன் இணைந்த திட்டங்களுக்கும் மற்றும் பசுமையான, காலநிலை தோழமையான மற்றும் சமூகரீதியாக உள்ளடக்கமான வணிகங்களுக்கான உறுதுணையினை ஊக்குவிப்பதற்கும் ஆகும். . இந்த கடப்பாட்டினை நிலைநிறுத்துவதற்கு வங்கியானது நிலைபேறுடைய நிதியளிப்பிற்கான சலுகையான கடன் வழங்கலுக்கு கணிசமான தொகையுடன் ஒரு நிதியினை ஒதுக்கியுள்ளது. இந்த தேக்கமானது சூழல் தோழமையான வணிகங்கள் மற்றும் முதலீடுகளுக்கு துணையளிக்கும். மேலும், வங்கியானது காலநிலை இடரினால் பாதிப்படையக்கூடிய தேக்கங்களை நெருக்கமாக கண்காணிப்பதுடன், கடன் முன் மதிப்பீடுகளின்பொது அத்தகைய இடர்களை தணிப்பதற்கு முன்னெச்சரிக்கை வழிமுறைகள் எடுக்கப்படும். காலநிலை மாற்ற இடரானது பன்முகப்படுத்தலினூடாகவும் மற்றும் உயர் இடரான கடன் தேக்கங்களை தொடர்ச்சியான கண்காணிப்பதனூடாகவும முகாமைப்படுத்தபடுவதுடன், உரிய துறைகளுக்கான கடன் வசதிகளை கருத்திலெடுக்கும்போது காலநிலை போக்குகள் மற்றும் காலநிலை முன்கணிப்புகள் கருத்திலெடுக்கப்படும். செயற்பாட்டின் பயனுறுதித்தன்மையினை பின்பற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. 1. இடர் ஆர்வத்தினை நிறுவுதல் 2. காலநிலை மாற்றத் தாக்கத்தின் இடரில் உள்ள பொருளாதாரத் துறைகளுக்கு கடன் வரையறையினை நிறுவுதல 3. கடன் தேக்கங்களின் வழமையான அழுத்த பரிசோதனை 4. தனிநபர் வாடிக்கையாளர்களின் கடன் நிலைமையினை கண்காணித்தல் 5. காலநிலை இடர் மதிப்பீடுகளில் கடன் அதிகாரிகள் மற்றும் ஏனைய வங்கி ஆளணியினரை பயிற்றுவித்தல்

2024 இற்கான திட்டங்கள்

வங்கியானது அதன் இடர் முகாமைத்துவ முறைகளை மீளாய்வு செய்து நடைமுறையிலுள்ள மற்றும் 2024 இல் எதிர்பார்க்கும் இடர்களுக்கு பதலளிப்பதற்காக மூலோபாயங்களை முன்னெடுத்துள்ளது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

2024 இன் முக்கிய முன்னிறுத்தல் பிரிவானது கடன் தரத்தினைப் பராமரிக்கும் சாத்தியம், மற்றும் சாத்தியமான அனைத்து இடர் வெளிப்பாடுகளும் சிறந்த தெரிவுகளுடன் உரிய நேரத்தில் கவனிக்கப்படுவதனை உறுதிசெய்வதாகும். வங்கி அதன் கடன் வழங்கல் மற்றும் மறுவாழ்வு மற்றும் மீட்டுயிர்ப்பு அலகினை மேலும பலப்படுத்தும். விசேடமாக, பிராந்திய கடன் அலகுகளுடன் இணைந்துள்ள ஏற்றுமதி மையங்களின் அமுலாக்கலானது ஒரு பாரிய பங்கினை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் வங்கியின் சில்லறை கடன் உருவாக்கல் முறை (RLOS) மற்றும் பெறுநிறுவன கடன் உருவாக்கல் முறை (CLOS) தொடர்பாக டிஜிட்டல்மயமாக்கல் முன்னேற்றமானது கடன் செயன்முறைப்படுத்தல் நேரத்தில் ஒரு பொருண்மையான குறைப்பினை உருவாக்குவதுடன், வாடிக்கையாளர் சேவை மட்டத்தில் மேலும் முன்னேற்றத்தினை உறுதிசெய்கின்றது.

தவணை தவறுதல் முகாமைத்துவத்தின் வெற்றியானது கடன் இடரினை முகாமைப்படுத்துவதில் ஒரு முக்கிய கூறாகும் மற்றும் வங்கியானது வைப்பீட்டாளர்களின் பாதுகாப்பிற்கு அதிகபட்ச கவனிப்பினை கருத்திற்கொண்டு அதன் மீள்செலுத்தல் செயன்முறையினை தொடரும். வங்கி அனைத்து கடன் பெறுநர்களும் சமமாக கவனிக்கப்படுவதனை உறுதிசெய்வதுடன், யாரேனும் வேண்டுமென்று தவறுபவருக்கு எதிராக அனைத்து சாத்தியமான மீள்செலுத்தல் நடவடிக்கைகளையும் எடுக்கும்.

மேலும் வங்கியானது குறிப்பாக கைத்தொழில் / துறை மற்றும் அரசாங்க வெளிப்பாடுகளில் நிறுவப்பட்டுள்ள கடன் வரையறைகளுடன் ஒழுகும் என்பதுடன் இது செறிவாக்கல் இடர் மற்றும் SOE இன் மறுசீரமைப்புகளின் பாதகமான பொருளாதார தாக்கங்களிலிருந்து பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்காகும். வங்கி பூகோளவியல் கடன் வரையறைகள், கடன்பெறுநர் இடர் தரப்படுத்தல் கடன் வரையறைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தனி கடன்பெறுநர் வரையறைகளில் நெருக்கமான மீளாய்வினை தொடரும்.

வங்கியானது அனைத்து டிஜிட்டல் வழிமுறைகளின் தடையற்ற முறைமை கிடைப்புத்திறனை பொறுப்பேற்பதுடன், இது வாடிக்கையாளர் சேவை மற்றும் நம்பகத்தன்மையினை உறுதிசெய்வதற்காகும். வங்கி அனைத்து டிஜிட்டல் மேடைகளுக்கும் பேரிடர் மீட்டல் முறையின் கிடைப்புத்திறனை உறுதிசெய்வதுடன், அவற்றின் செயற்திறனை காலாகாலம் பரிசீலனை செய்கின்றது. மேலும் வங்கியானது மீள்செலுத்தல் திட்டங்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதுடன், இவை அனைத்து முக்கிய செயற்பாடுகள் மற்றும் முக்கியமாக பகிரப்படும் சேவைகள், ஒரு நிறுவனம் சார்ந்த அல்லது வெளிவாரி அழுத்த நிலைமைகளிலும் தொடர்ச்சியாக விநியோகிப்பதனை உறுதிசெய்கின்றது.

வங்கியானது இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய-மதிப்பீட்டு (இ.க.சு.ம.)கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவம் தொடர்பான அறிக்கையிடல் செயன்முறை என்பவற்றை டிஜிட்டல் பணிச் செயன்முறைக்கு வசதியளிக்கும் இ.க.சு.ம. இன் நிறுவலுடன் பலப்படுத்துகின்றது.

வங்கியியலுக்கான டிஜிட்டல் வழிமுறைகளின் அதிகரித்த பயன்பாட்டின் காரணமாக உயர்வடையும் த.தொ. இடரினை தணிப்பதற்காக, வங்கி சாத்தியமான அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாத்துக்கொள்வதற்காக சைபர் பாதுகாப்பு ஆற்றல்களை விரிவாக்குவதுடன் அமைப்புமுறை இடையூறினையும் வணிகங்களுக்கான தாக்கத்தையும் சிறுமமாக்கும். மேலும், வங்கியானது 2023 இலிருந்து தொடர்ந்து ISO 27001:2022 நியமங்களை (தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புமுறை) பராமரிப்பதுடன் அதனைத் தொடரும்.

ஒரு தொடர்ச்சியான அடிப்படையில், வங்கியானது உள்வாரி மற்றும் வெளிவாரிக் காரணிகளிலிருந்து எழுகின்ற இடர்களை தொடர்ந்து இனங்கண்டு, மதிப்பிட்டு முகாமைப்படுத்தும். வங்கி சிறப்பான முகாமைத்துவத்திற்காக முகாமைத்தவ மற்றும் சபை மட்டத்திலான குழுக்களில் இடர் முகாமைத்துவ முன்னேற்றம் குறித்து தொடர்ச்சியாக கலந்துரையாடி மீளாய்வு செய்கின்றது. மேலும், வங்கியானது மூலோபாயத் திட்டத்தினூடாக ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளை சீரமைப்பதற்காக நடவடிக்கைகளை எடுக்கும்.

வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு

வங்கியானது பின்வருவனவற்றின் அடிப்படையில் ஒரு வலுவான மற்றும் சிறந்த ஒழுக்கமுடைய இடர் முகாமைத்துவ வரம்புறுகையினைக் கொண்டுள்ளது. அவையாவன, மூன்று வரிசைகள் பாதுகாப்பு மாதிரி, நிர்ணயிக்கப்பட்ட இடர் பிரபஞ்சம், இடர் சகிப்பின் கட்டமைப்பு, இடர் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் இடர் மதிப்பீட்டு மாதிரிகள் மற்றும் நுட்பங்கள் ஆகும். அத்துடன் வங்கியின் அனைத்து இடர் வெளிப்பாடுகளையும் முகாமைப்படுத்துவதற்கு ஒரு கட்டமைக்கப்பட்ட பொறிமுறையினை உறுதிசெய்வதற்கு அழுத்தப் பரிசோதனையினையும் உள்ளடக்குகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது (IRMF) இடர்களை இனங்காண்பதற்கு, மதிப்பிடுவதற்கு, அளவிடுவதற்கு, தணிப்பதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் அறிக்கையிடுவதற்கு உதவுகின்றது.

வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ கட்டமைப்பின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- இடர் மூலங்கள், நிகழ்வுகள் மற்றும் காரணிகளை இனங்கண்டு புரிந்துகொள்ளுதல்.
- வங்கியின் இடர் வெளிப்பாடுகளை பொருத்தமானவாறு மதிப்பிட்டு முகாமைப்படுத்தல்.
- வங்கியின் மூலதனம் மற்றும் திரவத்தன்மையுடன் இணைந்துள்ள வங்கியிக் இடர் வெளிப்பாடுகளை கண்காணிப்பதற்கு ஒரு வினைத்திறனான முறையினை விருத்திசெய்தல்.
- உள்ளகக் கொள்கைகளுடன் குறிப்பாக இடர் முகாமைத்துவம் தொடர்பாக, இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்காக ஒரு இணக்கப்பாட்டு பொறிமுறையினை நிறுவுதல்.
- வங்கி பூராவும் அனைத் பொருத்தமான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை தெரியப்படுத்துவதற்கு ஒரு வினைத்திறனான தொடர்பாடல் பொறிமுறையினை நிறுவுதல்.
- திடமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தழுவுதல் மற்றும் துணையளித்தல்.
- வங்கியினுள் ஒரு திடமான இடர் கலாச்சாரத்தினை வளர்த்தல்.
- துறைசார் அளவுகோல்களின் சிறந்த நடைமுறைகளினுள் இடர் ஆளுகையினை பராமரித்தல்.

மூன்று வரிசைப் பாதுகாப்பு

முதல் வரிசைப் பாதுகாப்பு

1

வணிகப் பிரிவுகள்/பெறுநிறுவனச் செயற்பாடு

- இடர் முகாமைத்துவத்துக்கு இடர் இனங்காணல் மற்றும் உரித்துடமை, இடர்கள் வங்கியின் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர் ஆர்வம் மற்றும் இடர் முகாமைத்துவக் கொள்கைகளுள் இருப்பதை உறுதிசெய்தல்.
- சில்லறை, பெருநிறுவன மற்றும் நிறுவன வங்கியியல்
- திறைசேரி
- கிளைச் செயற்பாடுகள்
- தகவல் தொழில்நுட்பம்
- தகவல் பாதுகாப்பு துறை

இரண்டாவது வரிசைப் பாதுகாப்பு

2

இடர் முகாமைத்துவமும் கட்டுப்பாடுகளும்

- இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாட்டிற்கு திசையினை வழங்குதல், ஒரு வினைத்திறனான இடர் முகாமைத்துவக் கொள்கை கட்டமைப்பினை பராமரித்தல் மற்றும் இடர் முகாமைத்துவ கட்டமைப்பின் வினைத்திறனான அமுலாக்கத்திற்கான சுயாதீன கண்காணிப்பு.
- இடர் முகாமைத்துவப் பிரிவு
- இணக்கப்பாட்டுப் பிரிவு
- நிதியியல் பிரிவு
- மனித வளங்கள் பிரிவு

மூன்றாவது வரிசைப் பாதுகாப்பு

3

உறுதிமொழி

- இருக்கின்ற இடர் வெளிப்பாடு, செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளில் சுயாதீன மற்றும் வெளியக உறுதிமொழியினை வழங்குதல் மற்றும் உயர் மட்டத்திலான நிர்வாகம் மற்றும் இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல்.
- உள்ளகக் கணக்காய்வு
- வெளியக் கணக்காய்வு
- ஒழுங்குமுறை இணக்கப்பாடு

இடர் முகாமைத்துவ அறிக்கை

மக்கள் வங்கியின் இடர் பிரபஞ்சம், அதன் வணிகப் பிரிவுகள், செயற்பாடுகள், பூகோள அமைவிடங்கள், மற்றும் சட்ட நிறுவனங்களில் காணப்படும் அனைத்து இடர் வகைகளையும் உள்ளடக்குகின்றது

மூன்று வரிசைகள் பாதுகாப்பு



மக்கள் வங்கியின் இடர் பிரபஞ்சம்

மக்கள் வங்கியின் இடர் பிரபஞ்சம், அதன் வணிகப் பிரிவுகள், செயற்பாடுகள், பூகோள அமைவிடங்கள், மற்றும் சட்ட நிறுவனங்களில் காணப்படும் அனைத்து இடர் வகைகளையும் உள்ளடக்குகின்றது.

வங்கியினால் முகாமைப்படுத்தப்படுகின்றது

நடவடிக்கைகள்	கடன் வழங்கல்	நிதியளித்தல்	வர்த்தகம்	செயற்பாடு	போட்டி	முறைமைப்படுத்தல்
இடர்கள்	கடன் இடர்	திரவத்தன்மை இடர்	சந்தை இடர்	செயற்பாட்டு இடர்	மூலோபாய இடர்	இணக்கப்பாட்டு இடர்
	• தவறுதல் இடர் • செறிவாக்கல் இடர் • தரப்படுத்தல் இடம்பெயர்வு இடர்	• உரித்துவ இடர் • வட்டிவீத இடர்	• பண்ட இடர் • நாணயமாற்று வீத இடர்	• மக்கள் இடர் • த.தொ.இடர் • இணக்கப்பாடு இடர் • வணிகத் தொடர்ச்சி இடர் • சைபர் பாதுகாப்பு இடர்	• நற்பெயர் இடர் • வணிக இடர்	• சட்ட இடர்

தாக்கத்தை மதிப்பிடுவதற்கு வங்கியினால் கண்காணிக்கப்படும் இடர்கள்

பூகோள அரசியல்	பாரிய பொருளாதாரம்	முறைமைப்படுத்தல்

இடர் சகிப்புக் கட்டமைப்பு



குழும இடர் முகாமைக் கட்டமைப்பு

- கடன் இடர் முகாமை கட்டமைப்பு
- சந்தை இடர் முகாமை கட்டமைப்பு
- செயற்பாட்டு இடர் முகாமை கட்டமைப்பு
- திரவத்தன்மை இடர் முகாமை கட்டமைப்பு
- இணக்கப்பாட்டு இடர் முகாமை கட்டமைப்பு

அழுத்தம் மற்றும் காட்சி சோதனை கட்டமைப்பு





மூலதன முகாமை கட்டமைப்பு

- ஒழுங்குமுறை மூலதனம்
  - மூலோபாயத் திட்டம்
  - ICAAP கீழான BASEL III
- பொருளாதார மூலதனம்
  - செயற்திறன் முகாமைத்துவம்
  - செயன்முறை தர முகாமைத்துவம்

இடர் சகிப்பு

இடர் சகிப்பு என்பது வங்கி அதன் மூலோபாயக் குறிக்கோள்களை அடைவதற்காக பொறுப்பேற்க விரும்பும் இடரின் மொத்த மட்டத்தினை வெளிப்படுத்துகின்றது மற்றும் இது மீளாய்வு செய்யப்பட்டு சபையினால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படுகின்றது. இது வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயம், வணிகச் சூழல் மற்றும் பங்குதாரர்களின் தேவைப்பாடுகளுடன் சீரமைப்பதை உறுசெய்வதற்காகும்.

மக்கள் வங்கியின் இடர் சகிப்பு 31 டிசம்பர் 2023 எதிர் 31 டிசம்பர் 2022

கடன் இடர் ஆர்வம்				உள்ளவாறான நிலைமை	
	உயர் இடர்	மத்திம இடர்	குறைவான இடர்	31 டிசம்பர் 2022	31 டிசம்பர் 2023
வலுக்குன்றிய கடன்கள் (கட்டம்3) விகிதம் %	>7	3.5 - 7	< 3.5	12.78	8.83
வலுக்குன்றல் (கட்டம்3) கட்டம் 3 கடன்களுக்கு விகிதம்%	< 30	30 – 50	> 50	29.88	40.96
காலங்கடந்தவை (%)	>12	6-12	<6	12.87	12.75
இலாப நட்ட கட்டணம் (%)	>50	35-50	<35	162.10	48.47
செறிவாக்கல் (HHI முறை)	>0.25	0.15 – 0.25	<0.15	0.20	0.21
மீள்செலுத்தல் (%)	<10	0 – 20	>20	13.44	15.76
த.மே.ப. மிகை (%)	>20	10 – 20	<10	11.76	65.36
வெளிநாட்டு வெளிப்பாடு (OBU) (%)	>5	3 - 5	<3	1.97	1.45

இடர் முகாமைத்துவ அறிக்கை

செயற்பாட்டு இடர் சகிப்பு

செயற்பாட்டு இடர் சகிப்பு				உள்ளவாறான நிலைமை	
	உயர் இடர்	மத்திம இடர்	குறைவான இடர்	31 டிசம்பர் 2022	31 டிசம்பர் 2023
செயற்பாட்டு நட்டங்கள் - உள்ளக மோசடிகள்	>5	1-5	0	4	2
செயற்பாட்டு நட்டங்கள் - வெளிவாரி மோசடிகள் (அடகு பிடித்தல்)	>300	150-300	<150	194	237
மொத்த செயற்பாட்டு செலவினங்களுக்கு மொத்த செயற்பாட்டு நட்டங்கள் (%)	>1.0	0.5-1.0	<0.5	0.3	0.17
முறைப்படியான கிடைப்புத்திறன் (%)					
உயர் இக்கட்டானது (%)	<97.5	97.5 -99.9	>99.9	99.9	99.95
மத்திம இக்கட்டானது (%)	<95	95 - 97.5	>97.5	99.2	99.89
குறைவான இக்கட்டானது (%)	<87	87 - 90	>90	100	100
சராசரியிலும் பார்க்க குறைவாக தரப்படுத்தப்பட்ட கிளை கணக்காய்வுகளின் சதவீதம்	>10	5 - 10	<5	5.6	13.41

சந்தை இடர் சகிப்பு

சந்தை இடர் சகிப்பு				உள்ளவாறான நிலைமை	
	உயர் இடர்	மத்திம இடர்	குறைவான இடர்	31 டிசம்பர் 2022	31 டிசம்பர் 2023
அந்நியசெலாவணி நட்டங்கள்	>10%	5% -10%	<5%	Nil	Nil
FIS வர்த்தக நட்டங்கள்	>10%	5% - 10%	<5%	Nil	Nil
ADR	>85%	75% - 85%	<75%	79.97%	69.43%
SLAR	>21%	21% - 24%	>24%	21.37%	37.40%
முதிர்வு பொருத்தமின்மை விகிதம் $\left[\frac{\text{Cumulative gap 1 year}}{\text{Total Deposits}}\right]$	>+/ 35%	+/- (25% - 35%)	< +/- 25%	-71.22%	-38.77%

Cumulative gap 1 year - திரண்ட இடைவெளி 1 வருடம்
Total Deposits - மொத்த வைப்புக்கள்

இடர் நிர்வாகம்

வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பானது வங்கியில் உயர் தரத்திலான கூட்டாண்மை ஆளுகை கட்டமைப்பு காணப்படுவதனை உறுதிசெய்கின்றது. இது ஒரு வலுவான குழுக் கட்டமைப்பு மற்றும் உரிய முகாமைத்துவக் குழுங்கள், சபைக் குழுக்கள் மற்றும் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விரிவான கூட்டாண்மை கொள்கைகள் மற்றும் வரையறைகளை உள்ளடக்குகின்றது.

வங்கியின் இடர் நிர்வாகக் கட்டமைப்பானது முறைமைப்படுத்தல் பணிப்புரைகள் மற்றும் துறையின் சிறந்த நடைமுறைகளுடன் இணக்கப்பாடு காண்பதனை உறுதிசெய்கின்றது. பணிப்பாளர்கள் சபையான இடர் மேற்பார்வைக்கு மற்றும் முன்னுரிமைக்கு உச்சநிலை பொறுப்பினை கொண்டுள்ளதுடன், இவை இடர் ஆர்வ மட்டங்களை தீர்மானித்தல், இடர் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் இடர் வெளிப்பாடுகளின் வினைத்திறனான முகாமைப்படுத்தலை உறுதிப்படுத்துகின்றது. இடர் முகாமைத்துவம் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதற்கு சபைக்கு பல உப குழுக்கள் மற்றும் நிறைவேற்று முகாமைத்துவக் குழுக்களினால் பொருத்தமானவாறு துணையளிக்கப்படுகின்றன. இது சபை மட்டத்திலான மேற்பார்வையினை உறுதிப்படுத்தும்வேளை இடர் உருவாக்கம் மற்றும் இடர் வெளிப்பாடுகளின் அங்கீகாரத்திற்கும் இடையேயான கடமைகளின் தெளிவான வேறுபடுத்தலை வழங்குகின்றது. சபையும் இடர் குழுக்களும் அவற்றின் உரிய சாசனங்களது பணிப்பின் கீழ் செயற்படுகின்றன.

வங்கியின் இடர் நிர்வாகக் கட்டமைப்பு



பணிப்பாளர்கள் சபை

இடர் சகிப்பினை அமைக்கின்றது

இடர் வெளிப்பாட்டினை வரையறை செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் பொறுப்பாயுள்ளது.



சபை உப குழுக்கள்

சபை முதலீட்டு வங்கியியல் குழு (BIBC)

முதலீடு தொடர்பான அனைத்து தீர்மானங்கள் மற்றும் பொறுத்தமான கொள்கைகளை அங்கீகரிக்கின்றது

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)

ஒட்டுமொத்த இடர் தோற்றுருவத்தில் மீளாய்வுகளும் அறிக்கைகளும்

இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை மீளாய்வு செய்தல்

ஒட்டுமொத்த இடர் ஆர்வத்தினை சபைக்கு பரிந்துரைத்தல்

சபை நிர்வாகக் கடன் குழு (BECC)

கடன் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அங்கீகரித்தல்

பாரிய கடன் வெளிப்பாடுகளை அங்கீகரித்தல்

கடன் தரம் பற்றிய கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்

சபை கணக்காய்வுக் குழு (BAC)

நிதியியல் அறிக்கையிடல் செயன்முறைகள் மற்றும் கொள்கைகளை மீளாய்வு செய்தல்

செயற்பாட்டு இடர்களை இனங்காணுதல்

கிளை வலையமைப்பு முழுவதும் சிறந்த நடைமுறைகள் மற்றும் சாத்தியமான தர உறுதிமொழியினை அறிவித்தலும் ஊக்கமளித்தலும்

பி.பொ.மு. - இடர் முகாமைத்துவம்

பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி

இணக்கப்பாட்டு அதிகாரி

பி.நி.அ./பொ.மு.

பிரதம உள்ளக கணக்காய்வாளர்



முகாமைத்துவக் குழுக்கள்

கடன் இடர் முகாமைத்துவம்

சந்தை இடர் முகாமைத்துவம்

செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்

ஏனைய இடர் முகாமைத்துவம்

திரவத்தன்மை

மூலோபாயம்

நற்பெயர்

செறிவாக்கல் போன்றவை

சொத்து மற்றும் பொறுப்புக் குழு (ALCO)

சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்களில் கண்காணித்து அறிக்கையிடல்

சபைக்கு தொடர்புடைய கொள்கைகளை மீளாய்வு செய்து பரிந்துரைத்தல்

கடன் இடர் முகாமைத்துவக் குழு (CRMC)

கடன் இடர் சிக்கல்களை கண்காணித்து மீளாய்வு செய்தல்

தெளிவான கடன் கொள்கைகளை உருவாக்குதல்

செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு (ORMC)

செயற்பாட்டு இடர் சிக்கல்களை கண்காணித்து மீளாய்வு செய்தல்

தகவல் பாதுகாப்பு வழிநடத்தல் குழு (ISSC)

தகவல் பாதுகாப்பு சிக்கல்களை கண்காணித்து மீளாய்வு செய்தல்

இடர் முகாமைத்துவ அறிக்கை

வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமை கட்டமைப்பின் செயற்பாட்டுக் கட்டமைப்பு





அழுத்தப் பரிசோதனை

அழுத்தப் பரிசோதனை என்பது வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகையின் ஒரு முக்கிய கூறாகும். அது வங்கி மற்றும் குழுமத்தின் இடர் ஆர்வக் கூற்றினை ஒருங்கிணைக்கின்றது. உள்ளார்ந்த இடர்களை மதிப்பிடுவதற்கு இடர் முகாமைத்துவப் பிரிவானது வழமையாக, நிகழ்வெண், தீவிரம், மற்றும் வங்கியின் தேக்கங்கள். வணிகங்களிலான சிக்கல்களினால் மாற்றமடையும் ஒரு வரம்பினுள் பரிசீலிக்கப்பட்டு விளைவுகள் ALCO மற்றும் BIRMC இற்கு அறிக்கையிடப்படுகின்றது.

அழுத்தப் பரிசோதனை என்பது வித்தியாசமான நிதியியல் சூழ்நிலைமைகளுக்கு எவ்வாறு சொத்து மற்றும் பொறுப்புத் தேக்கமானது எதிர்செயலாற்றும் என்பதை தீர்மானிப்பதற்கு கடைப்பிடிக்கப்படும் ஒரு உருவகப்படுத்தல் நுட்பமாகும் என்பதுடன் இவை நிகழ்வெண், தீவிரம் மற்றும் சிக்கல்களில் மாறுபடலாம். இவை காலாகாலம் நடாத்தப்படுவதுடன், இது போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கல் எதிர்பாராத நட்டங்கள் மற்றும் ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு கிடைக்கக்கூடியதனை உறுதிப்படுவத்துவதற்காகும்.

அழுத்த பரிசோதனை என்பது வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை செயன்முறையின் (ICAAP) ஒரு ஒருங்கிணைந்து அம்சமாகும். வங்கியானது வங்கியின் இடர் தோற்றுருவம் மற்றும் நிதியியல் நிலைமையில், உழைப்புகள், மூலதனம் மற்றும் பாரியபொருளாதார மற்றும் சந்தை மாறிலிகளின் காரணமாக திரவத்தன்மை என்பவற்றிலான சாத்தியமான தாக்கங்கள் உள்ளடங்கலானவற்றை மதிப்பிடுகின்றது. அனைத்து பொருண்மையான இடர் வகைகளும் வகையான அழுத்த பரிசோதனை செயற்பாட்டில் உள்ளடக்கப்படுகின்றன.

BIRMC இனால் வழமையான மீளாய்வுகள் நடாத்தப்படுவதுடன், இது வங்கியின் அழுத்த பரிசோதனை விளைவுகள் மற்றும் அவற்றுக்கு அடிக்கோலான பாரிய அனுமானங்களிலும் ஆகும். ICAAP இற்கான மூலதன திட்டமிடல், மூலோபாயத் திட்டமிடல், இடர் ஆர்வங்களை வரையறைசெய்வதற்கு, மூலோபயா தீர்மானங்களை உள்ளக மற்றும் வெளிவாரி பங்காளிகளுக்கு அறிவிப்பதற்கும், வரையறுக்கப்பட்ட வரன்முறைகளினுள் இடரை முகாமைப்படுத்துவதற்கும் இந்த விளைவுகள் முக்கிய உள்ளீடுகளாகும்.



அழுத்த சோதனை

கடன் இடர்	சந்தை இடர்	திரவத்தன்மை இடர்	செயற்பாட்டு இடர்
அழுத்தக் காட்சிநிலைகள் • சொத்துத் தரத்தில் சீர்குலைவு • கட்டமான சொத்துக்களில் நகர்வுகள் • ECL கூறுகளிலிருந்தான தாக்கம் • முதல் 10 கடன் பெறுநர்களின் சொத்து தரத்திலான அதிகரிப்பு • முதல் 3 தொழில் துறைகளின் சொத்து தரத்திலான அதிகரிப்பு • வழமையாக்கப்பட்ட HHI இலான அதிகரிப்பு	அழுத்தக் காட்சிநிலைகள் • சந்தை வட்டி வீதங்களிலான அசைவுகள் • சந்தை பரிமாற்றல் வீதங்களிலான அசைவுகள் • சந்தை உரித்துவ விலைகளிலான அசைவுகள் • சந்தையில் தங்கத்தின் விலையின் அடிப்படையில் அடகுபிடிப்பதில் உணர்திறன் பகுப்பாய்வு • பொருளாதா நெருக்கடித் தாக்கம்	அழுத்தக் காட்சிநிலைகள் • 'அனல் பணம்" / சிற்றளவு நிதிய மீளெழுப்பதிலான விளைவுகள் • சொத்து மற்றும் பொறுப்பு பருமனிலான மாற்றங்களின் விளைவுகள் • அரசாங்கப் பிணையங்களின் சந்தை பெறுமதியிலிருந்தான விளைவு • உ.த.தி.சொ. மற்றும் தேறிய காசு பாய்ச்சல் பருமனிலான மாற்றங்களின் விளைவுகள்	அழுத்தக் காட்சிநிலைகள் • கடந்த 3 ஆண்டுகளின் (கடந்த 36 மாதங்கள்) அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட சராசரி நட்டத் தொகை • முந்தைய ஆண்டின் (கடந்த 12 மாதங்கள்) அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட நட்டங்களின் தொகை



அழுத்தக் காட்சிநிலை வரம்பு

சிறிய	மத்திமம்	பெரிய

அழுத்தப் பரிசோதனையானது, மைய மூலதனம், மொத்த மூலதனம், மற்றும் மூலதனப் போதுமை விகிதங்கள் ஆகியவற்றிலான உரிய அழுத்த பரிசோதனை வரம்புபுளின் தாக்கத்தையும் மற்றும் நியதிச்சட்ட திரவச்சொத்து விகிதம், திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் என்பவற்றலான தாக்கத்தையும் அளவிடுகின்றது.

கடன் இடர்

கடன் இடர் என்பது குழுமத்தின் முக்கிய இடர் வெளிப்பாடுகளில் ஒன்றாகும் என்பதுடன் இது கடன்கள் மற்றும் முற்பணங்கள் தேக்கம், வாடிக்கையாளர் சார்பில் வழங்கப்பட்ட மேற்கொள்ளப்பட்ட நிதியியல் உத்தரவாதங்கள், நாணயக் கடிதங்களிலிருந்து எழுகின்றது. இந்த இடரானது ஒரு வாடிக்கையாளர் அல்லது ஒரு எதிர்தரத்தவர் வங்கிக்கு அவர்களது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கு தவறுவதிலிருந்து எழுக்கூடிய சாத்தியமான நட்டங்களிலிருந்து எழுகின்றது. தவறுதல் இடர், செறிவாக்கல் இடர், தரப்படுத்தல் மாற்றம் இடர் மற்றும் வலுக்குன்றல் என்பன கடன் இடர்களின் வடிவங்களாகும்.

கடன் இடரினை முகாமைப்படுத்துவதன் குறிக்கோள்கள்

- கடனுக்கு பொருத்தமான அனைத்து முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் (KPI) அடைவதனை உறுதிப்படுத்துவதற்காக தேக்கத்தின் தரத்தைப் பராமரித்தல்.
- கடன் தேக்கத்தின் விவேகமான முகாமைப்படுத்தலூடாக ஒரு நன்கு பன்பமுகப்படுத்தப்பட்ட தேக்கத்தினை பராமரித்தல்.
- பெருமமாக்கப்பட்ட விளைவுகளூடாக ஒரு உகந்த இடர்-வெகுமதி ஈட்டிப்பினை அடைதல்.
- கட்ட சொத்துக்களைப் பொறுத்தளவில் ஒரு உயர் தரத்திலான தேக்கத்தைப் பராமரித்தல் மற்றும் கட்டம் 3 வகைப்படுத்தப்பட்ட கடன்களை சிறுமமாக்குதல்.
- மாற்றமடையும் பாரியபொருளாதார மற்றும் தொழில்துறை காரணிகளுடன் சாத்தியமான கடன் இடரினை முன் இனங்காணுதல்
- முறையான பின் மதிப்பீட்டு செயன்முறையின் மூலம் வழுக்கல்களை இனங்காணுதல்

கடன் இடர் செயற்திறன் மீளாய்வு

2023 இன் இறுதியில் தேறிய கடன்களும் முற்பணங்களும் ரூபா 1.7 பில்லியனாகக் காணப்பட்டன, இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 4.1% வீழ்ச்சியாகும். இது நிதி நிலைமைக் கூற்றில் மொத்த சொத்தக்களின் 56.3% இனை பிரதிநிதித்துவம் செய்கின்றது. சொத்தின் தரமானது முன்னைய ஆண்டில் காணப்பட்ட 12.78% (கட்டம் 3 விகிதம் - தேறிய அடிப்படையில்) 8.83% ஆக மேம்பட்டது.



இடர் முகாமைத்துவ அறிக்கை

கடன் இடர் முகாமைத்தவத்தின் நிர்வாக கட்டமைப்பு



சபை நிறைவேற்றுக் கடன் குழுவானது (BECC) வங்கியின் கடன் இடர் முகாமைத்துவத்திற்கு மேற்பார்வையினை வழங்குகின்றது.

BECC இன் பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வணிகத் தேவைப்பாடுகள், பாரியபொருளாதார நிலைமைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு சபையுடன் கலந்தாலோசித்து கடன் கொள்கைகளை உருவாக்குதலும் இற்றைப்படுத்தலும்.
- சபையின் சம்மதத்துடன் பாரிய கடன் மற்றும் உயர் இடர் வெளிப்பாடுகளை கையாள்வதற்காக கடன் அங்கீகார கட்டமைப்புகளை நிறுவுதல்.
- தேவையற்ற இடர் செறிவாக்கல்களை அகற்றுவதற்காக தனிநபர் கடன் வெளிப்பாடுகள் மற்றும் ஒட்டுமொத்த கடன் தேக்கத்தில் காலமுறை மீளாய்வுகளை நடாத்துதல்.
- உயர் இடர் வெளிப்பாடுகளின் வினைத்திறனான முகாமைப்படுத்தல் மற்றும் ஏற்பாடுகளின் போதுமையினை உறுதிப்படுத்தல்
- இடர் தரப்படுத்தல் முறைகள் மற்றும் இடர் அடிப்படையான விலையிடல் மாதிரிகளை விருத்திசெய்து பராமரித்தல்
- ஒரு முன்நிர்ணயிக்கப்பட்ட வரையறைக்கு மேலான கடன் பிரேரணைகளை ஒப்பளித்தல் அல்லது நிராகரித்தல்
- வங்கியின் இடர் ஆர்வத்தினுள் SOE வெளிப்பாடுகளை விவேகமாக முகாமைப்படுத்தல்


கடன் இடரினை முகாமைப்படுத்தல்

1. வலுவான இடர் கொள்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு கட்டமைப்பு	கடன் இடர் கட்டமைப்பானது சபையின் சம்மதத்துடன் BECC இனால் வழமையாக மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றது. சபையினால் அங்கீகரிக்கப்பட் கடன் கொள்கை மற்றும் கடன் செயன்முறை கையேடானது (CPM) வங்கியின் கடன் கலாச்சாரத்தினை வரையறை செய்கின்றது
2. பொறுப்பான கடன் வழங்கல் கலாச்சாரம்	உள்ளக தொடர்பாடல் மற்றும் ஊழியர் பயிற்சியினூடாக வங்கி முழுவதும் இடர் விழிப்புணர்வு மற்றும் பொறுப்பான கடன் வழங்கல் கலாச்சாரமானது வளர்க்கப்படுகின்றது. ஒரு முழுமையான வாடிக்கையாளர் கடன் மதிப்பீடானது கடன் பகிரப்படுவதற்கு முன்னர் அல்லது கடன் வரையறையினை அதிகரிப்பதற்கு முன்னர் நடாத்தப்படுகின்றது. பன்முகமான இடர் காரணிகளை மதிப்பிடுவதற்கும் தவறுதல் மற்றும் நட்டத்திற்கான சாத்தியத்தினை முன்கணிப்பதற்கும் உள்ளக கடன் தரப்படுத்தல் மாதிரிகள் பயன்படுத்தப்படுகின்றன.
3. அதிகாரப் பிரிப்பு	அனைத்து கடன் இடர் வெளிப்பாட்டிற்கான இறுதி அதிகாரமும் பொறுப்பும் பணிப்பாளர் சபையுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடன் அங்கீகார வரையறைகளுக்கான அங்கீகாரமானது சபையினால் BECC இற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. BECC கடன் குழுக்களுக்கும் வணிகப் பிரிவுகளுக்கான அங்கீகார வரையறைகளை ஒப்படைப்பதற்காக அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வணிகப் பிரிவும் தெளிவாக இணைக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பல் மட்டத்திலான இடர் பொறுப்பேற்பு வரையறை மற்றும் கடன் அங்கீகார அதிகாரத்தினைக் கொண்டுள்ளன ஒரு கடன் வசதிக்கான பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னரான பொருண்மையான மாற்றங்கள் (காலத்தில், உடன்படிக்கையில் அல்லது பிணையீட்டுச் சொத்து கட்டமைப்பு போன்றவற்றிலான திருத்தங்கள்) ஆரம்ப அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரத்தின் அங்கீகாரம் தேவைப்படும். இடர் மதிப்பீடு மற்றும் கண்காணிப்பிற்கு பின்னரான பொறுப்பின் பிரிப்பானது கடன் மதிப்பீட்டு வழிகாட்டிகள் மற்றும் திறன்களின் தேர்ச்சி ஆகியவற்றின் வினைத்திறனான அமுலாக்கத்திற்கு வசதியளிக்கின்றது. கடன் அங்கீகார அதிகாரங்கள் அவர்களது உரிய தரத்தின் பிரகாரம் தனிநபர்களுக்கு ஒப்படைக்கப்படுவதுடன் காலாகால மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
4. கடனாளிகளின் கடன் தரப்படுத்தல்	வங்கி கடன் தகுதியினை மதிப்பிட்டு கடன் பெறுநர்களுக்கு தரப்படுத்தலை ஒதுக்குகின்றது. இது உள்ளக மதிப்பீட்டு முறைகள், மதிப்பெண் அட்டைகள் மற்றும் ஒன்பது புள்ளிகள் தரப்படுத்தல் அளவீடுகள் உள்ளடங்கலான பல்வேறு வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாகும். ஒவ்வொரு வகையான கடன் பெறுநரும் வெவ்வேறு இடர் தரப்படுத்தல் மதிப்பெண் அட்டையினைக் கொண்டிருப்பதுடன் இவை BIRMC இனால் காலாகாலம் மீளாய்வு செய்யப்பட்டு செல்லுபடியாக்கப்படுகின்றது.
5. கடன் இடர் தணித்தல் மற்றும் ஈட்டுச்சொத்து முகாமைப்படுத்தல்	ஏதேனும் கொடுக்கப்பட்ட கணக்கு, வாடிக்கையாளர், அல்லது தேக்கத்திலிருந்தான சாத்தியமான கடன் நட்டங்களைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள், கடன் காப்புறுதி, கடன் மூலாதாரங்கள் மற்றும் உத்தரவாதங்களினூடாக கட்டமைத்தல், பிணைச்சொத்து மற்றும் ஈடுகட்டல் உடன்படிக்கைகளை உள்ளடக்குகின்றன. பிணைச்சொதுக்கள் வங்கியின் பிணைச்சொத்து கொள்கையின் பிரகாரம் பெறப்படுவதுடன், பிரதான வகையான பிணைச்சொத்துக்கள், அசையும் மற்றும் அசையா ஆதன ஈட்டுக்கடன்கள், காசு வைப்புகள், பொறியும் இயந்திரமும், பங்குகளிலான ஈட்டுக்கடன்கள், புத்தகக் கடன்கள், கூட்டாண்மை மற்றும தனிப்பட்ட உத்தரவாதங்கள் என்பவையாகும்.
6. கடன் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு	கடன் இடர் நிலைமைகள் தொடர்ச்சியான கண்காணிக்கப்பட்டு முகாமைப்படுத்தப்படுகின்றன. கடன் கண்காணிப்பானது வணிகப் பிரிவுகளுடன் இணைந்துள்ள கடன் அதிகாரிகளினால் நடாத்தப்படுகின்றது. இடர் முகாமைத்துவ மற்றும் கடன் கட்டுப்பாட்டுப் பிரிவானது சுயாதீனமாக கடன் பிரேரணைகளின் வழங்குவதற்கு முன்னரான மீளாய்வு மற்றும் வழங்கியதற்குப் பின்னரான மீளாய்வுகளை நடாத்துகின்றன. கடன் அதிகாரிகள் அவர்களது வாடிக்கையாளர்களது கடன் இடர்களை முகாமைப்படுத்துவதற்கான உரிய நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு கடன் அதிகாரி / உறவுமுறை முகாமையாளர் அவர்களது உரிய கடன் பெறுநர்களின் கடனைக் கண்காணிப்பதற்கு பொறுப்பாளியாவார்கள். காலாகால கடன் மீளாய்வு அறிக்கைகள், கடன் இடர்களின் மேலதிக மீளாய்வு மற்றும் கண்காணிப்பிற்காக BECC, BIRMC மற்றும் CRMC இற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.
7. நிர்ணயிக்கப்பட்ட கடன் ஆர்வத்திற்கு இணையான விவேகமான கடன் வரையறைகள்	துறை / கைத்தொழில், கடன் தரப்படுத்தல் அடிப்படையிலான, அரச உடைமை நிறுவனங்கள், பூகோளவியல் வரையறைகள் என்பவற்றை நிறுவி, தனிநபர் கடன் பெறுநர் மற்றும் ஆகக்கூடிய கடன் வசதித் தொகை போன்ற முறைமைப்படுத்தல் வரையறைகளுடன் கடுமையாக இணங்குதல்.
8. தொடர்ச்சியான பின்தொடரல் மற்றும் ஒரு விரிவான மீள்செலுத்தல் செயன்முறையினை நிறுவுதல்	வங்கி ஒரு மீள்செலுத்தல் செயன்முறையினை நிறுவியுள்ளதுடன், இது சகல கடன்பெறுநர்களையும் சமமாகக் கருதுவதுடன் முற்றாகத் தீர்ப்பனவு செய்யப்படும்வரைக்கும் அனைத்து கடன்களும் தொடர்ச்சியாக பின்பற்றப்படுவதனை உறுதிசெய்தல்.
9. நேரத்துடனான எச்சரிக்கை சமிக்ஞைகள் உள்ளடங்கலான மறுசீரமைப்பு மற்றும் மீட்டல் செயன்முறை	வங்கியானது, வழமையான மீள்கட்டமைப்பு மற்றும் மீள்தவணையிடல் செயன்முறைகளுக்கு அப்பால் அழுத்தத்திற்குள்ளான வணிகக் கடன் பெறுநர்களை விளித்துரைப்பதற்காக ஒரு முழுவதுமான மறுசீரமைத்தல் மற்றும் மீள் அட்டவணை செயன்முறைகளைக் கொண்டுள்ளது.
10. வலுக்குன்றல்	கட்டமாக்கப்பட்ட சொத்துக்களை கையாள்வதற்காக ஒரு வலுக்குன்றல் கொள்கை அமுலிலுள்ளது. கடன் வலுக்குன்றலுக்கான ஏற்பாடானது ஐந்தொகையில் கொண்டு செல்லப்படும் கடன் தொகையிலிருந்து ஒரு கழித்தலாக பதிவுசெய்யப்படுகின்றது. கடன் வலுக்குன்றலுக்கான ஏற்பாடானது வருமானக் கூற்றில் மேற்கொள்ளப்படுவதுடன், வலுக்குன்றல் மதிப்பீடுகள் வங்கியின் அனைத்து வெளிப்பாடுகளுக்கும் நடாத்தப்படுகின்றது. கடன் வலுக்குன்றல்கள் நிதியியல் பிரிவினால் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யவுவதுடன், இதன் சரிபார்த்தலானது இடர் முகாமைத்துவ மற்றும் கடன் கட்டுப்பாட்டுப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்றது.
11. பயிற்சியும் அபிவிருத்தியும்	கடன் வழங்கல் ஊழியர்களுக்கு வங்கியானது தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தியினை நிறுவியுள்ளதுடன், இது சந்தை மாற்றங்கள் மற்றும் கடன்பெறுநர் தேவைப்பாடுகளுக்கமைய அறிவினை உரிய நேரத்தில் இற்றைப்படுத்திக்கொள்வதற்காகும். பயிற்சியும் அபிவிருத்தியும் கடன் மதிப்பீட்டுச் செயன்முறை மற்றும் கடன் வழங்கப்பட்டதன் பின்னரான செயலாக்க முகாமைத்துவத்தில் உயர் தரத்தினை உறுதிசெய்கின்றது.

இடர் முகாமைத்துவ அறிக்கை

ஒரு அரசு உடைமை வங்கியாக, மக்கள் வங்கி அரசு உடைமை நிறுவனங்களுக்கு (SOEs) கணிசமான வெளிப்பாட்டினையும் ஏனைய பிரதான வெளிப்பாடுகளையும் கொண்டிருந்தது...

பெறுநிறுவன வாடிக்கையாளர்களின் இடர் சுயவிபரம்



மக்கள் வங்கியின் ஆகக்கூடிய கடன் வெளிப்பாடு

	இடர் தரப்படுத்தல்	AAA	AA	A	BBB	BB	B	CCC	CC	C
பெருநிறுவன வாடிக்கையாளர் எண்ணிக்கை	31 டிசம்பர் 22	17	51	87	82	82	54	34	13	19
	31 டிசம்பர் 23	2	15	52	66	77	40	26	14	24

கட்ட சொத்து ஏற்பாடு காப்பீட்டு விகிதம்

கட்டம்	ஏற்பாட்டுக் காப்பீடு	
	2023	2022
கட்டம் 1	0.77%	0.48%
கட்டம் 2	2.90%	6.94%
கட்டம் 3	41.65%	32.22%
மொத்தம்	7.42%	6.93%

கடன் இடம்பெயர்வு இடர்

இடம்பெயர்வு இடரானது காலப்போக்கில் கடன் பெறுநரின் கடன் தரத்தின் மோசமடைதல் காரணமாக எழுவதுடன், இது கடன் தகைமையிலான வீழ்ச்சியினை தூண்டுகின்றது. பெருநிறுவன வாடிக்கையாளர்களது கடன் தரப்படுத்தல் இடம்பெயர்வினை வங்கி நெருக்கமான அவதானிக்கின்றது.

2018 இலிருந்து 2023 வரை தரமிறக்கப்பட்ட பெருநிறுவன வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை

ஆண்டு	நிலைமாற்றலில் உள்ள வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை	தரமிறக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் சதவீதம்
2018	322	19
2019	318	20
2020	320	21
2021	321	11
2022	329	14
2023	300	37

கடன் செறிவாக்கல் இடர்

செறிவாக்கல் இடர் என்பது, ஒரு தனிநபர் எதிர்தரத்தவர், கைத்தொழில் துறைகள் அல்லது பூகோளவியல் பிராந்தியங்களின் வெளிப்பாடானது கூட்டாக ஒரு சாதகமற்ற திசையில் நகரும்போது வங்கியின் கடன் மற்றும் முற்பணங்கள் தேக்கத்திலிருந்தான பெறுமதியில் அல்லது விளைவிலான நட்டத்திற்கான சாத்தியமாகும்.

அரச உடைமை வங்கியாக, மக்கள் வங்கியானது அரச உடைமை நிறுவனங்களுக்கு கணிசமான வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன், ஏனைய பிரதான வெளிப்பாடுகளாக, சிற்றளவு / தனிப்பட்ட கடன்கள், நிறுவன கடன்கள், SME மற்றும் அபிவிருத்தி கடன்கள் மற்றும் அடகு பிடித்தல் என்பன காணப்படுகின்றன.

பாரிய கடன் வெளிப்பாடுகளின் செறிவாக்கல் (ரூபா 100 மில்லியனுக்கு மேல்)

31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறானது	கைத்தொழில் துறைகளின் எண்ணிக்கை	தனிநபர் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை	நேரடியான வெளிப்பாடு ரூபா. மில்.	மறைமுகமான வெளிப்பாடு ரூபா. மில்	மொத்தம் ரூபா மில்.	ஐந்தொகையின் சதவீதமாக நேரடியான வெளிப்பாடு
அ.உ.நி. உடன்	18	385	977,678	172,114	1,149,792	54.83
அ.உ.நி. அல்லாதது	17	343	207,997	45,998	253,995	11.66

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறானது	கைத்தொழில் துறைகளின் எண்ணிக்கை	தனிநபர் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை	நேரடியான வெளிப்பாடு ரூபா. மில்.	மறைமுகமான வெளிப்பாடு ரூபா. மில்	மொத்தம் ரூபா மில்.	ஐந்தொகையின் சதவீதமாக நேரடியான வெளிப்பாடு
அ.உ.நி. உடன்	18	379	956,757	75,053	1,031,810	55.96
அ.உ.நி. அல்லாதது	17	340	184,146	35,338	219,484	10.77

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மக்கள் வங்கியின் முதல் 20% ஆன வாடிக்கையாளர்கள்

ஆண்டு	முதல் 3%	முதல் 5%	முதல் 10%	முதல் 20%
அ.உ.நி. உள்ளடங்கலாக				
2022	52	62	71	78
2023	58	65	74	80
அ.உ.நி. நீங்கலாக				
2022	11	17	29	45
2023	16	21	29	42

செறிவாக்கல் இடரினை முகாமைப்படுத்தல்

- தனியாள் கடன்பெறுநர் வரையறை / ஆகக்கூடிய கடன் வசதி வரையறை
- ஹெர்வின்டால்- ஹிர்ஸ்மன் இன்டெக்ஸ் (HHI). HHI ஆனது ரூபா 100 மில்லியனுக்கு மேலான (வரையறை அல்லது நிலுவையிலுள்ளது இதில் எது கூடியதோ) அனைத்து வெளிப்பாடுகளுக்கும் கணிப்பிடப்படுகின்றது. இது (நேரடியான மற்றும் எதிர்பாராவற்றிற்கும்) எதிர்தரத்தவர் மற்றும் துறையின் அடிப்படையில் ஆகும்.
- கைத்தொழில் / துறைகளுக்கு தனித்தனியான வரையறைகள் நிறுவப்பட்டுள்ளதுடன் அ.உ.நி. இற்கும் தனித்தனியான வரையறைகள் ஆகும்.

செறிவாக்கலின் ஒவ்வொரு அளவிற்றும் சகிப்புத்தன்மை மட்டங்கள்

பதின்மான	குறைவான செறிவாக்கல்	மத்திமமான செறிவாக்கல்	உயர் செறிவாக்கல்
HHI	<0.15	0.15 - 0.25	>0.25

2023 ஆம் ஆண்டிற்கான மக்கள் வங்கியின் காலாண்டு ரீதியான நிலைமை

	31 மார்ச் 2023	30 ஜூன் 2023	30 செப்டம்பர் 2023	31 டிசம்பர் 2023
பெயர் செறிவாக்கம் (அ.உ.நி. உடன்)	0.15	0.16	0.16	0.19
பெயர் செறிவாக்கம் (அ.உ.நி. இன்றி)	0.01	0.01	0.01	0.01
துறைசார் செறிவாக்கம் (அ.உ.நி. உடன்)	0.13	0.13	0.14	0.15
துறைசார் செறிவாக்கம் (அ.உ.நி. இன்றி)	0.09	0.08	0.08	0.07

இடர் முகாமைத்துவ அறிக்கை

கடன் இடர் அழுத்தப் பரிசோதனை

கடன் இடர் அழுத்தப் பரிசோதனைகள் எவ்வாறு சில காட்சிநிலைகள் மக்கள் வங்கியின் மூலதனப் போதுமை மட்டங்களை பாதிக்கின்றது என்பதைத் தீர்மானிப்பதற்காக நடாத்தப்படுகின்றது. இந்த அழுத்தப் பரிசோதனை விளைவுகள் ALCO மற்றும் BIRMC இன் மீளாய்விற்கு அறிக்கையிடப்படுகின்றது.

	சிறிய	மிதமான	பெரிய
ஊயுசு இல் வலுக்குன்றல் தாக்கத்தின் அதிகரிப்பு - உயர் இடர் சூழலில்			
நிலை 1 இலிருந்து நிலை 2 இற்கு மாறுதல்			
திருத்தியமைக்கப்பட்ட மைய மூலதன விகிதம்	12.30%	12.23%	12.16%
திருத்தியமைக்கப்பட்ட மொத்த மூலதன விகிதம்	17.30%	17.23%	17.16%
நிலை 2 இலிருந்து நிலை 3 இற்கு மாறுதல்			
திருத்தியமைக்கப்பட்ட மைய மூலதன விகிதம்	12.10%	11.84%	11.57%
திருத்தியமைக்கப்பட்ட மொத்த மூலதன விகிதம்	17.10%	16.83%	16.57%
நிலை 1 இலிருந்து நிலை 2 இற்கும் நிலை 2 இலிருந்து நிலை 3 இற்கு ஒரே நேர நிலைமாற்றங்கள்			
திருத்தியமைக்கப்பட்ட மைய மூலதன விகிதம்	12.04%	11.70%	11.37%
திருத்தியமைக்கப்பட்ட மொத்த மூலதன விகிதம்	17.03%	16.70%	16.36%
தவறுதலுக்கான சாத்தியத்தில் அதிர்வு			
திருத்தியமைக்கப்பட்ட மைய மூலதன விகிதம்	12.33%	12.29%	12.24%
திருத்தியமைக்கப்பட்ட மொத்த மூலதன விகிதம்	17.32%	17.28%	17.24%
தவறுதல் வழங்கப்பட்ட நட்டத்திலான அதிர்வு			
திருத்தியமைக்கப்பட்ட மைய மூலதன விகிதம்	12.30%	12.22%	12.10%
திருத்தியமைக்கப்பட்ட மொத்த மூலதன விகிதம்	17.29%	17.22%	17.10%
தவறுதலுக்கான சாத்தியத்தில் அதிர்வு மற்றும் தவறுதல் வழங்கப்பட்ட நட்டத்திலான அதிர்வு			
திருத்தியமைக்கப்பட்ட மைய மூலதன விகிதம்	11.80%	11.17%	10.49%
திருத்தியமைக்கப்பட்ட மொத்த மூலதன விகிதம்	16.79%	16.16%	15.48%
பாரிய கடன் பெறுநர்களினாலான தவறுதல்கள்			
திருத்தியமைக்கப்பட்ட மைய மூலதன விகிதம்	12.23%	12.16%	12.09%
திருத்தியமைக்கப்பட்ட மொத்த மூலதன விகிதம்	17.22%	17.15%	17.08%
பாரிய மூன்று கைத்தொழில் துறைகளினாலான தவறுதல்கள்			
திருத்தியமைக்கப்பட்ட மைய மூலதன விகிதம்	12.12%	11.88%	11.63%
திருத்தியமைக்கப்பட்ட மொத்த மூலதன விகிதம்	17.12%	16.87%	16.63%

சந்தை இடர்

சந்தை இடர் என்பது வட்டிவீதங்கள், பரிமாற்றல் வீதங்கள், பங்கு விலைகள் மற்றும் பண்டங்களின் விலைகள் போன்ற சந்தையினால் இயக்கப்படும் மாறிலிகளிலான அசைவுகளின் காரணமாக எழக்கூடிய சாத்தியமான இழப்பாகும்.

மக்கள் வங்கியானது சந்தை இடருக்கு பிரதானமாக வர்த்தகப் புத்தகம் மற்றும் வங்கியியல் புத்தகத்திலிருந்து எழுகின்ற வட்டி வீத இடர்களினால் வெளிப்பாடுடையதாய் உள்ளது. அந்நியசெலாவணி இடருக்கான வங்கியின் வெளிப்பாடானது இ.ம.வ. இன் தேசிய திறந்த நிலைகளது பராமரிப்புடன் கடுமையான இணக்கப்பாடு மற்றும் அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்களிலான உள்ளக வரையறைகளுடனான இணக்கப்பாடு என்பவற்றினூடாக முகாமைப்படுத்தப்படுகின்றது. பங்கு விலை இடருக்கான வெளிப்பாடானது குறைவான பருமனிலான வர்த்தகத் தேக்கத்தின் காரணமாக வரையறையாக காணப்படுகின்றது.

சந்தை இடர் முகாமைத்துவத்தின் குறிக்கோள்கள்


- முன்நிர்ணயிக்கப்பட் இடர் ஆர்வத்தினுள் வணிக அலகுகளின் இடர்-வெகுமதி உறவினை மேம்படுத்தல்.
- எதிர்பார்க்காத சந்தை தளம்பல்களின் காரணமாக ஏற்றுக்கொள்ளவியலாத நட்டங்களுக்கான வெளிப்பாட்டினை தவிர்த்தல்.
- வங்கியின் அனைத்து செயற்பாடுகளும் நிர்ணயிக்கப்பட்ட கடன் ஆர்வத்தினுள் இருப்பதனை உறுதிசெய்தல்.

மக்கள் வங்கியின் சந்தை இடர் வெளிப்பாடு 2022 எதிர் 2023

ஆண்டு	2022		2023	
	வர்த்தகப் புத்தகம் ரூ. மில்.	வங்கியியல் புத்தகம் ரூ. மில்.	வர்த்தகப் புத்தகம் ரூ. மில்.	வங்கியியல் புத்தகம் ரூ. மில்.
சொத்துக்கள்				
திறைசேரி உண்டியல்கள்	4,443	2,296	143,131	63,267
திறைசேரி முறிகள்	872	898,577	814	760,081
SLDB			-	-
இலங்கை அரசாங்க முறிகள்		7,689	-	-
ஏனைய முதலீடுகள்	242	18,810	240	16,799
பொறுப்புக்கள்			-	-
தொகுதிக்கடன்கள்		36,603	-	46,997

சந்தை இடரின் ஆளுகைக் கட்டமைப்பு





- சபை மட்டத்தில், BIRMC வங்கியின் சந்தை இடர் வெளிப்பாட்டினை கண்காணிப்பதற்கும், கொள்கைகள் மற்றும் இடர் ஆர்வ எல்லைகளை உருவாக்குவதற்கும் மற்றும் சந்தை இடரினை முகாமைப்படுத்துவதில் சபைக்கு பரிந்துரைகளை வழங்குதல் என்பவற்றுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.
- நிறைவேற்றுநர் மட்டத்தில், சொத்து மற்றும் பொறுப்புக் குழு (ALCO) சந்தை இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை அமுலாக்குவதற்கு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இடர் ஆர்வத்தினுள் சந்தை இடர் வெளிப்பாடுகளை பராமரிப்பதற்கும் பொறுப்பாயுள்ளது.
- இடர் முகாமைத்துவப் பிரிவானது சந்தை இடர் மதிப்பீடு, கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் உள்ளடங்கலான நாளாந்த இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாயுள்ளது.
- திறைசேரி நடுக் காரியாலயமானது (TMO), திறைசேரி முன் காரியாலயம் மற்றும் பின்புலக் காரியாலய செயற்பாடுகளிலிருந்து சுயாதீனமாக வங்கியின் திறைசேரி கொடுக்கல் வாங்கல்களை அளவிட்டு கண்காணிக்கின்றது. TMO சபையினால் நிறுவப்பட்ட இடர் வரையறைகளுடனான் இணக்கப்பாட்டினை உறுதிசெய்கின்றது.

இடர் முகாமைத்துவ அறிக்கை

சந்தை இடரினை முகாமைப்படுத்தல்

1.	**கொள்கைகளின் இருப்புகள்**	வங்கியின் சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கை கட்டமைப்பில் உள்ளடங்குபவை: • திறைசேரிக் கொள்கை, • முதலீட்டுக் கொள்கை, • இடர் முகாமைத்துவக் கொள்கை, • அழுத்தப் பரிசோதனைக் கொள்கை.
2.	**இடர் மதிப்பீடுகள்**	சந்தை இடர் மதிப்பீட்டிற்கு கடைப்பிடிக்கப்படும் கருவிகளில் உள்ளடங்குபவை: • இடரில் உள்ள பெறுமதி (VaR), • காலவெளி இடைவெளி • உணர்திறன் பகுப்பாய்வு • அழுத்தப் பரிசோதனை. பெறுமதியிடல் வீதங்கள் மற்றும் முறைகள் சுயாதீன சரிபார்த்தலுக்கு உட்பட்டவையாகும்.
3.	**சந்தை இடர் வரையறைகள்**	சந்தை இடர் வரையறைகள் இடர் முகாமைத்துவத்தினால் மதிப்பிடப்பட்டு ALCO இற்கு பரிந்துரைக்கப்பட்டு அதன் பின்னர் BIRMC மற்றும் சபை அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. திறந்த நிலை வரையறைகள், எதிர்தரத்தவர் வரையறைகள், மற்றும் வர்த்தகர் வரையறைகள் போன்ற வரையறைகள் அங்கீகரிக்கப்பட்ட சந்தை இடர் வரையறைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. TMO வரையறைகளுக்கு எதிரான செயற்திறனை கண்காணித்து ஒரு மாதாந்த அடிப்படையில் ALCO மற்றும் BIRMC இற்கு அறிக்கையிடுகின்றது. இந்த வரையறைகள் இடர் முகாமைத்துவப் பிரிவினால் காலாகாலம் மீளாய்வு செய்யப்பட்டு BIRMC மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது.
4.	**செயல் தூண்டல் புள்ளிகள்**	விசேட முகாமைத்துவ செயற்பாட்டினை தூண்டும் இடர் வரம்புகள், இடர் ஆர்வக் கூற்றினால் நிர்ணயிக்கப்பட்ட மட்டங்களினுள் சந்தை இடர் வெளிப்பாடுகள் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிடப்படுகின்றன.

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான சந்தை இடர் வரையறைகள் மற்றும் நிலைகள்

சந்தை இடர்		சந்தை இடர் ஆர்வம்	
		அங்கீகரிக்கப்பட்ட வரையறை	31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு
அ.செ. தேறிய திறந்த நிலை		USD +10Mn / -25 மில்.	இணங்கியுள்ளது
இடரிலான பெறுமதி (VaR) (Conf. Level 99%, 1 நாள்)	– நாணயம்	USD 250k	இணங்கியுள்ளது
திரண்ட நட்டங்கள்	– FIS வர்த்தகம் (எய்தப்பெற்றது)	ரூ. 3 மில்.(நாளொன்றுக்கு)	இணங்கியுள்ளது
	(எய்தப்பெறாதது)	ரூ. 500 மில்.	இணங்கியுள்ளது
முன்னிலை அ.செ. இடைவெளி வரையறை		USD 600 மாதங்கள் மில்லியன்கள்	இணங்கியுள்ளது
இலங்கை அரச பிணையங்கள்	– வர்த்தகம்	ரூ. 250 பில்.	இணங்கியுள்ளது
	– முதலீடு	ரூ. 1,000 பில்.	இணங்கியுள்ளது
	– AFS	ரூ. 20 பில்.	இணங்கியுள்ளது
சர்வதேச இறையாண்மை முறி	– வர்த்தகம்	USD 20 மில்.	இணங்கியுள்ளது
	– முதலீடு	USD 200 மில்.	இணங்கியுள்ளது
ஸ்ரீலங்கா அபிவிருத்தி முறிகள் (SLDB)		USD 750 மில்.	இணங்கியுள்ளது
வங்கிகளுக்கிடையிலான கடன்பெறுகைகள்	– மொத்த வரையறை	USD 917 மில்.	இணங்கியுள்ளது
	– குறுங்கால வரையறை	USD 229 மில்.	இணங்கியுள்ளது
நிகழ்காலப் பெறுமதி அடிப்படை புள்ளி (PVBP) வரையறை		ரூ. 25 மில்.	இணங்கியுள்ளது
அரச பிணைய யுனிட் ட்ரஸ்ட்		ரூ. 2.5 பில்.	இணங்கியுள்ளது
கூட்டாண்மை கடன் வரையறை (தொகுதிக்கடன்கள்)		ரூ. 15 பில்.	இணங்கியுள்ளது
வங்கியல்லாத மு.வ.அ. இற்கான மறுதலை மீள்கொள்வனவு வரையறை		ரூ. 1.5 பில்.	இணங்கியுள்ளது
ஹெயார் கட் வரையறை		10%	இணங்கியுள்ளது
இடைமாற்று நிதியங்களுக்கான வரையறை		75% of O/S 3 மாதங்களுக்கு குறைவான காலத்திற்கு	இணங்கியுள்ளது
வட்டி வீத இடர் (D-Gap +VaR on Fwd. FX)		ரூ. 16.5 பில்.	இணங்கியுள்ளது
பங்கு வர்த்தகத் தேக்கத்தின் முதலீட்டுப் பெறுமதி		Port 1: ரூ. 1 பில். Port 2: ரூ. 1 பில்.	இணங்கியுள்ளது
நட்ட நிறுத்தல் வரையறை (பங்கு வர்த்தகம்)		30%	இணங்கியுள்ளது
S&P SL20 சுட்டியில் பங்குகளின் சதவீதம்		25%	இணங்கியுள்ளது

சந்தை இடர் மீளாய்வு

சந்தை நிலைமைகளை வழமையாக மீளாய்வு செய்வதன்மூலம் வங்கியானது அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் பணிப்புரைகளுடன் கடுமையாக இணங்கியுள்ளது.

சந்தை இடர் என்பது, ஏதேனும் முதலீட்டுத் தீர்மானத்துடன் இணைந்த நிச்சயமற்றதன்மை, மற்றும் அது குறிப்பாக கம்பனியுடன் அல்லது தொழில் துறையுடன் மாத்திரம் இணைந்துள்ளது அல்ல, ஆனால் பணவீக்கம், வட்டி வீதங்கள், சென்மதி நிலுவை நிலைமை, நிதியியல் பற்றாக்குறைகளும் கொள்கைகளும் மற்றும் பூகோள அரசியல் காரணிகள் போன்ற நிதியியல் சந்தையுடன் தொடர்புடைய பல்வேறு பாரியபொருளாதார மாறிலிகள் ஆகும். வங்கியின் சந்தை இடரானது வழங்கல் மற்றும் கேள்வி காரணிகளிலிருந்து எழுவதுடன், பிரதானமாக வட்டி வீதங்கள், பரிமாற்றல் வீதங்கள் மற்றும் சந்தையில் காணப்படும் உரித்துவ விலைகளுக்கு பொருத்தமானவைகள் மற்றும் இது வங்கியின் உழைப்பில் அல்லது அதன் மூலதனத்தின் பொருளாதார பெறுமதியில் மேற்குறிப்பிட்ட முக்கிய மூலங்களிலான பாதகமான மாற்றங்களுக்கு ஒரு உயர்வான உணர்திறனைக் கொண்டவையாகும்.

வங்கியானது அதன் சந்தை இடரினை முறையாக முகாமைப்படுத்தி தணிக்கின்றது. இது சிறப்பாக நிர்ணயிக்கப்பட்ட ஆளுகை கட்டமைப்பினூடாக சந்தை இடருக்கு பங்களிப்புசெய்யும் பல்வேறு அம்சங்களை முகாமைப்படுத்துவதற்காக கடுமையான கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதன் மூலமாகும். இது சந்தை இடர்கள் இனங்காணப்படுவதற்கு, மதிப்பிடுவதற்கு, கட்டுப்படுத்துவதற்க மற்றும் அறிக்கையிடுவதற்கு அனுமதிக்கின்றது. இது ஒதுக்கீடு செய்யப்பட்ட இடர் ஆர்வ மட்டங்களினுள் வங்கி செயற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகும்.

வட்டி வீத இடர் (IRR)

வட்டி வீத இடருக்கான வங்கியின் வெளிப்பாடானது சந்தை வட்டி வீதங்களில் தீவிரமான தளம்பல்களின் மூலம் தேறிய வட்டி வருமானம் பாதிப்படைவதிலிருந்து எழுகின்றது. இது உள்ளார்ந்த வட்டி அறவிடப்படும் சொத்துக்கள், வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்கள் மற்றும் ஐந்தொகைக்கு அப்பாலான உறுப்படிகளில் ஒரு சாத்தியமான தாக்கத்தினைக் கொண்டுள்ளது. கொள்கை வட்டி வீதங்களிலான, சந்தை கடன்வழங்கல் வீதங்களிலான பாதிப்பான மாற்றங்கள் மற்றும் போட்டியாளர் வைப்பு வீதங்கள் பாதிப்படைகின்றன. இவை பணவீக்கம், இறைவரிக்கொள்கை மற்றும் உலகளாவிய சந்தைகள் போன்ற பாரியபொருளாதார காரணிகளுடன் தொடர்புடையனவாகும்.

வட்டி வீத இடர் மீளாய்வு

வட்டி வீதங்களின் அசைவுகளிலிருந்து எழுகின்ற இடர்களை வங்கி பின்வருமாறு முகாமைப்படுத்துகின்றது, வங்கியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஐந்தொகைக்கு அப்பாலான உறுப்படிகள் மற்றும் அவற்றின் உள்ளார்ந்த பெறுமதியிலான மாற்றங்கள் மற்றும் பொருளாதார பெறுமதிகளின் தாக்கங்களை உரிய காலத்தில் மீளாய்வுகள் செய்வதனூடாக மற்றும் சரியான நேரத்தில் அவசியமான செயற்பாடுகளை பெறுவதினாலும் ஆகும்.

வங்கி கணிசமான அரசாங்கப் பிணையங்கள் தேக்கத்தினைக் கொண்டிருப்பதுடன், இதனுடன் இணைந்த இடர் தொகையானது சந்தையில் வட்டி வீத மாற்றங்களுக்கு இவற்றின் விலைகள் எந்தளவுக்கு உணர்திறனுடையவை என்பதில் தங்கியுள்ளது.

வட்டி வீத இடரின் உப பிரிவுகள்:

- மீள்விலையிடல் இடர் - பல்வேறு முதிர்வுகளையுடைன வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீள் விலையிடலில் நேர வித்தியாசத்தின் காரணமாக எழுபவை
- அடிப்படை இடர் - வங்கியியல் புத்தகம் மற்றும் உட்கிடையான நிதியியல் கிரயத்தின் மெய்யான வட்டி விடுமிகைக்கும் எதிர்பார்த்த வட்டி விடுமிகைக்கும இடையேயாய வித்தியாசத்தில் இருந்து எழுபவை.
- விளைவு வளைவு இடர் - விளைவு வளைவின் அசைவின் காரணமாக வங்கியின் உழைப்பு / சொத்தின் பெறுமதியிலான மறைமுகமான தாக்கத்திலிருந்து எழுபவை.

வட்டி வீத இடரினை முகாமைப்படுத்தல்

1. வட்டி வீத இடருக்கான இடர் ஆர்வத்தினை அங்கீகரிக்கும் அதிகாரம் மற்றும் VAR மற்றும் இடரில் உள்ள உழைப்புகளுக்கான ஒட்டுமொத்த வரையறைகளை நிறுவுதல் BIRMC மற்றும் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. வங்கியியல் மற்றும் வர்த்தகப் புத்தகங்களிள் உள்ள அனைத்து வட்டி வீத நிலைகளின் இனங்காணல், அளவிடுதல், முகாமைப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டு அறிக்கையிடல் என்பவற்றுக்கான வழிகாட்டிகள் வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கையினால் வழங்கப்படுகின்றது.
3. திறைசேரி முன்புலக் காரியாலயமானது நிர்ணயிக்கப்பட்ட இடர் ஆர்வத்தினுள் வட்டி வீத இடரினை முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாளியாகும்.
4. திறைசேரியின் நடுக் காரியாலயமானது வட்டி வீத இடரினைக் கண்காணிப்பதற்கு பொறுப்பாளியாகும்.
5. வங்கியின் சொத்து மற்றும் பொறுப்புக்களின் மீள்விலையிடலில் தீர்மானம் மேற்கொள்வதற்கு பொறுப்பாக ALCO காணப்படுவதுடன், இது தொடர்ச்சியாக முதிர்வு பொருந்தாமைகள் மற்றும சந்தை வட்டி வீதங்களிலான போக்குகளை கண்காணித்தல் வேண்டும்.

கால அளவு இடைவெளி பகுப்பாய்வு, VAR மற்றும் இடரில் உள்ள உழைப்பு போன்ற நுட்பங்கள் வட்டி வீத இடரினை அளவிடுவதற்கு கடைப்பிடிக்கப்படுகின்றன. கால அளவு இடைவெளி மற்றும் வட்டி வீத இடருக்கான ஒட்டுமொத்த வெளிப்பாடானது பின்வருமாறு உறுதிசெய்யப்படுகின்றது, வட்டிவீத உணர்திறனுடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அவற்றின் முதிர்வுக் காலத்தின் அடிப்படையில் தொகுதியாக்கல் மூலமாகும். வட்டி வீத இடரானது மாதாந்தம் அளவிடப்பட்டு கண்காணிக்கப்பட்டு ALCO கூட்டங்களில் கலந்துரையாடப்படுகின்றது. மாற்றமடையும் பொருளாதார குறிகாட்டிகளினால் வங்கியின் உழைப்பு மற்றும் மூலதனத்திலான சாத்தியமான தாக்கங்கள், வங்கியியல் மற்றும் வர்த்தகப் புத்தகங்களின் வ.வீ.இ. வெளிப்பாடுகளில் வழமையான அழுத்த பரிசோதனைகளின் மூலம் அளவிடப்படுகின்றது.

ஒரு வருடத்திற்கு மேலான காலஅளவு மீதான இடரில் உள்ள உழைப்புகள் (தேறிய தாக்கம் 1%)

	1 மாதம் வரைக்கும்	1-3 மாதங்கள்	3-6 மாதங்கள்	6-12 மாதங்கள்
தேறிய சொத்துக்கள் (ரூ.மில்.)	54,745	267,265	(332,902)	(409,623)
1% மாற்றத்திற்கான நட்டம் (ரூ.மில்.)	22	445	(1,248)	(3,072)

சொத்து பொறுப்பு முதிர்வு பொருந்தாமைகள்


2023	1 மாதம் வரைக்கும் ரூ. மில்.	1-3 மாதங்கள் ரூ. மில்.	3-6 மாதங்கள் ரூ. மில்.	6-12 மாதங்கள் ரூ. மில்.	1-3 வருடங்கள் ரூ. மில்.	3-5 வருடங்கள் ரூ. மில்..	5 வருடங்கள் மேல் ரூ. மில்.
வட்டிவீத உணர்வுடைய சொத்துக்கள்	282,058	612,881	230,331	702,889	266,472	221,262	455,512
வட்டிவீத உணர்வுடைய பொறுப்புக்கள்	227,313	345,616	563,234	1,112,512	122,960	294,188	3,234
கால இடைவெளி	54,745	267,265	(332,902)	(409,623)	143,512	(72,926)	452,278
திரண்ட இடைவெளி	54,745	322,010	(10,893)	(420,515)	(277,004)	(349,930)	102,349

இடர் முகாமைத்துவ அறிக்கை

சொத்து பொறுப்பு முதிர்வு பொருந்தாமைகள் தொடர்ச்சி...

2022	1 மாதம் வரைக்கும் ரூ. மில்.	1-3 மாதங்கள் ரூ. மில்.	3-6 மாதங்கள் ரூ. மில்.	6-12 மாதங்கள் ரூ. மில்.	1-3 வருடங்கள் ரூ. மில்.	3-5 வருடங்கள் ரூ. மில்..	5 வருடங்கள் மேல் ரூ. மில்.
வட்டிவீத உணர்வுடைய சொத்துக்கள்	386,829	269,247	434,129	216,713	189,525	293,750	917,701
வட்டிவீத உணர்வுடைய பொறுப்புக்கள்	270,278	523,799	1,167,395	23,453	27,971	128,856	296,031
கால இடைவெளி	116,551	(254,552)	(733,265)	193,261	161,554	164,894	621,670
திரண்ட இடைவெளி	116,551	(138,001)	(871,266)	(678,005)	(516,451)	(351,557)	270,113

காலவெளி பகுப்பாய்வினைப் பயன்படுத்தி 1% பாதகமான வட்டி வீத மாற்றத்தின் காரணமாக பங்கின் சந்தைப் பெறுமதியிலான தாக்கம் (ரூ. மில்.)



IRR அழுத்தப் பரிசோதனை

	அதிர்வின் அளவு ▯ 0.25%	அதிர்வின் அளவு ▯ 0.50%	அதிர்வின் அளவு ▯ 1.00%
2023			
வருவாய் மீதான தாக்கம் (ரூ.மில்.)	2,321	4,643	4,265
திருத்தியமைக்கப்பட்ட ஒட்டுமொத்த CAR (%)	17.14%	16.42%	16.46%
2022			
உழைப்பிலான தாக்கம் (ரூ.மில்.)	4,327	8,654	13,054
திருத்தியமைக்கப்பட்ட ஒட்டுமொத்த CAR (%)	15.86	15.41	14.97

அந்நியச் செலாவணி இடர்

அந்நியச் செலாவணி இடர் என்பது பரிமாற்றல் வீதங்களில் பாதகமான தளம்பல்களின் காரணமாக வங்கியின் உழைப்புகள் மற்றும் / அல்லது மூலதனம் பாதிக்கப்படும் விளைவிலிருந்து எழுகின்றது. வங்கியின் அந்நியச் செலாவணி இடரானது இறக்குமதிகள் / ஏற்றுமதி கொடுக்கல் வாங்கல்கள், பணமனுப்பல்கள் மற்றும் தனியுரிமை வர்த்தகம் போன்ற வெளிசாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்றது.

அந்நியச் செலாவணி இடர் மீளாய்வு

பரிமாற்றல் வீதத்திலான பாதகமான அசைவுகளின் காரணமாக உள்ளூர் நாணயம் தவிர்ந்த வேறு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் இடம்பெறும்போது நிதியியல் நட்டம் காணப்படுகின்றது. நாட்டிற்குள் வெ.நா. உட்பாய்ச்சல்களின் பற்றாக்குறையின் காரணமாக, ஆண்டின் முதலாம் பாதியின்போது வெ.நா. திரவத்தன்மை பற்றாக்குறை நிலவியது. வங்கி வெ.நா. பணமனுப்பல்களின் சந்தை பங்களிப்பினை மேம்படுத்தக் கூடியதாய் இருந்ததுடன், வெ.நா. கடப்பாடுகளையும் வாடிக்கையாளர் தேவைப்பாடுகளையும் விவேகமாக முகாமைப்படுத்தியது.

மேலும், வங்கியின் திறைசேரியானது வெ.நா. வரையறைகளை கடுமையாக பின்பற்றியதுடன், எப்போதும் வெ.நா. திறந்த நிலைகள் மற்றும தனியான நாணய தேறிய நிலைகளை அனுமதிக்கப்பட்ட வரன்முறைகளினுள் பராமரிப்பதுடன், இது வங்கி அந்நிய செலாவணி இடரினை விவேகமாக முகாமைப்படுத்துவதனை இயலுமையாக்கியது. கடுமையான இடர் சகித்தல் வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் இவை நாளாந்தம் சுயாதீனமாக கண்காணிக்கப்படுகின்றன. இது திறைசேரி வர்த்தகர்கள் இந்த எல்லைகளினுள் செயலாற்றுவதற்கு அனுமதிப்பதுடன், இந்த வெளிப்பாடுகளினூடாக வெளிவரும் இடர்களை தணிக்கக் கூடியதாக உள்ளது. இது வெ.நா. தளம்பல்களிலிருந்து எழுகின்ற நட்டங்கள் சிறுமமாக்கப்பட்டு வங்கியின் இடர் ஆர்வத்தினுள் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. மேலும், திறைசேரியின் நடுக் காரியாலயமானது சுயாதீனமாக ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் வெ.நா. நிலை வரையறைகள் பின்பற்றப்படுவதனை சரிபார்த்து கண்காணிக்கின்றது.

அந்நிய செலாவணி இடரினை முகாமைப்படுத்தல்

- இ.ம.வ. தேறிய திறந்த நிலை வரையறைகள் நிறுவும்வேணை, பணிப்பாளர்கள் சபையானது டீஜசுஆஇ இன் பரிந்துரையுடன் திறந் நிலைகளில் முறைமைப்படுத்தல் எல்லைகளினுள் கடுமையான பருமன் வரையறைகளை நிறுவியுள்ளது. இவை தனித்தனி நாணய வெளிப்பாடுகள் மற்றும் திரண்ட வெளிப்பாடுகளுடன் விதிவிலக்குகளுக்கான அங்கீகார பொறிமுறையினையும் குறிப்பிட்டுள்ளது.
- வங்கியின் இடர் ஆர்வத்தினுள் வெ.நா. முதிர்வு இடைவெளிகளிலிருந்து எழுகின்ற இடர்கள் முன்னிலை முதிர்வு இடைவெளி வரையறைகளினால் முகாமைப்படுத்தப்படுகின்றது.
- வெ.நா. இடரின் ஒட்டுமொத்த முகாமைப்படுத்தலுக்கு திறைசேரிப் பிரிவு பொறுப்பாயுள்ளது. முன்புல நடு மற்றும் பின்புல காரியாலங்களுக்கு இடையேயான கடமைகள் தெளிவாக வேறாக்கப்பட்டுள்ளதுடன், திறைசேரிப் பிரிவானது பயனுறுதியான உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையினை உறுதிசெய்கின்றது.
- திறந்த நிலைகள், சொத்து மற்றும் பொறுப்பு முதிர்வுகள், நாணய வெளிப்பாடுகள் மற்றும் திரண்ட வெளிப்பாடுகள் என்பன நடுக் காரியாலயத்தினால் சுயாதீனமாக நடாத்தப்படுகின்றன.
- இ.உ.பெ. கணிப்பீடுகள் மற்றும் அழுத்தப் பரிசோதனைகள் வெ.நா. இடருக்கு வெளிப்பாடான தேக்கங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. சமாந்திரமான இ.உ.பெ. கணிப்பீடுகள் வங்கியின் திறைசேரி முகாமைத்துவ அமைப்புமுறையினால் (.'.பினாக்கிள் அடிப்படையில்) மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புளூம்பேர்க் அமைப்பு முறையினாலும் நடாத்தப்படுகின்றன.
- வங்கியின் இலாபகரத்தன்மை மற்றும மூலதனப் போதுமை மட்டங்களிலான சாத்தியமான தாக்கமானத அழுத்தப் பரிசோதனையினூடாக அளவிடப்படுகின்றது.

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிலைகள்


	தேறிய வெளிப்பாடு வெ.நா. இணையானது ('000)	தேறிய வெளிப்பாடு ரூபா இணையானது ('000)
அமெரிக்க டொலர்	(261)	(84,556)
யூரோ	39	14,099
கிரேட் பிரிட்டன் பவுன்ட்	526	216,835
ஜப்பானிய யென்	50,367	115,341
சிங்கப்பூர் டொலர்	36	8,882
சீன யுவான் ரென்மின்பி	700	31,889
அவுஸ்திரேலிய டொலர்	28	6,223
ஏனையவை	-	379,532

பரிமாற்றல் வீத இடர் அழுத்தப் பரிசோதனை

	அதிர்வின் அளவு - 5%	அதிர்வின் அளவு - 10%	அதிர்வின் அளவு - 15%
2023			
வருவாய் மீதான தாக்கம் (ரூ.மில்.)	183	367	550
திருத்தியமைக்கப்பட்ட ஒட்டுமொத்த CAR (%)	17.35	17.33	17.31
2022			
வருவாய் மீதான தாக்கம் (ரூ.மில்.)	207	414	621
திருத்தியமைக்கப்பட்ட ஒட்டுமொத்த CAR (%)	16.28	16.26	16.24

இடர் முகாமைத்துவ அறிக்கை

2023 இன் போதான மாத இறுதியிலுள்ள அ.செ. தேறிய திறந்த நிலை மற்றும் நாளாந்த VAR (USD மில்.)



பங்கு விலை இடர்

உரித்துவ விலை இடருக்கான வங்கியின் வெளிப்பாடானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக மற்றும் ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தேக்கங்களிலிருந்து எழுகின்றது. இது துணை நிறுவனங்களிலான மூலோபாய முதலீடுகள் தவிர்ந்தவையாகும். உரித்துவப் பங்குகளிலான குறைவான அளவு முதலீடுகளின் காரணமாக வங்கியின் உரித்துவ இடர் வெளிப்பாடானது ஒப்பீட்டளவில் வரையறையானதாகும்.

உரித்துவ விலை இடர் மீளாய்வு

தொடர்ச்சியான சந்தை கண்காணிப்பானது மு.வ.அ. இற்கு உரித்துவ சந்தையினை சரியாக அறிந்து மூலோபாய உரித்துவ முதலீட்டு தீர்மானங்களை எடுப்பதற்கு உதவியுள்ளது. இதனுடன் பணிப்பாளர்கள் சபையினால் நிறுவப்பட்டுள்ள வரையறைகளுடனான கடுமையான பின்பற்றலானது உரித்துவ இடரினை வினைத்திறனாக தணித்து முகாமைப்படுத்துவதற்கு வங்கியினை இயலுமையாக்கியது.

உரித்துவ இடரினை முகாமைப்படுத்தல்

- சபை முதலீட்டு வங்கியியல் குழுவானது (BIBC) நிர்ணயிக்கப்பட்ட இடர் ஆர்வத்தினுள் முதலீடுகள் மற்றும் முதலீடுகளை முகாமைப்படுத்துவதில் கொள்கைகளை உருவாக்கியுள்ளது.
- உரித்துவ இடரினை முகாமைப்படுத்துவதற்கான செயன்முறைகள், கருவிகள் மற்றும் நுட்பங்கள் - பருமன் இழப்பு நிறுத்தல் வரையறைகள் உள்ளடங்கலானவை - சபை அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு வங்கியியல் கொள்கை கையேட்டினால் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- பங்குச் சந்தை விலைகளிலான அசைவுகள், நிறுவனங்களின் செயற்திறன் மற்றும் பாரிய பொருளாதார நிலைமைகள் வழமையாக BIBC இனால் கண்காணிக்கப்படுகின்றது.
- உரித்துவ கொடுக்கல் வாங்கல்களில் சுயாதீன பெறுமதியிடல்கள், வலுக்குன்றல் மதிப்பீடுகள் மற்றும் வரையறைகளுக்கு எதிரான வெளிப்பாடுகளின் கண்காணிப்பு என்பன வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இடர் முகாமைத்துவப் பிரிவின் சந்தை இடர் அலகானது வர்த்தகம் செய்யப்படாத உரித்துவ தேக்கங்களின் இடர்கள் மீதும் சுயாதீன மேற்பார்வையினை பராமரிக்கின்றது.

உரித்துவ இடரின் அழுத்தப் பரிசோதனை

	அதிர்வின் அளவு - 5%	அதிர்வின் அளவு - 10%	அதிர்வின் அளவு - 15%
2023			
உரித்துவ தேக்கத்தின் அதிகூடிய சந்தைப் பெறுமதிக்கான தாக்கம் (ரூ.மில்.)	78	156	313
மூலோபாய உரித்துவங்களின் நியாயப் பெறுமதிக்கான தாக்கம் (ரூ. மில்.)	19	38	75
மொத்த தாக்கம் (ரூ. மில்.)	97	194	388

பண்டங்கள் இடர்

வங்கியானது பண்டங்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதில்லை என்பதுடன், பண்டங்கள் இடருக்கான அதன் ஒரே வெளிப்பாடானது வங்கியின் அடகுபிடித்தல் வணிகத்துடன் இணைந்ததாகும். அடகுபிடித்தல் தேக்கத்தில் வங்கியின் உயர் சந்தைப் பங்களிப்பானது சந்தையில் தங்க விலைகளின் தளம்பல்களினால் தாக்கத்திற்குள்ளாகின்றது.


பண்டங்கள் இடர் மீளாய்வு

தங்கத்தின் சந்தை விலையானது 2023 இல் தொடர்ந்தும் தளம்பல்களுடன் காணப்பட்டன. எவ்வாறாயினும், சந்தை மற்றும் வங்கியின் திரவத்தன்மை நிலை மற்றும் தங்கத்தின் விலையில் பரிமாற்றல் வீதத்தின் விளைவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு வங்கியானது சந்தையுடன் ஒப்பிடும்போது குறைவான அடகுபிடித்தல் முற்பணத் தொகையினைப் பராமரித்தது. இது விலை இடரினை முகாமைப்படுத்துவதற்காகும்.

பண்டங்கள் இடரினை முகாமைப்படுத்தல்

- முன் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள்: அடகுவைக்கப்படும் பொருட்களின் தங்க உள்ளடக்கத்தினை தீர்மானிப்பதில், வாடிக்கையாளர்களில் நியாயமான அக்கறையினை நடாத்துதல், விவேகமான பெறுமதிக்கான கடன் வீதங்களைப் பராமரித்தல், தங்கத்தின் விலைகளது தொடர்ச்சியான மதிப்பிடல்கள் மற்றும் போட்டியாளர் வழங்கல்கள் பராமரிக்கப்படுவதுடன், இவை களவாடப்பட்ட / போலியான பொருட்களிலிருந்து எழுகின்ற நட்டங்களுக்கு எதிராக ஒரு காப்புறுதி காப்பீட்டினை பெறுவதனூடாக ஆகும்.
- பகிர்ந்தளிப்பின் பின்னரான நடவடிக்கைகள் - அடகுவைக்கப்பட்ட பொருட்களில் வழமையாக சுயாதீன பெறுமதியிடல்களை நடாத்துதல், ஒரு மாதிரி அடிப்படையில் நாளாந்த சரிபார்த்தல்கள் மற்றும் மீட்கப்படாத பொருட்களின் வழமையான ஏலவிற்பனையிடல் ஆகியவற்றை நடாத்துதல்.

தங்கத்தின் விலை அசைவு 2023 (ரூபா)



திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கி அதன் நிதியளித்தல் கடப்பாடுகளை உரிய நேரத்தில் சந்திப்பதனை இயலுமையாக்குகின்றது. வங்கியானது திரவத்தன்மை அழுத்தங்களை அளவீடு செய்து அதன் இடர் ஆர்வத்தினுள் திரவத்தன்மை மற்றம மற்றும் நிதியளித்தல் இடர்களை முகாமைப்படுத்துகின்றது.

திரவத்தன்மை இடர் மீளாய்வு

வங்கியானது அதன் 2022 இல் காணப்பட்ட எதிர்மறையான திரவத்தன்மை நிலைமையினை, விவேகமான மூலோபாயங்களை அமுலாக்கியதன் மூலம் திருப்பி, 2023 இல் ஒரு மிகையான திரவத்தன்மை நிலைமையினை அடைந்தது. வங்கியானது ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் மட்டங்களிலும் பார்க்க மேலாக மூலதனப் போதுமை விகிதங்களைப் பராமரித்ததுடன், நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதங்களையும் முறைமைப்படுத்தல் தேவைப்பாட்டு மட்டங்களுக்கும் மேலாக பராமரித்தது. அனைத்து நாணயத்திற்கு மற்றும் உள்ளூர் நாணயத்திற்கான திரவத்தன்மை காப்பீட்டு விகிதமானது முறைமைப்படுத்தல் தேவைப்பாட்டு விகிதங்களுக்கு மேலாக 2023 பூராவும் காணப்பட்டது.

திரவத்தன்மை இடரினை முகாமைப்படுத்தல்

- ஒரு திரவத்தன்மை இடர் முகாமைத்துவ ஆளுகை வரம்புறுகையானது காணப்படுவதுடன், உரிய நேரத்தில் ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்காக போதுமான திரவத்தன்மை பராமரிக்கப்படுகின்றது.
- திரவத்தன்மை இடர்களை முகாமைப்படுத்துவதன் மூலம் மற்றும் தொடர்ச்சியாக திரவத்தன்மை நிலைமையினைக் கண்காணிப்பதன் மூலம் ALCO உள்ளக திரவத்தன்மை இலக்குகள் மற்றும் முறைமைப்படுத்தல் திரவத்தன்மை தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்கின்றது.
- திறைசேரி, முதலீட்டு வங்கியியல் மற்றும் நிதி நிறுவனங்களின் பி.பொ.மு. குறிப்பிடப்பட்டுள்ள இடர் வரையறைகளினுள் வங்கியின் நிதியளித்தல் மற்றும் திரவத்தன்மை நிலைமைகளை நாளாந்தம் முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாளியாவார்.
- வங்கியின் திரவத்தன்மை மட்டங்கள் தொடர்ச்சியாக TMO வினால் சுயாதீனமாக கண்காணிக்கப்படுவதுடன் ஏதேனும் மீறல்கள் அறிக்கையிடப்படுகின்றன.
- முக்கிய திரவத்தன்மை குறிகாட்டிகளின் செயற்திறனானது வழமையாக சபையினால், BIRMC மற்றும் ALCO வினால் மீளாய்வு செய்யப்பட்டு அவை நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள் காணப்படுவதனை உறுதிசெய்கின்றன.

திரவத்தன்மை முகாமைப்படுத்தலின் முக்கிய கூறுகள்

1.	**திரவத்தன்மையினை அளவிடுதல்**	திரவத்தன்மையினை அளவிடுவதற்கு வங்கியானது இரட்டைப் பாய்ச்சல் அணுகுமுறை மற்றும் இருப்பு அணுகுமுறையினை பின்பற்றுகின்றது.
2.	**பன்முகப்படுத்தப்பட்ட நிதியளித்தல் தளம்**	திரவத்தன்மையினை எழுப்புவதற்கு வங்கி பன்முகமான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. வங்கியின் மொத்த நிதியளித்தல் தளத்தின் 89.3% உடன் வைப்புகள் பாரிய நிதியளித்தல் மூலமாக காணப்படுவதுடன், இதனைத் தொடர்ந்து ஏனைய கடன் பெறுகைகள் (7.4%) மற்றும் பங்குதாரர் நிதியங்கள் (5.3%) ஆகவும் உள்ளது. வங்கி கணிசமான அளவு சேமிப்புக்களைக் கொண்டுள்ளதுடன், இவை கிட்டத்தட்ட நிலையான நிதியளித்தல் மூலங்களாக கருதப்படுகின்றன.
3.	**அவசரநிலை நிதியளித்தல் திட்டம்**	வங்கியிடம் ஒரு அவசரநிலை நிதியளித்தல் திட்டம் காணப்படுவதுடன் இத முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணையாக உள்ளதுடன், அழுத்தமான நிலைமைகளின் திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காகும். அ.நி.தி. செயற்பாட்டிற்கு தூண்டல் புள்ளிகளை வரையறை செய்வதுடன், குறிப்பிட்ட காட்சிநிலைகளில் செயலாற்றப்படும்.

இடர் முகாமைத்துவ அறிக்கை

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான முக்கிய திரவத்தன்மை குறிகாட்டிகள்

முக்கிய குறிகாட்டி	டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை 2023 (%)
வைப்புக்கான கடன்கள் விகிதம்	
ரூபா	64.84
வெளிநாட்டு நாணயம்	106.89
கடப்பாடுகள் விகிதம்	
நியதிச் சட்ட திரவத்தன்மை விகிதம்	
DBU	37.41
FCBU	38.4

	DBU (ரூபா மில்.)				OBU (USD '000)			
	31.12.2023 இல் உள்ளவாறான மீதி	சிறிய	மிதமான	பெரிய	31.12.2023 இல் உள்ளவாறான மீதி	சிறிய	மிதமான	பெரிய
அதிர்வின் அளவு (%)		5	10	15		5	10	15
திரவச் சொத்துக்கள்	1,030,521				77,678			
மொத்த பொறுப்புக்கள்	2,754,516				202,261			
காட்சிநிலை 1 - மொத்த பொறுப்புக்களில் அதிகரிப்பு								
பொறுப்புக்களில் அதிகரிப்பு		137,726	275,452	413,177		10,113	20,226	30,339
திருத்தப்பட்ட மொத்த பொறுப்புக்கள்		2,892,242	3,029,968	3,167,694		212,374	222,487	232,600
திருத்தப்பட்ட திரவச் சொத்துக்கள்		1,030,521	1,030,521	1,030,521		77,678	77,678	77,678
அதிர்வின் பின்னரான திரவச் சொத்து விகிதம் (%)	37.41%	35.63%	34.01%	32.53%	38.40%	36.58%	34.91%	33.40%
காட்சிநிலை II – பொறுப்புக்கள் அதேபோன்று இருக்கையில் திரவச் சொத்துக்களில் வீழ்ச்சி மற்றும ஏனைய சொத்துக்களில் அதிகரிப்பு								
திரவச் சொத்துக்களில் வீழ்ச்சி		51,526	103,052	154,578		3,884	7,768	11,652
திருத்தப்பட்ட மொத்த பொறுப்புக்கள்		2,754,516	2,754,516	2,754,516		202,261	202,261	202,261
திருத்தப்பட்ட திரவச் சொத்துக்கள்		978,995	927,469	875,943		73,794	69,910	66,026
அதிர்வின் பின்னரான திரவச் சொத்து விகிதம் (%)	37.41%	35.54%	33.67%	31.80%	38.40%	36.48%	34.56%	32.64%
காட்சிநிலை III – மொத்தச் சொத்துக்கள் மற்றும் திரவச் சொத்துக்களில் ஒரே தொகையிலான வீழ்ச்சி								
பொறுப்புக்களில் வீழ்ச்சி		137,726	275,452	413,177		10,113	20,226	30,339
திருத்தப்பட்ட மொத்த பொறுப்புக்கள்		2,616,791	2,479,065	2,341,339		192,148	182,035	171,922
திருத்தப்பட திரவச் சொத்துக்கள்		892,795	755,069	617,344		67,565	57,452	47,339
அதிர்வின் பின்னரான திரவச் சொத்து விகிதம் (%)	37.41%	34.12%	30.46%	26.37%	38.40%	35.16%	31.56%	27.54%

செயற்பாட்டு இடர்

செயற்பாட்டு இடர் என்பது போதுமையற்ற அல்லது தவறிய உள்ளகச் செயன்முறைகள், மக்கள் மற்றும் அமைப்புமுறைகள் அல்லது இயற்கை அனர்த்தங்கள், சமூக நிகழ்வுகள், தொற்றுக்கள் அல்லது அரசியல் நிகழ்வுகள் போன்ற வெளிவாரி நிகழ்வுகள் ஆகியவற்றின் விளைவாக நேரடியான அல்லது மறைமுகமான நட்ட இடராகும். பாசல் வரைவிலக்கணத்தின்படி, செயற்பாட்டு இடர், சட்ட இடரினை உள்ளடக்குகின்றது ஆனால் மூலோபாய மற்றும் நற்பெயர் இடரினை அகற்றுகின்றது. செயற்பாட்டு இடர்கள் இயல்பான வணிக நடவடிக்கைகள் போக்கில், கருவிகள் மற்றும் செயன்முறைகளில் காணப்படுகின்றது. வங்கியானது, தொழில்நுட்ப இடர், மக்கள் இடர் மற்றும் சட்ட இடர் போன்ற செயற்பாட்டு இடருக்கு வெளிப்பாடுடையதாய் உள்ளது.

செயற்பாட்டு இடர் முகாமைத்தவத்தின் குறிக்கோள்கள்

- செயற்பாட்டு தவறுதல்களிலிருந்தான நட்டங்களை சிறுமமாக்குவதன் மூலம் சாத்தியமான பாரிய இடர் நட்டங்களை தவிர்த்தல்.
- பன்முகமான செயற்பாடுகள் மற்றும் வணிக அலகுகளிடையே செயற்பாட்டு இடரில் ஒரு பொதுவான புரிந்துணர்வினை விருத்திசெய்வதன் மூலம் வங்கி முழுவதும் சிக்கனமாக இடரினை முகாமைப்படுத்தல்.
- உள்ளக ஆற்றல்களை கட்டியெழுப்பி மேம்படுத்துவதன் மூலம் முக்கியமான மற்றும் பேரழிவான இடர்களுக்கு வினைத்திறனாக பதலளித்தல்
- உள்ளக வளங்களின் சிறந்த முகாமைத்துவம் மற்றும் வங்கியின் செயற்பாட்டின வினைத்திறனான கட்டுப்பாடு ஊடாக செலவுச் சிக்கனத்தினை எய்தப்பெறல்.
- வங்கியின் நற்பெயர் மற்றும் வணிக நாம பிரதிமையினை பாதுகாத்தல்.
- வங்கியின் வணிகச் செயற்பாடுகளின் தடையற்ற செயலாற்றலினை உறுதிசெய்தல் மற்றும் இலாப இலக்குகளை அடைவதற்கு துணையளித்தல்.


செயற்பாட்டு இடர் ஆளுகை மற்றும் அறிக்கையிடல்

பாசல் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்பாட்டு இடர்கள் ஏழு பரவலான பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- செயற்பாட்டு இடர் முகாமைத்துவ கட்டமைப்பானது, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள், கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகளை உள்ளடக்குவதுடன் இவை செயற்பாட்டு இடர் வெளிப்பாட்டினை முகாமைப்படுத்துவதற்காகும்.
- செயற்பாட்டு இடர் அம்சங்களை நெருக்கமாக கண்காணித்தல் மற்றும் முறைமைப்படுத்தல் ஆகியவற்றில் சபைக்கு BIRMC துணை அளிக்கின்றது.
- செயற்பாட்டு இடர்களை அவை ஆரம்பிக்கும் நேரத்தில் இனங்காண்பதற்கு கிளைகளும் வணிக அலகுகளும் முதல் வரிசை பாதுகாப்பாய் இருப்பதுடன், இவை இடர் முகாமைத்துவப் பிரிவிற்கு அறிக்கையிடப்படுகின்றன. செயற்பாட்டு இடர் வெளிப்பாடுகளை இனங்கண்டு மதிப்பிடுவதில் அனைத்து ஊழியர்களும் பயிற்றுவிக்கப்பட்டு விழிப்புணர்வு அளிக்கப்பட்டுள்ளார்கள்.
- அனைத்து வணிக அலகுகளும் இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடுகளை நடாத்துவதுடன் இவை வரையறை செய்யப்பட்ட செயற்பாட்டு இடர் வரன்முறைகளின் பிரகாரம் வெளிப்பாடுகளை மதிப்பிடுவதற்காகும்.
- வலையமைப்பு பூராவும் முழு செயற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறையில் உள்ளகக் கணக்காய்வு காலாகல மீளாய்வுகளை நடாத்துவதுடன் இது சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு உறுதிமொழியினை வழங்குவதற்காகும்.
- செயற்பாட்டு இடரானது புதிய கருவிகள், செயன்முறைகள் மற்றும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக மதிப்பிடப்படுகின்றன.
- கணிசமான நட்ட நிகழ்வுகள், வெளித்தோன்றும் சிக்கல்கள், இடர் மேற்பார்வை, இடர்களின் கண்காணிப்பு மற்றும மீளாய்வு என்பன காலாண்டு அறிக்கைகளூடாக இடர் குழுக்களுக்கு அறிக்கையிடப்படுவதுடன், இவை BIRMC மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுவுக்கு முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இடரின் சாத்தியமான தாக்கம் மற்றும் நிகழ்வெண் அடிப்படையில் கட்டுப்பாட்டு தவறுதல்கள் ORMC இற்கு அறிக்கையிடப்படுகின்றன.
- பிராந்தி மட்டத்திலான இடர் அதிகாரிகள், கணக்காய்வு அதிகாரிகள் மற்றும் இணக்கப்பாட்டு அதிகாரிகளது பதவிகள் செயற்பாட்டு இடர் கரிசனைகளை நெருக்கமாக கண்காணிக்கவும், உரிய பிரிவுகளின் தலைமைக்கு அறிக்கையிடுவதற்காகவும் உள்ளன.

செயற்பாட்டு இடரின் ஆளுகைக் கட்டமைப்பு






இடர் முகாமைத்துவ அறிக்கை

செயற்பாட்டு இடர் மீளாய்வு


2023 வருடத்திற்கு அறிக்கையிடப்பட்ட மொத்த செயற்பாட்டு நட்டங்கள் ரூபா 87.25 பில்லியன் ஆகும். மிகவும் குறிப்பிடத்தக்க நட்டங்களின் (பெறுமதியின் மூலம்) மூலமாக வெளிவாரி மோசடி மற்றும் விநியோக நிறைவேற்றல் மற்றும் செயன்முறை முகாமைப்படுத்தலாகும்.

கீழ்காணும் வரைபடமானது கடந்த இரண்டு வருடங்களில் பாசல் வரம்புறுகை நட்ட நிகழ்வு வகையின் கீழான, நிகழ்வுகளின் எண்ணிக்கை மற்றும் பெறுமதி ஆகியவற்றைப் பொறுத்தளவில், செயற்பாட்டு நட்டங்களை ஒப்பிடுகின்றது.


செயற்பாட்டு நட்டங்கள் (ரூ. மில்.)



நிகழ்வு வாரியான செயற்பாட்டு நட்டங்களின் எண்ணிக்கை - 2023



நிகழ்வு வாரியான செயற்பாட்டு நட்டங்களின் பெறுமதி – 2023



இழப்பு நிகழ்வு	2022				2023			
	எண்ணிக்கை	மொத்தத்தின் சதவீதமாக (%)	பெறுமதி ரூ. மில்.	மொத்த பெறுமதியின் சதவீதமாக %	எண்ணிக்கை	மொத்தத்தின் சதவீதமாக (%)	பெறுமதி ரூ. மில்.	மொத்த பெறுமதியின் சதவீதமாக %
உள்ளக மோசடிகள்	4	1.08	41.59	26.14	2	0.51	8.72	9.99
வெளிவாரி மோசடிகள்	212	57.14	33.07	20.79	258	66.15	52.45	60.12
ஊழியர் நடைமுறை மற்றும் பணியிடப் பாதுகாப்பு	-	-	-	-	-	-	-	-
வாடிக்கையாளர், தயாரிப்பு மற்றும் வணிக நடைமுறைகள்	-	-	-	-	-	-	-	-
பௌதீக சொத்துக்களுக்கான சேதம்	6	1.62	1.13	0.71	1	0.26	0.15	0.17
வணிக இடையூறுகள் மற்றும் அமைப்பு தோல்விகள்	-	-	-	-	5	1.28	3.72	4.26
நிறைவேற்றல், விநியோகம் மற்றும் செயன்முறை முகாமைத்துவம்	149	40.16	83.31	52.36	124	31.80	22.21	25.46
மொத்தம்	371	100.00	159.1	100.00	390	100.00	87.25	100.00

செயற்பாட்டு இடரின் இனங்காணல் மற்றும் மதிப்பீடு

வணிக அலகுகளுடன் ஒன்றுசேர்ந்து இடர் முகாமைத்துவப் பிரிவானது செயற்பாட்டு இடர்களின் சாத்தியமான பிரிவுகளை இனங்காண்கின்றது. செயற்பாட்டு இடர் வெளிப்பாடுகளில் அனைத்து ஊழியர்களும் பயிற்சியளிக்கப்படுவதுடன், இந்த இடர்களை இனங்கண்டு மதிப்பிடுவதற்கு செயலூக்கமாக ஈடுபடுத்தப்படுகின்றார்கள். அனைத்து வணிக அலகுகளும் இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடுகளை நடாத்துவதுடன், இது வரையறை செய்யப்பட்ட செயற்பாட்டு இடர் வரன்முறைகளின் பிரகாரம் வெளிப்பாடுகளை மதிப்பிடுவதற்காகும். வணிக அலகுகளினால் அறிக்கையிடப்பட்ட நட்ட நிகழ்வுகள் மற்றும் அருகில் தவறியவை, RCSA இன் முக்கிய கண்டுபிடிப்புகள் என்பன செயற்பாட்டு இடர் முகாமைத்துவத்திலுள்ள சாத்தியமான இடைவெளிகளுக்காக செயற்திட்டங்களை இனங்கண்டு திட்டமிடுவதற்கு உதவுகின்றது புதிய கருவிகள், செயன்முறைகள் மற்றும் நடவடிக்கைகளில் செயற்பாட்டு இடரானது ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

செயற்பாட்டு இடர் வரையறைகள் மற்றும் சகிப்புத்தன்மை மட்டங்கள்

சபையானது வங்கியின் இடர் ஆர்வக் கூற்றில் செயற்பாட்டு இடர் குறிகாட்டிகளுக்காக குறிப்பிட்ட வரையறைகள் மற்றும் சகிப்புத்தன்மை மட்டங்களை வரையறை செய்தள்ளது. இவை செயற்பாட்டு நட்டங்களின் மொத்தப் பெறுமதியினை செயற்பாட்டு செலவினங்களின் சதவீதமாக, உள்வாரி மற்றும் வெளிவாரி நட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை, சராசரியிலும் பார்க்க குறைவாக தரப்படுத்தப்பட்ட கிளைக் கணக்காய்வுத் தரங்களின் சதவீதம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

BIRMC மற்றும் சபைக்கான வழமையான அறிக்கையிடல் அவசியமானபோது திருத்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவுகின்றது.

செயற்பாட்டு இடர் தணிப்பிற்கான மூலோபாயங்கள்

- அனைத்து செயற்பாட்டு கடமைகள் தொடர்பாக மூன்று வரிசைப் பாதுகாப்புகளுடன் முழுவதுமான இணங்குதலை உறுதிசெய்தல் மற்றும் கடமைகளின் பிரிப்பினை உறுதிசெய்தல்.
- சபை அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு இடர் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளது ஒரு விரிவான கட்டமைப்பினை அமலாக்குதல்.
- நெருக்கடி முகாமைத்துவ செயன்முறைகள் மற்றும் அனர்த்த மீட்டல் திட்டங்கள், வணிகத் தொடர்ச்சியினை உறுதிப்படுத்துவதற்கு.
- மீட்டல் திட்டங்களுடன் முழுமையாக இணங்குதல் மற்றும் பிரிவுகள் மட்டத்திலான மீ.தி. அமுலாக்கல் குழுக்களை அமைத்தல்.
- காப்புறுதியினூடாக செயற்பாட்டு நட்டங்களை மூன்றாம் தரப்பினரக்கு மாற்றல் செய்தல்.
- வெளிக்களச் சேவை பங்காளிகளை தெரிவுசெய்வதற்கும கண்காணிப்பதற்கும் கடுமையான வழிமுறைகளை பின்பற்றுதல்.
- ஊழியர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சியினை வழங்குவதன் மூலம் இடர் விழிப்புணர்வு கலாச்சாராத்தினை உருவாக்குதல்.
- புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், செயற்பாட்டு இடரிலான சாத்தியமான தாக்கத்தில் ஒரு பூரண பகுப்பாய்வினை நடாத்துதல்.

தொழில்நுட்ப இடர்

டிஜிட்டல்மயமாக்கலில் ஒரு முதல்வராக, வங்கியானது சைபர் பாதுகாப்பு இடர்கள், அமைப்புமுறை செயலிழப்புகள், தொழில்நுட்ப பழமையாதல், பௌதீக பாதுகாப்பு நோக்கிய தொழில்நுட்ப கட்டுப்பாடு உள்ளடங்கலான தொழில்நுட்பம் தொடர்பான இடர்களுக்கு வெளிப்பாடுடையதுடன், மற்றும் வணிகப் பருமன்களுக்கு துணைபுரிவதற்கு போதுமையற்ற உட்கட்டமைப்புகள் என்பவையாகும்.

தொழில்நுட்ப இடர் மீளாய்வு

- வங்கியானது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைக்கான உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமமான ISO/IEC 27001:2013 இசான்றளிப்பினை 2017 இலிருந்து பராமரிக்கின்றது. இது தகவல் பாதுகாப்பு மற்றுத் தரவுப் பாதுகாப்பிற்கான தொடர்ச்சியான கடப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது.
- வங்கியானது அதன் விரிவான, சபை அங்கீகரிக்கப்பட்ட தகவல் பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுடன் தகவல் பாதுகாப்பிற்கு முன்னுரிமையளிக்கின்றது.
- அனைத்து த.தொ. தொடர்பான செயன்முறைகளுக்கு வழமையான மற்றும் வழமையல்லாத இடர் மதிப்பீடுகளை நடாத்துவதுடன், இதனை தகவல் பாதுகாப்பு செயற்பாடுகள் குழுவினூடாக தொடர்கின்றது.

இடர் முகாமைத்துவ அறிக்கை

- முக்கியமான அமைப்புமுறைகளுக்கு வலுவான பாதுகாப்பு நிலைகளை பராமரித்தல் எமது முதல் முன்னுரிமையாகும். வங்கியானது இதனை பயனாளர் அணுக்க உரிமைகள் மற்றும் அனைத்து முக்கிய சூழ்நிலைகளில் அணுகல் பதிவுகள், அதிகாரமளிக்கப்படாத அணுகலை தடுத்தல் மற்றும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கையினை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மீளாய்வினூடாக அடைகின்றது.

- எமது மிகவும் முக்கியமான அமைப்புமுறைகளை பாதுகாப்பதற்கு, வங்கியானது அனைத்து முக்கியமான அமைப்புமுறைகளுக்கும் கடுமையான குறியீடு மீளாய்வுகளை அமுலாக்கியுள்ளதுடன், இது அவை உள்ளகத்தே விருத்திசெய்யப்பட்டதா அல்லது வெளிகளச் சேவையாய் உள்ளதனை பொருட்படுத்தாது எமது உட்கட்டமைப்பு முழுவதும் வலுவான பாதுகாப்பினை உறுதிசெய்தல்.

- எமது அமைப்புமுறைகளை செயலூக்கமாக பாதுகாப்பதில், வங்கியானது விரிவான உள்ளக மற்றும் வெளிவாரி நலிவுறுநிலை மதிப்பீடுகளை நடாத்துவதுடன், இது இணைய அடிப்படையான மற்றும் மொபைல் செயலிகள் உள்ளடங்கலான அனைத்து முறைகளையும் உள்ளடக்குகின்றது. இனங்காணப்பட்ட சிக்கல்கள் உடனடியாக திருத்தப்பட்டு சாத்தியமான இடர்கள் சிறுமமாக்கப்படுகின்றன.

வங்கியின் த.தொ. இடர் குறிகாட்டிகள்

வகை	முறைகள் மெய்யானவை	மெய்யான கிடைப்புத்திறன்	மொத்த பணி மணித்தியாலங்கள் மற்றும் வரம்புகளின் சதவீதமாக கிடைப்புத்திறன்	
உயர் நெருக்கடி	• மத்திய ATM இணைப்பி • NOVUS இணைப்பி • மைய வங்கியியல் முறை/இடைமுகப்பு • SWIFT • கடன்/வரவு அட்டை முகாமைத்துவ முறை • SLIPS	99.9%	>99.9% 97.5%-99.9% <97.5%	பசுமை – குறை இடர் அம்பர் - மத்திம இடர் சிகப்பு - உயர் இடர்
மத்திம நெருக்கடி	படிமை பற்றுகை மற்றும் முன்வைத்தல் முறை • இணைய பணமனுப்பல் முறை • ∴பினாக்கிள் திறைசேரி • ATM (தனிநபர்) • PRIME 4 • CIB/CMB/ORA • RIB/RMB • தூரித வங்கியியல் • RLOS	99.8%	>97.5% 95%-97.5% <95%	பசுமை – குறை இடர் அம்பர் - மத்திம இடர் சிகப்பு - உயர் இடர்
குறைவான நெருக்கடி	• IHRM முறை • மக்கள் வங்கி இணையத்தளம்	100% >	90% 87%-90% <87%	பசுமை – குறை இடர் அம்பர் - மத்திம இடர் சிகப்பு - உயர் இடர்

தொழில்நுட்ப இடர் ஆளுகை வரம்புறுகை

- சபை த.தொ.குழு, தகவல் பாதுகாப்பு குழு (ISC), மற்றும் தகவல் பாதுகாப்பு செயற்பாடுகள் குழு (ISOC) என்பன வங்கியின் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவ கட்டமைப்புக்கு மேற்பார்வையினை வழங்குகின்றது.

- அறிவுபூர்வமான தீர்மானம் மேற்கொள்ளலை வலுவளித்தல், உச்ச தகவல் பாதுகாப்பு அங்கம், தகவல் பாதுகாப்பு குழு (ISC), என்பன வங்கியின் தொழில்நுட்ப நிலத்தோற்றம், இடர் ஆர்வம் மற்றும் தணித்தல் திட்டங்கள், ஆகியவற்றில் நிகழ்வரைப்படுத்தி இருப்பதுடன், சைபர் பாதுகாப்பினை மேம்படுத்துகின்றது.

- தகவல் பாதுகாப்பு செயற்பாடுகள் குழு (ISOC) வங்கயினுள் தகவல் பாதுகாப்பிற்காக முகாமைத்துவ மீளாய்வு அங்கமாக செயற்படுவதுடன், பல்வேறு பிரிவுகளிலிருந்து நிபுணத்துவத்தினை ஒன்றாக கொண்டுவருவதுடன் தரவுப் பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கு ஒரு விரிவான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையினை உறுதிசெய்கின்றது.

- இணையான இடர் வரம்புகள் வரையறை செய்யப்பட்டு பொருத்தமான திருத்தல் செயற்பாடுகளுக்கு முகாமைத்துவத்தின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

- அதன் சைபர் அரண்களை பலப்படுத்துவதற்காக வங்கியானது ஒரு தனிப்பயனுடைய தகவல் பாதுகாப்பு செயற்பாட்டினை நிறுவியுள்ளதுடன், இது நேரடியாக பி.நி.அ./ பொது முகாமையாளருக்கு அறிக்கையிடும் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரியினால் வழிநடத்துப்படுகின்றது.

- தகவல் பாதுகாப்பு பிரிவு மற்றும் த.தொ. பிரிவு என்பன முக்கிய த.தொ. இடர் குறிகாட்டிகளை வழமையாக கண்காணிக்கின்றார்கள்.

தொழில்நுட்ப இடரினை தணித்தல்

- அனைத்து நெருக்கடியான, இயங்கலை, மற்றும் அனர்த்த மீட்டல் சேர்வர்கள் உயர்ந்த பாதுகாப்புடைய மற்றும் சான்றளிக்கப்பட்ட தரவு மத்திய நிலையங்களில் உள்ளன.

- அனைத்து முக்கியமான முறைகளுக்கு வழமையான இடைவெளிகளில் அனர்த்த மீட்டல் பரிசோதனைகள் நடாத்தப்படுகின்றன.

- தரவு இழப்பினை தவிர்ப்பதற்காக சிறப்பாக நிறுவப்பட்ட த.தொ. ஆளுகை கட்டமைப்பினை பராமரித்தல்.

- தீ பாதுகாப்பு மற்றும் புகைக் கண்டறிவான்கள் சேர்வர் அறைகளிலும் UPS அறைகளிலும் நிறுவுதல்.

- பேரிடர் மீட்டல் திட்டங்கள் கிடைக்கின்றன.

மக்கள் இடர்

மக்கள் இடர் என்பது முறையற்ற ஊழியர் நடவடிக்கை, போதுமையற்ற மனித வளங்கள் மற்றும் ஊழியர் தொடர்பான ஒழுங்குவிதிகளுடன் வங்கியின் இணக்கப்பாடின்மை காரணமாக எழக்கூடிய சாத்தியமான நட்டங்களாகும். வங்கியானது நாடுபூராவும் பரந்து காணப்படும் அதன் பாரிய தொழில்சேனையினூடாக மக்கள் இடருக்கு வெளிப்பாட்டினை கொண்டிருப்பதுடன், இது முறையற்ற ஊழியர் நடவடிக்கை, போதுமையற்ற மனித வளங்கள் மற்றும் ஊழியர் தொடர்பான தொழிலாளி ஒழுங்குவிதிகளுடன் வங்கியின் இணக்கப்பாடின்மை காரணமாக எழக்கூடிய சாத்தியமான நட்டங்களாகும்.

பயிற்றுவிக்கப்பட்ட திறனுடைய ஊழியர்களின் புரள்வானது வங்கியின் போட்டித்தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், தகுதியுடைமை மற்றும் ஆக்கத்திறனில் நலிவுறலுக்கு இட்டுச்செல்கின்றது. தகைமையுடைய, திறமையான தனிநபர்களை பணிக்கமர்த்தல் மற்றும் உயர் செயற்திறனான ஊழியர்களை ஒரு வெகுமதியான பணிச் சூழலினூடாக தக்கவைத்தல் சவால்மிக்கதாகும்.

மக்கள் இடர் மீளாய்வு

2023 இன் போது நாட்டின் விளைவின் காரணமாக வங்கியானது முன்னெப்போதும் நிகழ்ந்திராத மூளைசாலிகளின் வெளியேற்றத்தினை அனுபவித்ததுடன், இது வங்கியின் நாளாந்த செயற்பாடுகள், சேவைகளின் தரம் மற்றும் சேவை விநியோகத்தின் வேகம் ஆகியவற்றில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியது. எதிர்கால தாக்கங்கள், ஆட்சேர்த்தல் மற்றும் பயிற்சிக்கு மேலதிக வளங்கள் மற்றும தலைமைத்துவ வழங்கல் வழியினை மீள்நிரப்புதல்.

மக்கள் இடரினை தணித்தல்

எந்த வணிகத்திலும் மிகவும் முக்கியமான சொத்தாக மனித வளங்களை மக்கள் வங்கி கருதுவதுடன், அவர்கள் ஏனைய சொத்துக்களின் ஒட்டுமொத்த செயற்திறனுக்கு மத்திய புள்ளியாக உள்ளார்கள். குறிப்பாக, சேவைத் துறையில் சேவைத் தனிச்சிறப்பானது மனித வளங்களின் தரத்தில் உயர்வாக தங்கியுள்ளது. எனவே, மக்கள் இடரினை எதிர்பார்த்து வினைத்திறனாக முகாமைப்படுத்தலானது, ஒரு நிலைபேறுடைய வணிக மாதிரியில் வங்கியின் வெற்றிக்கு உயர்வான முக்கியத்துவமாகும். வங்கியானது தொடர்ச்சியான ம.வ. அபிவிருத்தித் திட்டத்தினைக் கொண்டுள்ளதுடன், இது ஊழியர்களை அவசியமான அறிவு மற்றும் திறன்களுடன் இற்றைப்படுத்தி வைத்திருப்பதற்காகும்.

மக்கள் வங்கியானது அதன் ஊழியர்களுக்கு அவர்களது பாலினம், இனம், மதம் போன்றவற்றை கருதாது சமத்துவமான வாய்ப்புக்களை வழங்குகின்றது. அனைத்து ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட நடத்தைக் கோவை மற்றும் ஒழுக்காற்று செயன்முறைக்கு கட்டுப்படுவதுடன் இது பணியிடத்தில் சிறந்த ஆளுகையினை பராமரிப்பதற்காகும்.

மேலும், வங்கியானது அதன் ஊழியர்களை ஒரு பயில்ல் கலாச்சாரத்தினூடாக அவர்களது அறிவு மற்றும் திறன்களை விருத்திசெய்வதற்கு ஊக்கமளிப்பதுடன், எந்நேரமும் உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சிகள், செயலமர்வுகள் மற்றும் கருத்துக் களங்களுக்கு வசதியளிக்கின்றது. வங்கியானது மிகவும் ஆய்வறிவு சார்ந்த செயற்திறன் அடிப்படையிலான மதிப்பீட்டு செயன்முறையினை அமுல்படுத்தி முன்னர் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய பண்புசார் அளவீட்டு முறையினை 2023 இல் மாற்றீடு செய்துள்ளது. வங்கி 2023 இல் ஒரு ஆரோக்கிய மையத்தினை, ஒரு அழுத்தமான சூழ்நிலையில் ஊழியர்கள் அவர்களது மனவலிமையினை பராமரிப்பதற்கான உறுதுணையினை வழங்கும் நோக்கில் நிறுவியது. மேலும் வங்கியானது ஒரு அதி நவீன மனித வளங்கள் தகவல் அமைப்பு முறையினை அமுலாக்கும் செயன்முறையில் உள்ளதுடன், இது மனித வளங்கள் செயற்பாட்டினை வினைத்திறனாக முகாமைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காகும்.

வங்கியானது 2023 இல் 500 சேவை உதவியாளர்கள் மற்றும் 50 முகாமைத்துவ பயிற்சியாளர்களை பணிக்கு சேர்ப்பதன் மூலம் வங்கி அதன் தொழிற்சேனையினை பலப்படுத்தியது. அத்துடன் அதன் டிஜிட்டல் முன்னெடுப்பானது 32 பயிற்சி தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளின் ஆட்சேர்ப்புடன் பலப்படுத்தப்பட்டது.

மனித வளங்கள் கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் ம.வ. தொடர்பான இடர்களை முகாமைப்படுத்தவும், வங்கி முழுவதும் சீரான தன்மையுடைய ஊழியர் நடைமுறைகளை உறுதிசெய்வதற்கும் கிடைக்கப்பெறுவதுடன் வினைத்திறனான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைக் கடைப்பிடித்தல், பணிக்கான இடையூறுகளைக் குறைத்தல், நிதியியல் நெருக்கடிகளிலிருந்து ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் பாதுகாத்தல், ஊழியர் புரள்வினை சிறுமமாக்குதல் மற்றும் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பணியிட சூழலினைப் பராமரித்தல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்ட இடர்

பாசல் ஒழுங்குவிதிகளின் பிரகாரம், சட்ட இடரானது செயற்பாட்டு இடரின் ஒரு துணைத் தொகுப்பாகும். சட்ட இடர் என்பது சட்டரீதியான அல்லது/மற்றும் முறைமைப்படுத்தல் கடப்பாடுகளுடன் இணக்கப்பாடு காண்பதற்கு தவறுவதிலிருந்து எழுகின்ற இடராகும். சட்ட இடரானது வங்கியின் சட்டப் பிரிவினால் முகாமைப்படுத்தப்படுவதுடன், வாடிக்கையாளர்கள் அல்லது யாரேனும் மூன்றாம் தரப்பினருடன் ஒப்பந்தங்களில் ஈடுபடும்போது பின்பற்றுவதற்கு முறையான உள்ளக செயன்முறைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், இணக்கப்பாட்டுப் பிரிவானது முறைமைப்படுத்தல் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் வங்கியின் இணக்கப்பாட்டு நிலையினை உறுதிசெய்கின்றது.

சட்ட இடரினை தணித்தல்

அனைத்து சட்டரீதியாக பிணைப்புள்ள அனைத்து உடன்படிக்கைகளும் வங்கியின் இணக்கப்பாட்டு மற்றும் சட்டப் பிரிவுகளால் உரியவாறு சம்மதிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்கு வணிக அலகுகள் பொறுப்பாயுள்ளன. மூன்றாம் தரப்பினருடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் அதிகாரமானது சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், வெளிவாரி தரப்பினர்களுடன் ஏதேனும் உடன்படிக்கையில் நுழைவதற்கு முன்னர் முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

நற்பெயர் இடர்

மக்கள் வங்கி, இலங்கையிலுள்ள ஒரு முக்கியமான அரச வங்கியாக ஒரு விரிவான எண்ணிக்கையிலான வாடிக்கையாளர் தளத்துடன் மற்றும் அதன் பன்முகமான பங்காளிகள் தளத்துடன், பங்காளிகளது மாற்றமடையும் எதிர்பார்ப்புக்கள் மற்றும் சமூக ஊடகங்களில் விருத்தியடையும் டிஜிட்டல் ஊடக பதில்செயல்களை கருத்திற்கொண்டு நற்பெயர் இடரில் உயர் முன்னிறுத்தத்தினை வழங்குகின்றது. நற்பெயர் இடர் என்பது பங்காளிகள் / பொது மக்களது எதிர்பார்ப்புக்களை சந்திக்கத் தவறுவதினால் எழுகின்ற இடராகும். இது வங்கியினால், அதன் ஊழியர்களினால் அல்லது வங்கி யாரோடு இணைந்துள்ளதோ அவர்களினால், அல்லது பங்காளிகள் / பொதுமக்களில் வங்கியினைப் பற்றி எதிர்மறையான கருத்தினை உருவாக்கும் யாரேனும் மூன்றாம் தரப்பினரால் ஏற்படும் ஏதேனும் நிகழ்வு, நடத்தை, செயற்பாடு அல்லது செயலிழப்பு ஆகியவற்றின் விளைவினால் ஏற்படலாம்.

நற்பெயர் இடரானது, எதிர்மறையான பொதுமக்கள் உணர்வு, நம்பிக்கை இழப்பு, துறைசார் நியமங்களுடன் இணக்கப்பாடின்மை, கடப்பாடுகளைத் தவறுதல், தாழ்வான சேவைத் தரம் அல்லது வங்கியின் நேர்மையிலான நம்பகத்தன்மையில் அல்லது அதன் வணிகத்தினை நடாத்தும் ஆற்றலிலான வீழ்ச்சி, எற்பவற்றிலிருந்து எழுகின்றது. நற்பெயர் இடர் நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத பின்விளைவுகளை கொண்டிருக்கலாம் மற்றும் இது நிதியியல் நிறுவனங்கள் முகாமைப்படுத்துவதற்கான மிகவும் சவால்மிக்க இடர்களாக கருதப்படுகின்றது.

நற்பெயர் இடரைக் குறைத்தல்

வங்கியின் நற்பெயரிலான எதிர்மறையான தாக்கம் சிறுமமானது, ஏனெனில் மக்கள் வங்கியானது இலங்கையில் ஒரு முதன்மை அரச வங்கியாக கடன் ஆறு தசாப்தங்களாக ஒரு அப்பழுக்கற்ற சாதனையினை பராமரித்துள்ளது. வாடிக்கையாளர் நம்பகத்தன்மையாது, வங்கியின் நேர்மை, அதன் ஊழியர்களின் திறமை மற்றும் உயர் தரத்திலான அதன் கருவிகளை பிரதிபலிக்கும் ஒரு வலுவான நற்பெயரில் ஆழமாக பதிந்துள்ளது. நாளாந்த வாழ்வில் அதிகரிக்கும் சமூக ஊடக பயன்பாடானது நற்பெயர் இடரினை பயனுறுதியான முகாமைப்படுத்தல் தேவையான ஏனைய வகை இடர்களுக்கிடையில் ஒரு முக்கியமான நிலைக்கு உயர்த்தியுள்ளது.

இணக்கப்பாட்டு இடர்

வங்கியானது ஒரு இணக்கப்பாட்டு செயற்பாட்டினை நிறுவியுள்ளதுடன், விரிவான உள்ளக கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் ஒரு திடமான ஆளுகை வரம்புறுகையினை அமுல்படுத்தியுள்ளது. இது பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் ஊழியர்கள் இணக்கப்பாடு காண்பதை உறுதிசெய்வதற்காகும்.

இணக்கப்பாட்டு இடர் மீளாய்வு


- கிளை மதிப்பீடுகள் பிராந்திய இணைக்கப்பாட்டு அதிகாரிகளினால் நடாத்தப்படுகின்றன. இவை ஒரு இடர் அடிப்படை அணுகுமுறையில் என்பதுடன் மீளாய்வுகள் தெரிவுசெய்யப்பட்ட கிளைகளில் இணக்கப்பாட்டு பிரிவினால் நடாத்தப்படுகின்றன.
- தலைமைக் காரியாலய பிரிவுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய அலகுகள் இணக்கப்பாட்டு பிரிவினால் மதிப்பிடப்படுவதுடன், பிரிவுகளும் அலகுகளும் ஒரு இடர் அடிப்படையிலான அணுகுமுறையில் தெரிவுசெய்யப்படுகின்றன.
- நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் துணை நிறுவனங்கள் ஒரு வினாக்கொத்தின் ஊடாக காலாண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுகின்றன - இது இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை இணக்கப்பாட்டு பிரிவினால் நடாத்தப்படும் விஜயங்களுக்கு மேலாகும்.

இடர் முகாமைத்துவ அறிக்கை

இணக்கப்பாட்டு இடரினை முகாமைப்படுத்துவதன் குறிக்கோள்கள்

- வங்கியின் நற்பெயர் மற்றும் வணிக நாமத்தின் பெறுமதியினை அதிகரிக்கின்றது.
- வாடிக்கையாளர் நம்பகத்தன்மை மற்றும் நம்பிக்கையினை மேம்படுத்துகின்றது.
- தடையற்ற மற்றும் பயனுறுதியான செயற்பாடுகளுக்கு வசதியளிக்கின்றது.
- ஊழியர்கள் நேர்மையினை பலப்படுத்துகின்றது.
- உயர் தரத்திலான கருவிகள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
- வங்கியின் பலம் மற்றும் ஸ்திரத்தன்மையினை அதிகரித்தல்.
- வங்கியின் நிலைபேறுடமையினை பலப்படுத்துதல்.

இணக்கப்பாட்டு இடர் ஆளுகை மற்றும் அறிக்கையிடல்



- உரிய வெளிவாரி ஒழுங்குவிதிகள் மற்றும் உள்ளக வழிகாட்டிகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்கு சபை உயர்ந்த பொறுப்பினைக் கொண்டுள்ளதுடன், BIRMC மற்றும் BAC இனால் துணையளிக்கப்படுகின்றது.
- ஒரு தனிப்பயனுடைய பிரதன இணக்கப்பாட்டு அதிகாரியுடன் தனிப்பயனுடைய இணக்கப்பாட்டு அலகானது வங்கியின் இணக்கப்பாட்டு நிலையினை வழமையான மதிப்பீடுகளுடாக மேற்பார்வை செய்வதுடன், BIRMC இற்கு நேரடியாக அறிக்கையிடுகின்றது.
- இணக்கப்பாட்டுப் பிரிவானது சபைக்கு மாதாந்த இணக்கப்பாட்டு அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றன, இவை சட்டரீதியான மற்றும் கட்டாயத் தேவைப்பாடுகளில், இணக்கப்பாடற்ற நிகழ்வுகள், ஊழியர் பயிற்சி மற்றும் கிளை மதிப்பீடுகளுடன் கையொப்பமிடப்படுகின்றன. குறிப்பிட்ட காலாண்டினுள் ஏதேனும் விசேட இணக்கப்பாடு தொடர்பான விடயங்களிலான அறிக்கைகள் BIRMC மற்றும் BAC இற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.
- இடர் முகாமைத்துவப் பிரிவு மற்றும் உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டிற்கு மேலாக இணக்கப்பாட்டு அலகானது வங்கியின் ஒட்டுமொத்த இணக்கப்பாட்டு மட்டத்தில் சபைக்கு உறுதிமொழியினை வழங்குகின்றது.
- வங்கியின் இணக்கப்பாட்டு இடரானது ஒரு ஐந்து புள்ளி தரப்படுத்தல் அளவுகோல் மதிப்பெண் அட்டையினூடாக உள்ளக சிறந்த நடைமுறைகள் மற்றும் வெளிவாரி ஒழுங்கவிதிகள் தொடர்பாக மதிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்பெண் அட்டையானது BIRMC இற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இணக்கப்பாட்டு பிரிவின் கடமைகள்

கட்டாயமான இணக்கப்பாட்டு செயற்பாடுகள்
முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடின்மை இடரினை நீக்குவதற்கு அல்லது சிறுமமாக்குவதற்கு இணக்கப்பாட்டு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை விருத்திசெய்வதன் மூலம் வங்கியினை நற்பெயர் இடரிலிருந்து பாதுகாத்தல்.
அனைத்து ஊழியர்களுக்கு ஒரு நடத்தைக்கோவை / நெறிமுறையினை விருத்திசெய்து சகல மட்டங்களிலும் இணக்கப்பாடு உறுதிசெய்யப்படுவதனை கண்காணித்தல்.
பணம் சலவைசெய்வதை தடுத்தல்/பயங்கரவாத நிதியளித்தல் கொள்கை என்பவற்று உங்களது வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் ஒழுங்குவிதிகளுடன் இணைந்தல், இது அனைத்து பிரிவுகளினாலும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.
தெளிவான மற்றும உரிய நேரத்திலான தொடர்பாடல் மற்றும் பரஸ்பரமான புரிந்துணர்வின் அடிப்படையில் முறைமைப்படுத்துபவர்களுடன் வழமையான தொடர்பு மற்றும் நட்பான உறவுமுறையினை பராமரித்தல்
வங்கியினுள் ஒரு இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை வளர்த்தல்
உரிய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் அபிவிருத்திகளுடன் நிலையொத்து இருத்தல் மற்றும் பயனுறுதியான அமுலாக்கத்திற்கு வசதியளித்தல்
இணக்கப்பாட்டு சிக்கல்களை எழுப்பக்கூடிய அனைத்து உரிய முறைமைப்படுத்தல் அபிவிருத்திகள் மற்றும் சட்டங்களிலான மாற்றங்களை சபைக்கு அறிவித்தல்
இணக்கப்பாடு தொடர்பான ஏதேனும் மீறல்களை எடுத்துக்காட்டி அவற்றை விளித்துரைப்பதற்கும் சீர்செய்வதற்கும் ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க நேர வரையறையினுள் முகாமைத்துவத்துடன் செயலாற்றுதல்
இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகள் மற்றும் சட்டத்தினால் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கிக்கு கிழமைதோறும், மாதந்தோறும், காலாண்டுதோறும் மற்றும் வருடந்தோறும் இணக்கப்பாட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.
அவசியமானபோது இணக்கப்பாட்டு அறிக்கைகளை சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) மற்றும் சபை கணக்காய்வுக் குழுவுக்கு (BAC) சமர்ப்பித்தல்
சபைக்கு மாதாந்த இணக்கப்பாட்டு அறிக்கைகளை சமர்ப்பித்தல்
இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் அடிப்படையில் ஒரு வாடிக்கையாளர் சாசனத்தினை நிறுவுதல்
உரிமமளிக்கப்பட்ட வர்த்த வங்கிகளுக்காக இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரையின் அடிப்படையில் கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகள் கோவையினை தயாரித்து, அமுல்படுத்தி கண்காணித்தல்
பணம் சலவை செய்தல் / பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுப்பதற்காக கொடுக்கல் வாங்கல்களை கண்காணித்து சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை நிதியியல் நுண்ணறிவு அலகிற்கு அறிக்கையிடுவதற்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நிறுவுதல்
பணம் சலவை செய்தலுக்கு எதிரானது உள்ளடங்கலாக இணக்கப்பாட்டில் ஊழியர்களை பயிற்றுவித்தல் மற்றும் கிளை வலையமைப்பு முழுவதும் பயிற்றுவித்தலுக்கு வசதியளிப்பதற்காக இ-பயிலல் தொகுதியினை விருத்திசெய்தல்
இணக்கப்பாட்டு இடர் மற்றும் நற்பெயர் இடர் ஆகியவற்றை சிறுமமாக்குவதற்கு கொள்கைகளை தயாரித்து செயன்முறைகளை அமுலாக்குதல், ஒரு நடத்தைக் கோவையினை விருத்திசெய்தல் உள்ளடங்கலாகும்
கடன் தகவல் பணியகத்துடன் இணைவதன் மூலம் வாடிக்கையாளர்களது இற்றைப்படுத்தப்பட்ட கடன் விபரங்களை பராமரித்தல்

துணை இணக்கப்பாட்டு செயற்பாடுகள்
முறைமைப்படுத்தல், நற்பெயர் மற்றும் நெறிமுறை விடயங்களில் முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்
ஒரு வெற்றி இயலுமையாக்கியாக இணக்கப்பாட்டினை ஊக்குவித்தல்
உள்ளூர் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள், உள்ளக இணக்கப்பாடு மற்றும் நெறிமுறை நியமங்களுடன் இணக்கப்பாட்டுடன் புதிய கருவிகள் மற்றும் அமைப்புமுறைகளை கட்டமைப்பதில் உள்ளீடுகளை வழங்குதல்
வழமையான இடைவெளிகளில் மதிப்பீடுகள் மற்றும் மீளாய்வுகளை நடாத்துவதன் மூலம் உள்ளக மற்றும் வெளிவாரி ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தல்
பொருத்தமான உள்ளக மற்றும் வெளிவாரி குழுக்களில் இணக்கப்பாட்டு செயற்பாட்டினை பிரதிநிதித்துவம் செய்தல்
முகாமைத்துவத்திற்கும் ஊழியர்களுக்கும் இணக்கப்பாட்டிலான நடைமுறைகளை தெளிவாக அறிவித்தல்
இணக்கப்பாட்டு சிக்கல்களை விளித்துரைப்பதற்கு உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வு செயற்பாட்டுடன் இணைந்து செயற்படல்
கணக்காய்வுகளூடாக இனங்காணப்படும் இணக்கப்பாட்டு சிக்கல்களை பின்தொடர்தல்
கணக்காய்வாளர்களுடன் இணைந்து இடர் அடிப்படையிலான மதிப்பீட்டில் இணக்கப்பாட்டு கணக்காய்வுகளை நடாத்துதல்

பணம் சலவை செய்தல் மற்றும் பயங்கரவாத நிதியளிப்பினை தடுத்தல்

வாடிக்கையாளரை அடையாளப்படுத்தல் தொடர்பாக வங்கியானது கடுமையான கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. இதனுடன் ஒரு விரிவான மதிப்பீடு, கொடுக்கல் வாங்கல் கண்காணித்தல், கொடுப்பனவு மற்றும் பெயர் மதிப்பீடு மற்றும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கையினை புலனாய்வு செய்து அறிக்கையிடல் மற்றம் வங்கிக்கு இடரினை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை தடுப்பதற்கு மற்றும் / கண்டுபிடிப்பதற்காக அனைத்து புதிய கருவிகள் மற்றும் சேவைகளில் ஒரு மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

பணம் சலவை செய்தல் எதிர்ப்பு, உங்களது வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர் மதிப்பீடு போன்ற பிரிவுகளில் கட்டமைக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் இ-பயிலல் தொகுப்புகளூடாக அனைத்து ஊழியர்களும் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். பொதுவாக, பாரிய மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் மீள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, மதிப்பிடப்பட்டு நிதியியல் நுண்ணறிவு அலகிற்கு அறிக்கையிடப்படுகின்றது.

மூலோபாய இடர்

மூலோபாய இடர் என்பது பாதகமான வணிகத் தீர்மானங்கள், தீர்மானங்களின் முறையற்ற அமுலாக்கல், ஒரு சவால்மிக்க வணிகச் சூழல் என்பவற்றின் காரணமாக உழைப்புகளில் அல்லது இயலுதிறனில் எழுகின்ற சாத்தியமான நட்டம் மற்றம் செயற்பாட்டு சூழலிலான மாற்றங்களுக்கு போதுமையற்ற பதிற்செயல் என்பனவாகும்.

சபை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் மூலோபாயத் திட்டத்தினூடாக மூலோபாய இடர்கள் முகாமைப்படுத்தப்படுகின்றன.

மூலோபாயத் திட்டமானது பலதரப்பட்ட மட்டங்களில் பங்காளிகளுடனான ஒரு விரிவான ஈடுபாடு மற்றும் வணிகப் பிரிவுகளுடனான கலந்துரையாடல்களுடன் உருவாக்கப்படுகின்றது. ஒரு இடர் உருவாகினால், வங்கியின் உழைப்பிலான தாக்கத்தினை தடுப்பதற்கு அல்லது தணிப்பதற்காக ஒரு தொடரான முகாமைத்துவ செயற்பாடுகள் விருத்திசெய்ப்படுகின்றன.

மூலோபய இடரினை முகாமைப்படுத்தல்

- வணிகச் செயற்திறனானது ஒரு வாராந்த அடிப்படையில் ALCO வினாலும் மாதாந்த அடிப்படையில் சபையினாலும் கண்காணிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வணிக அலகிற்கும் மெய்யான செயற்திறன் பாதீடு செய்யப்பட்ட இலக்குகளுக்கு எதிராக மதிப்பிடப்படுகின்றன. அவசியமாயின், வணிகச் சூழலிலான ஏதேனும் மாற்றங்களுக்கு பொருத்தமானவாறு மூலோபாயங்கள் திருத்தியமைக்கப்படுகின்றன.
- ஒரு மதிப்பெண் அட்டையினைப் பயன்படுத்தி மூலோபாய இடரானது மதிப்பிடப்படுவதுடன், இது வங்கியின் பருமன், சிக்கல்கள், செயற்பாடுகளின் நுட்பம், சூழல் பகுப்பாய்வு மற்றும் வாடிக்கையாளர் தோற்றுருவங்கள் என்வற்றை கருத்திலெடுத்து மேற்கொள்ளப்படுகின்றன. மதிப்பெண் அட்டையானது மூலோபாய இடரினைத் தணிப்பதற்கு மேம்பாடுகள் தேவையான பிரிவுகளை இனங்காண்பதற்கு உதவுகின்றன.

குழும இடர் முகாமைத்துவம்

வங்கியின் பிரதான துணை நிறுவனங்களான, பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி, மற்றும் பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி என்பன அவற்றின் இடர் வெளிப்பாடுகளை இனங்காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் இடர் முகாமைத்துவ வரம்புறுகைகளை கட்டமைத்துள்ளன. பின்வரும் கட்டமைப்புகள் மற்றும் பொறிமுறைகளூடாக மக்கள் வங்கியானது குழும நிறுவனங்களது இடர் முகாமைத்துவ அம்சங்களில் மேற்பார்வையினை வழங்குகின்றது:

- குழுமத்தின் இடர் ஆர்வம் மற்றும் மூலோபாயமானது வங்கியின் மட்டத்தில் உருவாக்கப்படுகின்றது.
- அறிக்கையிடல் கட்டமைப்புகள், செயன்முறைகள் மற்றும் வரம்புகள் என்பன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றன.
- வெளிப்பாடு ரூபா 500 மில்லியனை விஞ்சும்போது ஒவ்வொரு குழும நிறுவனத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட முக்கிய இடர் குறிகாட்டிகள், தூண்டுதல் மட்டங்கள் மற்றும் வரம்புகள் என்பன நிறுவப்பட்டுள்ளன.
- காலாகால மீளாய்வுகளூடாக மக்கள் வங்கியின் கணக்காய்வுக் குழு மற்றும உள்ளகக் கணக்காய்வு பிரிவு என்பன துணை நிறுவனங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறைகளின் போதுமையினை உறுதிசெய்கின்றது.
- சில சந்தர்ப்பங்களில் மக்கள் வங்கியினால் உரிய துணை நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளுக்கு வங்கியின் பணிப்பாளர்கள் பெயரிடப்படுகின்றார்கள்.
- முறைமைப்படுத்தப்படும் துணை நிறுவனங்களின் இடர் தோற்றுருவங்கள் மக்கள் வங்கியின் BIRMC இனால் காலாகாலம் மீளாய்வு செய்யப்படுகின்றன.
- குழும நிறுவனங்களின் சபை கூட்ட நிகழ்ச்சிப் பதிவேடுகளுக்கான அணுக்கத்தினை வங்கியின் பணிப்பாளர்கள் சபை கொண்டுள்ளது.

2023 இல் முக்கிய இடர் வகைகளுக்கு குழுமத்தின் இடர் தரப்படுத்தல்கள்

	கடன் இடர்	சந்தை இடர்	செயற்பாட்டு இடர்	இணக்கப்பாட்டு இடர்	மூலோபாய இடர்	நற்பெயர் இடர்
மக்கள் வங்கி	மத்திமம்	மத்திமம்	மத்திமம்	குறைவு	குறைவு	குறைவு
பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ்	மத்திமம்	மத்திமம்	மத்திமம்	குறைவு	மத்திமம்	குறைவு
பீபள்ஸ் இன்சூரன்ஸ்	குறைவு	குறைவு	மத்திமம்	குறைவு	மத்திமம்	குறைவு

கூட்டாண்மை ஆளுகையில் தலைவரின் செய்தி

நாட்டிலுள்ள நிதியியல் சேவை வழங்குநர்களிடையே பாரிய பூகோள அடிச்சுவட்டுடன் மற்றும் பாரிய வாடிக்கையாளர் தளத்துடன், மக்கள் வங்கியானது நகர மற்றும் கிராமப் புறங்களிலுள்ள பரவலான வாடிக்கையாளர்களுக்கு அவசியமான வங்கியியல் சேவைகளை வழங்குவதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. அதன் அணுக்கம் மற்றும் செல்வாக்கானது சமூகங்களினுள் ஆழமாக பரந்துள்ளதுடன், இலங்கை பூராவும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதியியல் நல்வாழ்வினை வளர்ப்பதற்கான ஒரு முக்கிய நிறுவனமாக வந்துள்ளது. மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபை மற்றும் நான் எமது நாட்டில் நாம் சுமக்கும் இந்த சிறந்த பொறுப்பு குறித்து அறிந்திருப்பதுடன், எமது நாட்டிற்கும் மக்களுக்கும் எமது சட்ட மற்றும் நம்பகமான கடமைகளை மேற்கொள்வதில் சிறந்த ஆளுகையின் உயர்ந்த நியமங்கள் பராமரிக்கப்படுவதற்கு முற்றான அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

மீளாய்வாண்டின்போது, பல உப குழுக்களது ஆலோசனைகளுக்கு மேலாக 24 சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. சபையானது நிலவுகின்ற பாரியபொருளாதார நிலைமைகளின் தாக்கங்களை வழமையாக மதிப்பிடுவதுடன் வங்கியின் கொள்கைகள், ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ வரம்புறுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்கின்றது. ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவம் மற்றும் ஆளுகையானது பின்வருவனவற்றால் பலப்படுத்தப்பட்டன. தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஒரு ஆளுகை வரம்புறுகையினை நிறுவுதல், தொடர்புடைய தரப்பினரை முறையாக இனங்காணல், மற்றும் பாசல் ஒழுங்குவிதிகள், IFRS தேவைப்பாடுகள் மற்றும் இ.ம.வ. வழிகாட்டிகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல் என்பவையாகும். பாரியபொருளாதார தாக்கங்களை பகுப்பாய்வுசெய்தல், கொள்கை கட்டமைப்புகளை சீர்திருத்துதல், மற்றும் இடர் முகாமைத்துவ நெறிமுறையினை வலுவூட்டுதல் என்பதில் சபையின் அர்ப்பணிப்பான கருதத்தக்க முயற்சிகள் பொருளாதார சவால்களை சமாளிப்பதில் ஒரு செயலூக்கமான நிலைப்பாட்டினை பிரதிபலிப்பதுடன் செயற்பாட்டு மீளெழுச்சியினை உறுதிப்படுத்துகின்றது. இந்த விரிவான அணுகுமுறையானது மக்கள் வங்கியினுள் விவேகமான ஆளுகை மற்றும் நீண்டகால நிலைபேறுடமைக்கான சபையின் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

இணக்கப்பாடு

இந்த அறிக்கையானது உரிமமளிக்கப்பட்ட வங்கிகளுக்கான 2007 இன் 11ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையின் தேவையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் முன்னிலைப்படுத்தப்பட்ட மெய்யான கண்டுபிடிப்புகளை குறிப்பிடுகின்றது. இது எமது ஆளுகை நடைமுறைகள், 2023 இல் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளை உறுதிசெய்வதுடன், இணக்கப்பாட்டு மட்டங்களை மதிப்பிடும்வேளை வருடம் பூராவும் நிறைவேற்றிய கடமைகளையும் குறிப்பிடுகின்றது. மக்கள் வங்கியானது முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டிற்கு அப்பால் சென்று வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த ஆளுகையினை மேம்படுத்துவதற்காக மனமுவந்து ESG அறிக்கையிடலை கடைப்பிடிக்கின்றது.

நாடானது அதன் பொருளாதார மீட்சிப் பாதையில் முன்னேற்றமடையும்போது, எமது அனைத்து பங்காளிகளுக்கும் பெறுமதியினை உருவாக்குவதற்கும் மேலாக, மக்கள் வங்கியானது அனைத்து பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் முற்றான இணக்கப்பாட்டினூடாக இந்தச் செயன்முறைக்கு துணையளிப்பதற்கு கடப்பாடுடையதாய் உள்ளது. வங்கியானது முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை மனமுவந்து பொருத்தமான சூ.ச.ஆ. வரம்புறுகைகள் மற்றும் நிலைபேறுடமையினை ஊக்குவிப்பதற்கான நியமங்களை தழுவுவதன் மூலம் விஞ்சியுள்ளது.

முன்னோக்கிய பாதை

தேசிய அக்கறைகளுக்கு துணையளிப்பதில் மக்கள் வங்கி முன்னணியில் உள்ளதுடன், எமது நாட்டிலுள்ள வாழ்வாதாரங்களின் மீட்டளிப்பிற்கு துணைபுரிவதில் அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், தேசிய பெருமையின் ஒரு மூலமாக எமது மதிக்கப்பட்ட சந்தை பங்கினை பயன்படுத்துகின்றோம்.

அன்புடன்,



சுஜீவ ராஜபக்ஷ
தலைவர்

26 மார்ச் 2024

நியதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட ஒரு அரச உடைமை வங்கியாக மக்கள் வங்கியானது தனியார் துறை வங்கிகளைப் பார்க்கிலும் மிகவும் அதிகமான சிக்கலான ஆளுகை வரம்புறுகையினைக் கொண்டுள்ளது. வங்கியியல் துறையினை ஆளுகை செய்யும் கடுமையான ஒழுங்குவிதிகளுக்கும் மேலாக, மக்கள் வங்கியின் ஆளுகை முறையானது 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பின்னர் சட்டத்திற்கான திருத்தங்களினதும் விதிமுறைகளினால் வழிநடத்தப்படுகின்றது. மக்கள் வங்கி ஒரு பட்டியற்படுத்தப்படாத நிறுவனமாக இருந்தாலும், வங்கி மனமுவந்து இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவையுடன் இணக்கப்பாடு காண்கின்றது.

வங்கியின் உயர்ந்த ஆளுகை அங்கம் பணிப்பாளர்கள் சபையாகும் என்பதுடன், இவர்கள் சபை சாசனத்தினாலும் பணிப்பாளர்களுக்கான நடத்தைக் கோவையினாலும் வழிநடத்தப்படுகின்றார்கள். வங்கியானது ஒரு ஊழியர் நெறிமுறைக் கோவையினையும் கொண்டுள்ளது.

பொதுமக்களின் அக்கறைக்காக, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக, வங்கியானது சர்வதேச சூ.ச.ஆ. அறிக்கையிடல் நியமங்களை, 2021 இன் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரம்புறுகை மற்றும் 2021 இன் உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு நியமங்கள் ஆகியவற்றை அதன் ஆண்டறிக்கைகளில் பின்பற்றியுள்ளது.

இணக்கப்பாடு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் மற்றும் நிதியியில் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று என்பவற்றில் உறுதிமொழியினை வழங்குவதுடன் இவை முறையே பக்கங்கள் 209 முதல் 210 வரையிலும் மற்றும் 204 முதல் 205 வரைகும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர் இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகையில் வழங்கப்பட்ட 2007 இன் 11ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையுடன் இணக்கப்பாடு கண்டுள்ள மட்டத்தினையும சான்றளிக்கின்றார்.

2023 இற்கான முக்கிய முன்னிறுத்தம்

- வங்கியின் இணக்கப்பாட்டு நிலை மற்றும் ஆளுகையின் தரம் ஆகியவற்றை மீளாய்வு செய்து வங்கியின் மூலோபாய திட்டத்திற்கு இணையாக அவசியமானபோது பொருத்தமான மாற்றங்களை செய்தல்.
- மாற்றமடையும் பாரியபொருளாதார நிலைமைகளுக்கு செம்மையாக்குதல்.
- இடர்களின் பயனுறுதியான முகாமைப்படுத்தல்.
- நிலைபேறுடமையினை பதித்தல்.



ஆளுகை கட்டமைப்பு

கடன் இடர்	சந்தை இடர்
1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம (திருத்தியமைக்கப்பட்டவாறு)	1961 இன் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் (திருத்தியமைக்கப்பட்டவாறு)
இ.ம.வ. பணிப்புரைகள்	சபையின் சாசனம்
1953 இன் 24 ஆம் இலக்க அந்நியசெலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம்	உப-குழுக்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் குறிப்பு விதிமுறைகள்
2006 இன் 6 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம்	பணிப்பாளர்களுக்கான வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகள்
2006 இன் 5 ஆம் இலக்க பண தூய்மையாக்கல் தடுப்புச் சட்டம்	விரிவான கொள்கைகளும் செயன்முறைகளும்
உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான பெருநிறுவன ஆளுகையில் 2007 இன் 11ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்புரை	ஊழியர்களுக்கான நெறிமுறைக்கோவை
டிசம்பர் 2017 இல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுகை கோவை	வாடிக்கையாளர் சாசனம்
உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பின் உலகளாவிய அறிக்கையிடல் நியமங்கள்	உள்ளகக் கணக்காய்வு
ஐ.நா, நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்கு (SDGs)	உள்ளகக் கட்டுப்பாடுகள்
IFRS அறநிறுவனத்தினால் வழங்கப்பட்ட சர்வதேச <IR> வரம்புறுகை	

பெறுநிறுவன ஆளுகை



முக்கிய ஆளுகைக் கொள்கைகள்

பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை | நியாயத்தன்மை | பொறுப்பு



எமது பெறுநிறுவன விழுமியங்கள்

தேசத்தின் பெருமையாக இருத்தல் | வாடிக்கையாளர் முன்னிறுத்தும் விரைவுக்கமும் | நேர்மை மற்றும் பொறுப்புக்கூறல் | தொடர்ச்சியான பயிலல் கலாச்சாரமும் கூட்டுமுயற்சியும் | வலுவளித்தலும் பன்முகத்தன்மையும்




பெறுமதி உருவாக்கம்


பங்காளி பெறுமதி உருவாக்கம் | மூலோபாய விளைவுகள்

சபையின் தொகுப்பு GRI 405-1


பாலினப் பன்முகத்தன்மை



சபை சமநிலை



வயதுப் பன்முகத்தன்மை



கூட்டுத் திறன்கள் GRI 2-17

	விசேடத்துவம் உள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை	%
நிதியியலும் கணக்கீடும்	6	75%
வணிக நிர்வாகம்	7	88%
கணக்காய்வு	2	25%
ம.வ. மற்றும் முகாமைத்துவம்	5	63%
சட்டம்	3	38%
பொருளியல்	2	25%
வர்த்தகம்	3	38%
சர்வதேச அபிவிருத்தி	3	38%
பாதீடு	1	13%
IT / BPO	1	13%

ஆளுகைக் கட்டமைப்பும் தொகுப்பும் GRI 2-9


வங்கியின் பெறுநிறுவன ஆளுகை வரம்புறுகைகள் இரண்டு பிரதான அடுக்குகளைக் கொண்டதாகும்: சபை, இது மூலோபாயத் திசை, நிதியியல் குறிக்கோள்கள், வளங்கள் விநியோகம் மற்றும் இடர் சகிப்புத்தன்மை ஆகியவற்றில் கூட்டாண்மை முகாமைத்துவத்துடன் ஒன்றிணைந்து மேற்பார்வையினை வழங்குகின்றது. அதேவேளை முகாமைத்துவமானது வங்கியின் அனைத்து பங்காளிகளுக்கும் பரஸ்பர நன்மைகள் உருவாக்கும் சபையின் கொள்கைகளை அமுலாக்குவதற்கு பொறுப்பாயுள்ளது.

மக்கள் வங்கியின் பெறுநிறுவன ஆளுகை வரம்புறுகை

சபை உப குழுக்கள்



- சபை பெயரிடல் குழு (BNC)
- சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு(BHRRC)
- சபை தகவல் தொழில்நுட்ப குழு (BITC)
- சபை முதலீட்டு வங்கியியல் குழு (BIBC)
- சபை நிறைவேற்று கடன் குழு (BECC)
- சபை மூலோபாய திட்ட மீளாய்வுக் குழு (BSPRC)
- சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)
- சபை கணக்காய்வுக் குழு (BAC)



பெறுநிறுவன ஆளுகை

சபை மற்றும் அதன் குழுக்களின் தொகுப்பு GRI 2-9

பக்கங்கள் 30 முதல் 31 வரை காணப்படும் பணிப்பாளர்கள் சபையின் சுயவிபரங்கள் மற்றும் பணிப்பாளர்கள் வகிக்கும் ஏனைய முக்கியமான பதவிகள், அவர்களது காலங்கள், மற்றும் பணிப்பாளர்களது திறன்கள் போன்ற மேலதிக விபரங்களை பார்வையிடவும்.

	நிறைவேற்றும்ஃ நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள்	சுயாதீன பணிப்பாளர்கள்	பால்	குறை பிரதிநிதித்துவம் செய்யும் சமூக குழுக்கள்	பங்காளிகள் பிரதிநிதித்துவம்
பணிப்பாளர்கள் சபை	8	3	7 ஆண் 1 பெண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	08 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட
சபை பெயரிடல் குழு(BNC)	3	1	3 ஆண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	03 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட
சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு (BHRRC)	3	1	3 ஆண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	03 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட
சபை த.தொ.குழு (BITC)	3	1	3 ஆண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	03 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட
சபை முதலீட்டு வங்கியியல் குழு (BIBC)	3	0	2 ஆண் 1 பெண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	03 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட
சபை நிறைவேற்று கடன் குழு (BECC)	3	0	3 ஆண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	03 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட
சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)	3	2	2 ஆண் 1 பெண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	03 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட
சபை கணக்காய்வுக் குழு (BAC)	3	1	2 ஆண் 1 பெண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	03 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட
சபை மூலோபாயத் திட்ட மீளாய்வுக் குழு (BSPRC)	3	2	2 ஆண் 1 பெண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	03 அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் / இருந்து நியமிக்கப்பட்ட

பெறுநிறுவன ஆளுகைக்கான சிறந்த நடைமுறைக் கோவையுடனான இணக்கப்பாடு

சபை (கொள்கை A.1)

மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது நிதி அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள். தற்போதைய சபையானது, தலைவர் (இவர் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளரும் கூட) மற்றும் நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அனைத்து பணிப்பாளர்களும் அரச மற்றும் தனியார் துறையின் பிரபலமான தொழில்வல்லுனர்கள் ஆவார்கள். தலைவர் 31 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்ட, விசேடமாக நிதியியல் துறையில், மிகவும் அனுபவம் வாய்ந்த தொழில்வல்லுனராவார். நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களது பன்முகமாக பரந்த திறன்கள் மற்றும் அனுபவங்கள் வங்கியின் இடர் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு செயன்முறையினை வளப்படுத்துகின்றது. \

வழமையான சபைக் கூட்டங்களை நடாத்துதல் (கொள்கை A. 1.1)

சபையானது ஆகக் குறைந்தது மாதத்திற்கொருமுறை கூடுகின்றது மற்றும் அவசியத்தின் அடிப்படையில் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. சபையானது 2023 இன் போது 24 தடவைகள் கூடியுள்ளதுடன் அனைத்து சபைக் கூட்டங்கள் உயர்ந்த சமூகமளிப்பு, செயலூக்கமான பங்குபற்றல் மற்றும் ஆக்கபூர்வமான மற்றும் திறந்த கலந்துரையாடல்களினால் வருணிக்கப்படுகின்றது.

பணிப்பாளர்கள் அனைத்து சபைக் கூட்டங்களிலும் அவர்கள் அங்கத்தவர்களாய் உள்ள குழுக்களது கூட்டங்களிலும் சமூகமளிக்க வேண்டியுள்ளது. சபைக் கூட்டங்களில் சமூகமளிக்கவியலாத நிகழ்வுகள் பொதுவாக முன் ஈடுபாடுகள், தனிப்பட்ட கடப்பாடுகள் அல்லது சுகயீனம் காரணமாக ஏற்பட்டன.

மேலாக, சபை அங்கத்தவர்கள் அல்லாத சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை அங்கத்தவர்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ள குறிப்பிட்ட விடயங்களை விளித்துரைப்பதற்காக வரவேற்பின் பேரில் கூட்டங்களில் பங்கேற்கலாம். வங்கியின் மூலோபாயம் தொடர்பான விடயங்களில் ஒரு வழமையான அடிப்படையில் சபை மற்றும் உப குழுக்களுக்கு முன்னிலைப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு பெறுநிறுவன முகாமைத்துவத்தின் அங்கத்தவர்கள் மற்றும் / அல்லது வெளிவாரி நிபுணர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

2023 இல் சபைக் கூட்டங்கள் மற்றும் உரிய குழு கூட்டங்களில் ஒவ்வொரு பணிப்பாளரதும் வருகையானது கீழே விபரிக்கப்பட்டுள்ளது:

பணிப்பாளரின் பெயர்	நிலை	சபைக் கூட்டம்	BAC	BHRRC	BIRMC	BECC	BNC	BIBC	BITC	BSPRC
திரு. சுஜீவ ராஜபக்ஷ	சுயாதீன	24/24	-	8/8	-		15/15			4/4
திரு. இசுரு பாலபட்டபெந்தி	சுயாதீனமற்ற	23/24	-	8/8	5/5	15/16	-	4/4	5/5	1/1
திரு. மஞ்சுள வெள்ளாளகே	சுயாதீனமற்ற	24/24	-	8/8	-	18/18	15/15			
செல்வி விசாகா அமரசேகர	சுயாதீனமற்ற	23/24	9/10	-	5/5		-	4/4		4/4
திரு. டி.தொட்டவத்த	சுயாதீன	23/24	10/10	-	5/5		-			
திரு. ஏ.எம்.பி.எம்.பீ. அத்தபத்து	சுயாதீனமற்ற	20/22	8/10	-	-		14/15	4/4		
திரு. எச்.எம்.யு.கே.சமரரத்ன	சுயாதீனமற்ற	18/18	-	-	-	18/18	-		5/5	
திரு. டீ.டி.சி.சோசா	சுயாதீனமற்ற	17/17	-	-	-	2/2	-		5/5	3/3

சபையின் பங்கு GRI 2-12

(கொள்கை A. 1.2)

சபையானது தலைமைத்துவம், மேற்பார்வை கட்டுப்பாடு, அபிவிருத்தியினை வழங்குவதற்கும் வங்கியின் நீண்டகால வெற்றியினை உறுதிசெய்வதற்கும் பொறுப்பாளியாயுள்ளது. அவர்கள் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கவிதிகளின் பிரகாரம் பங்குதாரர்களுக்கு பெறுமதி உருவாக்குவதற்கு வசதியளிக்கின்றார்கள். சபையானது சரியான கலாச்சாரத்தினை வளர்க்கவும், விழுமியங்களை புகுத்தவும் மற்றும் வங்கி முழுவதும் நெறிமுறையான நடத்தையினை ஊக்குவிப்பதற்கும் பொறுப்பாளியாய் உள்ளது.

சபைக்காக ஒரு முறையான விடயங்களின் அட்டவணை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இது அது நிகழ்காலத்தில் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக வழக்கமாக மீளாய்வு செய்யப்படுகின்றது. சபைக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட விடயங்கள் கீழே அட்டவணையில் சுருக்கமாக்கப்பட்ட உருப்படிகளாகும்:

ஆளுகை	மூலோபாயமும் திசைகளும்	இடர் முகாமைத்துவ பொறுப்புக்கூறலும் கட்டுப்பாடும்
ஆளுகை ஒழுங்குகளை மீளாய்வு செய்தல்	மூலோபாயம் மற்றும் வருடாந்து பாதீட்டின் அங்கீகாரம்	நிதிக் கூற்றுக்கள், சந்தைக்கான ஏனைய இற்றைப்படுத்தல்கள் மற்றும் பங்கிலாப பரிந்துரைகளின் அங்கீகாரம்
சபைக் குழுக்களுக்கான அங்கத்துவத்தின் குறிப்பு விதிமுறைகள்	கையகப்படுத்தல் மற்றும் விற்பனை நடவடிக்கையின் அங்கீகாரம்	நிதிக் கூற்றுக்கள், சந்தைக்கான ஏனைய இற்றைப்படுத்தல்கள் மற்றும் பங்கிலாப பரிந்துரைகளின் அங்கீகாரம்
	இடர் முகாமைத்துவ மூலோபாயங்கள் மற்றும் இடர் ஆர்வத்தின் உறுதிப்பாடு	அதிகார மட்டங்கள், நிதியியல் மற்றும் திறைசேரி கொள்கைகளின் அங்கீகாரம்
		உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்தின் மீளாய்வு
		சுகாதார மற்றும் பாதுகாப்பு கொள்கைகளின் அங்கீகாரம்

சபை வங்கியின் நோக்கம் மற்றும் விழுமியத்தினையும் அந்த நோக்கத்தை அடைவதற்கான மூலோபாயத்தையும் தீர்மானிப்பதுடன் அதன் விழுமியங்களை அமுல்படுத்துகின்றது. இது வங்கி உயிர்வாழவும் மற்றும் செழிக்கவும் மற்றும் வங்கியின் சொத்துக்கள் மற்றும் நற்பெயரினை பாதுகாக்கும் செயன்முறைகளும் விழுமியங்களும் நிறுவப்படுவதனை உறுதிசெய்தல்.

சபையானது வங்கியிலுள்ள அனைவருக்கும் மூலோபாய குறிக்கோள்களையும் மற்றும் கூட்டாண்மை விழுமியங்களையும் தெரிவிக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. எனவே சபையானது வங்கியின் மூலோபாயத் திசைக்கும் முகாமைத்துவத்தின் வழிகாட்டலுக்கும் மேற்பார்வைக்கும் பொறுப்பாளியாக வருகின்றது.

சபையானது உள்ளக மற்றும் வெளியக இணைப்புகள் மற்றும் தொடர்பாடல்களுக்கான பொறிமுறைகள் விபரிக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது. அத்துடன் வங்கியின் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களின் தொகுப்பு மற்றும் தொடர்பாடல்களையும் உறுதிசெய்கின்றது. இது செயற்பாட்டின் பாங்கு, வெளிவாரி மற்றும் உள்ளக உறவுமுறைகள், சந்தையும் வணிகமும், தேவையான விளைவு வீதம், மற்றும் செயற்திறன் நியமங்கள், வளர்ச்சி மற்றும் கொள்கை மாற்றங்கள் மற்றும் பாதீட்டு செயன்முறைகளைத் திட்டமிடல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இந்தச் செயல்முறையில், வங்கியானது ஊழியர்களுடனும் வெளிவாரி தொகுதியினருடன் ஒரே விதமாக கதைத்தல் வேண்டும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரே முதன்மை பேச்சாளராக சேவையாற்றல் வேண்டும்.

வங்கியின் முதன்மையான நோக்கம் அதன் மூலோபாய வரம்புறுகையினுள் குறிப்பிடப்பட்ட நோக்கத்தின் பிரகாரம் செல்வத்தை உருவாக்குவதாகும். இது தொடர்பில் வங்கியானது,

- வங்கியின் மூலோபாயங்கள், கொள்கைகள், வணிகத் திட்டங்கள், இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ செயன்முறை மற்றும் பொறிமுறை மற்றும் முகாமைத்துவ செயற்திறன் வரன்முறை என்பவற்றை அங்கீகரிப்பதுடன், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தொடர்ச்சியான அடிப்படையில், அளவிடக்கூடிய / இனங்காணக்கூடிய இலக்குகளுடன் அனைத்து மட்டங்களிலும் அர்த்தமுள்ள திட்டங்களை உருவாக்கப்படுவதனை ஒழுங்குசெய்தல்.
- பொறுப்பற்ற அல்லது பெரிதும் புறக்கணிக்கின்ற விதத்தில் அல்லாது, திடமான வணிகக் கொள்கைகள் மற்றும் விவேகமான வங்கியியல் நடைமுறைகளின் பிரகாரம் செயற்படல்வேண்டும்.
- வங்கியின் மூலதனம் மற்றும் சொத்துக்களை பாதுகாத்தல்: மற்றும்
- துறையில் மற்றும் பொருளாதாரத்தினுள் முழுவதுமாக வங்கியின் சாத்தியமான படிமையினை பராமரித்தல்.

சபையானது அதன் பொறுப்புக்களில் சிலவற்றை சபையின் குழுக்களுக்கு ஒப்படைத்துள்ளது. ஒவ்வொரு குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணியின் நோக்கெல்லை மற்றும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் இந்த அறிக்கையின் பக்கங்கள் 196 முதல் 203 வரை வழங்கப்பட்டுள்ளது.

வங்கியின் இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் பயனுறுதித்தன்மையினை கண்காணிப்பானது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் சபை கணக்காய்வு குழுவிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வங்கியின் 'இடர் சகிப்புத்தன்மையினை' தீர்மானிக்கும் இறுதி பொறுப்பினை சபை வைத்தள்ளது. இடர் முகாமைத்துவ அறிக்கையானது சபையினால் மீளாய்வு செய்யப்படுவதுடன், இது இனங்காணப்பட்ட இடர்கள் மற்றும் உறுதியின்மைகளை கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் அறிக்கையிடலை உள்ளடக்கும். மேலாக, சபையானது இடர் முகாமைத்துவக் குழு மற்றும் கணக்காய்வுக் குழு ஆகியவற்றின் தலைவர்களினால் இடர் முகாமைத்துவம் தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்கின்றது.

பெறுநிறுவன ஆளுகை

வணிகத்துக்குப் பொருத்தமான நாட்டின் சட்டங்களுடன் இணக்கப்பாடு மற்றும் சுயாதீன தொழில்சார் ஆலோசனையினை பெறுவதற்கான செயன்முறை

(கொள்கை A. 1.3)

பணிப்பாளர்கள் சபையானது கூட்டாகவும் தனியாகவும் வங்கியினால் நடாத்தப்படும் வணிகத்திற்கு பொருத்தமான சட்டங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்றது. எனவே, பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டினை பராமரிப்பதற்கு அனைத்து உரிய செயன்முறைகள் மற்றும் கொள்கைள் காணப்படுவதனை உறுதிசெய்வதற்கு சபையானது பொறுப்பாளியாகும்.

சில விடயங்களில் நேரத்திற்கு நேரம் சுயாதீன நியாயப்பாட்டினை பெறுவதற்கான அவசியத்தினை ஏற்றக்கொள்கின்றது. இதன் பிரகாரம், சபையின் அங்கத்தவர்கள், அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்களுடன் இணைந்த ஏதேனும் விடயத்தில் வங்கியின் செலவில் சுயாதீன தொழில்சார் ஆலோசனைகளைப் (சட்டம், கணக்கீடு மற்றும் நிதியியல் ஆலோசனை உள்ளடங்கலான ஆனால் இவற்றுக்கு மட்டும் வரையறைசெய்யப்படாத) பெறுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள்.

கம்பனிச் செயலாளர்

(கொள்கை A. 1.4)

அனைத்து பணிப்பாளர்களும் சபையின் செயலாளருக்கான அணுக்கத்தினைக் கொண்டுள்ளார்கள். சபை செயலாளர் அனைத்து உடன்பாடு கண்ட செயன்முறைகள் மற்றும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அவதானிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்கான சபைக்கு பொறுப்பாளியாவார்.

மேலாக, சபையின் செயலாளர், அனைத்து சபை உப குழுக்களுக்கும் செயலாளராக சேவையாற்றுவதுடன், அனைத்து சபைக் கூட்டங்கள் மற்றும் குழுக்களின் கூட்டங்களது நிகழ்ச்சிக் குறிப்புகளை பராமரிக்கின்றார். சபைச் செயலாளரின் ஏனைய பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- சபைக் கூட்டங்கள் மற்றும் உப குழு கூட்டங்களை நடாத்துதல் தொடர்பான விடயங்களை ஒருங்கிணைத்தல்
- மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் பொருத்தமான சட்டவாக்கங்களுக்கு அமைய நடவடிக்கைகளை நடாத்துதல்
- பெறுநிறுவன ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை பின்பற்றப்படுவதற்கு வசதியளித்தல், பணிப்பாளர்களுக்கு உரிய சட்டவாக்கம் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக துணையளித்தல் உள்ளடங்கலானவை.
- நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களுக்கும் முகாமைத்துவத்திற்கு இடையே தொடர்பாடல் இணைப்பாகச் செயற்படல்
- முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணையாக தொடர்புடைய தரப்பினர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களில் பொருத்தமான வெளிப்படுத்தல்களை உறுதிசெய்தல்
- பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் வங்கியின் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதில் மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் ஏனைய உரிய சட்டவாக்கங்களில் சபையுடன் கலந்தாலோசித்து சட்ட ஆலோசனையினைப் பெறுதல்

பணிப்பாளர்களின் சுயாதீன நியாயப்பாடுகள்

(கொள்கை A. 1.5)

வங்கியின் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவதற்கு பணிப்பாளர்கள் ஒரு சுயாதீன நியாயப்பாட்டினை கொண்டுவருவதற்கான தேவையுள்ளது. அனுபவமிக்க தொழில்வல்லுநர்களாக, அவர்களது கடமைகள் மற்றைய நபர்களின் செல்வாக்கின்றி செயலாற்றப்படல் வேண்டும். சபையானது நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களிடமிருந்து இயக்காற்றலான, ஆக்கபூர்வமான பங்களிப்பினை ஊக்குவிக்கின்றது. .

பணிப்பாளர்களினால் போதுமான நேரம் முயற்சிகளான அர்ப்பணிப்பு

(கொள்கை A. 1.6)

பணிப்பாளர்கள் ஒரு கூட்டத்திற்கு முன்னர், சபை ஆவணங்களை மீளாய்வு செய்வதற்கும் விடயங்களது பின்பற்றலில் மேலதிக தகவல்கள் மற்றும் விளக்கங்களை கோருவதற்கு போதுமான நேரத்தை ஒதுக்குவது எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

அனைத்து பொறுப்புக்களும் திருப்திகரமாக நிறைவேற்றப்படுவதனை உறுதிசெய்வதற்காக ஒவ்வொரு கூட்டத்திலும் போதுமான நேரம் ஒதுக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு பணிப்பாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

பணிப்பாளர்களுக்கான பயிற்சி GRI 2-17

(கொள்கை A. 1.7)

தொடர்ச்சியான அபிவிருத்திக்கு அனைத்து பணிப்பாளர்களும் உரிய பயிற்சியினை பெறுவதற்கு உரித்துடையவர்கள். சபை / குழுக்களுக்கு பணிப்பாளர்களது பங்களிப்புகள் பொருத்தமாக இருப்பதனை உறுதிசெய்வதற்காக, தொடர்ச்சியான பயிற்சிகள் மற்றும் இற்றைப்படுத்தல்கள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுவதுடன், இவை அவர்களது அறிவு, திறன்கள் மற்றும் வங்கி செயற்படும் வணிகம் மற்றும் சந்தைகளில் புரிந்துணர்வினை வழமையாக புதுப்பிப்பதற்காகும்.

இது வங்கியின் செயற்பாடுகள், பெறுநிறுவன ஆளுகை, சட்டம் மற்றும் முறைமைப்படுத்தல் முன்னேற்றங்கள் ஆகியவற்றில் சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள் அல்லது ஆலோசகர்களினால் எழுத்துமூலமான அறிக்கைகள் மற்றும் முன்னிலைப்படுத்தல்களை உள்ளடக்கும்.

தலைவர் மற்றும் பி.நி.அ. (CEO) GRI 2-11

(கொள்கை A. 2)

தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரி (பி.நி.அ.) / பொது முகாமையாளரும் (பொ.மு.) மக்கள் வங்கியின் தலைமைத்துவத்திற்கு கூட்டாக பொறுப்பாளியாயுள்ளதுடன், நேர்மை மற்றும் நன்னடத்தையின் உயர் நியமங்களை ஊக்குவிப்பதற்கும் பொறுப்பாளியாயுள்ளதுடன், தலைவர் மற்றும் பி.நி.அ. / பொ.மு. இற்கும் இடையே பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புக்களில் தெளிவான மற்றும் வினைத்திறனான பிரிவு காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் ஒரு தனியான பங்கினை வகிப்பதுடன் இவை ஒன்றுக்கொன்று நிரப்புவதுடன் இது ஒரு தனி நபருக்கு கட்டற்ற தீர்மானங்களுக்கான அதிகாரங்கள், மற்றும் கட்டுப்பாடுகளைத் தவிர்த்து அதிகாரத்தின் சமநிலையினை உறுதிப்படுத்துவதற்காகும்.

சபையினை தலைமை தாங்குவதற்கும், வழிநடத்துவதற்கும முகாமைப்படுத்துவதற்கும் தலைவர் பொறுப்பாளியாயுள்ளார். இது சபையின் சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் பொறுப்புக்களை முழுவதுமாக நிறைவேற்றுவதற்கும் வினைத்திறனான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கும் ஆகும். பி.நி.அ./ பொ.மு. இன் பிரதான பங்கு வங்கியின் நாளாந்த செயற்பாடுகளை முகாமைப்படுத்துவதாகும்.

தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பதவிகளை ஒரு நபரில் ஒன்றிணைப்பதற்கான தீர்மானம் நியாயப்படுத்தப்பட்டு எடுத்துக்காட்டப்படல் வேண்டும்.

(கொள்கை A. 2.1)

தலைவர் மற்றும் பி.நி.அ. / பொ.மு. பதவிகள் தெளிவாக வேறாக்கப்பட்டுள்ளன, இது ஒரு நபரினால் தீர்மானம் மேற்கொள்வதில் கட்டற்ற அதிகாரத்தினை தடுப்பதற்காகும். தலைவர் மற்றும் பி.நி.அ. / பொ.மு. ஆண்டறிக்கையின் பக்கங்கள் 30 மற்றும் 34 இல் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

தலைவரது பங்கு GRI 2-12

(கொள்கை A. 3)

பி.நி.அ. / பொ.மு. மற்றும் முகாமைத்துவ சபையினால் உடன்பாடுகண்ட மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளை வினைத்திறனாக அமுலாக்குவதினை உறுதிப்படுத்துவதற்கு தலைவர் பொறுப்பாளியாவார். தலைவர் சிறந்த ஆளுகை நடைமுறைகளின் பின்பற்றலுக்கான பாரபத்தியத்தினை வழங்குவதற்கும், பங்குதாரர்கள் மற்றும் ஏனைய பங்காளிகளுடன் வினைத்திறனான தொடர்பாடல்களை உறுதிசெய்வதற்கான மேற்பார்வையினை வழங்குவதற்கும் பொறுப்பாயுள்ளார். தலைவர் ஒரு சிரேஷ்ட நிறைவேற்றுநரல்லாது ஒரு நிறைவேற்றுநரல்லாத பங்கினை மக்கள் வங்கியில் வகிக்கின்றார்.

முறையான விதத்தில் சபை நடவடிக்கைகளை நடாத்துதல்

(கொள்கை A. 3.1)

தலைவர் தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு மாத்திரமன்றி வங்கி மற்றும் பங்குதாரர்களின் சிறந்த அக்கறைகளை பாதுகாப்பதற்கு சபையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளியாவார். இதன் பிரகாரம் தலைவர் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாளியாவார்:

- சபைக் கூட்டங்கள் வினைத்திறனாக திட்டமிடப்பட்டு நடாத்தப்படுவதனை உறுதிசெய்தல்
- ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலினை தயாரித்தல், ஏனைய பணிப்பாளர்கள், பல்வேறு உபகுழுக்களின் அங்கத்தவர்கள் அல்லது சபை செயலாளரினால் முன்மொழியப்பட்ட விடயங்களை கவனத்திலெடுத்தல் வேண்டும்
- சபை அங்கத்தவர்கள் துல்லியமான, நேரத்துடனா மற்றும் தெளிவான தகவல்கள் பெறுவதனை உறுதிப்படுத்தல்
- சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் துல்லியமான பதிவுசெய்யப்பட்டு பணிப்பாளர்களிடையே சுற்றனுப்பப்படுவதனை உறுதிசெய்தல்
- சபைக்கு தலைமைத்துவம் மற்றும் ஆளுகையினை வழங்குதல், இது உரிய நேரத்தில் சபையும் தனித்தனி பணிப்பாளர்களும் சிக்கல்களை கலந்துரையாடுவதற்கான ஒரு உகந்த சூழலினை உருவாக்குவதற்காகும்
- வெளிப்படைத்தன்மை கலாச்சாரத்தினை ஊக்குவித்தல் மற்றும் சபையின் விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான மற்றும் ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடுவதற்கு நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களை ஊக்குவித்தல், மற்றும் இதன்மூலம் சபையின் பயனுறுதியான செயற்பாட்டிற்கான பங்களிப்பிற்கு வசதியளிப்பதற்காகும்

- குழுமத்தின் மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளை விருத்திசெய்வதில் மற்றும் மதிப்பிடுவதில் சபை முற்றான மற்றும் ஆக்கபூர்வமான பங்கினை வகிப்பதனை உறுதிசெய்தல் மற்றும் சபையின் தீர்மானங்கள் வங்கியின் சிறந்த அக்கறையில் எடுக்கப்படுவதையும் இவை சபையின் ஒருமித்த கருத்தினை நியாயமான பிரதிபலிப்பதாகவும் இருப்பதனை உறுதிசெய்தல்

- அர்த்தமுள்ள பின்னூட்டத்தினை உருவாக்குவதற்கு சுய மதிப்பீட்டிற்காக தலைமைத்துவத்தினை வழங்குதல், இது சபையின் பயனுறுதித்தன்மையினை மேலும் மேம்படுத்துவதற்காகும்

முதலாவது நியமனத்தின்போது மற்றும் வழமையான இடைவெளிகளில் (ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவையேனும்) அல்லது சூழ்நிலைகள் மாற்றமடையும் எந்த நேரத்திலும், அனைத்து பணிப்பாளர்களும் நன்னம்பிக்கையில் பதிவுசெய்வதற்காக சபைக்கு வங்கியுடன் ஒரு சாத்தியமான முரண்பாட்டு அக்கறையினை உருவாக்கக்கூடிய ஏதேனும் வணிகங்கள் அல்லது ஏனைய அக்கறைகளை வெளிப்படுத்தல் வேண்டும், இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது ;

- ஏதேனும் வேறு கம்பனி, பங்குடைமை அல்லது ஏனைய வணிக முயற்சிகளில் அனைத்து வணிக அக்கறைகள் (நேரடியான அல்லது மறைமுகமான)

- வர்த்தக, வணிக அல்லது ஏனைய பொருளாதார வங்கிகளில் அங்கத்துவம், மற்றும்

- ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களில் ஏதேனும் அக்கறை (நேரடியான அல்லது மறைமுகமான)

பணிப்பாளர்கள் ஏனைய வங்கிகள் அல்லது தொடர்புடைய தரப்பினருடனான அவர்களது நடவடிக்கைகள் அல்லது கடப்பாடுகளில் ஏதேனும் முரண்பாட்டு அக்கறைகளை அல்லது ஏதேனும் முரண்பாடுடையதாக தோற்றங்களை தவிர்க்கின்றார்கள். சபையினால் கருதப்படவேண்டிய ஒரு விடயத்தில் ஒரு பணிப்பாளர் ஒரு முரண்பாட்டு அக்கறையினைக் கொண்டிருப்பாராயின், சபை அதனை பொருண்மையானதென தீர்மானித்திருந்தால், அவ்விடயமானது சுற்றறுப்பல் மூலமாக அல்லது ஒரு குழுவின் மூலமாக கையாளப்படலாகாது (ஒரு சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தினை தொடர்ந்து அந்நோக்கத்திற்காக நிறுவப்பட்ட ஒரு பொருத்தமான சபை குழு அன்றி). ஆனால் ஒரு சபைக் கூட்டம் இருக்கும். பணிப்பாளர்கள் ஏதேனும் சபைத் தீர்மானத்தில், அவர்கள் அல்லது யாராவது அவர்களது சகாக்கள் ஒரு பொருண்மையான அக்கறையினைக் கொண்டிருப்பார்களாயின், வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பதுடன், சபைக் கூட்டத்தில் சமூகமளித்த குறைவெண்ணில் கணக்கிடப்படமாட்டார்கள்.

மற்றுமோர் வங்கியின் பணிப்பாளர், அத்தகைய வங்கியானது, வங்கியின் ஒரு துணைக்கம்பனி அல்லது இணைக்கம்பனியாய் இருந்தாலொழிய, எந்தவொரு பணிப்பாளரும் நியமிக்கப்படவோ, தெரிவுசெய்யப்படவோ அல்லது பெயரிடப்படவோ மாட்டார்கள்.

நிதியியல் மதிநுட்பம்

(கொள்கை A. 4)

மக்கள் வங்கியின் சபையானது போதுமான நிதியியல் அறிவு மற்றும் மதிநுட்பத்துடனான அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது. நிதியியல் விடயங்களில் வழிகாட்டலை வழங்கும் சிரேஷ்ட பட்டயக் கணக்காளர்கள் மற்றும் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களுக்கும் மேலாக, எஞ்சிய பணிப்பாளர்கள் அவர்களது விரிவான தொழில்சார் அனுபவத்தினூடாக போதுமான நிதியியல் மதிநுட்பத்தினை பெற்றுள்ளார்கள்.

சபையின் சமநிலை

(கொள்கை A. 5)

மக்கள் வங்கியின் சபையானது எட்டு நிறைவேற்றுநரல்லாத பணிப்பாளர்களுடன் சிறந்த சமநிலையினைக் கொண்டுள்ளதுடன், இவர்களுள் ஆறுபேர் ஒரு சுயாதீன கொள்திறனில் கடமையாற்றுகின்றார்கள். இது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட பெறுநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைகளில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த எண்ணிக்கையிலும் அதிகமாகும்.

அனைத்து சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களும் முகாமைத்துவத்திலிருந்து சுயாதீனமாயுள்ளதுடன், அவர்களது தடையற்ற மற்றும் சுயாதீன நியாயப்பாட்டினை நிறைவேற்றுவதுடன் பொருண்மையான தலையிடும் அல்லது பொருண்மையாக தலையிடலாம் என நியாயமாக உணர்ந்துகொள்ளக்கூடிய ஏதேனும் வணிகங்கள் அல்லது ஏனைய தொடர்புகளிலிருந்து விடுபட்டிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு நிறைவேற்றுநரல்லா பணிப்பாளரும் குறிப்பிட்ட வரன்முறைக்கு எதிராக சுயாதீனம் / சுயாதீனமற்ற எனும் ஒரு கையொப்பமிடப்பட்ட பிரகடனத்தினை சமாப்பிக்கின்றார்கள். அதனுடன் சுயாதீனத்தன்மையினை தீர்மானிப்பதற்காக வரன்முறையுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக அவர்கள் மதிப்பிடப்படுகின்றார்கள்.

மீளாய்வாண்டின்போது, மாற்றாள் பணிப்பாளர்களை நியமிப்பதற்கு அவசியமான எந்தவொரு சூழ்நிலையும் எழவில்லை. தலைவர் ஒரு சுயாதீன பணிப்பாளர் ஆகையினால் ஒரு சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரை நியமிப்பதற்கான அவசியம் எழவில்லை.

தகவல்களின் வழங்கல்

(கொள்கை A. 6)

சபைக் கூட்டங்கள் பணிப்பாளர்களுக்கு போதுமான முன்கூட்டிய அறிவித்தல்கள் வழங்கப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சபை அல்லது குழு கூட்டத்திற்கு முன்னர், கூட்டம் இடம்பெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர், நிகழ்ச்சி நிரல் உள்ளடங்கலான அனைத்து உரிய ஆவணங்கள், உள்ளடக்கம் மற்றும் முகாமைத்துவ முன்னிலைப்படுத்தல்கள் பொழிப்பு என்பன அனைத்து பணிப்பாளர்களுக்கும் கிடைக்கப்பெறுவதனை சபைச் செயலாளர் உறுதிசெய்கின்றார். கூட்டங்களில் சமூகமளிக்க வியலாத பணிப்பாளர்கள் ஆவணப்படுத்தப்பட்ட கூட்டக் குறிப்புகள் ஊடாக இற்றைப்படுத்தப்படுவதுடன், இவை அடுத்த கூட்டத்தில் கூட்டக் குறிப்புகளிலிருந்து பின்பற்றப்படவேண்டிய விடயங்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட மாதத்திற்கான கணக்குகள் அடுத்து வரும் மாதத்தில் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர்களிடையே, ஒவ்வொரு பிரிவினதும் / துணை நிறுவனத்தினதும் முக்கிய நிதிச் செயற்திறன் குறிகாட்டிகளுடன் சுற்றறுப்படுகின்றன. வழங்கப்பட்ட தகவல்கள் போதாது அல்லது தெளிவில்லை என சபை உணர்ந்தால், அவர்கள் மேலதிக விளக்கங்கள் அல்லது மேலதிக தகவல்களை வேண்டுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள். மேலதிய தகவல்கள் வழங்குவது அவசியம் என கருதும்போது உரிய முகாமைத்துவ ஆளணியினர் கூட்டங்களுக்கு அழைக்கப்படலாம்.

சபைக்கான நியமனம் GRI 2-10

(கொள்கைகள் A. 7 and A. 8)

மக்கள் வங்கியின் சட்டத்தின் பிரகாரம், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் ஆகக்கூடியது 10 பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவதுடன். இவர்களுள் இருவர் கூட்டுறவுத்துறை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் அமர்த்தப்படுவார்கள்.

2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் பணிப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஆகக்கூடிய காலமான ஒன்பது வருடங்களுக்கு உட்பட்ட மற்றும் 70 வருடங்கள் வயது வரைக்குமான, இதில் எது முதலில் வருகின்றதோ, நியமனங்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்படுகின்றன.

பணிப்பாளர்களுக்கான பொருத்தமானதும் தகுதியானதுமான வரன்முறையின் கீழ் பணிப்பாளர்களுக்கான அனைத்து நியமனங்களும் இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

பன்முகத்தன்மை பிரதிநிதித்துவம் தொடர்பாக எவ்விதமான விசேட குறிப்பிடல்களும் காணப்படவில்லை.

சபைச் செயற்திறன் மதிப்பிடல் GRI 2-18

(கொள்கை A. 9)

வருடந்தோறும் சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் அவரது பயனுறுதித்தன்மையில் ஒரு சுய மதிப்பீட்டினையும் சபை ஒரு குழுவாகவும் நடாத்துகின்றது. இது கோவையில் சபை செயற்திறன் மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட அனைத்து வரன்முறைகளையும் ஒருங்கிணைத்துள்ளது. பதில்கள் சபைச் செயலாளரினால் தொகுக்கப்பட்டு ஒரு பொழிப்பு அறிக்கையாக சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துதல்

(கொள்கை A. 10)

பணிப்பாளர்கள் தொடர்பாக கோவையில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் இந்த ஆண்டறிக்கையில் பின்வருமாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன:

- பக்கங்கள் 30 முதல் 31 வரை பெயர், தகைமைகள், சுருக்கமான சுயவிபரம் மற்றும் நிபுணத்துவத்தின் தன்மை.

- பக்கம் 179 இல் ஆண்டு 2022 இல் இடம்பெற்ற சபை மற்றும் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் வருகையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பக்கங்கள் 196 முதல் 203 வரை பணிப்பாளர்கள் தலைவராக அல்லது அங்கத்தவராக சேவையாற்றும் குழுக்களின் பெயர்கள்.

- பக்கங்கள் 292 முதல் 296 வரை தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்.

பி.நி.அ. (CEO) இன் மதிப்பிடல்

(கொள்கை A. 11)

மதிப்பீட்டுச் செயன்முறையானது சபைக்கும் பி.நி.அ./பொ.மு. இற்கும் பி.நி.அ./பொ.மு. இன் செயற்திறன் மற்றும் தலைமைத்துவம் தொடர்பாக ஒரு ஆக்கபூர்வமான கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான ஒரு முறையான வாய்ப்பினை வழங்குகின்றது. பி.நி.அ./பொ.மு. இற்கான மு.செ.கு. மூலோபாய திட்டமிடல் மற்றும் செயற்திறன் முகாமைப்படுத்தலின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதுடன், இது காலாண்டுதோறும் ஒரு குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு சபைக்கு அவர்களது மீளாய்விற்காக மாதாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த இலக்குகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டு பி.நி.அ./பொ.மு. இன் வருடாந்த மதிப்பிடல் செயன்முறைக்கு ஒரு அடிப்படையாக பயன்படுத்தப்படுகின்றது. ஏதேனும் பாதகமான வேறுபாடுகளுக்கு எடுக்கவேண்டிய திருத்தல் நடவடிக்கையும் விளக்கங்கள் சபைக்கு வழங்கப்படுவதற்கு பி.நி.அ./பொ.மு பொறுப்பாளியாவார்.

பெறுநிறுவன ஆளுகை

பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுநர்களது ஊதியச் செயன்முறை GRI 2-19, 2- 20

(கொள்கைகள் B. 1. B.1.1, B. 1.2, B. 1.3)

சபை ஊதியமானது நிதி அமைச்சினால் நிறுவப்பட்டுள்ள வழிகாட்டிகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றது. எந்தவொரு பணிப்பாளரும் அவரது சொந்த ஊதியத்தினை தீர்மானிப்பதில் உள்ளடக்கப்படுவதில்லை. BHRRC பி.நி.அ./ பொ.மு. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரது ஊதியம் மற்றும் நலன்கள் தொடர்பாக சபைக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதுடன், இவை கூட்டு உடன்படிக்கை மற்றும் வங்கியின் ஊதியக் கொள்கையின் பிரகாரம் மற்றும் குறிப்பு விதிமுறைகளினுள் காணப்படல் வேண்டும்.

ஊதியமானது உயர் செயற்திறனான, தகைமையுடைய, மற்றும் அனுபவமுடைய வங்கியின் ஊழியர்களை கவர்வதற்காக, தக்கவைப்பதற்காக மற்றும் ஊக்கப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. சபை மறுபுறத்தில் நிதி அமைச்சருக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதுடன், கூட்டு உடன்படிக்கையின் கீழ் அவர்களது ஊதியத்திற்கான அங்கீகாரத்திற்கான இறுதி அதிகாரத்தை அமைச்சர் கொண்டுள்ளர்.

BHRRC அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றம்போது அவசியமென கருதப்படும்போது வெளியிலிருந்து தொழில்சார் ஆலோசனையினை நாடுகின்றது. ஊதியக் கொள்கையினை வெளிப்படுத்தும் கூற்று மற்றும் BHRRC இன் தலைவர் மற்றும் அங்கத்தவர்களின் பெயர்கள் பக்கம் 197 இல் காணப்படும் BHRRC இன் அறிக்கையில் காணப்படுகின்றது. பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த ஊதியமானது பக்கம் 194 இல் வழங்கப்பட்டுள்ளது.

பங்குதாரர்களுடனான உறவுகள்

(கொள்கைகள் C. 1, C. 2)

ஒரு அரச வங்கியாக, இலங்கை அரசாங்கத்தை பிரதான பங்குதாராராகக்கொண்ட மக்கள் வங்கி நிதி அமைச்சின் நேரடியான அதிகார வரம்பினுள் வருகின்றது. நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்திருப்பதை உறுதிசெய்வதற்காக சபையானது நிதி அமைச்சுடன் தொடர்புடன் உள்ளது.

ஆண்டறிக்கையானது, ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு நிதி அமைச்சினூடாக சுற்றனுப்பப்படுகின்றது. வங்கியானது அமைச்சு தொடர்பான விடயங்களில் நிதி அமைச்சுடன் தொடர்பிலுள்ளது.

பாரிய மற்றும் பொருண்மையான கொடுக்கல் வாங்கல்கள்

(கொள்கை C. 3)

பக்கங்கள் 292 முதல் 296 வரை வழங்கப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 43 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர, வங்கியின் அல்லது குழுமத்தின் தேறிய சொத்து தளத்தில் பொருண்மையாக மாற்றம் தேவையான எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை.

பொருளாதாரம், சூழல் மற்றும் மக்களிலான நிறுவனத்தின் தாக்கங்களை முகாமைப்படுத்துவதற்கான பொறுப்பினை சபையானது பகிர்ந்தளித்துள்ளது. சபை பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளரை நியமித்துள்ளது. அனைத்து சிரேஷ்ட முகாமைத்தவத்தினரது நியமனத்திலும் சபை பங்குபற்றுவதுடன், வங்கிக்கு முக்கியமான அறிவுசார் மூலதனத்தினை ஊக்கப்படுத்துவதனையும் பாதுகாப்பதனையும் உறுதிசெய்வதுடன், முகாமைத்துவம் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு பொருத்தமான மற்றும் போதுமையான பயிற்சி காணப்படுவதனையும் உறுதிசெய்வதோடு சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு ஒரு தொடர்ச்சி திட்டமிடல் இருப்பதையும் உறுதிசெய்தல் வேண்டும். .

நிதியியல் அறிக்கையிடல்

(கொள்கை D. 1)

ஆண்டறிக்கையானது வங்கியின் நிதியியல் நிலைமை, செயற்திறன் மற்றும் வாய்ப்புக்களில் ஒரு சமநிலையான கருத்தினை முன்னிலைப்படுத்துகின்றது. புரிதல் மற்றும் தெளிவினை அதிகரிப்பதற்காக தகவல்களை முன்னிலைப்படுத்துவதில் எடுத்துரைப்புகளும் காட்சிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எமது செயற்திறனில் இந்த அறிக்கையில் மற்றும் நிதி அமைச்சு மற்றும் முறைமைப்படுத்துபவர்கள் உள்ளடங்கலான பொருத்தமான அதிகாரசபைகளுக்கு முன்னிலைப்படுத்தப்பட்ட ஏனைய தொடர்பாடல்களிலும் நாம் ஒரு சமநிலையான கருத்தினை வழங்கியுள்ளோம். நிதியியல் செயற்திறனில் ஆண்டறிக்கையில் மற்றும் இடைக்கால தொடர்பாடல்களிலும் சட்டரீதியான தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக வங்கியானது ஒவ்வொரு முயற்சியினையும் எடுத்துள்ளது.

கோவையினால் தேவைப்படும் பின்வரும் வெளிப்படுத்தல்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன:

- நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்பிலான கூற்று. பக்கம் 208 ஆனது அவர்களது பொறுப்புக்களது கூற்றினை உள்ளடக்குகின்றது.
- பக்கம் 204 முதல் 205 வரை நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று.
- பக்கங்கள் 48 முதல் 142 வரை முகாமைத்துவ கருத்துக்கள்
- பக்கம் 208 இல் காணப்படும் பணிப்பாளர்களது பொறுப்புக்களிலான கூற்றில் கம்பனியின் செயல்நிலைத் தொடர்ச்சி கூற்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 43 இல் பக்கங்கள் 292 முதல் 296 வரை காணப்படும் பணிப்பாளர்களது அறிக்கையில் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடும் கணக்காய்வுக் குழுவும்

(கொள்கைகள் D. 2 and D. 3)

பங்குதாரர் நலன்களையும் வங்கியின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக இடர் முகாமைத்துவம் மற்றும் திடமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளுக்கான பொருத்தமான மற்றும் போதுமையான செயன்முறைகளை உருவாக்குவதற்கும் அமுலாக்குவதற்குமான அதன் பொறுப்பினை சபை அறிந்துள்ளது. இடர் முகாமைத்துவம் தொடர்பாக சபைக்கு BAC துணையளிப்பதுடன், BIRMC இடர் முகாமைத்துவம் தொடர்பன அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் சபைக்கு துணையளிக்கின்றது. இவர்களது பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் பக்கங்கள் 196 முதல் 203 வரை காணப்படும் குழு அறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ளன.

BIRMC வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவினால் துணையளிக்கப்படுகின்றது. வங்கியின் இடர் முகாமைத்துவ செயன்முறையிலான ஒரு விரிவான அறிக்கை பக்கங்கள் 144 முதல் 173 வரை உள்ளடக்கப்பட்டுள்ளன. BAC வங்கியின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டினால் துணையளிக்கப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் போதுமை மற்றும் பயனுறுத்தன்மையினை மீளாய்வு செய்து ஒரு வழமையான அடிப்படையில் BAC இற்கு அறிக்கையிடுகின்றது. BAC இன் கடமைகள் அத்தகைய கணக்காய்வுகளின் நோக்கெல்லை மற்றும் விளைவுகளை வைத்திருத்தல் உள்ளடங்கலானவை மற்றும் அவற்றின் பயனுறுதித்தன்மை மீளாய்வு செய்யப்படுகின்றது. BAC வங்கியின் கணக்காய்வினை மேற்கொள்ளும் வெளிவாரி கணக்காய்வாளரான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுடன் தொடர்பினைக் கொண்ட பிரதான பங்கினையும் வகிக்கின்றது.

வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள் கோவை மற்றும் பெறுநிறுவன ஆளுகை அறிக்கை

(கொள்கைகள் D. 4 and D. 5)

வங்கியானது வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள் ஆகிய இரண்டு கோவைகளைக் கொண்டுள்ளதுடன், ஒன்று பணிப்பாளர்களுக்கும் மற்றையது ஊழியர்களுக்கும் பொருத்தமானதாகும். வெளித்தோன்றும் வணிகச் செயற்பாடுகளை கருத்திற்கொண்டு BHRRC உரிய கோவைகளை வழமையாக மீளாய்வு செய்து அவை பொருத்தமானதாகவும் போதுமையானதாகவும் இருப்பதனை உறுதிசெய்கின்றது.

வணிக நடத்தை மற்றும் நெறிமுறைக் கோவைகள், பெறுநிறுவன ஆளுகையில் சிறந்த நடைமுறைகள் கோவையின் அட்டவணை 1 இன் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது.

பக்கங்கள் 174 முதல் 195 வரை காணப்படும் இந்த பெறுநிறுவன ஆளுகை அறிக்கையானது கொள்கை D 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெறுநிறுவன ஆளுகையில் சிறந்த நடைமுறைக் கோவையுடனான இணக்கப்பாட்டு அளவினை வெளிப்படுத்தும் தேவைப்பாட்டுடன் இணங்கியுள்ளது.

பங்குதாரர் உறவுகள்

(கொள்கைகள் E and F)

கோவையின் பொருத்தமான ஏற்பாடுகள் பொருத்தமற்றது ஏனெனில் மக்கள் வங்கியின் பிரதான பங்குதாரர் இலங்கை அரசாங்கம் என்பதனாலாகும்.

நிலைபேறுடமை அறிக்கை

GRI 2-9, 2-12, 2-13, 2-14

(கொள்கை G)

சபையானது வங்கிக்கு ஒரு நிலைபேறுடமைக் கொள்கையினை அங்கீகரித்ததுடன், அதன் தத்துவம், குறிக்கோள்கள் மற்றும் சமூக மற்றும் சூழல் அபிவிருத்திக்கான மூலோபாய இலக்குகளை உறுதிப்படுத்துவதற்காக ஒரு ஆளுகைக் கட்டமைப்பினை நிறுவி அமுல்படுத்தியுள்ளது.

இதன் பிரகாரம், இலாபம், மக்கள், பூகோளம் ஆகிய வங்கியின் செயற்பாடுகள் அனைத்திலும் அனைத்து பூகோளவியல் பிரிவுகளிலும் புகுத்தப்பட்டுள்ளன. வங்கியின் நிலைபேறுடைய வணிக முன்னெடுப்புகள் கோவையின் கொள்கைகளுக்கமைய பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன:

- **கொள்கை 1** - பொருளாதார நிலைபேறுடமை - பக்கங்கள் 68 முதல் 73 வரை காணப்படும் நிதியியல் தலைமையின் மீளாய்வு
- **கொள்கை 2**- சூழல் - பக்கங்கள் 134 முதல் 142 வரை இயற்கை மூலதனம்.

- **கொள்கை 3** - தொழிலாளர் நடைமுறைகள் - மனித மூலதனம் பக்கங்கள் 103 முதல் 113 வரை.
- **கொள்கை 4** - சமூகம் - சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் பக்கங்கள் 114 முதல் 133 வரை.
- **கொள்கை 5** - கருவிப் பொறுப்பு - சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் : வாடிக்கையாளர்கள் பக்கங்கள் 114 முதல் 119 வரை
- **கொள்கை 6** - பங்காளி இனங்காணல், ஈடுபாடு மற்றும் பயனுறுதியான தொடர்பாடல், பங்காளிகள் ஈடுபாடு பக்கங்கள் 53 முதல் 55 வரை.
- **கொள்கை 7** - அறிக்கையிடும் செயன்முறையின் ஒரு பாகமாக நிலைபேறுடமை அறிக்கையிடல் உருவாக்கப்பட்டவண்ணமுள்ளதுடன் இது வழமையாக இடம்பெறும் - எமது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையினைப் பற்றி பக்கங்கள் 4 முதல் 6 வரை.

சபை கணக்காய்வுக் குழு மற்றும் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினூடாக சபையானது வழமையாக அமைப்புமுறைகள், செயன்முறைகள் மற்றும் வழிமுறைகளை மீளாய்வு செய்கின்றது. இது கட்டுப்பாட்டில் உள்ளக முறைகளின் பயனுறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகும். எனவே, எந்நேரமும் உயர்ந்த மட்டத்தில் அதன் அறிக்கையிடல் மற்றும் நிதியியல் விளைவுகளின் துல்லியத்தன்மை மற்றும் அதன் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றலினை உறுதிப்படுத்துவதற்காகும்.

பெறுநிறுவன ஆளுகை

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான பெறுநிறுவன ஆளுகையிலான 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்புரை மற்றும் அதற்கான திருத்தங்களின் பிரகாரம்.

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
3. (1)	**சபையின் பொறுப்புக்கள்**		
	சபையானது வங்கியின் பாதுகாப்பு மற்றும் வலுவான தன்மையினை பின்வரும் விதத்தில் பலப்படுத்துகின்றது:.		
a.	மூலோபாய குறிக்கோள்களையும் பெறுநிறுவன விழுமியங்களையும் நிறுவுதல்	2022 - 2024 இற்கான சபை அங்கீகரிக்கப்பட்ட ஒரு மூலோபாயத் திட்டம் உள்ளது. மூலோபாயத் திட்டமிடல் பிரிவானது ஏற்கனவே 2024-2026 இற்கான மூலோபாயத் திட்டத்தினை விருத்திசெய்துள்ளதுடன், இவை 2024, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்கு சுழலுறுவியுள்ளது. சபை மூலோபாய திட்டமிடல் மற்றும் மீளாய்வுக் குழுவானது (BSPRC) இதனை 21.03.2024 இல் பரிந்துரைத்து அது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. பாதீடு 2023 ஆனது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. பாதீடு 2024 - மூலதனச் செலவு எல்லைகள் (திருத்தியமைக்கப்பட்டவாறு) சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விரிவான கலந்துரையாடல்களின் பின்னர், சபையானது 31.12.2024 இல் நிறைவடையும் (திருத்தியமைக்கப்பட்டவாறு) ஆண்டிற்கான வங்கியியல் துணைச் சேவைகள் பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஆகியவற்றுக்கான மூலதனச் செலவு பாதீடுகளை அங்கீகரித்தது. பாதீடு 2024 சபையின் அங்கீகாரத்திற்காக (திருத்தியமைக்கப்பட்டது) சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், பி.பொ.மு. (DGM) தரத்திலுள்ள அனேகமான மு.மு.ஆ. கலந்துரையாடலில் பங்கேற்றார்கள். விரிவான கலந்துரையாடலின் பின்னர், சபை அதில் வழங்கப்பட்டு அனுமானங்களுக்கு உட்பட்டு பின்வருவனவற்றிற்கு அங்கீகாரத்தினை வழங்கியது. a). 31.12.2024 இல் நிறைவடையும் ஆண்டிற்கான பாதீடு b). 2024 1ஆம் காலாண்டு நிறைவின் பின்னர் குறித்த பாதீட்டின் நியாயத்தன்மையிலான மீளாய்வு.	இணக்கப்பாடுடையது
b.	இடர் கொள்கை மற்றும் முகாமைத்துவம் உள்ளடங்கலான ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்தின் அங்கீகாரம்	மூலோபாயத் திட்டமானது வங்கியின் மூலோபாயக் குறிக்கோள்கள் மற்றும் ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்தினை உள்ளடக்குகின்றது. இடர் முகாமைத்துவ செயன்முறைகளும் பொறிமுறைகளும் உள்ளன. வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கையினை BIRMC மீளாய்வு செய்துள்ளது. 2024-2026 மூலோபாயத் திட்டமானது 2024 உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கான ஒட்டுமொத்த வணிக மூலோபாயம், அளவிடக்கூடிய இலக்குகளை உள்ளடக்குகின்றது.	இணக்கப்பாடுடையது
c.	இடர் முகாமைத்துவம்	சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) பி.பொ.மு. இடர் முகாமைத்துவம் மற்றும் பொருத்தமான மு.மு.ஆ. இன் உதவியுடன் வங்கியின் அனைத்து இடர்களையும் மதிப்பிடும் முன்னெடுப்பினை எடுக்கின்றது. அத்துடன், BIRMC வங்கியின் பதிய மூலோபாயங்கள், புதிய மூலோபாயங்களிலிருந்து எழுகின்ற இடர்கள் மற்றும் அத்தகை இடர்களை தணிப்பதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளை கலந்தாலோசிக்கின்றது.	இணக்கப்பாடுடையது
d.	அனைத்து பங்காளிகளுடனான தொடர்பாடல்	சபையானது அனைத்து பங்காளிகளுடனான ஒரு பயனுறுதியான பெறுநிறுவன தொடர்பாடல் கொள்கையினை அங்கீகரித்து அமுலாக்கியுள்ளது. சபையானது நடைமுறையிலுள்ள தொடர்பாடல் கொள்கையினை மீளாய்வு செய்துள்ளது.	இணக்கப்பாடுடையது
e.	உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைகள்	**உள்ளக கட்டுப்பாட்டு முறைகள்** நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மை மீது ஒரு செயன்முறையினூடாக பணிப்பாளர்கள் சபையினால் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் பயனுறுதித்தன்மையினை மதிப்பிடுவதற்கு வங்கியில் ஒரு வருடாந்த சபை பொறிமுறை காணப்படுகின்றது. மேலும், வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது மேற்கூறிய செயன்முறையின் பயனுறுதித்தன்மையினை சரிபார்த்து செயன்முறைக்கு பெறுமதி சேர்க்கின்றது. உள்ளகக் கட்டுப்பாட்டு முறையும் முகாமைத்துவ தகவல் முறையும் IAB இனால் மீளய்வு செய்யப்பட்டுள்ளதுடன் சபை கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், முகாமைத்துவ தகவல் பிரிவு 2022 உள்ளடங்கலான நிதி மற்றும் முகாமைத்துவ கணக்கீட்டுப் பிரிவின் கணக்காய்வானது BAC இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. **முகாமைத்துவ தகவல் முறைகள்** வங்கியானது ஒரு MIS அலகினை நிறுவியுள்ளதுடன் இதன் முக்கிய பங்கு உருவாக்கப்பட்ட அறிக்கைகளின் துல்லியத்தன்மை மற்றும் தேவையான தரப்பினருக்கு உரிய நேரத்தில் அறிக்கைகள் விநியோகிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதாகும். 2023 இன் போது தகவல் தொழில்நுட்ப பிரிவின் கணக்காய்வின் ஒரு பகுதியாக தலைமைக் காரியாலயத்தின் MIS அலகில் ஒரு கணக்காய்வினை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது மேற்கொண்டதுடன், அவற்றிலான அவதானிப்புகளும் மறுமொழிகளும் BAC இற்கு அவர்களது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
f.	முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்(KMPs)	சபையானது பின்வரும் வகையினரை முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக வரையறை செய்தும் பெயரிட்டும் உள்ளது. CEO, SDGM, DGM, AGM, CRO/DGM (RM), HOF, CIA, இணக்கப்பாட்டு அதிகாரி, திறைசேரியின் தலைவர், சட்டப்பிரிவின் தலைவர், த.தொ. இன் தலைவர் மற்றும் சபைச் செயலாளர். இது 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பணிப்புரையின் பிரிவு 3 (1) (i) (f) இன் வரைவிலக்கணத்தின் கீழ் வருகின்ற வேறு ஏதேனும் அதிகாரியினையும் 2019 இன் 1 ஆம் இலக்க வங்கியியல் சட்ட தீர்மானத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளவாறாகும்.	இணக்கப்பாடுடையது

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
g.	பணிப்பாளர்கள் மற்றும் மு.மு.ஆ. இனருக்கான அதிகாரம் மற்றும் முக்கிய பொறுப்புக்களை வரையறை செய்தல்	பணிப்பாளர்களுக்கு மு.மு.ஆ. இற்கும் இடையில் அதிகாரம் மற்றும் பொறுப்புக்களில் தெளிவான வேறுபடுத்தல் காணப்படுகின்றது. சபை அங்கத்தவர்கள் வங்கியின் மூலோபாயத் தீர்மானங்களை எடுப்பதற்கு பொறுப்பாளியாவார்கள். மு.மு.ஆ. சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாளியாவார்கள். சிறந்த நடைமுறைக் கோவை - இணைப்பு III - சபையின் சாசனமானது "சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்" இனை உள்ளடக்குகின்றது. மு.மு.ஆ. இன் முக்கிய பொறுப்புக்கள் முற்றாக செயற்பாடு அடிப்படையானது மற்றும் அவர்களது உரிய பணி விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் அதிகாரமானது அதிகார வரம்பு ஒப்படைப்பின் கீழ் வரையறை செய்யப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
h.	மு.மு.ஆ. இனாலான வங்கியின் அலுவல்களிலான மேற்பார்வை	முக்கிய முகாமைத்துவ ஆளணியினரூடாக சபையானது வங்கியின் அலுவல்களில் பொருத்தமான மேற்பார்வையினை நிறைவேற்றியுள்ளது.	இணக்கப்பாடுடையது
i.	சொந்த ஆளுகை நடைமுறைகளின் பயனுறுதித்தன்மையினை மதிப்பிடல் (i) பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தெரிவு, பெயரிடல் மற்றும் தேர்வு (ii) முரண்பாட்டு அக்கறைகளின் முகாமைத்துவம்: மற்றும் (iii) பலவீனங்களின் தீர்மானம் மற்றும் அவசியமானபோது மாற்றங்களின் அமுலாக்கம்	மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 08 இன் பிரகாரம், பணிப்பாளர்களின் நியமனமானது அமைச்சரினால் மேற்கொள்ளப்படுவதுடன், அவர்களுள் இருவர் கூட்டுறவுத்துறைக்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள். அனைத்து மு.மு.ஆ. இன் தெரிவு, பெயரிடல், மற்றும் பரிந்துரைகள் BNC இனால் செயலாக்கப்பட்டு சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. முரண்பாட்டு அக்கறைகள் உரியவாறு பதிவுசெய்யப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் சபையின் சுய-மதிப்பீட்டு படிவங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது
j.	மு.மு.ஆ. இன் தொடர்வுத் திட்டம்	பி.நி.அ. (CEO) மற்றும் மு.மு.ஆ. (KMPs) இனருக்கான சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்வுத் திட்டம் உள்ளது.	இணக்கப்பாடுடையது
k.	மு.மு.ஆ. உடனான வழமையான கூட்டங்கள்	முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அவர்களது கடமைகள் தொடர்பான விடயங்களில் விளக்கத்திற்கான அவசியம் எழும்போது சபையினல் வரவேற்கப்படுகின்றார்கள்.	இணக்கப்பாடுடையது
l.	முறைமைப்படுத்தல் சூழல் மற்றும் முறைமைப்படுத்துபவருடன் பயனுறுதியான உறவுமுறையினை பராமரித்தல்	முறைமைப்படுத்தல் சூழலினை புரிந்துகொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் செயன்முறைகளை சபை எடுத்துள்ளதுடன், வங்கியானது முறைமைப்படுத்துபவர்களுடன் உறவினைப் பேணுகின்றது. பணிப்பாளர்களாக நியமிக்கப்படும்போது சபைச் செயலாளர் அவர்களுக்கு கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகள் கோவை 1.3 இனையும் நடைமுறையிலுள்ள பணிப்பாளர்களது விபரங்களையும் வழங்குகின்றார். நடாத்தப்பட்ட சட்டரீதியான பரிசீலனையில் எழுப்பப்பட்ட வரைவு மேற்பார்வை கரிசனைகள் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இணக்கப்பாட்டு அதிகாரி மாதாந்த அடிப்படையில் பணிப்பாளர்கள் சபைக்கு ஒரு அறிக்கையினைச் சமர்ப்பிக்கின்றார். இ.ம.வ. (CBSL) இன் கூட்டங்களில் பி.நி.அ. (CEO) இன் சமூகமளிப்பானது முறைமைப்படுத்துபவருடன் பராமரிக்கப்படும் உறவிற்கான மேலதிகச் சான்றாகும்.	இணக்கப்பாடுடையது
m.	வெளிவாரி கணக்காய்வாளர்களை பணிக்கமர்த்தல்	மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 34 இன் பிரகாரம், கணக்காய்வாளர் நாயகம் அவர்களே வங்கியின் கணக்காய்வாளர் ஆவார்.	இணக்கப்பாடுடையது
3.1 (ii)	தலைவர் மற்றும் பி.நி.அ. இன் நியமனம் மற்றும் அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வரையறை செய்து அங்கீகரித்தல்	மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 10 இன் பிரகாரம், சபையின் அங்கத்தவர்களிலிருந்து அமைச்சர் சபையின் தலைவரை நியமிக்கின்றார். திரு. சுஜீவ ராஜபக்ஷ அவர்கள் 21.12.2022 முதல் தலைவர் மற்றும் சுயாதீன, நிறைவேற்றுநரல்லா பணிப்பாளராக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார். சபையானது திரு. கிளைவ் பொன்சேகா அவர்களை 01.01.2023 முதல் ஒரு மாத காலத்திற்கு பதில் பி.நி.அ. / பொ.மு. ஆக நியமித்ததுடன், இ.ம.வ. இன் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவரது நியமனமானது 01.08.2023 முதல் பி.நி.அ. / பொ.மு. ஆக மீளுறுதிப்படுத்தப்பட்டது. வங்கியின் பெறுநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவையின் பிரிவு 2.22 மற்றும் 2.23 இல் தலைவரது அதிகாரங்களும் பங்கும் வரையறை செய்யப்பட்டுள்ளது. . வங்கியின் பெறுநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவையின் பிரிவு 3.9 இணைப்பு III பி.நி.அ. / பொ.மு. இன் பங்கு, கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வரையறை செய்கின்றது.	இணக்கப்பாடுடையது
3.1 (iii)	வழமையான சபைக் கூட்டங்கள்	2023 இன் போது வங்கியானது 24 கூட்டங்களை நடாத்தியுள்ளது. 2023 இன் போது 50 சுற்றறிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதுடன் அடுத்த சபைக் கூட்டத்தில் உரியவாறு உறுதிசெய்யப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது
3.1 (iv)	நிகழ்ச்சி நிரலில் பிரேரணைகளை பணிப்பாளர்கள் உள்ளடக்குவதற்கான ஏற்பாடுகள்	ஒரு நடைமுறையாக பணிப்பாளர்கள் வழமையான கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலில் விடயங்கள் மற்றும் பிரேரணைகளை உள்ளடக்குகின்றார்கள். சிறந்த நடைமுறைகள் கோவையின் பிரிவு 2.16(டி) இன் பிரகாரம், வழமையான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலில் அனைத்து பணிப்பாளர்களும் விடயங்கள் மற்றும் பிரேரணைகளை உள்ளடக்குவதனை இயலமையாக்குவதற்கான ஏற்பாடு காணப்படுவதுடன், அத்தகைய விடயங்கள் மற்றும் பிரேரணைகள் வங்கியின் வணிக ஊக்குவிப்பு மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பானதாகும்.	இணக்கப்பாடுடையது

பெறுநிறுவன ஆளுகை

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
3.1 (v)	கூட்டங்களின் அறிவித்தல்	சபைக்கான செயலாளரின் கடமைகள் (இணைப்பு IV) பெறுநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவை 1.3 இல் வழங்கப்பட்டுள்ளதுடன், இது சபையின் அங்கீகாரத்துடன் ஒவ்வொரு வருடத்திற்கும் வழமையான சபைக் கூட்டங்களுக்கான நாளேட்டினை தயார்செய்வதற்கான கடமை சபை செயலாளருடையது என்ற ஏற்பாடானது உள்ளடக்கப்பட்டுள்ளது. 2024 இற்கான சபைக் கூட்டங்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு நடைமுறையாக, வழமையான கூட்டங்களில் சமூகமளிப்பதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குவதற்காக சபைக்கு ஆகக் குறைந்தது 7 நாட்கள் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. மேலும், விசேட மற்றும் அவசர சபைக் கூட்டங்களுக்கு உரிய அறிவித்தல் வழங்கப்பட்டது.	இணக்கப்பாடுடையது
3.1 (vi)	பணிப்பாளர்களின் வருகை	சபைச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட சபை வருகை அட்டவணையின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டின்போது இடம்பெற்ற கூட்டங்களில் அனைத்து பணிப்பாளர்களும் மூன்றில் இரண்டில் சமூகமளித்திருந்தார்கள். சில பணிப்பாளர்கள் நேரலையாக பங்குபற்றியதுடன், எந்தவொரு பணிப்பாளரும் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் வருகை தராது இருக்கவில்லை.	இணக்கப்பாடுடையது
3.1 (vii)	சபை செயலாளரின் நியமனம் மற்றும் பொறுப்புக்களை நிறுவுதல்	சபையின் செயலாளர் ஒரு வழக்கறிஞர் என்பதுடன் இவர் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவு 43 இன் ஏற்பாடுகளை திருப்திபடுத்துகின்றார். சபையானது செல்வி. வஷியாமா விஜேகோன் அவர்களை உதவி சபைச் செயலாளரை 01.04.2019 முதல் பணிப்பாளர்கள் சபைக்கு பதிலாள் செயலாளராக நியமித்துள்ளது.	இணக்கப்பாடுடையது
3.1 (viii)	சபை செயலாளரின் சேவைக்கான மற்றும் ஆலோசனைக்கான பணிப்பாளர்களின் அணுக்கம்	பெறுநிறுவன ஆளுகையின் சிறந்த நடைமுறைகள் கோவையின் பிரிவு 2.25 இது தொடர்பில் ஒரு ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
3.1 (ix)	நிகழ்ச்சிக் குறிப்புகளின் பராமரிப்பு	சிறந்த நடைமுறைக் கோவையில் வழங்கப்பட்டு சபைக்கான செயலாளரின் கடமைகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு இது தொடர்பில் ஒரு ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது. மேலும், அனைத்து சபை அங்கத்தவர்களும் சபையின் கூட்டக் குறிப்புகள் மற்றும் உப குழுக்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளுக்கான அணுக்கத்தை சபை செயலாளரூடாக கொண்டுள்ளார்கள்.	இணக்கப்பாடுடையது
3.1 (x)	நிகழ்ச்சிக் குறிப்புகள் போதுமையான விபரங்களுடன் இருத்தல் மற்றும் முறைமைப்படுத்துபவர்கள் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளுக்கு ஒரு குறிப்பாகச் செயற்படல்	வழங்கப்பட்ட வரன்முறையினை உள்ளடக்கி விபரமான நிகழ்ச்சிக் குறிப்புகள் மற்றும் சபை நிகழ்ச்சிக் குறிப்புகள் அவை அங்கத்தவர்களின் தனிப்பட்ட கருத்துக்கள், சபையின் இறுதித் தீர்மானம், வங்கியின் மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளுடன் இணங்கியுள்ளதா போன்ற தேவையான விபரங்களை உள்ளடக்கியிருக்கும். மேலும், தீர்மானங்களுக்கு வருவதில் சபையின் அங்கத்தவர்களினால் பயன்படுத்தப்படும் அறிக்கைகள் மற்றும் தகவல்கள் குறிப்பிடப்படுகின்றன.	இணக்கப்பாடுடையது
3.1 (xi)	சுயாதீன தொழில்சார் ஆலோசனையினை பெறுவதற்கான பணிப்பாளர்களின் ஆற்றல்	வங்கியின் செலவில் பொருத்தமான சூழ்நிலைகளில் சுயாதீன தொழில்சார் ஆலோசனையினைப் பெறுவதற்கான சபை அங்கீகரிக்கப்பட்ட கொள்கை காணப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது
3.1 (xii)	முரண்பாட்டு அக்கறைகளைக் கையாளுதல்	1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 11 பணிப்பாளர்கள் சபையின் முரண்பாட்டு அக்கறைகள் குறித்து கதைக்கின்றது. இந்தச் செயன்முறையானது, ஒரு பணிப்பாளர் ஏதேனும் சபையின் தீர்மானம் தொடர்பில் அவர் அல்லது அவரது நெருங்கிய் உறவினர் அல்லது ஒரு கவனிப்பில் பணிப்பாளர் கணிசமான அக்கறையினைக் கொண்டிருப்பாராயின் அவர் வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பதுடன் குறைவெண்ணில் கணக்கெடுக்கப்படாத என்பது தெளிவாகின்றது. வங்கியின் சிறந்த நடைமுறைக் கோவையின் பிரிவு 2.13 ஆனது சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் ஒரு ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
3.1 (xiii)	சபையின் தீர்மானத்திற்காக ஒதுக்கப்பட்ட விடயங்களின் முறையான அட்டவணை	சிறந்த நடைமுறைக் கோவை இணைப்பு III - சபை சாசனமானது “சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை” உள்ளடக்குகின்றது.	இணக்கப்பாடுடையது
3.1 (xiv)	கடன்திறன் சிக்கல்கள் இருப்பின் மத்திய வங்கிக்கு அறிவித்தல்	வங்கியானது அதன் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான ஆற்றலினை கொண்டிராவிட்டால் அல்லது அவ்வாறு நிகழக்கூடிய சாத்தியம் காணப்படும்போது இனங்காண்பதற்கான செயன்முறைகளை அது கருதினால், ஏதெனும் தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னர் வங்கியின் நிலைமை குறித்து வங்கியியல் மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கான தேவை குறித்து சபை அறிந்துள்ளது.	இணக்கப்பாடுடையது
3.1 (xv)	மூலதனப் போதுமை	சபையானது நாணயச் சபையினால் தேவைப்படுகின்ற மட்டங்களில் வங்கியினை மூலதனவாக்கமாக்கியுள்ளது. இது இணக்கப்பாட்டு அதிகாரியினால் சமர்ப்பிக்கப்படும் மாதாந்த இணக்கப்பாட்டு சான்றிதழ் ஊடாக விளித்துரைக்கப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது
3.1 (xvi)	ஆண்டறிக்கையில் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையினை பிரசுரித்தல்	இந்த பணிப்புரையின் பிரிவு 3 உடன் இணங்கி சபையானது அதன் பெறுநிறுவன ஆளுகை அறிக்கையினை பிரசுரித்துள்ளதுடன், இது 2023 ஆம் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 184 முதல் 195 வரையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
3.1 (xvii)	சுய மதிப்பீட்டு பணிப்பாளர்கள்	சபையின் செயலாளர் அனைத்து பணிப்பாளர்களிடமிருந்தும் வருடாந்த மதிப்பிடல் படிவங்களை பெறுகின்றார். 2023 ஆம் ஆண்டிற்கான அனைத்து பணிப்பாளர்களதும் மதிப்பிடல் படிவங்கள் கிடைக்கப்பெறுவதுடன், இவற்றின் ஒரு பொழிப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
3.(2)	**சபையின் தொகுப்பு**		
3.(2) (i)	பணிப்பாளர்களின் எண்ணிக்கை	சபையானது 2023 ஆம் ஆண்டின்போது ஏழுக்கும் (7) குறையாத பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்ததுடன், இது பணிப்புரையின் தேவைக்கு இணங்க காணப்படுகின்றது. 31.12.2023 வரைக்கும பணிப்பாளர் பதவிகளை வகித்த பணிப்பாளர்களின் பெயர்கள் பின்வருமாறு, ஒரு சான்றாக நாம் சபை செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட சபை நிகழ்ச்சிக் குறிப்புகள் மற்றும் பணிப்பாளர்கள் தகவல்களை பார்த்தள்ளோம். திரு. சுஜீவ ராஜபக்ஷ (IND/NED) திரு. இசுரு பாலபட்டபெந்தி (NI/NED) திரு. மஞ்சுள வெள்ளாளகே (NI/NED) செல்வி. விசாகா அமரசேகர (NI/NED- 17.01.2023 முதல்) திரு. துஷ்மந்த தொட்டவத்த (IND/NED) திரு. ஏ எம் பி எம் பீ அத்தபத்து (NI/NED) திரு. உதேனி சமரரத்ன (NI/NED- 17.01.2023 முதல்)) திரு. துஷான் சோசா (IND/NED- 07.03.2023 முதல்)	இணக்கப்பாடுடையது
3.(2) (ii) (a) மற்றும் (b)	ஒரு பணிப்பாளரின் சேவைக்காலம்	எந்தவொரு பணிப்பாளரும் ஒன்பது வருட சேவைக்காலத்தினை விஞ்சவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(2) (iii)	சபைச் சமநிலை	வங்கியின் சபையில் எந்தவொரு நிறைவேற்று பணிப்பாளர்களும் இல்லை.	இணக்கப்பாடுடையது
3.(2) (iv)	சுயாதீன நிறைவேற்றுனல்லா பணிப்பாளர்கள்	சபை 2023 இன் போது போதுமையான எண்ணிக்கையிலான சுயாதீன, நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களை உள்ளடக்கியிருப்பதுடன், இது பணிப்புரையுடன் இணங்கியுள்ளது. 2023 ஆம் வருடத்தில் இருந்த சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள், திரு. சுஜீவ ராஜபக்ஷ திரு. துஷ்மந்த தொட்டவத்த திரு. துஷான் சோசா (07.03.2023 முதல்) திரு. மஞ்சுள வெள்ளாளகே (03.10.2023முதல்) திரு. உதேனி சமரரத்ன (26.06.2023முதல்)	இணக்கப்பாடுடையது
3.(2) (v)	மாற்று சுயாதீன பணிப்பாளர்கள்	மாற்று பணிப்பாளர்களை நியமிப்பதற்கு மக்கள் வங்கிச் சட்டத்தில் எவ்விதமான ஏற்பாடுகளும் இல்லை என்பதுடன் 2023 ஆம் ஆண்டின்போது அத்தகைய சூழ்நிலை எழவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(2) (vi)	நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களுக்கான வரன்முறை	1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன் கீழ் சபைக்கான நியமனங்கள் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்திக்கு பொறுப்பாயுள்ள அமைச்சரினால் மேற்கொள்ளப்படுவதுடன், நிதி அமைச்சு மற்றும் வர்த்தக அமைச்சின் பிரதிநிதிகள் சுயாதீனமற்ற பணிப்பாளர்கள் ஆவதுடன் ஏனைய பணிப்பாளர்கள் சுயாதீனமானவர்கள்.	இணக்கப்பாடுடையது
3.(2) (vii)	குறைவெண்ணில் அரைவாசிக்கு மேல் நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களை உள்ளடக்கியிருத்தல்	வங்கியின் சிறந்த நடைமுறைக் கோவையின் பிரிவு 2.3 இன் பிரகாரம், சபையின் குறிப்பிடப்பட்டுள்ள குறைவெண் ஐந்தாகும் மற்றும் வங்கியின் அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்றுனரல்லாதவர்கள். நிதியாண்டு 2023 இற்கு சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சபை அங்கத்தவர்களின் வருகையின்போது, அனைத்து சபைக் கூட்டங்களிலும் தேவையான குறைவெண்ணுடன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
3.(2) (viii)	சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களை இனங்கண்டு பணிப்பாளர்களின் வகைகளை தொடர்பாடல்களில் மற்றும் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தல்	தலைவர், நிறைவேற்று பணிப்பாளர்கள், நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள் மற்றும் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களது பெயர்கள் மற்றும் சபையின் தொகுப்பு என்பன ஆண்டறிக்கையின் பக்கம் 179 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது
3.(2) (ix)	சபைக்கான நியமனங்களுக்கு முறையான மற்றும் வெளிப்படையான செயன்முறை	1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன் கீழ் சபைக்கான நியமனங்கள் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரினால் மேற்கொள்ளப்படுவதுடன், இது 2019 இன் 1 ஆம் இலக்க இ.ம.வ. இன் பணிப்புரையின் பிரகாரம் இ.ம.வ. இடமிருந்து பொருத்தமானதும் தகுதியானதும் என்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.	இணக்கப்பாடுடையது
3.(2) (x)	தற்காலிக வெற்றிடங்களை நிரப்புவதற்கு பணிப்பாளர்களின் மீள்தெரிவு	இவ்விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அவர்களை நியமிப்பதனால் அத்தகைய ஒரு சூழ்நிலை எழவில்லை.	இணக்கப்பாடுடையது

பெறுநிறுவன ஆளுகை

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
3.(2) (xi)	பணிப்பாளரது நீக்கம் அல்லது பதவி விலகள்களுக்கான காரணத்தின் தொடர்பாடல்	மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 (4) விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு ஒரு கடிதத்தினை எழுதுவதன் மூலம் ஒரு பணிப்பாளர் பதவி விலகுவதற்கான ஏற்பாடுகளை வழங்குகின்றது. மேலும், அமைச்சர் ஒரு வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிப்பதன் மூலம் ஒரு பணிப்பாளரை நீக்கலாம். பணிப்பாளர்களது பதவி விலகள்களும் அத்தகைய பதவி விலகள்களுக்கான காரணமானது இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டின்போது அத்தகைய சூழல் எழவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(2) (xii)	வங்கியின் பணிப்பாளாகள் அல்லது ஊழியர்கள் மற்றுமொரு வங்கியின் பணிப்பாளராக வருவதற்கான தடை	இந்த தேவைப்பாடானது பணிப்பாளர்கள் சபையிடமிருந்து பெறப்பட்ட வருடாந்த பிரகடனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், பணிப்பாளர்களின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் ஒரு காலாண்டு அடிப்படையில் சுற்றனுப்பப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது
3.(3)	**பணிப்பாளர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடுவதற்கான வரன்முறை**		
3.(3) (i)	பணிப்பாளரது வயது 70 வருடங்களை விஞ்சலாகாது. நிலைமாற்றல் ஏற்பாடுகள்	இது தொடர்பிலான ஏற்பாட்டினை சிறந்த நடைமுறைகள் கோவையின் பிரிவு 2.1 கொண்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின்போது பணிப்பாளர்களாக சேவையாற்றிய எந்தவொரு நபரும் 70 வருடங்களை விஞ்சவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(3) (ii)	பணிப்பாளர்கள் 20 கம்பனிகளுக்கு மேல் பணிப்பாளர்களாக இருத்தலாகாது மற்றும் விசேட வணிக நிறுவனங்களான வகைப்படுத்தப்பட்ட கம்பனிகளில் 10 இற்கு மேல் இருத்தலாகாது.	2023 ஆம் ஆண்டின்போது பணிப்பாளர்கள் எவரும் வங்கியின் துணைக்கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 கம்பனிகளில் / நிறுவனங்களில் / நிருவகங்களில் பணிப்பாளர் பதவிகளை வைத்திருக்கவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(3) (iii)	பணிப்பாளர் அல்லது பி.நி.அ. இலங்கையில் செயற்படும் மற்றுமோர் உரிமமளிக்கப்பட்ட வங்கியின் பணிப்பாளராவோ அல்லது ஒரு பி.நி.அ.ஆகவோ நியமிக்கப்படலாகாது, ஒரு உரிமமளிக்கப்பட்ட வங்கியில் அவரது பதவி நிறைவுற்ற திகதியிலிருந்து 6 மாதங்கள் தணிவுகாலப்பகுதி முதிர்வடைவதற்கு முன்னர் நியமிக்கப்படலாகாது	சபையின் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு எந்தவொரு பணிப்பாளரும் 2023 ஆம் ஆண்டின்போது மற்றுமோர் உரிமமளிக்கப்பட்ட வங்கியின் பணிப்பாளராகவோ அல்லது பி.நி.அ. ஆகவோ நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(4)	**முகாமைத்துவ செயற்பாடுகள் சபையினால் ஒப்படைக்கப்படுதல்**		
3.(4) (i)	ஒப்படைத்தல் ஏற்பாடுகளை புரிந்து கற்றுக்கொள்தல்	மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 32 இனால் சபைக்கு அதன் அதிகாரங்களை யாரேனும் வங்கியின் ஒரு அதிகாரிக்கு ஒப்படைப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன், சூழ்நிலையினைப் பொறுத்து அதனை முற்றாகவோ பகுதியளவிலோ தடைசெய்யலாம்.	இணக்கப்பாடுடையது
3.(4) (ii)	சபை அதன் கடமைகளை செயலாற்றுவதற்கான ஆற்றலினை தடைசெய்யாத அளவுக்கு ஒப்படைப்புகள் இருத்தல் வேண்டும்		இணக்கப்பாடுடையது
3.(4) (iii)	வங்கியின் செயற்பாடுகளுக்கான பொருந்துமையினை உறுதிசெய்வதற்காக ஒப்படைப்பு ஏற்பாடுகளை காலாகாலம் மீளாய்வு செய்தல்	ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் அவை வங்கியின் தேவைகளுக்கு பொருத்தமானதாக இருப்பதனை உறுதிசெய்வதற்காக சபையினால் காலாகாலம் மீளாய்வு செய்யப்படுகின்றது. மேலாக, ஒப்படைக்கப்பட்ட கடன் அதிகார (DCA) வரம்புகள் தற்போதைய பொருளாதார சூழமைவிற்கு இணங்க கடன் அங்கீகாரச் செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக திருத்தியமைக்கப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது
3.(5)	**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி**		
3.(5) (i)	பங்குகளின் வேறாக்கல்	தலைவர் மற்றும் பி.நி.அ. இன் பதவிகள் சபையினால் நியமிக்கப்பட்ட இரண்டு தனிநபர்களினால் வைத்திருக்கப்படுகின்றன.	இணக்கப்பாடுடையது
3.(5) (ii)	நிறைவேற்றுனரல்லா தலைவர் மற்றும் ஒரு சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரின் நியமனம்	21.12.2022 இலிருந்து திரு. சுஜீவ ராஜபக்ஷ அவர்கள் வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டதிலிருந்து, அவர் ஒரு சுயாதீன, நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் என்பதுடன் ஒரு சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரின் நியமனத்திற்கான அத்தகைய தேவை எழவில்லை	இணக்கப்பாடுடையது
3.(5) (iii)	தலைவர் மற்றும் பி.நி.அ. இன் அடையாளத்தினை மற்றும் சபையின் அங்கத்தவர்களுடனான ஏதேனும் உறவுகளை வெளிப்படுத்தல்	சபையின் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு, தலைவர் மற்றும் பி.நி.அ. இடையே மற்றும் சபையின் அங்கத்தவர்களிடையே அத்தகைய எவ்விதமான உறவுமுறைகளும் காணப்படவில்லை (நிதியியல், வணிக, குடும்ப அல்லது ஏனைய பொருண்மையான / பொருத்தமான உறவுமுறைகள்), வங்கியின் துணை நிறுவனங்களின் சபையில் பொதுவான பணிப்பாளர் பதவி வைத்திருப்பது தவிர்ந்தவை. இது தொடர்பில் சபை அங்கத்தவர்களிடமிருந்த ஒரு பிரகடனத்தினை பெறுவதற்கான ஒரு செயன்முறை இருத்தல் வேண்டும்.	இணக்கப்பாடுடையது
3.(5) (iv)	சபையின் சுய மதிப்பீட்டு செயன்முறை	பணிப்பாளர்கள் சபைக்கு ஒரு சுய மதிப்பீட்டு திட்டத்தினை சபை கொண்டுள்ளதுடன் இது தேவைப்பாட்டுடன் இணங்கியுள்ளது.	இணக்கப்பாடுடையது
3.(5) (v)	நிகழ்ச்சி நிரலுக்காள பொறுப்பு தலைவரிடம் உள்ளதுடன் இது சபை செயலாளருக்கு ஒப்படைக்கப்படலாம்.	தலைவருடன் கலந்தாலோசித்து சபையின் செயலாளர் சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலினை தயாரிக்கின்றார்.	இணக்கப்பாடுடையது
3.(5) (vi)	பணிப்பாளர்கள் முறையாக அறிவிக்கப்பட்டு போதுமான தகவல்கள் வழங்கப்படுவதனை உறுதிசெய்தல்	சபைக் கூட்டங்களில் எழுகின்ற விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் முறையாக அறிவிக்கப்படுவதனை தலைவர் உறுதிப்படுத்துகின்றார். நிகழ்ச்சி நிரலும் சபை ஆவணங்களும் அவர்கள் அவற்றை பரிசீலிப்பதற்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டு சுற்றனுப்பப்படுகின்றது. முன்னைய மாதத்தின் சபை கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் சபையின் அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு உறுதிப்படுத்தல் / அங்கீகாரத்திற்காக அடுத்த சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
3.(5) (vii)	அனைத்து பணிப்பாளர்களையும் செயலூக்கமாக பங்குபற்றுவதற்கு ஊக்கமளித்தல் மற்றும் வங்கியின் அக்கறைக்காக செயலாற்றுவதில் வழிநடத்தல்	சபையிடம் ஒரு சுய மதிப்பீட்டு செயன்முறை உள்ளதுடன் இது பணிப்புரையின் தேவைப்பாடுகளை உள்ளடக்குகின்றது. சபையின் செயலாளர் அனைத்து பணிப்பாளர்களிடமிருந்து வருடாந்தம் மதிப்பீட்டு படிவங்களை பெறுகின்றார். அனைத்து பணிப்பாளர்களின் மதிப்பீட்டு படிவங்களும் சபையின் செயலாளரினால் பெறப்பட்டுள்ளதுடன் இவை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது
3.(5) (viii)	நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களின் பங்குபற்றலை ஊக்குவித்தல் மற்றும் நிறைவேற்றுநரல்லா மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்களிடையே உறவுமுறையினை ஊக்குவித்தல்	அனைத்து பணிப்பாளர்களிடமிருந்து சபையின் செயலாளர் வருடாந்தம் சுய மதிப்பீட்டு படிவங்களைப் பெறுகின்றார். அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்கள் ஆதலால் சுய மதிப்பீட்டு படிவத்தில் வேறான பிரிவுகள் உள்ளடக்கப்படவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(5) (ix)	மு.மு.ஆ. மற்றும் நிறைவேற்று கடமைகளில் நேரடியான மேற்பார்வையிலிருந்து விலகியிருத்தல்	முக்கிய முகாமைத்துவ ஆளணியினரிலோ அல்லது ஏதேனும் ஏனைய நிறைவேற்று கடமைகளது மேற்பார்வையில் தலைவர் நேரடியாக ஈடுபடுவதில்லை.	இணக்கப்பாடுடையது
3.(5) (x)	பங்குதாரர்களுடன் வினைத்திறனன தொடர்பாடலை உறுதிசெய்தல்	சபையானது வங்கியின் பிரதான பங்குதாரரான இலங்கை அரசாங்கத்துடன் பயனுறுதியான தொடர்பாடல்களைப் பராமரிக்கின்றது.	இணக்கப்பாடுடையது
3.(5) (xi)	நாளாந்த செயற்பாடுகளுக்கு பொறுப்பான உச்சநிலை நிறைவேற்றுனராக பி.நி.அ. செயலாற்றுகின்றார்.	பெறுநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவையின் பிரிவு 3.1 (அதிகாரம்) இன் பிரகாரம், வங்கியின் நாளாந்த செயற்பாடுகள் மற்றும் வணிகத்திற்கு பொறுப்பான நிறைவேற்றுனராக இவர் காணப்படுகின்றார்.	இணக்கப்பாடுடையது
3.(6)	**சபை நியமிக்கப்பட்ட குழுக்கள்**		
3.(6) (i)	சபை குழுக்களை, அவர்களது செயற்பாடுகள் மற்றும் அறிக்கையிடலை நிறுவுதல்	சபையானது நான்கு சபைக் குழுக்களை நிறுவியுள்ளது, அவையாவன, கணக்காய்வுக் குழு, மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு, பெயரிடல் குழு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு ஆகும். இ.ம.வ. இன் பணிப்புரையின் ஆகக் குறைந்த தேவைப்பாடு தவிர்த்து வங்கியானது 4 மேலதிக சபை உப குழுக்களை நிறுவியுள்ளது. அத்தகைய குழுக்களின் அறிக்கைகள் /நிகழ்ச்சிக் குறிப்புகள் பிரதான சபைக்கு அவர்களது தகவல் மற்றும் மீளாய்விற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சபை உப குழுக்களதும் தனித்தனியான அறிக்கைகள், அதன் கடமைகள், பங்குகள் மற்றும் செயற்திறன் என்பவற்றின் பொழிப்பினை உள்ளடக்குவதுடன் இது 2023 ஆண்டறிக்கையின் பக்கங்கள் 196 முதல் 203 வரை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
3.(6) (ii)	**கணக்காய்வுக் குழு**		
a.	தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுனநரல்லா பணிப்பாளராகவும் கணக்கீடு மற்றும் / கணக்காய்வில் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.	சபையானது ஒரு சுயாதீன, நிறைவேற்றுநரல்லா பணிப்பாளரான திரு. துஷ்மந்த தொட்டவத்த அவர்களை தலைவராக நியமித்துள்ளதுடன், இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் ஒரு சமூக அங்கத்தவராவார்.	இணக்கப்பாடுடையது
b.	குழுவானது நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களை மாத்திரம் உள்ளடக்கியிருத்தல்	குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள், அவர்கள் செல்வி, விசாகா அமரசேகர மற்றும் திரு ஏ எம் பி எம் பீ அத்தபத்து	இணக்கப்பாடுடையது
c.	கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகள்		
	(i) பொருத்தமான நியதிச்சட்டத்திற்கு இணங்க கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதற்கு வெளிவாரி கணக்காய்வாளரின் நியமனம்	நாட்டின் அரசியலமைப்பில் வழங்கியுள்ளவாறு வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களாவார். எனவே, வெளிவாரி கணக்காய்வாளரை ஈடுபடுத்துவதில் குழுவிற்கு எந்தவிதமான பங்கும் இல்லை.	இணக்கப்பாடுடையது
	(ii) கணக்காய்வாளர்களுக்கு இ.ம.வ. இனால் காலாகாலம் வழங்கப்படும் வழிகாட்டிகளின் அமுலாக்கம்.	மத்திய வங்கியினால் காலாகாலம் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்படும் வழிகாட்டிகளை அமுல்படுத்துவது தொடர்பிலான விடயங்களில் குழுவானது பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
	(iii) பொருத்தமான கணக்கீட்டு நியமங்களின் பிரயோகம், மற்றும்	குழுவானது அவசியமானபோது உரிய கணக்கீட்டு நியமங்களை மீளாய்வு செய்து கலந்துரையாடியுள்ளது.	இணக்கப்பாடுடையது
	(iv) சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கணக்காய்வாளரது ஏதேனும் பதவி விலகல் அல்லது நீக்கல்கள்	நாட்டின் அரசியலமைப்பில் வழங்கியுள்ளவாறு வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளர், கணக்காய்வாளர் நாயகம் அவர்களாவார்.	இணக்கப்பாடுடையது
d.	வெளிவாரி கணக்காய்வாளரின் சுயாதீனத்தன்மை மற்றும் புறநிலைத்தன்மை மற்றும் கணக்காய்வுச் செயன்முறையின் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்து கண்காணித்தல்	இது பொருத்தமற்றது ஏனெனில் வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் நாயகம் உள்ளார்	இணக்கப்பாடுடையது
e.	வெளிவாரி கணக்காய்வாளரினால் கணக்காய்வு அல்லாத சேவைகளை வழங்குதல்	இது பொருத்தமற்றது ஏனெனில் வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் நாயகம் உள்ளார்.	இணக்கப்பாடுடையது
f.	கணக்காய்வின் நோக்கெல்லையினை தீர்மானித்தல்	BAC கூட்டத்தில் கணக்காய்வு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இ.க.நி. (SLAS) இன் பிரகாரம் வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் கணக்காய்வின் தன்மை மற்றும் நோக்கெல்லையினை குழுவானது கலந்தாலோசித்து முடிவுறுத்தியுள்ளது.	இணக்கப்பாடுடையது

பெறுநிறுவன ஆளுகை

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
g.	வங்கியின் நிதியியல் தகவல்களை மீளாய்வு செய்தல்	நிதியியல் தலைமையினால் குழுவுக்கு காலாண்டு மற்றும் வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகள் வெளிப்படுத்தலுக்காக தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்படும்போது வங்கியின் நிதியியல் தகவல்களை மீளாய்வு செய்வதற்கான ஒரு செயன்முறையினை குழு கொண்டுள்ளது. நிதியியல் தலைவர் 2022 ஆம் ஆண்டிற்கு காலாண்டு நிதிக் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான நிதியியல் விகிதங்கள் மற்றும் முகப்புப்பெட்டியினை முன்னிலைப்படுத்தியுள்ளார். குழுவானது அதனை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு பரிந்துரைத்துள்ளது.	இணக்கப்பாடுடையது
h.	இடைக்கால மற்றும் இறுதி கணக்காய்வில் வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடல்கள்	குழுவானது கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் பிரதிநிதியுடன் ஒரு இரகசியமான கலந்துரையாடலை நடாத்தியது.	இணக்கப்பாடுடையது
i.	முகாமைத்துவக் கடிதம் மற்றும் வங்கியின் பதிலை மீளாய்வு செய்தல்	BAC 2022 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் கடிதத்தினையும் அதிலான பதில்களையும் மீளாய்வு செய்துள்ளது.	இணக்கப்பாடுடையது
j.	உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டின் மீளாய்வு		
	(i) உ.க.பி.இன் நோக்கெல்லை, செயற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமை மற்றும் அதன் பணியினை மேற்கொள்வதற்கு அவசியமான அதிகாரத்தில் தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளல்	குழுவானது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நோக்கெல்லை மற்றும் செயற்பாடுகளை கணக்காய்வுத் திட்டத்துடன் கலந்துரையாடியுள்ளது. உள்ளகக் கணக்காய்வுச் சாசனமானது BAC இனால் மீளாய்வு செய்து பரிந்துரைக்கப்பட்டது. குழுவானது 2023/2024 ஆண்டிற்கு தேவையான முன்மொழியப்பட்ட ஊழியர்களை சபைக்கு பரிந்துரைத்துள்ளதுடன், இது புதிதாக முன்மொழியப்பட்ட மீளாய்வு மற்றும் புலனாய்வுக் அணியின் நிறுவுதலுக்காக ஒதுக்கப்பட்ட ஊழியர்கள் நீங்கலாக, BAC இன் அங்கீகாரத்திற்கு பரிந்துரைத்துள்ளது.	இணக்கப்பாடுடையது
	(ii) உள்ளக கணக்காய்வு செயன்முறையின் உள்ளகக் கணக்காய்வு திட்டம் மற்றும் விளைவுகள்	AGM கணக்காய்வு 2023 இற்கான கணக்காய்வுத் திட்டத்தினை BAC இற்கு முன்னிலைப்படுத்தியுள்ளதுடன், BAC உள்ளகக் கணக்காய்வின் நோக்கெல்லையினை கலந்துரையாடியுள்ளதுடன், முகாமைத்துவக் கடிதம், இ.ம.வ. இன் சட்டரீதியான பரசீலனைகளில் எடுத்துக்காட்டப்பட்ட சிக்கல்களைக் கொண்ட கிளைகளில் பிரதான பரிந்துரைத்தல்களை அவதானித்தது. குழுவானது 2024 இற்கான முன்மொழியப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தினை பணிப்பாளர்கள் சபைக்கு பரிந்துரைத்துள்ளதுடன் BAC இன அங்கீகாரத்திற்காகவும் ஆகும். உ.க. திட்டத்தினை அடைவதிலான முன்னேற்றங்கள் குழுவினால் வழமையாக கண்காணிக்கப்படுகின்றது. இவ்வாண்டின்போது இடம்பெற்ற கூட்டத்தில் உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையின் விளைவுகளை குழு மீளாய்வு செய்துள்ளது. தகவல் தொழில்நுட்பம், வழங்கல்கள், இணக்கப்பாடு, கடன் கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம், திறைசேரி பின்புலக் காரியாலயம் போன்ற பிரிவுகளிலான கணக்காய்வு அறிக்கைகள். தகவல் முறைகள் கணக்காய்வு - படம் பிடித்தல் மற்றும் விளக்கக்காட்சி, பீபள்ஸ் காட் மையம், .ப்பினகல் திறைசேரி முறைமை 2022 போன்றவற்றில்.	இணக்கப்பாடுடையது
	(iii) உ.க.பி. இன் தலைமை மற்றும் சிரேஷ்ட அங்கத்தவர்களின் செயற்திறனில் ஏதேனும் மதிப்பாராய்வு அல்லது மதிப்பீடு	குழுவானது உள்ளகக் கணக்காய்வுப் பரிவின் தலைமை மற்றும் சிரேஷ்ட ஊழியர்களின் மதிப்பாய்வு மற்றும் மதிப்பீட்டினை மீளாய்வு செய்துள்ளது.	இணக்கப்பாடுடையது
	(iv) தலைமை, சிரேஷ்ட ஊழிய அங்கத்தவர்கள் மற்றும் வெளிக்கள சேவை வழங்குநர்களது ஏதேனும் நியமனம் அல்லது நீக்கலின் பரிந்துரைத்தல்	2023 இன் போது தலைமை, சிரேஷ்ட ஊழியர்களின் எவ்விதமான நியமனமோ அல்லது பதவி விலகல்களோ இடம்பெறவில்லை.	இணக்கப்பாடுடையது
	(v) குழுவானது உ.க.பி. இன் சிரேஷ்ட ஊழிய அங்கத்தவர்களது, பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஏதேனும் வெளிக்கள சேவை வழங்குனர்கள் உள்ளடங்கலான பதவிவிலக்கள் குறித்து அறிவிக்கப்படுவதுடன், பதவி விலகும் சிரேஷ்ட ஊழிய அங்கத்தவர்கள் மற்றும் வெளிக்கள சேவை வழங்குநர்களுக்கு பதவி விலகளுக்கான காரணத்தினை சமர்ப்பிப்பதற்கு ஒரு வாய்ப்பினை வழங்குதல்	2023 ஆம் ஆண்டின்போது உ.க.பி. இன் தலைமை / சிரேஷ்ட ஊழியர்களின் எவ்விதமான பதவி விலகல்களும் காணப்படவில்லை.	இணக்கப்பாடுடையது
	(vi) உள்ளகக் கணக்காய்வு செயற்பாடானது அது கணக்காய்வு செய்யும் நடவடிக்கையிலிருந்து சுயாதீனமாயிருத்தல் மற்றும் அது பாகுபாடின்றி, தொழில்தரத்துடன் மற்றும் உரிய தொழில்சார் அக்கறையுடன் செயலாற்றப்படல் வேண்டும்.	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது வங்கியின் உள்ளகக் கணக்காய்வு சாசனத்தின் ஏற்பாடுகளை மேற்கோள்காட்டி உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கையின் சுயாதீனத் தன்மையினை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது உறுதிப்படுத்தியுள்ளது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது பக்கச்சார்பின்றி, தொழில்தரத்துடன் மற்றும் உரிய தொழில்சார் கவனத்துடன் செயலாற்றுகின்றது.	இணக்கப்பாடுடையது
k.	உள்வாரி புலனாய்வுகள்	குழுவானது உள்ளகப் புலனாய்வுகளின் பாரிய கண்டுபிடிப்புகளைக் கருத்திலெடுப்பதுடன் அதனிலான முகாமைத்துவ பதில்கள்.	இணக்கப்பாடுடையது
l.	கணக்காய்வுக் குழு கூட்டங்களில் சமூகமளிப்போர்	இது பொருத்தமற்றது, ஏனெனில் மக்கள் வங்கியின் சபையில் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் யாரும் இல்லை.	இணக்கப்பாடுடையது

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
m.	வெளிப்படையான அதிகாரம், வளங்கள் மற்றும் தகவல்களுக்கான அணுக்கல்	சபை அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகள் கோவை 1.3 இன் பிரிவு 6.1.7 சபை கணக்காய்வுக் குழுவின் உரிமைகளை குறிப்பிடுவதுடன் குழு அத்தகைய அதிகாரத்தினை கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துகின்றது. BAC இன் குறிப்பு விதிமுறையானது குழுவினால் மேலும் மீளாய்வு செய்யப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
n.	வழமையான கூட்டங்கள்	BAC 2023 ஆம் ஆண்டின்போது பத்து (10) கூட்டங்களை நடாத்தியதுடன் அத்தகைய கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் சபைச் செயலாளரினால் பராமரிக்கப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது
o.	ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தல்	கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளது விபரங்கள் 2023 ஆண்டறிக்கையின் பக்கம் 196 இல் பிரசுரிக்கப்பட்ட BAC அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டங்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு தனியான பணிப்பாளர்களது வருகையும் 2023 ஆண்டறிக்கையின் பக்கம் 179 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது
p.	கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளை பராமரித்தல்	சபையின் செயலாளர் சபை கணக்காய்வுக் குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் கூட்டங்களது விரிவான நிகழ்ச்சிக் குறிப்புக்களை வைத்திருக்கின்றார்.	இணக்கப்பாடுடையது
q.	உட்குறையுரைத்தல் கொள்கை மற்றும் வெளிவாரி கணக்காய்வாளருடன் உறவு	சபை அங்கீகரிக்கப்பட்ட உட்குறை உரைத்தல் கொள்கையானது காணப்படுவதுடன் இது ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் BAC இனால் மீளாய்வு செய்யப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது
3.(6) (iii) மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு GRI 2-19, 2-20			
(a)	வங்கியின் பணிப்பாளர்கள், பி.நி.அ./ பொ.மு. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியக் கொள்கை	பணிப்பாளர்கள் சபையின் ஊதியமானது நிதி அமைச்சினால் நிறுவப்பட்டுள்ள வழிகாட்டிகளினால் தீர்மானிக்கப்படுகின்றது. சபையான சபை உப குழுக்களின் குறிப்பு விதிமுறைகள் மீளாய்வு செய்து ஒரு இழப்பீட்டு ஊதியக் கொள்கையினை அமுல்படுத்தியுள்ளது. இது பி.நி.அ. மற்றும் மு.மு.ஆ. இன் ஊதியங்களை (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதியியல் கொடுப்பனவுகள்) தீர்மானிப்பதற்காகும். இந்தக் கொள்கையானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வங்கியின் கூட்டு உடன்படிக்கையானது சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
(b)	பணிப்பாளர்கள், பி.நி.அ./பொ.மு. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிறுவுதல்	சபை உப குழுக்களின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களைப் பொறுத்தளவில் குழுவானது பணிப்பாளர்கள் சபைக்கு குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை விருத்திசெய்யவேண்டியுள்ளது.	இணக்கப்பாடுடையது
(c)	பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயற்திறனை மதிப்பிடுதல்	வங்கியின் கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்திற்காக ஒரு புதிய செயற்திறன் மதிப்பிடல் வார்ப்பானது விருத்தி செய்யப்பட்டுள்ளது. பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயற்திறனின் மதிப்பீடுகளை 2023 ஆம் ஆண்டிற்காக நிறுவப்பட்டுள்ள இலக்குகளுக்கு எதிராக கருத்திலெடுத்துள்ளது.	இணக்கப்பாடுடையது
(d)	பி.நி.அ. குழுவின் அனைத்து கூட்டங்களிலும் சமூகமளித்தல் வேண்டும், பி.நி.அ. தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும்போது நீங்கலாக ஆகும்.	சபை உப குழுக்களின் குறிப்பு விதிமுறைகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் பி.நி.அ. / பொ.மு. இன் குழுவின் அனைத்து கூட்டங்களிலும் சமூகளிக்கின்றார், பி.நி.அ. / பொ.மு. தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும்போது நீங்கலாக ஆகும்.	இணக்கப்பாடுடையது
3.(6) (iv) பெயரிடல் குழு			
a.	பணிப்பாளர்கள், பி.நி.அ. மற்றும் மு.மு.ஆ. இன் நியமனம்	மக்கள் வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ம.வ. கொள்கை (ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் ஊதியம், பயிற்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் பதவி நீக்கல் கொள்கைகள்) காணப்படுவதுடன் இவை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது
b.	பணிப்பாளர்களின் மீள் தெரிவு	மக்கள் வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவதனால் இந்த தேவைப்பாடு எழுவதில்லை.	இணக்கப்பாடுடையது
c.	பி.நி.அ. உள்ளடங்கலான முக்கிய முகாமைத்துவ பதவிகளுக்கான நியமனங்களின் தகுதி வரன்முறை	பி.நி.அ., பி.பொ.மு. மற்றும் உ.பொ.மு. பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவியுயர்வினை கருதிற்கொள்வதற்கான தகைமைகள், அனுபவம் மற்றும் தகுதிக்கு தேவையான முக்கிய பண்புகள் போன்ற தெரிவுசெய்தல் வரன்முறையினை சபை அங்கீகரித்துள்ளது. மேலும், வங்கியின் மு.மு.ஆ. இன் தெரிவுசெய்தல் மற்றும் நியமனத்திற்கான மதிப்பீட்டு வரன்முறைக்கான அங்கீகாரத்தினை குழு வழங்கியுள்ளது. அனைத்து மு.மு.ஆ. இன் பெயரிடல்கள் மற்றும் பரிந்துரைத்தல்கள் BNC இனால் செயல்முறையாக்கப்பட்டு சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது	இணக்கப்பாடுடையது
d.	பொருத்தமும் தகுதியுமான நபர்கள்	2023 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர்களின் வருடாந்த பிரகடனங்கள் பணிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதுடன் அவை இ.ம.வ. க்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது

பெறுநிறுவன ஆளுகை

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
e.	தொடர்வுத் திட்டம் மற்றும் புதிய நிபுணத்துவம்	பணிப்பாளர்கள் சபையானது நிதி அமைச்சினால் நியமிக்கப்படுகின்றார்கள். பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்வுத் திட்டம் உள்ளது. மேலாக, வங்கியானது ஒரு புதிய தொடர்வுத் திட்டத்தினை விருத்திசெய்துள்ளது ஏனெனில், வங்கியின் பி.பொ.மு. மற்றும் உ.பொ.மு. தரத்திலான பதவிகளை வகிக்கும் அதிகாரிகளின் அனேகமானோர் இளைப்பாறியுள்ளார்கள் அல்லது சீக்கிரம் சேவையிலிருந்து இளைப்பாறவுள்ளார்கள் அல்லது எதிர்பார்க்கப்பட்ட கால வரம்பிற்கு முன்னர் உயர் தரங்களுக்கு பதவியுயர்வு அளிக்கப்பட்டதனாலாகும். BNC ஒக்டோபர் 2023 முதல் டிசம்பர் 2024 காலப்பகுதிக்காக முன்மொழியப்பட்ட வங்கியின் தொடர்வுத் திட்டத்தினை மீளாய்வு செய்துள்ளதுடன் இது இ.ம.வ. இன் அக்கறைகளை விளித்துரைக்கும் விதமான தயாரிக்கப்பட்டுள்ளதனை அவதானித்தது. BNC மீளாய்வு செய்து பரிந்துரைத்துள்ளது. இந்த பிரேரணையானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
f	குழுவின் தலைவர் மற்றும் முன்மதிப்பாக பெரும்பான்மை பணிப்பாளர்கள் சுயாதீனமாக இருத்தல். பி.நி.அ. அழைப்பின் பேரில் கூட்டங்களில் சமூகமளிக்கலாம்.	குழுவானது 21.12.2022 இல் மீள்நியமிக்கப்பட்ட ஒரு சுயாதீன பணிப்பாளரான திரு. சுஜீவ ராஜபக்ஷ அவர்களினால் தலைமை வகிக்கப்படுகின்றது. ஏனைய அங்கத்தவர்களாக, திரு. மஞ்சுள வெள்ளாளகே மற்றும் திரு. ஏ எம் பி எம் பீ அத்தபத்து உள்ளார்கள். பணிப்புரையில் வேண்டப்பட்டவாறு, குழுவானது முன்மதிப்பாக பெரும்பான்மை சுயாதீன பணிப்பாளர்களினால் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். பி.நி.அ. அழைப்பின் பேரில் BNC கூட்டங்களில் பங்குபற்றுகின்றார்.	இணக்கப்பாடுடையது
3.(6) (v)	**ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு ஃசபை இடர் முகாமைத்துவக் குழு**		
a.	BIRMC இன் தொகுப்பு	BIRMC இன் கு.வி. இன் பிரகாரம் குழுவானது மூன்று நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள், பி.நி.அ./பொ.மு., பி.பொ.மு. - இடர் முகாமைத்துவம் மற்றும் அழைப்பின் பேரில் வேறு யாரேனும் (இணக்கப்பாட்டிற்கு பொறுப்பான அதிகாரி உள்ளடங்கலாக)	இணக்கப்பாடுடையது
b.	இடர் மதிப்பீடு	**BIRMC வங்கியின் கடன், சந்தை, மூலோபாயம், செயற்பாடு மற்றும் திரவத்தன்மை இடர்கள் போன்ற இடர்களை மதிப்பிடுவதற்கு ஒரு செயன்முறையினை அமுலாக்கியுள்ளது. இது உரிய இடர் குறிகாட்டிகள் மற்றம முகாமைத்துவ தகவல்கள் ஊடாக ஆகும். அத்தகைய இடர்கள் காலாண்டு இடர் அறிக்கை மற்றும் பி.பொ.மு. இடர் முகாமைத்துவத்தினால் சமர்பிக்கப்படும் இடர் வார்ப்படம் ஊடாக BIRMC இற்கு அறிக்கையிடப்படுகின்றது.** **துணைநிறுவனங்களின் இடர் மீளாய்வு** ஒவ்வொரு துணை நிறுவனத்திற்கும் வங்கி தனியான முகப்புப்பெட்டிகளை பயன்படுத்துவதுடன் இந்த இடர் முகப்புப்பெட்டிகள் இடர் ஆர்வ வரம்புகளை உள்ளடக்குகின்றன. ஒவ்வொரு காலாண்டுக்குமான துணை நிறுவனங்களின் இடர் மீளாய்வானது குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு குழுவானது மீளாய்வு செய்து பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி மற்றும் பீபள்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டட் ஆகிய துணை நிறவனங்களின் இடர் மட்டங்களை அறிந்துள்ளது.	இணக்கப்பாடுடையது
c.	இடரில் முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களின் மீளாய்வு	அனைத்து முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை 2022 ஆம் ஆண்டிற்கான அவர்களது நடைமுறை குறிப்பு விதிமுறைகளுக்கு எதிராக ஜனவரி 2023 இல் மதிப்பீடு செய்தது. 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இது BIRMC இற்கு சமர்ப்பிக்கப்படும். கடன் இடர் முகாமைத்துவக் குழு, செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு மற்றும் நிறைவேற்றுநர் செயற்பாடுகள் குழு என்பன தற்போது வங்கியில் செயலாற்றும் முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களாகும்.	இணக்கப்பாடுடையது
d.	விவேகமான மட்டங்களை விஞ்சும் இடர்களை தணிப்பதற்கான திருத்த நடவடிக்கை	குழுவானது குறிப்பிடப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் இடர் வரையறைகளுக்கு அப்பால் சென்றுள்ள இடர் குறிகாட்டிகளை மீளாய்வு செய்து கருத்திலெடுத்துள்ளது.	இணக்கப்பாடுடையது
e.	கூட்டங்களின் நிகழ்வெண்	BIRMC 2023 நிதியாண்டின்போது ஐந்து (5) கூட்டங்களை நடாத்தியது.	இணக்கப்பாடுடையது
f.	குறிப்பிட்ட இடர்களை இனங்காண அல்லது திருத்தச் செயற்பாட்டினை அமுலாக்கத் தவறியதற்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிரான செயற்பாடுகள்	இது BHRRC எனப் பெயரிடப்பட்ட ஒரு தனியான சபை உப குழுவினால் கையாளப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது
g.	சபைக்கு இடர் மதிப்பீட்டு அறிக்கை	குழுவானது இடர் நிகழ்ச்சிக் குறிப்புகளை சபைக்கு அவர்களது மீளாய்விற்காக சமர்ப்பிக்கின்றது.	இணக்கப்பாடுடையது
h	இணக்கப்பாட்டு செயற்பாடு	சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளுடன் வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதற்காக குழுவானது ஒரு இணக்கப்பாட்டு செயற்பாட்டினை நிறுவியுள்ளது. ஒரு மு.மு.ஆ. ஆக பெயரிடப்பட்டுள்ள இணக்கப்பாட்டு அதிகாரி மாதாந்தம் சட்டரீதியான மற்றும் கட்டாயத் தேவைப்பாடுகள் / ஒழுங்கவிதிகள் மற்றும் இணக்கப்பாட்டின் நிலை குறித்து அறிக்கைகளை சபைக்கும் இணக்கப்பாட்ட இடரிலான காலாண்டு அறிக்கையினை BIRMC இற்கும் சமர்ப்பிக்கின்றார். சபைக் கூட்டத்தில் இணக்கப்பாட்டுத் திட்டம் 2024 இற்கான அங்கீகாரத்தினை சபை வழங்கியுள்ளது. இது இ.ம.வ. இனால் நடாத்தப்பட்ட சட்டரீதியான பரிசீலனையில் மேற்கொள்ளபட்ட பரிந்துரைகளுடன் இணங்கி செயற்படுவதற்காகும்.	இணக்கப்பாடுடையது
3.(7)	**தொர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்**		
3.(7) (i)	முரண்பாட்டு அக்கறையினை தவிர்த்தல் GRI 2-15	சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது தொடர்புடைய தரப்பினர் வகைகளை குறிப்பிடுவதுடன், அவர்களுடனான வங்கியின் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழக்கூடிய ஏதேனும் முரண்பாட்டு அக்கறைகளை வங்கி தவிர்த்தல் வேண்டும் இந்தக் கொள்கையானது பின்னர் 2024 இல் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டது.	இணக்கப்பாடுடையது

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
3.(7) (ii)	பணிப்புரையினால் உள்ளடக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்	தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் வகைகளை இனங்காணும் சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கை காணப்படுகின்றது.	இணக்கப்பாடுடையது
3.(7) (iii)	தடைசெய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்	சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது இது தொடர்பான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களில், அத்தகைய தரப்பினருக்கு, வங்கியுடன் அதேவகையான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் ஏனையோருக்கு வழங்கப்படுவதிலும் பார்க்க "சாதகமான கவனிப்பினை" வழங்கும் விதத்தில் வங்கி ஈடுபடாதிருப்பதனை உறுதிசெய்யதவற்கான ஒரு செயன்முறையினை வங்கி கொண்டுள்ளது. பணிப்பாளர்கள் மற்றும் மு.மு.ஆ. இடமிருந்து பெறப்பட்ட பிரகடனங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில், வங்கியானது தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை முறையிலிருந்தான தே.அ.அ. மற்றும் CIF ஊடாக காலாண்டு அடிப்படையில் ஒரு அறிக்கையினை BIRMC இற்கு சமர்ப்பிக்கின்றது. இது தொடர்புடைய தரப்பினர்களுக்கு, அதே வணிகத்தினை மேற்கொள்ளும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதிலும் பார்க்க ஏதேனும் "சாதகமான கவனிப்பினை" வங்கி வழங்காதிருப்பதனை உறுதிசெய்கின்றது.	இணக்கப்பாடுடையது
3.(7) (iv)	ஒரு பணிப்பாளருக்கு அல்லது ஒரு பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு கடன் வசதிகளை வழங்குதல்	சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது இது தொடர்பான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது உறுதிப்படுத்தியதுவாறு, மீளாய்வாண்டின்போது யாதேனும் பணிப்பாளருக்கோ அல்லது அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவருக்கோ எவ்விதமான கடன் வசதிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(7) (v)	பின்னர் வங்கியின் பணிப்பாளர்களாக நியமிக்கப்படும் நபர்களுக்கு அல்லது நபர்களது அக்கறைகளுக்கு அல்லது நபர்களது நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகள்	சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது இது தொடர்பான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது. பணிப்புரையுடன் இணங்குவதற்கான ஒரு செயன்முறையினை வங்கி கொண்டுள்ளது ஒரு சந்தர்ப்பம் காணப்பட்டதுடன், வங்கியானது பணிப்புரையுடன் இணங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.	இணக்கப்பாடுடையது
3.(7) (vi)	வங்கியின் ஊழியர்களுக்கு அல்லது அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கு சாதகமான கவனிப்பு அல்லது கடன் வசதி	சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது இது தொடர்பான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது. பணிப்புரையுடன் இணக்கப்பாடு காண்பதற்கான ஒரு செயன்முறையினை வங்கி கொண்டுள்ளது. இணக்கப்பாட்டின் தலைமையினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு, வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் பொருத்தமான பொதுவான திட்டங்கள், ஊழியர் கடன் வசதிகள் போன்றவை, தவிர ஒரு சாதகமான அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் ஊழியர்களுக்கு எவ்விதமான கடன் வசதிகளும் வழங்கப்படவில்லை. மு.மு.ஆ. மற்றும் CFM மற்றும் ஏதேனும் அமைப்பில் ஊழியர் அல்லது நெருங்கிய உறவினர் ஒரு கணிசமான அக்கறையினைக் கொண்டிருக்கும் கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு அறிக்கையிடுவதற்கான ஒரு செயன்முறையினை வங்கி கொண்டுள்ளது. இவை BIRMC இற்கு ஒரு காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.	இணக்கப்பாடுடையது
3.(7) (vii)	நாணயச் சபையின் அங்கீகாரத்திற்குட்பட்ட கடன் வசதிகளின் பணமனுப்பல்	தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையின் பிரகாரம், ஒரு செயன்முறை உள்ளது. எவ்வாறாயினும், இணக்கப்பாட்டின் தலைமையினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு 2023 ஆம் ஆண்டின்போது அத்தகைய நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை.	இணக்கப்பாடுடையது
3.(8)	**வெளிப்படுத்தல்கள்**		
3.(8) (i)	வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்களின் பிரசுரம்	இதன் பிரகாரம் வங்கியானது நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து பிரசுரிக்கின்றது. காலாண்டு நிதிக் கூற்றுக்கள் செய்தித்தாள்களில் சுருக்கமான வடிவத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது
3.(8) (ii)	ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தல்கள்		
a.	வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள், குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடும் ஒரு கூற்று	இதனைக் குறிக்கும் கூற்றானது 2023 ஆண்டறிக்கையின் பக்கம் 208 இல் காணப்படுகின்ற நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
b.	வங்கியின் உள்ளக் கட்டுப்பாட்டு பொறிமுறையிலான சபையின் அறிக்கை	வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையிலான சபையின் அறிக்கையானது 2023 ஆண்டறிக்கையின் பக்கங்கள் 204 முதல் 205 வரை காணப்படும் "உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்றில்" வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
c	உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயனுறுதித்தன்மையிலான வெளிவாரி கணக்காய்வாளரின் சான்றளிப்பு	2023 ஆண்டறிக்கையின் பக்கம் 206 இல் காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டிலான 'கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் உறுதிமொழி அறிக்கையில்" வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது

பெறுநிறுவன ஆளுகை

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
d	பெயர்கள், பொருத்தம் மற்றும் தகுதி, வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்த கட்டணங்கள் / ஊதியம் உள்ளடங்கலான பணிப்பாளர்களின் விபரங்கள்	பக்கம் 30 முதல் 31 வரை காணப்படும் பணிப்பாளர்களது சுயவிபரங்களின் கீழ் பெயர்கள், தகைமைகள் மற்றும் உள்ளடங்கலான பணிப்பாளர்களது தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர்களது ஊதியங்கள் பக்கம் 238 இல் காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 13 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 2023 இல் பணிப்பாளர்களுடனான ஊதியம் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி **ரூபா'000** குறுங்கால ஊழியர் நலன்கள் 7,935.0 பணியின் பின்னரான ஓய்வூதியம் - பணிவிலகல் நன்மைகள் - பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள் - ஏனைய நீண்டகால நலன்கள் - கடன் அட்டைகள் உள்ளடங்கலான கடன்களும் முற்பணங்களும் 455.9 வைப்புக்கள் 225,920.0 முதலீடுகள் -	இணக்கப்பாடுடையது
e	தொடர்புடைய தரப்பினர்களின் ஒவ்வொரு வகைகளும் வழங்கப்பட்ட மொத்த கடன் வசதிகள் மற்றும் வங்கியின் முறைமைப்படுத்தல் மூலதனத்தின் ஒரு சதவீதமாக	தொடர்புடைய தரப்பினருக்கு 2023 இல் வழங்கப்பட்ட கடன் வசதிகள் **ரூபா'000** / **வங்கியின் முறைமைப்படுத்தல் மூலதனத்தின் சதவீதம்** பணிப்பாளர்கள் 0.2 / 0.0 பணிப்பாளர்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் - / - முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் (மு.மு.ஆ.) 85,119.8 / 0.1 மு.மு.ஆ. இன் நெருங்கிள குடும்ப அங்கத்தவர்கள் 8,614.4 / 0.0 துணைநிறுவனங்கள் 148,198.9 / 0.1 உப துணைநிறுவனங்கள் 274,412.4 / 0.2 அரசாங்கமும் அரசாங்கம் தொடர்புடைய நிறுவனங்களும் 782,060,503.6 / 614.1 வங்கியின் யாரேனும் பணிப்பாளர் அல்லது வங்கியின் யாரேனும் பணிப்பாளர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் கணிசமான அக்கறையினைக் கொண்ட வணிகங்கள் 6,329,879.7 / 5.0	இணக்கப்பாடுடையது

பிரிவு	கொள்கை	இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம்	இணக்கப்பாடு
f.	மு.மு.ஆ. இன் மொத்த ஊதியத்தின் பெறுமதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள்	2023 இல் மு.மு.ஆ. இன் மொத்த ஊதியமும் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியும் ரூபா'000 குறுங்கால ஊழியர் நலன்கள் 485,542.0 பணியின் பின்னரான ஓய்வூதியம் 52,848.1 பணிவிலகல் நன்மைகள் - பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள் - ஏனைய நீண்டகால நலன்கள் - கடன் அட்டைகள் உள்ளடங்கலான கடன்களும் முற்பணங்களும் 85,153.2 வைப்புக்கள் 343,499.2 முதலீடுகள் -	இணக்கப்பாடுடையது
g.	வெளிவாரி கணக்காய்வாளரின் இணக்கப்பாட்டு சான்றளிப்பு	பெறுநிறுவன ஆளுகையில் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் மெய்யான கண்டுபிடிப்புகள் அறிக்கையினை சபை பெற்றுள்ளது. இந்த பெறுநிறுவன ஆளுகை அறிக்கையில் கணக்காய்வாளர்களது அனைத்து கண்டுபிடிப்புகளும ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.	இணக்கப்பாடுடையது
h.	விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தும் அறிக்கை	இது 2023 ஆண்டறிக்கையின் பக்கம் 208 இல் காணப்படும் "நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்பில்' வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது
i.	இணக்கப்பாடின்மை அறிக்கை	இது பக்கம் 66 இல் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடான இணக்கப்பாட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.	இணக்கப்பாடுடையது

சபை கணக்காய்வுக் குழு (BAC)



துஷ்மந்த தொட்டவத்த
சபை கணக்காய்வுக் குழுவின் தலைவர்

வங்கியின் சபை கணக்காய்வுக் குழுவானது (BAC) 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியில் சட்டத்தின் பணிப்புரை, இலங்கையின் உரிமமளிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கிகளுக்கான பெறுநிறுவன ஆளுகையின் ஏற்பாடுகளுக்கமைய ஒருங்கிணைக்கப்பட்டது. BAC இன் நடவடிக்கைகள் குழுவின் செயற்பாட்டிற்காக பணிப்பாளர்கள் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட சாசனத்தின் அடிப்படையிலாகும்.

ஆண்டின் இறுதியில் உள்ளவாறான குழு பின்வரும் மூன்று நிறைவேற்றுநரல்லா சுயாதீன பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது.

தலைவர்

திரு. துஷ்மந்த தொட்டவத்த

ஏனைய அங்கத்தவர்கள்

செல்வி. விசாகா அமரசேகர

திரு. ஏ எம் பி எம் பீ அத்தபத்து

BAC கூட்டமொன்றின் குறைவெண் இரண்டு (02) அங்கத்தவர்களாகும்.

பணிப்பாளர்கள் சபைக்கான செயலாளர் சபை கணக்காய்வுக் குழுவின் செயலாளராக கடமையாற்றுகின்றார். பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், நிதியியலின் தலைவர் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளரின் பிரதிநிதி ஒருவர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் மேற்பார்வையாளர் ஆகியோர் வழக்கமாக கூட்டங்களில் கலந்துகொள்கின்றார்கள். ஏனைய சபை அங்கத்தவர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவத்தின் யாரேனும் அங்கத்தவர் குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

BAC குறிப்பாக,

- சட்டத்தினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள நிதியியல் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையினை மீளாய்வு செய்கின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் வணிக இடர்களின் முகாமைத்தவம் என்பன பரிசீலிக்கப்படுகின்றன.
- வெளிவாரி மற்றும் உள்ளகக் கணக்காய்வு செயன்முறைகளை மீளாய்வு செய்தல்..
- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன், குறிப்பாக இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டிகளுடன் இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்காக உள்ள செயன்முறைகளை மீளாய்வு செய்தல்.
- பொருத்தமானவாறு கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் செயற்பாட்டு கையேடுகளை மீளாய்வு செய்தல். இது தகவல் முறைமை பாதுகாப்பு தொடர்பானவை உள்ளடங்கலான பல்வேறு வங்கியின் செயற்பாட்டு பிரிவுகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் முறையினை பலப்படுத்துவதற்காகும். இவை பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்காக பரிந்துரைக்கப்படுகின்றன.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவர்களது வருடாந்த கணக்காய்வுளுடன் நடாத்தப்படும் விசேட கணக்காய்வுகளில் சமர்ப்பிக்கப்படும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.

மீளாய்வாண்டின்போது குழுவானது பின்வருவனவற்றினை மேற்கொண்டது:

a. 2023 ஆம் ஆண்டிற்கான வங்கியின் காலாண்டு நிதியியல் செயற்திறனை, அவை முறைமைப்படுத்தல் அதிகாரசபைகளினால் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்க அமைய மற்றும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதனை உறுதிசெய்வதற்காக, மீளாய்வு செய்து சபையின் அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.

b. 28.02.2022 இல் இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் நியதிச்சட்ட பரிசீலனைகள் மற்றும் 31.03.2023 இல் இடம்பெற்ற நியதிச்சட்ட பரிசீலனைகளின் வரைவு அறிக்கைகளில் எழுப்பப்பட்ட அக்கறைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

c. வருடத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட உள்ளக் கணக்காய்வுத் திட்டத்தினை உரிய காலத்தில் அடைவதனை உறுதிசெய்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்திறனானது காலாகாலம் மீளாய்வு செய்யப்பட்டது.

d. தகவல் முறைமை செயன்முறைகள் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான மாற்றங்கள் பரிந்துரைக்கப்பட்டு அவற்றின் அமுலாக்கலின் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டது.

e. கிளைச் செயற்பாடுகளில் இனங்காணப்பட்ட பற்றாக்குறைகள் மீதான மூல காரணம் போன்ற விசேட கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது பத்து (10) கூட்டங்கள் இடம்பெற்றன. BAC உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை கருத்திலெடுத்து செயன்முறைகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமை மற்றும் வினைத்திறனை மதிப்பிட்டது. அதேவேளை, இனங்காணப்பட்டு முக்கிய சிக்கல்கள் மற்றும் கரிசனைகள் சீராக்குவதற்கு உரிய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பிடுவதுடன், எடுக்கப்பட்ட திருத்தல் நடவடிக்கைகளை கண்காணித்தது. BAC கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் சபையின் தகவல்களுக்காக அறிக்கையிடப்படுகின்றது.

இ.ம.வ. நியதிச்சட்ட பரிசீலனை அறிக்கைகளில் எழுப்பப்பட்ட விடயங்களில் 2023 ஆம் ஆண்டின்பொது முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட திருத்தல் நடவடிக்கைகளை BAC பின்தொடர்ந்தது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் கணக்காய்வு நோக்கத்திற்கு மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்துவதற்கு தேவையான அனைத்து தகவல்களும் ஆவணங்களும் வழங்கப்படுவதனை BAC உறுதிசெய்தது. BAC போதுமான கட்டுப்பாடுகளும் செயன்முறைகளும் உள்ளன என கருதுவதுடன் BAC இன் சாசனமானது அனைத்து பொருண்மையான விடயங்களுடன் தொகுக்கப்பட்டது.



துஷ்மந்த தொட்டவத்த
தலைவர் - சபை கணக்காய்வுக் குழு

22 மார்ச் 2024

சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு அறிக்கை (BHRRC)



திரு. சுஜீவ ராஜபக்ஷ
தலைவர் சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு

தொகுப்பு

வருடத்தின் இறுதியில் குழுவானது 2 இற்கும் குறையாத ஆனால் 3 இற்கும் கூடாத நிறைவேற்றுரல்லா சுயாதீன பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளதுடன், பி.நி.அ. / **பொ.மு.** ஒவ்வொரு கூட்டத்திலும் சமூகமளித்தல் வேண்டும்.

தலைவர்

திரு. சுஜீவ ராஜபக்ஷ

ஏனைய அங்கத்தவர்கள்

திரு. இசுரு பாலபட்டபெந்தி - பணிப்பாளர்

திரு. மஞ்சுள வெள்ளாளகே - பணிப்பாளர்

திரு. கிளைவ் பொன்சேகா - பி.நி.அ. / பொது முகாமையாளர்

அழைப்பின் பேரில் வழமையான வருகையாளர்கள்

பி.பொ.மு. (மனித வளங்கள்) அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்வதுடன் வங்கியின் யாரேனும் ஏனைய அதிகாரி அழைப்பின் பேரில் கூட்டங்களில் சமூகமளிக்கலாம்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BHRRC இன் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

கூட்டங்கள்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது எட்டு (08) கூட்டங்கள் இடம்பெற்றன.

குறைவெண்

ஒரு BHRRC கூட்டத்திற்கான குறைவெண் சபையின் இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் பி.நி.அ. / பொது முகாமையாளர்.

குழுவின் பங்கு

- BHRRC மனித வளங்கள் மற்றும் வேதனக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான மூலோபாயங்களை முன்னெடுப்பதற்கும் பொறுப்பாளியாயுள்ளது.
- ஆட்சேர்ப்பு, மற்றும் சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களை தீர்மானிப்பதில் குழுவானது ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது.
- பெறுநிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ அங்கத்தவர்களின் பணி ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதுடன் பி.நி.அ. / பொது முகாமையாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குளையும் நிறுவுகின்றது.
- பி.நி.அ. / பொது முகாமையாளர் மற்றும் மு.மு.ஆ. இன் செயற்திறனை நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக காலாகாலம் மதிப்பிடுவதுடன் ஊதியம் மற்றும் நலன்களை திருத்தியமைப்பதற்கான அடிப்படையினை தீர்மானிக்கின்றது.

எதிர்கால முன்னிறுத்தம்

சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு அனைத்து மனித வளங்கள் மற்றும் வேதன ஏற்பாடுகள் வங்கியின் மூலோபாய குறிக்கோள்களுக்கு துணையளிப்பதனை உறுதிசெய்கின்றது.

திரு. சுஜீவ ராஜபக்ஷ
தலைவர் சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு

22 மார்ச் 2024

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை (BIRMC)



செல்வி. விசாகா அமரசேகர
தலைவர் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

தொகுப்பு

குழு மூன்று நிறைவேற்றுனரல்லா சுயாதீன பணிப்பாளர்களையும், பி.நி.அ. / பொது முகாமையாளர், பி.பொ.மு. (இடர் முகாமைத்துவம்) மற்றும் அழைப்பின் பேரில் வங்கியின் யாரேனும் ஏனைய அதிகாரி சமூகமளிக்கலாம்.

தலைவர்

செல்வி. விசாகா அமரசேகர

ஏனைய அங்கத்தவர்கள்

திரு. துஷ்மந்த தொட்டவத்த - பணிப்பாளர்

திரு. இசுரு பாலபட்டபெந்தி - பணிப்பாளர்

திரு. கிளைவ் பொன்சேகா - பி.நி.அ. / பொது முகாமையாளர்

திருமதி. ரோஷிணி விஜேரத்ன - பி.பொ.மு. (இடர் முகாமைத்துவம்) - 15.11.2023 இல் உள்ளவாறு

திரு. அநுர பெரேரா - பி.பொ.மு. (இடர் முகாமைத்துவம்) - 16.11.2023 முதல்

அழைப்பின் பேரில் வழமையான வருகையாளர்கள்

அழைப்பின் பேரில் வங்கியின் யாரேனும் ஏனைய அதிகாரி கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BIRMC இன் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

கூட்டங்கள்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது ஐந்து (05) கூட்டங்கள் இடம்பெற்றன.

குறைவெண்


ஒரு BIRMC கூட்டத்தின் குறைவெண் ஆனது சபையின் இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் பி.நி.அ. / பொது முகாமையாளர்.

குழுவின் பங்கு

- சபையினால் தீர்மானிக்கப்பட்ட இடர் வரம்புறுகையினுள் வங்கியின் இடர் தோற்றுருவத்தினை மீளாய்வு செய்வதற்கு குழு பொறுப்பாளியாய் உள்ளது.
- பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களை பயன்படுத்தி, கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மூலோபாய இடர்கள் தொடர்பான அனைத்து இடர்களின் மதிப்பீட்டிற்கு குழு பொறுப்பாளியாயுள்ளது.
- இடர் முகாமைத்துவம் தொடர்பான ஏனைய பொறுப்புகளிடையே, குழுவானது கடன், நிதி, செயற்பாடுகள் மற்றும் சட்டம் / இணக்கப்பாடு தொடர்பான இடர் மேற்பார்வை, அமுலாக்கம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை கண்காணிக்கின்றது.
- கடன் குழு, சொத்து பொறுப்பு குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்தல், இது குறிப்பிட்ட இடர்களை விளித்துரைப்பதற்கும் மற்றும் அந்த இடர்களை குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ள அளவுசார் மற்றும் பண்புசார் இடர் வரம்புகளினுள் முகாமைப்படுத்துவதற்கும் ஆகும்.

எதிர்கால முன்னிறுத்தம்

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது வங்கியின் இடர் முகாமைத்துவ வரம்புறுகையின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதில் முன்னிறுத்தம் செய்யும்.



செல்வி. விசாகா அமரசேகர
தலைவர் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

22 மார்ச் 2024

சபை நிறைவேற்று கடன் குழு அறிக்கை (BECC)



திரு உதேனி சமரத்ன
தலைவர் சபை நிறைவேற்று கடன் குழு

தொகுப்பு

குழுவானது ஆகக்குறைந்தது இரண்டு சபையின் நிறைவேற்றுனரல்லா சுயாதீன பணிப்பாளர்களையும் மற்றும் பி.நி.அ. / பொது முகாமையாளரை வருடத்தின் இறுதியில் உள்ளடக்கியுள்ளது (அதாவது 26 டிசம்பர் 2022)

தலைவர்

திரு உதேனி சமரத்ன

ஏனைய அங்கத்தவர்கள்

திரு. இசுரு பால்பட்டபெந்தி - பணிப்பாளர்

திரு. மஞ்சுள வெள்ளாளகே - பணிப்பாளர்

திரு. கிளைவ் பொன்சேகா - பி.நி.அ. / பொது முகாமையாளர்

அழைப்பின் பேரில் வழமையான வருகையாளர்கள்

வங்கியின் யாரேனும் ஏனைய கடன் அதிகாரி அழைப்பின் பேரில் BECC கூட்டங்களில் சமூகமளிக்கலாம்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BECC இன் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

கூட்டங்கள்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது பதினெட்டு (18) கூட்டங்கள் இடம்பெற்றன.

குறைவெண்

ஒரு BECC கூட்டத்தின் குறைவெண் சபையின் இரண்டு பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக மூன்று அங்கத்தவர்களாகும்.

குழுவின் பங்கு

- வங்கியின் கடன் முகாமைத்துவ கட்டமைப்பினை அங்கீகரித்தல் மற்றும் ஒப்படைப்பு மட்டம் உள்ளடங்கலான கடன் அங்கீகார அதிகாரங்களை நிறுவுதல்.
- பி.நி.அ. / பொது முகாமையாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வரம்புபுறை விஞ்சியுள்ள அனைத்து கடன்களை அங்கீகரித்தல் மற்றும் பொருத்தமானதாகக் கருதப்படும்போது மேலதிக ஏற்பாடுகள், நிபந்தனைகளை விதித்தல்.
- பி.நி.அ. / பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு மேலான மீள்அட்டவணைப்படுத்தல், மொத்த தொகை தீர்ப்பனவு மற்றும் வட்டிச் சலுகைப் பிரேரணைகளை அங்கீகரித்தல்.
- கடன் தொடர்பான முறைமைகள், அவற்றின் அமுலாக்கம், கண்காணிப்பு என்பவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் தேக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு தேக்க மட்டத்தில் இடர்களை முகாமைப்படுத்தல்.
- கடன் இடரினை கட்டுப்படுத்துவதற்கு விவேகமான வழிமுறைகளை பரிந்துரைத்தல்.

எதிர்கால முன்னிறுத்தம்

சபை நிறைவேற்று கடன் குழுவானது வங்கியின் வினைத்திறனான கடன் இடர் முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருக்கும்.

திரு உதேனி சமரத்ன
தலைவர் சபை நிறைவேற்று கடன் குழு

22 மார்ச் 2024

சபை பெயரிடல் குழு அறிக்கை (BNC) GRI 2-10



திரு. சுஜீவ ராஜபக்ஷ
தலைவர் சபை பெயரிடல் குழு

தொகுப்பு

குழுவானது வருடத்தின் இறுதியில் மூன்று நிறைவேற்றுனரல்லா சுயாதீன பணிப்பாளர்களை உள்ளடக்கியது.

தலைவர்

திரு. சுஜீவ ராஜபக்ஷ

ஏனைய அங்கத்தவர்கள்

திரு. ஏ எம் பி எம் பி அத்தபத்து - பணிப்பாளர்

திரு. மஞ்சுள வெள்ளாளகே - பணிப்பாளர்

அழைப்பின் பேரில் வழமையான வருகையாளர்கள்

பி.நி.அ. / பொது முகாமையாளர் அழைப்பின் பேரில் சமூகமளிக்கின்றார்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BNC இன் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

கூட்டங்கள்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது பதினைந்து (15) கூட்டங்கள் இடம்பெற்றன.

குறைவெண்

ஒரு BNC கூட்டத்தின் குறைவெண் மூன்று (3) அங்கத்தவர்களாகும்.

குழுவின் பங்கு

- பிரதான பொறுப்பானது ஒரு பி.நி.அ. / பொது முகாமையாளர் மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரை தெரிவுசெய்து / நியமிக்கும் ஒரு செயன்முறையினை அமுல்படுத்துவதாகும். பி.நி.அ. / பொது முகாமையாளர் மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் பதவிக்கான நியமனம் அல்லது பதவியுயர்விற்கு தகுதி வரன்முறையினை குழு நிறுவுகின்றது.
- இளைப்பாறுதலடையும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்காக மேலதிக / புதிய நிபுணத்துவம் மற்றும் தொடர்வு ஏற்பாடுகளுக்கான தேவையினை கருத்திற்கொள்வதற்கும் குழு பொறுப்பானதாகும்.
- பி.நி.அ. / பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவியுயர்விற்காக கருதப்படவேண்டிய தகுதிக்குத் தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய பண்புகள் போன்ற வரன்முறைகளை நிறுவுவதற்கு. .

எதிர்கால முன்னிறுத்தம்

சபை பெயரிடல் குழுவானது வங்கிக்கான நியமமான திசைக்கு ஏற்ப பெறுநிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்தில் தரமான நியமனங்களை உறுதிசெய்வதற்கு கடப்பாட்டுடன் இருக்கும்.

திரு. சுஜீவ ராஜபக்ஷ
தலைவர் சபை பெயரிடல் குழு

22 மார்ச் 2024

சபை முதலீட்டு வங்கியியல் குழு அறிக்கை (BIBC)



திரு. ஏ எம் பி எம் பீ அத்தபத்து
தலைவர் சபை முதலீட்டு வங்கியியல் குழு

தொகுப்பு

குழுவானது ஆகக்குறைந்தது சபையின் இரண்டு பணிப்பாளர்கள், பி.நி.அ. / பொது முகாமையாளர், திறைசேரியின் தலைவர், பி.பொ.மு. (இடர் முகாமைத்துவம்) மற்றும் யாரேனும் வேறு அதிகாரியினை அழைப்பின் பேரில் உள்ளடக்குகின்றது.

தலைவர்

திரு. ஏ எம் பி எம் பீ அத்தபத்து

ஏனைய அங்கத்தவர்கள்

செல்வி. விசாகா அமரசேபர - பணிப்பாளர்

திரு. இசுரு பாலபட்டபெந்தி - பணிப்பாளர்

திரு. கிளைவ் பொன்சேகா - பி.நி.அ. / பொது முகாமையாளர்

திருமதி ரோஷினி விஜேரத்ன - பி.பொ.மு. (இடர் முகாமைத்துவம்) - 15.11.2023 இல் உள்ளவாறு

திரு. அநுர பெரேரா - பி.பொ.மு. (இடர் முகாமைத்துவம்) - 16.11.2023 முதல்

திருமதி ஷமீளா லொக்கு கலுகே - பி.பொ.மு. (திறைசேரி, முதலீட்டு வங்கியியல் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்)

அழைப்பின் பேரில் வழமையான வருகையாளர்கள்

அழைப்பின் பேரியல் வங்கியின் யாரேனும் வேறு அதிகாரிகள் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BIBC இன் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

கூட்டங்கள்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது நான்கு (04) கூட்டங்கள் இடம்பெற்றன.

குறைவெண்

ஒரு BIBC கூட்டத்தின் குறைவெண் சபையின் இரண்டு பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக மூன்று அங்கத்தவர்களாகும்.

குழுவின் பங்கு

- வங்கியின் முதலீட்டு வங்கியியல் மாதரியின் வழமையான மீளாய்வு.
- மு.வ.கு. இன் செயற்பாடுகளின் மீளாய்வு.
- சாத்தியமான வாடிக்கையாளர்களின் பெயர் அனுமதிப்பு.
- வழங்கல்களை கூட்டாக முகாமைப்படுத்தும்போது அங்கீகாரத்தினை பெறுவதற்கு.
- முகாமைத்துவ கட்டணம் / தரகு பகிர்தல் அடிப்படைக்கான அங்கீகாரம்.
- புதிய முதலீட்டு மற்றும் வங்கியியல் கருவிகளது உள்ளடக்கம் மற்றும் அறிமுகத்தின் மீளாய்வு

எதிர்கால முன்னிறுத்தம்

சபை முதலீட்டு வங்கியியல் குழுவானது வங்கிக்கு வினைத்திறனான முதலீடுகளில் முன்னிறுத்தம் செய்யும்.



திரு. ஏ எம் பி எம் பீ அத்தபத்து
தலைவர் சபை முதலீட்டு வங்கியியல் குழு

22 மார்ச் 2024

சபை தகவல் தொழில்நுட்பக் குழு அறிக்கை (BITC)



திரு. துஷான் சோசா
தலைவர் சபை தகவல் தொழில்நுட்பக் குழு

தொகுப்பு

குழுவானது ஆகக் குறைந்தது சபையின் இரண்டு பணிப்பாளர்கள், பிரதம தகவல் அதிகாரி, பி.பொ.மு.(வழிமுறை முகாமைத்துவம், ஆகியோரை உள்ளடக்குகின்றது. சபை பெயரிடல் குழுவின் பரிந்துரையின் பேரில் சபையினால் குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

தலைவர்

திரு. துஷான் சோசா

ஏனைய அங்கத்தவர்கள்

திரு. இசுரு பாலபட்டபெந்தி - பணிப்பாளர்

திரு. உதேனி சமரத்ன - பணிப்பாளர்

திரு. தம்மிக்க தசா - பிரதம தகவல் அதிகாரி

திரு. டி எம் டபிள்யு சந்திரகுமார - பி.பொ.மு. (கிளை முகாமைத்துவம்)

அழைப்பின் பேரில் வழமையான வருகையாளர்கள்

அழைப்பின் பேரில் யாரேனும் வேறு அதிகாரி கூட்டதில் சமுகமளிக்கலாம்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BITC இன் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

கூட்டங்கள்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது ஐந்த (05) கூட்டங்கள் இடம்பெற்றன.

குறைவெண்

ஒரு BITC கூட்டத்திற்கான குறைவெண் பிரதம தகவல் அதிகாரி உள்ளடங்கலாக மூன்று அங்கத்தவர்களாகும்.

குழுவின் பங்கு

குழுவானது பின்வருவனவற்றிற்கு அதிகாரமுடையது:

- த.தொ. இன் ஒட்டுமொத்த முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல்
- நிதியளித்தல், ஆளணி மற்றும் உபகரணம் பொறுத்தளவில் த.தொ. வளங்களின் போதுமை மற்றும் ஒதுக்கீட்டினை பரிந்துரைத்தல்
- வங்கி பூராவுமான த.தொ. மூலோபாயங்கள், முதலீடுகள் மற்றும் திட்டங்களுக்காக த.தொ. இனால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகளுக்காக சபைக்கு பரிந்துரைத்தல்களை மேற்கொள்ளுதல்.
- த.தொ. இனால் முன்னெடுக்கப்பட்ட த.தொ. கொள்கைகள் மற்றும் நிதியளித்தல் முன்னுரிமைகளுக்கு சபைக்கு பரிந்துரைத்தல்களை மேற்கொள்ளுதல்.

எதிர்கால முன்னிறுத்தம்

சபை தகவல் தொழில்நுட்பக் குழுவானது த.தொ. சேவைகளும் செயற்பாடுகளும் வங்கியின் மூலோபாயங்களுடன் இணைந்திருப்பதனை உறுதிசெய்தல்.



திரு. துஷான் சோசா
தலைவர் சபை தகவல் தொழில்நுட்பக் குழு

22 மார்ச் 2024

சபை மூலோபாய திட்டமிடல் மீளாய்வுக் குழு அறிக்கை (BSPRC)



திரு. சுஜீவ ராஜபக்ஷ
தலைவர் சபை மூலோபாய திட்டமிடல்
மீளாய்வுக் குழு

தொகுப்பு

குழுவானது வருடத்தின் இறுதியில் தலைவர், இரண்டு நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்கள் மற்றும் பி.நி.அ. / பொது முகாமையாளர் ஆகியோரை உள்ளடக்குகின்றது.

தலைவர்

திரு. சுஜீவ ராஜபக்ஷ

ஏனைய அங்கத்தவர்கள்

திரு. துஷான் சோசா - பணிப்பாளர்

செல்வி விசாகா அமரசேகர - பணிப்பாளர்

திரு. கிளைவ் பொன்சேகா - பி.நி.அ. / பொது முகாமையாளர்

அழைப்பின் பேரில் வழமையான வருகையாளர்கள்

பி.பொ.மு. (மூலோபாயத் திட்டமிடல், செயற்திறன் முகாமைத்துவம் மற்றும் ஆய்வு) மற்றும் வங்கியின் யாரேனும் வேறு அதிகாரிகள் அழைப்பின் பேரில் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BSPRC இன் செயலாளராக கடமையாற்றுகின்றார்.

கூட்டங்கள்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது நான்கு (04) கூட்டங்கள் இடம்பெற்றன.

குறைவெண்

ஒரு BSPRC கூட்டத்திற்கான குறைவெண் மூன்று (03) அங்கத்தவர்களாகும்.

குழுவின் பங்கு

- மாதாந்த மூலோபாயத் திட்டமிடல் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் எடுத்துக்காட்டப்படும் கலந்துரையாடப்படும் முக்கிய புள்ளிகளை மீளாய்வு செய்யவும் திருத்தல் வழிமுறைகளை பரிந்துரைக்கவும்.
- பரிந்துரைத்தல்களின் அடிப்படையில் கொள்கைகளை விருத்தி செய்வதற்கு.
- மூலோபாயத் திட்டமிடல் அமுலாக்கல் செயன்முறைக்கு வழிகாட்டி மற்றும் திசையினை வழங்குதல்.

எதிர்கால முன்னிறுத்தம்

சபை மூலோபாயத் திட்டமிடல் மீளாய்வுக் குழுவானது வங்கியின் தொலைநோக்கினை அடைவதற்காக அதன் நம்பிக்கைக்கான பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு சபைக்கு துணையளிப்பதில் முன்னிறுத்தம் செய்யும்.

திரு. சுஜீவ ராஜபக்ஷ
தலைவர் சபை மூலோபாய திட்டமிடல் மீளாய்வுக் குழு

22 மார்ச் 2024

நிதியியில் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று

பொறுப்பு

2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்பரையின் பிரிவு 3 (8) (ii) (b), இற்கிணங்க பணிப்பாளர்கள் சபையானது மக்கள் வங்கியின் ("வங்கி") நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான இந்த அறிக்கையினை

முன்னிலைப்படுத்துகின்றது.

வங்கியில் காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மைக்கு பணிப்பாளர்கள் சபையானது ("சபை") பொறுப்பாளியாகும். அத்தகைய போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை கருத்திற்கொண்டு சபையானது ஒரு முகாமைப்படுத்தப்பட்ட அடிப்படையில் இடருடன் வெகுமதியினை சமநிலைப்படுத்துவதனை வங்கியியல் வணிகம் வேண்டுவதனை சபை அங்கீகரித்துள்ளது. எனவே, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள், வங்கியின் இடர் ஆர்வத்தினை உள்ளடக்கிய வரையறைகள் மற்றும் குறிகாட்டிகளிலிருந்து ஏதேனும் விலகல்களை சுட்டிக்காட்டும் நோக்கில் பிரதானமாக

வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்டவற்றின் துணைகொண்டு பார்க்கையில், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது நிதியியல் தகவல்களின் மற்றும் பதிவுகளுக்கு பொருண்மையான பிறழ்கூற்றுக்களுக்கு எதிராக அல்லது நிதியியல் நட்டங்கள் அல்லது மோசடிகளுக்கு எதிராக ஒரு நியாயமான உறுதிமொழியினை மாத்திரமே வழங்கலாம்

ஆனால் முழுமையான உறுதிமொழியினை அல்ல.

வங்கயினால் முகங்கொடுக்கப்பட்ட முக்கியமான இடர்களை இனங்காண்பதற்கு, மதிப்பிடுவதற்கு மற்றும் முகாமைப்படுத்துவதற்கு ஒரு தொடர்ச்சியான செயன்முறையினை சபை நிறுவியுள்ளதுடன், இந்தச் செயன்முறையானது, வணிகச் சூழல் அல்லது முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளில் மாற்றங்கள் ஏற்படும்போது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் மேம்படுத்தலை உள்ளடக்குகின்றது. இந்த செயன்முறையானது, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட "உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டி" இன் பிரகாரம் சபையினால் வழமையாக மீளாய்வு செய்யப்படுகின்றது. அந்த வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் மதிப்பீட்டிற்கான கொள்கைகளை கணக்கிலெடுத்து நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டினை சபை

மதிப்பீடு செய்துள்ளது.

தற்போதுள்ள நிதியியில் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது, நிதியியல் அறிக்கையிடல் மற்றும் வெளிவாரி தேவைகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளின் பிரகாரம் உள்ளன என்ற நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு வலுவானதாகவும் போதுமையானதாகவும் உள்ளது என்பது சபையின் கருத்தாகும்.

முகங்கொடுத்த இடர்களை இனங்காண்பதன் மற்றும் மதிப்பிடுவதன் மூலம் இடர் மற்றும் கட்டுப்பாட்டில் சபையின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அமுலாக்குவதில் முகாமைத்துவம் சபைக்கு துணைபுரிகின்றது. மேலும் இந்த இடர்களை தணிப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, செயற்பாடு மற்றும்

கண்காணிப்பிலும் சபைக்கு உதவுகின்றது.

நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறன்களை மீளாய்வு செய்வதில் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைகளின் முக்கிய அம்சங்கள்

நிதியியல் அறிக்கையிடல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையின் போதுமை மற்றும் நேர்மையினை மீளாய்வு செய்வதில் நிறுவப்பட்டுள்ள முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை

உள்ளடக்குகின்றன:

- வங்கியின் நாளாந்த செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மை, மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்கள், மூலோபாயங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு மற்றும் கொள்கைகள் மற்றும் வணிகத் திசைகள் ஆகியவற்றின் பிரகாரம் வங்கியின் செயற்பாடுகள் காணப்படுவதை உறுதிசெய்வதில் சபைக்கு துணையளிப்பதற்காக சபை உப குழுக்கள்

  நிறுவப்பட்டுள்ளன.

- வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது மாதிரிகள் மற்றும் சூழ்சியான செயன்முறைகளைப் பயன்படுத்தி ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் கொள்கைகள், செயன்முறைகளுடனான இணக்கப்பாடு மற்றும் பயனுறுதித்தன்மையினை பரிசீலித்து ஏதேனும் இணக்கப்பாடின்மை தொடர்பான முக்கியமான கண்டுபிடிப்புகளை எடுத்துக்காட்டுகின்றது. உள்ளகக் கணக்காய்வு பணிகள் அனைத்து அலகுகள் மற்றும் கிளைகளில் மேற்கொள்ளப்பட்டதுடன், அவற்றின் நிகழ்வெண்ணானது, ஒரு சுயாதீன மற்றும் புறநிலையான அறிக்கையினை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தல் முறைகளைப் பயன்படுத்தி இடர் மதிப்பீட்டின் மட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. வருடாந்தக் கணக்காய்வுத் திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டு சபை கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கண்டுபிடிப்புகள் சபை கணக்காய்வுக் குழுவுக்கு அவர்களது காலாகால கூட்டங்களில் மீளாய்வு

  செய்யப்படுவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

- வங்கியின் BAC ஆனது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால், வெளிவாரி கணக்காய்வாளர்களினால், முறைமைப்படுத்தல் அதிகாரசபைகளினால் மற்றும் முகாமைத்துவத்தினால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுச் சிக்கல்களை மீளாய்வு செய்து, இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை மதிப்பீடு செய்கின்றது. அவர்கள் கணக்காய்வுகளின் நோக்கெல்லை மற்றும் அவற்றின் தரம் ஆகியவற்றில் குறிப்பிட்ட வலியுறுத்தலுடன் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளையும் மீளாய்வு செய்கின்றார்கள். BAC கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் வங்கியின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டங்களில் காலாகால அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. வங்கியின் BAC இனால் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரங்கள் சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் (பக்கம் 196 இனை பார்க்கவும்)

  குறிப்பிடப்பட்டுள்ளன.

- நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பிடுவதில் வங்கியின் இனங்காணப்பட்ட அதிகாரிகள், குறிப்பிடத்தக்க கணக்குகள் மற்றும் வங்கியின் நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்களுடன் தொடர்புடைய அனைத்து செயன்முறைகளையும் கட்டுப்பாடுகளையும் தொடர்ந்து மீளாய்வு செய்து இற்றைப்படுத்தினார்கள். வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் இந்த செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையின்

  பொருந்துமையினை தொடர்ச்சியாக சரிபார்க்கின்றது.

- LKAS மற்றும் SLFRS ஆகியவற்றை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களைக் கடைப்பிடிப்பதில், அங்கீகாரம், அளவீடு மற்றும் வகைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக செயன்முறையிலான முன்னேற்றமான மேம்படுத்தல்கள் மற்றும் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படும் வேளை, கடன்கள் மற்றும் முற்பணங்களின் வலுக்குன்றல், கடன் அட்டைச் செயற்பாடுகள், முகாமைத்தவ தகவல் முறைமை மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைன தரப்பினர் கொடுக்கல் வாங்கல் தொடர்பான நிதிக் கூற்று வெளிப்படுத்தல்கள் தொடர்பான செயன்முறைகளின் மேலும் பலப்படுத்தலும் இடம்பெறும். இம்மதிப்பீடுகள் வங்கியின் துணை நிறுவனங்களை

  உள்ளடக்கவில்லை.

- இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 (நிதியியல் கருவிகள்) இன் தேவைப்பாடுகளை அமுலாக்குவதற்கான அவசியமான நடவடிக்கைகளை வங்கி 2018 இல் எடுத்தது. தேவையான மாதிரிகள் அமுலாக்கப்பட்டு செயன்முறைகளும் கட்டுப்பாடுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் SLFRS 9 இற்கமைய ஏற்புடையாக்கல் மற்றும் இணக்கப்பாடிற்கு தேவையான அறிக்கைகள் மீதான செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை சபையானது தொடர்ச்சியாக

  பலப்படுத்துகின்றது.

- வங்கியின் முழு கிளை வலையமைப்பிளை உள்ளடக்கி கணினி துணையுடனான கணக்காய்வு நுட்பங்கள் / கருவிகளைப் பயன்படுத்தி வங்கியின் தெரிவுசெய்த சில செயன்முறைகளில் தரவுப் பகுப்பாய்வினை உள்ளகக் கணக்காய்வு பிரிவு மேற்கொண்டது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் இனங்காணப்பட்ட அனைத்து முக்கியமான கண்டுபிடிப்புகளும் சபை கணக்காய்வுக் குழுவிற்கு அவர்களது காலாகால கூட்டங்களில் மீளாய்வு

  செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டன.

- 2023 நிதியாண்டின்போது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பில் வெளிவாரி கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கள் கருத்திலெடுக்கப்பட்டு அவற்றை பொருத்தமானவாறு ஒருங்கிணைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், வருகின்ற ஆண்டில் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை இனங்காண்பதிலான ஆவணப்படுத்தல் கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதற்கான செயன்முறைகளை விருத்திசெய்வதற்கான பொருத்தமான

  நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உறுதிமொழி

மேற்குறிப்பிட்ட செயன்முறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் முறைமையானது நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக ஒரு நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் வெளிவாரி தேவைகளுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது


என சபை உறுதிப்படுத்துகின்றது.

சபைக்காக மற்றும் சபையின் சார்பிலும்,



திரு. துஷ்மந்த தொட்டவத்த

தலைவர் - சபை கணக்காய்வுக் குழு



செல்வி. விசாகா அமரசேகர

பணிப்பாளர்

26 மார்ச் 2024

உள்ளகக் கட்டுப்பாடுகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிமொழி அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAN/D/PB/2024/07

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 08 April 2024

மக்கள் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களது கூற்றில் பணிப்பாளர்கள் சபைக்கு கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் உறுதிமொழி அறிக்கை

அறிமுகம்

இந்த அறிக்கையானது 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள மக்கள் வங்கியின் ("வங்கி") உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் ("கூற்று") உள்ளடக்கப்பட்டு நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் உறுதிமொழியினை வழங்குவதற்காகும்.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையின் பிரிவு 3 (8) (ii) (b) உடன் இணங்கி இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட, "உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டி" இன் பிரகாரம் கூற்றின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளது.

எனது பொறுப்பு மற்றும் SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது) உடனான இணக்கப்பாடு

எனது பொறுப்பானது கூற்றானது பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் துணையளிக்கப்பட்டுள்ளதா மற்றும் வங்கியின் உள்ளக் கட்டுப்பாடுகளின் வடிமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்துள்ள செயன்முறைகளை பொருத்தமாக பிரதிபலிக்கின்றதா என்பதை மதிப்பிடுவதாகும்.

நான் எனது பணியினை உறுதிமொழி ஈடுபாடுகளிலான இலங்கை நியமம் (SLSAE) 3050 (திருத்தியமைக்கப்பட்டது), இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் வங்கிக்கான உறுதிமொழி அறிக்கை என்பவற்றின் பிரகாரம் நடாத்தினேன். இந்த நியமமானது, முகாமைத்துவமானது, அனைத்து பொருண்மையானவை தொடர்பில், உள்ளகக் கட்டுப்பாடுகளிலான கூற்றினை தயாரித்துள்ளதா என்பது பற்றி வரையறையான உறுதிமொழியினை பெறுவதற்கான செயன்முறைகளை நான் திட்டமிட்டு செயலாற்றவேண்டும் என்று வேண்டுகின்றது. இந்த ஈடுபாட்டின் நோக்கத்திற்காக, ஏதேனும் அறிக்கைகளை இற்றைப்படுத்தவோ மீள்வழங்குவதற்கோ பொறுப்பாளியல்ல மற்றும் இந்த ஈடுபாட்டின்போது நிதியியல் தகவல்களில் ஒரு கணக்காய்வினையோ அல்லது மீளாய்வினையோ நான் செயலாற்றவில்லை.

செயலாற்றப்பட்ட பணியின் பொழிப்பு

கூற்றானது பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் துணையளிக்கப்பட்டுள்ளதா மற்றும் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்துள்ள செயன்முறைகளை பொருத்தமாக பிரதிபலிக்கின்றதா என்பதை மதிப்பிடுவதற்காக நான் எனது ஈடுபாட்டினை நடாத்தினேன்.

பணிப்பாளர்கள் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைக்கு வங்கியின் ஆளணியினர் மற்றும் ஒரு மாதிரி அடிப்படையில் ஆவணப்படுத்தலின் உளதாம் தன்மையானது துணையளித்துள்ளதா என்பதிலான விசாரணையினை மேற்கொள்வதற்கு செயலாற்றப்பட்ட செயன்முறைகள் பிரதானமாக வரையறை செய்யப்பட்டிருந்தது.

SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது), கூற்றானது அனைத்து இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்றதா எனக் கருதுவதனையோ அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு செயன்முறைகளின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயத்தினை வழங்குவதனையோ என்னிடம் வேண்டவில்லை. SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது), ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் முக்கியமான சிக்கல்களை பொருண்மையான உள்ளகக் கட்டுப்பாட்டு அம்சங்களுடன் கையாள்வதற்காக விபரிக்கப்பட்டுள்ள செயன்முறைகள் மெய்யாகவே சிக்கல்களை நிவர்த்திசெய்துள்ளதா எனக் கருதுமாறு என்னை வேண்டுவதில்லை.

தெரிவுசெய்யப்பட்ட செயன்முறைகள், வங்கியின் தன்மை, நிகழ்வு அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள கூற்றில் எனது புரிந்துணர்வினைக் கருத்திற்கொண்டு எனது நியாயப்பாட்டில் தங்கியுள்ளது.

எனது தீர்மானத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதுமையான மற்றும் பொருத்தமான சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

தீர்மானம்

செயலாற்றப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையின் மீளாய்வில் பணிப்பாளர்கள் சபை கடைப்பிடித்த செயன்முறையில் எனது புரிந்துணர்வுடன், ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கூற்றானது முரண்பட்டுள்ளது என நான் நம்புவதற்கான காரணம் எதுவும் எனது கவனத்திற்கு வரவில்லை.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk



மக்களின் எதிர்காலங்கள்

சாத்தியமான நிலைமாற்றலுக்கு மக்கள் வங்கி எப்போதும் ஒரு வினையூக்கி என்பதுடன், மக்களுக்கான அக்கறையில் அதன் அர்ப்பணிப்பிற்கு உண்மையாய் இருப்பதுடன், நாட்டிற்கு ஒரு வளமான புது யுகத்தினை வழிநடத்துகின்றது.

நிதிக் கூற்றுக்கள்

208 நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்புக்கள் | **209** நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | **211** வருமானக் கூற்று | **212** இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று | **213** நிதி நிலைமைக் கூற்று | **214** உரிமை மாற்றங்களின் கூற்று - வங்கி | **216** உரிமை மாற்றங்களின் கூற்று - குழுமம் | **218** காசுப் பாய்ச்சல்கள் கூற்று | **219** நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்புக்கள்

மக்கள் வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்பானது பின்வரும் கூற்றில் பணிப்பாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களின் பொறுப்பினை வேறுபடுத்துவதற்காக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள்

வங்கியானது அனைத்து கொடுக்கல் வாங்கல்களில் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்துள்ளதனை மற்றும் வருடத்திற்கான இலாபம் / நட்டத்தில் மற்றும் அலுவல்களின் நிலையில் ஒரு மெய்யானதும் நியாயமானதுமான கருத்தினை வழங்குவதனை உறுதிசெய்வதற்கு வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது பொறுப்பினைக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம், பணிப்பாளர்கள் சபையானது அவர்களது வழமையான கூட்ட மீளாய்வுகளூடாக மற்றும் சபை கணக்காய்வுக் குழுவினூடாக நிதியியல் அறிக்கையிடலில் முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை மேற்பார்வை செய்கின்றது. சபை கணக்காய்வுக் குழு அறிக்கையானது பக்கம் 196 இல் வழங்கப்பட்டுள்ளது. பக்கங்கள் 211 முதல் 318 வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் கடைப்பிடித்துள்ளார்கள் எனவும் நியாயமான மற்றும் விவேகமான நியாயப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகளினால் துணையளிக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் கருதுகின்றார்கள்.

நிறுவனச்செயல்நிலை தொடர்ச்சி

ஒரு எதிர்வரும் எதிர்காலத்திற்கு அதன் வணிகத்தினை தொடர்வதற்கு போதுமையான வளங்களை வங்கி கொண்டுள்ளது என கருத்துடன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பணிப்பாளர்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்டையினை கடைப்பிடித்துள்ளார்கள்.

உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்தவம் மற்றும் இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் சபையானது வினைத்திறனான மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவியுள்ளார்கள். இது உள்ளகப் பரிசீலனைகள், உள்ளகக் கணக்காய்வு மற்றும் வங்கியியல் வணிகத்தினை முறையான விதத்தில் கொண்டுசெல்வதற்கு தேவையான நிதியியல் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள், சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் நடைமுறைக்கேற்றவாறு பதிவுகளின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையினை பாதுகாத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. பணிப்பாளர்கள் சபையானது இடரை மேற்பார்வை செய்வதற்கு, இடர் ஆர்வ மட்டங்களை தீர்மானிப்பதற்கு, இடர் கொள்கைகளை உருவாக்குவதற்கும் நடைமுறையிலுள்ள இடர் முகாமைத்துவக் செயன்முறை மற்றும் செயலாக்கத்தின் பயனுறுதித்தன்மையினை உறுதிசெய்தல் ஆகியவற்றுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. BIRMC (சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு) சபைக்கு அதன் இடர் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதற்கு துணையளிப்பதுடன், இடர் ஆளுகை கட்டமைப்புகள், கொள்கை வரம்புறுகைகள், நியமங்கள் செயலாக்கங்களின் அமுலாக்கத்தில் போதுமை மற்றும் வினைத்திறனை உறுதிசெய்வதற்கு அனைத்து இடர் தொடர்பான அம்சங்களில் சுயாதீன மேற்பார்வையினையும் வழங்குகின்றது. BIRMC அறிக்கையானது பக்கம் 198 இல் வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் சபையானது விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதுடன், ஏதேனும் பொருண்மையான இணக்கப்பாடின்மைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் உறுதிசெய்கின்றது.

கணக்காய்வு அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் ஏற்பாடுகளினைத் தொடர்ந்து வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் நாயகம் உள்ளதுடன் அவர் வங்கியின் நிதிக் கூற்றுக்களில், நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றிலான உறுதிமொழி ஆகியவற்றில் இறுதி அபிப்பிராயத்தினை வழங்குகின்றார். இந்த அறிக்கைகள் முறையே பக்கங்கள் 209 முதல் 210 வரைக்கும் மற்றும் 206 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர் இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகையிலான 2007 இன் 11 ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்புரையுடனான இணக்கப்பாட்டு மட்டத்தினையும் சான்றளிக்கின்றார்.

இணக்கப்பாடு

இந்த அறிக்கையில் தயாரித்து முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான வங்கியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) தேவைப்பாடுகளுடன் ஒத்திருக்கின்றன. வெளிவாரி கணக்காய்வாளரது அறிக்கையின் பிரகாரம் அத்திகதியல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் வங்கியின் அலுவல்களில் ஒரு மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை பிரதிபலிக்கின்றது. இதன் பிரகாரம், பணிப்பாளர்கள் இந்தக் கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளார்கள் என்ற கருத்தினைக் கொண்டுள்ளார்கள்.



வஷியாமா விஜேகோன்
சபையின் செயலாளர்

22 மார்ச் 2024

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAN/D/PB/FA/2023

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 27 March 2024

2018 இன் தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான மக்கள் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் மற்றும ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கை தகவல்கள் உள்ளடங்கலான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்கிய மக்கள் வங்கியின் ("வங்கி") நிதிக் கூற்றுக்கள் மற்றும் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ("குழுமம்") மீதான கணக்காய்வானது, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதியியல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன.

வங்கியினாது 1971 இன் 38 ஆம் இலக்க நிதியியல் சட்டத்தின் பகுதி II இன் ஏற்பாடுகளிலிருந்து, அப்போதைய நிதி அமைச்சரினால் நிதியியல் சட்டத்தின் கீழ் அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் அவரது கட்டளையின் கீழ் 14 மே 1992 திகதியிடப்பட்டு பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி இலக்கம் 715 இன் மூலம் விலக்களிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொது தொழில்முறைப் பணியிலுள்ள ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் எனக்கு துணையளிக்கப்பட்டது.

வங்கி மற்றும் குழுமத்தின் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் மற்றும் குழுமத்தின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும். .

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 வங்கியின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள், வங்கியின் 2023 ஆண்டறிக்கையிலுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றன ஆனால் அவை நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரின் அறிக்கையினை உள்ளடக்கவில்லை ஏனெனில் இந்த கணக்காய்வாளரின் அறிக்கை திகதிக்கு பின்னர் அவை எனக்கு கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்ப்பதனாலாகும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் அதில் நான் எந்த விதமான உறுதிமொழி தீர்மானத்தையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை, அவை கிடைக்கப்பெறும்போது, வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்வதில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக வேறுபட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவு அல்லது இல்லாவிடின் பொருண்மையான பிறழ்கூற்றாகத் தோன்றுகின்றதா என்பதை கருத்திலெடுப்பதாகும்.

நான் வங்கியின் 2023 ஆண்டறிக்கையினை வாசிக்கும்போது, அவற்றில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் தீர்மானத்திற்கு வந்தால், ஆளுகைக்கு பொறுப்பாயுள்ளோருக்கு திருத்தியமைப்பதற்காக அவ்விடயத்தினை நான் அறியப்படுத்தல் வேண்டும். மேலும் பொருண்மையான திருத்தப்படாத பிறழ்கூற்றுக்கள் காணப்படுமாயின், அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இல் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்பட்டு உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உளளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஒரு நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஒரு யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

நிதிக் கூற்றுக்களிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ஆளுமையினை பொறுப்பேற்றோர் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், வங்கியின் மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு வங்கி மற்றும் குழுமம் வேண்டப்படுகின்றது.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளரது அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஒரு உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உத்தரவாதமல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை பொருண்மையானதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்:

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்களுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஒரு தவறின் விளைவாக எழக்கூடிய இடரிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடரானது உயர்வானதாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாண்மை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- வங்கியின் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஒரு புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றிக் காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிப்பதற்கு குழுமத்தினுள் உள்ள நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதியியல் தகவல்கள் தொடர்பாக பொருத்தமானதும், போதுமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுள்ளேன். குழுவின் கணக்காய்வின் வழிநடத்தலுக்கு, மேற்பார்வைக்கு மற்றும் செயலாற்றாலுக்கு நான் பொறுப்பாளியாயுள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் மாத்திரமே பொறுப்பாயுள்ளேன்.

ஆளுமை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த ஏதேனும் கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்கு குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் மற்றும் விளக்கங்கள் அனைத்தையும் நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இன் தேவைக்கேற்ப வங்கியானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை;

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் வங்கியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் வங்கியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (க்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலச் சட்டம், வங்கியினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு வங்கி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு;

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப வங்கியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு;

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் வங்கியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.



டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	குறிப்புகள்	வங்கி			குழுமம்		
		2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %	2023 ரூ. '000	2022 ரூ. '000	மாற்றம் %
மொத்த வருமானம்	6	422,242,143	357,228,609	18.2%	454,512,039	391,204,198	16.2%
வட்டி வருமானம்		394,794,898	321,935,983	22.6%	424,517,915	351,386,736	20.8%
வட்டிச் செலவினங்கள்		(340,473,452)	(246,177,918)	38.3%	(356,735,043)	(260,351,661)	37.0%
தேறிய வட்டி வருமானம்	7	54,321,446	75,758,065	-28.3%	67,782,872	91,035,075	-25.5%
கட்டண மற்றும் தரகு வருமானம்		13,806,168	16,397,745	-15.8%	14,822,549	17,213,747	-13.9%
கட்டண மற்றும் தரகுச் செலவினம்		(964,366)	(828,675)	16.4%	(964,366)	(828,675)	16.4%
தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம்	8	12,841,802	15,569,070	-17.5%	13,858,183	16,385,072	-15.4%
வர்த்தகத்திலிருந்து தேறிய இலாபம் /(நட்டம்)	9	9,430,542	17,026,226	-44.6%	9,543,338	17,019,836	-43.9%
ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறியது)	10	4,210,535	1,868,655	125.3%	5,628,237	5,583,879	0.8%
மொத்த செயற்பாட்டு வருமானம்		80,804,325	110,222,016	-26.7%	96,812,630	130,023,862	-25.5%
வலுக்குன்றல் கட்டணம்	11	(7,437,572)	(33,346,451)	-77.7%	(6,075,564)	(34,352,837)	-82.3%
தேறிய செயற்பாட்டு வருமானம்		73,366,753	76,875,565	-4.6%	90,737,066	95,671,025	-5.2%
ஆளணிச் செலவினங்கள்	12	(24,493,737)	(26,602,748)	-7.9%	(30,216,333)	(32,200,568)	-6.2%
ஏனைய செலவினங்கள்	13	(26,209,488)	(20,738,787)	26.4%	(32,006,574)	(26,787,783)	19.5%
நிதிச் சேவைகளிலான வரிகளுக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்		22,663,528	29,534,030	-23.3%	28,514,159	36,682,674	-22.3%
நிதிச் சேவைகளிலான வரிகள்		(7,318,088)	(8,195,633)	-10.7%	(9,243,859)	(9,992,022)	-7.5%
வரிக்கு முந்திய இலாபம்		15,345,440	21,338,397	-28.1%	19,270,300	26,690,652	-27.8%
வருமான வரிச் செலவினங்கள்	14	(5,262,634)	(4,146,339)	26.9%	(7,884,639)	(6,165,213)	27.9%
ஆண்டிற்கான இலாபம்		10,082,806	17,192,058	-41.4%	11,385,661	20,525,439	-44.5%
உடைமையாக்கத்தக்க இலாபம்:							
வங்கியின் உரித்துடைமையாளர்களுக்கு		10,082,806	17,192,058	-41.4%	10,513,288	19,571,989	-46.3%
கட்டுப்பாடற்ற நலன்கள்		-	-		872,373	953,450	-8.5%
		10,082,806	17,192,058	-41.4%	11,385,661	20,525,439	-44.5%
இலாபத்தில் பங்கொன்றிற்கான உழைப்புகள்	15						
சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு ரூ. '000	15.1	10,083	17,192	-41.4%	10,513	19,572	-46.3%
சாதாரண பங்கொன்றிற்கான நீர்த்த உழைப்பு ரூ.'000	15.2	41	70	-41.4%	43	80	-46.3%

பக்கங்கள் 219 முதல் 318 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	வங்கி		குழுமம்	
	2023 ரூ. '000	2022 ரூ. '000	2023 ரூ. '000	2022 ரூ. '000
ஆண்டிற்கான இலாபம்	10,082,806	17,192,058	11,385,661	20,525,439
ஏனைய விரிவான வருமானம் / (செலவினம்)				
வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படாத ஏனைய விரிவான வருமானம்				
ஏ.வி.வ. ஊடாக நியாயப் பெறுமதியில் உரித்துவ கருவிகளிலான தேறிய இலாபங்கள் / (நட்டங்கள்)	23 2,367	52,869	278,570	(121,202)
நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களில் தேறிய காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் / (நட்டங்கள்)	1,447,423	(3,304,393)	1,441,157	(3,177,074)
நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலான இலாபங்கள் / (நட்டங்கள்) இல் ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	(434,227)	991,318	(433,438)	953,496
காணி மற்றும் கட்டிடங்களின் மீள்பெறுமதியிடலிலான இலாபங்கள்	4,817,014	3,507,183	5,472,322	4,379,820
காணி மற்றும் கட்டிடங்களின் மீள்பெறுமதியிடலிலான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	(1,445,104)	(1,052,155)	(1,641,696)	(1,313,946)
ஆரம்ப மீதியிலான வருமான வரி வீதத்திலான மாற்றத்தில் ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	-	(2,056,688)	-	(2,056,688)
	4,617,473	(1,861,866)	5,116,915	(1,335,594)
வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படும் ஏனைய விரிவான வருமானம்				
ஏ.வி.வ. ஊடாக நியாயப் பெறுமதியில் கடன் கருவிகளில் (எ.க.ந. இலான மாற்றம் உள்ளடங்கலான) தேறிய இலாபங்கள் / (நட்டங்கள்)	82,477	(12,354)	425,862	(299,989)
மேற்குறிப்பிட்டவற்றிலான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	-	-	(129,211)	137,822
வெளிநாட்டு செயற்பாட்டின் நிதிக் கூற்றுக்களை பரிமாற்ற செய்வதிலான தேறிய இலாபங்கள் / (நட்டங்கள்)	-	-	(695,964)	1,458,432
	82,477	(12,354)	(399,313)	1,296,265
ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம், வரி நிகராக	4,699,950	(1,874,220)	4,717,602	(39,329)
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்	14,782,756	15,317,838	16,103,263	20,486,110
உடைமையாக்கத்தக்கது :				
வங்கியின் உரித்துவ உடைமையாளர்களுக்கு	14,782,756	15,317,838	15,476,470	18,561,941
கட்டுப்பாடற்ற நலன்களுக்கு	-	-	626,793	1,924,169
	14,782,756	15,317,838	16,103,263	20,486,110

பக்கங்கள் 219 முதல் 318 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

டிசம்பர் 31 இல் உள்ளவாறானது	குறிப்புகள்	வங்கி 2023 ரூ. '000	வங்கி 2022 ரூ. '000	வங்கி மாற்றம் %	குழுமம் 2023 ரூ. '000	குழுமம் 2022 ரூ. '000	குழுமம் மாற்றம் %
சொத்துக்கள்							
காசும் காசுக்குச் சமனானவைகளும்	17	61,889,582	66,842,171	-7.4%	63,307,106	68,077,027	-7.0%
இலங்கை மத்திய வங்கியினுடனான மீதிகள்	18	31,003,219	67,602,313	-54.1%	31,003,219	67,602,313	-54.1%
வங்கிகளுடனான வைப்பீடுகள்	19	66,227,025	-	-	76,872,574	3,028,550	2438.3%
பெறுதி நிதியியல் கருவிகள்	20	11,259,451	14,882,584	-24.3%	11,259,451	14,882,584	-24.3%
நிதியியல் சொத்துக்கள் -இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில்	21	144,184,748	5,556,754	2494.8%	145,622,457	5,915,926	2361.5%
நிதியியல் சொத்துக்கள் - பெறுமதிகுறைப்புக் கிரயத்தில்							
வங்கிகளுக்கான கடன்களும் முற்பணங்களும்	22	54,022,123	7,689,150	602.6%	54,422,338	7,689,150	607.8%
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்	23	1,709,457,735	1,783,106,693	-4.1%	1,823,770,212	1,915,771,684	-4.8%
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்	24	831,747,923	913,099,927	-8.9%	866,704,970	928,885,518	-6.7%
நிதியியல் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக (ஏ.வி.வ.) நியாயப் பெறுமதியில்							
ஏ.வி.வ. ஊடான நியாயப் பெறுமதியில் உரிமைக் கருவிகள்	25	1,894,023	1,661,656	14.0%	2,123,143	1,844,574	15.1%
ஏ.வி.வ. ஊடான நியாயப் பெறுமதியில் கடன் கருவிகள்	26	8,286,626	10,378,370	-20.2%	9,686,213	11,428,832	-15.2%
துணை நிறுவனங்களிலான முதலீடுகள்	27	4,280,522	4,280,522	-	-	-	-
ஆதனம்,பொறி மற்றும் உபகரணம் மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்	28	56,174,042	49,330,080	13.9%	67,280,968	59,780,131	12.5%
அருவச் சொத்துக்களும் நன்மதிப்பும்	29	1,763,287	1,719,177	2.6%	1,930,788	1,859,475	3.8%
ஏனைய சொத்துக்கள்	30	56,004,712	45,879,055	22.1%	54,216,717	46,368,814	16.9%
மொத்த சொத்துக்கள்		3,038,195,018	2,972,028,452	2.2%	3,208,200,156	3,133,134,578	2.4%
பொறுப்புக்கள்							
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	31	77,224,139	111,452,491	-30.7%	85,646,267	122,696,978	-30.2%
பெறுதி நிதியியல் கருவிகள்	20	36,049	1,888,478	-98.1%	36,049	1,888,478	-98.1%
வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை	32	2,653,105,546	2,371,518,898	11.9%	2,745,161,610	2,450,079,037	12.0%
ஏனைய கடன் பெறுகைகள்	33	64,278,443	191,527,573	-66.4%	64,223,443	191,527,573	-66.5%
நடைமுறை கடன் பொறுப்புக்கள்		1,184,853	6,372,157	-81.4%	2,382,870	8,297,080	-71.3%
தேறிய ஒத்திவைக்கப்பட்டகடன் பொறுப்புக்கள்	34	5,029,929	606,207	729.7%	6,081,598	570,529	966.0%
ஏனைய பொறுப்புக்கள்	35	30,280,189	106,765,050	-71.6%	41,877,447	115,961,714	-63.9%
தாழ்நிலையான தவணைக் கடன்கள்	36	46,997,291	36,603,467	28.4%	57,806,483	52,781,563	9.5%
மொத்த பொறுப்புக்கள்		2,878,136,439	2,826,734,321	1.8%	3,003,215,767	2,943,802,952	2.0%
உரித்துவம்							
கூறப்பட்ட மூலதனம் /ஒதுக்கப்பட்ட மூலதனம்	37	12,201,998	12,201,998	0.0%	12,201,998	12,201,998	0.0%
நியதிச்சட்ட ஒதுக்க நிதியம்	38	10,574,271	10,070,131	5.0%	10,574,271	10,070,131	5.0%
ஏனைய ஒதுக்கங்கள்	39	42,084,584	38,397,830	9.6%	45,407,554	41,452,506	9.5%
நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள்	40	95,197,726	84,624,172	12.5%	122,276,138	111,194,555	10.0%
மொத்த பங்குதாரர்களின் உரித்துவம்		160,058,579	145,294,131	10.2%	190,459,961	174,919,190	8.9%
கட்டுப்பாடற்ற நலன்கள்		-	-		14,524,428	14,412,436	0.8%
மொத்த உரித்துவம்		160,058,579	145,294,131	10.2%	204,984,389	189,331,626	8.3%
மொத்த உரித்துவமும் பொறுப்புக்களும்		3,038,195,018	2,972,028,452	2.2%	3,208,200,156	3,133,134,578	2.4%
ஐயப்பாடான பொறுப்புக்களும் கடப்பாடுகளும்	41	221,405,708	370,648,773	-40.3%	228,813,708	375,288,336	-39.0%

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

சான்றளிப்பு

டிசம்பர் 31, 2023 இல் உள்ளவாறான இந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான இலாபமானது, வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் நிலைமைகளில் ஒரு உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை வழங்குகின்றன.

அசாம் ஏ அஹமட்
நிதியியல் தலைவர்

பணிப்பாளர்கள் சபையானது இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளன:

சுஜீவ ராஜபக்ஷ
தலைவர்

துஷ்மந்த தொட்டவத்த
பணிப்பாளர்

கிளைவ் பொன்சேகா
பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்

மார்ச் 25, 2024
கொழும்பு

உரிமை மாற்றங்களின் கூற்று - வங்கி

வங்கி	கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம்	
	சாதாரண பங்குகள்	ஒதுக்கப்பட்ட மூலதனம்
	ரூ. '000	ரூ. '000
1 ஜனவரி 2022 இல் உள்ளவாறான மீதி	49,998	12,152,000
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்		
ஆண்டிற்கான இலாபம்	-	-
ஏனைய விரிவான வருமானம் / (செலவினம்) (வரி நிகராக)		
மொத்த விரிவான வருமானம் / (செலவினம்)	-	-
உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடைமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்		
ஆண்டின்போது ஒதுக்கத்திற்கான மாற்றல்கள்	-	-
திறைசேரி / பங்கிலாபத்திற்கான விசேட கட்டணம்	-	-
உரித்துவ உடைமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்	-	-
31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி	49,998	12,152,000
1 ஜனவரி 2023 இல் உள்ளவாறான மீதி	49,998	12,152,000
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்		
ஆண்டிற்கான இலாபம்	-	-
ஏனைய விரிவான வருமானம் / (செலவினம்) (வரி நிகராக)		
மொத்த விரிவான வருமானம் / (செலவினம்)	-	-
உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடைமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்		
ஆண்டின்போது ஒதுக்கத்திற்கான மாற்றல்கள்	-	-
திறைசேரி / பங்கிலாபத்திற்கான விசேட கட்டணம்	-	-
உரித்துவ உடைமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்	-	-
31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மீதி	49,998	12,152,000

கூறப்பட்ட மூலதனம் /ஒதுக்கப்பட்ட மூலதனம்					
நியதிச்சட்ட ஒதுக்க நிதியம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	ஏனைய ஒதுக்கங்கள்	நிதியியல் சொத்துக்கள் நி.பெ.ஏ.வி. ஒதுக்கம்	நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள்	மொத்தம்
ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
9,210,528	21,540,300	14,141,373	220,614	73,322,570	130,637,383
-	-	-	-	17,192,058	17,192,058
	2,455,028		40,515	(4,369,763)	(1,874,220)
-	2,455,028	-	40,515	12,822,295	15,317,838
859,603	-	-	-	(859,603)	-
-	-	-	-	(661,090)	(661,090)
859,603	-	-	-	(1,520,693)	(661,090)
10,070,131	23,995,328	14,141,373	261,129	84,624,172	145,294,131
10,070,131	23,995,328	14,141,373	261,129	84,624,172	145,294,131
-	-	-	-	10,082,806	10,082,806
	3,371,910		314,844	1,013,196	4,699,950
-	3,371,910	-	314,844	11,096,002	14,782,756
504,140	-	-	-	(504,140)	-
-	-	-	-	(18,308)	(18,308)
504,140	-	-	-	(522,448)	(18,308)
10,574,271	27,367,238	14,141,373	575,973	95,197,726	160,058,579

உரிமை மாற்றங்களின் கூற்று - குழுமம்

குழுமம்	கூறப்பட்ட மூலதனம் /ஒதுக்கப்பட்ட மூலதனம்	
	சாதாரண பங்குகள்	ஒதுக்கப்பட்ட மூலதனம்
	ரூ. '000	ரூ. '000
1 ஜனவரி 2022 இல் உள்ளவாறான மீதி	49,998	12,152,000
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்		
ஆண்டிற்கான இலாபம்	-	-
ஏனைய விரிவான வருமானம் / (செலவினம்) (வரி நிகராக)		
மொத்த விரிவான வருமானம் / (செலவினம்)	-	-
உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடைமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்		
இக்காலத்தின்போதான ஒதுக்கத்திற்கான மாற்றல்கள்	-	-
திறைசேரி / பங்கிலாபத்திற்கான விசேட கட்டணம்	-	-
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-
உரித்துவ உடைமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்	-	-
31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான மீதி	49,998	12,152,000
2022 இன் 14 ஆம் இலக்க மிகை வரிச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட மிகை வரிக்கான செம்மையாக்கல்		
1 ஜனவரி 2023 இல் உள்ளவாறான மீதி	49,998	12,152,000
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்		
ஆண்டிற்கான இலாபம்	-	-
ஏனைய விரிவான வருமானம் / (செலவினம்) (வரி நிகராக)		
மொத்த விரிவான வருமானம் / (செலவினம்)	-	-
உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடைமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்		
இக்காலத்தின்போதான ஒதுக்கத்திற்கான மாற்றல்கள்	-	-
திறைசேரி / பங்கிலாபத்திற்கான விசேட கட்டணம்	-	-
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-
உரித்துவ உடைமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்	-	-
31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மீதி	49,998	12,152,000

கூறப்பட்ட மூலதனம் /ஒதுக்கப்பட்ட மூலதனம்							
நியதிச்சட்ட ஒதுக்க நிதியம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	ஏனைய ஒதுக்கங்கள்	நிதியியல் சொத்துக்கள் நி.பெ.ஏ.வி. ஒதுக்கம்	நி.வைக்கப்பட்ட உழைப்புகள்	மொத்தம்	கட்டுப்பாடற்ற அக்கறை	மொத்த உரித்துவம்
ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
9,210,528	23,464,860	14,540,498	154,723	97,445,732	157,018,339	12,687,071	169,705,410
-	-	-	-	19,571,989	19,571,989	953,450	20,525,439
	2,929,733	565,090	(202,398)	(4,302,473)	(1,010,048)	970,719	(39,329)
-	2,929,733	565,090	(202,398)	15,269,516	18,561,941	1,924,169	20,486,110
859,603	-	-	-	(859,603)	-	-	-
-	-	-	-	(661,090)	(661,090)	-	(661,090)
-	-	-	-	-	-	(198,804)	(198,804)
859,603	-	-	-	(1,520,693)	(661,090)	(198,804)	(859,894)
10,070,131	26,394,593	15,105,588	(47,675)	111,194,555	174,919,190	14,412,436	189,331,626
				82,610	82,610	(82,610)	-
10,070,131	26,394,593	15,105,588	(47,675)	111,277,165	175,001,800	14,329,826	189,331,626
-	-	-	-	10,513,288	10,513,288	872,373	11,385,661
	3,715,947	(271,026)	510,127	1,008,134	4,963,182	(245,580)	4,717,602
-	3,715,947	(271,026)	510,127	11,521,422	15,476,470	626,793	16,103,263
504,140	-	-	-	(504,140)	-	-	-
-	-	-	-	(18,308)	(18,308)	-	(18,308)
-	-	-	-	-	-	(432,191)	(432,191)
504,140	-	-	-	(522,448)	(18,308)	(432,191)	(450,499)
10,574,271	30,110,540	14,834,562	462,452	122,276,138	190,459,961	14,524,428	204,984,389

காசுப் பாய்ச்சல்கள் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	வங்கி		குழுமம்	
	2023 ரூ. '000	2022 ரூ. '000	2023 ரூ. '000	2022 ரூ. '000
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்				
வரிக்கு முந்திய இலாபம்	15,345,440	21,338,397	19,270,300	26,690,652
செம்மையாக்கல்கள்				
வரிக்கு முந்திய இலாபத்தில் உள்ளடக்கப்பட்ட காசல்லா உறுப்படிகள்	15,633,544	26,915,055	16,105,045	29,402,338
செயற்பாட்டு சொத்துக்களிலான மாற்றங்கள்	(154,797,956)	(5,472,100)	(142,957,207)	19,946,214
செயற்பாட்டு பொறுப்புக்களிலான மாற்றங்கள்	42,791,955	324,168,512	55,060,162	300,749,937
துணைநிறுவனங்கள் மற்றும் ஏனையவைகளிடம் பங்கிலாப வருமானம்	(2,344,049)	(908,626)	(208,744)	(207,360)
தாழ்நிலைக் கடனிலான வட்டிச் செலவினம்	4,520,329	5,503,630	5,602,097	7,060,585
நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் / பணிக்கொடைக்கான பங்களிப்புகள்	1,642,475	2,742,148	1,816,992	2,844,351
செலுத்தப்பட்ட வரி	(7,905,547)	(13,865,366)	(10,492,125)	(19,216,590)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு	(85,113,809)	360,421,650	(55,803,480)	367,270,127
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்				
ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கொள்வனவு	(3,451,107)	(1,974,640)	(4,054,877)	(2,526,931)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலான வருவாய்	329,216	174,560	421,071	237,350
நிதியியல் முதலீடுகளது கொள்வனவு	78,187,817	(329,002,099)	59,016,361	(332,028,247)
அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு	(681,025)	(293,921)	(725,467)	(305,693)
துணைநிறுவனங்கள் மற்றும் ஏனையவற்றிலான முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம்	2,344,049	908,626	208,744	207,360
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு	76,728,950	(330,187,474)	54,865,832	(334,416,161)
நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தாக காசுப் பாயச்சல்கள்				
தாழ்நிலை கடன்களிலிருந்து பெறப்பட்ட வருவாய்	10,000,000	-	10,000,000	-
தாழ்நிலை கடன்களின் மீள்செலுத்தல்	-	(12,500,000)	(5,295,400)	(12,500,000)
தாழ்நிலை கடன்களின் செலுத்தப்பட்ட வட்டி	(4,126,505)	(5,261,843)	(5,281,777)	(7,339,487)
குத்தகை பொறுப்புக்களின் மீள்செலுத்தல்	(2,422,917)	(2,507,423)	(2,804,597)	(2,914,389)
கட்டுப்பாடற்ற அக்கறைகளுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-	(432,191)	(198,804)
ஏனைய உரித்துவ கருவிகளின் உடைமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் / கட்டணம்	(18,308)	(661,090)	(18,308)	(661,090)
நிதியளித்தல் நடவடிக்கைகளில் தேறிய காசு	3,432,270	(20,930,356)	(3,832,272)	(23,613,770)
காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (குறைப்பு)	(4,952,589)	9,303,820	(4,769,921)	9,240,196
வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்	66,842,171	57,538,351	68,077,027	58,836,831
வருடத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்	61,889,582	66,842,171	63,307,106	68,077,027

1. அறிக்கையிடும் நிறுவனம்

1.1 பெறுநிறுவனத் தகவல்கள்

1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் 1 ஜூலை 1961 இல் நிறுவப்பட் இலங்கையில் வதிவிடத்தினைக் கொண்ட மக்கள் வங்கியானது ("வங்கி") ஒரு அரச உடைமை வங்கியாகும். வங்கியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், இலக்கம் 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இல் உள்ளது. 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் வங்கியின் மற்றும் அதன் துணைநிறுவனங்களை உள்ளடக்குகின்றது (கூட்டாக "குழுமம்" என்று அழைக்கப்படுகின்றது).

குழுமத்தின் இறுதி தாய் நிறுவனமாக மக்கள் வங்கி காணப்படுகின்றது.

1.2 பிரதான நடவடிக்கைகள் GRI 2-6

வங்கி

வங்கியின் வணிகமானது, ஏனையவற்றுக்கிடையில், வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், கடன் வசதிகளை வழங்குதல், தனிப்பட்ட வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல், அடகு பிடித்தல், சர்வதேச வர்த்தகம், அரசாங்கப் பிணையங்களில் வர்த்தகம் செய்தல், கடன் அட்டைச் செயற்பாடுகள், முதலீட்டு வங்கியியல் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கியியலுக்கான கரைகடந்த வங்கியியல் அலகு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

துணை நிறுவனங்கள்

வங்கியின் துணை நிறுவனங்களின் பிரதான நடவடிக்கைகள் பின்வருமாறு ;

கம்பனியின் பெயர்	பிரதான நடவடிக்கைகள்
பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி	பிரதான நடவடிக்கைகள், நிதியியல் குத்தகையினை வழங்குதல், வாடகைக் கொள்வனவு சொத்து நிதியளித்தல், தவணைக் கடன்கள், இஸ்லாமிய நிதியியல், எல்லைக்கடன் வர்த்தகம், பங்கு வர்த்தகம், கடன் கருவிகளின் வழங்கல், கடன் காரணிப்படுத்தல், தங்கக் கடன்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டுதல் என்பனவாகும்.
பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	சுற்றுலாக்களை ஒழுங்குசெய்தல் மற்றும் வான்பயண டிக்கட் வழங்கல் (பிரயாண முகவர்)

உப துணைநிறுவனங்கள்

வங்கியின் உப துணைநிறுவனங்களின் பிரதான நடவடிக்கைகள் பின்வருமாறு;

கம்பனியின் பெயர்	பிரதான நடவடிக்கைகள்
பீப்பஸ்ஸ் லீசிங் பிலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	வாகனத்தொகுதி முகாமைத்துவம், வாகனப் பெறுமதியிடல், வாகனங்களது விற்பனை, காப்புறுதி மதிப்பீடு மற்றும் வாகனம் பழுதுபார்த்தல்
பீப்பஸ்ஸ் லீசிங் ப்ரொப்பட்டி டெவலப்மன்ட் லிமிட்டட்	கலப்பு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஆதன அபவிவிருத்தி திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி	பொது காப்புறுதி வணிகத்தினை மேற்கொள்ளுதல்
பீப்பள்ஸ் கைரோ-கொமர்ஸ் லிமிட்டட்	குறை வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் நுண்கடன் முயற்சிகளுக்கு வங்கியியல் அல்லாத நிதியியல் சேவைகளை வழங்குதல்.
பீப்பள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட்	ஒரு அலுவலக வளாகத்தை நிர்மாணம் செய்து செயற்படுத்துதல்.
லங்கா எலாயன்ஸ் பைனான்ஸ் லிமிட்டட்	அசையும் மற்றும் அசையா ஆதனங்களில் குத்தகைகளை வழங்குதல் மற்றம் கடன் வழங்கல்

2. கணக்கீட்டின் அடிப்படை

2.1. இணக்கப்பாட்டு கூற்று

குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களும் வங்கியின் தனியான நிதிக் கூற்றுக்களும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS மற்றும் SLFRS) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்னிலைப்படுத்தலும் 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன. நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தலானது 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் தேவைப்பாடுகளுடனும் இணைந்துள்ளது.

2.2 நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு

ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தனியான நிதிக்கூற்றுக்கள், 1961 இன் 29 அம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்கள், மற்றம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS மற்றும் SLFRS) இன் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு பணிப்பாளர்கள் சபையானது பொறுப்பாளியாகும். இந்த SLFRS மற்றும் LKAS என்பன இ.ப.க. நிருவகத்தின் இணையத்தளத்தில் www.casrilanka.com இல் கிடைக்கின்றது.

இந்த நிதிக் கூற்றுக்கள் பின்வரும் கூறுகளை உள்ளடக்குகின்றன.

வருமானக் கூற்று மற்றும் இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று	வங்கி மற்றும் குழுமத்தின் மீளாய்வாண்டிற்கான நிதியியல் செயற்திறனில் தகவல்களை வழங்குகின்றது.
நிதி நிலைமைக் கூற்று	வருட இறுதியில் உள்ளவாறான வங்கியின் மற்றும் குழுமத்தின் நிதி நிலைமையிலான தகவல்களை வழங்குகின்றது
உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று	மீளாய்வாண்டின்போதான பங்குதாரர்களது உரித்துவத்திலான அனைத்து மாற்றங்களை குறிப்பிடுகின்றது.
காசுப் பாய்ச்சல்கள் கூற்று	காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளை உருவாக்கும் வங்கி மற்றும் குழுமத்தின் ஆற்றல் மற்றும் அக்காசுப் பாய்ச்சல்களின் பயன்பாட்டிலான தகவல்களை பயனாளருக்கு வழங்குகின்றது.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைள் மற்றும் ஏனைய விளக்கமான தகவல்களை உள்ளடக்குகின்றது.

2.3 நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரம்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தனியான நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் மார்ச் 25, 2024 இல் அங்கீகரிக்கப்பட்டது. .

3. அளவீட்டின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டு தொடர்ச்சியான பிரயோகிக்கப்பட்டுள்ளன. இவை நிதிக் கூற்றுக்களை பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்காக, நிதி நிலைமைக் கூற்றில் உள்ள பின்வரும் உறுப்படிகள் நீங்கலாக, எவ்விதமான செம்மையாக்கல்களையும் உள்ளடக்கவில்லை,

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

உறுப்படி	அளவீட்டின் அடிப்படை	குறிப்பு
மூலாதார நிதியியல் கருவிகள்	நியாயப் பெறுமதியில்	20
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் கருவிகள்	நியாயப் பெறுமதியில்	21
ஏ.வி.வ, ஊடாக நியாயப் பெறுமதியியல் அளவிவடப்பட்ட நிதியியல் கருவிகள்	நியாயப் பெறுமதியில்	25 & 26
காணியும் கட்டிடங்களும்	கையகப்படுத்தும்போது கிரயத்தில் அளவிடப்பட்டு பின்னர் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில், இவை மீள்மதிப்பீட்டுத் திகதியியலான நியாயப் பெறுமதியினாலாகும்	28
நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள்	காப்பீட்டுக் கணிப்பாக பெறுமதியிடப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதியாக அங்கீகரிக்கபப்ட்டு அதிலிருந்து திட்டத்தின் சொத்துக்களின் தேறிய மொத்த நியாயப் பெறுமதி கழிக்கப்படுகின்றது	35

3.1. செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தனியான நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது வங்கியின் செயற்பாட்டு நாணயமாகும். வேறுமாதிரியாக குறிப்பிட்டாலன்றி, இலங்கை ரூபாயில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதியியல் தகவல்கள் கிட்டிய ஆயிரம் ரூபாய்க்கு முழுதாக்கப்பட்டுள்ளன.

3.2. பொருண்மை மற்றும் திரள்வு

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - LKAS 01 - நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தலின் பிரகாரம், ஒரு ஒத்த உறுப்படியின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்திருக்காத தன்மையுடைய உறுப்படிகள் அல்லது செயற்பாடுகள், அவை பொருண்மையற்றதாக இருந்தாலொழிய, தனியாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

3.3. காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றானது, இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 7) "காசுப் பாய்ச்சல் கூற்று" இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல்களை தயாரிப்பதில், "நேரடியல்லா முறை" பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன. காசும் காசுக்குச் சமனானவைகள், குறுங்கால, தெரிந்துகொள்ளப்பட்ட காசுத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய மற்றும் பெறுமதியியலான மாற்றங்களில் பொருட்டில்லா இடருக்கு உட்பட்ட உயர் திரவத்தன்மையுள்ள முதலீடுகளை உள்ளடக்குகின்றது. காசும் காசுக்குச் சமனானவைகள் கையிலுள்ள காசு, வங்கிகளுடனான மீதிகள் மற்றும் குறுங்கால அறிவித்தலில் உள்ள அழைப்பு பணங்களையும் உள்ளடக்குகின்றது.

3.4. ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒரு சிறந்த முன்னிலைப்படுத்தலை வழங்குவதற்காக நடப்பு ஆண்டின் முன்னிலைபப்டுத்தலுடன் இணங்குவதற்கு அவசியமானபோது ஒப்பிடப்படும் தகவல்கள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

4. முக்கியமான கணக்கீட்டு நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயாகிக்கும் செயன்முறையில் முகாமைத்துவமானது நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளை தீர்மானிப்பதில் நியாயப்பாடுகள் மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை பயன்படுத்தியுள்ளது. இந்த மதிப்பீடுகளிலிருந்து மெய்யான விளைவுகள் வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதப்பீடுகளிலான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்பட்ட காலத்தில் மற்றும் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்கால காலங்களுக்கு அங்கீகரிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தனியான நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவுகளைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிப்பதில் மேற்கொள்ளப்பட்ட நியாயப்பாடுகள், அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

4.1. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

பணிப்பாளர்கள் நிறுவனச் செயல்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் ஒரு மதிப்பீட்டினை மேற்கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் வணிகத்தினை தொடர்வதற்கான வளங்களைக் கொண்டுள்ளதையிட்டு திருப்தியடைகின்றார்கள். மேலும், ஒரு நிறுவனத் செயல்நிலையினை தொடர்வதற்கான வங்கியின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தினை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் பொருண்மையான நிச்சயமற்றதன்மைகள் குறித்து முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்படுகின்றன.

4.2. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள்

நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் பெறுமதியானது காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடல் நுட்பத்தினைக் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது கழிவிறக்க வீதங்கள், சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் விளைவுகள், எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதங்கள், மற்றும் இறப்பு வீதங்கள் என்பவற்றில் அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றது. அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. இந்தத் திட்டங்களின் நீண்டகாலத் தன்மையின் காரணத்தினால், அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மைகளுக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட அனுமானங்களுக்கு குறிப்புகள் 35.1.5 மற்றும் 35.2.5 இனை பார்க்கவும்.

4.3. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதி

குழுமத்தின் இறையிலி காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டிடங்கள் மீள்மதிப்பீடு திகதியில் நியாயப் பெறுமதியிலிருந்து ஏதேனும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றம் வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு பிரதிபலிக்கின்றன. அத்தகைய ஆதனங்களின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்காக குழுமமானது சுயாதீன மதிப்பீட்டு நிபுணர்களை ஈடுபடுத்தியது. ஒத்துவகையான சொத்துக்களுக்கான நடைமுறை சந்தை விலைகள் கிடைக்கப்பெறும்போது, இந்த சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை மதிப்பிடுவதில் அத்தகைய சான்றுகள் கருத்திலெடுக்கப்படுகின்றன.

4.4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம்

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எச்சப் பெறுமதிகள், பயன்பாட்டுக் ஆயுட்காலங்கள், பெறுமானத்தேய்வு முறைகளை என்பவற்றை மீளாய்வு செய்கின்றது. இந்த பெறுமதிகள், வீதங்கள், முறைகளின் மதப்பீட்டில் முகாமத்துவத்தின் நியாயப்பாடானது பயன்படுத்தப்படுவதுடன், எனவே இது நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டதாகும்.

குழுமமானது வரிக்கு உட்பட்டதுடன், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் சமயத்தில், பொருத்தமான வரிச் சட்டங்களின் பொருள்விளம் தொடர்பாக நிச்சயமற்றதன்மைகள் நிலவுவதன் காரணமாக, நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாடுகளை தீர்மானிப்பதற்கு நியாயப்பாடு தேவைப்படுகின்றது. .

4.5. கடப்பாடுகளும் ஐயப்பாடான நிகழ்வுகளும்

அனைத்து தெரிந்துகொண்டுள்ள பொறுப்புக்களின் தொகைகளை தீர்மானிப்பதற்காக அனைத்து புரிந்துகொள்ளத்தக்க இடர்களும் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன. ஐயப்பாடான பொறுப்புக்கள் சாத்தியமான கடப்பாடுகள் என்பதுடன், இவற்றின் உளதாம் தன்மையானது, பொருளாதார நலனின் மாற்றலானது சாத்தியமற்றது அல்லது நம்பகமாக அளவிட இயலாதபோது, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்கால கடப்பாடுகளினால் மாத்திரமே உறுதிப்படுத்தப்படலாம். நிதி நிலைமைக் கூற்றில் ஐயப்பாடான பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை ஆனால் அவை நிகழும் சாத்தியம் மிகவும் அரிதாயிருந்தாலொழிய, வெளிப்படுத்தப்படும். கடப்பாடுகள் மற்றும் ஐயப்பாடான நிகழ்வுகளின் விபரங்கள் குறிப்பு 41 இல் வழங்கப்பட்டுள்ளன.

4.6. முதலீட்டு ஆதனங்களின் வகைப்படுத்தல்

ஒரு ஆதனம் ஒரு முதலீட்டு ஆதனமாக தகுதிபெறுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் அதன நியாயப்பாட்டினை பயன்படுத்தவேண்டியுள்ளது. குழுமமானது அதன் நியாயப்பாட்டினை தொடர்ச்சியாக பயன்படுத்தியுள்ளதுடன், இது வாடகையினை உழைப்பதற்காக, அல்லது மூலதன பெறுமதியுயர்விற்காக அல்லது இரண்டிற்கும் மற்றும் குழுமத்தினால் வைத்திருக்கப்படும் ஏனைய சொத்துக்களிலிருந்து பெரும்பாலும் சுயாதீனமாக காசுப் பாய்ச்சல்களை உருவாக்குவதற்காக வைத்திருக்கும் ஒரு சொத்தினை அங்கீகரிப்பதற்கு அதன் நியாயப்பாட்டினை தொடர்ச்சியாக

பயன்படுத்தியுள்ளதுடன், இவை முதலீட்டு ஆதனங்களாக கணக்கீடு செய்யப்படுகின்றன. மறுபுறத்தில், செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும், அல்லது சேவைகளை வழங்கும் செயன்முறையில் பயன்படுத்தப்படும் அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் ஒரு சொத்தானது, ஒரு தனியான சொத்தாக நேரடியான காசுப் பாய்ச்சல்களை உருவாக்காவிட்டால், அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்படுகின்றன. அத்தகைய சொத்துக்களின் நடைமுறை பயன்பாட்டினை கருத்திற்கொண்டு குழுமமானது அதன் சொத்துக்களது கணக்கீட்டு வகைப்படுத்தலை ஒரு வருடாந்த அடிப்படையில் மதிப்பீடு செய்கின்றது.

4.7. முக்கியமான கணக்கீட்டு அனுமானங்களும் மதிப்பீடுகளும்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மேற்கொள்ளப்படும் அனுமானங்கள அத்திகதியில் உள்ளவாறான சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையிலாகும். மதிப்பீடுகள் நம்பகமாக அளவிடப்படுவதனை உறுதிசெய்வதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வங்கி கொண்டிருந்தாலும், உண்மையாக தொகைகள் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம். மதிப்பீடுகளும் உள்ளாந்த அனுமானங்களும் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடுகள் திருத்தப்படும் காலத்தில் மற்றம் ஏதேனும் பாதிக்கப்படும் எதிர்கால காலங்களுக்கு அங்கீகரிக்கப்படுகின்றன.

நியாயப்பார்டு, மதிப்பீடுகள், மற்றும் அனுமானங்களுக்கு மிகவும் உணர்திறனுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) நியாயப் பெறுமதி அளவீடு

நிதியியல் அறிக்கையிடப்படும் திகதியில் நிதியியல் கருவிகளின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியானது நியாயப் பெறுமதிகளில் கொண்டு செல்லப்படுகின்றன.

நியாயப் பெறுமதி என்பது, அளவீட்டுத் திகதியில், சந்தை பங்குபற்றுநர்களிடையே ஒரு முறையான கொடுக்கல் வாங்கலில், ஒரு சொத்தினை விற்கும்போது பெறப்படும் விலை அல்லது ஒரு பொறுப்பினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்படும் விலையாகும்.

ஒரு நிதியியல் சொத்து அல்லது பொறுப்பின் வகைப்படுத்தலானது அது நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதனை விளைவித்தால், எங்கெங்கு சாத்தியமோ, வங்கி உடனடியான அணுக்கத்தினைக் கொண்ட மிகவும் நன்மைபயக்கும் செயலாக்கமான சந்தையில் விலைகூறப்பட்ட கொடைமுனை அல்லது வழங்கல் விலையினை குறிப்பிட்டு நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது. பொருத்தமானவாறு கடன் இடருக்கான ஒரு செம்மையாக்கலும் நியாயப் பெறுமதியினுள் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

ஒரு தேறிய திறந்த நிலைக்கான நியாயப் பெறுமதியானது ஒரு செயலாக்கமான சந்தையில் விலை கூறப்பட்ட ஒரு நிதியியில் பொறுப்பாக இருப்பின், அதன் நடைமுறை கொடைமுனை விலையாகும், மற்றும் ஒரு நிதியியல் சொத்துக்கு வழங்கல் விலையாகும், இது வைத்திருக்கப்படும் அல்லது வழங்கப்பட்ட கருவியினது அலகுகளின் எண்ணிக்கையினை பெருக்குவதனாலாகும்.

ஒரு குறிப்பிட்ட சொத்திற்கு அல்லது பொறுப்பிற்கு செயலாக்கமான சந்தை காணப்படாவிட்டால், வங்கியானது நியாயப் பெறுமதியில் வருவதற்கு ஒரு பெறுமதியிடல் நுட்பத்தினைப் பயன்படுத்துகின்றது. இது சமீபத்தை முழங்கையளவு தூரத்திலான கொடுக்கல் வாங்கலில் பெறப்பட்ட கொடுக்கல் வாங்கல் விலையின் பயன்பாடு, கழிவிறக்கம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் பகுப்பாய்வு, தெரிவுரிமை விலையிடல் மாதிரிகள் மற்றும் ஏனைய பெறுமதியிடல் நுட்பங்களை உள்ளடக்குவதுடன், இவை அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான சந்தை நிலைமைகள் மற்றும் இடர்களின் அடிப்படையிலாகும். அவ்வாறு செய்வதில், நியாயப் பெறுமதியானது, அவதானிக்கத்தக்க சந்தை உள்ளீடுகளின் ஆகக்கூடிய பயன்பாடு மற்றும் நிறுவனச் சார்பான உள்ளீடுகளில் சிறுமமான நம்பிக்கையினை வைக்கும் ஒரு பெறுமதியிடல் நுட்பம் பயன்படுத்தப்பட்டு மதிப்பிடப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகாரத்தின்போதான ஒரு நிதியியல் கருவியின் நியாயப் பெறுமதிக்கான சிறந்த சான்றானது கொடுக்கல் வாங்கல் விலையாகும் (அதாவது, வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட மறுபயனின் நியாயப் பெறுமதியாகும்), அதே கருவியில் (ஏதேனும் திருத்தங்கள் அல்லது மீள்பொதியிடல் இன்றி) ஏனைய அவதானிக்கத்தக்க நடப்பு சந்தை கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்பிடலின் மூலம் அக்கருவியின் நியாயப் பெறுமதி சான்றாக இருந்தாலொழிய, அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்து தரவுகளை உள்ளடக்கும் மாறிலிகளைக் கொண்ட ஒரு பெறுமதியிடல் நுட்பத்தின் அடிப்படையில் ஆகும். அத்தகைய சான்று காணப்படும்போது, வங்கியானது கொடுக்கல் வாங்கல் விலைக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசத்தினை ஆரம்ப அங்கீகாரத்தின்போது (அதாவது முதல் நாளில்) இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கின்றது.

(ii) கடன்கள் மற்றும் முற்பணங்களில் வலுக்குன்றல் கட்டணங்கள்

கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான ஒரு வலுக்குன்றல் நட்டத்தினை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் நேரத்தின் மதிப்பீட்டில் முகாமைத்துவத்தினால் நியாயப்பாடு தேவைப்படுகின்றது. இந்த காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதில், வங்கியானது பிரதானமான கடன்பெறுநரின் நிதியியல் நிலைமை மற்றும் பிணைச்சொத்தின் தேறிய எய்தப்பெறத்தக்க பெறுமதியில் நியாயப்பாடுகளை மேற்கொள்கின்றது. இந்த மதிப்பீடுகள், பல்வேறு எண்ணிக்கையிலான காரணிகளின் அடிப்படையில் பற்றிய அனுமானங்களின் அடிப்படையில் இருப்பதுடன், உண்மையான விளைவுகள் வேறுபடலாம், இது வலுக்குன்றல் படிகளில் எதிர்கால மாற்றங்களை விளைவிக்கலாம்.

வலுக்குன்றலின் ஒரு கூட்டு மதிப்பீடானது கடன் தேக்கம் (கடன் தரம் / நிலுவைகளின் மட்டங்கள், கடன் பயன்பாடு போன்றவை) மற்றம் இடர் செறிவாக்கம் மற்றம் பொருளாதார தரவுகள் (வேலைவாய்ப்பின்மை மட்டம், பணவீக்கம், மொ.உ.உ. வளர்ச்சி வீதம் உள்ளடங்கலான) என்பவற்றை கணக்கிலெடுக்கின்றது.

5. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தனியான நிதிக் கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலங்களுக்கும் குறிப்புகள் 5.1 முதல் 5.23 வரை குறிப்பிடப்பட்ட கணக்கீட்:டு கொள்கைகளை தொடர்ச்சியாக பிரயோகித்துள்ளது.

5.1. ஒருங்கிணைப்பிற்கான அடிப்படை

வங்கி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள், 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன. ஒருங்கிணைப்பின் தேவைக்காக வங்கியின் துணைநிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் மக்கள் வங்கியின் அறிக்கையிடப்படும் அதே ஆண்டிற்கு, தொடர்ச்சியான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

5.1.1. வணிகப் பிணைப்புக்கள்

கையகப்படுத்தல் திகதியில் உள்ளவாறான கையகப்படுத்தல் முறையினை பயன்படுத்தி வணிகப் பிணைப்புகள் கணக்கீடு செய்யப்படுகின்றன - அதாவது, குழுமத்திற்கு கட்டுப்பாடானது மாற்றல் செய்யப்படும்போது. கையகப்படுத்தலில் மாற்றல் செய்யப்படும் மறுபயனானது, பொதுவாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுவதுடன், அதேபோன்று கையகப்படுத்தப்பட்ட இனங்காணப்பட்ட தேறிய சொத்துக்களும் ஆகும். ஒரு மலிவான கொள்வனவிலான ஏதேனும் இலாபமானது உடனடியாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல் கிரயமானது ஆட்படும்போது செலவு வைக்கப்படுவதுடன், இதற்கு விதிவிலக்காக அவை கடன் அல்லது உரித்துவப் பிணையங்கள் தொடர்பானவையாயிருப்பின்.

மாற்றல் செய்யப்பட்ட மறுபயனானது முன்னர் நிலவிய உறவுகளின் தீர்ப்பனவு தொடர்பான தொகைகளை உள்ளடக்குவதில்லை. அத்தகைய தொகைகள் பொதுவாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

செலுத்தப்படவேண்டிய ஏதேனும் ஐயப்பாட்டு மறுபயனானது கையகப்படுத்தல் திகதியில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. ஐயப்பாடான மறுபயனானது உரித்துவமாக வகைப்படுத்தப்பட்டிருப்பின், அது மீள்அளவீடு செய்யப்படாது தீர்ப்பனவானது உரித்துவத்தில் கணக்கீடு செய்யப்படுகின்றது. இல்லாவிடின், ஐயப்பாடான மறுபயனின் நியாயப் பெறுமதியிலான பின்னராக மாற்றங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

5.1.2. கட்டுப்பாடற்ற நலன்கள் (“NCI”)

க.நு. கையகப்படுத்தல் திகதியில் இனங்காணப்பட்ட தேறிய சொத்துக்களின் கையகப்படுத்துபவரின் விகிதாசார பங்கில் அளவிடப்படுகின்றது. துணை நிறவனத்திலான அக்கறையில் குழுமத்தின் மாற்றங்கள் கட்டுப்பாட்டில் இழப்பினை ஏற்படுத்தாதுடன் அவை உரித்துவ கொடுக்கல் வாங்கல்களாக கணக்கீடு செய்யப்படுகின்றன.

5.1.3. துணை நிறுவனங்கள்

‘துணை நிறுவனங்கள்’என்பன குழுமத்தினால் கட்டுப்படுத்தப்படும் முதலீடு செய்யப்பட்ட கம்பனிகளாகும். குழுமமானது ஒரு முதலீடு செய்த கம்பனிக்கு வெளிப்பாட்டினைக் கொண்டிருப்பின், அல்லது அகக்கம்பனியுடனான ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையும் விளைவுகளுக்கான உரிமத்தினைக் கொண்டிருப்பின் மற்றும் அக்கம்பனிகள் மீதான அதன் அதிகாரத்தினூடான அந்த விளைவுகளைப் பாதிக்கக்கூடிய ஆற்றலினைக் கொண்டிருப்பின் ஒரு முதலீடு செய்த நிறுவனத்தினைக் கட்டுப்படுத்துகின்றது. கட்டுப்பாடு ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குவதுடன், இது கட்டுப்பாடு முடிவுறும் வரைக்கும் ஆகும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

5.1.4. கட்டுப்பாட்டின இழப்பு

குழுமானது ஒரு துணைநிறுவனத்தில் கட்டுப்பாட்டினை இழக்கும்போது, அது துணை நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் உரித்துவத்தின் ஏனைய கூறுகளில் மற்றும் ஏதேனும் தொடர்புடைய க.ந. இனை அது அங்கீகார நீக்கம் செய்கின்றது. விளைகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. முன்னைய துணைநிறுவனத்தில் நிறுத்திவைத்துள்ள ஏதேனும் அக்கறையானது கட்டுப்பாட்டினை இழக்கும்போது நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

5.1.5. ஒருங்கிணைப்பில் அகற்றப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

குழுத்திற்கிடையேயான மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் குழுமத்திற்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து ஏதேனும் எய்தப் பெற்றிராத வருமானம் மற்றும் செலவினங்கள் (வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் இலாபங்கள் அல்லது நட்டங்கள் தவிர்த்தவை) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அகற்றப்படுகின்றன. எய்தப்பெற்றிராத இலாபங்கள் போன்றே எய்தப்பெற்றிராத நட்டங்களும் அதே விதத்தில் அகற்றப்படுகின்றன, ஆனால் வலுக்குன்றலுக்கான எவ்விதமான சான்றும் காணப்படாத அளவிற்கு மாத்திரமாகும்.

5.2. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் திகதியில் உள்ளவாறான ஸ்பொட் வீதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணரீதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் திகதியில் உள்ள ஸ்பொட் பரிமாற்றல் வீதத்தில் மீள் பரிவர்த்தனை செய்யப்படுகின்றது.

ஒரு வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்றுக் கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள பணரீதியல்லாத உறுப்படிகள் அங்கீகாரத் திகதியிலள்ள ஸ்பொட் பரிமாற்றல் வீதத்தினைப் பயன்படுத்தி பரிவர்த்தனை செய்யப்படுகின்றது. ஒரு வெளிநாட்டு நாணயத்தில் நியாயப் பெறுமதியியல் அளவிடப்பட்ட பணரீதியல்லாத உறுப்படிகள், நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியில் உள்ள ஸ்பொட் பரிமாற்றல் வீதங்களில் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

5.3. நிதியியல் கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம்

5.3.1. அங்கீகாரத்தின் திகதி

ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பானது கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளில் வங்கி ஒரு தரத்தவராக வருகின்றபோது நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது, இது பொதுவாக வர்த்தகத் திகதியாகும். கடன்கள் மற்றும் முற்பணங்கள் கடன் பெறுநர்களுக்கு காசு முற்பணமாக கொடுக்கப்படும்போது (அல்லது தீர்ப்பனவு செய்யப்படும்போது) அங்கீகரிக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியியல் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களும் சேர்த்து அங்கீகரிக்கப்படுகின்றன.

வழமையல்லான நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொள்வனவுகள் வர்த்தக திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன, அதாவது கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு வங்கி ஒரு தரத்தவராக வரும் திகதியிலாகும்.

ஒரு வழமையான கொள்வனவு என்பது ஒரு ஒப்பந்தத்தின் கீழான ஒரு நிதிச் சொத்தின் கொள்வனவானது அவ்வொப்பந்தம் சந்தையில் ஒரு ஒழுங்குவிதி அல்லது மரபுரீதியாக பொதுவாக நிறுவப்பட்ட நேரத்தினுள் விநியோகம் செய்யவேண்டிய தேவையினைக்கொண்டதாகும்.

5.3.2. ஊழியர் கடன்களுக்கான "ஒரு நாள்" வித்தியாசம்

அனைத்து ஊழியர் கடன்களும் சந்தை வட்டி வீதங்களுக்கும் பார்க்க குறைவான வீதத்தில் வழங்கப்பட்டு அவை நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. நியாயப் பெறுமதிக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகைக்கும் இடையேயான வித்தியாசமானது ஒரு நாள் வித்தியாசமாக கவனிக்கப்பட்டு, விளைவுறு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கடன் காலத்தின்மீது வருமானக் கூற்றில் ஊழியர் செலவினமாக பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. இத்தொகையானது வட்டி வருமானமாகவும் காண்பிக்கப்படுகின்றது. எனவே வருமானக் கூற்றிலான தேறிய விளைவு பூச்சியமாகும்.

5.4. நிதியியல் கருவிகள் ஆரம்ப அளவீடு

ஆரம்ப அங்கீகாரத்தின்போது நிதியியல் கருவிகளின் வகைப்படுத்தலானது அவற்றின் ஒப்பந்த நியதிகளிலும், கீழே குறிப்பு 5.4.1 மற்றும் 5.4.2 இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, கருவிகளை முகாமைப்படுத்துவதற்கான வணிக மாதிரியிலும் தங்கியுள்ளது. (FVPL) இல் பதிவுசெய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் தவிர்ந்த, நிதியியல் கருவிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன் இத் தொகையுடன் கொடுக்கல் வாங்கல் கிரயமானது சேர்க்கப்படுகின்றது அல்லது அதிலிருந்து கழிக்கப்படுகின்றது.

5.4.1. வணிகமாதிரி மதிப்பீடு

குழுமத்தின் வணிக மாதிரியானது, ஒரு குறிப்பிட்ட வணிகக் குறிக்கோளினை அடைவதற்காக எவ்வாறு நிதிச் சொத்துக்கள் தொகுதியானது கூட்டாக முகாமைப்படுத்ததுகின்றது என்பதை பிரதிபலிக்கும் மட்டத்தில் தீர்மானிக்கப்படுகின்றது. குழுமத்தின் வணிக மாதிரியானது ஒரு தனிப்பட்ட கருவிக்கான முகாமைத்துவத்தின் நோக்கத்தில் தங்கியிருப்பதில்லை. இதன் பிரகாரம், குழுமத்தின் வணிக மாதிரியானது வகைப்படுத்தலுக்கு ஒரு கருவி முதல் கருவிவாரியான அணுகுமுறையல்ல, ஆனால் ஒரு உயர்ந்த மட்டத்திலான திரட்டப்பட்ட தேக்கம் மற்றும் பின்வரும் அவதானிக்கக்கூடிய காரணிகளின் அடிப்படையிலாகும்:

- ஒரு வணிக மாதிரி மற்றும் அந்த வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் எவ்வாறு செயலாற்றியுள்ளன என மதிப்பிடப்பட்டு குழுமத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அறிக்கையிடப்படுகின்றது;
- வணிக மாதிரியின் மற்றும் மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்தின் செயலாற்றலைப் பாதிக்கும் இடரானது, குறிப்பாக, எவ்வாறு அந்த இடர்கள் முகாமைப்படுத்துகின்றது என்பதிலாகும்;
- வணிகங்களின் முகாமையாளர்கள் எவ்வாறு ஊதியமளிக்கப்படுகின்றார்கள், ஊதியமானது முகாமைப்படுத்தப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் அடிப்படையிலா அல்லது திரட்டிய ஒப்பந்தக் காசுப் பாச்சல்களின் அடிப்படையிலா.

வணிக மாதிரி மதிப்பீடானது நியாயமாக எதிர்பார்க்கப்படும் காட்சிநிலையின் அடிப்படையிலாகும், இது மோசமான நிலை அல்லது அழுத்தமான நிலை காட்சிநிலைகளை கணக்கிலெடுக்கவில்லை. குழுமத்தின் ஆரம்ப எதிர்பார்ப்பிலிருந்து வித்தியாசமான விதத்தில் காசுப் பாய்ச்சல்கள் எய்தப்பெற்றிருப்பின், அது முன்னைய காலத்திற்கான ஒரு தவறாகவோ அல்லது அந்த வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் எஞ்சிய நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலில் மாற்றத்தையோ ஏற்படுத்தாது. எவ்வாறாயினும், குழுவானது புதிதாக உருவாக்கப்பட்ட அல்லது புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களுக்காக வணிக மாதிரியினை மதிப்பிடும்போது, அது கடந்த காலத்தில் எவ்வாறு காசுப் பாய்ச்சல்கள் எய்தப்பெற்றன பற்றிய தகவல்களை, ஏனைய அனைத்து பொருத்தமான தகவல்களுடன் கருத்திலெடுக்கின்றது.

5.4.2. ஒப்பந்தக் காசப் பாய்ச்சல் மதிப்பீடு - முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவு மாத்திரம் [SPPI Test]

குழுமமானது அடிப்படை கடன் வழங்கல் ஏற்பாடுகளின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை அவை SPPI பரிசோதனையினை சந்திக்கின்றதா என்று இனங்காண்பதற்காக மதிப்பீடு செய்கின்றது. அதாவது அவை நிலுவையிலுள்ள முதல் தொகையில், முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மாத்திரமா என்பதற்காகும்.

இந்த நோக்கத்திற்காக "முதல்" என்பது ஆரம்ப அங்கீகாரத்தின்போது உள்ள நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதியாக வரையறை செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அந்த முதல் தொகையானது நிதிச் சொத்தின் ஆயுட்காலத்தின் மீது மாற்றமடையலாம்.

இந்த நோக்கத்திற்காக " வட்டி " என்பது பணத்தின் காலப் பெறுமதிக்காக, ஒரு குறிப்பிட்ட காலத்தின்போது நிலுவையிலுள்ள முதல் தொகையுடன் இணைந்த கடன் இடருக்கான, மற்றும் ஏனைய அடிப்படை கடன் வழங்கல் இடர்கள மற்றும் கிரயங்கள் ஆகியவற்றின் மறுபயனையும் இலாப விடுமிகையினையும் உள்ளடக்குகின்றது. குழுமமானது, நியாயப்பாட்டினை பிரயோகித்து, நிதிச் சொத்து குறிப்பிடப்பட்டுள்ள நாணயம் மற்றும் வட்டி வீதம் குறிப்பிடப்பட்டுள்ள காலம் போன்ற பொருத்தமான காரணிகளையும் கருத்திலெடுக்கின்றது.

5.5. நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அளவீட்டு வகைகள்

அனைத்து நிதிச் சொத்துக்களும், உரித்துவ கருவிகள் மற்றும் மூலாதாரங்கள் நீங்கலாக, சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்கான நிறுவனத்தின் வணிக மாதிரி மற்றும் பின்வருவனவற்றில் ஒன்றில் அளவிடப்படும் கருவியின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளின் ஒரு இணைப்பின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

- பெறுமதி குறைப்புக் கிரயத்தில் [குறிப்பு 5.5.1]
- ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் [குறிப்பு 5.5.2]
- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் [குறிப்பு 5.5.3]

5.5.1. பெறுமதிக் குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படும் நிதிக் கருவிகள்

கடன் கருவிகள்

பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்போது பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படும் கடன் கருவிகளிலான முதலீடுகள்:

- ஒப்பந்த நியதிகள், நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும், குறிப்பிட்ட திகதிகளில் காசுப்பாய்ச்சல்களுக்கு வழிசமைப்பவை; மற்றும்
- ஒரு வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படுபவை, இதன் குறிக்கோள் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக வைத்திருந்து அடைவதாகும்.

இந்தக் கடன் கருவிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அத்துடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களையும் சேர்த்து அங்கீகரிக்கப்படுவதுடன் பின்னர் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. கடன் வலுக்குன்றலின் அளவீடானது, குறிப்பு 5.6 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றலில் விபரிக்கப்பட்டுள்ள மூன்று கட்ட எதிர்பார்த்த கடன் நட்ட மாதிரியின் அடிப்படையிலாகும்.

வங்கிகளுக்கு கடன்களும் முற்பணங்களும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கடன்களும் முற்பணங்களும்

குழுமமானது, வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் உள்ள குத்தகைகள் மற்றும் வாடகைக் கொள்வனவு ஒப்பந்தங்கள் உள்ளடங்கலான வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களை பெறுமதி குறைப்புக் கிரயத்தில், அவை பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும சந்தித்திருந்தால்:

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்காக நிதிச் சொத்துக்களை வைத்திருக்கும் குறிக்கோளுடன் ஒரு வணிக மாதிரியினுள் நிதிச் சொத்து வைத்திருக்கப்படுமாயின்,
- நிதிச் சொத்தின் ஒப்பந்த நியதிகள் குறிப்பிட்ட திகதிகளில், நிலுவையிலுள்ள முதல் தொகையில் முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மாத்திரமான காசுப்பாய்ச்சல்களுக்கு வழிவகுக்கும்.

5.5.2. ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள்

கடன் கருவிகள்

பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்போது ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் கடன் கருவிகளிலான முதலீடுகள்:

- ஒப்பந்த நியதிகள், நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும், குறிப்பிட்ட திகதிகளில் காசுப்பாய்ச்சல்களுக்கு வழிவகுப்பவை; மற்றும்
- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரித்தல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகிய இரண்டையும் அடையும் குறிக்கோளையுடைய வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படுபவை.

இந்த கடன் கருவிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் நேரடியாக உடைமையாக்கத்தக் கொடுக்கல் வாங்கல் கிரயத்துடன் அங்கீகரிக்கப்படுவதுடன், பின்னர் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. நியாயப் பெறுமதியிலான மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டு ஒரு தனியான உரித்துவக் கூறினுள் உள்ளடக்கப்படுகின்றது. வலுக்குன்றல் நட்டங்கள் அல்லது திருப்பல்கள், வட்டி வருமானம் மற்றும் அந்நிய செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் மற்றும் நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. விற்பனையின்போது, ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் உரித்துவத்திலிருந்து வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றது.

கடன் வலுக்குன்றலின் அளவீடானது மூன்று கட்ட எதிர்பார்க்கப்படும் கடன் நட்ட மாதிரியின் அடிப்படையில் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்களுக்கு பிரயோகிப்பதனைப் போன்றதாகும். எதிர்பார்க்கப்படும் கடன் நட்ட மாதிரியானது கீழே குறிப்பு 5.6 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றலில் விபரிக்கப்பட்டுள்ளது.

உரித்துவக் கருவிகள்

வர்த்தகதிற்காக வைத்திருக்கப்படாத அல்லது ஒரு வணிகப் பிணைப்பில், SLFRS 3 வணிகப் பிணைப்புகளின் பிரயோகம், வங்கியினால் ஐயப்பாடான மறுபயனாக அங்கீகரிக்கப்படாத உரித்துவக் கருவிகளிலான முதலீடானது ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. இங்கு முகாமைத்துவத்தினால் மாற்றவியலாத தெரிவானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு மாற்றவியலாத தெரிவான ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியின் கடைப்பிடிப்பினை முகாமைத்துவம் கருதாத தேக்கங்களுக்கு, இயல்பாக அத்தகைய முதலீடுகள் இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்.

ஏனைய விரிவான வருமானத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட தொகைகள் பின்னர் இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றல் செய்யப்படவில்லை. அத்தகைய முதலீடுகளிலான பங்கிலாபம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

5.5.3. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதிச் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலுள்ள உறுப்படிகள், பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

(a) வர்த்தகத்திற்கு வைத்திருக்கப்படும் உறுப்படிகள்;

(b) ஆரம்ப அங்கீகாரத்தில் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியாக குறிப்பாக பெயரிடப்பட்டு உறுப்படிகள்; மற்றும்

(c) முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யாத ஒப்பந்த நியதிகளுடனான கடன் கருவிகள்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் வைத்திருக்கப்படும் நிதியியல் கருவிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியியல் அங்கீகரிக்கப்படுவதுடன், கொடுக்கல் வாங்கல் கிரயமானது அது ஆட்பட்டவாறு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. அதன் பின்னர், அவை நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழும்போது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஒரு நிதிச் சொத்தானது நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்போது, ஒரு கடன் மதிப்பீட்டு செம்மையாக்கலானது எதிர்தரத்தவரின் கடன் தகுதியினை பிரதிபலிப்பதற்காக உள்ளடக்கப்படுவதுடன், இது கடன் இடரிலான மாற்றங்களுக்கு உடைமையாக்கத்தக்க நியாயப் பெறுமதயிலான அசைவினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

(ய) வர்த்தகத்திற்காக வைத்திருக்கும் நிதியியல் கருவிகள்

ஒரு நிதியியல் கருவியானது பிரதானமாக விற்பனை செய்யும் அல்லது நெருங்கிய காலத்தில் மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்டிருப்பின் அல்லது ஆட்பட்டிருப்பின், அல்லது குறுங்காலத்தில் இலாபமீட்டக்கூடிய சான்று காணப்படும் கூட்டாக முகாமைப்படுத்தப்படும் நிதியியல் கருவிகளின் ஒரு தேக்கத்தின் பாகமாய் இருப்பின், அல்லது ஒரு தகைமையுடைய இழப்புக் காப்பரண் உறவில் இல்லாத ஒரு மூலாதாரமாயிருப்பின் அது வர்த்தகத்திற்கு வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்படுகின்றது.

வர்த்தகம் செய்யப்படும் மூலாதாரங்களும் வர்த்தகம் செய்யப்படும் பிணையங்களும் வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்டு நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

(டி) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதாக பெயரிடப்பட்ட நிதியியல் கருவிகள்

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் கருவிகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுபவையாக பெயரிடப்படலாம். ஒரு நிதிச் சொத்தானது, பின்வருவன நிகழ்ந்தால் மாத்திரமே இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் பெயரிடப்படலாம். இல்லாவிடின், அவ்வாறு செய்தல் நிதிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை வேறு அடிப்படையில் அளவிடுவதிலிருந்து எழக்கூடியது, அளவீட்டினை அகற்றினால் அல்லது கணிசமாக குறைத்தால், அல்லது அங்கீகார முரண்பாடுகள் (அதாவது, ஒரு கணக்கீட்டு பொருத்தமின்மையினை அகற்றினால்) காணப்பட்டால் ஆகும்.

ஒரு நிதிப் பொறுப்பானது, ஒரு கணக்கீட்டு பொருத்தமின்மையினை அகற்றினால் அல்லது கணிசமாக குறைத்தால், அது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் பெயரிடப்படலாம் அல்லது:

- ஒரு ஆதார ஒப்பந்தமானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொதிந்துள்ள மூலாதாரங்களை உள்ளடக்கியிருந்தால்: அல்லது
- ஆவணப்படுத்தப்பட்ட இடர் முகாமைத்துவ அல்லது முதலீட்டு மூலோபாயத்தின் பிரகாரம் நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் முகாமைப்படுத்தப்பட்டு அவற்றின் செயற்திறனானது ஒரு நியாயப் பெறுமதி அடிப்டையில் மதிப்பிடப்பட்டிருப்பின்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

ஒரு நிதிப் பொறுப்பானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் பெயரிடப்பட்டுள்ளபோது, வங்கியின் சொந்த கடன் தரத்திலான மாற்றங்களுக்கு உடைமையாக்கத்தக்க நியாயப் பெறுமதியிலான அசைவானது, அவதானிக்கக்கூடிய சந்தை வட்டி வீதங்களிலும் பார்க்க மேலான கடன் பரப்பலில் மாற்றங்களை தீர்மானிப்பதன் மூலம் கணிப்பிடப்படுவதுடன், ஏனைய விரிவான வருமானத்தில் வேறாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

5.5.4. மூலாதார நிதியியல் கருவிகள் மற்றும் இழப்புக்காப்பரண் கணக்கீடு

மூலாதார நிதியியல் கருவிகள் என்பன, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளார்ந்த விலையில், சுட்டியில் அல்லது ஏனைய மாறிலியிலிருந்து பெறப்படும் பெறுமதியினைக் கொண்ட ஒப்பந்தங்களாகும். இவை பொதுவாக, பரிமாற்றங்கள், முன்னோக்கு வீத ஒப்பந்தங்கள், எதிர்வுகள் மற்றும் தெரிவுரிமைகளை உள்ளடக்கும்.

அனைத்து மூலாதாரங்களும் நிதி நிலைமைக் கூற்றில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தகமாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை ஒரு வினைத்திறனான இழப்புக் காப்பரண் உறவின் ஒரு பகுதியாக மற்றும் ஒரு இழப்புக் காப்பரண் மூலாதாரமாக வகைப்பட்டிருப்பாக பெயரிடப்பட்டிருந்தால் விலக்களிக்கப்படுகின்றது. ஒரு மூலாதாரத்தின் கொண்டு செல்லல் பெறுமதியானது ஒப்பந்தத்தின் வாழ்நாள் பூராவும் நியாயப் பெறுமதியில் மீள் அளவிடப்படுகின்றது. நியாயப் பெறுமதி நேர்மறையாக உள்ளபோது மூலாதாரங்கள் ஒரு சொத்தாகவும் எதிர்மறையாக உள்ளபோது ஒரு பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படுகின்றன.

5.5.5. நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீள்வகைப்படுத்தல்

SLFRS 9 இன் கடைப்பிடிப்புடன், வங்கியானது ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், அதன் நிதிச் சொத்துக்களை பின்வருவன நிகழ்ந்தால் மாத்திரம் மீள் வகைப்படுத்துகின்றது. அத்தகைய நிதிச் சொத்தின் முகாமைப்படுத்தலுக்கான வணிக மாதிரியானது மாற்றமடைந்திருந்தால். அத்தகைய மீள் வகைப்படுத்தலானது மீள்வகைப்படுத்தல் திகதியிலிருந்து வருங்காலத்தில் பிரயோகிக்கப்படுகின்றது. நிதிப் பொறுப்புக்கள் ஒருபோதும் மீள் வகைப்படுத்தப்படுவதில்லை.

5.6. நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்

வங்கி / குழுமமானது, எதிர்பார்க்கும் கடன் நட்டங்களை (ECL) அளவிடுவதற்கு ஒரு மூன்று கட்ட அணுகுமுறையினை, இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் வகையான நிதிச் சொத்துக்களுக்குப் பிரயோகிக்கின்றது:

- பெறுமதி குறைப்புக் கிரயத்தில்மற்றும ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் கடன் கருவிகள்;
- கடன் கடப்பாடுகள்; மற்றும்
- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்.

உரித்துவ முதலீடுகளில் எவ்விதமான ECL. உம் அங்கீகரிக்கப்படுவதில்லை.

நிதிச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரிலான மாற்றத்தின் அடிப்படையில் பின்வரும் மூன்று கட்டங்களினூடாக இடம்பெயர்கின்றன:

கட்டம் 1: 12-மாதங்கள் ECL.

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை கண்டிராத வெளிப்பாடுகளுக்கு மற்றும் உருவாகியதிலிருந்து கடன் வலுக்குன்றியிருக்காதவைக்கு, அடுத்த 12 மாதங்களினுள் தவறுதல் நிகழ்வு இடம்பெறும் சாத்தியத்துடன் இணைந்து வாழ்நாள் ECL இன் ஒரு பகுதி அங்கீகரிக்கப்படுகின்றது.

வங்கியானது கடன் கணிசமானளவு மோசமடைந்திராத வாடிக்கையாளர்களிடமிருந்து 12மாத ECL. இனை தீர்மானிக்கின்றது (அதாவது, 30 நாட்களுக்கு குறைவான காலம் கடந்தவை).

கட்டம் 2: வாழ்நாள் ECL. **– கடன் வலுக்குன்றாதவை**

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரானது குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது, ஆனால் கடன் வலுக்குன்றியில்லாதவைக்கான வெளிப்பாடுகளுக்கு, ஒரு வாழ்நாள் ECL. (அதாவது, நிதிச் சொத்தின் எஞ்சிய வாழ்நாளை பிரதிபலிப்பவை) அங்கீகரிக்கப்படுகின்றது.

வங்கியின் கொள்கைகளுக்கு இயைபாக, கணிசமான சீர்குன்றலானது, கட்டம் 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன் வசதிகள் தவிர்த்த 30 நாட்கள் காலம் கடந்த மறுக்கத்தக்க அனுமானங்களினூடாக, நியமத்தின் தேவைப்பாட்டிற்கமைய அளவிடப்படுகின்றது.

வங்கியானது அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்களை, இரண்டு தடவைகள் வரைக்கும் மீள்கட்டமைக்கப்பட்டவை, கடன் வசதிகள் / வெளிப்பாடுகள் ஒரு உயர்வான கட்டத்திலிருந்து ஒரு தாழ்வான கட்டத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடன் வசதிகள் நீங்கலானவை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகளின் பிரகாரம் கட்டம் 2 இன் கீழ் ஆக கருதப்படுகின்றது.

கட்டம் 3: வாழ்நாள் ECL - **கடன் வலுக்குன்றியவை**

சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலில் ஒரு கெடுதலான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தால், வெளிப்பாடுகள் கடன் வலுக்குன்றியுள்ளவையாக மதிப்பிடப்படுகின்றன. கடன் வலுக்குன்றியுள்ளதான வெளிப்பாடுகளுக்கு ஒரு வாழ்நாள் ECL அங்கீகரிக்கப்பட்டு, வட்டி வருமானமானது ஒரு விளைவுறு வட்டி வீதத்தினை பயன்படுத்தி மொத்த கொண்டுசெல்லல் தொகைக்கும் பார்க்க பெறுமதி குறைப்புக் கிரயத்திற்கு (ஏற்பாடு நிகராக) கணிப்பிடப்படுகின்றது.

ஒரு வாடிக்கையாளரின் ஒப்பந்த கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கு மேல் காலம் கடந்திருப்பின் மற்றும் SLFRS 9 இல் குறிப்பிட்டுள்ளவாறு மறுக்கத்தக்க அனுமானத்திற்கு உட்பட்ட அத்துடன் மத்திய வங்கியின் வகைப்படுத்தலின் பிரகாரம் அனைது செ.க. வகைப்படுத்தலுடன் சேர்த்து, கடன் வசதிகளை வங்கியானது தீர்மானிக்கின்றது. இரண்டு தடவைகளுக்கு மேல் மீள்கட்டமைக்கப்பட்ட அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்கள் மற்றும் அனைத்து மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள், ஒரு உயர் கட்டத்திலிருந்து ஒரு தாழ்நிலை கட்டத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடன் வசதிகள் / வெளிப்பாடுகள் நீங்கலாக, அனைத்து கடன் வசதிகள் / வாடிக்கையாளர்களும் இ.ம.வ. இன் கட்டம் 3 இன் கீழான பணிப்புரையின் பிரகாரம் செயற்திறனற்றவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவாகிய கடன் வலுக்குன்றிய (கொ.உ.க.வ.) நிதிச் சொத்துக்கள்: ஆரம்ப அங்கீகாரத்தில் கடன் வலுக்குன்றிய நிதிச் சொத்துக்கள் கட்டம் 3 இனுள் வகைப்படுத்தப்படுகின்றன. அறிக்கையிடப்படும் திகதியில் குழுமமானது எந்தவிதமான கொ.உ.க.வ. கடன்களைள் கொண்டிருக்கவில்லை.

5.6.1. வலுக்குன்றலுக்கான கட்டத்தினை தீர்மானித்தல்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியில், வங்கியானது ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து வெளிப்பாடுகளுக்கான கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என மதிப்பிடுகின்றது. இது அறிக்கையிடப்படும் திகதிக்கும் ஆரம்ப அங்கீகாரத் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் வாழ்நாளின் மீது தவறுதல் இடர் ஏற்படுவதனை ஒப்பிடுவதன் மூலம் மதிப்பிடப்படுகின்றது. இந்த நோக்கத்திற்காக தேவையற்ற செலவு அல்லது முயற்சியின்றி பொருத்தமான மற்றும் கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் துணையளிக்கக்கூடிய தகவல்களை வங்கி கருதுகின்றது. இது அளவுசார் மற்றும் பண்புசார் தகவல்களையும் முன்னோக்கிய பகுப்பாய்வினையும் உள்ளடக்குகின்றது.

ஒரு சொத்தின் தரம் சீர்குலையும்போது ஒரு வெளிப்பாடானது ECL கட்டங்களினூடாக இடம்பெயரும். அடுத்துவரும் ஒரு காலத்தில், சொத்தின் தரம் முன்னேற்றமடைந்து மற்றும் ஆரம்பத்திலிருந்து கடன் இடரிலான முன்னர் மதிப்பீடு செய்த ஏதேனும் கணிசமான அதிரிப்பினை திருப்பினால், அப்போது ஐயப்பாடான கடன்களுக்கான ஏற்பாடானது வாழ்நாள் ECL இலிருந்து 12மாதங்கள் ECL இற்கு திரும்பும். ஆரம்பத்திலிருந்து கணிசமாக சீர்குலைந்திராக வெளிப்பாடுகள், அல்லது சீர்குலைவானது வங்கியின் முதலீட்டுத் தர வரன்முறையின் கீழ் இருந்தால், அல்லது 30 நாட்கள் காலம் கடந்தவையிலும் பார்க்க குறைவாயிருந்தால், அவை தாழ்வான கடன் இடரினைக் கொண்டவையாக கருதப்படுகின்றன. நிதிச் சொத்துக்களுக்கான எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களுக்கான ஏற்பாடானது 12 மாத ECL இன் அடிப்படையிலாகும். ஒரு சொத்தானது திரட்டியலாதபோது, அது தொடர்புடைய ஏற்பாட்டிற்கு எதிராக பதிவழிக்கப்படுகின்றது. அத்தகைய சொத்துக்கள், அவசியமான அனைத்து செயன்முறைகளும் நிறைவு செய்ததன் பின்னர் மற்றும் நட்டங்களின் தொகையானது தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் பதிவழிக்கப்படும். முன்னர் பதிவழிக்கப்பட்டவற்றிலிருந்த பின்னர் மீட்கப்படும் தொகைகள் வருமானக் கூற்றில் செலவினத்தின் தொகையினைக் குறைக்கும்.

வங்கியானது ஒரு வெளிப்பாட்டின் கடன் இடரானது ஒரு தனியான அல்லது கூட்டு அடிப்படையில் கணிசமாக அதிகரித்துள்ளதா என மதிப்பிடுகின்றது. வலுக்குன்றலுக்கான ஒரு கூட்டு மதிப்பீட்டு நோக்கத்திற்காக, பகிரப்பட்ட கடன் இடர் பண்புகளின் அடிப்படையில் நிதிக் கருவிகள் கருவியின் வகை, கடன் இடர் தரப்படுத்தல்கள், ஆரம்ப அங்கீகாரத்தின் திகதி, முதிர்வடைவதற்கு எஞ்சியுள்ள காலம், துறை மற்றும் ஏனைய பொருத்தமான காரணிகள் கருததிலெடுக்கப்பட்டு ஒன்றுதிரட்டப்படுகின்றது.

5.6.2. நிதிச் சொத்துக்களது பதிவழிப்பு

மீட்டலுக்கான ஒரு யாதார்த்தமான எதிர்பார்ப்பு காணப்படாதபோது கடன்களும் கடன் பிணையங்களும் வருடாந்தம் (ஒன்றில் பகுதியளவில் அல்லது முற்றாக) பதிவழிக்கப்படுகின்றன. இது பொதுவாக கடன்பெறுநர் தொகைகளை மீளச்செலுத்துவதற்கு போதுமான காசுப் பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய சொத்துக்களையோ அல்லது வருமான மூலங்களையோ கொண்டிராதபோது ஏற்படுகின்றது. இது குறிப்பிட்ட கடன் வதியானது 2 வருடங்களுக்கு முன்னர் (அதாவது பதிவழிப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்னர், வங்கியானது ஒவ்வொரு வருடமும் ஜூன் 30 இனை ஒரு வருடக் காலமாக வழக்கமாக கருதுகின்றது) செயற்திறனற்ற பிரிவிற்கு மாற்றல் செய்யப்பட்டிருந்தால், மற்றும் குறிப்பிட்ட 2 வருட காலத்தின்போது எவ்விதமான கொடுப்பனவுகளும் பெற்பட்டிருக்காவிட்டால் பதிவழிப்பிற்கு உட்படும், எவ்வாறாயினும், பதிவழிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள், நிலுவையிலுள்ள தொகைகளை மீட்கும் வங்கியின் செயன்முறைகளுடன் இணங்கும் விதமாக வலியுறுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படலாம்.

5.6.3. ECL இன் அளவீடு

எ.க.ந. ஆனது எதிர்பார்க்கப்படும் நட்டங்களின் நடுநிலையான மற்றும சாத்தியப்பாடு நிறையிடப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து பெறப்படுவதுடன், பின்வருமாறு அளவிடப்படுகின்றன:

- அறிக்கையிடப்படும் திகதியில் கடன் வலுக்குன்றாத நிதிச் சொத்துக்கள்: நிதிச் சொத்தின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் மீதான அனைத்து காசுப் பற்றாக்குறைகளின் நிகழ்காலப் பெறுமதியானது, விளைவுறு வட்டி வீதத்தில் கழிவிறக்கம் செய்யப்பட்டு கணிப்பிடப்படுகின்றது. காசுப் பற்றாக்குறை என்பது, ஒப்பந்தத்தின் பிரகாரம் வங்கிக்கு வங்கிக்கு வரவேண்டிய காசுப்பாய்ச்சலுக்கும் வங்கி பெறுவதற்கு எதிர்பார்க்கும் காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையேயான வித்தியாசமாகும்.
- அறிக்கையிடப்படும் திகதியில் கடன் வலுக்குன்றியுள்ள நிதிச் சொத்துக்கள்:: இது மொத்த கொண்டுசெல்லல் தொகைக்கும் விளைவுறு வட்டி வீதத்தினால் கழிவிறக்கம் செய்யப்பட்ட மதப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமாகும்.
- எடுக்கப்படா கடன் கடப்பாடுகள் : ஒப்பந்தத்தின் பிரகாரம் வங்கிக்கு வங்கிக்கு வரவேண்டிய காசுப்பாய்ச்சலுக்கும், கடப்பாடானது எடுக்கப்பட்டிருப்பின், வங்கி பெறுவதற்கு எதிர்பார்க்கும் காசுப்பாய்ச்சல்களுக்கும் இடையேயான வித்தியாசத்தின் நிகழ் காலப் பெறுமதியாகும்.
- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள் : வைத்திருப்பவருக்கு ஈடுசெய்யவேண்டிய எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுகளிலிருந்து வங்கி மீட்பதற்கு எதிர்பார்க்கும் ஏதேனும் தொகைகள் கழிக்கப்பட்டு வருவதாகும்.

எ.க.ந. ஆனது இலாபம் மற்றும் நட்டத்தில் ஐயப்பாடான கடன்களுக்கான ஒரு ஏற்பாட்டினைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் கடன் கருவிகளைப் பொறுத்தளவில், எ.க.ந. இன் அளவீடானது பெறுமதி குறைப்புக் கிரயத்தில் பிரயோகிக்கப்படும் மூன்று கட்ட அணுகுமுறையின் அடிப்படையிலாகும். வங்கியானது ஏற்பாட்டுச் செலவினத்தை இலாபம் மற்றும் நட்டத்தில் அங்கீகரிப்பதுடன், அதனையொத்த தொகையானது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு, நிதி நிலைமைக் கூற்றில் கொண்டு செல்லப்படும் தொகையில் எவ்விதமான கழித்தலும் இல்லாது ஆகும்.

5.7. நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அங்கீகார நீக்கம்

5.7.1. நிதிச் சொத்துக்கள்

வங்கி ஒரு நிதிச் சொத்தினை பின்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகார நீக்கம் செய்கின்றது. சொத்திலிருந்தான ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் முதிர்வடைந்தால் அல்லது அனைத்து இடர்களும் உரித்துவ வெகுமதிகளும் கணிசமாக மாற்றல் செய்யப்படும் ஒரு கொடுக்கல் வாங்கலில் நிதியியல் சொத்திலிருந்து ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமை மாற்றல் செய்யப்பட்டிருந்தால் போன்றவையாகும். வங்கியினால் உருவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்படும் மாற்றல் செய்யப்பட நிதிச் சொத்துக்களிலான ஏதேனும் வட்டியானது ஒரு தனியான சொத்து அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகின்றது.

5.7.2. நிதிப் பொறுப்புக்கள்

வங்கியானது அதன் கடப்பாட்டினை நிறைவேற்றியிருந்தால் அல்லது ஒப்பந்தமானது ரத்து செய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால், ஒரு நிதிப் பொறுப்பானது நிதி நிலைமைக் கூற்றிலிருந்து அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது.

5.7.3. நிதிக் கருவிகளை ஈடுகட்டுதல்

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஈடுசெய்யப்பட்டு தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இது வங்கியானது தொகைகளை ஈடுசெய்வதற்கான சட்டரீதியான உரிமையினை கொண்டிருக்கும்போது மற்றும் ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான நோக்கம் இருப்பின் அல்லது சொத்தை எய்தப்பெற்று அதே சமயத்தில் பொறுப்பினை தீர்ப்பனவு செய்யும்போது எழுகின்றது.

5.8. குத்தகைகள்

5.8.1. நிதிக் குத்தகை வருமானம்

வாடிக்கையாளர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களில், குழுமம் உரித்துவத்துடன் இணைந்துள்ள சகல இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு மாற்றல் செய்திருந்தால், சட்டரீதியான உரிமையினை தவிர்த்து, அவை நிதியியல் குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. நிதியியல் குத்தகைகளின் கீழ் வருமதியான தொகைகள், "வருமதியான குத்தகை வாடகைகள்" இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. குத்தகை மீதிகள் பெறப்பட்ட ஆரம்ப வாடகைகள் கழிக்கப்பட்டதன் பின்னர் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்படுகின்றது.

குத்தகைச் சொத்துக்களின் கிரயத்திற்கும் மேலாக வருமதியான மொத்த வாடகைகள் மொத்த உழைக்கப்படாத வருமானமாக கருதப்படுகின்றன. உழைக்கப்படாத வருமானமானது, குத்தகை நிறைவேற்றப்பட்ட மாதம் தொடக்கம் குத்தகையின் எஞ்சியுள்ள வருமதியான மீதிகளின் விகிதாசாரமாக ஆகும்.

5.8.2. SLFRS 16 – குத்தகைகள்

SLFRS 16 [குத்தகைகள்] குத்தகைகளின் அங்கீகாரம், அளவீடு, முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கான கொள்கைகளை குறிப்பிடுகின்றது.

குழுமமானது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை குத்தகை ஆரம்பிக்கும் திகதியில் அங்கீகரிக்கின்றது. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன, இது குத்தகை பொறுப்பின் ஆரம்பத் தொகை ஆரம்ப திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகைக் கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்படுகின்றன. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் பின்னர், ஆரம்ப திகதியிலிருந்து குத்தகைக் காலத்தின் இறுதிவரைக்கும் நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. மேலாக,பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் வலுக்குன்றல் நட்டங்களினால் காலாகாலம் குறைக்கப்படுவதுடன், ஏதும் இருப்பின், குத்தகை பொறுப்பின் சில மீள்அளவீடுகளுக்கு செம்மையாக்கப்படுகின்றது.

ஆரம்பிக்கப்பட்ட திகதியில் செலுத்தப்படாத குத்தகை கொடுப்பனவுகளின் நிகழ்கால பெறுமதியில் குத்தகைப் பொறுப்பானது ஆரம்பத்தில் அளவிடப்படுவதுடன், இது குத்தகையில் உள்ளார்ந்த வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுகின்றது அல்லது அந்த வீதமானது உடனடியாக தீர்மானிக்கப்பட இயலாவிடின், குழுமத்தின் அதிகரிக்கும் கடன் பெறல் வீதமாகும். பொதுவாக, குழு அதன் அதிகரிக்கும் கடன் பெறல் வீதத்தினை கழிவிறக்க வீதமாக பயன்படுத்துகின்றது. குத்தகைப் பொறுப்பானது பின்னர் விளைவுறு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. எதிர்கால குத்தகைக் கொடுப்பனவுகளில் ஒரு மாற்றம் இருந்தால் அது மீள் அளவிடப்படுகின்றது.

மேலாக, வங்கி / குழுமமானது முன்னர் LKAS 17 இன் கீழ் செயற்பாட்டு குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகளை SLFRS 16 இனால் அனுமதிக்கப்படும் பின்வரும் நடைமுறை வழிவகைகளை பிரயோகித்துள்ளது.

- நியாயமான ஒத்த பண்புகளையுடைய ஒரு குத்தகைத் தேக்கத்திற்கு ஒரு தனியான கழிவு வீதம் பிரயோகிக்கப்படுகின்றது.

ஆரம்ப பிரயோகத் திகதியில் உள்ள பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தக்களின் அளவீட்டிலிருந்து ஆரம்ப நேரடி கிரயங்கள் நீக்கப்பட்டுள்ளன.

குழுமமானது இந்த நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 28 இன் கீழ் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களை முன்னிலைப்படுத்தும்வேளை, அதற்கு எதிராக குத்தகைப் பொறுப்பானது "ஏனைய பொறுப்புக்களில்" குறிப்பு 35 இல் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

5.9. காசும் காசுக்குச் சமனானவைகளும்

காசும் குறுங்கால நிதிகளும், கையிலுள்ள காசு, வங்கிகளுடனான மீதிகள், வங்கிகளுடனான வைப்பீடுகள், அழைப்பிலுள்ள மற்றும் குறுங்கால அறிவித்தலிலுள்ள காசு ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. காசு மற்றும் குறுங்கால நிதிகள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 17 இல் வழங்கப்பட்டுள்ளன.

5.10. இடர் முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் மூலாதாரங்கள்

இடர் முகாமைத்துவ நோக்கங்களுக்கான வைத்திருக்கப்படும் மூலோதாரங்கள், வர்த்தக சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படாத அனைத்து மூலாதார சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்குகின்றன. இடர் முகாமைத்துவ நோக்கங்களுக்கான வைத்திருக்கப்படும் மூலோதாரங்கள் நிதி நிலைமைக் கூற்றில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

5.11. முதலீட்டு ஆதனங்கள்

முதலீட்டு ஆதனங்கள் என்பன, ஒன்றில் ஒரு வாடகை வருமானத்தினை உழைப்பதற்கு அல்லது மூலதன பெறுமதியுயர்விற்காக அல்லது இவ்விரண்டிற்காக வைத்திருக்கப்படுபவை ஆனால் வழமையான வணிகப் போக்கில் விற்பனைக்கு அல்லாதவை, பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் அல்லது வழங்கலில் அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுபவை ஆகும்.

5.11.1. அங்கீகாரத்தின் அடிப்படை

முதலீட்டு ஆதனத்துடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் குழுமத்திற்கு பாயும் சாத்தியம் காணப்பட்டால் மற்றும் முதலீட்டு ஆதனத்தின் கிரயமானது நம்பகமாக அளவிட இயலுமையாயின் முதலீட்டு ஆதனமானது அங்கீகரிக்கப்படுகின்றது.

5.11.2. அளவீடு

ஒரு முதலீட்டு ஆதனமானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. கொள்வனவு செய்யப்பட்ட முதலீட்டு ஆதனத்தின் கிரயமானது, அதன் கொள்வனவு விலை மற்றும ஏதேனும் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினங்களையும் உள்ளடக்குகின்றது. சுயமான நிர்மாணிக்கப்பட்ட முதலீட்டு ஆதனத்தின் கிரயமானது கட்டுமானம் அல்லது அபிவிருத்தியானது நிறைவடையும் திகதியில் உள்ளவாறான அதன் கிரயமாகும்.

குழுமமானது, இலங்கை கணக்கீட்டு நியமம் 40 (LKAS 40) "முதலீட்டு ஆதனம்" இன் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களுக்கு கிரய மாதிரியினை பிரயோகிக்கின்றது. இதன் பிரகாரம், முதலீட்டு ஆதனங்களாக வகைப்படுத்தப்பட்ட காணி கிரயத்தில் குறிப்பிடப்பட்டு அதிலிருந்து ஏதேனும் வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்படுவதுடன், முதலீட்டு ஆதனங்களாக வகைப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் கிரயத்தில் குறிப்பிடப்பட்டு அதிலிருந்து ஏதேனும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்படுகின்றன.

5.12. அருவச் சொத்துக்களும் நன்மதிப்பும்

5.12.1. நன்மதிப்பு

நன்மதிப்பானது, கையகப்படுத்தப்பட்ட திகதியில் கையகப்படுத்தப்பட்ட துணை நிறுவனத்தின் தேறிய இனங்காணப்படக்கூடிய சொத்துக்களில் குழுமத்தின் பங்கின் நியாயப் பெறுமதியிலும் மேலான கையகப்படுத்தல் கிரயத்தின் மிகையினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஒரு வணிகப் பிணைப்பில் கையகப்படுத்தப்பட்ட நன்மதிப்பானது வருடந்தோறும் வலுக்குன்றலுக்காக பரிசீலிக்கப்பட்டு அல்லது நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளிலான மாற்றங்கள் அது வலுக்குன்றலாம் என்று குறிகாட்டினால் கிரயத்திலிருந்து திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அடிக்கடி பரிசீலிக்கப்படுகின்றன. நன்மதிப்பிலான வலுக்குன்றல் நட்டங்கள் திருப்பப்படுவதில்லை.

5.12.2. மென்பொருள்

குழுமத்தினால் கையகப்படுத்தப்பட்ட மென்பொருளானது கிரயத்திலிருந்து திரண்டு பெறுமதிக்குறைப்பானது மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன.

உள்ளகத்தே விருத்திசெய்யப்பட்ட மென்பொருளின் செலவினமானது ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது. இது குழுமம் அபிவிருத்தியினை நிறைவு செய்வதற்கான அதன நோக்கம் மற்றும் ஆற்றலினை வெளிப்படுத்த இயலுமையாயின் மற்றும் எதிர்கால பொருளாதார நலன்களை உருவாக்கும் விதத்தில் மென்பொருளினை பயன்படுத்துதல் மற்றும் அபிவிருத்தியினை நிறைவு செய்வதற்கான செலவுகளை நியாயமாக அளவிடக் கூடியதாயிருந்தால் போதாகும். உள்ளகத்தே விருத்திசெய்யப்பட்ட மென்பொருளின் மூலதனவாக்க கிரயமானது, மென்பொருளை விருத்திசெய்வதற்கு நேரடியாக உடைமையாக்கத்தக்க அனைத்து செலவுகளும் மற்றும் மூலதனவாக்கப்பட்ட கடன் பெறல் கிரயங்களை உள்ளடக்குவதுடன், இது அதன் பயனுள்ள வாழ்நாளில் பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. உள்ளகத்தே விருத்திசெய்யப்பட்ட மென்பொருளானது மூலதனவாக்கப்பட்ட கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதிக் குறைப்பு மற்றும் ஏதேனும் வலுக்குன்றல் கழிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

மென்பொருள் சொத்தில் பின்னரான செலவினமானது தொடர்புடைய குறிப்பிட்ட சொத்தில் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களை அது அதிகரிக்கும்போது மாத்திரமே மூலதனமயமாக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவினங்களும் அவை ஆட்படும்போது செலவினமாக்கப்படுகின்றன.

5.12.3. பெறுமதி குறைப்பு

மென்பொருளானது அதன் எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள வாழ்நாளின் மீது, அது பயன்பாட்டிற்கு கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஒரு நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. மென்பொருளின் எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள வாழ்நாளானது நடைமுறை மற்றும் ஒப்பிடப்படும் காலங்களுக்கு ஐந்து வருடங்களாகும்.

பெறுமதிக் குறைப்பு முறைகள், பயனுள்ள ஆயுட்காலங்கள் மற்றும் எச்சப் பெறுமதிகள் என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமாயின் செம்மையாக்கப்படுகின்றது.

5.13. நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்

5.13.1. அங்கீகாரத்தின் அடிப்படை

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், வங்கியானது ஒரு சொத்து வலுக்குன்றியுள்ளதா என்ற ஒரு குறிகாட்டி காணப்பட்டால் மதிப்பிடுகின்றது. ஏதேனும் குறிகாட்டி காணப்பட்டால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த வலுக்குன்றல் பரிசோதனை தேவையாயின், வங்கியானது சொத்தின் மீட்கக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. ஒரு சொத்தின் மீட்கத்தக்க தொகையானது ஒரு சொத்தின் அல்லது காசு உருவாக்கும் அலகின் (கா.உ.அ.) நியாயப் பெறுமதியில் எது உயர்ந்ததோ அதிலிருந்து விற்பனை செய்வதற்கான கிரயம் மற்றும் பயன்பாட்டில் அதன் பெறுமதி ஆகும். ஒது சொத்தின் கா.உ.அ. இன் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீட்கத்தக்க தொகையினை விஞ்சியிருந்தால், சொத்தானது வலுக்குன்றியுள்ளதாக கருதப்பட்டு அதன் மீட்கத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியினை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்காலப் காசுப்பாய்ச்சல்கள் ஒரு வரிக்கு முந்திய கழிவிறக்க வீதத்தினை பயன்படுத்தி நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிறக்கம் செய்யப்படுவதுடன், இது பணத்தின் நேரப்பெறுமதியின் நடப்பு சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிப்பதுடன் மற்றம் சொத்துக்கு குற்பிட்ட இடரினையும் மதிப்பிடுகின்றது. நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனை செய்வதற்கான கிரயங்கள் கழிக்கப்பட்டு ஒரு பொருத்தமான பெறுமதியிடல் மாதிரி பயன்படுத்தப்படுகின்றது. இந்த கணிப்பீடுகள் பெறுமதியிடல் மடங்குகளினால் உறுதிப்படுத்தப்படுவதுடன், பொதுவாக வர்த்தகம் செய்யப்படும் துணை நிறுவனங்களின் விலை கூறப்பட்ட பங்குகள் அல்லது ஏனைய கிடைக்கக்கூடிய நியாயப் பெறுமதி குறிகாட்டிகள் என்பனவாகும்

5.13.2. அளவீடு

நன்மதிப்பு நீங்கலான சொத்துக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் ஒரு மதிப்பாடானது மேற்கொள்ளப்படுகின்றது, இது முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வலுக்குன்றல் நட்டங்கள் இனிமேலும் காணப்படாது உள்ளதா அல்லது குறைந்துள்ளதா என்பது பற்றிய ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என்பதற்காகும். அத்தகைய ஒரு குறிகாட்டி காணப்பட்டால், வங்கியானது சொத்தின் அல்லது கா.உ.அ. இன் மீட்கத்தக்க தொகையினை மதிப்பிடுகின்றது. முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வலுக்குன்றல் நட்டமானது, கடைசியாக அங்கீகரிக்கப்பட்ட வலுக்குன்றல் நட்டத்திலிருந்து சொத்தின் மீட்கக்கூடிய தொகையினை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் அனுமானங்களில் ஒரு மாற்றம் இருந்தால் மாத்திரமே திருப்பப்படும். திருப்பலானது வரையறை செய்யப்பட்டுள்ளது, எனவே சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது அதன மீட்கத்தக்க தொகையினை விஞ்சலாகாது, தீர்மானிக்கப்பட்ட கொண்டுசெல்லல் தொகையினை விஞ்சலாகாது, பெறுமானத்தேய்வு நிகராக, முன்னைய வருடங்களில் சொத்திற்கு வலுக்குன்றல் நட்டம் அங்கீகரிக்கப்படாது இருத்தல் வேண்டும். அத்தகைய திருப்பலானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

நன்மதிப்பு தொடர்பான வலுக்குன்றல் நட்டங்கள் எதிர்கால காலங்களில் திருப்பப்படுவதில்லை.

நன்மதிப்பானது வருடாந்தம் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது, அல்லது சூழ்நிலையிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் கொண்டுசெல்லல் தொகையானது வலுக்குன்றியிருக்கலாம் என்று குறிகாட்டினால் அடிக்கடி மேற்கொள்ளப்படலாம். வலுக்குன்றல் பரிசோதனை நோக்கத்திற்காக ஒரு வணிகப் பிணைப்பில்

கையகப்படுத்தப்பட்ட நன்மதிப்பானது, கையகப்படுத்தல் திகதியில், வங்கியின் கா.உ..அ. அல்லது குழுமத்தின் கா.உ..அ. ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்படுவதுடன், இவை கூட்டுவிளைவுகளிலிருந்து நலனடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், கையகப்படுத்துபவரின் ஏனைய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அந்த அலகுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதை பொருட்படுத்தாது ஆகும். நன்மதிப்பு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு அலகும் வங்கியில் குறைவான மட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்வதுடன், அப்போது நன்மதிப்பானது உள்ளக முகாமைத்துவ நோக்கங்களுக்காக கண்காணிக்கப்படுவதுடன், மற்றும் SLFRS 8 "செயற்பாட்டுப் பிரிவுகள்" இன் பிரகாரம் உரு செயற்பாட்டு பிரிவிலும் பார்க்க பெரியதாய் இருத்தலாகாது.

நன்மதிப்பானது ஒரு கா.உ..அ. இன் பாகமாக (அல்லது கா.உ..அ. இன் குழு) மற்றும் செயற்பாட்டின் பாகமாக அவ்வலகினுள் இருந்தால், அது விற்பனை செய்யப்பட்டு செயற்பாட்டுடன் இணைந்துள்ள நன்மதிப்பானது விற்பனை செய்யப்பட்டு செயற்பாட்டின் கொண்டு செல்லல் தொகையில், செயற்பாட்டின் விற்பனையிலான இலாபம் அல்லது நட்டத்தினை தீர்மானிக்கும்போது உள்ளடக்கப்படுகின்றது. இந்த சூழ்நிலையில் விற்பனை செய்யப்பட்ட நன்மதிப்பானது விற்பனை செய்யப்பட்ட செயற்பாட்டின் ஒப்பீட்டளவு பெறுமதிகளின் அடிப்படையில் அளவிடப்பட்டு, கா.உ..அ. இன் ஒரு பகுதி நிறுத்திவைக்கப்படுகின்றது.

துணை நிறுவனங்கள் விற்பனை செய்யப்படும்போது, விற்பனை விலைக்கும் தேறிய சொத்துடன் திரண்ட பரிமாற்றல் வித்தியாசங்கள் சேர்க்கப்பட்டு வருவதிற்கும் இடையேயான வித்தியாசம் மற்றும் நன்மதிப்பானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

5.14. ஓய்வூதிய நலன்கள் GRI 201-3

5.14.1. நிர்ணயிக்கப்பட்ட நலன் ஓய்வூதியத் திட்டங்கள்.

5.14.1.1 1996 இற்கு முன் - ஓய்வூதிய நம்பிக்கை நிதியம்

வங்கியானது ஒரு நிர்ணயிக்கப்பட்ட நலன் ஓய்வூதியத் திட்டத்தினை 1 ஜனவரி 1996 இற்கு முன்னர் வங்கியில் இணைந்த நிரந்தர ஊழியர்களுக்கு செயற்படுத்துகின்றது, இதற்கு தனியாக நிர்வகிக்கபடும் நிதியத்திற்கு பங்களிப்புகள் மேற்கொள்ளவேண்டிய தேவையினைக் கொண்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் கீழ் நலன்களை வழங்கும் கிரயமானது திட்டமிடப்பட்ட அலகு வரவு முறையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட நலன் சொத்து அல்லது பொறுப்பு, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியிலிருந்து இன்னமும் அங்கீகரிக்கப்படாத கடந்தகால சேவைக் கிரயங்கள் கழிக்கப்பட்டு, மற்றும் திட்டத்தின் சொத்துக்களது நியாயப் பெறுமதி, இவற்றிலிருந்து கடப்பாடுகள் நேரடியாக தீர்க்கப்படும், கழிக்கப்பட்டு இன்னமும் அங்கீகரிக்கப்படாத காப்பீட்டுக் கணிப்பு நட்டங்கள் கழிக்கப்படுகின்றது. ஏதேனும் சொத்தின் பெறுமதியானது ஏதேனும் காப்பீட்டுக் கணிப்பு நட்டங்கள் மற்றும் இன்னமும் அங்கீகரிக்கப்படாத கடந்தகால சேவைக் கிரயங்கள் மற்றும் திட்டத்திலிருந்து மீள்செலுத்துகைகள் அல்லது திட்டத்தின் எதிர்கால பங்களிப்புகளில் குறைத்தல்கள் வடிவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இறுதியான காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது திரு. பியால் எஸ். குணதிலக்க, FSA (USA), அமெரிக்கன் அகடமி ஒப் எக்சூயரீஸ் அன்ட் கன்சல்டிஸ் எக்சூயரியின் அங்கத்தவர் அவர்களால் 31 டிசம்பர் 2023 ஆல் மேற்கொள்ளப்பட்டது.

வங்கியானது இளைப்பாறுதலடையும் ஊழியர்களுக்கு பின்வரும் அடிப்படையில் ஒரு ஓய்வூதியத்தினை வழங்குகின்றது: 10 வருடங்கள் சேவையின் பின்னர் ஊழியர்கள் ஒரு ஓய்வூதியத்தினை பெறுவதற்கு உரித்தானவர்கள் மற்றும் வழமையான இளைப்பாறுதல் வயதான 55 வயதினை அடைந்ததன் பின்னரும் ஆகும் செலுத்தப்படும் ஓய்வூதியத்தின் தொகையானது சேவைக்காலத்தில் பின்வருமாறு தங்கியுள்ளது:

	சேவைக்காலம்	ஓய்வூதியத்தின் அளவு
i.	10 முதல் 20 வருடங்கள்	கடைசியாக பெற்ற சம்பளத்தின் 80%
ii.	21 முதல் 29 வருடங்கள்	80% உடன் 20 வருடங்களுக்கு மேலான ஒவ்வொரு வருடத்திற்கும் 1% கடைசியாக பெற்ற சம்பளத்தில்.
iii.	30 வருடங்கள் மற்றும் அதற்குமேல்	கடைசியாக பெற்ற சம்பளத்தின் 90%

ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தனியாக பராமரிக்கப்படுவதுடன் அவை சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் வருடாந்த கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வாளரது அறிக்கையும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்படுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்களும், கணக்காய்வாளரது அறிக்கையும், வங்கியின் வெளிப்படுத்தலின் மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன, ஏனெனில், தேவைப்படும் மட்டங்களில் நிதியளித்தல் மேற்கொள்வதனை உறுதிப்படுத்தும் கடப்பாட்டினை வங்கி கொண்டிருப்பதனாலாகும். பங்குபற்றுநர் உயிருடன் இருக்கும்வரை மாதாந்தம் ஓய்வூதியம் செலுத்தப்படல் வேண்டும்.

5.14.1.2 1996 இற்கு பின்னரான ஓய்வூதிய நிதியம்

நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வங்கியானது 1 ஜனவரி 1996 இற்கு பின்னர் வங்கியில் இணைந்துகொண்ட நிரந்த ஊழியர்களுக்கான ஒரு புதிய ஓய்வூதிய நிதியத்தினை முடிவுறுத்தும் நிலையிலுள்ளது. இதனை வங்கி ஒரு நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமாக முடிவுறுத்தியுள்ளதனால், மிகை / பற்றாக்குறையானது LKAS 19 இன் பிரகாரம் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இறுதியான காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது திரு. பியால் எஸ். குணதிலக்க, FSA (USA), அமெரிக்கன் அகடமி ஒப் எக்சூயரீஸ் அன்ட் கன்சல்டிஸ் எக்சூயரியின் அங்கத்தவர் அவர்களால் 31 டிசம்பர் 2023 ஆல் மேற்கொள்ளப்பட்டது.

5.14.1.3. பணிக்கொடை

1 ஜனவரி 1996 இல் அல்லது அதற்கு பின்னர் இணைந்த ஊழியர்கள் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் கீழ் பணிக்கொடைக்கு உரிமையுள்ளவர்களாவார்கள் அல்லது அவர்கள் விருப்பமாயின் 1996 இற்கு பின்னரான புதிய ஓய்வூதிய நிதியத்தில் இணைந்து கொள்ளலாம் மற்றும் அப்படி செய்வார்களாயின் அத்தகைய ஊழியர்கள் பணிக்கொடைக்கான அவர்களது உரிமையினை இழப்பார்கள்.

இளைப்பாறுதல் அல்லாது சேவைகள் நிறுத்தப்பட்ட ஏனைய ஊழியர்கள் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் கீழ் பணிக்கொடைக்கு உரித்துடையவர்கள். இவர்கள் சேவை நிறுத்தப்பட்ட நிதியாண்டின் இறுதி மாதத்தில் பொருத்தமான மொத்த சம்பளத்தில் அரைவாசி வீதத்தில், தொடர்ச்சியான ஒவ்வொரு வருடச் சேவைக்கும், அவர்கள் 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியிருந்தால் பெறுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள்.

5 வருடங்கள் சேவையினை நிறைவுசெய்த ஒரு பங்குபற்றுநர் முற்றாக மற்றும் நிரந்தரமாக ஊனமுற்றவராக வந்தால், அவர் ஊனமுற்றவர் பணிக்கொடைக்கு உரித்தானவர் ஆவார். மேலும், ஆகக் குறைந்தது 5 வருடங்கள் சேவையுடனான ஒரு செயலூக்கமான பங்குபற்றுநர் இறந்தால், ஒரு பணிக்கொடை நலனானது அவரது வாரிசுகளுக்கு செலுத்தப்படும்.

வங்கியானது பணிக்கொடை கொடுப்பனவு பொறுப்புக்களுக்கு மாதாந்த ஏற்பாடுகளை செய்வதுடன், இந்தப் பெறுமதியானது வங்கியின் நிதி நிலைமைக் கூற்றில் பிரதிபலிக்கின்றது. வங்கியானது ஒரு காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலின் அடிப்படையில் ஒரு ஏற்பாட்டினை செய்கின்றது. எவ்வாறாயினும், இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், வங்கியானது ஒரு காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலின் அடிப்படையில் பணிக்கொடை பொறுப்பிற்கு ஏற்பாட்டினை செய்துள்ளது.

வங்கியின் துணை நிறுவனங்களும் இணை நிறுவனங்களும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் கீழ் பணிக்கொடைக்கு ஏற்பாடு செய்கின்றன. பணிக்கொடைக்கான ஏற்பாடானது கம்பனிகளுடன் ஒரு வருட சேவையினை பூர்த்தி செய்தவர்களுக்கு செய்யப்படுகின்றது. இந்த பொறுப்புக்களுக்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படுவதில்லை.

5.14.2. நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

வங்கி ஒரு நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தினை செயற்படுத்துகின்றது. ஒரு நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கு செலுத்தவேண்டிய பங்களிப்பானது ஊழியர்கள் வங்கிக்கு வழங்கிய சேவைகளின் விகிதமாகும் என்பதுடன், இது ஆளணிச் செலவுகளின் கீழ் பதிவு செய்யப்படுகின்றது. செலுத்தப்படாத பங்களிப்புகள் ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்படுகின்றது.

வங்கி பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்பு செய்கின்றது:

5.14.2.1.ஊழியர் சேமலாப நிதியம்

ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளத்தில் (மேலதிக நேரக் கொடுப்பனவு நீங்கலாக) வங்கியும் ஊழியர்களும் முறையே 12% மற்றும் 8% இனை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்கின்றார்கள். வங்கியின் சேமலாப நிதியமானது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிதியம் என்பதுடன் இது ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் கீழ் உள்வாரியாக பராமரிக்கப்படுகின்றது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

5.14.2.2. ஊழியர் நம்பிக்கை நிதியம்

மேலதிகநேர கொடுப்பனவு நீங்கலாக ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளத்தில் 3% இனை வங்கி ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்வதுடன், இது ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையினால் பராமரிக்கப்படுகின்றது.

5.15. விதவை / தாரமிழந்தவர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (1996 இற்று முன்னர் / 1996 இற்கு பின்னர்)

இத்திட்டத்தின் கீழான எதிர்கால கொடுப்பனவுகளை சந்திப்பதற்காக ஒரு தகைமையுடைய காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையின் அடிப்படையில், ஒரு தனியான நிதியம் பராமரிக்கப்படுகின்றது. மேலும் இந்த நிதியமானது பங்குபற்றுநர்களது / ஊழியர்களின் பங்களிப்புகளூடாக மாத்திரமே நிதியளிக்கப்பட்டுள்ளது.

5.16. ஏற்பாடு

ஒரு கடந்த நிகழ்வின் விளைவாக வங்கி ஒரு நிகழ்கால கடப்பாட்டினை கொண்டிருக்கும்போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன (சட்டம் அல்லது ஆக்கபூர்வமான) மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படலாம் மற்றும் கடப்பாட்டின் தொகையைப் பற்றி ஒரு நம்பகமான மதிப்பீடு மேற்கொள்ளப்படலாம். ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினமானது ஏதேனும் செலவீடு நிகராக வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

5.17. கடப்பாடுகளும் ஐயப்பாடுகளும்

